ஹிந்துலா.

இது

அனேக பெரிய இங்கிலீஷ் கிரந்தங்களையும்

ஸ்மிரிதிகளையும் நான்கு ஐகோர்ட்டு தீர்ப்புகளையும்

பிரிவிகவுன்சில் தீர்ப்புகளையும்

நன்றாய் பரிசோதித்து

மதராஸ் ஐகோர்ட்டு வக்கீல், பி.ஏ., பி.எல்.,

ஆர் - வெங்கிடசுப்பாராவ் அவர்களால்

தயார் செய்யப்பட்டது.

விலை ரூ. **4**. தபால்கூலியுடன் ரூ. **4 - 4.**

PRINTED AND PUBLISHED BY THE AUTHOR

AT THE JANOPAKARINI PRESS,

MYLAPORE, MADRAS.

1899.

அத்தியாயங்களின் விவரம்.

அடையாளங்கள்.

இ. லா. ரி.—இண்டியன் லா ரிபோர்ட்டு.

ம.—மதராஸ் ஸீரீஸ்.

க.—கல்கத்தா ஸீரீஸ்.

பம்.—பம்பாய் ஸீரீஸ்.

அ—அலஹாபாத் ஸீரீஸ்.

ம. ஐ.—மதராஸ் ஐகோர்ட்டு ரிபோர்ட்டு.

க. ஐ.—கல்கத்தா ஐகோர்ட்டு ரிபோர்ட்டு.
(பங்காளா லா ரிபோர்ட்டு.)

பம். ஐ.—பம்பாய் ஐகோர்ட்டு ரிபோர்ட்டு.

அ. ஐ.—அலஹாபாத் ஐகோர்ட்டு ரிபோர்ட்டு.

மூ இ. அ.—மூர்ஸ் இண்டியன் அப்பீல்கள்.

ஸ.—ஸதர்லண்டு வீக்கிலீ ரிபோர்ட்டர்.

ம. தீ.—மதராஸ் தீர்ப்புகள்.

ம. ஸ. தீ.—மதராஸ் ஸதர்கோர்ட்டு தீர்ப்புகள்.

பங். ஸ. தீ.—பங்காளா ஸதர்கோர்ட்டு தீர்ப்புகள்.

பம். ஸி. ரி.—பம்பாய் ஸிலெக்ட் ரிபோர்ட்டு.

பாரோ.—பாரோடேல் ரிபோர்ட்டுகள்.

மார்லி.—மார்லி டைஜெஸ்டு.

வெ. பூ.—வெஸ்டு அண்டு பூலர் இந்து லா.

டப்ளியூ. மெக்.—டப்ளியூ. மெக்னுடன் இந்து லா.

எப். மெக்.—எப். மெக்னுடன் இந்து லா.

ஸ்ட்ரே.—ஸ்ட்ரேஞ்சு இந்து லா.

இ. லா. ரி. 4 க. 514.—இண்டியன் லா ரிபோர்ட்டு கல்கத்தா ஸீரீஸ் 4-வது வாலியம் 514-வது பக்கம்.

14 மூ. இ. அ. 56.—மூர்ஸ் இந்தியன் அப்பீல் 14-வது வாலியம் 56-வது பக்கம்.

ஹிந்து லா.

1-வது அத்தியாயம்.

மூலப்பிரமாணங்கள்.

கவர்ன்மெண்டார் தர்ம பரிபாலனம்.

1. இந்துதேசமானது இங்கிலீஷ்காரர்கள் அதிகாரத்துக்கு கீழ்ப்பட்ட பிறகு நியாயபரிபாலனம் செய்வதற்காக ஸிவில், கிரிமினல், ரிவினியூ முதலான விஷயங்களைக் குறித்து அவர்கள் பல சட்டதிட்டங்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்போழுது கூட அவர்கள் புதுப்புது சட்டங்களையும் பழயசட்டங்களை மாற்றியச் சிலசட்டங்களையும் வருஷந்தோறும் பிரசித்தம் செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் மதாசார விஷயங்களிலும், விவாகம், சுவீகாரம், பாகம், ஸ்திரீதனம் முதலிய குடும்ப விஷயங்களிலும் ஹிந்து ஜனங்களுக்குள் வெகு நீண்டகாலமாய் அனுஷ்டானத்திலிருந்துவந்த ஹிந்து தர்மசாஸ்திரங்களையே அவர்களுக்கு சட்டங்களாக ஒப்புக்கொண்டு மேற்கண்ட விஷயங்களைப்பற்றி விவகாரங்கள் உண்டாகும் காலங்களில் அந்த தர்மசாஸ்திரங்களை அனுசரித்தே அவைகளை தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

பழய தர்மசாஸ்திரங்கள்.

2. எல்லா நடவடிக்கை தீர்மானங்களுக்கும் சுருதிகள் அதாவது வேதங்கள் மூலப்பிரமாணங்கள் என்றும் அவைகளை யனுசரித்தே தாங்கள் ஸ்மிருதிகள் அல்லது (தர்மசாஸ்திரங்கள்) செய்திருப்பதாகவும் தர்மசாஸ்திர கர்த்தர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் விவகாரங்களுக்கு உபயோகமாகும் விதிகள் விசேஷமாய் வேதங்களில் காணப்படாததைக் கொண்டு தங்கள் தங்கள் காலங்களில் நடந்துகொண்ட ஆசாரங்களை அனுசரித்தே தங்கள் தங்கள் கிரந்தங்களை எழுதியிருப்பார்களென்று நாம் ஊகிக்கத்தக்கதா யிருக்கிறது மூல ஸ்மிருதிகளில் மனுஸ்மிருதி யாக்கியவல்கிய ஸ்மிருதி இவ்விரண்டுதா

ளும் முக்கியங்கள். மைத்த நாரதர், வஸிஷ்டர், கௌதமர், போதாயனர், ஆபஸ்தம்பர், யமர், ஆங்கீரஸர், அத்திரி, தக்ஷர், தேவலர், சங்கர், லிகிதர், காத்தியாயனர், பிருகஸ்பதி, வியாஸர், பராசரர் முதலிய மஹர்ஷிகள்செய்திருக்கிற ஸ்மிருதிகள்கூட முன்காலங்களிலிருந்தவைகளே தவிர இப்போது அவைகளில் சில முழுவதும் சில ஒருபாகமும் நசித்திருக்கின்றன.

வியாக்கியான கிரந்தங்கள்.

3. ஹிந்து தர்மசாஸ்திரங்கள் சமஸ்கிருதபாஷையில் எழுதப்பட்டிருப்பதால் அவைகள் பண்டிதர்கள் மட்டும் அறியக்கூடியவை யாகவும் அவர்களில் கூட பலபேர்களுக்கு பலவிதமான அர்த்தங்களைக் கொடுக்கக்கூடியவைகளாகவும் இருக்கின்றன. பழய தர்மசாஸ்திரங்களைக்காட்டிலும் அவைகளை யனுசரித்தே பெரிய வித்துவான்களால் செய்யப்பட்ட வியாக்கியானங்களும் சுருக்கங்களும் இப்போது முக்கியமான ஆதாரங்களாகச் செல்லுகின்றன. ஸ்மிருதிகள் எழுதப்பட்ட பிறகு ஜனங்கள் ஆசார விவகாரங்களில் நாளாளவில் பலவிதமான மாறுதல்களை செய்துகொண்டுவந்தார்கள். ஸ்மிருதிகளுக்கு வியாக்கியானம் முதலியவைசெய்த வித்வான்கள் அம்மாறுதல்களுக்கு அனுகுணமாகவே ஸ்மிருதிகளிலுள்ள சுலோகங்களுக்கு தங்களுடைய யுக்திகளைக் கொண்டு வேறுகருத்து உண்டுபண்ணிக்கொண்டு வந்தார்கள் இவ்விதமாய் வேறுவேறு ஸம்பிறதாயங்கள் ஏற்பட்டன.

மனுஸ்மிருதி – குல்லூகபட்டீயம்.

4. பழய ஸ்மிருதிகள் எல்லாவற்றிலும் மனுஸ்மிருதி மிகவும் முக்கியமாய் எண்ணப்பட்டிருக்கிறது. மைத்த ஸ்மிருதிகர்த்தர்கள்கூட தங்கள் கிரந்தங்களில் மனுஸ்மிருதியை பிரமாணமாக உதாகரித்திருக்கிறார்கள். மனுஸ்மிருதியின்பேரில் அனேக வியாக்கியானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் குல்லூகபட்டர் எழுதிய வியாக்கியானம் ரொம்பவும் பெயர்பெற்றது.

யாக்கியவல்கிய ஸ்மிருதி – மிதாக்ஷரம்.

யாக்கியவல்கிய ஸ்மிருதியின்பேரில் சுமார் 800 வருஷங்களுக்கு முன் விக்கியானேசுவரர் என்கிற மகாயோகி மிதாக்ஷரமென்கிற வியாக்கியானத்தைச் செய்தார் இது பங்காளா சீமையைத்தவிர மைத்தப் பிரதேசங்களில் முக்கிய ஆதாரமாகசெல்லுகின்றது.

பறாசர ஸ்மிருதியின்பேரில் மாதவாசாரியர் மாதவீயமென்கிற வியாக்கியானமொன்று செய்தார். இது ரொம்பவும் ஆதரிக்கத்தக்கது. மனுஸ்மிருதி கிருதயுகத்துக்குச் செய்யப்பட்டதென்றும் கலியுகத்தில் பறாசரஸ்மிருதியே முக்கிய ஆதாரமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் எல்லா வியவகாரங்களிலும் யாக்கியவல்க்கிய ஸ்மிருதியே எல்லாவற்றிலும் உயர்ந்ததாக செல்லுகின்றது.

பறாசரஸ்மிருதி – மாதவீயம்.

5. பங்காளாசீமையில் - ஜீமூதவாகனர் என்கிற பெரிய பண்டிதர் சுமார் 500 வருஷத்துக்குமுன் மிதாக்ஷரத்தை கண்டித்து அதர்க்கு எதிரிடையாக தன் தேசத்தில் சென்றுகொண்டுவந்த வேறு ஆசாரங்களுக்கு அனுகூலமாக தாயபாகமென்கிற கிரந்தத்தை செய்தார். இது பங்காளா சீமையெல்லாம் முக்கிய ஆதாரமாக செல்லுகின்றது.

தாயபாகம்.

6. மேல்சொல்லிய மிதாக்ஷர தாயபாக கிரந்தங்களுடன் சில சில தேசங்களில் சிலசில சங்க்ஷேப கிரந்தங்கள் ஆதாரமாகச் செல்லுகின்றன. இந்த சங்க்ஷேப கிரந்தங்கள் மிதாக்ஷர தாயபாக கிரந்தங்களுக்குப் பிர்ப்பட்டு ஏற்பட்டவைகள். இவைகள் சிலசில விஷயங்களில் அவைகளிலிருந்து வித்தியாசப்படுகின்றன.

மைத்த கிரந்தங்கள்.

பங்காளா சீமையில் தாயபாகத்தோடுகூட ரகுநந்தனரால் செய்யப்பட்ட தாயதத்துவமென்கிற கிரந்தமும் ஸ்ரீ கிருஷ்ணதர்க்காலங்காரரால் செய்யப்பட்ட தாயக்கிரம சங்கிரகமென்கிற கிரந்தமும் ஜகன்னாதரால் செய்யப்பட்ட விவாதபங்கார்ணவ மென்கிற கிரந்தமும் இவைகள் ஆதாரங்களாக செல்லுகின்றன. பங்காளாசீமையைத்தவிர மைத்த எல்லா இடங்களிலும் மிதாக்ஷரமே முக்கியபிரமாணமாக செல்லுகிறதா யிருந்தாலும் இதோடுகூட ஆதாரங்களா யிருக்கிற கிரந்தங்கள் சிலதேசங்களில் வித்தியாசப்படுகின்றன.

தென்னிந்தியா அதாவது மதறாஸ் பிறஸிடென்ஸியில் தேவானந்தபட்டனால் செய்யப்பட்ட ஸ்மிருதிசந்திரிகை, பிறதாபருத்திரர் எழுதிய ஸரஸ்வதீவிலாஸம், மாதவர்செய்த தாயவிபாகம், வரதராஜர் செய்த வியவகார நிர்ணயம், இந்த கிரந்தங்கள் மிதாக்ஷரத்தோடுகூட ஆதாரங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டு வருகின்றன. (12. மூ. இ. அ. 437).

மேலிந்தியா அதாவது பம்பாய் பிறஸிடென்ஸியில் நீலகண்டர் செய்த வியவகாரமயூக மென்கிற கிரந்தம் மிதாக்ஷரத்தோடுகூட ஆதாரமாய் செல்லுகிறது. மகராஷ்ட்ர தேசத்திலும் வடகனரு தேசத்திலும் மிதாக்ஷரமே முக்கிய ஆதாரமா யிருக்கிறது. குஜருத்தி தேசத்திலும் பம்பாய் பட்டணத்திலும் வியவகாரமயூகமானது மிதாக்ஷரத்தை காட்டிலும் பெரிய ஆதாரமாக எண்ணப்படுகிறது. (இ. லா. ரி. 2 பம். 418). வடகொங்கண தேசத்தில்கூட மிதாக்ஷரத்தைப் பார்க்கிலும் மயூகமே அதிகமாக ஆதரிக்கப்பட்டு வருகின்றது. (இ. லா. ரி. 3 பம். 353).

காசிராஜ்யத்தில் மிதாக்ஷரத்தோடுகூட வீரமித்ரோதயம் நிர்ணயசிந்து இந்த கிரந்தங்கள் ஆதாரங்களாக செல்லுகின்றன (3 பம். ஐ. 369).

மிதிலதேசத்தில் மிதாரக்ஷத்தோடுகூட வாசஸ்பதிமிச்றர் செய்திருக்கிற விவாதசிந்தாமணி வியவகாரசிந்தாமணி யென்கிற கிரந்தங்கள் இன்னும் விவாதசந்திரிகை ரத்நாகரம் என்கிற கிரந்தங்களும் உபயோகப்படுகின்றன. (2 மூ. இ. அ. 134, 146).

தத்தகசந்திரிகை, தத்தகமீமாம்ஸை - இவ்விரண்டும் சுவீகார விஷயமான கிரந்தங்கள். இவைகளில் தத்தகசந்திரிகை பங்காளா தேசத்திலும் தென்னிந்தியாவிலும், தத்தகமீமாம்ஸை மிதிலே, காசி ருஜியங்களிலும் பிரமாணங்களாகச் செல்லுகின்றன. (12 மூ. இ. அ. 437).

7. இதன் கீழ் விவரிக்கப்பட்ட டேபிளால் அந்தந்த தேசங்களில் பிரமாணமாக அனுஷ்டானத்திலிருந்து வருகிற கிரந்தங்கள் சுலபமாய் தெரியவரும்.

சம்பிரதாயங்கள் - பிரமாணங்கள்.

தேசம்.	கிரந்தம்.	கிரந்தம் செய்தவர்.
1. பங்காளாதேசம் - கவுட ஸம்பிறதாயம்.	1. தாயபாகம்.	ஜீமூதவாகனர்.
	2. தாயதத்துவம்.	ரகுனந்தனர்.
	3. தாயக்கிரம ஸங்கிரஹம்.	ஸ்ரீ கிர்ஷ்ணதர்க்காலங்காரர்.

தேசம்.	கிரந்தம்.	கிரந்தம் செய்தவர்.
1. பங்காளாதேசம்-(தொடர்ச்சி.)	4. விவாத பங்கார்ணவம்.	ஜகன்னுதர்.
	5. தத்தகசந்திரிகை.	குபேரர்.
	[இந்த கிரந்தம் தேவானந்த பட்டருடையதென்று முன்காலத்தில் சிலர்பிசகாக எண்ணியிருந்தார்கள்.]	
2. தென்னிந்தியா தமிழ் சம்பிறதாயம்.	1. மிதாக்ஷரம்.	விக்ஞானேச்வரர்.
	2. ஸ்மிருதிசந்திரிகை.	தேவானந்தபட்டர்.
	3. ஸரஸ்வதிவிலாஸம்.	பிரதாபருத்திரதேவர்
	4. தாயவிபாகம்.	மாதவர்.
	5. விவகாரநிர்ணயம்.	வரதராஜர்.
	6. பராசர மாதவீயம்	வித்தியாரண்ணியர்.
	7. தத்தக சந்திரிகை.	குபேரர்.
	[இந்த கிரந்தம் தேவானந்த பட்டருடையதென்று முன்காலத்தில் சிலர்பிசகாக எண்ணியிருந்தார்கள்.]	
3. மேலிந்தியா மகாருஷ்ட்டிர ஸப்பிரதாயம்.	1. மிதாக்ஷரம்.	விக்ஞானேச்வரர்.
	[இது மகாராஷ்ட்ர தேசத்திலும் வடகனரு தேசத்திலும் முக்கிய ஆதாரம்.]	
	2. விவகாரமயூகம்.	நீலகண்டர்.
	[இது குஜராத்திலும் பொம்பய் பட்டணத்திலும், மிதாக்ஷரத்தைப் பார்க்கிலும் அதிகப்பிரமாணம்—வடகொங்கண தேசத்திலும் அப்படியே.]	
	3. தத்தகமீமாம்ஸை.	நந்தபண்டிதர்.
4. காசிருஜ்யம்-காசி ஸம்பிரதாயம்.	1. மிதாக்ஷரம்.	விக்ஞானேச்வரர்.
	2. வீரமித்திரோதயம்	மித்திரமிச்ரர்.
	3. நிர்ணயஸிந்து.	கமலாகரர்.
	4. தத்தகமீமாம்ஸை.	நந்தபண்டிதர்.
5. மிதிலதேசம்-திருஹுத்ருஜியம், வடபேகார் - மிதில ஸம்பிரதாயம்.	1. மிதாக்ஷரம்.	விக்ஞானேச்வரர்.
	2. விவாதசிந்தாமணி.	வாசஸ்பதி மிச்ரர்.
	3. விவஹாரசிந்தாமணி.	வாசஸ்பதி மிச்ரர்.
	4. விவாதசந்திரிகை.	லக்ஷ்மிதேவி.
	5. விவாதரத்னுகரம்.	சண்டேச்வரர்.
	6. தத்தகமீமாம்ஸை.	நந்தபண்டிதர்.

8. வெவ்வேறு கிரந்தங்கள் ஆதாரங்களாக ஒப்புக்கொள்ளும் காரணத்தைக் கொண்டு ஐந்து ஸம்பிரதாயங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால், பங்காளா ஸம்பிரதாயம் தவிர மைற்ற நான்கிலும் சில பரஸ்பர வித்தியாஸங்களிருந்த போதிலும் ஸாதாரணமாய் மிதாக்ஷரத்தையே முக்கிய ஆதாரமாகக் கொண்டிருப்பதால், கவுட ஸம்பிரதாயம், காசீஸம்பிரதாயம் என்று இரண்டு முக்கிய ஸம்பிற தாயங்கள்தான் இருப்பதாக எண்ணத்தக்கதா யிருக்கிறது.

முக்கிய ஸம்பிரதாயம் இரண்டு.

9. அந்தந்த ஸம்பிறதாயங்களைச் சேர்ந்த இடங்களில் வஸிக்கிற ஹிந்துக்களுக்கு அங்கங்கே பிரமாணமா யிருக்க்கிற தர்மசாஸ்திரங்களில் சொல்லப்படும் மார்க்கமே அனுசரிக்கத்தக்கது. ஒருதேசத்தார் மைத்தொரு தேசத்துக்குப்போய் குடியிருந்து வருகிற காரணத்தைக் கொண்டு அவருக்கு இந்த புதுதேசத்திற்குறிய மார்க்கம் உரித்தல்ல. அது எப்படியெனில் - பங்காளாதேசத்திலுள்ளவர் தென்தேசத்துக்கு அல்லது தென் தேசத்திலுள்ளவர் பங்காளா தேசத்துக்கு இருப்பிடம் மாத்தினல் அவருக்கு முந்தியமார்க்கம் உரித்தேதவிர புதுதேசத்திய தர்மசாஸ்திரத்திலுள்ள மார்க்கங்கள் உரித்தல்ல. (2 மூ. இ. அ. 132; 12 மூ. இ. அ. 91). ஆனால், புதுதேசத்துக்கு போனவர் தம்முடைய முந்திய ஆசாரங்களை விட்டுவிட்டு விவாகம் முதலிய காரியங்களையும் சிருத்தம் முதலிய கர்மங்களையும் புதுதேசத்திய ஆசாரங்களை யனுசரித்துச் செய்துவந்ததாகத் தெளிவான ருசு ஏற்பட்டால் அவருக்கு புதுதேசத்திய தர்மசாஸ்திரங்களே செல்லும். (12 மூ. இ. அ. 96).

ஸம்பிரதாயம் மாறுதல்.

10. ஹிந்துக்கள் கிறிஸ்து அல்லது மகம்மது மதத்தில் சேர்ந்த பிறகு அவர்களுக்கு ஹிந்து தர்மசாஸ்திரங்கள் செல்லமாட்டாது. (10 மூ. இ. அ. 537. 1865-ம் ஹூ த்திய 10-வது நெ. இந்தியன் ஸக்ஸேஷன் ஆக்ட்டு பார்க்க வேண்டியது). ஆனால், அவருக்கு அதுவரையில் உண்டாயிருந்த சொத்து பாத்தியங்கள் மாத்திரம் போகமாட்டாது. (1850-ம் ஹூ த்திய 21-வது நெ. சட்டம்). ஹிந்துக்கள் கிறிஸ்துமதத்தில் சேர்ந்த பிறகு ஹிந்து தர்மசாஸ்திரத்திலுள்ள தாயபாக மார்க்கத்திலேயே இஷ்டமிருந்தால் அவர்கள் இருக்கலாம்; இல்லாவிட்டால் தள்ளிவிட

மதம் மாறுதல்.

லாமென்று பிரிவீகவுன்ஸிலாரவர்கள் முந்தி தீர்ப்புசெய்திருக்கிறார்கள். (9 மூ. இ. அ. 195). ஆனால், 1865-ம் ஹூத்திய 10-வது நெ. சட்டம் இந்தியன் ஸக்ஸெஷன் ஆக்ட்டு - அனுஷ்டானத்துக்கு வந்த பிறகு கிறிஸ்துமதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கிறிஸ்துமதஸ்தர்களுக்கும் அந்த சட்டங்களுடைய விதிகளே செல்லுமே தவிர ஹிந்து தாயபாக மார்க்கங்கள் செல்லமாட்டாது.

பம்பாய் பிறஸிடென்ஸியில், கோஜாஜாதியர்களும் கச்சிமேமனு ஜாதியர்களும் முசல்மான்மதத்தைச் சேர்ந்தவர்களா யிருந்தாலும், ஹிந்தூ தர்மசாஸ்திரங்களை யனுசரித்து வருகிறார்கள். (1 பம். ஐ. 71, 73; 2 பம் ஐ. 292; 12 பம். ஐ 294; இ. லா. ரி. 3 பம் 34; இ. லா. ரி. 6 பம். 452; இ. லா. ரி. 9 பம். 115; இ. லா. ரி. 10 பம்.1).

பவுத்த, ஜைன, ஸீக் இந்த மதங்களி லுள்ளவர்களுக்கு ஹிந்து தர்மசாஸ்திரங்களே செல்லுமென்று தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (8 ஸ. 116; 10 பம் ஐ. 258; இ. லா. ரி. 1 அ. 688).

பிரம்மஸமாஜ மதஸ்தர்களுக்குக்கூட ஹிந்தூ தர்மசாஸ்திரங்களே செல்லத்தக்கவைகளென்றும், ஹிந்துமதாசாரங்களை அவர்கள் விட்டவர்களாயினும், 1865-ம் ஹூத்திய 10-வது நெ. இண்டியன் சக்ஸெஷன் ஆக்ட்டு 331-வது செக்ஷன் கருத்தின்படி அவர்கள் ஹிந்துக்களே என்றும் வாதிக்கதக்கதா யிருக்கிறது.

விசேஷாசாரங்கள் வழக்கங்கள் அல்லது வாடிக்கைகள்.

11. எத்தேசத்திலாவது குலத்திலாவது குடும்பத்திலாவது ஏதாவது விசேஷாசாரங்களாவது, நடவடிக்கைகளாவது, வாடிக்கைகளாவது வெகுநீண்டகாலமாய் அனுசரிக்கப்பட்டு வந்ததாகக்காணப்பட்டால் அவைகள் தர்மசாஸ்திரகளிலுள்ள கோட்பாடுகளுக்கு விரோதமாக இருந்தாலும் நியாயஸ்தானங்களில் செல்லத்தக்கவைகள். அந்த வழக்கங்கள் தடையன்றியில் செல்லத்தக்கவைகளென்று மனுஸ்மிருதி யாக்கியவல்க்கிய ஸ்மிருதிமுதலிய தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருப்பதுடன்கூட பிரிவீகவுன்ஸிலாரவர்கள்கூட தீர்மானித்திருக்கிறார்கள். (12 மூ. இ. அ. 436; 3 ம. ஐ. 50).

விசேஷாசாரங்கள் வெகுகாலமாய் நடந்துகொண்டு வீடாம லிருக்க வேண்டும்.

12. தர்மசாஸ்திரங்களுக்கு விரோதமான விசேஷாசாரங்கள், வாடிக்கைகள், அல்லது நடவடிக்கைகள், விஷயங்களில் - ஒரு அம்சம் ரொம்பவும் முக்கியமானது. அதுயாதெனில அந்த ஆசாரங்கள், வாடிக்கைகள், அல்லது நடவடிக்கைகள் நடு

வில் நடுவில் நிற்காமலும் ஆட்சேபணையன்றியிலும் தடையன்றியிலும் நடந்துக்கொண்டுவந்து அவைகளை அனுசரித்து வந்தவர்கள் அவைகள் தங்களுக்கு நியாயமான ஆசாரங்கள், வாடிக்கைகள் அல்லது நடவடிக்கைகளென்கிற அறிவுடனும் சம்மதத்துடனும் நடத்திக்கொண்டு வந்தார்களென்று தெளிவாய் ருசுப்படுத்தப்பட வேண்டியது. இல்லாவிட்டால் அந்த விசேஷாசாரங்களையும், வாடிக்கைகளையும், நடவடிக்கைகளையும் கோர்ட்டார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். (3 ம. ஐ. 75, 77; 14 மூ. இ. அ. 570, 585).

இன்னும் ஒருவிஷயம்-அந்த விசேஷாசாரங்கள் நீண்டகாலமாய் நடந்துவந்தபோதிலும் பிறகு விட்டுவிடப்பட்டதாக ருசுக் காணப்படும்பட்சத்தில் கோர்ட்டார் அவைகளை ஒப்புக்கொள்ளாமல் தர்ம சாஸ்திரத்திலுள்ள கோட்பாடுகளை யனுசரித்தே தீர்மானம் செய்து வருகிறார்கள். இதற்கு உதாகரணமாக பங்காளாசீமையில் ஒரு ஜமீன்தார் விஷயத்தில், விபாகம் செய்துக்கொள்ளுகிற நடவடிக்கையில்லாமல் மூத்தகுமாரனே எப்போதும் ராஜ்யம் செய்துகொண்டிருந்த வாடிக்கை நீண்டகாலமாய் நடந்துக்கொண்டு வந்தது. ஆனால் 20 வருஷ காலமாய் இந்த ஜமீன் சொத்து குடும்ப பொது சொத்து என்று எண்ணத்தக்கவிதமாய் அனுபவித்துவந்த காரணத்தைக் கொண்டு முந்தி பிறிக்ககூடாத சொத்தா யிருநதபோதிலும்அது பிந்தி பாகத்துக்கு யோக்கியமானதென்று பிரிவீகவுன்சிலாரவர்கள் தீர்மானம் செய்தார்கள். (இ. லா. ரி. 1 க. 186).

சிலஜனங்கள்சேர்ந்து தாங்கள் ஏதோ ஒருவிதமாய் நடக்கிறதென்று ஒரு புது ஏற்பாடு செய்துகொண்ட காரணத்தால்மட்டும் எல்லாருக்கும் செல்லத்தகுந்த ஒரு விசேஷாசாரமாய் ஏற்படமாட்டாது. (8 மூ. இ. அ. 420; 9 மூ இ. அ. 242; இ. லா. ரி. 3 அ. 738).

இழிவான வழக்கங்கள் செல்லமாட்டாது.

13. மேலும்-இழிவான வாடிக்கைகள் எவ்வளவு காலமாய் சென்றுகொண்டு வந்தாலும் அவைகளை கோர்ட்டார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பம்பாய்சீமையில் சிலஜாதியார்களில் புருஷன் பெண்ஜாதிகளுக்கு ஒத்துமை தப்பிப்போய் புருஷனை தள்ளிவிட்டு அவனிஷ்டத்துக்கு விரோதமாகப் பெண்ஜாதி வேறொருவனை விவாகம் செய்துகொள்ளும் வாடிக்கை இருக்கிறதென்று ஒரு கேஸில்

வாதிக்கப்பட்டது. அப்படிப்பட்ட வாடிக்கை இழிவானதாய் இருப்பதால் செல்லத்தக்கதல்லவென்று ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (2 பம். ஐ. 124; 7 பம். ஐ. 133, A. C. J). அப்படியே வேறுகேஸில் தேவடியாள் மகனுக்கு வார்சுபாத்தியம் உண்டாக்குகிற வாடிக்கை உண்டென்று வாதிக்கப்பட்டது. ஆனால் அந்த வாதம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. (இ. லா. ரி. 2 பம். 140).

தீர்ப்புகள்.

14. ஹிந்து ஜனங்களுடைய ஆசார வியவகாரங்களில் தர்மசாஸ்திரங்களும், வியாக்கியானங்களும், மூலாதாரங்களாக இருந்தும், அவைகளை யனுசரித்து கல்கத்தா, பொம்பாய், அலஹாபாத் மதருஸ் - இந்த நாலு ஐகோர்ட்டாரவர்களும் பிறிவிகவுன்ஸிலாரவர்களும் அப்போதைக் கப்போது செய்யும் தீர்ப்புகள், எல்லாவற்றைப் பார்க்கிலும் முக்கியப்பிரமாணமாக செல்லுகின்றன. விவாதாம்ச விஷயங்களில் தர்மசாஸ்திரங்களை ஆராய்ந்து அபிப்பிராயம் தெரியபடுத்துவதர்க்காக 1859-ம் ஹூம் வரையில் நியாயஸ்தானங்களில் பண்டிதர்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். பிசகாயிருந்தாலும் சரியாயிருந்தாலும் அந்த பண்டிதர்கள் சொன்ன அபிப்பிராயங்களை யனுசரித்தே முன்காலங்களில் தீர்ப்புகள் செய்யப்பட்டுவந்தன. ஆனால் இப்பொழுது ஸ்மிருதிகள் முதலிய மூலகிரந்தங்களுக்கு இங்கிலீஷ்பாஷையில் தர்ஜுமாக்கள் செய்யப்பட்டிருக்கிற காரணத்தால் தர்மசாஸ்திரங்களிலுள்ள அம்சங்களையும் நியாயாதிபதிகள் தாங்களே சுவதந்திரமாக தெரிந்து தீர்ப்புகள் செய்கிறார்கள். இந்தியாதேசங்களிலுள்ள நான்கு ஐகோர்ட்டாரவர்களும் பிறிவீகவுன்ஸிலாரவர்களும் செய்கிற தீர்ப்புகள் மாதமாதம் இந்தியன் லாரிபோர்ட்ஸ் சஞ்சிகைகள் மூலமாக பிரசித்தம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த தீர்ப்புகளிலுள்ள தர்மசாஸ்திரங்களி லுள்ள விஷயங்களை சுருக்கமாய் எடுத்து - மெயின், வெஸ்டு பூலர், கவெல், ஜாலி, பானர்ஜி, மித்திர, சிரோமணி, சர்வாதிகாரி, முதலிய வித்துவான்கள் இங்கிலீஷ்பாஷையில் பெரிய பெரிய ஹிந்துலா கிரந்தங்களை செய்திருக்கிறார்கள். அந்த கிரந்தங்களை யனுசரித்து இங்கிலீஷ்பாஷையை அப்பியாசம்செய்யாத தென்தேசத் தார்களுக்குபயோகத்துக்காக இந்த கிரந்தம் ஆரம்பிக்கப்பட்டது.

2-வது அத்தியாயம்.

விவாஹம்.

8-வித விவாஹங்கள்.

15. முன்காலங்களில் பிராம்ம, தைவ, ஆர்ஷ, பிரஜாபத்ய, காந்தர்வ, ஆசுர, ராக்ஷஸ, பைசாச மென்று 8-வித விவாஹங்கள் நடந்துவந்தன. அவைகளில் பிராம்ம, தைவ, ஆர்ஷ, ப்ராஜாபத்யமென்கிற நான்கு கன்னியாதானங்கள் - பிராமணர்களுக்கு யோக்கியமானவைகள். ஸ்திரீ புருஷர்கள் மனமொப்பி சேருவது காந்தர்வவிவாஹம். போரில் ஜெயித்து அல்லது பலாத்காரமாகக் கொண்டுபோ யாவது செய்யும் விவாஹம் ராக்ஷஸ விவாஹம். காந்தர்வ ராக்ஷஸ விவாஹங்கள் க்ஷத்ரியர்களுக்கு யோக்கியமானவைகள். பெண்ணை விக்கிரயித்தால் அது ஆசுர விவாஹம் - இது வைசியர் சூத்திரர் இவர்களுக்கு யோக்கியம். தூக்கத்தாலாவது, அல்லது மயக்கத்தாலாவது, அல்லது பைத்தியத்தாலாவது மெய்மறந்திருக்கும் ஸ்திரீயுடன் புணருகிறது - மோசஞ் செய்தாவது பலவந்தம் செய்தாவது ஸம்போகஞ் செய்கிறது - இது பைசாச விவாஹம். இது எல்லாஜாதியாருக்கும் நிஷித்தம். இப்படி தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்பொழுது அனுஷ்டானத்திலிருக்கிறது இரண்டு.

16. மேல் சொல்லப்பட்ட 8-விதமான விவாஹங்களில் இப்போது பிராம்ம விவாஹம் (கன்னியாதானம்), ஆசுர விவாஹம் (கன்னியா விக்கிறயம்), இவை ரெண்டுந்தான் அனுஷ்டானத்தி லிருக்கின்றன. நான்கு ஜாதியார்களுக்கும் வெவ்வேறு விதமான விவாஹங்கள் தர்மசாஸ்திரங்களில் ஏற்படுத்தப்பட் டிருந்தாலும், இக்காலத்தில் எல்லா ஜாதியர்களுக்கும் பிராம்ம, ஆசுர விவாஹங்கள் உரித்தாயிருக்கின்றன. அனேக தேசங்களில் பிராம்ம விவாஹம் சூத்திர ஜாதியர்களிலும் ஆசுர விவாஹம் பிராம்மண ஜாதியர்களிலும் நடக்கின்றன. மதராஸ் ஸதர்கோர்ட்டார்கள்கூட இப்படியே தீர்மானித்திருக்கிறார்கள். (1859-ம் வருஷத்திய மதராஸ் தீர்ப்புகள், பேஜ் 44). ஆசுர விவாஹம் அதாவது கன்னியா விக்கிறயம் மதராஸ் பிரஸிடென்ஸியில் அநேக இடங்களில் பிராம்மண ஜாதியில் நடக்கிறது சாஸ்திர விரோதமா யிருந்தாலும் அந்த விவாகங்கள் செல்லத்தக்கவைகளென்று மதராஸ் ஐகோர்ட்டாரவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 13 ம. 83).

17. காந்தர்வ விவாகங்கள்கூட இக்காலங்களில் அங்கங்கே நடக்கிறதாகச் சொல்லுகிறார்கள். க்ஷத்திரிய ஜாதியர்களில் காந்தர்வ விவாகம் செல்லுமென்று 1817-ம் வருஷத்தில் பங்காளா ஸதர்கோர்ட்டார் தீர்ப்புசெய்திருந்தார்கள். பிற்பாடு சில கேஸுகளில்கூட அப்படியே தீர்ப்புக் கொடுத்தார்கள். ஆனால், இதுவரையில் அலஹாபாத் ஐகோர்ட்டார்கள் க்ஷத்திரிய ஜாதிகளில் காந்தர்வ விவாகங்கள் செல்லமாட்டாதென்றும் அவ்விவாஹங்களில் ஏற்பட்ட பெண்ஜாதிகள் தாஸிகளுக்கு சரியென்றும் அவர்களுக்குண்டான சந்ததிகள் தாசிகள் சந்ததிக்கு சரியானவர்களென்றும் தீர்ப்புகள் செய்தார்கள். (இ. லா. ரி. 3 அ. 738). ஹோமம்முதலிய விதிகளுடன் சரியாகநடந்த காந்தர்வ விவாஹங்கள் செல்லுமென்று மதராஸ் ஐகோர்ட்டார் தீர்ப்புசெய்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 12 ம. 72; 13 மூ. இ. அ. 506). ஹோமம் முதலிய விதிகள் மந்திரங்கள் அவசியமாக இருக்கும் விவாஹம் ஸ்மிருதிகளில் விவரிக்கப்பட்டிருக்கிற காந்தர்வ விவாஹமாக எப்படியாகுமோ ஊகிக்க முடியவில்லை.

காந்தர்வ விவாஹம்.

18. பெண்ணுக்குதக்க வரனை சம்பாதித்து விவாஹம் செய்யும் அதிகாரம் முதல் முதலில் தகப்பனுக்கென்றும்-அவனுக்கு பிறகு வரிசையாய்-பிதாமகன், தமயன், சிரிய தகப்பன், பெரிய தகப்பன், மாமன், தாயாதி இவர்களுக் கென்றும் இவர்கள் ஒருவருமில்லாமல் போனால் தாயாருக்கு அந்த அதிகாரம் சேருமென்றும் - பந்துக்கள் ஒருவரு மில்லாமல் போனால் தானே வரனை நிட்சயித்துக்கொண்டு பெண் விவாஹம் செய்துக் கொள்ளலா மென்றும் மிதாக்ஷரம் முதலான தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

பெண்ணை விவாஹம் செய்யும் அதிகாரம் யாருடையது.

பெண்ஜாதி குழந்தைகளுடன் புருஷனைத் தள்ளிவிட்டு இருந்தால் தாயாரே சுவதந்திரமாக பெண்ணுக்கு விவாஹம் செய்யலாம். (இ. லா. ரி. 11 பம் 247). ஆனால், வேறு எந்த நிலமையிலும் தகப்பன் அனுமதியன்றியில் தாயாராவது வேறுயாராவது குமாரத்திக்கு விவாஹம் செய்தால், அது செல்லமாட்டாது. (இ. லா. ரி. 12 பம். 10. பிந்தி 21-வது பேராவில் இ. லா. ரி. 14 ம 316 பார்க்கவேண்டியது). தாயாரனுமதி யன்றியில் தகப்பன் குமாரத்திக்கு விவாஹம் செய்யலாமென்பது தெளிவா யிருக்கிறது.

குமாரத்திக்கு விவாஹம் செய்யும்படியான பாத்தியம் புருஷர்களுக்கேயல்லாமல் தாயாருக்கு உண்டாகமாட்டா தென்று தர்மசாஸ்

திரங்களில்சொல்லப்பட்டிருக்கிற எல்லா நியாமும் அவிபக்த குடும்பத்துக்கே செல்லத்தக்கதா யிருக்கிறது. விபக்த குடும்பங்களில் சிரிய தகப்பன பெரிய தகப்பன்களைப் பார்க்கிலும் தாயாருக்கு அதிகபாத்திய முண்டென்றும் தாயா ரனுமதியன்றியில் அவர் ஒருவரும் கன்னிகைக்கு விவாஹம் செய்யக்கூடாதென்றும மதராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (4 ம. ஐ. 339).

கன்னிகைக்கு விவாஹம்செய்யும் விஷயத்தில், ஸபத்னி மாதாவைக் காட்டிலும் மாதாமஹனுக்கு (தாயின் தகப்பனுக்கு) அதிக பாத்திய முண்டென்று கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (7 ஸ. 321).

கோர்ட்டார் விவாஹத்தை நிறுத்தல்.

19. கன்னிகைக்கு விவாஹம் செய்யும்படியான அதிகாரம் வரிசையாக யாருக்கு என்று மேல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அதிகாரமுள்ளவர்கள் அனுமதிக்கு விரோதமாக கன்னிகைக்கு விவாஹம்செய்ய எத்தினம் நடக்கும் பட்சத்தில் கோர்ட்டில் மனுக்கொடுத்து விவாஹத்தை நிறுத்தலாம். (இ. லா. ரி. 11 பம். 253). கன்னிகையை சம்ரட்சித்து வருபவர்கள் கெட்ட எண்ணத்தாலாவது சொந்த பிரயோஜனத்தைக் கொண்டாவது அக்கன்னிகையின் நன்மைக்கு விரோதமான சம்பந்தத்தை ஏற்பாடுசெய்து விவாஹம்செய்யத் தயாராயிருந்தால் கன்னிகையின் பந்துவாவது சிநேகிதனாவது கோர்ட்டில் மனுக்கொடுத்து அந்த விவாஹத்தை நிறுத்தலாம். ஆனால், அப்படி தகப்பனே சம்பந்தம் ஏற்படுத்தி விவாஹம் செய்யப்போனால் அது எவ்வளவு அயோக்கியமா யிருந்தாலும் கோர்ட்டார் அது விஷயத்தில் ஸாதாரணமாய் பிரவேசிக்கமாட்டார்கள். (இ. லா. ரி. 12 பம் 480).

நிறுத்தவேண்டியதெனறு கோர்ட்டார் உத்திரவு செய்த பிறகு கூட விவாஹம் நடத்தப்பட்டுப் போனால் அதை கோர்ட்டார் றத்து செய்யமாட்டார்கள். (இ. லா. ரி. 11 பம். 247; இ. லா. ரி. 12 க. 140; இ. லா. ரி. 14 ம. 260). ஆனல், அப்படி உத்திரவைமீறி நடத்தியவர்களை சிட்சிப்பார்கள்.

விவாஹத்தை றத்து செய்ய.

20. பூர்த்தியாக நடப்பதர்க்குமுந்தி விவாஹத்தை நிறுத்துவார்களேயன்றி முடிந்துபோன பிறகு கோர்ட்டார் றத்துசெய்ய மாட்டார்கள். அனுமதிகொடுக்க வேண்டியவர்களுடைய அனுமதியில்லா

மல் நடந்திருந்தாலும்சரி கன்னிகையை வேறு ஒருவருக்குக் கொடுப்பதாக நிச்சயித்திருந்தாலும்சரி, ஸ்திரீ புருஷர்களுக்கு எவ்வளவு ஒத்துமை யில்லாமலிருந்தாலும்சரி, பெரியரோகம் பைத்தியம் நபும்ஸகத்தன்மை முதலிய காரணங்கலிருந்தாலும்சரி வேறுகாரண மிருந்தாலும்சரி நடந்த விவாஹத்தை ரத்துசெய்ய முடியாது. ஒருதடவை ஏற்பட்ட பிறகு விவாகபந்தம் விட்டுவிட முடியாது. இந்த விஷயத்தில் மதராஸ் ஐகோர்ட்டுக்கு அலங்காரமாயிருந்து இறந்துபோன ஜட்ஜி முத்துசாமி அய்யர் அவர்கள் "வெங்கடாசாரியர் கேஸி" ல் செவ்வையாக பரிசோதித்து தீர்ப்புசெய் திருக்கிறார். (இ. லா. ரி. 14 ம. 316).

"வெங்கடாசாரியர் கேஸ்." இ. லா. ரி. 14 ம. 316.

21. இந்த கேஸில் புருஷன் அனுமதி கொடாமலிருக்க புரோகிதரிடத்தில் பொய்சொல்லி பெண்ஜாதி தானே சுவதந்திரமாக பெண்ணுக்கு விவாஹம் நடத்திவிட்டாள். பிறகு அந்த விவாஹத்தை புருஷன் ஆட்சேபித்த காரணத்தைக்கொண்டு அதை ஸ்தாபிக்க வேணுமென்று மாப்பிள்ளை பிறாது செய்தான். பெண்ணின் தகப்பனுடைய சம்மதியில்லை யென்றகாரணத்தைக் கொண்டு அந்த விவாஹத்தை றத்துசெய்வதில் தர்மசாஸ்திரம் எப்படியிருந்தாலும் ஜனங்களுக்கு மிகவும் அசம்மதமாக யிருந்திருக்கும். எப்படியிருந்தால் என்ன தர்மசாஸ்திரங்களின் சாரத்தை ஆராய்ந்து ஜட்ஜி முத்துசாமி அய்யர் அவர்கள் அந்த விவாகத்தை உருதிப்படுத்தினர். இனி மைத்தவர்கள் உருதியாய் விட்டதென்று சந்தோஷப்பட்டு பெண்ணின் தகப்பன் அனுமதி யன்றியிலேயே விவாஹம்நடத்தி விடுவார்களென்று ஜனங்கள் எண்ணிக்கொள்ள இடமில்லாம லிருக்கும்படி அவர்கள் யுக்தியோடுகூட தீர்ப்பு எழுதினர்கள்.

22. இந்த ஜட்ஜிமெண்டிலுள்ள சாராம்சங்கள் என்ன வென்றால்—

ஜட்ஜிமெண்டிலுள்ள சாராம்சங்கள்.

(1.) கன்னியாதானம் சப்தபதி - இந்த இரண்டு காரியங்களும் விவாஹம் முடிவதர்க்கு அவசியம். கன்னியாதானம் அதாவது கன்னிகையை போஷித்து வருகிறவர்கள் அந்த பெண்ணின் நன்மையைக் கோறி நல்ல எண்ணத்தோடு தகுந்த வரனை விசாரித்து அந்த கன்னிகையைக் கொடுக்கிறது. சப்தபதி அதாவது கையைப்பிடித்துக்கொண்டு அந்தப் பெண்ணுடன் ஹோமம்செய்த அக்கினிக்கு நேரில் மந்தர பூர்வமாக ஏழடி நடக்கிறது - இது ஆனபிறகு பேதிக்க முடி

யாத விவாஹபந்தம் ஏற்படுகிறது. (2.) மேற்சொல்லிய விதமாய் கன்னிகையை போஷித்து வருகிறவர்கள் கிரமமாக கனனிகாதானம் செய்து சப்தபதி காரியம் நடந்தபிறகு விவாஹம் றத்துசெய்ய சாத்தியப்பட மாட்டாது. (3). மோசஞ்செய்தாவது பலாத்காரமாகவாவது கன்னிகையைக் கொண்டுபோய் விவாஹம் முடித்துவிட்ட பட்சத்தில் சப்தபதி கர்மம் நடந்தாலும் அந்த விவாஹம் செல்லமாட்டாது. ஏனென்றால் கன்னிகை ஸம்ரக்ஷணம் செய்துவருகிறவர் இல்லாமல் கன்னிகாதானம் இல்லாததால் ஸப்தபதி கர்மம் பலிக்காமல் பொய் விவாஹபந்தம் ஏற்படமுடியாது.

"வெங்கடாசாரி கேஸி" ல், கன்னிகை சம்ரக்ஷித்துவந்த தாயார் அந்தப்பெண் நன்மையைக்கோறி கொஞ்மேனும் கெட்டயெண்ணமில்லாமலும் பலவந்தமன்றியிலும் தகுந்த வரனை நிச்சயம் செய்து தன் பெண்ணை விவாஹம் செய்து கொடுத்ததாக நம்பிக்கை யுண்டானபடியால் கிறமமான கன்னிகாதான மென்றும் சப்தபதி கிரமமாக முடிந்து விவாஹபந்த மேற்பட்டுவிட்டதென்றும், புருஷன் அனுமதியன்றியில் விவாஹத்தை முடித்தது அக்கிறமமா யிருந்தாலும் நடந்துபோன பிறகு ரத்துசெய்ய சாத்தியமல்லவென்றும் அவர்கள் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 14 ம. 316.)

23. மேல் பாராவில் சொல்லப்பட்ட அம்சங்களால் விவாஹ பூர்த்திக்கு கன்னிகாதானம் சப்தபதி இந்த இரண்டே அவசியமென்று தோணப்படுகிறது. விவாஹம் நடந்ததாக ஒப்புக்கொண்டால் அது சரியாய் நடந்ததென்றே கோர்ட்டார் எண்ணுவார்கள். சரியாய் நடக்கவில்லையென்று வாதிக்கிரவர்கள் அதை நம்பும்படியான ருஜுவை காண்பிக்கவேண்டியது. (இ. லா. ரி. 12 க. 140).

விவாஹம் கிரமமாக நடந்ததா?

சாஸ்திரத்தில் சொல்லியபடி, சப்தபதி கர்மத்தில் ஏழாவது அடியின்பேரில் கால்வைக்கும் வறையில் விவாஹம் முடியவில்லை யென்றும் அதுவறையிலும் விவாஹத்தை நிறுத்திவிடலாமென்றும் ஏற்படுகிறது. ஆனால் சப்தபதியல்லாமல் வேறு எந்த கர்மம் முடிந்தபிறகாவது விவாகம் முடிவதாக தேசாசாரம் உருதியா யிருந்தால் அந்த ஆசாரம் செல்லும். (இ. லா. ரி. 5 க. 692; இ. லா. ரி. 10 க. 138). பெண்ணுக்கு மங்கிலிய சூத்திறம் கட்டினவுடனே விவாஹபந்தம் ஏற்படுகிறதாக தென்னிந்தியாவில் சகலமானவர்களுக்கு பொதுவாய் நம்பப்

ஸப்தபதி:

பட்டு வருகிறது. சப்தபதி முடிந்தபிறகு விவாஹம் ஸம்பூர்த்தியாய் விடுகிறதென்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

நிஷேகம்.

விவாஹபந்தம் பூர்த்தியாக உண்டாவதர்க்கு நிஷேகமாகவேண்டியது அவசியமில்லை. நிஷேகம் நடக்காமலேயிருந்தாலும் தாம்பத்தியபந்தம் விடமுடியாது (இ. லா. ரி. 9 ம 466).

தாய்தகப்பன் இஷ்டமன்றியில் பெண்ணின் விவாகம்.

24. பலவந்தமாய் அல்லது மோசஞ்செய்தாவது பெண்ணைக் கொண்டுபோய் கல்லியாணம் செய்தால் அந்த கல்லியாணம் செல்லாமல் போவதுடன் அப்படிப்பெண்ணைக் கொண்டு போனவர் பினல் கோட் 363 - வது செக்ஷனில் கண்டபடி போஷிப்பவர்கள் அத்திலிருந்து அவர் சம்மதமன்றியில் பெண்ணைக் கொண்டுபோன குற்றத்துக்காக 7 வருஷம் வரையில் கயிதி தெண்டனைக்குட்படுவார்கள். அந்தப் பெண்ணுக்கு விவாஹம் நடக்காதது போலவே பாவித்து மறுபடி விவாஹம் செய்யலாம். ஆனால் தாய்தகப்பன் இஷ்டப்படி சிரியதகப்பன், பெரியதகப்பன், மாமன், பெரிய பாட்டன் முதலிய பந்துக்களுடைய ஸம்ரக்ஷணத்தில் பெண் இருக்கும்போது அவர்கள் சுவதந்திரமாகவே தாய்தகப்பன்களுக்குத் தெரியாமலே அப்பெண்ணுக்கு விவாஹம் நடத்திவிட்டால், முத்துசாமி அய்யர் அவர்கள் ஜட்ஜிமெண்டைக் கொண்டு அந்த விவாஹம் செல்லமாட்டா தென்று நிச்சயமாய் சொல்லமுடியாது. அப்படி விவாஹம் முடிந்தபொழுது, தாய்தகப்பன்கள் சம்மதிக்காமல் பெண்ணுக்குத் திரும்ப விவாஹம் செய்தால் பினல்கோட் 494 - வது செக்ஷன்படி புனர்விவாஹ மென்கிற குற்றத்திர்க்காக அவர்கள் 7 வருஷம் வரையில் கயிதிதண்டனைக் குட்படுவார்கள் ஆகையால் அப்படி அக்கிறமமான விவாஹம் நடந்திருந்தால் முதலில் அதை ரத்துசெய்யக் கோர்ட்டில் பிருதுசெய்து ரத்துசெய்த பிறகு மறுபடி விவாஹம் செய்கிறது மெத்தநலம்.

உதாஹரணங்கள்.

25. இதின் கீழுள்ள இரண்டு உதாஹரணங்கள் அவசியம் கவனிக்கவேண்டியது. (1.) தாய்தகப்பன்கள் இஷ்டத்தின்பேரில் ஒருபெண் தன்னுடைய தமக்கை புருஷன் வீட்டில் தன் தமக்கையின் போஷணையி லிருந்துவந்தது. அந்தப்பெண்ணை ஒரு பணக்கார கிழவனுக்குக் கொடுத்து திரவியம் சம்பாதிக்க வேணுமென்று தாய்தகப்பன்மார்கள் உத்தேசித்

துக்கொண்டிருந்தார்கள். அது சங்கதி தெரிந்துக்கொண்டு அந்தப் பெண்ணுக்குத் தகுந்த வரனை சம்பாதித்துத் தாய்தகப்பன்களுக்குச் சொல்லாமலே மாப்பிள்ளை விவாஹம் செய்துவிட்டார். இந்த விவாஹம் ரத்துசெய்ய முடியாதென்று முத்துசாமி அய்யர் அவர்கள் தீர்ப்பைக்கொண்டு ஏற்படுகிறது.

(2.) தாயார் இறந்துபோன காரணத்தைக்கொண்டு ஒருபெண் பாலியம்முதல் மாமன் வீட்டில் பெரிய தாயார் போஷணையிலிருந்து வந்தது. தகப்பனுக்கு தெரியாமலே அந்த பெண்ணுக்குத் தகுந்த சம்பந்தம் ஏற்படுத்தி மாமன் விவாஹம் செய்துவிட்டார். இந்த விவாஹம் ரத்துசெய்ய முடியாது.

மேல்சொல்லிய இரண்டு சந்தர்ப்பங்களிலும் பெண்ணின் தகப்பன் விவாஹம் நடப்பதர்க்கு முந்திக் கோர்ட்டில் பிடீஷன் தாகல் செய்து விவாஹத்தை நிறுத்தியிருக்கலாம்.

தாய்தகப்பன் இஷ்டமன்றியில் பிள்ளைக்கு விவாஹம்.

26. தாய்தகப்பன்களிஷ்டமன்றியில் பிள்ளையைக் கொண்டுபோய் கன்னிகையுடைய தாய் தகப்பன்கள் கன்னிகையைக் கொடுத்து பலவந்தமாக விவாஹம் செய்துவிட்டால் அவர்கள் எவ்விதமான தண்டனைக்காவது நஷ்டத்துக்காவது பாத்திரர்களாயினும் விவாஹம் செல்லாமல் போகமாட்டாது.

பால்யம், பைத்தியம், நபும்ஸகத் தன்மை.

27. இதர்க்குமேல் சொல்லப்பட்டதை யெல்லாங் கொண்டு ஹிந்துக்களுடைய விவாகம் மதசம்மதமான ஒரு கர்மம் என்று நினைக்க வேண்டியதே யன்றி கிறிஸ்து மதஸ்தர்களுக்குள் ஸ்திரீ புருஷர்கள் சம்மதித்து ஏற்படுத்திக் கொள்ளுகிற கண்டிராக்டைப்போல பாவிக்கத்தக்கதல்ல வென்று தெளிவா யிருக்கிறது. ஆகையாலேயே, புத்திதெரியாத சின்ன குழந்தைகளுக்கு செய்கிற விவாஹங்கூட செல்லுகிறது. (இ. லா. ரி. 5 அ. 513). இக்காரணத்தால் தான் நபும்ஸகனுக் கானாலும் பித்தனுக்கானாலும் பெண்ணைக் கொடுத்து விவாஹம் செய்தாலும் அந்த விவாஹம் செல்லுகிறது. (இ. லா. ரி. 1 அ. 549). அந்த பித்தனுக்காவது, நபும்ஸகனுக்காவது வார்சுபாத்திய மில்லாமல் போனாலும் அவன் குமாரர்களுக்கு வார்சுபாத்திய முண்டு. மேலும், எவிடன்ஸ் ஆக்ட்டு (சாட்சிய சட்டம்) 112-வது செக்ஷன்படி ஸ்திரீ புருஷர்களுக் குண்டான சந்ததி, அது உண்டா

குங்காலத்தில் அவர்கள் கலக்கவில்லையென்று தெளிவாய் ருஜுவில்லாமல் போனால் கிறமமாக உண்டான சந்ததியென்றே எண்ணப்படும்.

28. ஸம்பந்தம் நிச்சயம் செய்த பிறகு, நியாயமறிந்தவர்கள் வார்த்தையை விட்டு விவாஹத்தை மாத்தமாட்டார்களென்று மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒப்புக்கொள்ளப்பட்ட ஸம்பந்தத்தைக் காட்டிலும் மேன்மையான சம்பந்தம் நேர்ந்தால் முதல் ஸம்பந்தத்தை தள்ளிவிடலாமென்றும், கெட்டவியாதி, நபும்ஸகத்தன்மை இதுபோல விஷயங்கள் தெரியவந்தால் விவாஹத்தை மாத்துகிறது தோஷமல்லவென்றும் யாக்கியவல்க்கிய ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. நிட்சிதார்த்தமான பிறகு காரணமில்லாமல் விவாஹத்தை மாத்த எண்ணங் கொண்டால் பலவந்தம் செய்து அந்த விவாஹத்தை நடத்தலாமென்று நாரத ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

நிச்சயித்த விவாஹத்தை மாற்றுதல்—தர்மசாஸ்திரங்கள்.

29. தர்மசாஸ்திரங்களில் எப்படி இருந்தாலும் இக்காலத்தில் ஸம்பந்தம் நிச்சயப்பட்டு லக்கின பத்திரிகையனுப்பப்பட்டு நிச்சிதார்த்தமான பிறகுகூட இஷ்டமில்லாமல் போனால் விவாஹத்தை மாத்தலாம் என்பது சந்தெகமற்ற விஷயம். பலவந்தம்செய்து விவாஹத்தை நடக்கும்படி செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. (ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட்டு, 1877 ஞு-ம் 1-வது நெ. சட்டம், 21-வது செக்ஷன் 6-வது கிளாஸ்.)

தீர்ப்புகள்.

அக்கிரமமாக ஒடம்படிக்கையை மீறினவர்பேரில் மைத்தொருவர் பிருதுசெய்து தனக்குண்டான நஷ்டத்தை பெற்றுக்கொள்ளலாம். (7 பம். ஐ. 122; இ. லா. ரி. 1 க. 74; இ. லா. ரி. 11 பம். 422). தாவாசெய்தவர் பேரிலேயே பிசகு இருந்தால் நஷ்டம் கொடுக்கப்படமாட்டாது. (1860-ம் ஞுத்திய மதராஸ் தீர்ப்புகள், 274-வது பேஜ்). துர்வியாதி முதலிய விஷயங்கள் தெரியப்பட்டாலாவது ஸ்திரீ புருஷர்களில் யாருவது சம்மதிக்காமல் நிராகரித்தாலாவது விவாஹத்தை நிறுத்தினல் நஷ்டத்துக்கு பிருது செல்லமாட்டாது.

பெண்ணைக் கொடுக்கிறதாக ஸம்மதித்த பிறகு பெண்ணின் தாய்தகப்பன்களுக்கு கொஞ்சம் பணம் கொடுக்கப்பட்டது. பிறகு

அவர்கள் பெண்ணுக்கு வேருெரு ஸம்பந்தம் ஏற்படுத்தி விவாஹம் செய்தார்கள். பணத்துக்காக பிருதுசெய்யலாம். (இ. லா. ரி. 1 க. 1054).

30. பெண்ணை கொடுத்தால் இவ்வளவு துகை கொடுக்கிற தென்று முந்தி பெண்ணின் தகப்பனிடத்தில் பிள்ளையின் தகப்பன் ஒப்புக்கொண்டு விவாஹம் நடந்தது. அந்தத் துகைக்காக பிருது செல்லுமென்று மதராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித் திருக்கிருர்கள். (இ. லா. ரி. 13 ம. 83).

பணவிஷயமான உடம்படிக்கை.

31. பூர்வகாலத்தில் வேறு ஜாதிகளில் விவாஹம் செய்தால் சென்றுகொண் டிருந்ததாக தர்மசாஸ்திரங்களால் தெரியவருகிறது. எந்தஜாதி புருஷனும் தன்ஜாதி பெண்ணையாவது தாழ்ந்தஜாதி பெண்ணையாவது விவாஹஞ் செய்துக் கொள்ளலா மென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனுல், அந்த மார்க்கம் இப்போது அனுஷ்டானத்தி லில்லை. வேறுஜாதியில் செய்யும் விவாஹம் செல்லமாட்டாது.

வேறுஜாதிகளில் விவாஹம்.

32. இக்காலத்தில் ஸ்திரீ புருஷர்கள் ஒரு ஜாதியாயும் வேறு குடும்பமாயும் வேறு கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயும் இருக்கவேணும். பெண்ணுக்கும் வரனுக்கும் ஸபிண்ட பந்துத்வ மிருந்தால் விவாஹம் கூடாதென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட டிருக்கிறது. அதாவது, பிள்ளையின் முன்னேர்கள் பெண்ணின் முன்னேர்கள், (பிள்ளையாவது பெண்ணையாவது பிடித்துக்கொண்டு) தகப்பன் வர்க்கத்தில் 7 - தலைமுறைகளுக் குள்ளும் தாய்வர்க்கத்தில் 5 - தலை முறைகளுக் குள்ளும் ஒருவருகவே யானுல் விவாஹம் கூடாதென்று சொல்லப்பட் டிருக்கிறது. ஆனுல், தென்னிந்தியா மேலிந்தியா இந்த விடங்களில் இந்த கோட்பாடுக்கு விரோதமாக ஆசாரம் ஏற்பட் டிருப்பதால், மாமன் பெண், அத்தையின் பெண், தமக்கை தங்கைகளின் பெண் இவர்களுடன் விவாஹம் சாஸ்திரங்களுக்கொத்ததா யில்லாமலிருந்தாலும் செல்லுகின்றது. இந்த விவாஹங்கள் பிராமண ஜாதியார்களிலே கூட அடிக்கடி நடந்து கோர்ட்டில் அங்கீகரிக்கப் பட் டிருக்கின்றன.

வதூவரர்கள் குலகோத்திரங்கள்.

கோத்திர வித்தியாசம் பிராமணர்களுக்கு முக்கியமே யல்லாமல் சூத்திரஜாதியர்களுக்கு அவசியமில்லை. (இ. லா. ரி. 5 க. 708).

பிராமண ஜாதியில் ஒரே கோத்திரமுள்ள குலங்களில் நடந்த விவாஹம் செல்லமாட்டாது.

33. அண்ணன் தம்பிகளின் குமாரத்தியை விவாஹம் செய்தால் அவ் விவாஹம் சூத்திரஜாதியில்கூட செல்லமாட்டாதென்று தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. (இ. லா. ரி. 6 ம. 43). மேலும் தன் தங்கை, அத்தை, சிறிய தாயார், (தாயின் தங்கை) சிற்றப்பன் பெரியப்பன் பெண், சிறிய தாயார் பெரியதாயார் பெண் - இவர்களில் விவாஹம் செய்துகொள்ளக் கூடாதென்று எல்லா ஜாதியார்களும் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள்.

செல்லாத விவாஹங்கள்.

தத்தபுத்திரன் ரக்த சம்பந்தத்தால் ஜனக குடும்பத்திலும் சுவீகாரமான காரணத்தால் தத்துப்புகுந்த குடும்பத்திலும் கூட விவாஹம் செய்துகொள்ளக் கூடாது. இந்தக் கட்டுப்பாடு முக்கியமாய் பிராமணர்களுக்கு உரியது.

விவாஹ விஷயத்தில் சபத்தினி மாதாவை சம்பந்தப்பட்ட பந்துக்களை சொந்த தாயாரை சம்பந்தப்பட்ட பந்துக்களைப் போலவே எண்ணி நிஷேதம் படிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் அனேகவிதமான நிஷேதங்கள் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை இக்காலத்தில் அனுஷ்டானத்திலில்லை. குரு சிஷியர் குமாரத்திகளையாவது தன் தாயார்பேருள்ள பெண்ணையாவது விவாஹம் செய்துக்கொள்ளக் கூடாதென்று தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வரனைக்காட்டிலும் வதூ அதிக வயதானவளா யிருக்கக்கூடா தென்றும் தமக்கையை தள்ளி தங்கைக்கு விவாஹம் செய்யக்கூடா தென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரி விவாஹங்கள் நடந்ததில்லை. ஆனால், நடந்தால் செல்லாதென்று சொல்ல ஆதாரமுமில்லை.

ரஜஸ்வலை யாவதர்க்கு முந்தியே கன்னிகைக்கு விவாஹம் செய்யவேண்டிய தென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கிறது. ஆனால், இந்த ஆசாரம் பிராமண ஜாதியர்களில் மட்டும் ஸ்திரமாக இருக்கிறது.

34. தர்மசாஸ்திரங்களில் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர என்று நாலு ஜாதிகள்தான் சொல்லப்பட்டிருக்கின்றதே தவிர இக்காலத்தில் ஏற்பட்டிருக்கிற பிரிவுகளும் உட் பிரிவுகளும் சொல்லப்பட

வெவ்வேறு சாகை உள்ளவர்களில் விவாஹம்.

வில்லை. பாஷை வித்தியாஸத்தைப்பற்றி, ஒருவார்த்தையும் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அந்தந்த ஜாதியில் வேவ்வேறு பிரிவுகளிலுள்ளவர்களுக்கு விவாஹம் நடந்தால் அவைகள் சாஸ்திரத்துக்கு விரோதமில்லை யென்றே நினைக்க வேண்டியதா யிருக்கிறது. அதாவது, பிராமணர்களில் ஆந்திர கர்னாடக தமிழர்களானாலும், ஸ்மார்த்த வைஷ்ணவ (மாத்துவ) ஸ்ரீ வைஷ்ணவர்களானாலும், முருகநாடு வெலநாடு படகநாடு முதலிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களானாலும், நியோகிகள் வைதிகர்களானாலும் சூத்திரர்களில் நாயகர் முதலியார் பிள்ளைகள் முதலிய மூன்று ஜாதியர்களானாலும் இந்த வேவ்வேறு பிரிவுகளுக்குள்பட்டவர்கள் பெண்ணைக்கொடுத்து வாங்கிக்கொண்டால் அது றத்தாகமாட்டாது. ஆனால், நீண்டகாலமாய் அனுஷ்டானமில்லாத காரணத்தைக்கொண்டு அப்படிப்பட்ட விவாஹங்கள்செய்ய ஜனங்கள் தயங்கிக்கொண் டிருக்கிறார்கள்.

எந்த பிரதேசத்திலாவது ஒரு ஜாதியில் வேவ்வேறு பிரிவைச் சேர்ந்தவர்களுக்குள் விவாஹம் நடந்தால் அப்படிப்பட்ட பூர்வாசாரமவ்விடத்தில் ஏற்பட்டிருந்தால் அந்த விவாஹம் செல்லுமே தவிற இல்லாவிட்டால் செல்லமாட்டா தென்று முந்தி கலகத்தா ஐகோர்ட்டாரவர்கள் திர்ப்புசெய்தார்கள். (9 ஸ. 552; இ. லா. ரி. 1 க. 1). ஆனால், பூர்வாசார மில்லாவிட்டாலும் வெவ்வேறு பிரிவுகளுக்குள் செய்யும் விவாஹங்கள் செல்லுமென்று இங்கே ஐகோர்ட்டுகளிலும் பிரிவீகவுன்ஸிலிலேயும் கூட திர்ப்புகள் செய்யப்பட் டிருக்கின்றன. (1 ம. ஐ. 478; 13 மூ. இ. அ. 141; 14 மூ. இ. அ. 346, 352; இ. லா. ரி. 15 க. 708).

பெண்ஜாதியை ரக்ஷிக்கும் பாத்தியம்—ரஜஸ்வலை ஆவதர்க்கு முந்தி.

35. விவாஹபந்தத்தால் ஸ்திரீ புருஷர்கள் இஹபர கர்மங்களில் ஒன்றாய் விடுகிறார்கள். விவாஹபந்தம் ஏற்பட்ட முதல் ஸ்திரீ எவ்வளவு சிறுவயதாயிருந்தாலும் அந்த பெண்ணை சம்ரட்சிக்கும் பாத்தியம் புருஷனைச் சேர்ந்ததென்றும் புருஷன் மைனரா யிருக்கிற காலத்தில் அவனுடைய கார்டியனை (அதாவது போஷகனை)ச் சேர்ந்ததென்றும் தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், அனேக பிரதேசங்களில் ரஜஸ்வலையாகிறவரையில் பெண் பிறந்த வீட்டிலேயே இருந்து வருகிற ஆசாரம் ஏற்பட்டிருப்பதைக் கொண்டு அதர்க்கு முந்தியே பெண்ஜாதி

யைத் தன் வீட்டுக்கு அனுப்பும்படி கட்டாயப்படுத்த புருஷனுக்கு பாத்தியம் கிடையாது. (23 ஸ. 178).

ரஜஸ்வலை ஆவதற்கு பிந்தி.

ரஜஸ்வலையான பிறகு பெண்ஜாதியை தன் வீட்டுக்கு அனுப்பும்படி கோருகிறதற்கு ஸம்பூர்ண்மான அதிகாரம் புருஷனுக்கு உண்டு. அப்படி அனுப்பமாட்டேனென்று தாய்தகப்பன்களாகட்டும் வேறு பந்துக்க ளாகட்டும் அந்தப்பெண்ணைத் தன் வசத்தில் வைத்திருந்தால் அவர்பேரில் புருஷன் வியாஜியம் செய்து பெண்ஜாதியை தன் சுவாதீனம் செய்துகொள்ளலாம்.

12 வயதுக்கு முந்தி ருதுசாந்தி.

36. பெண்ஜாதி ரஜஸ்வலை யானாலும் அவளுக்கு 12 வயது முடிவாகிற வரையில் சாந்தி கல்லியாணம் நடத்தக்கூடாது. நடத்தினால் பினல்கோட் 375-வது செக்ஷன்படி "பலவந்த புணர்ச்சி" என்கிறகுற்றம் ஏற்பட்டு 376-வது செக்ஷன்படி ஆயுசு பரியந்தம் தீபாந்திரவாசமாவது அல்லது 10 ஷ-ம் வரையில் கயிதி தண்டனைக்காவது புருஷன் உட்படுவான். அதற்கு கும்மக்காக இருந்தவர்கள் கூட குற்றவாளியாவார்கள்.

பெண்ஜாதி புருஷர்களுக்குள்ள நிபந்தனை.

37. பெண்ஜாதி தன் வீட்டுக்கு வந்தபிறகு அன்னவஸ்திரங்கள் கொடுத்து சம்ரட்சிக்க புருஷன் கடமைப்பட்டவன் அவளும் புருஷன் கட்டளைக் குள்பட்டு அவனிஷ்டத்திற்கு விரோதமாய் ஒரு இடத்துக்கும் போகாமல் வீட்டு வேலைகளை யெல்லாம் சரியாக பார்த்துக்கொண்டு அவனுடைய அத்துக்குள்பட்டு ஸம்ஸாரம் செய்து வரக் கடமைப்பட் டிருக்கிறாள். இப்படி அலகாபாத் ஐகோர்ட்டில் ஜட்ஜியாயிருந்த மகம்மூதவர்கள் தீர்மானித் திருக்கிறார்கள். (இ. லா. ரி. 13 அ. 126). புருஷன் எங்கே வாஸம் போனாலும் அங்கங்கே தானுங் கூடபோக பெண்ஜாதி கடமைப்பட்டிருக்கிறாள்.

பெண்ஜாதியை வசப்படுத்தபுருஷனால் தாவா.

38. வயதுவந்த பெண்ஜாதி தன் புருஷன் வீட்டுக்குப்போக நிராகரித்தாலும் அல்லது தன்னுடைய புருஷன் வீட்டை விட்டுவிட்டு வெளியிலே போய் விட்டாலும், அந்த பெண்ஜாதி பேரிலாவது தாய் தகப்பன் முதலியவர்கள் துர்போதனையினால் அப்படி நின்று

போனால் அவர்கள் பேரிலாவது பிருதுசெய்து பெண்ஜாதி தன்னிடத்தில் இருக்கும்படி புருஷன் தீர்ப்பு பெற்றுக்கொள்ளலாம். (இ. லா. ரி. 5 க. 500; இ. லா. ரி. 1 பம். 164). கோர்ட்டார் தீர்ப்புசெய்த பிறகுகூட புருஷன் வீட்டுக்குப் போக அவள் நிருகரித்தால் அவர்கள் அவளை பலவந்தம்செய்து புருஷன் வீட்டுக்கு அனுப்பமாட்டார்கள். ஆனால், ஸிவில் ப்ரொஸீடர்கோட். 260-வது செக்ஷன்படி அதிகாரம் நடத்தமுடியும். இந்த செக்ஷன்படி கோர்ட்டாரவர்களுக்கு யுக்தமாகத்தோன்றினால் பெண்ஜாதியை 6 மாதம் வரையில் ஸிவில் ஜெயிலில் போடலாம். இல்லாவிட்டால் அவளிடத்தில் ஏதாவது சொந்த ஆஸ்தியாவது ஸ்திரீதனமாவது இருந்தால் அவைகளை ஜப்திசெய்து அப்படி ஜப்தி செய்யப்பட்ட பிறகுகூட ஒரு வருஷம் வரையில் புருஷன் வசத்துக்குப் போக அவள் நிருகரித்தால் ஜப்தி செய்த சொத்தை ஏலம்போட்டு புருஷனுக்கு நேரிட்ட நஷ்டத்தைக் கொடுக்கலாம். இல்லாவிட்டால் இந்த இரண்டுவிதமாயும் கோர்ட்டார் அதிகாரத்தைச் செலுத்தலாம். ஆனால், ரொம்ப நல்ல காரணமன்றியில் சாதாரணமாய் ஜயிலில் போடமாட்டார்கள். (இ. லா. ரி. 5 க. 500; இ. லா. ரி. 3 அ. 506; இ. லா. ரி. 13 அ. 126; இ. லா. ரி. 10. பம். 301:—"ருக்குமாபாய் கேஸ்.")

இந்த பிருது எப்பொழுது செல்லும்? எப்பொழுது செல்லாது?

39. பெண்ஜாதியை சுவாதீனப்படுத்த வேணுமென்று புருஷன் பிருதுசெய்தால் பெண்ஜாதி அவனைத் தள்ளி தனியாய் இருக்க ரொம்பத் தகுந்த காரணமிருந்தா லொழிய புருஷன் வசதில் இருக்க வேணு மென்றே தீர்ப்பு செய்வார்கள். அவசியமென்று தோன்றினால பெண்ஜாதியின் க்ஷேமத்துக்காக அவர்கள் ஏதாவது சில ஷரத்துகளுக்கு புருஷனை கட்டுப்படுத்துவார்கள்.

புருஷன் சம்ரக்ஷணை தனக்கு அவசியமில்லை யென்றும் தனக்கு காலக்ஷேபத்துக்காக ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை யென்றும் அவனிடத்திலிருக்கத் தனக்குக் கொஞ்சங்கூட இஷ்டமில்லை யென்றும் சொல்ல பெண்ஜாத்திக்கு பாத்தியமில்லை. விவாஹபந்தத்தால் புருஷனுக்குள்பட்டு அவன் வசத்திலிருக்க பெண்ஜாதிகள் கட்டுப்பட் டிருக்கிறார்களென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பெண்ஜாதி படித்தவள், அழகுள்ளவள் - புருஷன் மூடன், குருடன், நொண்டி, அயோக்கியன் இப்படி யிருந்தால்கூட புருஷ

னைத் தள்ளிவிடப் பெண்ஜாதிக்கு பாத்தியமில்லை. அந்த சந்தர்பத்தில்கூட புருஷன்வசத்தில் இருக்க வேணுமென்று கோர்ட்டார் தீர்மானிப்பார்கள். ஆனால் அவன் வசத்துக்குப்போக பெண்ஜாதி நிருகரித்த பிறகு அவளுக்கு சிக்ஷை விதிக்கமாட்டார்கள்.

தாய்தகப்பன் அண்ணன்தம்பி முதலியவர்களுடன் பிறிந்து தனிமையா யிருந்தால்தான் அவனிடத்துக்கு பெண்ணை அனுப்புவோமே யொழிய இல்லாவிட்டால் அனுப்பமாட்டோ மென்று சில மாமனார் மாமியார்கள் சில காலங்களில் சொல்லுகிறார்கள். இந்த வாதம் சாஸ்திர விருத்தமாகையால் கோர்ட்டாரவர்கள் அங்கீகரிக்கமாட்டார்கள்.

குஷ்டரோகம் முதலிய துர்வியாதியினால் புருஷன் பீடிக்கப் படுகிற பொழுதும், புருஷனோ டிருப்பதால் பெண்ஜாதிக்கு அபாயம், வியாதி பிராணபயம் இதுகளுண்டாக இடமாயிருந்தாலும், மாமியார் வீட்டில் மாமியாராவது நாத்தனார் முதலியவர்களாவது புருஷனாவது பெண்ஜாதியை ரொம்ப கெட்ட தொந்திரவுக்குள்படுத்தி ஹிம்சித்துக்கொண்டிருக்கிற போதாவது பெண்ஜாதி புருஷனிடத்தி லிருக்கவேணு மென்று கோர்ட்டார் தீர்ப்புசெய்ய மாட்டார்கள். (11 மூ. இ. அ. 551; இ. லா. ரி. 1 பம். 164; இ. லா. ரி. 5 க. 500; இ. லா. ரி. 13 அ. 126). மேலும், இந்த காரணங்களினால் வேறாக யிருக்கிற பெண்ஜாதிக்கு கோர்ட்டார் ஜீவனாம்சம் கொடுப்பார்கள். தொந்திரவு முதலியவை தெளிவாய் ருஜுவாகவேண்டியது. சாதாரணமாய் வீட்டுவேலைகள் சச்சரவுகள் மிதமாய் சிட்சித்து புத்திசொல்லுகிறது இதுகள் போதாது.

புருஷன் வைதானென்றாவது, கோபித்துக்கொண்டா னென்றாவது, நிந்தித்தானென்றாவது, வியபிசாரம் செய்ததாக தன்பேரில் அன்னியாயமான பொய் சொன்னா னென்றாவது, தன் நகைகளை எடுத்துக்கொண்டா னென்றாவது தன் மனதுக்கு துக்கம் உண்டாக்கினா னென்றாவது சொல்லி அவனைத் தள்ளிவிட பெண்ஜாதிக்கு அதிகாரமில்லை. (இ. லா. ரி. 4 அ. 374).

புருஷன் வியபிசாரம் செய்தாலும் தாஸியை கொண்டுவந்து வீட்டிலேயே வைத்துக்கொண்டாலும், காரணமன்றியில் இரண்டாவது விவாஹம் செய்து கொண்டாலும் கூட தொந்திரவு முதலிய காரணங்களில்லாமல் போனால் அவனுடைய வசத்திலேயே இருக்

கப்பெண்ஜாதி கட்டுபட் டிருக்கிருளென்று தீர்ப்புகள் செய்யப்பட் டிருக்கின்றன. (1 ம. ஐ. 375).

துலுக்கச்சிலை கொண்டுவந்து வீட்டில் வைத்துக்கொண்டிருந் தால் புருஷன் ஜாதிபிரஷ்ட னுகிறபடியால் அந்த ஸந்தர்பத்தில் அவ னுடைய வசத்திலிருக்க பெண்ஜாதி கட்டுபட்டவளல்லவென்று கல் கத்தா ஐகோர்ட்டார் தீர்ப்புசெய்திருக்கிருர்கள். (14 ஸ. 145). இந்தக் காரணத்தைக் கொண்டே புருஷன் கிறிஸ்து மதத்தில் சேர்ந்துவிட் டால் அவன் தன்னுடைய ஹிந்து பெண்ஜாதியை தன் சுவாதீனப் படுத்த வேணுமென்று பிருது கொண்டுவரக்கூடாது. (5 ஸ. 235). 1866-ம் ஞூத்திய 21-வது நெ. சட்டப்படி கிறிஸ்துமதத்தைக் சேர் ந்த புருஷனுடைய வசத்திலிருக்க அவன் பெண்சாதி சம்மதிக்கா விட்டால் அவனுவது அவளாவது கோர்ட்டில் மனுக்கொடுத்து விவா ஹத்தை ரத்துசெய்துகொள்ளாம்.

40. தாம்பத்திய சம்பந்தமானது செத்தா லொழிய விடாத தால் பெண்சாதியை சுவாதீனப்படுத்திக் கொ ள்ள கொண்டுவரப்பட்ட பிருதுக்கு லிமிடே ஷன் - அதாவது காலாவதி தோஷம் கிடை யாது. (இ. லா. ரி. 13 அ. 126). இந்த பிருதுக்கு கோர்ட்டுபீசு ஸ்டாம்பு ரூ 5.

மேல்சொல்லிய பிருதுக் கு காலாவதி, ஸ்டாம்பு.

பெண்சாதியை சுவாதீனப்படுத்திகொள்ள கொண்டுபோன தா வா தள்ளுபட்டுபோனுலும் அதைக்கொண்டு தாம்பத்தியபந்தம் விட் டுப்போனதாக நினைக்கக் கூடாது. புருஷனேவிட்டு தனிமையா யிரு ந்தாலும் பெண்சாதி 2-ம் தரம் விவாஹம் செய்துக்கொள்ளத் தக்க வளல்ல.

41. தன்னேடு வாழ்ந்துக்கொண் டிருக்கையிலும் தகுந்த காரணங்களால் தனிமையா யிருக்கையிலேயும் பெண்சாதியை சம்ரக்ஷிக்க புருஷன் கடமை பட்டவன். ஆனுல நிஷ்காரணமாய் புருஷனேத் தள்ளிவிட்டு அவள் தனிமையா யிருக்கும்போது ஜீவனும்சம் கொடு க்க புருஷன் கடமைப்பட்டவனல்ல. (இ. லா. ரி. 2 பம். 634).

பெண்ஜாதியின் ஜீவ னும்ச பாத்தியம்.

எவருடனுவது பெண்சாதி ஓடிப்போய் பிறகு பச்சாத்தாபப் பட்டு புருஷன் வீட்டுக்கு வந்தால், அவளே தன்வீட்டில் வைத்துக் கொள்ள புருஷன் கடமைப்பட்டவனல்ல. வியபிசாரியா யிருக்கிற

பெண்சாதியைத் தன் வீட்டைவிட்டு துரத்தி ஜீவனும்சம் கொடுக்காமலிருக்கலாம். ஆனால், பிறகு வியபிசாரத் தொழிலை விட்டுவிட்டால் தயாவிஷயமாய் கஞ்சிக்கு வழிகாட்டவேணுமென்று தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்திருக்கும்பொழுது சம்சாரத்தின் சிலவுக்காக பெண்சாதிபட்ட கடன்களைத் தீர்க்க புருஷன் கடமைப்பட்டவன். ஆனால், அவளுடைய சொந்தச் சிலவுக்கு வாங்கின கடன்களையாவது, புருஷனைவிட்டு தனிமையிலிருக்குங் காலத்தில் வாங்கப்பட்ட கடன்களையாவது தீர்க்க புருஷன் கடமைப்பட்டவனல்ல. (1 ம. ஐ. 375; இ. லா. ரி. 3 அ. 122; இ. லா. ரி. 1 பம். 121). இந்த கடன்களை பெண்சாதியே தீர்க்கவேண்டியது. ஸ்திரீதனம் முதலிய அவளுடைய சொந்த ஆஸ்திமேல் டிக்கிரியை நிறைவேற்றலாமே யொழிய அவளுடைய சரீரத்தின் பேரில் நிறைவேற்ற முடியாது. (ஸிவில் புரொஸீடர் கோட் 245-வது செக்ஷன் ஏ.)

42. பெண்ஜாதியை நிஷ்காரணமாகப் புருஷன் தள்ளிவிட்டால் புருஷனோடு சேர்த்து வைக்கும்படி அவள் அவன்பேரில் தாவா செய்யலாம். அவன் வீட்டுக்குப்போய் கஷ்டமாய் தொந்திரவு படுவதைக்காட்டிலும் அநேக ஸமயங்களில் தனிமையா யிருப்பதே நலமாயிருக்கும் அப்போது இந்த தாவாவை விட்டுவிட்டு ஜீவனும்சத்துக்கு மட்டும் பிரது செய்யலாம். வியபிசாரியா யிருக்கிற பெண்ஜாதி இந்த பிரதுசெய்ய யோக்கியதை யற்றவள்.

புருஷனுடன் சேருவதற்கு பெண்ஜாதியால் தாவா.

பெண்சாதியை சம்ரட்சிக்காமல் புருஷன் தள்ளிவிட்டால் கிரிமினல் புரொஸீடர்கோட் 488-வது செக்ஷன் பிரகாரம் அவள் மேஜிஸ்திரேட்டாரிடத்தில் மனுக்கொடுத்து மீ 1-க்கு 50 ரூக்குமேல் படாமல் ஜீவனும்சம் பெத்துக்கொள்ளலாம். வியபிசாரியா யிருக்கிற பெண்சாதிக்கு ஜீவனும்சம் கொடுக்கப்படமாட்டாது.

43. பிள்ளையில்லாமை, மலட்டுத்தனம், கெட்டவியாதி, துர்மார்க்கம், துர்க்குணம் - இவைகளில் ஏதாவது முதல்தாரத்தி லிருந்தால்தான் புருஷன் 2-வது தாரம் விவாஹம் செய்துக் கொள்ளலாமென்று

புருஷனுக்கு புனர்விவாஹம்.

தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கிறது. மேற்சொல்லிய காரணங்களில் ஒன்றுமில்லாமலே புருஷன் 2-வது தாரம் விவாஹம் செய்தால் அது நிந்திக்கத் தக்கதாயினும் செல்லத்தகாததல்ல வென்று அர்த்தம்செய்து மதருஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். இந்த தீர்ப்பின் பிறகாரம், புருஷன் ஒருதரமாவது ஒன்றுக்குப்பின் ஒன்ருவது, எத்தனை பெண்சாதிகளையாவது செய்து கொள்ளலாம். ஒரு காரணமும் அவசியமில்லை. அவனிஷ்டமே போதுமானது. (1 ம. ஐ. 375). புருஷன் 2-வது விவாஹம் செய்துக்கொண்ட காரணத்தைக் கொண்டு முதல் பெண்சாதி அவனை விட்டுப்போகக் கூடாது. (1 ம. ஐ. 375). புருஷன் மூத்தபெண்சாதியைத் தள்ளிவிடக் கூடாது. தள்ளிவிட்டால் ஜீவனும்சம்கொடுக்க வேண்டியது.

ஸ்திரீ புனர்விவாஹம்.

44. புருஷன் ஜீவித்திருக்கையில் எந்த காரணத்தைக் கொண்டாவது வேறுவிவாஹம் செய்துகொள்ள பெண்சாதி தகுந்தவளாகமாட்டாள். ஹிந்து விவாஹத்தால் உண்டாகிற தாம்பத்தியபந்தம் ஸ்திரீ புருஷர்கள் இருவரும் உயிருடனிருக்கிற வரையில் விடமுடியாது. ஆகையால், அவ்விருவர்களும் ஸம்மதித்து வேருக யிருந்தாலும் கூட விவாஹபந்தம் விடாது. புருஷன் தள்ளிவிட்டாலும், வேறு விவாஹம் செய்துகொண்டாலும், தேசாந்திரம் போய்விட்டாலும், நபும்ஸகனு யிருந்தாலும், துர்வியாதியால் பீடிக்கப்பட்டவனுனாலும், குலபிறஷ்டனுய் விட்டாலும் கூட, பெண்சாதி வேறு விவாஹம் செய்துகொள்ளபாத்தியம் கிடையாது.

சில தாழ்ந்த ஜாதிகளில்மட்டும், ஒரு புருஷனைத் தள்ளிவிட்டு வேறு புருஷனை விவாஹம் செய்துகொள்ளும் வழக்கம் சில தேசங்களில் ஸ்திரப்பட் டிருக்கிறது. மஹாருஷ்ட்ர தேசத்தில் சூத்திரசாதியில், புருஷன் சம்மதித்து விவாஹபந்தத்தை விட்டுவிட்டதாக காயிதம் எழுதிக்கொடுத்தால், அவனுடைய பெண்சாதி வேருெருவனை விவாஹம் செய்துக் கொள்ளுகிற வழக்கம் இருக்கிறது. (இ. லா. ரி. 4 பம். 330). தென்கனடா தேசத்தில் லிங்காயத்து சாதியார்களில் பெண்சாதியை புருஷன் தள்ளிவிட்டால், அவள் வேறு விவாஹம் செய்துக் கொள்ளலாமென்று மதருஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். (இ. லா. ரி. 8 ம. 440).

45. தர்மசாஸ்திரப்படி விதவா விவாஹம் செல்லுமா செல்லா தாவென்று நிச்சயிப்பதற்க்காக அனேக வருஷமாய் பெரிய வித்துவான்கள் சண்டை போட்டுக்கொண் டிருக்கிறார்கள்.

விதவா விவாஹம்.

முன்காலத்தில் விதவா விவாஹங்கள் சென்று கொண்டு வந்ததில் யாதொரு சந்தேகமு மில்லை. ஆனால், சிலசில தாழ்ந்த சாதிகளைத் தவிர மைத்த சாதிகளில் இந்த ஆசாரம் இல்லாமல் போனதால், விதவா விவாஹம் செல்லாதென்று சுலோகங்கள் கல்பித்து ஸ்மிருதிகளில் எழுதப்பட்டிருக்கின்றன. அது காரணத்தால் இக்காலத்தில் உபயகட்சிகளுக்கும் தகுந்த ஆதாரங்கள் தர்மசாஸ்திரங்களில் காணப்படுகின்றன. அட்சதயோனிக்கு அதாவது, கர்பாதானத்துக்கு முந்தியே வைதவிய மடைந்த கன்னிகைக்கு மறு விவாஹம் செய்யலாமென்று மனுஸ்மிருதியில் சொல்லப்பட் டிருக்கிறது. இந்த நியாயத்தை அநேகர் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். தர்மசாஸ்திர மெப்படி யிருந்தாலும் இக்காலத்தில் விதவா விவாஹத்தை நல்லாசாரமாகவே ஒப்புக்கொள்வதே நலமென்று எல்லாருக்கும் தோணி யிருக்கிறது. ஆனால், தைரியபடுத்திக் கொண்டு இந்த ஆசாரத்தை சீக்கிறமாக ஸ்தாபித்துக்கொள்ள போதாதவர்களா யிருக்கிறார்கள்.

விதவா விவாஹம் செல்லுமா செல்லாதா வென்று சந்தேகத்தை நிவர்த்திக்கிறதர்க்கு சர்க்காரார் 1856-வூத்திய 15 நெ. ஆக்ட்டை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். எந்த ஜாதியார்களா யிருந்தாலும் புருஷன் இறந்துபோனபிறகு பெண்ஜாதி வேறு விவாஹம் செய்து கொண்டால் அந்த விவாஹம் சாஸ்திரத்துக் கொத்ததென்றே நினைக்கப்படுமென்றும் அதினால் உண்டாகும் சந்ததி குலஸ்திரீ ஸந்ததியாகவே பாவிக்கப்படு மென்றும் இந்த சட்டம் சொல்லுகிறது. (செக்ஷன் 1). மறு விவாஹம் செய்துகொண்ட விதவைக்கு முதல் புருஷன் சொத்தில் எவ்விதமான பாத்தியமும் இருக்கமாட்டாது. ஆனால், புருஷன் இறந்துபோகையில், மறு விவாஹம் செய்துகொள்ளும் படி பெண்ஜாதிக் கனுமதி கொடுத்திருந்தால், அவனுடைய சொத்தில் அவளுக்குள்ள பாத்தியம் போகமாட்டாது. (செக்ஷன் 2).

46. புருஷன் கிறிஸ்து மதத்தில் சேர்ந்தபொழுது அவனுடனிருக்க பெண்ஜாதி சம்மதித்தால் அவன் வேறு விவாஹம் செய்துகொள்ள மார்க்கமில்லை.

புருஷன் கிறிஸ்துமதத்தில் சேறுதல்.

புருஷன் வசத்திலிருக்கப் பெண்ஜாதி சம்மதிக்

காவிட்டால் அவன் 6 மீ வரையில் காத்திருந்து பிறகு 2 நூ ஸ்டாம்பில் டிஸ்திரிக்ட்டு கோர்ட்டில் மனுக்கொடுத்து விவாஹத்தை றத்து செய்து கொள்ளலாம். அப்படி விவாஹம் றத்தான பிறகு புருஷனும் பெண்ஜாதியும் தனக்கு இஷ்டமானவரை விவாஹம் செய்து கொள்ளலாம். புருஷனுக்கு 16 வயதும் பெண்ஜாதிக்கு 13 வயதும் முடிகிறதர்க்கு முந்தி இந்த மனுக் கொடுக்கக் கூடாது. இது கிறிஸ்து மதம் புகுந்தவர்கள் விவாஹபந்தம் நிவர்த்தி செய்து கொள்கிறதர்க்காக ஏற்பாடு செய்யப்பட்ட 1866 ஹூ ததிய 21-வது நெ. சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பெண்ஜாதி கிறிஸ்து மதத்தில் சேறுதல்

பெண்ஜாதி கிறிஸ்து மதத்தில் சேர்ந்த பொழுது அவளோடு சேர்ந்திருக்க புருஷன் இஷ்டப்படாத போனால் மேல்சொல்லிய படியே அவளும் 6 மீ வரையில் கார்த்திருந்து பிறகு கோர்ட்டில் மனுமூலமாய் விவாஹத்தை றத்து செய்துக் கொண்டு பின் பாறையாவது விவாஹம் செய்துக் கொள்ளலாம் (மேற்படி சட்டம்).

3-வது அத்தியாயம்.

புத்திரசுவீகாரம்.

பிள்ளையின் அவசியம்.

47. இறந்த பிறகு பிள்ளையற்றவனுடைய ஆத்துமா 'புத்' என்னும் நரகத்தில் தள்ளப்படு மென்றும் அந்நரகத்தி லிருந்து ரட்சிக்கிறதர்க்கு பிள்ளை யவசியமென்றும் அந்த 'புத்' என்னும் நரகத்திலிருந்து காப்பாற்றுகிறது பிள்ளையைத் தவிர வேறொருவர் இல்லை யென்றும் ஆகையால் பிள்ளையற்றவன் தன் உத்திரகிரியை நடத்தவும் தன் வம்சம் விருத்தி யடையவும் அவசியம் பிள்ளையை சுவீகாரம் செய்துக் கொள்ள வேணுமென்று தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

8 பாகங்கள்.

48. இந்த பிறகரணம் 8 பாகமாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது—

(1.) புத்திரசுவீகாரம் யார் செய்துகொள்ளலாம்?

(2.) யார் சுவீகாரம் கொடுக்கலாம்?

(3.) எப்பேர்கொற்றவர்களை பிள்ளையாக சுவீகாரம் செய்துக்கொள்ளலாம்?
(4.) புத்திரசுவீகாரத்துக்கு விதிக்கப்பட்ட கர்மங்களென்ன?
(5.) எப்பொழுது புத்திரசுவீகாரத்தை ரத்துசெய்யலாம்?
(6.) எப்படி புத்திரசுவீகாரத்தை ஸ்தாபிக்கலாம்?
(7.) புத்திரசுவீகாரத்தரல் உண்டாகும் பயன்?
(8.) கிருத்திரிம சுவீகாரம் வகைறு.

(1.) புத்திரசுவீகாரம் யார்செய்துக்கெள்ளலாம்.

புத்திரசுவீகாரம் செய்துகொள்ளுகிறவனுக்கு புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன்கள் இருக்கக்கூடாது.

49. புத்திரசந்தான மில்லாத புருஷர்க ளெல்லாரும் புத்திர சுவீகாரம் செய்துக் கொள்ளலாம். புத்திர சந்தானமாவது புத்திரன், பவுத்திரன், பிரபவுத்திரன்கள். இவர்களில் யார் இருந்தாலும் உத்திர கிரியை நடத்த சம்பூர்ணமான அதிகாரமுள்ளவார்சுகளா யிருப்பதால் பிள்ளை யில்லாத போனாலும் பவுத்திரனாவது, பிரபவுத்திரனாவது இருக்கும்போது தத்து செய்துகொள்ளக் கூடாதென்று தத்தக மீமாம்ஸை, தத்தக சந்திரிகை கிரந்தங்களில் சொல்லப்பட் டிருக்கிறது. மேலும், அவுரஸன் (அதாவது தனக்குப் பிறந்த பிள்ளை) இல்லாதபோனாலும் தத்து புத்திர பவுத்திர பிறபவுத்திரர்களில் எவர் இருந்தாலும் சுவிகாரம் கூடாது. பிரபவுத்திரன் மகன் (அதாவது பிறபவுத்திர பிள்ளை) 3 தலைமுறைக்கு மேல்பட்டவ னாதலால் உத்திரக்கிரியை நடத்த பாத்திரனல்ல. ஆகையால், அப்படிப்பட்டவன் இருந்தாலும் தத்து செய்துகொள்ளலாம். ஆனால், இக்காலத்தில் பிறபவுத்திரன் பிள்ளையைக் கண்ணில் காணும்வரையில் ஜீவித்தவர்க ளில்லையென்றே சொல்லலாம். தவுஹித்திரன் (அதாவது பெண்ணின் பிள்ளை) யிருந்தாலும் வேறே யாரையாவது சுவீகாரம் செய்துக் கொள்ளலாம். (எப். மெக்னடன் ஹிந்துலா 149.)

அவுரஸ புத்திரன் பவுத்திரன் பிறபவுத்திரன், தத்து புத்திரன் பவுத்திரன் பிறபவுத்திரன் இவர்களில் யாருவது இருக்கையில் செய்துகொண்ட சுவிகாரம் செல்லமாட்டாது. மேலும், இப்போது சொல்லப்பட்டவரில் எவருவது இருக்கிறபோது அவனுடைய அனுமதியுடன் சுவீகாரம் செய்துக் கொண்டாலும், அது செல்லாது. இதுவுமல்லாமல் அப்படி சம்மதித்தவன் இறந்துபோனாலும் 2-வதவன் சுவீகார புத்திரனாக மாட்டான். முதல் முதலில் உபயோக மில்லாத

சுவீகாரம் பிறகு எந்தக்காரணத்தாலும் செல்லாது. (4 மூ. இ. அ. 1; 1856 ஹூத்திய மதறாஸ் தீர்ப்புகள் 20-வது பேஜ்).

புத்திரன் ஜாதிபிரஷ்டனானால் சுவீகாரம் செய்துக் கொள்ளலாமா?

50. அவுரஸ புத்திரனாவது தத்து புத்திரனாவது புத்திரசந்தானமில்லாமல் இறந்துபோனால் அவன் தகப்பன் சுவீகாரம் செய்துக் கொள்ள ஒரு தடையுமில்லை. ஆனால், பிள்ளை சாகாமல் ஜாதிபிறஷ்டனாக இருந்தால் சுவீகாரம் செய்துக் கொள்ளலாமா என்கிற விஷயம் யோசிக்க வேண்டியதா யிருக்கிறது. ஜாதிபிறஷ்டனான பிள்ளை செத்தவனைப்போல் உத்திரகிரியையை நடத்த அயோக்கியனா யிருப்பதால் அவன் தகப்பன் சுவீகாரம் செய்துக்கொள்ளலா மென்று சொல்லக் கூடும். ஆனால், ஜாதிபிறஷ்டனாகப்போவதால் ஆஸ்தி பாத்தியம் போகாதென்று 1850 ஹூத்திய 21-வது நெ. ஆக்ட்டு ஏற்படுத்தப்பட் டிருப்பதால், அப்படி சுவீகாரம் செய்துக் கொள்ளப்பட்ட பிள்ளை தகப்பன் சுயார்ஜித சொத்துக்கு மட்டும் பாத்தியஸ்தனாவான். ஜாதிபிறஷ்டனான பிள்ளை ஸந்தானமன்றியில் இறந்தால் அவனுக்கு கிடைத்திருந்த பித்ரார்ஜித சொத்து சுவீகார பிள்ளைக்குச் சேரும்.

ஜாதி பிறம்சத்தாலாவது, பைத்தியம், தீராதரோகம் முதலிய காரணங்களாலாவது, புருஷசந்ததியார்கள் தன்னுடைய உத்திரகிரியையை நடத்த அயோக்கியர்களா யிருந்தால், அவர்கள் சந்ததி இல்லையென்று நினைத்து சந்ததியில்லாதவர் போலவே சுவீகாரம் செய்து கொள்ளலாமென்று ஸர் தாமஸ் ஸ்ட்ரேஞ்சு துறையவர்கள் அபிப்பிராயப்பட் டிருக்கிறார்கள். (1 ஸ்ட்ரேஞ்சு ஹிந்துலா 77-வது பேஜ்).

ஒரேதடவையில் இரண்டு மூன்று சுவீகாரங்கள்.

51. ஒருசுவீகாரபிள்ளை இறந்தபிறகு வேரொருவனையும், அவனிறந்த பிறகு இன்னும் ஒருவனையும் இவ்விதமாக எவ்வளவுதடவை யானாலும் ஸ்வீகாரம் செய்துக் கொள்ளலாம். (4 மூ. இ. அ. 1). ஆனால், ஒரேதடவையில் 2-3 பெயர்களை ஸ்வீகாரம் செய்துகொண்டால் அவர்களில் ஒருவர் ஸ்வீகாரமும் செல்லாது. (இ. லா. ரி. 12 க. 406, 686). ஆகையால், இரண்டு சபத்தினிகள் ஒரேகாலத்தில் வேறுவேறு பிள்ளைகளை ஸ்வீகாரம் செய்துக் கொண்டால் ஒரு ஸ்வீகாரமும் செல்லாது. ஆனால், காலவித்தியாசமிருந்து மைத்த அம்சங்களில் கிரமமாக நடந்திருந்தால், அவைகளில் முதலில் நடந்த ஸ்வீகாரம் செல்லும்.

52. கிருஹஸ்தாச்சிரமத்தி லிருந்து பிள்ளையுண்டாகும் நிலைமை தப்பின பிறகுதான் ஸ்வீகாரம் செய்துக் கொள்ள யோக்கியதை யுண்டாகிறதென்றும், ஆகையால் பிரம்மசாரிகள் பெண்ஜாதி யிறந்தவர்கள் ஸ்வீகாரம் செய்துகொள்ளக் கூடியவர்களல்லவென்று சிலர் ஊகிக்கிறார்கள். ஆனால், அப்பேர்க் கொற்றவனால் செய்து கொள்ளப்பட்ட ஸ்வீகாரம் செல்லுமென்று தீர்ப்புகள் செய்யப்பட் டிருக்கின்றன. (2 ம. ஐ. 367; 4 ம. ஐ. 270; இ. லா. ரி. 12 பம். 329; இ. லா. ரி. 12 அ. 352).

பிரமசாரிகள், பெண்ஜாதியை யிழந்தவர்கள் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாமா.

53. பெண்ஜாதி கர்ப்பமா யிருக்கையில் செய்துக் கொள்ளப்பட்ட ஸ்வீகாரம் செல்லாதென்று ஒரு கேஸில் மதராஸ் ஸதர்கோர்ட்டார் தீர்ப்புசெய் திருந்தார். பிள்ளை பிறக்க இடமிருக்க ஸ்வீகாரம் செய்து கொள்ளக் கூடாதென்கிற அபிப்பிராயத்தால் அப்படி தீர்ப்பு செய்யப்பட்டது. 1860 ஷ்த்திய மதராஸ் தீர்ப்புகள், 97 பேஜ்). அந்த அபிப்பிராயம் சரியாயிருந்தால், சாவு சமீபிக்கிறவரையில், அல்லது, கிழத்தன்மை வருகிறவரையில், ஒருவரும் ஸ்வீகாரம் செய்துகொள்ளக் கூடாதென்று ஏற்படுகின்றது. மேலும், தன்னுடைய பெண்ஜாதி மாத்திரமல்ல, தன் பிள்ளையின் பாரியை, தன் பவுத்திரனின் பாரியை, கர்ப்பிணியாக யிருந்தாலும், ஸ்வீகாரம் செய்துக்கொள்ளப் பொறுத்திருக்கும்படி நேறும். இப்படி பொறுத்திருப்பதே நியாயமெனில், அவுரஸ புத்திரன் பிறந்த பிறகு ஸ்வீகார பிள்ளைக்கு இன்னபாகம் கொடுக்கவேணுமென்கிற விதிகள் தர்மசாஸ்திரங்களிலும் தத்தக மீமாம்ஸை முதலிய கிரந்தங்களிலும் எதர்க்காக ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன? இவ்விதமாய் யோசித்து, பிறகு வேறு ஒரு கேஸில் பெண்ஜாதி கர்ப்பமாயிருந்ததை யறிந்து புருஷன் செய்துகொண்ட ஸ்வீகாரத்தை மதராஸ் ஐகோர்ட்டார் உருதிப்படுத்தினார்கள். (இ. லா. ரி. 3 ம. 180).

பெண்ஜாதி கர்ப்பமா யிருக்கையில் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

54. குஷ்டரோகிகள், நபும்ஸகர்கள், பித்தர்கள், பிறப்பு முதர்க்கொண்டு தீராத குருடு, ஊமை, செவிடு, இந்த வியாதிகளை உடையவர்கள், கைகாலில்லாத அங்கயீனர்கள் இப்பேர்க் கொற்றவர்கள் கூட ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமென்று தத்தக சந்திரிகை முதலிய கிரந்தங்களில் சொல்லப்

குஷ்டரோகி, குருடு, ஊமை, செவிடு, அங்கயீனர்கள் இப்படிப்பட்டவர்கள் ஸ்வீகாரம் செய்துக் கொள்ளலாமா?

பட்டிருக்கிறது. ஆனல், குஷ்டரோகி முதலியவர்களுக்கு பிதிரார்ஜித சொத்தில் யாதொரு பாத்தியமு மில்லாததால் அவர் தத்து புத்திரர்கள் தகப்பன்களைப் போல், ஜீவனும்சத்துக்கு மட்டும் பாத்தியஸ்தர்களாகிறார்கள். செய்துகொண்ட தகப்பனுக்கு ஏதாவது ஸ்வயார்ஜித சொத்து இருந்தால், அந்த சொத்து தத்து புத்திரனைச் சேரும்.

மைனர்கள் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

55. ஸ்விகாரம் என்றால் இது, இதனல் உண்டாகும் பயனிது என்று அறிந்துகொள்ள வேண்டிய அறிவுள்ளவர்களானல் மைனர்கள் (அதாவது தகுந்த வயது வராதவர்கள்) கூட ஸ்விகாரம் செய்துகொள்ளலா மென்றும் தான் இறந்த பிறகு ஸ்விகாரம் செய்துகொள்ளும்படி பெண்ஜாதிக்கு அனுமதிகூடக் கொடுக்கலாமெனறும் பங்காளா பம்பாய் ஐகோர்ட்டா ரவர்களால் தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. பிறிவிகவுன்ஸிலா ரவர்கள் கூட இந்த தீர்ப்புகளை ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். (15 ஸ. 548; இ. லா. ரி. 15 பம். 505; இ. லா. ரி. 1 க. 289; 19 ஸ. 127).

கோர்ட் ஆப் வார்ட்ஸவர்கள் சம்ரக்ஷணையி லிருக்கும் மைனர்கள் அவர்களுடைய அனுமதியன்றியில் ஸ்வீகாரம் செய்துகொள்ளக் கூடாது, ஸ்வீகார விஷயமாய் பெண்ஜாதிக்கு அனுமதியும் கொடுக்கக்கூடாது. அப்படி அனுமதியன்றியில் செய்துகொண்ட ஸ்வீகாரமாவது கொடுக்கப்பட்ட அதிகாரமாவது செல்லமாட்டாது. (இ. லா. ரி. 1 க. 289; 9 மூ. இ. அ. 287; இ. லா. ரி. 2 பம். 529).

பெண்ஜாதி தானகவே ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

56. ஸ்வீகாரம் செய்து கொள்ளும் அவசியம் புருஷனுக்கே தவிர பெண்ஜாதிக்கல்ல. பெண்ஜாதியின் இஷ்டமன்றியிலேயே புருஷன் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். (4 மூ. இ. அ. 2). புருஷன் இஷ்டமன்றியில் பெண்ஜாதி ஸ்வீகாரம் செய்துகொண்டால், அந்த ஸ்விகாரம் செல்லாது. பெண்ஜாதி தனக்கு என்றே ஸ்வீகாரம் செய்துகொண்டாலுங் கூட, மிதிலதேசத்தைத் தவிர வேறு ஒரு விடத்திலும் அந்த ஸ்வீகாம் செல்லாது. மேலும் ஆஸ்தி விஷயமான எந்த பாத்தியமும் அந்த ஸ்விகார புத்திரனுக்கு உண்டாகாது. (12 மூ. இ. அ. 356). புருஷன் இஷ்டத்தோடு பெண்ஜாதி ஸ்வீகாரம் செய்துகொண்ட பொழுது கூட அந்த ஸ்வீகாரம் புருஷனுக்காகச் செய்யப்பட்டதாக எண்ணவேண்டியதே தவிர பெண்சாதிக்காகச் செய்யப்பட்டதாக நினைக்கக்கூடாது.

57. புருஷன் இறந்தபிறகு அவனுடைய விதவை சுவீகாரம் செய்துகொள்ளலாமா, கூடாதா - என்ற விஷயத்தைக்குறித்து. நாங்கு வித்தியாசமான அபிப்பிராயங்கள் ஸ்திரப்பட் டிருக்கின்றன. "புருஷன் அனுமதியன்றியில், ஸ்திரீ புத்திர தானமாவது புத்திர சுவீகாரமாவது செய்ய யொக்கியமானவ ளல்ல" வென்ற வசிஷ்டவாக்கியத்தை யனுசரித்து இந்த நாங்கு அபிப்பிராயங்கள் உண்டாயின.

விதவை சுவீகாரம் செய்துகொள்ளலாமா?– நாலு அபிப்பிருயங்கள்.

மிதில சம்பிறதாயத்தை யனுஷ்டிப்பவர்கள் சுவீகர்ர காலத்தில் புருஷன் உயிருடனிருந்து அனுமதி கொடுத்தால்தான் பெண்சாதி சுவீகாரம் செய்துகொள்ளலா மென்று மேல் சொல்லப்பட்ட வசிஷ்ட வாக்கியத்துக்கு அர்த்தம் செய்தார்கள். ஆகையால், மிதில தேசத்தில் விதவைகள் சுவீகாரம் செய்துகொள்ள யோக்கியமானவர்களல்ல. ஆனல், கிருத்திரிம சுவீகாரம் செய்துகொள்ளு மாசாரம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விஷயம் இந்த அத்தியாய முடிவில் விவரிக்கப்படும்.

மஹாருஷ்டிர ஸம்பிறதாயத்தை யனுஷ்டிக்கிறவர்கள் புருஷனுயிருடன் இருக்கும்போது செய்துகொள்ளுகிற சுவீகாரத்துக்கு மட்டில் அவனுடைய அனுமதி அவசியமே யன்றியில் அவனிறந்த பிறகு செய்துகொள்ளுகிற சுவீகாரத்துக்கு அவசியமில்லை யென்று அர்த்தம் செய்தார்கள். சுவீகார மென்பது புருஷனுடைய ஆத்துமாவின் நன்மைக்காகவே செய்யவேண்டிய காரியமா யிருப்பதால் சுவீகாரம் வேண்டாம் என்று அவன் தெளிவாய் சொல்லிவிட்டு இறந்துபோனலொழிய மைத்த சந்தர்ப்பங்களில் அவனுடைய அனுமதியிருப்பதாகவே பாவிக்க வேண்டியதென்று இந்த சம்பிறதாயத்தை அனுஷ்டிப்பவர்கள் ஸித்தாந்தம் செய்திருக்கிரார்கள். ஆகையால், பம்பாய் பிரஸிடென்ஸியில், விதவை தானக சுவதந்திரமாகவே ஒருவருடைய அனுமதியு மன்றியிலேயே, சுவீகாரம் செய்துக் கொள்ளலாம்.

காசீ சம்பிறதாயம் பங்காளா சம்பிறதாயம் இவைகளை யனுஷ்டிப்பவர்கள் புருஷன் ஜீவித்திருக்கையில் அவனனுமதி கொடுத்தால் அவனுக்கு பிறகு அவன் விதவை சுவீகாரம் செய்துக் கொள்ளலாமென்றும் மைத்த நிலமைகளில் செய்துகொள்ளக் கூடாதென்றும் ஸித்தாந்தம்செய்திருக்கிறூர்கள். (இ. லா. ரி. 12 அ. 328).

திரவிட ஸம்பிரதாயத்தை அனுஷ்டிப்பவர்கள் புருஷன் அனுமதி கொடுத்துவிட்டுப் போனல்மாத்திரமல்ல புருஷன் அனுமதியில்லாம லிருக்கும்போது அவனுடைய ஸபிண்டர்கள் அதாவது தாயாதிகள் அனுமதி கொடுத்தால் விதவை சுவீகாரம் செய்துக்கொள்ளலாமென்று சித்தாந்தம் செய்திருக்கிறுர்கள். ஆகையால் புருஷன் அனுமதியில்லாமலே தாயாதிக ளனுமதியினுல் விதவை சுவீகாரம் செய்துகொள்ளுகிற ஆசாரம் மதறுஸ் பிறஸிடென்ஸியிலும் மைசூர் றுஜியத்திலும் ஸ்திரப்பட்டிருக்கிறது.

58. பெண்சாதிக்கு புருஷன் சுவீகாரம் செய்துகொள்ளக் கொடுக்கும் அதிகாரம் இவ்விதமாய் இருக்க வேணுமென்று நியமமில்லை. வாய்மொழி மூலமாயாவது எழுத்து மூலமாயாவது இருக்கலாம். (7 மூ. இ. அ. 54, 64). வாய்மொழியால் அப்படி அதிகாரம் கொடுக்கப்பட்டால், வியவஹாரகாலத்தில் அதை ருசுப்படுத்தத் தகுந்த சாட்சிய மிருக்கவேண்டியது. எழுத்து மூலமாய் சுவீகாராதிகாரம் கொடுக்கப்பட்டால் 10 நூ ஸ்டாம்பு காயிதத்தில் எழுதப்பட்டு ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருந்தால் மட்டும் செல்லுமே தவிற இல்லாதபட்சத்தில் செல்லமாட்டாது. எழுத்து மூலமாய் உயிலால் இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டால் ஸ்டாம்பாவது ரிஜிஸ்ட்ரேஷனுவது வேண்டியதில்லை. (ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டு 17-வது செக்ஷன்).

சுவீகார அதிகாரம் ஸ்டாம்பு ரிஜிஸ்டர் வகைறு.

சுவீகாராதிகாரம் கொடுக்கிறதர்க்கு புருஷனுடைய இஷ்டந்தான் அவசியம். சுவீகாரத்தால் பொதுசொத்துக்கு நஷ்டமுண்டாகுமென்றுவது அண்ணன் தம்பிகளுக்கு இஷ்டமில்லை யென்றுவது புருஷன் யோசிக்க வேண்டியதில்லை.

59. சுவீகாராதிகாரம் சட்டப்படி கிறமமாக யிருக்கவேண்டியது. அப்போது உயிருடன் இருக்கிற பிள்ளை யிறந்துபோனுல் சுவீகாரம் செய்துகொள்ளலாமென்றுவது சுவீகாரபிள்ளை யிறந்த பிறகு வேறொருவனை அவனிறந்து போனுல் வேறொருவனை இப்படி எவ்வளவு தடவை வேணுமானுலும் சுவீகாரம் செய்துகொள்ளலா மென்றுவது அதிகாரம் கொடுத்தால் அந்த அதிகாரம் செல்லும். (10 மூ. இ. அ. 279; இ. லா. ரி. 1 க. 289; இ. லா. ரி. 1 ம. 174). ஆனுல் பிள்ளை உயிருட னிருக்கும்போதே சுவீகாரம் செய்து கொள்ளலா மென்றுவது, பிள்ளைக்கும் தாயாருக்கும் ஒத்

சுவீகாராதிகாரம் சட்டப்படி கிறமமானதாக இருக்க வேணும்.

துக்கொள்ளாவிட்டால் சுவீகாரம் செய்துகொள்ளலா மென்றுவது ஒரேதடவையில் 2, 3 பிள்ளைகளை சுவீகாரம் செய்துகொள்ளலா மென்றுவது அதிகாரம் கொடுத்தால் அது செல்லமாட்டாது. அப்படி செய்துகொள்ள புருஷனுக்கே அதிகார மில்லாம லிருக்கையில் தன் பெண்ஜாதிக்கு அதிகாரம் கொடுக்க முடியாதென்று தெளிவாயிருக்கிறது. மேலும் பிள்ளை யிறந்துபோன பிறகுகூட சுவீகாரம் செய்துகொள்ள அந்த அதிகாரம் உபயோகப்பட மாட்டாது. (19 ஸ. 12; 1849 ஹுத்திய பங்காளா ஸதர்கோர்ட்டு தீர்ப்புகள் 41-வது பேஜ்).

ஒரு புருஷனுக்கு இரண்டு பெண்ஜாதிக ளிருந்தார்கள். அவ்விருவர்களுக்கும் தனித்தனியே ஒரு பிள்ளையை சுவீகாரம் செய்துகொள்ளும்படி புருஷன் அதிகாரம் கொடுத்தான். அவர்களில் இரண்டுபேர்களும் சுவீகாரம் செய்துகொண்டாலும் இல்லாமல் அவர்களில் ஒருபெண்சாதி வேண்டாமென்றும் மைத்தவள் மாத்திரம் சுவீகாரம் செய்துகொண்டாலும் கூட, புருஷன கொடுத்த அதிகாரம் செல்லாததால் சுவீகாரம் செல்லமாட்டாது. (இ. லா. ரி. 19 க. 513).

60. சுவீகாராதிகாரம் கொடுக்கும்போது இன்ன பய்யனை சுவீகாரம் செய்துகொள்ளுகிற தென்று குறித்துச் சொல்லவேண்டிய தில்லை. ஆனுல் அந்த அதிகாரம் எதுவரையில் எவ்விதமாய் கொடுக்கப்பட் டிருக்கிறதோ அப்படியே கொஞ்சங்கூட ஏற்றத்தாழ்த்தி யில்லாமல் சுவீகாரத்தை நடத்த வேண்டியது. அப்படி செய்யாமல் எவ்வளவாகிலும் ஷரத்துகளைமீறினுல் அல்லது வித்தியாசப்படுத்தினுல் சுவீகாரம் செல்லமாட்டாது. உதாஹரணங்கள்.

சுவீகாராதிகாரப்படி ஏறத்தாழ்த்தி யன்றியில் நடத்தவேணும்.

(1.) இன்ன பய்யனை சுவீகாரம் செய்துகொள்ளுகிற தென்று அதிகாரம் கொடுத்திருந்தால் அந்த பய்யனைத் தவிர வேறு ஒரு பய்யனை சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாது. அந்தப் பய்யன் இறந்துபோய்விட்டாலும் அவன் தாய் தகப்பன்கள் அவனை சுவீகாரம் கொடுக்காமல் போனுலும் பேசாமல் இருக்கவேணுமே தவிற வேறு ஒருவனை சுவீகாரம் செய்துகொண்டால் அது செல்லமாட்டாது.

(2.) ஒரு பய்யனை சுவீகாரம் செய்து கொள்ளும்படி புருஷன் அதிகாரம் கொடுத்திருந்தால் எந்தபய்யனை வேண்டுமானுலும் சுவீகாரம் செய்துகொள்ளலாம். ஆனுல் அப்படி சுவீகாரம் எடுத்துக்கொண்ட பிள்ளை இறந்துபோனுல் வேறு பய்யனை சுவீகாரம் செய்

துகொள்ளக் கூடாது. ஒருதரம் சுவீகாரம் செய்துகொண்டதோ டே அந்த அதிகாரம் தீர்ந்துபோனதாக எண்ணவேண்டியது. (12 மூ. இ. அ. 356; இ. லா. ரி. 14 ம. 65).

(3). சுவீகாராதிகாரம் கொடுத்தபோது பெண்ஜாதி கர்ப்பிணி யாயிருந்தாள். "பிறக்கும் பிள்ளை இறந்துபோனால் சுவீகாரம் செய் துகொள்ளலாம்" என்று அதிகாரம் கொடுத்துவிட்டு புருஷன் இற ந்து போய்விட்டான். பிறகு பெண் பிறந்தது. சுவீகாரம் செய்து கொள்ளக் கூடாதென்று தீர்மானம் செய்தார்கள். (1864 ஹுத்திய கல்கத்தா ஐகோர்ட்டு தீர்ப்புகள் - காரிடன் 42-வது பேஜ்).

(4.) உயில் மூலமாய் தன்னுடைய எஸ்டேட்டுக்கு ஏற்படுத்த ப்பட்ட மானேஜர் அனுமதி பெத்துக்கொண்டு சுவீகாரம் செய்து கொள்ளலாமென்று புருஷன் தன் பெண்ஜாதிக்கு அதிகாரம் கொடு த்தான் அந்த மானேஜர் அனுமதி யில்லாமலே அவள் சுவீகாரம் செ ய்துகொண்டாள். அப்படி செய்துகொள்ளப்பட் டிருந்தாலும் சுவீ காரம் செல்லுமென்றும், மானேஜர் அனுமதியானது பெண்சாதியின் அத்துக்காகவே யன்றி, சுவீகாரம் றத்து செய்ய வேணுமென்கிற எண்ணத்தோடு எழுதப்பட்டதல்ல வென்றும் கல்கத்தா ஐகோர்ட் டார் தீர்ப்புசெய்தார்கள். (இ. லா. ரி. 18 க. 335).

(5.) "அய்யாபிள்ளைக்கு 2-வது குமாரன் பிறந்தால் அவனை சுவீகாரம் செய்து கொள்ளலா" - மென்று சுவீகாராதிகாரம் கொடு க்கப்பட்டது. கொஞ்சகாலம் சும்மா இருந்துவிட்டு வேறு ஒரு பிள் ளையை பெண்ஜாதி சுவீகாரம் செய்துகொண்டாள். இந்த சுவீகாரம் செல்லுமென்று முன்காலத்தில் மதருஸில் ஜட்ஜியாயிருந்த ஸர் தா மஸ் ஸ்ட்ரேஞ்சு துரையவர்கள் தீர்ப்பு செய்தார்கள். (1 தாமஸ் ஸ்ட் ரேஞ்சு துரையவர்கள் தீர்ப்புகள், 91). சுவீகாரம் செய்துகொள்ள இஷ்டமிருக்கையில், கூடுமானால் சுவீகாரபிள்ளை அய்யாபிள்ளை மக னாக இருக்கவேணு மென்று புருஷனுடைய உத்தேசமென்று ஸ்ட் ரேஞ்சு துரையவர்கள் எண்ணினார்கள். ஆனால், மெக்னடன் துரை யவர்கள் இந்த தீர்ப்பு சரியல்லவென்று கண்டித்தார்கள். எவ்வளவு காலமானாலும் காத்திருந்து அய்யாபிள்ளைக்கு 2-வது பிள்ளை பிறந் தால் அவனையே சுவீகாரம்செய்துகொள்ள வேண்டியதென்றும் இல் லாவிட்டால் சுவீகாரம் செய்துகொள்ளாமல் இருக்க வேணுமென் றும் அவர்கள் சித்தாந்தம் செய்தார்கள். இக்காலத்தில் தீர்ப்புகளில் அபிபிராயம் வேறுபட்டே யிருக்கிறது.

பெண்ஜாதிக்கு மட்டில் புருஷன் சுவீகாராதிகாரம் கொடுக்கலாம்.

61. தனக்கு சுவீகாரம் செய்துகொள்ளும்படி அதிகாரம் தன் பெண்சாதிக்கு மட்டும் கொடுக்கலாமே தவிற வேறு ஒருவருக்கு கொடுக்க புருஷனுக்கு அதிகாரமில்லே. தன் பெண்சாதி இறந்துபோய் தன் விதவையான மருமகள் மட்டு மிருக்கையில் அவளுக்கு சுவீகாரம் செய்துகொள்ள அதிகாரம் கொடுத்தால் தன்னுடைய பிள்ளேக்கு சுவீகாரம் செய்துகொள்ளும்படி கொடுக்கலாமே தவிற தனக்கு சுவீகாரம் செய்து கொள்ளும்படி அதிகாரம் கொடுக்கக்கூடாது. (இ. லா. ரி. 12 பம். 185).

புருஷன் அதிகாரம் கொடுத்தாலும் சுவீகாரம் செய்துகொள்ள பெண்ஜாதி கட்டுபட்டவளல்ல.

62. சுவீகாரம் செய்து கொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்ட விதவை கட்டாயம் சுவீகாரம் செய்துக்கொள்ள வேணுமென்று நிர்பந்த மில்லே. இஷ்டமிருந்தால் அவள் சுவீகாரம் செய்து கொள்ளலாம். இல்லாவிட்டால் பேசாமலிருக்கலாம். சுவீகாரம் செய்து கொள்ளத்தான் வேணுமென்று அவளேக் கட்டாயப்படுத்த நியாயமில்லே. (7 மூ. இ. அ. 190; இ. லா. ரி. 7 க. 288). அப்படி கட்டாயப்படுத்தியாவது பலவந்தப்படுத்தியாவது செய்துகொள்ளப்பட்ட சுவீகாரம் செல்லமாட்டாது. (இ. லா. ரி. 13 ம. 214, 220).

அவள் இஷ்டம்வந்து சுவீகாரம் செய்து கொள்ளுகிரவரையில் சுவீகாராதிகார மில்லாதது போலவே எண்ணப்பட வேண்டியதாயிருப்பதால் அதுவரையில் புருஷன் சொத்தில அவளுக்குள்ள பாத்தியத்துக்கு எவ்விதமான கெடுதலு முண்டாகமாட்டாது. புருஷன் சொத்துக்கு அவளே வார்சாக யிருக்கையில் அவைகளே சுவாதீனப்படுத்திக் கொண்டு தன்னுடைய பாத்தியத்துக்கு ஒத்தபடி அவள் தன்னிஷ்டப்படி அனுபவித்துக் கொள்ளலாம். சுவீகாரம் செய்து கொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தைக் கொண்டு அவளுடைய அனுபவத்தைத் தடுக்க நியாயமில்லே. (7 மூ. இ. அ. 169). புருஷன் ஆஸ்திக்கு அவள் வார்சா யில்லாமல் அதுவேறு ஒருவர் சுவாதீனமா யிருந்தால் சுவீகாரம் செய்து கொள்ளும் வரையில் அந்த ஆஸ்தியில் அவளுக்கு ஒரு பாத்தியமுங் கிடைக்கமாட்டாது. (7 பங்காளா சதர்கோர்ட்டு தீர்ப்புகள், 143).

இன்ன பிள்ளேயை சுவீகாரம் செய்துகொண்டு சொத்து முழுவதும் அவனுக்குக் கொடுக்கவேணுமென்று புருஷன் உத்திரவு செய்

துவிட்டுப் போயிருந்தாலும் சுவீகாரம் செய்துகொள்ளாமல் எல்லா சொத்தையும் பெண்ஜாதி தானே அனுபவித்துக் கொள்ளலாம். (இ. லா. ரி. 12 பம். 202).

சுவீகாரம் செய்துகொள்ள அதிகாரம்கொடுக்கப்பட்ட விதவை, தான் சுவீகாரம் செய்துகொள்ளுகிற தில்லையென்று ஷரத்து எழுதிக்கொடுத்தால் அது செல்லுமா? இந்த விஷயம் முக்கியமாக யிருக்கிறது. இந்த விவாதம் ஒரு பம்பாய் கேஸில் உண்டாயிற்று. சுவீகாரம் செய்துகொள்ளுகிறதில்லை என்று எழுதிக்கொடுத்த பிறகு விதவை சுவீகாரம் செய்துகொள்ள யெத்தினம் செய்தபோது இஞ்சங்ஷன் கொடுத்து சுவீகாரத்தை நிறுத்தவேணுமென்று கோர்ட்டில் மனுக் கொடுக்கப்பட்டது. கோர்ட்டார் இஞ்சங்ஷன் கொடுக்க வில்லை. ஆனால், அவ்விவாதம் அத்துடன் முடியாமல் முடிவுவரையில் வியாஜிப மாடப்பட்டிருந்தால் சுவீகாரம் உருதிப்பட் டிருக்குமோ இல்லையோ சொல்ல முடியவில்லை. (இ. லா. ரி. 13 பம். 56).

சுவீகாராதிகாரம் எவ்வளவுகாலம் செல்லும்?

63. சுவீகாரம் செய்துகொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டு இவ்வளவு காலத்துக்குள் சுவீகாரம் செய்துகொள்ள வேணுமென்று நிர்ப்பந்தமில்லை. ஒரு பங்காளா கேஸில் புருஷன் இறந்து 15-வது ஸ்த்தில் செய்துகொண்ட சுவீகாரத்தை கோர்ட்டார் ஒப்புக்கொண்டார்கள். சில பம்பாய் கேசுகளில் புருஷன் இறந்து 20, 25, 52, 71 ஸங்களுக்கு பிறகு நடந்த சுவீகாரங்கள்கூட அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. (4 பம். ஐ. 191; இ. லா. ரி. 9 பம். 58). ஆனால், சுவீகாராதிகாரம் கொடுத்தவனுடைய ஆஸ்தி வேரொருவருக்கு அதாவது சுவீகாராதிகாரம்பெத்த பெண்ஜாதியைத் தவிர மைத்தொருவருக்கு சேர்ந்துபோன பட்சத்தில் அதோடு அந்த சுவீகாராதிகாரம் போய்விடு மென்றும் அந்த அதிகாரத்தை அனுசரித்து அதர்க்கு பின் சுவீகாரம் செய்துகொண்டால் செல்லாதென்றும் பிறிவீகவுன் சிலவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். (10 மூ. இ. அ. 279; இ. லா. ரி. 10 ம. 205; இ. லா. ரி. 17 க. 122). உதாஹரணங்கள்.

(1.) பிள்ளை யிறந்துபோனால் சுவீகாரம் செய்துகொள்ளலாமென்று ஒரு புருஷன் தன் பெண்ஜாதிக்கு அதிகாரம் கொடுத்தான். அந்த பிள்ளை விவாஹம் செய்துகொண்டு சந்ததியன்றியி லிறந்துபோனதால் அவனுடைய ஆஸ்தி முழுவதும் சாஸ்திரப்படி அவனு

டைய பெண்ஜாதிக்கு சேர்ந்தது. பிறகு சுவீகாரம் செய்துகொள்ள அதிகாரம்பெற்ற அந்த விதவை சுவீகாரம் செய்துகொண்டாள். இந்த சுவீகாரம் செல்லாதென்றும், மருமகளுக்கு ஆஸ்திமுழுவதும் சேர்ந்தவுடனே இவளுடைய சுவீகாராதிகாரம் போய்விட்ட தென்றும், மருமக ளிறந்தபிறகு அவளுடைய அனுபவத்திலுள்ள ஆஸ்தி, அவள் புருஷனுடைய தாயாதிகளுக்குச் சேறுமேயன்றியில் சுவீகார பிள்ளைக்குச் சேருதென்றும் பிறிவீகவுன்சிலவர்கள் தீர்மானித்தார்கள். (10 மூ. இ. அ. 279; இ. லா. ரி. 10 ம. 205; இ. லா. ரி. 17 க. 122).

(2.) மேல் சொல்லப்பட்ட கேஸில் மாமியார் ஜீவித்திருக்கையிலேயே மருமக ளிறந்துபோனால், மாமியாருக்கு அதாவது புருஷன் தாயாருக்கு ஆஸ்தியெல்லாம் சேறும். அப்போதுகூட இவள் தான்பெற்ற சுவீகாரத்தைக்கொண்டு சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாது. ஏனென்றால் சொத்து எப்பொழுது மருமகள் சுவாதீனமாயிற்றோ அப்பொழுதே அந்த சுவீகாராதிகாரம் போய்விட்டது. (10 மூ. இ. அ. 279; இ. லா. ரி. 10 ம. 205; இ. லா. ரி. 17 க. 122).

(3.) மேல் சொல்லப்பட்ட கேஸில் பிள்ளை விவாஹம் செய்துக்கொள்ளுகிறதர்க்கு முந்தியே இறந்திருந்தாலாவது அல்லது, விவாஹம்செய்து கொண்டிருந்தும் முதலில் பெண்ஜாதி யிறந்து பிறகு தான் ஸந்ததியன்றியில் இறந்திருந்தாலாவது அவனுடைய சொத்து தாயாருக்கு சேர்ந்த பொழுது அந்த அதிகாரத்தை அனுசரித்து அவள் சுவீகாரம் செய்துகொள்ளலாம். (10 மூ. இ. அ. 311; 22 ஸ. 121).

(4.) பம்பாய் பிறசிடென்சியில் புருஷனுடைய அனுமதி யன்றியில் சுவீகாரம் செய்துகொள்ள விதவைகளுக்கு சுவாதந்திரிய மிருந்தாலும் 1, 2 உதாஹரணங்களில்போல புருஷனுடைய சொத்து பிறர்கள் வசத்தில் போனவுடனே சுவீகாரம் செய்துகொள்ளும் பாத்தியம் போய்விடும் ஆகையாலதர்க்குப் பிறகு அவள் சுவீகாரம் செய்துகொள்ளக்கூடாது. (இ. லா. ரி. 9 பம். 94. 17 பம். 164).

பெண்ஜாதிக்கு சுவீகாரம் செய்துகொள்ள அதிகாரம் கொடுத்த பிறகு புருஷன் தானே சுவீகாரம் செய்துகொண்டால் அந்த அதிகாரம் ரத்து செய்யப்பட்டதாக எண்ணவேண்டியது. பிறகு சுவீகாரபிள்ளை யிறந்துபோனால் கூட அந்த அதிகாரத்தை முன்னிட்டு

சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாது. (எப். மெக்னுடன் ஹிந்து லா, 81).

64. *மைனர்விதவை சுவீகாரம் செய்துக் கொள்ளலாமா.*

சுவீகாரம் புருஷனுக்காகவே செய்யப்படும் காரணத்தால் பெண்ஜாதி அவனுடைய ஏஜண்டாக பாவிக்கப் படுகிருள். ஆகையால் சுவீகாராதிகாரம் பெற்ற விதவை மைனருக இருந்தாலும் அவள் சுவீகாரம் செய்துகொள்ளலாம். (இ. லா .ரி 18 க 69.) பம்பாய் பிறசிடென்சியில் விதவை சுவதந்திரமாய் சுவீகாரம் செய்துகொள்ளலா மென்கிற காரணத்தைக்கொண்டு தகுந்த வயது வருகிறதர்க்கு முந்தி அதாவது 16 வயது முடிகிறவரையில் அவள் சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாதென்று சொல்லுகிருர்கள்.

65. *வியபிசாரியான விதவை சுவீகாரம் செய்துகொள்ளலாமா?*

புருஷன் அனுமதிபெற்றவளாயினும் வியபிசாரியா யிருந்தால் விதவை சுவீகாரம் செய்துகொள்ளத் தக்கவளல்லவென்றும் வியபிசார தோஷத்தால் சுவீகாரத்துக்கு முக்கியமான வைதிக கர்மங்களைச் செய்ய யோக்கியதை போய்விடுகிறதென்றும் கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித் திருக்கிருர்கள். (5 க. ஐ. 362). வியபிசாரதோஷத்தை பிருயச்சித்தத்தால் போக்கடித்துவிட்டு பிறகு சுவீகாரம் செய்துகொள்ளலா மென்றும் கர்ப்பமா யிருந்த ஸ்திரீ பிருயச்சித்தம் செய்துகொள்ள யோக்கியதை யுள்ளவளல்லவென்றும் சொல்லுகிருர்கள். (5 க. ஐ. 362; 13 க. ஐ. 39). சூத்திரர்களில் சுவீகாரத்துக்கு வைதிக கர்மங்கள் ஆவசியமில்லாததால் வியபிசாரியா யிருக்கும் சூத்திரஜாதி விதவை சுவீகாரம் செய்துக்கொள்ளலாமா? இதுவிஷயம் யோசிக்கவேண்டியதா யிருக்கிறது.

66. *தலைமயிர் வைத்துக் கொண்ட விதவை சுவீகாரம் செய்துகொள்ளலாமா ?*

பம்பாய் ஐகோர்ட்டார் முன்பாக ஒரு கேஸில் தலைமயிர் வைத்திருந்த ஒரு விதவை செய்துகொண்ட சுவீகாரம் செல்லாதென்று வாதிக்கப்பட்டது. ஆனல் சுவீகாரத்திர்க்கு முந்தி அவள் சில வித்துவான்களுடைய அபிப்பிருயத்தைப் பெற்று அந்த அபிப்பிருயப்படி தலைமயிர் வைத்திருந்த தோஷத்தை நிவர்த்திசெய்யச் சில தானங்கள் கொடுத்ததாக ரிகார்ட்டுகளால் தெரியவந்ததால் தலைமயிர் வைத்திருந்த தோஷத்தால் ஏற்பட்ட கக்ஷியை கோர்ட்டார் ஒப்புக்கொள்ளவில்லை. (இ. லா. ரி. 11 பம். 381, 392).

67. ஒரு புருஷனுக்கே 2, 3 விதவைகள் இருந்தால் அவர்களில் யெவருக்கு புருஷன் சுவீகாராதிகாரம் கொடுத்துவிட்டுப் போனுனோ அவள் மாத்திரம் சுவீகாரம் செய்துகொள்ளலாம். எல்லாப் பெண்சாதிகளுக்கும் தனித்தனியே சுவீகாராதிகாரம் கொடுக்கப்பட் டிருந்து, மூத்த பெண்சாதி சுவீகாரம் செய்துகொள்ள நிருகரித்தால் அவ ளனுமதியன்றியிலேயே 2-வது பெண்சாதி சுவீகாரம் செய்துகொள்ளலாம். (இ. லா. ரி. 18 க. 69). பம்பாய் பிறசிடென்சியில் மூத்த பெண்சாதி 2-வது பெண்சாதி யனுமதியில்லாமலே சுவீகாரம் செய்துகொள்ளலாம். ஆனுல் மூத்த பெண்சாதி யனுமதி யில்லாமல் 2-வது பெண்சாதி சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாது. மூத்த பெண்சாதி வியபிசாரியாயிருந்து குலபிறஷ்டையான காரணத்தால் அவளுக்கு சுவீகாரம் செய்துகொள்ளு மதிகாரம் போய்விட்டால் அவளுடைய அனுமதியில்லாமலே இரண்டாவது பெண்சாதி சுவீகாரம் செய்துகொள்ளலாம். (5 பம். ஐ. 181; இ. லா. ரி. 13 பம். 160).

ஒரு புருஷனுக்கு 2, 3 விதவைகளிருந்தால் யார் சுவீகாரம் செய்து கொள்ளலாம்?

68. புருஷனுடைய அனுமதியில்லாமல் போனுலும் அவனுடைய ஸபிண்டர்களின் அனுமதியுடன் தென்னிந்தியாவில் விதவை சுவீகாரம் செய்துகொள்ளலாம். ஸபிண்டர்க ளனுமதியென்றுல் யாரோ தூரமான தாயாதியுடைய அனுமதிபோதாது. குடும்பம் பிறியாமலிருந்தால் விதவையின் மாமனுருடைய அனுமதி முக்கியம். அவர் ஒருவருடைய அனுமதிமட்டும் போதும். மாமனுர் இறந்துபோனுல் புருஷனுடைய அவிபக்த சகோதரர்களுடைய அனுமதி அவசியம். குடும்பம் பிறிந்திருந்தால் ஸமீப தாயாதிகளில் சிலருடைய அனுமதிமாத்திரம் போதும். எல்லா தாயாதிகளுடைய அனுமதியும் வேணுமென்று அவசியமில்லை. புருஷ னிறந்து போகும்போது பிள்ளை உயிருடனிருந்து பிறகு சந்ததியன்றியில் இறந்துபோன விஷயத்தில்கூட அவனுடைய தாயார் தாயாதிகளனுமதியோடு சுவீகாரம் செய்துகொள்ளலாம். சுவீகாரம் செய்துகொள்ளத் தனக்கு இஷ்டமில்லையென்று புருஷன் சொல்லிவிட்டு இறந்துபோன பொழுது அல்லது ஜாடையால் அறிவித்து இறந்து போனபொழுது தாயாதிகளனுமதி யிருந்தாலும் சுவீகாரம் செய்துகொள்ள்ளக் கூடாது. இந்த விஷ

புருஷனுடைய அனுமதி யில்லாமல் போனுலும் அவனுடைய தாயாதிகள் அனுமதியைக் கொண்டு தென்னிந்தியாவில் விதவை சுவீகாரம் செய்துகொள்ளலாம்.

யங்களெல்லாம் இதன்கீழ் விவரிக்கப்பட்டிருக்கிற கேசுகளில் ஸ்திரப் படுத்தப்பட் டிருக்கின்றன. (12 மூ. இ. அ. 397; இ. லா. ரி. 1; ம.69 இ. லா. ரி. 1 ம. 174).

69. இந்தக் கேசில் புருஷனுடைய பிறத்தியேகமான ஜமீனுக்கு வார்சாக ஏற்பட்ட விதவை அவனுடைய தாயாதிகளிடத்தில் போதுமான அனுமதியின் பேரில் சுவீகாரம் செய்துகொண்டாள். இந்த சுவீகாரத்தை ஸ்தாபிக்கையில் தென்னிந்தியாவில் புருஷ னனுமதியில்லாம லிருக்கையில் அனுமதி கொடுக்கவேண்டிய தாயாதிகள் யாரென்ற விஷயத்தை பிறிவீகவுன்ஸிலாரவர்கள் செவ்வையாக ஆருய்ந்தார்கள். அவர்களுடைய ஜட்ஜிமெண்டின் சாராம்ச மென்னவென்ருல்:—

"ரூமனுதபுரம் கேஸ்."

(1.) அவிபக்த குடும்பத்தில் விதவையின் மாமனுர் ஜீவித்திருக்கையில் குடும்பத்துக்கு எஜமானனுகவும் விதவைக்கு போஷகனுகவும் அவனிருப்பதால் அவனொருவனுடைய அனுமதியே போதுமானது. மாமனுர் இறந்துபோய் விட்டால் புருஷனுடைய அவிபக்த சகோதரர்கள் எல்லாருடைய அனுமதியும் வேண்டியது. சுவீகாரம் செய்துகொண்டால் இவர்களுடைய பாகத்துக்கு பாதகமுண்டாவதால் இவர்க ளனுமதி வேண்டுமென்பது நியாயமாய்த்தா னிருக்கிறது.

(2.) விபக்த குடும்பத்தில் தாயாதிக ளனுமதி வேணுமென்பது ஹிந்து ஸ்திரீகள் தானுக சுவதந்திரமாய் ஒன்றும் செய்யக்கூடாதென்கிற காரணத்தா லொழிய பாகஸ்தர்களுடைய பாத்தியத்துக்கு விரோத முண்டாகு மென்கிற காரணத்தாலல்ல. ஆகையால் விதவைகன் மாமனு ருயிருட—னிருந்தால் குடும்பத்தில் அவர் பெரிய தலையா யிருப்பதால் அவருடைய அனுமதி மட்டுமே போதும். இ. லா. ரி. 15 பம். 510-வது பக்கத்தில் இந்த அபிப்பிருயத்துக்கு ஒத்தபடி தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. மாமனு ரில்லாவிட்டால் எவ்வளவு தூரமா யிருந்தாலும் எல்லா தாயாதிகளும் சம்மதிக்க வேணுமென்பது அவசியமில்லை. ஆனுல், கெட்ட எண்ணமில்லாமல் தன் புருஷனுடைய ஆத்துமாவின் நன்மையைக்கோறி விதவை சுவீகாரம் செய்துகொண்டா ளென்று காணும்படியான தகுந்த தாயாதிகளனுமதி அவசியம். இந்த அம்சம் அந்தந்த கேஸின் நிலமையையும் சங்கதிகளையும் பொறுத்து ஆலோசிக்க வேண்டியது.

(3.) சுவிகார மென்பது புருஷனுடைய க்ஷேமத்துக்காகவே செய்கிற காரியமாயிருப்பதால் அவன் அனுமதி கொடுக்காம லிறந்துபோனாலும் அவனுக் கிஷ்டமாகத்தான் இருக்குமென்று எண்ணி தாயாதிக ளனுமதியின் பேரில் செய்துகொள்ளலா மென்று ஆசாரம் ஸ்திரப்பட்டிருக்கிறது. ஆகையால் சுவிகாரம் தனக்கிஷ்டமில்லை யென்றாவது வேண்டாமென்றாவது புருஷன் தெளிவாய் சொல்லிவிட்டு இறந்துபோன பொழுதும் ஆஸ்திமுழுவதையும் அவர் அவர்களுக்கு பாகம்போட்டுக் கொடுத்த காரணத்தை கொண்டாவது வேறு காரணங்களைக் கொண்டாவது புருஷனுக்கு சுவிகாரத்தில் இஷ்டமில்லை யென்று தெரியும்பொழுதும் அவனுடைய விதவை தாயாதிகளனுமதியை வைத்துக்கொண்டு சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாது. செய்துகொண்டால் செல்லாது. ("ராமனாதபுரம் கேஸ்" - 2 ம. ஐ. 206; 12 மூ. இ. அ. 397).

70. திருவாங்கூர் கேஸ்—இந்த கேசில் ஒரு விதவை தன் புருஷனுடைய அவிபக்தசகோதரனுடைய அனுமதியன்றியில் விபக்த்தர்களான சில தாயாதிகளுடைய அனுமதியை வைத்துக்கொண்டு சுவீகாரம் செய்துகொண்டாள். ராமனாதபுறம் கேசில் பிறிவீகவுன்சிலாரவர்கள் செய்த தீர்ப்பைசெவ்வையாய் யோசித்துப் பார்த்து திருவாங்கூர் ஐகோர்ட்டார் அவர்கள் இந்த சுவீகாரத்தை றத்துசெய்தார்கள். ஹிந்து தர்மசாஸ்திரங்களைப் பார்த்து சாகிறவரையில் ஹிந்து ஸ்திரீகளுக்கு சுவதந்திரியம் கிடையாதென்றும், முதலில் தகப்பனுடையவும் பிறகு புருஷனுடைவும், பிறகு குடும்பத் தலைவனுடையவும் ஸம்ரக்ஷணைக் குள்பட்டவர்களென்றும், புருஷன் அனுமதி யன்றியில் சுவீகாரம் செய்துகொள்ளும் விஷயத்தில் விதவைக்கு ஜீவனும்சம் கொடுக்கவும், அவள் பெண்களுக்குக் கலியாணம் கார்த்திகை செய்யும் கடமைப்பட்ட குடும்பத் தலைவன் எவனோ அவனுடைய அனுமதி அவசியமாதலால் மாமனார் உயிருடன் இருந்தால அவனனுமதி கொடுக்க வேணுமென்றும், அவனில்லாவிட்டால் புருஷன் சகோதரர்களில் மூத்தவன் அனுமதி அவசியமென்றும் சீப் ஜட்ஜியவர்கள் தீர்ப்பு செய்தார்கள். இந்த தீர்ப்பு பிறிவீகவுன்சி லாரவர்களால்கூட ஆதரிக்கப்பட் டிருக்கிறது. (8 மதறாஸ் ஜூரிஷ்ட்டு 58.)

"திருவாங்கூர் கேஸ்."

71. "பர்ஹம்பூர் கேஸ்"—இந்த கேசில் சின்னகிமிடி ஜமீன்தார் இறந்துபோன காலத்தில், அவனுடைய விதவை, ஒரு அவிபக்த சகோதிரன், விபக்த

"பர்ஹம்பூர் கேஸ்"

ஞன ஒரு தூரதாயாதி—இம் மூன்றுபெயர்கள் மாத்திர மிருந்தார்கள். வேறு தாயாதிகள் ஒருவருமில்லை. மேல் சொல்லப்பட்ட தூரதாயாதி பெரியகிமிடிக்கு ஜமீன்தாருக கஇருந்தான். விதவை தத்துசெய்து கொள்ளாத பட்சத்தில் அவள் மைத்துனனே சின்னகிமிடி ஜமீனுக்கு வார்சாக யிருந்தான். இச்சந்தர்பத்தில் அந்த விதவை அவிபக்தஞன தன் மைத்துனனுடைய அனுமதியன்றியில் விபக்த தாயாதியான பெரியகிமிடி ஜமீன்தாருடைய பிள்ளையை சுவீகாரம் செய்துகொண்டாள். இந்த சுவீகாரத்தை றத்துசெய்யக் கொடுக்கப்பட்ட வியாஜியத்தில் - (1) புருஷனுல் எழுத்து மூலமான சுவீகாராதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற தென்றும், அதுவு மல்லாமல் (2) புருஷனுடைய தாயாதியான பெரியகிமிடி ஜமீன்தார் சம்மதித்துத் தன்னுடைய பிள்ளையை சுவீகாரம் கொடுத்தால் புருஷனனுமதி யில்லாமல் போனபோதிலும் சுவீகாரம் செல்லத்தக்க தாயாதி யனுமதியிருக்கிறதென்றும் வாதிக்கப்பட்டது. டிஸ்திரிக்ட்டு கோர்ட்டார் அவர்கள் இந்த இரண்டு அம்சங்களையும் விதவைக்கு விரோதமாக தீர்மானித்தார்கள். அப்பீலில் மதறாஸ் ஐகோர்ட்டார் அவர்கள் புருஷனுல் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட எழுத்து மூலமான அதிகாரம் நிஜமென்பதாகநம்பி சுவீகாரத்தை ஸ்தாபித்தார்கள். இதுவுமல்லாமல் அந்த சுவீகார பத்திரிகை யில்லாமல் போனுலும் சுவீகாரம் கொடுத்த பெரியகிமிடி ஜமீன்தார் புருஷனுடைய தாயாதியாயிருப்பதால் சுவீகாரத்துக்கு வேண்டிய தாயாதியனுமதி இருந்ததென்றும் அந்த அனுமதி ஒரு தாயாதிமாத்திரம் கொடுத்தாலும் போதுமென்றும் அவன் சமீப தாயாதியாக இருக்கவேண்டியது அவசியமில்லை யென்றும் தீர்மானித்தார்கள். இதன்பேரில் அப்பீலில் பிறிவீகவுன்சிலாரவர்கள்கூட புருஷனுல் கொடுக்கப்பட்ட சுவிகாராதிகாரத்தை நம்பி சுவீகாரத்தை உருதிசெய்தார்கள். ஆனுல், ஐகோர்ட்டார் தீர்ப்பில் தாயாதி யனுமதியைப்பத்திய பாகத்தை கண்டித்து இரண்டு முக்கியமான அம்சங்களை ஸ்திரப்படுத்தினுர்கள். அவை என்னவென்ருல்:—(1.) அவிபக்த குடும்பத்தின் விதவை செய்துகொள்ளும் சுவீகாரத்துக்கு வேண்டிய தாயாதி யனுமதி திருவாங்கூர் கேஸில் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறபடி அந்த குடும்பத்தி லுள்ளவர்க ளிடத்தில் பெத்துக்கொள்ள வேண்டியதே தவிற யாரோ ஒரு தூரதாயாதியால் கொடுக்கப்பட்டால் போதாது. (2.) விதவைக்கு சுவீகார விஷயமாய் புருஷனுடைய தாயாதிகளால் கொடுக்கப்படும் அனுமதியானது புருஷனுல் அவளுக்கு சுவீகரம் செய்துகொள்ள அதிகாரம் கொடுக்கப்பட

வில்லையென்றும், அவள் சுவிகாரம் செய்துகொள்வது அவசியமென்றும் நியாயமென்றும், இப்படி நம்பிக்கையோடு அவர்களால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டியது. அப்படி நம்பிக்கையோடு கொடுக்கப்படாத அனுமதி செல்லத்தகாது. இந்த பர்ஹம்பூர் கேஸில் பெரிய கிமிடி ஜமீன்தார் தன்னுடைய குமாரனை சுவீகாரம் கொடுத்தபோது சுவீகாரம் செய்துகொள்ள அந்த விதவைக்கு அவள் புருஷன் சுவீகாராதிகாரம் கொடுத்திருந்தான் என்று நம்பி யிருந்தானே யொழிய புருஷனனுமதி யில்லாமல் விதவைக்கு தான் அனுமதி கொடுத்ததாக எண்ணி யிருக்கவில்லை. ஆகையால், அவன் சமீபதாயாதியா யிருந்தால்கூட இந்த கேஸில் செய்யப்பட்டிருக்கிற சுவிகாரத்துக்கு தாயாதியனுமதி யில்லையென்றே ஏற்படுகிறது. ("பர்ஹம்பூர் கேஸ்" - இ. லா. ரி. 1 ம. 69).

இரண்டு கக்ஷிகள்.

72. மேல் சொல்லப்பட்ட கேஸில் பிறிவீகவுன்ஸிலவர்கள் தீர்ப்பை வைத்துக்கொண்டு பார்த்தால்புருஷனுல் சுவீகாரம் செய்துகொள்ள அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அது நம்பிக்கைக்கு தக்கதாய் இல்லாமல் காணப்பட்டால் தாயாதிகளனுமதி யிருக்கிறதென்றும் இந்த இரண்டு விதமாய் ஒரேகேஸில் கட்சியாட முடியாது. ஆகையால்தான் பிந்தி நடந்த ஒருகேஸில் புருஷனுல் சுவீகாரம் செய்துகொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாகச்சொல்லி அவனுடைய அவிபக்த சகோதரனுடைய அனுமதியையும்கூட வைத்துக்கொண்டு ஒரு விதவை சுவீகாரம் செய்துகொண்ட பிறகு புருஷன் அதிகாரம் கொடுத்ததாகச் சொன்னது பொய் என்று ஏற்பட்டு அந்த சுவீகாரம் செல்லாதென்று மதருஸ் ஐகோர்ட்டாரவர்கள் தீர்மானித்தார்கள். விவாத சுவீகாரம் புருஷனுடைய அவிபக்த சகோதரனுடைய அனுமதியுடன் செய்துகொள்ளப்பட்டதா யிருந்தாலும் இந்த அனுமதி புருஷன் அதிகாரம் கொடுத்திருக்கிறுன் என்கிற நம்பிக்கையால் கொடுக்கப்பட்டதானதால் செல்லமாட்டாதென்று ஐகோர்ட்டார் வாதித்தார்கள். (இ. லா. ரி. 2 ம. 270; இ. லா. ரி. 8 ம. 845).

குண்டூர்கேஸ் விதவையின் உத்தேசம்.

73. "குண்டூர் கேஸ்" (இ. லா. ரி. 1 ம. 174)—இக் கேஸில் ஒரு ஜமீன்தார் இறந்துபோகையில் அவனுக்கு விதவை, பெண்கள், ஒரு மைனர் பிள்ளை இருந்தார்கள். ஜமீன்தா ராஸ்தி பிள்ளையைச் சேர்ந்

தாலும் அவன் விவாஹம் செய்துகொள்ளுகிறதற்கு முந்தியே இறந்துபோய்விட்டபடியால் அந்த ஆஸ்தி அவன் தாயாருக்குச் சேர்ந்தது. அதற்குப் பிறகு அவள் தன் புருஷனுடைய தாயாதிகள் எல்லாருடையவும் அனுமதியுடன் ஒரு பய்யனை சுவிகாரம் செய்துகொண்டு அவனுடைய கார்டியனாக அந்த ஆஸ்தியைக் காப்பாற்றிவந்தாள். அவளிறந்த பிறகு விவாதம் உண்டாயிற்று. கவர்ன்மெண்டார் அவள் சுவிகாரம் செய்துகொண்ட பய்யனுடைய பாத்தியத்தை ஒப்புக்கொள்ளாமல் ஆஸ்தியை பெண்கள் வசமாய் செய்தார்கள். அதின்பேரில் சுவிகாரபிள்ளை பிருதுகொடுக்க சுவிகாரம் செல்லாதென்று மதருஸ் ஐகோர்ட்டார் அவர்கள் தீர்மானித்தார்கள். புருஷனுடைய ஆத்துமாவின் க்ஷேமத்துக்கு வேண்டிய உத்திரகிரியைகள் செய்து அவனுக்கு நன்மையுண்டாக வேணுமென்கிற கருத்துடன் விதவையால் அந்த சுவிகாரம செய்து கொள்ளப்பட்டதாகக் காணப்படவில்லையென்றும் அதனால் தாயாதிகளனுமதி யிருந்தாலும் அந்த சுவீகாரம் செல்லாதென்றும் அவர்கள் சொன்னார்கள். பிறிவீகவுன்ஸிலவர்கள் இந்த தீர்ப்பை மாற்றி சுவீகாரத்தை ஸ்தாபிக்கையில் தத்து செய்து கொண்ட விதவையின் உத்தேசத்தை ஊகித்துப்பார்த்தால் ரொம்பமோசத்துக் கிடமுண்டாகு மென்றும் புருஷனுடைய க்ஷேமார்த்தமாக சுவீகாரமவசிய மென்று நினைத்து கொடுக்கப்பட்ட தாயாதிக ளனுமதியுடன் ஒரு விதவை கெட்ட எண்ணமன்றியில் சுவீகாரம் செய்துகொண்டால், அவளுடைய கருத்து என்னமா யிருந்ததோ, சுவீகாரத்தால் புருஷனுடைய ஆத்துமாவுக்கு நன்மை யுண்டாகு மென்று அவள் நம்பினளா இல்லையா, இந்த விஷயங்களை விசாரிக்கக் கூடாதென்றும் அவர்கள் தெளிவாய் சொன்னார்கள். இந்த அபிப்பிராயத்தை அனுசரித்து, விதவையின் கருத்தை விசாரிப்பது அனாவசியகமென்று பம்பாய் ஜகோர்ட்டாரவர்கள். தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 15 பம். 134, 565).

புத்திர சந்ததியில்லாமல் போனால்மட்டுமல்ல, இருந்து இறந்துபோனபொழுதுகூட தாயாதிக ளனுமதியுடன் விதவை சுவீகாரம் செய்துகொள்ளலாம் - இந்த விஷயங்கூட, "குண்டூர் கேஸால்" ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது.

கெட்ட எண்ணம்.

74. சுவீகாரத்துக்காக விதவைக்குக் கொடுக்கப்படும் தாயாதிகளனுமதி மோசத்தாலாவது கெட்ட உபாயங்களாலாவது பெத்துக் கொள்ளப்பட்டாலும்

அந்த அனுமதி கொடுக்கப்பட்ட தாயாதிகள் தங்கள் லாபத்தைக் கோறிக் கொடுத்தாலும் அது செல்லமாட்டாது. (இ. லா. ரி. 2 ம. 270).

புருஷனுடைய விபக்த தாயாதிகள் அனேகர்களிருந்து, அவர்களில் சிலர் கெட்ட எண்ணத்தால் சுவீகாரத்துக்கு ஒப்புக்கொள்ளாமலிருந்தால் மைத்தவர்கள் அனுமதியே போதும். ஒருவனே அனுமதி கொடுத்தாலும் போதும் - என்று மதரூஸ் ஐகோர்ட்டாரவர்கள் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 2 ம. 202).

மேலிந்தியாவில் விதவைகளுக்குள்ள சுவீகாராதிகாரம்.

75. புருஷ னுயிருடனிருக்கையில் செய்துகொள்ளும் சுவீகாரத்துக்கு அவனனுமதி வேண்டியதேயன்றி அவனிறந்த பிறகு செய்துகொள்ளும் சுவீகாரத்துக்கு அவசியமில்லை யென்று மகரூஷ்டிர சம்பிறதாயத்தார் சித்தாந்தம் செய்ததாக மேல் 57-வது பேருவில் சொல்லியிருக்கிறோம். பம்பாய் பிறஸிடன்ஸியில் ரொம்பவும் பிரமாணமாக அனுஷ்டானத்தி லிருந்து வருகிற மயூக கிறந்தத்தில் முக்கியமாக இது சித்தாந்தப்பட் டிருக்கிறது. மகரூஷ்டர தேசத்திலும் குஜரூத்தி தேசத்திலும் விதவைகளுக் குள்ள சுவீகார பாத்திய விஷயமாய் இதன்கீழ் விவரிக்கப்பட்ட அம்சங்கள் பம்பாய் ஐகோர்ட்டாரர் தீர்ப்புகளால் ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

(1.) விபக்தனுக புருஷனிறந்து போனதால் சொத்து முழுவதுக்கும் தனியேயாவது அல்லது ஜாயிண்டாகவாவது வாரசாக இருக்கும் விதவை புருஷனுல் அதிகாரம் கொடுக்கப்படாதவளாக இருந்தாலும் சுவீகாரம் செய்துகொள்ளலாம். ஒருவருடைய அனுமதியும் வேண்டியதில்லை. கெட்ட எண்ணமில்லாம லிருந்தால் எந்த எண்ணத்தோடு அவள் சுவீகாரம் செய்துகொண்டா ளென்று விசாரிக்க வேண்டியதில்லை. (5 பம். ஐ. 181; 10 பம் ஐ. 257; இ. லா. ரி. 6 பம். 498, 505; இ. லா. ரி. 9 பம். 58). கெட்ட எண்ண மிருந்ததென்று சொல்லுகிறவர்கள் அதை ருசுபடுத்த வேண்டியவர்க ளாவார்கள். (இ. லா. ரி. 15 பம். 565).

அவிபக்தனுக புருஷன் இறந்துபோனுல் அவனுடைய சொத்து அவனுடைய அவிபக்த பாகஸ்தர்களுக்கு சேறுகிறது. ஆகையால், சுவீகாரத்தைபற்றி புருஷன் அனுமதி அல்லது புருஷனுடைய அனுமதியில்லாவிட்டால் மாமனுருடைய அனுமதியாவது புருஷனுடைய அவிபக்த சகோதரர்க ளனுமதியாவது பெற்றுக்கொள்ளாமல் வித

வை சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாது. (7 பம். ஐ. 153). புருஷனுடைய சொத்து தன் வசத்திலில்லாமல் வேறொருவன் சுவாதீனத்துக்கு அவனுக்கு சாஸ்திரப்படிக்குள்ள பாத்தியத்தால் சேர்ந்து விட்டால் அப்பேர்கொற்றவனுடைய அனுமதியன்றியில் சுவீகாரம் செய்துகொள்ளக்கூடாது. (8 பம். ஐ. 114).

(3.) சுவீகாரம் வேண்டாமென்று புருஷனால் தெளிவாய் சொல்லப்பட்டிருந்தாலும் அறியும்படி செய்யப்பட்டிருந்தாலும் விதவை சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாது. (7 பம். ஐ. அபண்டிக்ஸ் 1).

(4.) புருஷன் மைனராக இருந்து இறந்துபோனாலும் விதவை சுவீகாரம் செய்துகொள்ளலாம். (இ. லா. ரி. 15 பம். 565).

ஜைன மதஸ்தர்களில் விதவைகளுக்குள்ள சுவீகாராதிகாரம்.

76. ஜைன மதஸ்தர்களில் விதவைக்கு சுவீகாரம் செய்துகொள்ளும் விஷயத்தில் சம்பூர்ணமான அதிகாரமிருக்கிறது. புருஷனுடையவாவது மைத்தவருடையவாவது அனுமதியன்றியிலேயே அவள் சுவீகாரம் செய்துகொள்ளலாம். (6 அ. ஐ. 382; இ. லா. ரி. 1 அ. 688; இ. லா. ரி. 8 அ. 319; இ. லா. ரி. 17 க. 518). இந்த மதத்திலுள்ளவர்களுக்குள் இறந்தவர்களுக்கு உத்திரகிரியை செய்கிற வாடிக்கையே இல்லையென்றும் சுவீகார மென்பது குடும்ப விருத்திக்காகமட்டுமே யல்லாமல் தகப்பன் ஆத்துமாவின் நன்மைக்காக அல்லவென்றும் கோர்ட்டார் வாதித்தார்கள்.

(2.) பிள்ளையை யார் சுவீகாரம் கொடுக்கலாம்?

தாய்தகப்பன்அதிகாரம்.

77. தாயின் இஷ்டமன்றியிலேயே தகப்பன் தன் பிள்ளையை சுவீகாரம் கொடுக்கலாம். (11 பம். ஐ. 199). தகப்பன் இஷ்டமில்லாமலாவது அவனுடைய இஷ்டத்துக்கு விரோதமாயாவது தாய் சுவீகாரம் கொடுக்கக்கூடாது. தகப்பன் இறந்துபோனாலாவது வெகுகாலமாய் தேசாந்திரத்துக்குப் போயிருக்கிற காரணத்தாலாவது ஸன்னியாஸாசிரமம் புகுந்த காரணத்தாலாவது ஜாதி பிறஷ்டனாக யிருக்கிற காரணத்தாலாவது அவன் இறந்தவனைப்போல் இருந்தால் தாயே சுவதந்திரமாக தன் பிள்ளையை சுவீகாரம் கொடுக்கலாம். (1847 ஹூத்துக்கு மேல்பட்ட மதருஸ் தீர்ப்புகள், முதல் வாலியம் 154; இ. லா. ரி. 2 பம். 377; 7 பம். ஐ. அபெண்டிக்ஸ், 26). ஒரேபிள்ளை யிருந்தால் அவனை சுவீ

காரம் கொடுக்கலாமென்று புருஷன் அனுமதி கொடுத்திருந்தாலொழிய அவியாமுஷிபாணனுக * சுவீகாரம் கொடுக்கக்கூட விதவைக்கு அதிகாரமில்லை யென்று பங்காளா பம்பாய் ஐகோர்ட்டாரவர்களால் தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (4 பங்காளா ஸதர்கோர்ட்டு தீர்ப்புகள், 320; 12 பம். ஐ. 364; இ. லா. ரி. 6 பம். 524). சுவீகாரம் கொடுக்கும் விஷயத்தில் பெண்ஜாதியை புருஷனுடைய ஏஜண்டாகப் பாவித்து அவனுக் கிஷ்டமிருந்திருக்கமாட்டா தென்று நினைக்கத்தகுந்த ஸந்தர்ப்பங்களில் அவள் சுவீகாரம் கொடுக்கக் கூடா தென்று ஐகோர்ட்டார் அபிப்பிராயப் பட்டார்கள்.

சுவீகாரம் கொடுக்கவேண்டா மென்று புருஷன் தெளிவாய் சொல்லிவிட்டு இறந்துபோனால் தன் பிள்ளைகளில் எவரையும் தாயார் சுவீகாரம் கொடுக்கபாத்தியமில்லை. (இ. லா. ரி. 11 ம. 113).

புருஷனால் அனுமதி கொடுக்கப்பட்ட ஸந்தர்ப்பத்தில் தவிர வேறு எப்போதாவது தன்னுடைய சக்களத்தி பிள்ளையை சுவீகாரம் கொடுக்க சக்களத்திக்கு அதிகாரம் கிடையாது. (இ. லா. ரி. 16 ம 384).

தமயன் முதலானவர்கள் அதிகாரம்.

78. பிள்ளையை சுவீகாரம் கொடுக்கும் பாத்தியம் மேல் சொல்லப்பட்ட தாய்தகப்பன்களுக்கே தவிர, தமயன், சித்தப்பன் பெரியப்பன், பாட்டன் முதலியவர்களுக்காவது, தாய் தகப்பன்களைத் தவிர, மைத்த யாருக்காவது, கிடையாது. (3 பங்காளா ஸதர்கோர்ட்டு தீர்ப்புகள் 337; 1852 ஷெத்திய மதராஸ் தீர்ப்புகள், 97; 10 பம். ஐ. 235). நன்மை தீமைகளாலோசித்து தங்கள் பய்யனை யாருக்காவது சுவீகாரம் கொடுக்கலாமென்று தாய்தகப்பன்கள் அதிகாரம் கொடுத்துவிட்டுப் போயிருந்தாலும் கூட சுவீகாரம் கொடுக்கும் பாத்தியம் வேறு ஒருவருக்கு உண்டாகமாட்டாது. அந்த அதிகாரத்தை அனுசரித்துக் கொடுக்கப்பட்ட சுவீகாரம் செல்லமாட்டாது. (10 பம். ஐ. 268). இதுகளைப் பார்த்தால் தாய்தகப்பன்களில்லாத பய்யன் சுவீகாரத்துக்கு யோக்கியமானவனல்ல வென்று ஏற்படுகிறது. அப்பேர்க்கொற்ற சுவீகாரம் செல்லமாட்டாதென்று தீர்ப்புகள்கூட செய்யப்பட்டிருக்கின்றன. (2 ம. ஐ. 129; 6 பம் ஐ. 83; 10 பம். ஐ. 268).

* இந்த பதத்திற்கு அர்த்தம் பின்னால் 87-வது பேருவில் பார்க்கவேண்டியது.

பிள்ளையை சுவீகாரம் கொடுக்கும் விஷயத்தில் ஆலோசனை செய்யும் அதிகாரத்தை மைத்தவர்களுக்கு தாய்தகப்பன்கள் ஒப்பு வைக்ககூடாதேயன்றி தாங்களே நன்மை தீமைகள் ஆலோசித்து இன்னானுக்கு சுவீகாரம் கொடுக்கிறதென்கிற நிச்சயம் செய்துகொண்டபிறகு, வியாதிமுதலிய காரணங்களால் தங்கள் கையாலேயே தானங்கொடுக்க முடியாமற்போனால், அந்த தானமானது இதரர்களைக் கொண்டு நடத்திக்கொள்ளலாம். அந்த ஸந்தர்ப்பங்களில் தாய் தகப்பன்கள் இறந்துபோனபோதிலும், தாயாவது தகப்பனாவது நிச்சயித்து தங்களிடம் சொல்லிப்போனபிறகாரம் பய்யனுடைய அண்ணன் முதலியவர்கள் சுவீகாரம் கொடுக்கலாம். (8 பம். ஐ. 244; இ. லா. ரி. 7 ம. 549).

இன்னானுக்கு சுவீகாரம் கொடுக்கிறதென்று தாமே நிச்சயப்படுத்தி, அப்படி தானத்தை நடத்த அதிகாரம் தாய்தகப்பன்கள் மைத்தவர்களுக்கு கொடுத்துவிட்டு இறந்துபோனால், அவர்கள் எவ்வித மான ஷரத்துகள் ஏற்படுத்திபோய்இருக்கிறார்களோ அவைகளுக்குட்பட்டே சுவீகாரம் நடத்தவேண்டியது. இல்லாவிட்டால் சுவீகாரம் செல்லாது. இது எப்படியென்றால் - இன்னானுக்கு தன் பிள்ளையை சுவீகாரம் கொடுக்கவேண்டியதென்றும், அதர்க்கு முந்தி சர்க்காரனுமதி பெத்துக்கொள்ள வேண்டியதென்றும் சொல்லி தானத்தை நடத்தும்படி அதிகாரம் கொடுத்துவிட்டு தகப்பன் இறந்துவிட்டான். இந்த சுவீகாரத்துக்கு சர்க்கார் அனுமதி அவசியம் இல்லாமல் போனபோதிலும், அதை பெத்துக்கொள்ளாமல் நடத்தப்பட்டால் செல்லமாட்டாது. (இ. லா. ரி. 2 பம். 377).

(3.) எப்பேர்கொற்றவனை பிள்ளையாக சுவீகாரம் செய்துகொள்ளலாம்?

---

79. சுவீகாரியன்—அதாவது, சுகவீரம் செய்துகொள்ளப்படும் பய்யன்—சுவீகாரம் செய்துகொள்ளுகிறவனுடைய ஜாதியாகவே யிருக்கவேண்டியது. வேறு ஜாதியில் செய்த சுவீகாரங்கள் முன்காலங்களில் சென்றுக் கொண்டிருந்ததாக ஸ்மிருதிகளால் தெரியவருகின்றன. ஆனல், அவைகள் இக்காலத்தில் ஒப்புக்கொள்ளப்படமாட்டா,

சுவீகார பிள்ளையின் ஜாதி.

சுவிகாரம் செய்துகொள்ளப்படும் பய்யன் ஸகோத்திரனாக இருக்கவேண்டிய அவசியமில்லை. கூடுமானால் சகோத்திரர்களிலே சுவீகாரம் செய்துகொள்ள வேண்டியதென்றும் அவர்களில்கூட ஸமீபதாயாதிகளிலேயே சுவிகாரம் செய்துகொள்ள வேண்டுமென்றும், அண்ணன் தம்பிகளின் பிள்ளைகளிருந்தால் அவர்களிலிருந்தே சுவிகாரம் செய்துகொள்ள வேண்டுமென்றும் தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால்; இப்போது அந்த நிர்பந்தமில்லை. சகோத்திரர்களில் தகுந்த பிள்ளைகளிருந்தாலும் ஸமீபதாயாதிக ளிருந்தாலும் அண்ணன் தம்பிகள் பிள்ளைகளிருந்தாலுங்கூட, அவர்களை விட்டு, தன்ஜாதியில் வேறு கோத்திரமுள்ளவர்களை சுவிகாரம் செய்துகொள்ளலா மென்று தீர்ப்புகள் செய்யப்பட் டிருக்கின்றன. (15 க. ஐ. 405; இ. லா. ரி. 3 க. 587; 6 பம். ஐ. 70; இ. லா. ரி. 10 பம். 80).

கோத்திரம்.

80. சுவீகாரியன் சுவிகாரம் செய்துகொள்ளுகிறவனுக்கு ஔரஸ பிறதிபிம்பனாக அதாவது பிள்ளைக்கு சமானமானவனாக இருக்கவேணு மென்கிற சவுனகர் வாக்கியத்தை வைத்துக்கொண்டு—சுவீகாரம் செய்துகொள்ளப்படும் பய்யனுடைய தாயார் அவள் கன்னிகையாக யிருக்குங்காலத்தில் சுவீகாரம் செய்துகொள்ளுகிறவன் விவாஹம் செய்துகொள்ளத் தகுந்தவளாக இருக்கவேண்டிய தென்கிற நியமம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நியமம் சூத்திரஜாதியார்களைத் தவிர மைத்த மூன்று ஜாதியார்களுக்கும் முக்கியமென்றும் அதர்க்கு விரோதமாக செய்துகொள்ளப்படும் சுவீகாரங்கள் செல்லமாட்டாதென்றும் தீர்ப்புகள் செய்யப்பட் டிருக்கின்றன. (1 ம. ஐ. 420; 2 ம. ஐ. 462; 7 ம. ஐ. 250; 9 மூ. இ. அ. 506; இ. லா. ரி. 3 பம். 273, 298; இ. லா. ரி. 8 அ. 1; இ. லா. ரி. 12 அ. 51; இ. லா. ரி. 11 ம. 49). இந்த நியமத்தின்படி—தமக்கை தங்கைகளின்பிள்ளை, சிரியதாயார் பெரியதாயார் பிள்ளைகள், பெண்ணின் பிள்ளை, அத்தைமகன், தம்பி, செக்காளத்தி தம்பி, சிரியதகப்பன், அம்மான் இப்படிப்பட்டவர்களை சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாதென்றுஏற்படுகிறது. (2 பங்காளா ஸதர்கோர்ட்டு தீர்ப்புகள் 245; 1852 ஸூத்திய மதிரூஸ் தீர்ப்புகள், 96-வது பேஜ்; இ. லா. ரி. 3 ம 15. மேலும் சுவீகாரம் செய்துகொள்ளுகிறவன் தானே சுவிகாரபம் போனவனாக

சுவீகார பிள்ளையின் தாயாருக்கும் சுவீகாரம் செய்துகொள்ளுகிறவனுக்கு யிருக்கவேண்டிய உறவு.

யிருந்தால் மேல் சொல்லப்பட்ட உரவுகளை ஜனக குடும்பத்திலே யும் சுவீகார குடும்பத்திலேயும் இரண்டிலேயும் தள்ளவேண்டியது. (1858 ஹு த்திய மதரூஸ் தீர்ப்புகள், 117-வது பக்கம்).

சுவீகாரப்பய்யன் தாயார், சுவீகாரம் செய்துகொள்ளுகிறவன் சாஸ்திரப்படி விவாஹம் செய்துகொள்ளக் கூடியவளா யிருக்கவேணு மென்று மேல் சொல்லப்பட்ட விதிர்க்கு - அவள் கன்னிகையா யிருந்த காலத்தின் உரவுமாத்திரமே முக்கியமாய் இருக்கிறது. ஆகை யால் அண்ணன் தம்பிகள் பிள்ளைகள், பெண்ஜாதியின் தமக்கை தங்களுடைய பிள்ளை இவர்களை சுவீகாரம் செய்துகொள்ளலாம். (1856 ஹு த்திய மதரூஸ் தீர்ப்புகள், 213-வது பக்கம்; 1857 ஹு த் திய மதரூஸ் தீர்ப்புகள், 94-வது பக்கம்; இ. லா. ரி. 3 ம. 15 2 பா ரோடேல் ரிபோர்ட்டுகள், 662). அத்தையின் பெண்ணின் பிள்ளை யை சுவீகாரம் செய்துகொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட் டிருக் கிறது. (இ. லா. ரி. 7 ம. 549).

81. மேல் பேருவில் சொல்லப்பட்ட நியமம் பிறம்ம க்ஷத்தி ரிய வைசிய ஜாதியார்களுக்குமட்டில் முக்கியமாதலால் சூத்திரஜாதி யாரில் தமக்கை தங்கைகள் பிள்ளை, சிறியதாயார் பெரிய தா யார் பிள்ளை, இப்படிப்பட்டவர்களை சுவீகாரம் செய்துகொள்ள லாம். (இ. லா. ரி. 1 ம. 62). ஜைன மதஸ்தர்களில்கூட இப்படிப் பட்ட சுவீகாரங்கள் செல்லுமென்று தீர்ப்புகள் செய்யப்பட் டிருக் கின்றன. (இ. லா. ரி. 1 அ. 288, 688; இ. லா. ரி. 8 அ. 319).

பின்னுசாரங்கள்.

தென்னிந்தியாவில் பிறம்ம க்ஷத்திரிய வைசிய ஜாதிகளில்கூட பெண்ணுடைய பிள்ளைகளை தமக்கை தங்கை பிள்ளைகளை சுவீகாரம் செய்து கொள்ளுகிற வழக்கம் ஸ்திரப்பட் டிருக்கிறதென்று 1881 ஹு த்தில் மதரூஸ் ஐகோர்ட்டார் புல்பெஞ்சு தீர்ப்பு செய்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 9 ம. 44). இந்த தீர்ப்பு பிந்திய கேசுகளில் அங்கீகரிக்கப்பட்டிருக் கிறது. (இ. லா. ரி. 7 ம. 3; இ. லா. ரி. 11 ம. 55. மகாருஷ்டிர தேசத்தில் கூட இந்த ஆசாரமே காணப்படுகிறது. (வெஸ்டு பூலர் ஹிந்துலா, 887; 2 பாரோடேல் ரிபோர்ட்டுகள், 85). காசிதேசத்தி லிருக்கும் பொஹரா பிராமணர்களுக்குள் தமக்கை தங்கைகள் பிள் ளையை சுவீகாரம் செய்துகொள்ளும் வழக்க மிருக்கிறதென்று அல ஹாபாத் ஐகோர்ட்டார் தீர்மாதித் திருக்கிறார்கள். (இ. லா. ரி. 14 அ 53).

82. அண்ணன் தம்பிகளுடைய பிள்ளைகளை தமக்கை தங்கைகள் சுவீகாரம் செய்துகொள்ளக்கூடாதென்று தத்தகமீமாம்சை கிறந்தத்தில் இருக்கும் நந்த பண்டிதர் அபிப்பிறுயத்தை அனுசரித்து அலஹபாத் ஜகோர்ட்டார் ஒரு கேசில் விதவையால் கிறமமாய் நடத்தப்பட்ட தன் சகோதிரன் குமாரன் சுவீகாரத்தை ரத்துசெய்தார்கள். (7 அ. ஐ. 117). அப்படியே வேறு ஒரு கேசில் சிரியதகப்பன் பெரியதகப்பன் பிள்ளைகளை விதவை சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாதென்று சற். எப். மெக்னுடன் துரையவர்கள் அபிப்பிறுயப் பட்டார்கள். ஆனுல், இந்த அபிப்பிறுயத்துக்குத் தகுந்த ஆதாரம் தென்படவில்லை. புருஷன் உயிருடன் இருக்கையில் பெண்ஜாதியின் அண்ணன் தம்பிகள் பிள்ளைகளையாவது அவளுடைய சிரியதகப்பன் பெரியதகப்பன் பிள்ளைகளையாவது அவன் சுவீகாரம் செய்துகொள்ளலாமே, அவன் இறந்த பிறகு அவன் நிமித்தம் அவனுக்கு பதிலாய் விதவைமாத்திரம் அப்பேர்க்கொற்றவர்களை ஏன் சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாது? சுவீகாரம் செய்துகொள்ளுகிறவனுக்கும் பிள்ளையின் தாயாருக்கும் இருக்கிற உறவே முக்கியமேயல்லாமல், சுவீகாரம் செய்துகொள்ளுகிற தாயாருக்கும் பிள்ளையின் தகப்பனுக்கும் இருக்கும் உறவும் முக்கியமென்பது முற்றிலும் புதிதான யுக்தியாக எண்ணவேண்டியது. இப்படி மதறுஸ் ஐகோர்ட்டார் தீர்மானம் செய்திருக்கிறுர்கள். இ. லா. ரி 3 ம. 17).

சுவீகார தாயாருக்கும் பிள்ளையின் தகப்பனுக்கும் இருக்கும் வுரவு முக்கியமில்லை.

83. ஊமைத்தனம், குருட்டுத்தனம், குஷ்டரோகம் முதலிய தோஷமுள்ள பிள்ளை சுவீகாரத்துக்கு யோக்கியனுகமாட்டான். அப்படிப்பட்டவன் தகப்பனுடைய உத்திரகிரியகளை நிறைவேற்ற உபயோகமற்றவனு யிருப்பதோடு கூட வார்சுபாத்தியங்களுக்குத் தகுந்தவனல்ல. ஆகையால், அப்படிப்பட்டவனுல் ஒரு பிரயோஜனமுமுண்டாகாது. தாய்தகப்பன்க ளிருவரு மிறந்த பிறகு பிள்ளை சுவீகாரத்துக்கு யோக்கியனல்லவென்று மேலே சொல்லியிருக்கிறோம். இன்னனுக்கு சுவீகாரம் கொடுக்கிறதென்று தாயாருவது தகப்பனுவது நிச்சயித்து தாளம் நடத்துவது மாத்திரம் வேறு யாருக்காவது ஒப்பிவித்துவிட்டு அவரிறந்துபோனுல் அந்த பய்யன் சுவீகாரத்துக்கு யோக்கியனுக இருப்பான். (78-வது பேருவில் பார்க்க வேண்டியது.

ஊமை, குருடு, குஷ்டரோகி வகையா.

ஒருவரால் சுவீகாரம் செய்துகொள்ளப்பட்டவன் பிறகு வேறு ஒருவரால் சுவீகாரம் செய்துகொள்ள யோக்கியமானவனல்ல.

சுவீகார பிள்ளையின் வயது, உபநயனம், விவாஹம்.

84. சுவீகாரம் செய்துகொள்ளப்படும் பிள்ளைக்கு 5 வயதுக்கு மேல் அதிகமா யிருக்கக்கூடாதென்றும் அவனுடைய ஜனக குடும்பத்தில் சவுளகர்மம் செய்யப்பட்டவனாக யிருக்ககூடாதென்றும் அதாவது பிறந்தபோதிருந்த மயிரை யெடுத்தவனாக இருக்கக்கூடா தென்றும் - தத்தகமீமாம்சை கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சவுளகர்மங்க விஷயம் முக்கியமல்லவென்றும் ஜனக குடும்பத்தில் சவுளகர்மம் நடந்திருந்தாலும் சுவீகார குடும்பத்தில் மறுபடியும் நடத்தலாமென்றும் பிள்ளையின் வயது விஷயங்கூட முக்கியமல்லவென்றும் பிறம்ம க்ஷத்திரிய வைசிய இந்த மூன்று ஜாதிகளில் பிள்ளைக்கு உபநயனமாகிறதற்கு முந்தியும் சூத்திர ஜாதியில் விவாஹமாகிறதற்கு முந்தியும் சுவீகாரம் செய்துக் கொள்ளலா மென்றும் தத்தகசந்திரிகையில் சொல்லப்பட் டிருக்கிறது. எவ்வளவு வயதானவனையும் தத்துசெய்துக் கொள்ளலா மென்றும் கல்லியாணமாய் குழந்தைகள் பிறந்தவர்களைகூட தத்துசெய்துக்கொள்ளலா மென்றும் மயூககிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மயூக கிரந்தத்தை யனுசரித்து பம்பாய் தேசத்திலும் தத்தகசந்திரிகையை யனுசரித்து மைத்ததேசங்களிலும் தீர்ப்புகள் செய்யப் பட்டிருக்கின்றன.

பிறம்ம க்ஷத்திரிய வைசிய ஜாதிகளில் உபநயனத்திக்கு முந்தி சூத்திரர்களில் விவாஹத்துக்கு முந்தியும் பிள்ளைகளை சுவீகாரம் செய்துக் கொள்லாமென்று பம்பாய் பிறஸிடன்ஸியைத் தவிற மைத்த தேசங்களில் ஸ்திரப்பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 9 அ. 253; 6 பங்காளா ஸதர் கோர்ட்டு தீர்ப்புகள் 219; 1853 ஹூ த்திய பங்காளா ஸதர்கோர்ட்டு தீர்ப்புகள் 553; 1859 ஹூ த்திய பங்காளா ஸதர் கோர்ட்டு தீர்ப்புகள் 229; 1 மதறாஸ் தீர்ப்புகள் 106; 406; 1859 ஹூ த்திய மதறாஸ் தீர்ப்புகள் 118; இ. லா. ரி. 6 ம. 43; இ. லா. ரி. 13 ம. 128). உபநயன விஷயமாய் ஏற்பட்ட இந்த விதி தத்த ஹோமத்துக்காக ஏற்பட்ட தென்றும் பிள்ளை வேறு கோத்திரமுள்ளவனா யிருந்தால் பிறம்ம க்ஷத்திரிய வைசிய ஜாதிகளில் தத்த ஹோமம் நடத்துவது அவசியமாகையால் உபநயனத்துக்கு முந்தியே சுவீகாரம் நடத்தவேணுமென்றும் பிள்ளை ஒரே கோத்திரனாயிருந்தால் தத்த ஹோம மனாவசியகமாகையால் உபநயனத்துக்கு பிறகு கூட சுவீகாரம் செய்து கொள்ளலாமென்றும் எல்லிஸ் துரையவர்கள் அபிப்பிராயப்பட்டார்

கள். இந்த அபிப்ருயப்படி திருவாங்கூர் ஐகோர்ட்டார் ஒருகேஸ் தீர்மானித் திருக்கிருர்கள். (8 மதருஸ் ஐ-ரிஸ்ட் 58). மதருஸ் ஹைகோர்ட்டார் இந்த விஷயத்தை செவ்வையாய் ஆருய்ந்து சகோத்திரனை பிள்ளையை உபநயனத்துக்கு பிறகு கூட சுவீகாரம் செய்துகொள்ளுகிற வழக்கம் தென்னிந்தியாவில் உருதிப்பட் டிருக்கிறதென்று தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 9 ம. 148; புல்பெஞ்சு).

பம்பாய் பிறஸிடன்ஸியில் எல்லா ஜாதியார்களிலும் எவ்வளவு வயதானவர்களை சுவீகாரம் செய்துகொண்டாலும் செல்லு மென்றும் சுவீகாரபிள்ளை சகோத்திரனுக இருந்தாலும் வேறுகோத்திரனுயிருந்தாலும் இம்மாதிரி சுவீகாரம் செல்லுமென்றும் சுவீகாரபிள்ளை சுவீகாரம் செய்து கொள்ளுகிறவனைப் பார்க்கிலும் அதிக வயதானவனுக மட்டும் இருக்கக்கூடாதென்றும் தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (4 பம். ஐ. 191; 8 பம். ஐ. 67; 11 பம். ஐ. 190; 12 பம். ஐ.364; இ. லா. ரி. 10 பம். 80).

85. ஜேஷ்டபுத்திர சுவீகாரம் என்னவென்ருல் ஒருவனுக்கிருக்கும் பல பிள்ளைகளில் மூத்தவனை சுவீகாரம் செய்து கொள்ளுகிறது. ஏகபுத்திர சுவீகாரம் என்னவென்ருல் ஒருவனுக்கு ஒரே பிள்ளை யிருக்கையில் அவனை சுவீகாரம் செய்துகொள்ளுகிறது.

ஜேஷ்டபுத்திர சுவீகாரம் — ஏகபுத்திர சுவீகாரம்.

ஜேஷ்டபுத்திர ஏகபுத்திர சுவீகாரங்கள் கூடாதென்றும் கொடுப்பவருக்கும் வாங்குபவருக்கும் தோஷமுண்டாகு மென்றும் தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் இது நன்மையை உத்தேசித்து சொல்லப்பட்ட வார்த்தை என்று சிலரும் மீறத்தகாத விதிஎன்று சிலரும் வேருக அபிப்பிருயம் கொடுத்திருப்பதால் அப்படிப்பட்ட சுவீகாரங்கள் செல்லுமென்றும் செல்லாதென்றும் கூட பூர்வகாலத்தில் தீர்ப்புகள் செய்யப்பட்டிருந்தன. இப்பொழுது இந்த விஷயத்தில் நாலு ஐகோர்ட்டார்களாலேயும் தெளிவாய் தீர்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

86. ஜேஷ்டபுத்திர சுவீகாரம் தோஷமுள்ளதென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் நடந்துபோனல் அது எங்கேயும் செல்லுகிறது. (இ. லா. ரி. 2 க. 365; இ. லா. ரி. 7 பம் 221, 225).

மதராஸ் தீர்ப்புகள்.

ஏகபுத்திர சுவீகாரம் தர்மசாஸ்திர விரோதமாயும் தோஷமுள்ளதாகவு மிருந்தாலும் நடந்துபோனால் செல்லாமல் போகமாட்டாதென்று மதராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (1 ஸ்ட்ரேஞ்சு துரையவர்கள் தீர்ப்புகள், 91, 125; 1 ம. ஐ. 54; இ. லா. ரி. 11 ம. 43).

அலஹாபாது தீர்ப்புகள்.

அலஹாபாது ஐகோர்ட்டார்கூட ஏகபுத்திர சுவீகாரம் பாவமுண்டாக்கத்தக்கதா யிருந்தாலும் செல்லுமென்றே தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 2 அ. 67). பிந்தி ஒரு கேஸில் ஸ்ட்ரேட் ஜட்ஜியவர்களாலும் மாமூட் ஜட்ஜியவர்களாலும் இந்த தீர்மானம் சந்தேகப்படப்பட்டது. (இ. லா. ரி. 12 அ. 33—37). ஆனால் பிறகு ஒருகேஸில் அலஹாபாத் ஐகோர்ட்டார் ஏகபுத்திர சுவீகாரம் செல்லுமென்றே உருதிப்படுத்தினார்கள். (இ. லா. ரி. 14 அ. 67).

கலகத்தா தீர்ப்புகள்.

கலகத்தா ஐகோர்ட்டார் ஏகபுத்திர சுவீகாரம் செல்லமாட்டாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். (3 பங்காளா ஸதர்கோர்ட்டு தீர்ப்புகள், 232; 1 க. ஐ. 221; 10 ஸ. 347; இ. லா. ரி. 2 க. 365). ஒரே பிள்ளை யிருக்கையில் அவனை சுவீகாரம் கொடுக்க தகப்பன் அதிகாரமுள்ளவனல்ல வென்று கலகத்தா ஐகோர்ட்டில் ஜட்ஜியாயிருந்த துவாரகனாத மித்திரர் அபிப்பிராயம் தெரிவித்தார். சூத்திர ஜாதியார்களில் கூட ஏகபுத்திர சுவீகாரம் செல்லமாட்டாதென்று தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 3 க. 443).

ஒரு கேஸில் ஒரு தகப்பனுக்கு மூன்று பிள்ளைகளிருந்து அவர்களில் மூத்தவ னிறந்தபிறகு அவன் விதவை சுவீகாரம் செய்துகொண்டாள். சுவீகாரபேர னிருப்பதால் ஜீவித்திருக்கிற இரண்டு பிள்ளைகளையும் சுவீகாரம் கொடுக்கலாமென்று கலகத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 17 க. 518, 536).

பம்பாய் தீர்ப்புகள்.

முந்தி சில கேசுகளில் ஏகபுத்திர சுவீகாரம் செல்லுமென்று பம்பாய் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். ஒறு கேசில் ஒருவனுக் கிறண்டு பிள்ளைகளிருந்து இரண்டு பேர்களையும் சுவீகாரம் கொடுத்த பொழுது, பாவமா யிருந்தாலும் சுவீகாரங்கள் செல்லுமென்று தீர்மானித்தார்கள். (2 பாறெ

டெல் ரிபோர்ட்டுகள் 75; 7 பம். ஐ. அபண்டிக்ஸ் 26; 4 பம் ஐ. 191.) ஆனால், ஏகபுத்திர சுவீகாரம் செல்லாதென்றே இதுவரையில் தீர்ப்புகள் செய்யப்பட்டு 1889 ௵த்தில் ஒரு கேசில் பொம்பாய் ஐகோர்ட்டுபுல்பெஞ்சில் ஏகபுத்திர சுவீகாரம் செல்லாதென்றும் செய்துகொள்ளப்பட்டால் ரத்தாக போய்விடுமென்றும் தெளிவாய் ஸ்திரப்படுத்தப்படிருக்கிறது. இ. லா. ரி. 14 பம். 249).

87. துவியாமுஷியாயண ரூபமாக நடத்தப்பட்ட ஏகபுத்திர சுவீகாரம் எங்கேயும் செல்லுமென்று அநேகம் தீர்ப்புகள் செய்யப் பட்டிருக்கின்றன. (2 பங்காளா ஸதர்கோர்ட்டு தீர்ப்புகள், 189; 1851 ௵த்திய மதிராஸ் தீர்ப்புகள் 234; 13 மூ. இ. 101; 1 ம. ஐ. 57; இ. லா. ரி. 3. க 587).

துவியாமுஷியாயண சுவீகாரம்.

ஒரேபிள்ளை யிருக்கையில் அவனை வேறு ஒருவனுக்கு சுவீககாரம் கொடுக்கும்போது கொடுக்கும் தகப்பனுக்கும் வாங்கிக்கொள்ளும் தகப்பனுக்கும் இரண்டு பெயர்களுக்கும் அவனே பிள்ளையாக இருந்து உத்திகிரியைகளை நடத்துகிறது என்று ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டால் அப்படிப்பட்ட சுவீகார பிள்ளை துவியாமுஷியாயணன் - என்றால் இரண்டு தகப்பன்களுக்கு பிள்ளை யென்று சொல்லப்படுவான்.

ஒருவன் தனக்குள்ள ஒரேபிள்ளையை தன்னுடைய சகோதிரக்கு சுவீகாரம் கொடுத்தால் இந்த ஏற்ப்பாடு அன்னியிலேயே அந்த பிள்ளை இரண்டு பெயர்களுக்கும் பிள்ளையாய் துவியாமுஷியாயணனாகிறான்.

பிள்ளை யில்லாதவர் இருவர்சேர்ந்து மற்றொருவன் பிள்ளையை துவியாமுஷியாயணனாக சுவீகாரம் செய்து கொள்ளும் வழக்கமில்லை. பிள்ளை யில்லாத இரண்டு சகோதிரர்கள்கூட அப்படி துவியாமுஷியாயணனாக சுவீகாரம் செய்துகொள்ளக்கூடாது. பிள்ளையில்லாத இரண்டு சகோதிரர்கள் வேறு ஒரு சகோதிரனுடைய பிள்ளையை, துவியாமுஷியாயணமாக சுவீகாரம் செய்துகொள்ளலாமென்று தத்தக மீமாம்சை கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், அது செல்லாதென்று, டபிள்யூ மெக்னடன் துரையவர்கள் பலமாக அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

ஒரே பிள்ளை யிருக்கையில் அவனை சுவீகாரம் கொடுக்கலாமென்று புருஷனனுமதி யிருந்தால் ஒழிய அவர் இறந்த பிறகு துவி

யாமுஷியாயண ரூபமாகக்கூட சுவீகாரம் கொடுக்க விதவை பாத்தியமுள்ளவளாகமாட்டாளென்று பங்காளா பம்பாய் ஐகோர்ட்டார் அவர்களால் தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (4 பம். ஸ. 320; 12 பம். ஐ. 364; இ. லா. ரி. 6 பம். 524) 77-வது பேருவை பார்க்க வேண்டியது.

(4.) புத்திர சுவீகாரத்துக்கு முக்கியமான கர்மங்கள்.

---

88. சுவீகாரம் நிறைவேறுவதர்க்கு கொடுப்பது வாங்கிக் கொள்வது இந்த இரண்டும் அவசியகம். அதாவது சுவீகாரம் கொடுக்க பாத்தியமுள்ளவன் கைமேலாக பிள்ளை தானம் செய்யப்பட்டு சுவீகாரம் செய்துகொள்ள யோக்கியதை யுள்ளவனால் வாங்கிக்கொள்ளப்பட வேண்டியது. கோலம்போட்டு கலசங்கள்வைத்து மந்திரங்கள் சொல்லி முடிந்த பிறகு சுவீகாரம் செய்துகொள்ளுகிறவன் சுவீகாரம் கொடுக்கிறவனிடத்தில் போய் பிள்ளையைத் தனக்கு சுவீகாரம் கொடுக்கவேணுமென்று கேட்க அவன் கொடுத்தேன் என்று சொல்லவேண்டியது. பிறகு சுவீகாரம் செய்துகொள்ளுகிறவன்—“நான் உன்னை தானம் வாங்கி கொண்டேன். சாஸ்திரப்படிக்குள்ள மதாசாரங்கள் நடத்துவதர்க்காகவும் என்னுடைய வம்ச விருத்திக்காகவும் பெத்துக் கொண்டேன்” என்கிற வார்த்தைகளுடன் அந்த பிள்ளையை வாங்கிக்கொள்ளவேணும். இப்படி, தானபரிகிறஹ விதாயகங்களை பவுதாயனர் விவரித்திருக்கிறார். ஆனால், இந்த தானபரிகிறஹ விஷயமாக அந்தந்த தேசங்களில் எந்த மார்க்கங்கள் வழக்கங்களிருக்கின்றனவோ அந்த பிரகாரம் அவைகள் நடத்தப்பட்டால் போதும்-என்று இப்போழுது தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (இ. லா. ரி. 6 க. 381; இ. லா. ரி. 11 ம. 5; இ. லா. ரி. 13 ம. 214).

தானம், பரிகிரஹம்.

தான பரிகிறஹம் இரண்டு மில்லாவிட்டால் சுவீகாரம் ஏற்படமாட்டாது. (இ. லா. ரி. 6 க. 381; இ. லா. ரி 13 ம 214; இ. லா. ரி. 19 க 452). மேலும், தானமில்லாமல் பரிகிறஹம் செல்லமாட்டாது. இளம்வயதுமுதல் வளர்க்கப்பட்ட பிள்ளைகூட தான பரிகிறஹம் இரண்டுமில்லாவிட்டால் சுவீகாரப்பிள்ளையாக மாட்டான். பிள்ளையை சுவீகாரம் கொடுக்கிரதாகவும் எடுத்துக்கொள்ளுகிறதாகவும் கடிதாசிகள் மாத்திரம் எழுதிக்கொள்ளப்பட்டு தான பரிகிறஹகம்

நடக்காவிட்டால் சுவீகாரம் ஏற்பட மாட்டாது. (2 க. ஐ. 279; இ. லா. ரி. 6 க. 381). கைமேல் சுவிகாரம் கொடுப்பதும் வாங்கிக் கொள்வது மவசியகம்.

தத்த ஹோமம்.

89. எல்லா ஜாதியார்களிலும் சுவிகாரம் நிறைவேறுவதற்கு தத்தஹோமம் அவசியமென்று தத்தக மீமாம்ஸை, தத்தக சந்திரிகை முதலியகிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு விரோதமாக இப்போது தீர்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

சூத்திரர்கள்.

சூத்திர ஜாதியார்களில்கூட சுவிகாரத்துக்கு தத்தஹோமம் அவசியமென்று முன்காலத்தில் தீர்ப்புகள் செய்யப்பட்டிருந்தன. (4 க. ஐ. 162; 5 க ஐ. 366; 7 க. ஐ. 1). ஆனால், இப்போது அந்த தீர்ப்புகளை ரத்துசெய்து சூத்திரஜாதியார்களில் சுவிகாரத்துக்கு தான பரிகிறஹம் இந்த இரண்டு மாத்திரமே அவசியமென்றும் தத்த ஹோமமாவது வேறு எவ்வித மான கர்மங்களாவது கிறியைகளாவது அவசியகமில்லை யென்றும் கல்கத்தா ஐகோர்ட்டு புல்பெஞ்சார் தீர்ப்புகள் செய்திருக்கிறார்கள். (13 க. ஐ. 401). இந்த தீர்ப்பை பிறிவிகவுன்சிலார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். (இ. லா. ரி. 5 க. 770; இ. லா. ரி. 6 க. 381). மதிறாஸ் ஐகோர்ட்டார்கூட அப்படியே தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 5 ம 358).

சூத்திர ஜாதியார்களில் சுவிகாரம் நிறைவேறுவதற்கு தான பரிகிரஹங்கள்மட்டும் முக்கியமாய் தத்தஹோமமும் மந்திரங்களும் அனுவசியகமாக இருந்தபோதிலும் அந்த தான பரிகிரஹங்கள் அந்தந்த தேசங்களில் வழக்கத்திலிருக்கிற மார்க்கங்களின்படி நடத்தப்படவேண்டியது. அதாவது ஹோமம் முதலிய கிறியைகள் செய்து தான பரிகிரஹங்கள் நடத்துகிற வழக்கமுள்ள தேசங்களில் வெறுந் தான பரிகிரஹங்கள் செல்லமாட்டா. (இ. லா. ரி. 6 க. 381; இ. லா. ரி. 11 ம 5; இ. லா. ரி. 13 ம. 214).

பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள்.

90. பிராம்ம க்ஷத்திரிய வைசிய ஜாதிகளில் தத்தஹோமத்தின் அவசியகத்தைக் குறித்து முன்காலத்தில் கொஞ்சம்வரையில் அபிப்பிராயபேதம் உண்டாயிருந்தது. பிராமணர்களில்கூட தத்த ஹோமம்வேண்டுவதில்லையென்று மதிராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள்.

(4 ம. ஐ. 165; இ. லா. ரி. 6 ம. 20). ஆனால், பிந்தி இந்த தீர்மானம் சம்சயப்படப்பட்டு (இ. லா. ரி. 7 ம. 548; இ. லா. ரி. 11 ம. 5; இ. லா. ரி. 13 ம. 214). சுவீகாரபிள்ளை ஸகோத்திரனு யிருக்கும்போதும் பெண்ணின் பிள்ளையாக யிருக்கும்போதுந் தவிற மைத்த விஷயங்களில் பிறம்ம க்ஷத்திரிய வைசிய ஜாதியார்களுக்குள் சுவீகாரத்துக்கு தத்த ஹோமம் அவசியமென்றே இப்பொழுது நாலு ஐகோர்ட்டாரவர்களாலும் சித்தாந்தப்படுத்தி யிருப்பதாகக் காணப்படுகிறது; (இ. லா. ரி. 11 ம. 5; இ. லா. ரி. 13 ம. 214; இ. லா. ரி. 5 க 770; இ. லா. ரி. 6 க. 381; 5 பம். ஐ. 356; 6 பம். ஐ. 219; 16 ஐ. 179 2. பாரொ. 75, 87; இ. லா. ரி. 11 பம். 381; இ. லா. ரி. 6 அ. 276). மதருஸ் தீர்ப்புகளைபார்த்தால் பிராமணர்களுக்கு மட்டில் தத்தஹோமம் அவசியமென்றும் மைத்த மூன்று ஜாதியார்களுக்கு வேண்டுவதில்லை யென்று சொல்லுகிறதற்கு கொஞ்சம் ஆதாரம் காணப்படுகிறது.

தீட்டில் சுவீகாரம்.

91. வேதமந்திரங்கள் சொல்லி ஹோமம் முதலிய கிறியைகள் செய்ய யோக்கியதை இருக்காதாகையால், தீட்டு நாள்களில் பிறம்ம க்ஷத்திரிய வைசிய ஜாதியார்கள் சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. (9 மூ. இ. அ. 506). ஒரு கேஸில் ஒரு வைசியஜாதி புருஷனுடைய பிரேதம் வீட்டில் கிடக்கையில் அவனுடைய விதவை சுவீகாரம் செய்துகொண்டாள். அந்த சுவீகாரம் செல்லாதென்று மதிருஸ் ஐகோர்ட்டார் அபிப்பிராயப் பட்டார். (இ. லா. ரி. 13 ம. 222).

சூத்திரஜாதியார்களில் சுவீகாரத்துக்கு மந்திர பூர்வமாக ஒரு கர்மமும் அவசியமில்லாததால் தீட்டுகாலத்தில் கூட சுவீகாரம் செய்துகொள்ளலாமென்று இதனால் ஏற்படுகிறது.

---

(5) & (6.) புத்திர சுவீகாரத்தை றத்து செய்வது, ஸ்தாபிக்கிறது.

சுவீகாரம் எப்பொழுது செல்லும்? எப்பொழுது செல்லாது?

92. இதுவரையில் இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்ட படிக்கி சுவீகராம் செய்துகொள்ள யோக்கியதை யில்லாதவர் செய்துகொண்ட சுவீகாரங்களும், சுவீகாரம் கொடுக்க யோக்கியதை யில்லாதவர்கள் கொடுத்த சுவீகாரங்களும், சுவீகாரம் செய்துகொள்ளக் கூடாத பிள்ளைகளின் சுவீகாரங்களும், சாஸ்திரங்க

ளில் சொல்லப்பட்ட முக்கியமான விதிகளை விட்டுவிட்டு செய்து கொள்ளப்பட்ட சுவீகாரங்களும் செல்லமாட்டா. சாஸ்திரங்களிலுள்ள விதிகளில் சிலது அவசியமானவைகளாகவும் சிலது நன்மையை உத்தேசித்துச் மாத்திரம் சொல்லப்பட்டவைகளாகவு மிருக்கின்றன. இந்த இரண்டாவது வகுப்பு விதிகளைமீறி நடத்தினால் சுவீகாரம் றத்தாய் போகமாட்டாது. (12 பம். ஐ. 398; 10 பம். 86; இ. லா. ரி. 3 க. 601). இது எப்படியென்றால்—ஸகோத்திரனை பிள்ளை யிருந்தால் அவனையே சுவீகாரம் செய்துகொள்ள வேணுமென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் மைத்தவர்களை சுவீகாரம் செய்துகொண்டால் செல்லும். (இ. லா. ரி. 3 க. 587). அப்படியே, பிள்ளை 5-வயது முடிவுக்கு முந்தியே சுவீகாரம் செய்துகொள்ள வேணுமென்று தத்தக மீமாம்ஸையில் சொல்லப்பட் டிருந்தாலும் அந்த வயதானதர்க்கு பிறகு செய்துகொண்ட சுவீகாரங்கள்கூட செல்லும். (இ. லா. ரி. 9 அ. 254).

சுவீகாரத்தைப்பற்றிய — பிருதுக்கு காலாவதி ஸ்டாம்பு.

93. எக்காரணத்தாலாவது சுவீகாரம் செல்லாமலிருந்தால் அந்த சுவீகாரசங்கதி வாதிக்கு தெரிந்ததுமுதல் 6 வருஷத்துகுள் தாவாசெய்து அதை றத்துசெய்து கொள்ளலாம். சுவீகாரமே நடக்கவில்லை யென்று தீர்ப்பு பெறுவதர்க்குக் கூட 6 வருஷத்துகுள்ளாகவே தாவாசெய்யவேண்டும். (1877 வருஷத்திய 15-வது நெ. லிமிடேஷன் ஆக்ட் 2-வது ஷிடியூல் 118-வது ஆர்ட்டிகல்). சுவீகாரத்தை உருதிபடுத்த தாவா சுவீகார பிள்ளையின் பாத்தியத்துக்கு கெடுதி யுண்டான தினமுதல் 6 வருஷத்துக்குள் கொடுக்க வேண்டும். (மேல்சொல்லிய ஆக்ட் - 119 வது ஆர்ட்டிகல்). இந்த வியாஜியங்களுக்கு எல்லாத்துக்கும் ஸ்டாம்பு ரூபா 10.

சுவிகாரத்தை உருதி படுத்திய தீர்ப்பு

94. எந்த தாவாவிலாவது சுவீகாரத்தை ஸதாபித்து கோர்ட்டார் தீர்ப்பு செய்தால் அந்ததாவாவுக்கு கட்சிக்காரருக இருந்தவர்களும் அவர்கள் மூலமாய் பாத்திய முண்டானவர்களும் மட்டும் அந்த தீர்ப்புக்கு கட்டுப்பட்டவர்களேதவிர மைத்தவர்கள் கட்டுப்பட்டவர்களல்ல ஆகையால் பிறகு ஏதாவது விவகாற முண்டானால் மைத்தவர்கள் சுவீகாறத்தை ஒப்புக்கொள்ளாமல் தகுந்த ருஜூவிட்டு றெத்து செய்யலாம் (2 ம. ஐ. 276; 3 ம. ஐ. 217; 14 மூ. இ. அ. 367; இ. லா. ரி. 1 க. 289).

பந்துக்கள் நடவடிக்கை காலாவதி.

95. சுவீகாரம் ரொம்ப காலத்துக்கு முந்தி நடந்திருந்து வெகுவருஷங்களாய் பந்து முதலியவர்களால் சுவீகார புத்திறன் பாத்தியம் ஆட்சேபிக்கப்படாமலிருக்கையில் அவனுடைய சுவீகாரம் நியாயமாகவே நடந்ததென்று கோர்ட்டார் ஊகிப்பார்கள் (14 மூ. இ. அ. 67; 7 பம். ஐ. அபெம்டிக்ஸ், 33). ஆனால் எவ்வளவு வருஷமாய் பந்து முதலிய வர்களால் சுவிகாரபுத்திரனாக பாவிக்கபட்டிருந்தாலும் சுவீகாரத்துக்கு யோக்கியனாக இல்லாத பிள்ளை - அதாவது பிராம்மணர்களில் அக்கா தங்கை பிள்ளை இந்தமாதிரி - சுவீகாரபிள்ளையாகமாட்டான். ஆகையால் ஆஸ்தி முதலிய விஷங்களில் அவாள் பாத்தியத்தை ஸ்தாபித்துக்கொள்ள அவன் தாவாசெய்தால் அது செல்லாது. ஆனால் அவனை சுவீகாரபிள்ளையாக ஒப்புக்கொண்டு நடந்துவந்த பந்துகளுக்கு அவன் சுவீகாரத்தை ஆட்சேபித்து அவன் சுவாதீனத்திலிருக்கும் சொத்துக்களை பிடிங்கிக்கொள்ளுகிற பாத்தியம் அவர்கள் நடவடிக்கைனாலாவது காலாவதி தோஷத்தினாலாவது தப்பிப்போய்விடலாம். இது எப்படி வென்றால்.

(1.) "ஏ" என்பவன் "பீ" என்கிற பிள்ளையை ஒருவனுடைய சுவிகாரபிள்ளையாக ஒப்புக்கொண்டு அவனை யநேகவிதமாய் உத்ஸாஹப்படுத்தி சுவிகாரத்தால் அவனுக்கு சேரவேண்டிய சொத்துக்களை யவன் அனுபவித்துக்கொள்ளும்படியும் ஜனக குடும்பத்திலுள்ள சகல பாத்தியங்களையும் அவனிழந்துபோகும்படியும் செய்தான். பிறகு "பீ" யென்பவனுடைய சுவீகாரத்தை "ஏ" என்பவன் ஆட்சேபிக்கக்கூடாது. (2 ம. ஐ. 114, 270, 428. எவிடன்ஸ் ஆக்ட்டு 115 வது செக்ஷனை பார்).

(2.) "ஏ" என்ற ஒரு விதவையுடைய அனுபவத்திலிருந்து சொத்துக்கு "பீ" என்பவன் அனந்தர வார்சு பாத்தியமுள்ளவனாயிருந்தான். "பீ" என்பவன் "ஏ" என்ற விதவையை உத்ஸாகப்படுத்தி "ஸீ" என்ற பப்பனை அவள் சுவிகாரம் செய்துகொள்ளும்படி செய்தான். "ஸீ" யுடைய சுவீகாரம் செல்லத்தகாததா யிருந்தாலும் அதை ரத்துசெய்ய தாவா கொண்டுவந்து அவனுடைய சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ள "பீ" என்பவனுக்கு பாத்தியமில்லை. (7 ம. ஐ. 250; 11 பம். ஐ. 190; இ. லா. ரி. 11 பம். 381, 396; இ. லா. ரி. 2 அ. 366). அப்படி தாவாகொடுப்பது அந்நியாயமென்று பிறிவீ கவுன்ஸிலார்கூட தீர்மானித்தார்கள் (14 மூ. இ. அ. 77).

(3.) சுவீகாரம் சாஸ்திரப்படிக்குள்ள தல்லவென்று தனக்குத் தெரிந்திருந்தும் சாஸ்திரீயந்தான் என்று சுவீகாரப்பிள்ளை முதலானவர்கள் புத்தி பூர்வமாய் நம்பி பிறவிருத்தித்திருந்தால்தான் மேல்கண்ட 2-வது உதாஹரணத்தில் சொல்லியபிரகாரம் தாவா செய்யும்படியான பாத்தியம் தப்பிப்போகுமே யன்றி எல்லாருக்கும் தெரியும்படி அசாஸ்திரியமான சுவீகாரத்தை சாஸ்திரீயமென்றும் செல்லத்தகுந்ததென்றும் பிசகாய் நம்பி நடத்தப்பட்ட விஷயத்தில் அந்த பாத்தியம் தப்பிப்போகாதென்றும் மதிருஸ் ஐகோட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 7 ம. 3).

96. ருசு பளு. சுவீகாரம் செய்துகொள்ளப்பட்டதென்று வாதிக்கிறவர்களே அதை ருசுப்படுத்த பளுவை வகித்தார்கள். (3 க. ஐ. 146). சுவீகாரம் அநேகமாய் செய்துகொள்ளப்பட்டிருக்கலாமா செய்துகொள்ளப்பட்டிருக்க மாட்டாதா என்னும் விஷயத்தை அந்தந்த சந்தர்ப்பங்களை வைத்துக்கொண்டு கோர்ட்டார் கொஞ்சம்வரையில ஊகிப்பார்கள். சுவீகாரம் செய்துக்கொண்டவன் கிழவன் ரோகமுடையவன், சொத்துடையவன், தாயாதிகளிடத்தில் அதிக பிறியமில்லாதவன், பெண்ஜாதியிடத்தில் அதிக விசுவாஸமுடையவன் - இப்படிப்பட்ட நிலமையில் சுவீகாரம் அநேகமாய் நடந்திருக்கலாமென்று கோர்ட்டார் ஊகிப்பார்கள். (4 மூ. இ. அ. 414; 7 மூ. இ. அ. 64; இ. லா. ரி. 1 ம. 69; 15 ஸ. 548). சுவீகாரம் செய்துக்கொண்டவன் நல்ல வயிதிலுள்ளவன், சந்தானம் உண்டாக்கத்தக்கவன், ஏழை, இப்படிப்பட்ட நிலமையில் சுவீகாரத்தை நம்ப கோர்ட்டார் கொஞ்சம் சந்தேகப்படுவார்கள். (2 பம். ஸ. 21). மேலும் சுவீகாரத்துக்கு எவ்விதமான பத்திரமாவது தஸ்தாவேஜியாவது பந்து முதலியவர்களைத் தாம்பூலம் வாங்கிக்கொள்ளக் கூப்பிடவாவது அவசியமில்லாமலிருந்தாலும் ஒருவருக்கும் தெரியாமல்படி ரஹஸியமாய் செய்துகொள்ளப்பட்டதாக சொல்லப்படும் சுவீகாரத்தை கோர்ட்டார் எளிதில் நம்பமாட்டார்கள். (1857 ஹூ மதிருஸ் தீர்ப்புகள் 53; 2 பம் 21). எந்த சந்தர்ப்பத்திலாவது சுவீகாரம் நடந்ததாக தெளிவாய் ருசுக்காணப்பட்டால்தான் கோர்ட்டார் அதை நம்புவார்கள்.

(7.) சுவீகாரத்தாலுண்டாகும் பயன்கள்.

ஜனககுடும்பத்திலுள்ள பாத்தியம் போகுதல்.

97. சுவீகாரத்தால் சுவீகாரபிள்ளைக்கு அவன் ஜனககுடும்பத்தில் சம்பந்தம்போய் மைத்த குடும்பத்தில் அவன் பிறந்ததுபோலவே சப்பந்தம் ஏற்படுகிறது. சுவீகாரத் தாய்த்தகப்பன்களே அவனுக்குப் போஷகர்களாகி விவாஹம் முதலிய காரியங்களைக் செய்ய வேண்டியவர்களாகிறார்கள். அவனும் அவர்களுக்குத்திரகிறயை செய்யும் பாத்தியதையை வகித்து அவர்களுடைய சொத்துக்கு பாத்தயஸ்தனாகிறான். ஜனககுடும்பத்தார்களுக்கு உத்திரகிரையை செய்யும் பாத்தியமாவது அவர்கள் ஆஸ்தி விஷயமாயுள்ள வார்சுபாத்தியமாவது அவனுக்கு நிற்காது. (1 ம. ஐ. 180). ரக்தசம்பந்தம் மட்டில் போககூடாததால் ஜநககுடும்பத்தோர்களில் நிஷேதிக்கப்பட்ட உரவுள்ளவர்களை சுவீகாரபுத்திரன் விவாஹம் செய்துகொள்ளவாவது சுவீகாரம் செய்துக்கொள்ளவாவது கூடாது. (1858 ஹூ மதிறாஸ் தீர்ப்புகள் 117).

துவியாமூஷியாயண ரூபமாய் சுவீகாரம் செய்துகொள்ளப்பட்ட சுவீகார புத்திரன் மட்டும் உபயகுடும்பங்களிலும் உத்திரகிரையைகள் நடத்த பாத்தியம் வகித்து உபய குடும்பத்திலுள்ள சொத்துக்கும் பாத்தியஸ்தனாக இருக்கிறான் துவியாமுஷியாயண ரூபமான சுவீகாரம் இக்காலத்தில் நடக்கிறதில்லையென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் அலகாபாத் சமீபமான இடங்களில் அப்படிப்பட்ட சுவீகாரங்கள் வழக்கத்தி லிருக்கிறதாகக் காணப்படுகிறது. மலயாளதேசத்தில் நம்பூதிரி பிராமணர்களில்கூட அப்படி சுவீகாரங்கள் நடக்கிரதாக தீர்மானங்கள் பண்ணப்பட்டிருக்கின்றன. (இ. லா. ரி. 11 ம. 167, 168).

சுவீகாரத்தை தள்ள.

98. கிரமமாக நடந்த சுவீகாரம் எக்காரணத்தாலாவது ரத்தாகமாட்டாது. சுவீகாரபிள்ளையாவது சுவீகாரம் செய்துகொண்ட தாயார் தகப்பன்களாவது சுவீகாரத்தைத் தள்ளிவிடுகிறதர்க்கு வழியில்லை. (இ. லா. ரி. 2 அ. 366). சுவீகாரத்தால் சுவீகாரகுடும்பத்தில் தனக்குண்டான பாத்தியத்தை சுவீகாரப்பிள்ளை தள்ளிவிடலாம். ஆனால் அப்படி செய்வதால் ஜனககுடும்பத்தில் முன் அவனுக்கிருந்து போனபாத்தியம் கொஞ்சங்கூடத் திரும்பி வரமாட்டாது. (2

பாரா. 656). சுவீகாரம் செய்துகொண்ட தாயாராவது தகப்பனுவது தான் செய்துகொண்ட சுவீகாரம் செல்லாதென்று ஒரு சந்தர்ப்பத்திலும் கட்சி சொல்லமுடியாது. (2 ம. ஐ. 114, 270, 428. எவிடன்ஸ் ஆக்ட்டு 115 வது செக்ஷன்).

சுவீகாரபிள்ளையின் வார்சு பாத்தியம்.

99. சுவீகாரம் செய்துக்கொண்ட தாய்தகப்பன்களுக்கும் அவர்களுக்கு சம்பந்தப்பட்ட பந்துக்களுக்கும் அவுறஸ புத்திறன் (அதாவது பெத்தபிள்ளை) எப்படியோ அப்படியே சுவீகாரபிள்ளை வார்சாக யிருக்கிறுன். இந்தவிஷயம் தர்மசாஸ்திரங்களில் சந்தேகமாக சொல்லப்பட்டிருக்குறபடியால் முன்காலத்தில் பலவிதமாக தீர்ப்புகள் செய்யப்பட்டு வந்தன. ஆனுல் இப்போது ஐகோர்ட்டார்கள் பிரிவீ கவுன்ஸிலார்கள்கூட சுவீகாரபிள்ளையின் வார்சு பாத்தியதையை முழுவதும் ஸ்திரப்படுத்தி யிருக்கிறுர்கள். சுவீகாரத் தகப்பன் - அவன் தகப்பன் (அதாவது பாட்டன்) - சுவீகாரத்தகப்பன் அண்ணன் தம்பிகள் (அதாவது பெறியதகப்பன் சிறியதகப்பன்) - இவர்கள் முதலியவர்களுக்கும் - சுவீகாரத் தாயார் அவள் தாய்தகப்பன் முதலியவர்கள், அதாவது மாதாமகி மாமன் முதலியவர்களுக்குக்கூட சுவீகாரப் பிள்ளை வாரசு பாத்தியமுள்ளவனுகிறுனென்று தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸபத்தினி மாதாவுக்கும் அவள் வம்சத்தார்களுக்கும்கூட சுவீகாரபிள்ளை வாரசாகலாம். (இ. லா. ரி. 6 க. 289; இ. லா. ரி. 5 க 615; 1 பம். ஸ. 209; 9 ஸ. 423; 1859 ஹ பம். ஸ. தீ. 1091; 3 ஸ. 49; இ. லா. ரி. 1 அ. 256; இ. லா. ரி. 6 க. 256; இ. லா. ரி. 10 க. 232; இ. லா. ரி. 9 க. 70.)

சுவீகாரப்புத்திரன்பிள்ளை பேரன் முதலியவர்கள் ஔரஸபுத்திரன் பிள்ளை பேரன் முதலியவர்கள் எப்படியோ அப்படியே பாவிக்கப்படவேண்டியவர்கள்.

ஔரஸபுத்திரன் பிறந்தால் சுவீகாரபிள்ளையின் பாகம்.

100. சுவீகாரம் செய்துகொண்ட பிறகு, சுவீகாரத் தாயார் தகப்பன்களுக்கு பிள்ளை பிறந்தால் இந்த ஔரஸபுத்திரனைக்காட்டிலும் சுவீகார புத்திரன் தாழ்ந்தவனுக எண்ணப்படுகிறுன். அந்த சந்தர்ப்பத்தில் சுவீகாரப்பிள்ளைக்குக் கொடுக்கவேண்டிய பாகத்தைக்குறித்து தர்மசாஸ்திரங்களில் வேறுவேருகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அந்தந்த பிறதேசங்களில்

வியாக்கியானம் செய்தவர்கள் வெவ்வேறு அர்த்தங்கள் சொன்னகாரணத்தால் இந்தவிஷயத்தை ஸ்திரப்படுத்தி யிருக்கும் தீர்ப்புகள் அந்தந்த பிறசிடென்சிகளில் வேறுபட்டிருக்கின்றன.

பங்காளதேசம்.

பங்காளதேசத்தில் சுவீகாரப்பிள்ளைக்கு ஒருபாகம், பெத்தபிள்ளைக்கு 2 பாகம் - இப்படி ஆஸ்தி வீதிக்கப்படுகிறது. அதாவது ஒரேபிள்ளை பிரந்தால் சொத்தை 3 பாகம் செய்து, 1 பாகம் சுவீகாரபிள்ளைக்கும் பெற்ற பிள்ளைக்கு 2 பாகமுமாக கொடுக்கப்படுகிறது. இரண்டு பிள்ளைகள் பிறந்தால் ஆஸ்தியை (1, 2, 2) 5 பாகம் செய்து, ஒரு பாகம் சுவீகாரபிள்ளைக்கும் இரண்டிரண்டு பாகங்கள் பெத்த பிள்ளைகளுக்கும் கொடுக்கப்படுகிறது. 3 பிள்ளைகள் உண்டானால் சொத்தை (1,2,2, 2) 7 பாகமாய் பாகிக்கப்படுகிறது. (9 ஸ. 423).

காசீருஜியம்.

காசீருஜிபத்தில் சுவீகாரபிள்ளைக்கு 1 பாகம், பெத்தபிள்ளைக்கு 3 பாகம் - இவ்விதமாய் சொத்து பிரிக்கபடுகிறது. ஒறேபெத்தபிள்ளை யிருந்தால் சொத்தில் (1, 3) 4 ல் 1 பாகம், இறண்டு பெத்தபிள்ளை யுண்டானால் (1, 3, 3) 7 ல் 1 பாகம், 3 பெத்தபிள்ளை யுண்டானால் (1, 3, 3, 3) 10 ல் 1 பாகம் இவ்விதமாய் சுவீகாரப்பிள்ளைக்குச்கும் சேறும் (9 ஸ 423).

மதிருஸ் பிறஸிடென்ஸி.

மதிருஸ் பிரெஸிடென்ஸியில் சுவீகாரபிள்ளைக்கு 1 பாகம் பெத்தபிள்ளைக்கு 4 பாகம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஒரே பெத்தபிள்ளை யானல் (1 - 4) 5 ல் 1 பாகம், இரண்டானல் (1, 4, 4) 9 ல். 1 பாகம், மூன்ஞல் (1, 4, 4, 4) 13 ல் 1 பாகம் - இவ்விதமாய் சுவீகாரப்பிள்ளைக்குச் சேறும். (1 ம. ஐ. 45).

பம்பாய் பிரஸிடென்ஸி.

பம்பாய் பிரஸிடென்ஸியில்கூட மதிருஸ் பிரஸிடன்ஸியில் போலவே சுவீகாரப்பிள்ளை பெத்தபிள்ளை பாகங்கள் ஏற்ப்பட்டிருக்கின்றன. (வெ. பு. 373).

ஜயின மதஸ்தர்களில் ஔரஸபுத்திறன் பிறந்தால் சுவீகார பிள்ளைக்கு எல்லா சொத்திலும் 4 ல் 1 பாகம் சேறுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 16 பம். 347.)

குலாசாரம்.

சிலசில ஜாதிகளில் சென்றுகொண்டிருக்கிற குலாசாரங்களின்படி ஔரஸபுத்திறன் பிறந்தால் சுவீகாரபிள்ளைக்கு 2 ல் ஒருபாகம் 3 ல் 1 பாகம் 4 ல் 1 பாகம், சில இடங்களில் சுவீகார தகப்பனுக்கு

இஷ்டமான கொஞ்சபாகம்-இப்படி கிடைக்கும். மதிருஸ் பிறஸிடென்ஸியில் சூத்திர ஜாதியார்களில் சுவிகாரப்பிள்ளை பெத்தபிள்ளை யோடுகூட ஸமானபாகம் பெற்றுக்கொள்ளக் கூடுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1 இ. லா. ரி. 7 ம. 253).

101. தகப்பன் இறந்தபிறகு பெத்தபிள்ளையும் சுவிகார பிள்ளையும் பிரித்துக்கொள்ளாமலிருந்து பெத்த பிள்ளை சந்ததியன்னியிலிருந்தால் அவ்விருவர்களும் ஒரேதாய் வயத்தில் பிறந்தவர் போல எல்லாசொத்தும் சுவிகாரப் பிள்ளைக்குச் சேருமென்று மதருஸ் ஐகோர்ட்டார் தீர்மானிததிருக்கிறார்கள். (1. ம. ஐ. 49). இந்த சந்தர்பத்தில் பங்காளா சீமையில் பெத்தப்பிள்ளையின் பாகம் அவன் விதவை பெண் முதலியவர்களுக்குச் சேறுமேதவிர சுவிகாரப் பிள்ளைக்கிச் சேறமாட்டாது.

ஔரஸ னிறந்தபிறகு சுவீகார பிள்ளையின் பாத்தியம்.

102. துவியாமுஷியான மார்க்கமாய் சுவிகாரம் செய்து கொள்ளப்பட்ட பிள்ளை இரண்டுதாயார் தகப்பன்களுடைய சொத்துக்கும் பாத்தியஸ்தனாயிருக்கிறான் இப்படிப்பட்டவனுடைய ஜனக தகப்பனுக்கு வேறு ஒருபிள்ளை பிறந்தால் துவியா முஷியானனுக்கு அவன் பாகத்தில் பாதிகிடைக்கும் அதாவது சொத்தை (1, 2) மூன்று பாகமாகப்பிரித்து 1 பாகம் துவியாமுஷியாயணனுக்குக் கொடுக்கப்படும். 2 பிள்ளைகள் பிறந்தால் துவியாமுஷியாயணனுக்கு (1, 2, 2) 5 ல் 1 பாகம் கிடைக்கும் இப்படி தத்தக சந்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது.

துவியாமுஷியாயணன்-ஔரஸன்.

துவியமுஷியாயணனுடைய சுவிகாரத் தகப்பனுக்கு ஔரஸ பிள்ளை பிறந்தால் சுவிகாரப்பிள்ளைக்கு சாதாறணமாய் கிடைக்கும் பாகத்தில் பாதி துவியாமுஷியாயணனுக்குக் கிடைக்கும் அதாவது ஒரே ஔரஸபுத்திர னிருந்தால் பங்காளா தேசத்தில் 6 ல் 1 பாகமும் காசீருஜிபத்தில் 8 ல் 1 பாகமும் மதிருஸ் பம்பாய் ராஜியங்களில் 10ல் 1 பாகமும் துவியா முஷியாணனுக்குக் சேறும் இப்படி தத்தசந்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது.

உபய குடும்பங்களிலும் ஔரஸபுத்திர னுண்டானல் துவியாமுஷியாயணனுக்கு ஜனக குடும்பத்தில் பாகமே யில்லையென்றும், சுவீகார குடும்பத்திலுள்ள பாகம் அதாவது அந்தந்த பிரதேசங்களில்

சாதாரணமாக சுவீகாரபுத்திரனுக்கு ஏற்படுத்தப்பட்ட பாகம் அவனுக்கு சேருமென்றும் மயூககிரந்தம் சொல்லுகிறது.

103. சுவீகாராதிகாரம் பெத்த விதவை இவ்வளவு காலத்துக்குள் சுவீகாரம் செய்துகொள்ளவேண்டியதென்கிற கட்டாயமில்லையென்று மேல் 63-வது பாருவில் சொல்லியிருக்கிறோம். அவள் சுவீகாரம் செய்துகொள்ளுகிற வரையில் அவள் புருஷனுடைய சொத்து ஒருவரையும் சேருமலிருக்கமாட்டாது.

சுவீகாரப்பிள்ளைக்கு சொத்துச் சேர.

புருஷ னிறந்த நிமிஷமே அவனுக்கு சமீபவார்சு யாரோ அவருக்குச் சொத்துச் சேர்ந்துவிடும். விதவைக்கு சுவீகாராதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் சுவீகாரம் நடக்கும் வரையில் அப்படி அதிகாரமில்லாதது போலவே எண்ணப்படும். சுவிகாரம் செய்துகொள்ளப்பட்ட பிறகு அந்த சொத்து முன்வார்சுனுடைய சுவிதானத்திலிருந்து தப்பி சுவீகாரபிள்ளைக்கு சேறும். ஆனால் அந்த சொத்து சுவீகாராதிகாரம் கொடுத்தவனுடைய வார்சுகளுக்கு முந்திச்சேர்ந்து, பிறகு விதவைக்குச் சேரக்கூடாதபடி அவ்வார்சுகளுடைய வார்சுகளின் சுவாதீனத்துக்கு போய்விட்டால், அதர்க்குப்பிறகு சுவீகாரம் செய்துகொள்ளப்பட்ட சுவிகாரபிள்ளைக்கு சேரமாட்டாது. (10 மூ. இ. அ. 279; இ. லா. ரி. 10 ம. 205; இ. லா. ரி. 17 க. 122; மேல் 63 வது பாருவைப்பார்). உதாஹரணங்கள்—

(1.) புருஷனுடைய சொத்து விதவைக்கே வாருசுக் கிரமமாக சேர்ந்தபட்சத்தில் சுவீகாரம் நடந்தவுடனேயே அவள் பாத்தியம் போய் அந்தசொத்து சுவீகாரபுத்திரனைச் சேறும். (3 மூ. இ. அ. 229; இ. லா. ரி. 1 ம. 174; இ. லா. ரி. 7 பம். 225; இ. லா. ரி. 11 பம். 381, 397). இறந்துபோனவனுக்கு இரண்டுமூன்று விதவைகளிருந்து அவர்களுக்கு அவன் சொத்து சேர்ந்தபட்சத்தில் அவர்களில் சுவிகாராதீகாரம் பெத்தவள் சுவிகாரம் செய்துகொண்ட வுடனே அவர்களெல்லாருடைய பாத்தியம் போய் அந்த சொத்து சுவீகாரபுத்திரனைச் சேறும். (5 பம். ஐ. 181, 192).

(2.) மதிருஸ் பிறஸிடென்ஸியில் "ஏ" "பீ" என்று இரண்டு அவிபக்த சகோதிரர்களில் "ஏ" என்பவன் தன் பெண்ஜாதிக்கு சுவீகாராதிகாரம் கொடுத்துவிட்டு இறந்தான். சுவீகாரம் செய்துகொள்ளுகிரதர்க்கு முன் எல்லாசொத்தும் "பீ" என்பவனுடைய சுவாதீனத்துக்குப் போய் "ஏ" உடைய விதவைக்கு ஜீவனும்ச

பாத்தியம் மட்டில் இருந்தது ஆனால் அவள் சுவீகாரம் செய்துகொண்ட வுடனே சுவீகாரபுத்திரன் "பி" என்பவனோடுகூட எல்லா சொத்துக்கும் ஜாயிண்டு பாத்தியமுள்ளவனாக ஆய்விடுகிறான்.

(3.) இந்த 2-வது உதாஹரணத்தில் "ஏ" உடைய விதவை சுவீகாரம் செய்துகொள்ளுகிறதற்கு முந்தி "பி" என்பவ னிறந்துபோய் அவன் சொத்தெல்லாம் அவன் பிள்ளைக்காவது பெண்ஜாதிக்காவது எந்த தூர பந்துவுக்காவது சேர்ந்துபோய்விட்டால் அதற்குப் பிறகு "ஏ" யுடைய விதவை சுவீகாரம் செய்துகொண்டால் அந்த சுவீகாரபிள்ளைக்கு சொத்துக் கிடைக்கமாட்டாது. (8 பம். ஐ. 114; இ. லா. ரி. 6 பம். 498; 505; இ. லா. ரி. 15 பம். 565; இ. லா. ரி. 2 க. 295; இ. லா. ரி. 7 க. 298; இ. லா. ரி. 12 க 18). அந்த சந்தர்ப்பத்தில் செய்துக்கொள்ளப்பட்ட சுவீகாரங்கூட செல்லாது. (மேல 63-வது பாருவைப்பார்).

(4.) மதிறாஸ் பிரஸிடென்ஸியில ஒரு பிறிக்கக்கூடாத ஜமீனில் அரசாண்டுகொண்டிருந்த "ஏ" என்பவன் தன் விதவைக்கு சுவீகாருதிகாரம் கொடுத்துவிட்டு இறந்தான். அவன் சுவீகாரம் செய்துகொள்வதற்கு முந்தி அந்த ஜமீன் "ஏ" என்பவனுடைய அவிபக்த சகோதிரன் "பி" என்வனுடைய சுவாதீனத்தில் சேர்ந்துவிட்டது. அப்படிச் சேர்ந்தாலும், "ஏ" என்பவன் விதவை சுவீகாரம் செய்துக்கொண்டவுடனே சுவீகாரபிள்ளை ஜமீனுக்கு பாத்தியஸ்தனாகிறான். (இ. லா. ரி. ம. 69).

(5.) மதிறாஸ் பிரஸிடென்ஸியில் "ஏ" என்று ஒரு சொத்துக்காரன் விவாஹம் செய்துகொள்ளுகிறதற்கு முந்தியே இறந்தான் அக்காலத்தில் அவனுடைய ஸபத்தினி மாதா ஜீவித்திருந்தாலும் அவனுக்கு சாஸ்த்திரப்படி வாரசு பாத்தியமில்லாததால் அவன் சொத்து ஒரு தூர தாயாதியின் சுவாதீனத்துக்குப் போய்விட்டது. அதற்கு பிறகு "ஏ" யென்பவன் ஸபத்தினி மாதா தன்புருஷன் கொடுத்த சுவீகாராதிகாரத்தை வைத்துக்கொண்டு சுவீகாரம் செய்துகொண்டாள். சுவீகாரபிள்ளைக்குச் சொத்து சேருதென்று மதிறாஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (8 ம. ஐ. 108). இப்படியே கலகத்தா ஐகோர்ட்டாரும் பம்பாய் ஐகோர்ட்டாரும் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 12 க. 246; இ. லா. ரி. 9 பம். 94; இ. லா. ரி. 1. பம். 463).

(6.) மேல் சொல்லப்பட்ட 5-வது உதாஹரணத்தில் "ஏ" யென்பவ னிறந்தபோது அவன்பெத்த தாயார் உயிருடனிருந்தால் அவளுக்கு சாஸ்திரப்படி சொத்து சேறும். அதற்க்குப்பிறகு அவள் சுவிகாரம் செய்துகொண்டால் அந்த சொத்துக்கு சுவீகாரபுத்திரன் பாத்தியஸ்தனாவான். ("குண்டூர் கேஸ்" - இ. லா. ரி. 1 ம. 174).

104. சுவீகாரபிள்ளைக்குச் சேறும்படியான சொத்தில் அவனுடைய பாத்தியம் சுவீகாரம் செய்துகொள்ளபட்ட நாள்முதல் உண்டாகிறது. ஆகையால் அதற்க்கு முந்தி அந்தசொத்து சுவாதீனத்திலுள்ளவர்கள் கிறமமாக அதாவது தனக்கிருந்த பாத்தியதையை மீறாமல் அதின் விஷயமாய் நடத்தியிருந்த நடவடிக்கைகளை றெத்து செய்துகொள்ள சுவீகார பிள்ளைக்கு பாத்தியமில்லை. பாத்தியதையை மீறி செய்யப்பட்ட பறாதீனம் முதலிய நடவடிக்கைகளை சுவீகாரப்பிள்ளை றெத்து செய்து கொள்ளலாம். (1850 ஹு பம். ஸ. தீ. 533; 7 மூ. இ. அ. 169, 178; இ. லா. ரி. 5 க. 251; இ. லா. ரி. 5 பம். 630; 3 பம். ஸ 220, 367; 1856 ஹு பம். ஸ. 170; 1859 ஹு பம். ஸ. 421, 515; இ. லா. ரி. 4 ம. 160; 8 மூ. இ. அ. 443; இ. லா. ரி. 11 பம். 609, 614; 24 ஸ. 183; இ. லா. ரி. 2 க. 307; இ. லா. ரி. 16 க. 140).

சுவீகாரத்துக்கு முந்தி சொத்தைப்பத்தி நடந்த நடவடிக்கைகள்.

சுவிகாரப்பிள்ளை யேற்ப்படுவதற்க்கு முந்தி ஒரு ஜமீன்தார் சொத்து அவன் சிறியதகப்பன் சுவாதீனத்திலிருந்து சுவீகாரத்துக்குப் பிறகு சுவீகார பிள்ளைக்குச் சேர்ந்தது. சிறியதகப்பன் சுவாதீனத்திலிருந்த காலத்தில் அந்த ஜமீனசொத்தின் ஆதாயங்களைச் சிலவு செய்ய அவன் சட்டபடி சம்பூர்ணமான பாத்தியத்தை யுடையவனாகையால் அது விஷயமாய் கணக்கு ஒப்புவிக்க அவன் கட்டுபட்டவனல்லவென்று பிறிவி கவுன்ஸிலார் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 1 ம. 69).

105. பெண்ஜாதிக்கு சுவீகாராதிகாரம் கொடுக்கையில் அவளுயிரிருக்கிறவரையில் சொத்தை அனுபவித்துக்கொண்டு அதர்க்குப் பிறகு சுவீகாரபுத்திரனுக்கு சொத்து சேரவேண்டியதென்று புருஷன் ஷரத்து ஏப்படுத்தியிருந்தால் அந்த ஷரத்து செல்வதர்க்கு அட்டியில்லை. (1855 ஹு பம். ஸ. 139; 1859 ஹு பம். ஸ. 162; இ. லா. ரி. 5 க. 357).

சுவீகாரபிள்ளையின் பாத்தியதை பத்திய உடன்படிக்கைகள்.

சுவீகாரம் செய்துக்கொள்ளுங் காலத்தில் சுவீகாரத்தகப்பன் தன்சொத்தில் சிலபாகம் விஷயமாய் சில ஏற்பாடுகளைச் செய்து மற்றபாகம் மட்டில் சுவீகாரபிள்ளைக்குச் சேரும்படி சுவீகாரபிள்ளையின் ஜனக தகப்பனோடு உடம்படிகை செய்துகொண்டால் அது செல்லுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 12 ம. 490; இ. லா. ரி. 14 ம. 172; 6 பம். ஐ. 224). ஆனால், எல்லாசொத்தும் இதரர்களுக்குச் சேரும்படி உயிலெழுதிப் பிறகு சுவீகாரம் செய்துக்கொண்டால் அந்த சுவிகாரத்தால் உயில் ரெத்து செய்யப்பட்டதாக அநேகமாய் எண்ணப்படும். (6 பம். ஐ. 230; 6 மூ.இ. அ. 320).

தானுயிருடனிருக்கும் வரையில் தன் அனுபவத்திலேயே சொத்திருக்கிற தாகவும் தன்பிரகு சுவீகாரப்பிள்ளைக்கு சேருவதாகவும் சுவீகாரபிள்ளையின் ஜனக தகப்பனோடாவது ஜனக தாயாருடனாவது ஒரு விதவை தெளிவாய் உடம்படிக்கைசெய்துகொண்டு சுவீகாரம் செய்துகொண்டால் அப்படிப்பட்ட உடம்படிக்கை செல்லுமென்று பம்பாய் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (11 பம். ஐ. 199; இ. லா. ரி. 11 பம். 398). ஆனால் இந்தவிஷயத்தைக் குறித்து பிறிவீ கவுன்ஸிலார் சந்தேகாபிபிராயப்பட்டு அந்த உடம்படிக்கை எப்பொழுதும் செல்லாததல்லவென்றும் சுவீகாரபிள்ளைக்குத் தகுந்த வயது வந்து அவன் சம்மதித்தால் செல்லத்துகுந்ததென்றும் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 2 ம. 91). அப்படிப்பட்ட உடம்படிக்கையினால் சுவீகாரபிள்ளை கட்டுப்பட்டவனல்லவென்று மதிராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 4 ம. 160; இ. லா. ரி. 16 ம. 400). சுவீகாரபுத்திரனுக்குத்தகுந்த வயது வந்த பிறகு அவன் தன்னுடைய ஆஸ்தின் விஷயமாய் சுவீகாரத் தாயாருடன் செய்துக்கொள்ளும் உடம்படிக்கை செல்லத்தக்கதையில்லை. (3 பம். 387; 15 வ. 63).

சுவீகாரம் கூடாதென்கிர உடன்படிக்கை.

குடும்பத்தில் எவரும் சுவீகாரம் செய்துக்கொள்ளக்கூடாதென்று ஒருவர்க்கொருவர் செய்துக்கொண்ட உடன்படிக்கை செல்லாது அப்படிப்பட்ட உடன்படிக்கையை மீறிச் செய்துகொண்ட சுவீகாரம் ரெத்தாகமாட்டாது. (இ. லா. ரி. 9 ம. 499. மேல் 62 - வது பாரா கோடியை பார்க்க).

சுவீகாரம் நடக்காவிட்டால் பாத்தியமில்லை.

107. சுவீகாறபுத்திரனுடைய பாத்தியம் சுவீகாரத்துக்கு பிந்தித்தானுண்டாகுமே தவிர அதர்க்கு முந்தி உண்டாகமாட்டாது. இன்னபிள்ளையை சுவீகாரம் செய்துகொண்டு சொத்தை எல்லா

ங்வனுக்குக் கொடுக்கவேண்டியதென்று புருஷ னேற்பாடுசெய்து போனாலும் விதவை சுவீகாரம் செய்துக்கொள்ளாமல் சும்மாயிருந் தால் அந்த பிள்ளைக்கு எவ்விதமான பாத்தியமுங் கிடைக்கமாட்டா து. (இ. லா. ரி. 12 பம். 202; இ. லா. ரி. 16 ம. 355; இ. லா. ரி. 11 க. 463; இ. லா. ரி. 12 க 688).

108. சுவீகாரம் சாஸ்திரப்படி யில்லாமல் செல்லாமல் போய் விட்டால் சுவீகாரப்பிள்ளைக்கு சுவீகாரகுடும் பத்தில் எவ்விதமான பாத்தியமு முண்டா காது. ஆனால் ஜனககுடும்பத்திலுள்ள பாத்தி யங்கள் நிற்கும்.

சுவீகாரம் செல்லாவிட்டால் சுவீகாரபிள்ளையின் பாத்தியம்.

சுவீகாரம் செல்லாமல் போனால் சுவீகார குடும்பத்தில் ஜீவனு ம்ச பாத்தியம் சுவீகாரபிள்ளைக்கிருக்கிறதென்று முன்காலத்தில் சில தீர்ப்புகள் செய்யப்பட்டிருந்தன. (1 ம. ஐ. 45). ஆனால், இப்போது அந்த தீர்ப்புகள் றெத்து செய்யப்பட்டு சுவீகாரம் செல்லாவிட்டால் சுவீகாரபிள்ளைக்கு சுவீகார குடும்பத்தில் ஒருவிதமான பாத்திய முண்டாகாமல் ஜனககுடும்பத்திலுள்ள பாத்தியம் மட்டும் நிற்குமெ ன்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (ம. ஐ. 363; 12 பம். ஐ. 397).

சுவீகாரம் சாஸ்திரப்படிக்கில்லாததால் செல்லாவிட்டால் தா னபரிகிறகங்கள் கிரமமாக நடந்திருந்தால் சுவீகாரபிள்ளைக்கு ஜனக குடும்பத்தில் சம்பந்தம் முற்றிலும் விட்டுபோயிற்றென்றும் சுவீகா ரக் குடும்பத்தில் ஒரு பாத்தியமும் உண்டாகாவிட்டாலும் ஜனக குடும்பத்திலிருந்த ஒரு பாத்தியமும் நிற்காதென்றும்- தானபரிகிற கங்கள் கிறமமாக நடக்காதிருந்தால் பிறம்ம க்ஷத்திரிய வைசிய ஜாதிக ளில் உபனயனத்துக்கு முந்தியும் சூத்திரர்களில் விவாஹத்துக்கு முந் தியும் ஜனககுடும்பத்தில் சேரலாமென்றும் அதர்க்குப்பிரகு சேற முடியாதென்றும் கலகத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார் கள். (1856 - 59 ஹு கலகத்தா ஸுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புகள். 137 பேஜ்; 13 க. ஐ. அப்பென்டிக்ஸ், 42).

109. சுவீகாரம் செல்லாதபட்சத்தில் சுவீகாரப்பிள்ளைக்குக் கொடுக்கப்பட்ட தானங்கள் செல்லுமா செல் லாதா என்கிற விஷயத்தை நிச்சயம் செய்ய ஒ ரே முக்கியமான அம்சமிருக்கிறது. இன்னாறுக் கு என்று பேர்சொல்லி தானம் கொடுக்கப்பட் டிருந்தால் தானபத்திரிகையில் அவன் சுவீகார

சுவீகாரம் செல்லாவிட்டால் சுவீகாரபிள்ளைக்குச் செய்த தானம் செல்லுமா.

பிள்ளையாக விவரிக்கப்பட்டிருந்து பிந்தி அந்த சுவீகாரம் செல்லாத தாக ஏற்பட்டாலும் தானம் செல்லும். ஆனால் அவன் சுவீகாரப் பிள்ளை யென்கிற நம்பிக்கையைக் கொண்டே தானம் கொடுப்பது இல்லாவிட்டால் கொடுக்கப்பட் டிருக்கமாட்டாதென்று தெளிவாய் காணப்பட்டால் அந்த தானம் செல்லமாட்டாது. உதாரணங்கள்—

(1.) "புருணம் பிச்சுவைய்யருடைய சுவீகாரபுத்திரனை ராம சுவாமிக்கு பதினாயிரம் ரூபாய் தானமாகக் கொடுத்தேன்" - என்று உயிலில் லெழுதப்பட்டால், பிறகு ராமசுவாமி யுடைய சுவீகாரம் செல்லாதென்று ஏற்பட்டாலும் தானம் செல்லும்.

(2.) "ராமசுவாமி யென்கிற பையனை நான் சுவீகாரம் செய்து கொண்டேனுகையால் அவன் சுவீகாரத்துக்கு அவசியமான காரி யங்களை என்னுடைய பெண்ஜாதி நடத்தவேண்டியது. மேலும் அவ னுயிருட னிருக்கையில் என்பெண்ஜாதி வேறு ஒருவரையும் சுவீகா ரம் செய்துக்கொள்ளக்கூடாது. அவனுக்கே என்சொத்தெல்லாம் சேறவேண்டியது" - என்று மரணசாஸனம் (உயில்) எழுதப்பட்டது. அதற்கு பிறகு அவன் பெண்ஜாதி சுவீகாரத்துக்கு வேண்டியது ஒன்றும் நடத்தாமல் போனாலும் அந்ததானம் செல்லுமென்று பிறிவி கவுன்ஸிலார் தீர்மானித்திருக்கிறார்கள். (26 ஸ. 91).

(3.) "ஏ" என்பவன் ஒருபையனை பாலியம் முதல் தன் அபி மான புத்திரனாக எண்ணி அவனுக்கு தன்னுடைய சொத்தெல்லாவற் றையு முயிலெழுதி வைத்துவிட்டிறந்தான். இந்தப்பையன் சாஸ்திரப் படி சுவீகாரபுத்திரனாக இல்லாததால் சுவீகார தகப்பனுக்கு உத்திர கிரியை நடத்த யோக்கியதை யுள்ளவனாகமாட்டான். ஆனாலும் தா னம் செல்லும். (1861 ஸூ மதிராஸ் தீர்ப்புகள் 124; 1 ம. ஐ. 393).

(4.) மேல்சொல்லப்பட்ட 3 - வது உதாஹரணத்தில் பிள்ளை சாஸ்திரப்படி சுவீகாரபுத்திரந்தான் என்றும் தன்னுடைய உத்திர கிரியைகளை நடத்த யோக்கியனென்றும் "ஏ" என்பவ னெண்ணி யிருந்தான். அப்படிப்பட்ட எண்ணம் உபயோகமில்லாமல் போனா லும் தானம் றெத்தாய்ப்போகமாட்டாது. ஏனென்றால் - பாலியம் முதல் வைத்திருந்த அபிமானத்தாலாவது அபேட்சையாலாவது அந்த தானம் செய்யப்பட்டிருக்கலாம்.

(5.) "ஏ" என்பவன் ஒருபிள்ளையை சுவீகாரம் செய்துகொ ண்டு "உன்னை நான் சாஸ்திரப்படி சுவீகாரம் செய்துகொண்டதால்

எனக்கும் என்தகப்பன் பாட்டன்களுக்கும் சாஸ்த்திரப்படி கர்மங்கள் செய்துவிட்டு எனக்குபிறகுஎன் சொத்தெல்லாவற்றிற்கும் நீயே பாத்தியனு யிருக்கவேண்டியது.'' - என்று ஒரு சம்மதி பத்திரம் எழுதினன். "ஏ" என்பவ னிறந்தபிறகு சுவீகாரம் செல்லாதென்று ஏற்பட்டது. அந்த தானத்துக்கு சுவீகாரமே காரணமென்றும், சுவீகாரம் செல்லாமல் தனக்கும் தன்தகப்பன் பாட்டன்களுக்கும் சாஸ்திரப்படி கர்மங்கள் நடத்த யோக்கியெதை யில்லாதபட்சத்தில் அந்த பிள்ளைக்கு சொத்து சேரவேணுமென்கிற உத்தேசம் கொஞ்சமேனும் "ஏ" என்பவனுக்கில்லையென்றும் நிச்சயித்து அந்த தானம் செல்லாதென்று பிறிவீ கவுன்ஸிலார் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 11 க 463; இ. லா. ரி. 12 க 686; இ. லா. ரி. 12 பம். 185, 202; இ. லா. ரி. 15 பம். 573).

(8.) கிருத்திறம சுவீகாரம் வகையரு.

110. கிருத்திறம சுவீகாரம் மிதில ருஜியத்தில மட்டும் தங்கியிருக்கிறது. (2 பம். ஸ. தீ. 173). மலையாளதேசத்தில் நம்பூதிரி பிரும்மணர்களில் சாதாரண சுவீகாரமும் கிருத்திறம சுவீகாரமும்கூட வழக்கத்தில் இருப்பதாகத் தெரியவருகிறது. (இ லா. ரி. 11 ம. 174).

கிருத்திறம சுவீகாரம்.

கிருத்திறம சுவீகார பத்ததிப்படி பெண்ஜாதி, புருஷன், இருவர்கள் சேர்ந்தாவது தனித்தனியேயாவது சுவீகாரம் செய்துகொள்ளலாம். புருஷன் பேருக்கு சுவீகாரம் செய்துகொள்ள விதவை அதிகார முள்ளவளல்ல. ஆனல் தனக்கே சுவீகாரம் செய்துகொள்ளலாம்.

சுவீகாரம் செய்துகொள்ளப்பட்டவன் ஒரேஜாதியைச் சேர்ந்தவனு யிருக்கவேண்டியது. இதைத்தவிற வேறு நியமமாவது கட்டாயமாவது கிடையாது. அவனுக்கு என்னவயதானலும் சரி உபநயனம் விவாஹங்கூட ஜநககுடும்பத்தில் நடந்திருந்தாலும்சரி அவன் தாய் தகப்பன்க ளிறண்டுபெயர்களும் இறந்துபோயிருந்தாலும்சரி சுவீகாரம் செல்லும். (8 ஸ. 155; 6 பம். ஸ. தீ. 192; 3 பம். ஸ. தீ. 145). அண்ணன், தம்பி, தங்கை தமக்கை பிள்ளைகள் இப்பேர்க்கொற்றவர்களைக்கூட சுவீகாரம் செய்துகொள்ளலாம். (3 பம். ஸ. தீ. 144; 6 பம். ஸ. தீ. 192).

கிருத்திறம சுவீகாரத்துக்கு எவ்விதமான கர்மங்களு மவசிய மில்லே. ஏதாவது நல்லநாளில், சுவீகாரம் செய்துகொள்ளுகிறவனும் சுவீகாரம் செய்துக்கொள்ளப்படுகிறவனும் ஸ்நாநம் செய்ததின் பேரில், "நீ என் பிள்ளையாக யிருக்கவேணு"மென்று சுவீகாரம் செய்துகொள்ளுகிறவன் கேட்டு, "நான் உன் பிள்ளையாயினேன்" என்று சுவீகாரம் செய்துகொள்ளப்படுகிறவன் சொன்னவுடனே சுவீகாரம் முடிந்துவிடுகிறது. சுவீகாரம் செய்துகொள்ளுகிறவன் சுவீகாரம் செய்துகொள்ளப்படுகிறவன் இருவர்களுடைய சம்மதமே முக்கியம். (1 பம். ஸ. தீ. 9; 6 பம். ஸ. தீ. 271).

கிருத்திறம சுவீகாரப்பிள்ளைக்கு ஜனககுடும்பத்திலுள்ள வார்சு பாத்தியங்கள் போகமாட்டா. அவனுடைய வீட்டுப்பெயர் வேறுயிருந்தால் மாறாது. சுவீகாரகுடும்பத்தில் சுவீகாரம் செய்துகொண்டவனுக்கு மட்டுமே அவன் வார்சாகிறானே யொழிய சுவீகாரம்செய்துகொண்டவனுடைய தகப்பன் முதலானவர்களுக்கு வார்சாகமாட்டான். (1 பம். ஸ. தீ. 15; 3 பம். ஸ. தீ. 307; 2 பம். ஸ. தீ. 23; 8 ஸ. 155; 25 ஸ. 255). பெண்ஜாதியாவது புருஷனாவது தனக்குமட்டும் பிறத்தியேகமாய் சுவீகாரம் செய்துகொண்டால் தாயுடையவாவது தகப்பனுடையவாவது உத்திரகிரியை மட்டில் நடத்த பாத்தியப்பட்டு அவளுடைய அல்லது அவனுடைய சொத்துக்குமட்டும் சுவீகாரபுத்திறன் வார்சாகிறான். (2 பம். ஸ. தீ. 23; 7 ஸ. 500; 8 ஸ. 155).

ஜாப்னாத்தேசத்தில் சுவீகாரம்.

111. ஸிம்ஹளத்தீவில் ஜாப்னாதேசத் தமிழர்களில் வழக்கத்திலிருக்கிற சுவீகாரம் ஏறக்குறைய எல்லா பாகங்களிலும் கிருத்திறம சுவீகாரம் போலவே இருக்கிறது. மேலும் அவர்களில் சுவீகாரப்பிள்ளை சுவீகாரம் செய்துக்கொண்டவனுடைய பெண்ணை விவாஹம் செய்துகொள்ளலாம். இதுவுமன்றியில் ஒரு பிள்ளையையும் ஒரு பெண்ணையும் சுவீகாரம் செய்துகொண்டு இருவர்களுக்குமே விவாஹம் நடத்துகிற வழக்கமுமுண்டு.

வீட்டோடிருக்கும் மாப்பிள்ளை.

112. மதிறாஸ் பிறஸிடன்ஸியில் சூத்திறஜாதியார்களில் முக்கியமாக நாயகர்கள், குடியானவர்கள், றெட்டிகள், இவர்களில் வீட்டுக்கு மாப்பிள்ளை ஏற்ப்படுத்திக்கொள்ளுகிற வாடிக்கை; அதாவது மாப்பிள்ளையை சுவீகாறப்பிள்ளைபோல் வீட்டில் வைத்துக்கொள்ளும் வாடிக்கை யேற்ப்பட்டிருக்கிறது.

வீட்டு மாப்பிள்ளைக்கு ஜனககுடும்பத்திலுள்ள பாத்தியங்கள் போகமாட்டா. (இ. லா. ரி. 6 ம. 267). மாமனார் சொத்துக்கு அவன் பாத்தியஸ்தனாகிறான். (இ. லா. ரி. 4 ம 272; இ. லா. ரி. 12 ம. 442). மாமனாரிட மிருந்து வீட்டு மாப்பிள்ளைக்கு கிடைக்கும் சொத்து அவனுடைய சுவார்ஜிதமாக நினைக்கப்படும். (7 ம. ஐ. 25). வீட்டுக்கு மாப்பிள்ளை யேற்படுத்திக்கொள்ளப்பட்டபிறகு மாமனாருக்கு புத்திரசந்ததி யுண்டானால் அவனுக்குக்கூட புத்திரர்களோடு சரியான பாகம் கிடைக்கும். (இ. லா. ரி. 4 ம. 272).

113. தாஸிகளில் தவிற மைத்த எந்த ஜாதிகளிலும் பெண் சுவீகாரம் செய்துகொள்ளும் வழக்கமில்லை.

பெண் சுவீகாரம்.

புனாப்பட்டணத்தில் ஒரு பிராமணன் ஒரு பெண்ணை வைத்துக்கொண்டு அவள் தனக்கு சுவீகாரப்பெண்ணென்று வாதிக்கையில் அந்த சுவீகாரம் செல்லாதென்று கோர்ட்டார் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 13 பம். 690).

114. தென் மேல் இந்தியாக்களில் தாஸிகள் பெண் சுவீகாரம் செய்துகொள்ளுகிற வழக்க மேற்பட்டிருக்கிறது. அந்த சுவீகாரம் செல்லுமென்று மதிறாஸ் ஐகோர்ட்டாரும் (இ. லா. ரி. 11 ம. 393; இ. லா. ரி. 12 ம. 214; இ. லா. ரி. 13 ம. 133) - செல்லமாட்டாதென்று கலகத்தா பம்பாய் ஐகோர்ட்டார்களும் (2 மார்லிஸ் டைஜஸ்ட் 133; இ. லா. ரி. 4 பம். 545) - தீர்மானித்திருக்கிறார்கள். இப்போது பம்பாய் ஐகோர்ட்டார்கூட அப்படிப்பட்ட சுவீகாரம் செல்லுமென்றே அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 14 பம். 90).

தாஸிகளில் வழக்கம்.

தாஸிகள் செய்துகொள்ளும் பெண் சுவீகாரத்துக்கு எவ்விதமான கர்மங்களாவது தான பரிக்கிறஹங்களாவது அவசியமில்லை. பலானஜாதி பெண்ணை சுவீகாரம் செய்துகொள்ளவேண்டு மென்கிற நியமம்கூட கிடையாது. அந்தப்பெண்ணை பணங்கொடுத்து வாங்கிக்கொண்டாலும்சரி வேறு எவ்விதமாய் பெற்றுக்கொண்டாலும் சரி தன் பெண்ணாக பாவித்து வைத்துக்கொள்வதே முக்கியம். (1856 ஹு மதிறாஸ் தீர்ப்புகள், 65; இ. லா. ரி. 13 ம. 133).

ஒரு பெண்ணை மாத்திரம் சுவீகாரம் செய்துகொள்ளலாமே யொழிய இரண்டு மூன்று பெண்களை சுவீகாரம்செய்து கொள்ளக்

கூடாதென்றும் விசேஷாசாரம் ஏற்பட்டிருந்தால் இரண்டுமூன்று பெண்களை சுவீகாரம் செய்துகொள்ளலாமென்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 11 ம. 393; இ. லா. ரி. 12 ம. 214).

விபசாரத்துக்காக பெண் சுவீகாரம்.

115. தாஸிகள் சாமானியமாய் விபசாரத்தொழில் செய்து ஜீவிக்கிறவர்களா யிருந்தாலும் அவர்கள் பெண் சுவீகாரம் செய்துகொண்டால் விபசாரத்தொழிலுக்காகவே செய்துகொள்ளுகிறார்களென்று நிச்சயமாய் சொல்லகூடாது. அந்தப் பெண் தன் சொத்துக்கு வார்சா யிருக்கவேணுமென்றாவது அந்தப் பெண்ணை பெரியவளாக்கி அவளுக்கு விவாஹம் செய்யவேண்டுமென்றாவது யிப்படிப்பட்ட எண்ணத்தோடுகூட சுவீகாரம் செய்துகொள்ளலாம். இக்காரணத்தால்தான் தாஸிகளில் பெண்சுவீகாரம் செல்லுமென்று தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன.

விபசாரத்தொழிலுக்காக பெண்ணை சுவீகாரம் செய்கிறது பினல்கோட் 372, 373 செக்ஷன்கள்படி குற்றமாகும். இந்தக் குற்றத்துக்கு 10 வருஷ வரையில் ஜயில்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தாஸிகள் சுவீகாரம்செய்துக்கொண்ட பெண்கள் விஷயமாய் விபசாரத்தொழிலுக்காக சுவீகாரம் செய்துகொள்ளப்பட்டதென்றாவது 16 வயதாகிறதற்குமுன் நிஷேகம் செய்து அவர்களை விபசாரத்தொழிலுக்குட்படுத்தினதாக ருசுகாணப்பட்டால் பினல்கோட்டில் சொல்லப்பட்டபடி தண்டனை விதிக்கப்படும். 16 வயது முடியாத தாஸிகள் பெண்களோடு நிஷேகம் செய்துக்கொள்ளுகிற புருஷர்களும் அவர்களோடு விபசாரத்தொழில் நடத்துகிற புருஷர்களும் குமுக்கு செய்தவர்களாக பாவிக்கப்பட்டு தண்டனைக்கு உள்படுவார்கள்.

அத்தியாயம் 4.

மைனர்களின் சம்ரட்சணம்.

தக்க வயது.

116. மைனர்கள் என்றால் தக்கவயது வராதவர்கள். 16 வயது முடிந்த ஸ்தீரி புருஷர்களுக்கு பாலியதசை போய் தக்கவயது வந்ததாக எண்ணப்படுமெ

ன்று ஹிந்து தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. முன் காலத் தீர்ப்புகள்கூட அப்படியே செய்யப்பட்டிருக்கின்றன. (இ. லா. ரி. 1 க. 108; 12 பம். ஐ. 281, 290). ஆனுல் இப்போது இவ் விஷயமாய் 1875 ஞு 9 வது (இன்டியன் மெஜாரிடி ஆக்ட்டு) அமலிலிருக்கிறது. இந்த சட்டப்படி பிறிடிஷ் இந்தியாவில் வசிக் கிற ஜெனங்களுக்கெல்லாம் 18 வயது முடிந்த உடனே தக்க வயது வருகிறதென்று எண்ணப்படுகிறது. கோர்ட்ஆப் வார்ட்ஸாருடைய போஷணைக்குள்ளிருக்கும் மைனர்களுக்கும் மட்டில் 21 வயது முடிந்தபிறகு தக்கவயது வந்தவர்களாக எண்ணப்படும்.

குழந்தைகளை ரட்சிக்கும் பாத்தியம்.

117. தக்கவயது வருத குழந்தைகளை ரட்சிக்கும் பாத்தியம் ஹிந்து தர்மசாஸ்திரங்களின்படி முதலில் தகப்பனுடையது. பிறகு தாயுடையது. தாய் இல்லாவிட்டாலும் சம்ரட்சிக்கத் தகுதியத்தவளாயிருந்தாலும், அண்ணன், சிறியதகப்பன், பெறியதகப்பன் முதலிய தகப்பன் வம்சஸ்தர்களும் அவர்களுக்கு பிறகு தாய் வம்சஸ்தர்களும் ரட்சகர்க ளாகிருர்கள். (1852 ஞு மதிருஸ் தீர்ப்புகள். 105 ; 1854 ஞு பம் ஸ. தீ. 329).

மிதில தேசத்தில் செல்லுகிற வழக்கப்படி தக்கவயது வருத குழந்தைகளை போஷிக்கும் விஷயத்தில் தகப்பனைப்பார்க்க தாய்க்கே அதிக பாத்தியமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (இ. ல. ரி. 5 க. 43).

அவிபக்த குடும்பத்தில் மைனருக்குச் சேரவேண்டிய சொத்து எவருடைய சுவாதீனத்திலிருந்தாலும் அவன் சரீரத்தை ரட்சிக்கும் பாத்தியமட்டும் தாயைச் சேர்ந்திருக்கிறது. (3 ம. ஐ. 69; இ. லா. ரி. 5 க 219; 1847 ஞு பம். ஸ. தீ. 557).

குழந்தைகள் ரட்சிக்கிற விஷயமாய் சிறியதகப்பன் பெறியதகப்பன் முதலியவர்களைக் காட்டிலும் சபத்தினீ மாதாவுக்குக் அதிகமானபாத்தியம் கிடையாது. (1 மார்லீஸ் டைஜஸ்ட் 275. இவ்விஷயமாய் 2 பாரெு. 144, 7 ஸ. 321, கூட பார்க்கவேண்டியது).

வைப்பாட்டி பிள்ளைகளை ரட்சிக்கும் பாத்தியம்.

118. வைப்பாட்டிக்குப்பிறந்த பிள்ளைக்கு சாஸ்த்திரப்படி வைப்பாட்டியே போஷகியாகிருள். ஆனுல் தகப்பன் சம்ரட்சணைக்குள்ளாவது தகப்பன் ஏற்ப்படுத்தினவர்கள் சம்ரட்சணைக்குள்ளாவது அ

வர் இருந்தால் தாயுடைய பாத்தியம் தப்பிப்போய்விடும். அப்போது தன்குழந்தையைத் தன்வசத்தில் விடவேணுமென்று வைப்பாட்டியால் பிறது கொடுக்கப்பட்டால் அது ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. இன்னமும் விபசாரத்தால் அந்த மனுஷி ஜீவித்துக்கொண்டிருந்தாலும் அவளுடைய சம்ரட்சணை குழந்தைகளுடைய நன்மைக்கு விரோதமாயிருந்தாலும் தகப்பன் ஏற்பாடுசெய்து சம்ரட்சணையிலிருந்து தப்பித்துவிட கோர்ட்டார் இஷ்டப்பட மாட்டார்கள். (இ. லா. ரி. 4 க. 374; இ. லா. ரி. 12 ம. 67).

மைனர் விதவையை ரட்சிக்கும் பாத்தியம்.

119. மைனரான விதவைக்கு சாஸ்திரப்படி அவள் புருஷனுடைய தாயாதிகளே ஸமரட்சகர்களா யிருக்கிறார்கள். அவளுடைய தகப்பனாவது அண்ணன் தம்பிகளாவது தகப்பன் வம்சத்தார்களாவது சாஸ்திரப்படி ஸம்ரட்சகர்களல்ல. (இ. லா. ரி. 16 க. 584).

மைனர்களை ரட்சிக்கும் பாத்தியம் எப்பொழுது போய்விடும்?— கார்ட்டியன் துர்நடவடிக்கை.

120. மைனர்களைப் போஷிக்கும் பாத்தியம் சாஸ்திரப்படி தகப்பன், தாய், தமையன் முதலியவர்களைச் சேர்ந்ததாயிருந்தாலும் அவர்கள் கெட்ட நடவடிக்கை யுள்ளவர்களாயிருந்து அந்த மைனர் நன்மைக்கும் க்ஷேமத்துக்கும் கெடுதியுண்டாகும்படியான சந்தர்ப்பத்தில், எந்த பெந்துவாயினும் ஸ்நேகிதனாயினும் கோர்ட்டில் மனுக்கொடுத்து அந்த சம்ரட்சணையிலிருந்து நீக்கி பிறருடைய சம்ரட்சணையி லிருக்கும்படி ஏற்பாடு செய்துகொள்ள முடியும். (3 ம. ஐ. 69; 14 மூ. இ. அ. 309; இ. லா. ரி. 1 அ. 549, 598).

சுவீகாரம் கொடுப்பது.

121. பிள்ளையை சுவீகாரம் கொடுத்தபிறகு பெத்தவனுடைய கார்ட்டியன் பாத்தியம் போய்விடும். ஆனாலும் சுவீகாரத் தாய்தகப்பன்களாவது அவர்களைச் சேர்ந்தவர்களாவது சுவீகாரப்பிள்ளையிடத்தில் கெட்ட எண்ணங்கொண்டு அவனை ஹிம்ஸித்துக்கொண்டிருந்தாலும் வேறு எக்காரணத்தாலாவது அவனுடைய சம்ரட்சணை சுவீகாரப்பிள்ளையுடைய க்ஷேமத்துக்குக் கெடுதியுண்டாகத் தக்கதாயிருந்தாலும், ஜனகதகப்பன் முதலியவர்கள் ரட்சகர்க ளாகக் கூடும். (3பம். ஐ. 1).

122. விதவை புனர்விவாஹம் செய்துகொண்டால் முதல் புருஷனு லவளுக்குண்டான குழந்தைகள் அவளுடைய சம்ரட்சணையிலிருந்து விலகி தங்கள் சம்ரட்சணையில் வைக்கவேணுமென்று முதல் புருஷன் பந்துக்கள் கோர்ட்டில் மனுக்கொடுக்கலாம். அதின் பேறில் கோர்ட்டார் அவர்களிடத்தில் தக்க ஜாமீன் வாங்கிக் கொண்டு அந்த குழந்தைகளை அவர்களிடம் ஒப்பிவைப்பார்கள். (1856 ஷு 15 நெ. ஆக்ட்டு, 3 வது செக்ஷன்).

தாயார் புனர்விவாஹம் செய்துகொள்வது.

123. பிள்ளைகளுடைய மதம் தகப்பன் மதத்தை யனுசரித்தே யிருக்கவேணும். ஆகையால் தாயார் குலபிறஷ்டயாகப் போனாலும் கிறிஸ்து முதலிய வேறு மதங்களில் சேர்ந்துவிட்டாலும் மைனர் குழந்தைகள் விஷயமாய் உள்ள கார்டியன் பாத்தியம் அவளுக்குத் தப்பிப் போய்விடும். அவளிடத்திலிருக்கிறதற்கும் அவள் மதத்தையே அனுசரிக்கிரதர்க்கும் குழந்தைக ளிஷ்டப்பட்டாலும் அவர்களை அவளுடைய சம்ரட்சணையிலிருந்து கோர்ட்டார் நீக்கிப்போடுவார்ககள். ஆனால் குழந்தைகள் ஏறக்குறைய தகுந்த வயது வந்தவர்களாயும் நன்மை தீமை அரிந்தவர்களாயும் இருந்து தாயாரின் சம்ரட்சணையிலிருந்து அவர்களை நீக்குவது அவர்களின் நன்மைக்கு விரோதமா யிருப்பதாய்க் காணப்பட்டால் அவர்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாய் கோர்ட்டார் தீர்ப்புசெய்யமாட்டார்கள். (14 மூ. இ. அ. 309).

தாயார் வேறுமதத்தில் சேருவது.

புருஷனைவிட்டு பெண்ஜாதி வேறாக யிருக்கையில் குழந்தைகள் ரட்சிக்கிற விஷயமாய் அவளுக்கு ஒருபாத்தியமும் நிற்கமாட்டாது. புருஷனுடைய இஷ்டத்துக்கு விரோதமாக குழந்தைகளை யெடுத்துக்கொண்டுபோய் பெண்ஜாதி வேறாகயிருந்தால் புருஷன் பிரூது கொடுத்து குழந்தைகளை சுவாதீனப்படுத்திக்கொள்ளலாம். (இ. லா. ரி. 8 க. 369).

124. தகப்பன் கிறிஸ்து முதலிய மதங்களில் சேர்ந்து ஜாதி பிரஷ்டனாய்விட்டால், அவனுக்கு தன் மைனர் குழந்தைகளுக்குக் கார்டியனு யிருக்கும் பாத்தியம் தப்பிப்போகமாட்டாது. ஆனால் அப்படி வேறு மதத்தில் சேர்ந்ததுடன் கெட்டவியாபாரம் கெட்ட நடவடிக்கைகளை செய்துகொண்டு குழந்தைகள்

தகப்பன் வேறுமதத்தில் சேருவது.

நன்மைக்கு விரோதமாயிருந்தால் தகப்பனிடத்திலிருக்கவேண்டிய தென்று குழந்தைகளைச் கோர்ட்டார் கட்டாயப்படுத்தமாட்டார்கள். (பெர்ரீதுரை ஓரியண்டல் கேஸ். 91).

மைனர்கள் வேறுமதத்தில் சேருவது.

125. தங்களுக்கிஷ்டமானபடி தட்டுத்தடையன்றியில் இருக்க மைனர்கள் சுவாதந்திரர்களல்ல. தக்க வயது வரும்வரையில் கார்டியன் உத்திருவுக்குக் கீழ்பட்டு அவர் இடத்திலேயே யிருகக் மைனர்கள் கட்டுப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் கிரஸ்து முதலிய வேறுமதங்களில் சேறும்படி அவர்களுக்கு பாத்தியமில்லை. யுக்தாயுக்த விவேகம்வந்து வேறுமதத்தில் புகுந்த மைனர்களை அவர்கள் இஷ்டப்படி விட்டுவிட வேண்டியதென்று முன்காலத்தில் சில தீர்ப்புகள் செய்யப்பட்டன. ஆனால் பிரகு, 12, 14, 15 வயதான மைனர்கள் கிரஸ்துமதத்தில் புகுந்து தங்களுடைய புதிய குருமார்கள் வசத்திலே யிருக்கிறோமென்று அவர்கள் எவ்வளவு கேட்டுக்கொண்டபோதிலும் அவர்களிஷ்டத்தைக் கவனிக்காமல் அவர்களை கார்ட்டியன்களிடத்தில் ஒப்பிவைக்கும்படி தீர்ப்புகள் செய்யப்பட்டன. (பெர்ரிதுரை ஓரியண்டல் கேஸ், 103; ஹைட்துரை ரிபோர்ட்டு, 111). இந்த தீர்ப்புகளை கொஞ்சகாலத்துக்கு பிந்தி மதிராஸ் ஐகோர்ட்டார் செவ்வையாய் ஆராய்ந்து 1875 ஹு 9 நெ சட்டப்படி மைனாரிட்டி போகிறவரையில் அதாவது 18 வயது முடிகிறவரையில் மைனர்கள் தங்கள் கார்டியன்களுக்குட்பட்டு அவர்களுடைய இடத்திலேயே யிருக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 9 ம. 391). ஆகையால் மைனர்கள் வேறுமதத்தில் சேர்ந்தால் தாய்தகப்பன் முதலிய கார்டியன் அவர்களை கட்டாயப்படுத்தித் தன் வசத்திர்க்கு கொண்டுபோகக்கூடும். மேலும் அந்த மைனர்களை யனுப்பாமல் தன்னிடத்தில் வைத்திருக்கும் மதகுருக்கள் பேரில் பிராது கொடுக்கலாம்.

14 வயதுக்குள்பட்ட ஆண்குழந்தையாவது 16 வயதுக் குள்பட்ட பெண்குழந்தையாவது அவர்களை கார்டியனுடைய சம்மதமன்றியில் கிரஸ்து முதலிய வேறுமதங்களில் சேர்த்துக்கொள்ளுகிறவர்கள் பினல்கோட் 361 செக்ஷன்படி குற்றத்துக் குள்ளாவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு 363 செக்ஷன்படி 7 ஹு வரையில் ஜயில் தண்டனை விதிக்கலாம்.

126. மைனரால் ஏற்ப்படுத்திக்கொள்ளப்பட்டும் கண்ட்ருக்ட்டுகள் (உடன்படிக்கைகள்) அவனுக்கு லாபகரமா யிருந்தாலொழிய அவைகளை நிறவேற்றுகிறதர்க்கு அவன் கட்டுப்பட்டவனல்ல. ஆனால் தக்கவயது வந்தபிறகு அந்த உடன்படிக்கைகளை ஊர்ஜிதப்படுத்தினால் அவன் உட்படுவான். (3 ஸ. 10; 13 ஸ. 166, 172. இந்தியன் கண்ட்ருக்ட் ஆக்ட்டு செக்ஷன். 11).

மைனர்களுடைய உடன் படிக்கைகள்.

ஆகையால் மைனருக்குக் கடன்கொடுத்தால் அவன் பேரில் பிருது செல்லாது. மைனரிடத்தில் கடன்வாங்கினால் அவன் பிருது செய்யலாம். (இ. லா. ரி. 12 பம். 50; இ. லா. ரி. 18 க. 259). ஜீவனத்துக்கு அவசியமான சமான்களுக்காக கடன்கள் வாங்கப்பட்டால் அவைகளைத் தீர்க்க மைனர் கடன்பட்டவனு யிருக்கிறான். (இந்தியன் கண்ட்ருக்ட்டு ஆக்ட், செக்ஷன். 68).

127. மைனருடைய சொத்தை பாதுகார்க்கிற விஷயத்தில் அவனுடைய கார்டியன் அதாவது சம்ரட்சகன் நடத்தின நடவடிகைகளால் அந்த மைனர் கட்டுப்பட்டிருக்கிறான். ஆனால் இந்த நடவடிக்கைகள் அவசியமாகவும் மைனருக்கு லாபகரங்களாகவும் தக்கவயது வந்திருந்தால் மைனர்தானே நடத்திக்கொள்ளும்படியானவைகளாகவு மிருக்கவேண்டியவைகள். மேலும் கெட்ட எண்ணத்தாலாவது கார்டியனுடைய சொந்த லாபத்துக்காவது செய்யப்பட்டிருக்கக்கூடாது. (2 ம. ஐ. 47; இ. லா. ரி. 12 பம். 686; இ. லா. ரி. 14 பம். 562; இ. லா. ரி. 4 க. 76; இ. லா. ரி. 5 க. 363; இ. லா. ரி. 3 அ. 535; இ. லா. ரி. 9 பம். 365; 10 மூ. இ. அ. 454; 6 மூ. இ. அ. 393). கார்ட்டியன் செய்த நடவடிக்கைகள் தக்கவயது வந்தபிறகு மைனர் சம்மதித்து உருதிசெய்துவிட்டால் அவைகளால் அவன் கட்டுப்பட்டவனுகிறான். (8 மூ. இ. அ. 319).

கார்ட்டியனுடைய அதிகாரம். மைனர் தகாதாக்கள்.

மைனருடைய லாபார்த்தமாக அவனுடைய சொத்தை கார்டியன் கிரயம்செய்தால் அந்தக்கிரயத்தால் மைனர் கட்டுப்பட்டவனே. ஆனால் அந்நியாயமாக அல்லது அனுவசியமாய் அல்லது ரொம்ப குறைந்தவிலைக்கு செய்யப்பட்ட கிரயத்தால் மைனர் கட்டுப்பட்டவ னல்ல. இப்படிப்பட்ட கிரயங்களை ரெத்து செய்துக்கொள்ள மைனர்

விக்கிரயங்கள்.

தக்கவயது வந்தபிறகு பிருது செய்யலாம். (8 பம் ஐ. 81; 3 பம். 234, 237; 7 அ. ஐ. 201).

மைனருடைய சொத்தை விர்க்கும் விஷயத்தில் அவன் கார்ட்டியனுக்கு இருக்கும் அதிகாரம் ரொம்பவும் சொல்பம். ஆகையால் அந்த கார்ட்டியன் மூலமாக மைனருடைய சொத்தை கிரயம் வாங்குகிறவர்கள் எல்லாவிஷயங்களையும் செவ்வையாகத் தெரிந்துகொள்ள வேண்டியது. அந்தசொத்தை விர்க்கும்படி என்ன அவசியம் நேரிட்டதோ, கிரயம்செய்வதால் மைனருக்கு என்னலாபமோ, விர்க்காமல் போனால் அவனுக்கு என்னநஷ்டம் அல்லது கெடுதிநேரிடுமோ, இந்த விஷயங்களை செவ்வையாக விசாரிக்கவேண்டியது. இதுவுமன்றியில் சொத்துக்கு நியாயமானவிலை கொடுக்கவேண்டியது. (6 மூ. இ. அ. 393).

கார்டியன் மூலமாக மைனர் சொத்தை வாங்கினவர்கள் அந்த சொத்து விஷயமாய் விவஹாரமுண்டானபோது அதை விர்ப்பதர்க்கு தகுந்த அவசிய மிருந்ததென்று ருசுப்படுத்தவேண்டியது. (இ. லா. ரி. 5 ம. 33). இன்னகாரணத்தால் விர்க்கப்பட்டதாக விக்கிரிய தஸ்தாவேஜில் எழுதப்பட்டிருபதைக்கொண்டு மாத்திரம் அது நிஜமென்று கோர்ட்டார் நம்பமாட்டார்கள். (இ. லா. ரி. 6 அ. 417; இ. லா. ரி. 3 பம். 234, 237).

ஒரு கேஸில் கார்டியனாகயிருந்த தாயார், மைனருடைய சம்ரட்சணார்த்தமாக அவன் சொத்தை ரொம்பத் தாழ்ந்தவிலைக்கு விற்றான். மைனர் தக்கவயது வந்தபிறகு பிருதுகொடுத்தான். கோர்ட்டார் அந்த கிரியத்தை றெத்துசெய்து வாங்கினவனுக்கு பணத்தைக் கொடுக்கச்செய்து சொத்தை மைனருடைய சுவாதீனம் செய்தார்கள். (இ. லா. ரி 6 அ 417).

கார்டியனால் அக்கிரமமாக சம்மதிக்கப்பட்ட டிக்கிரிகள், ருஜீவகைருக்களை ரெத்துசெய்துகொள்ள மைனரானவன் வயது வந்தபிறகு தாவா கொடுக்கலாம். (இ. லா. ரி. 3 ம. 103; இ. லா. ரி. 13 பம். 137). ஆனால் கார்டியன் பேரில் கிரமமாக யெறப்பட்ட டிக்கிரிகளாலும் அவன் கிரமமாக சம்மதித்த ருஜீகளாலும் மைனர் கட்டுப்பட்டவனே. (இ. லா. ரி. 11 ம. 309; இ. லா. ரி. 12 ம. 483; 14 மூ. இ. அ. 393; இ. லா. ரி. 5 க. 450; இ. லா. ரி. 10 க. 357; 1859 ஹை பம். ஸ. தீ. 913).

மோசத்தால் யெறப்பட்ட டிக்கிரிகள் ருஜிகள் வகைருக்களை ரெத்துசெய்ய தடையன்றியில் பிருது கொடுக்கலாம். (14 மூ. இ. அ. 393; இ. லா. ரி. 6 க. 687; இ. லா. ரி. 10 க. 357; இ. லா. ரி. 12 க 69). ஆனல் மோசமில்லாமல் கார்டியனுடைய அசட்டையால் மைனருக்கு விரோதமாக வியாஜியம் தீர்ப்புசெய்யப்பட்டிருந்தால், தக்கவயது வந்தபிரகு அவன் பிருதுசெய்து அந்த தீர்ப்பை ரெத்து செய்துக்கொள்ளக்கூடுமோ - இந்த அம்சம் தெளிவாய் தீர்மானிக்கப் பட்டிருக்கவில்லை. (இ. லா. ரி. 17 க 361).

காரிடியனுடைய அக்கிரமமான விவாஹரத்தால் நேரிட்ட நஷ்டத்துக்காக அவன்பேரில் மைனர் தக்கவயது வந்தபிறகு பிருது செய்யலாம். (1860 ஞூ பம். ஸ. தீ. 349).

அத்தியாயம் 5.

ஸமஷ்ட்டி குடும்பம்.

சேர்ந்தக் குடும்பம்.

128. ஹிந்துக்களில் சாதாரணமாய் தகப்பன் பிள்ளைகள் பேரன்கள் முதலியவர்கள் சேர்ந்து ஒரே குடும்பமாய் ஜீவனம் செய்துக்கொண்டிருக்கிருர்கள். இவர்களில் சிலர்களாவது எல்லோருமாவது பொதுசொத்தை பாகம் செய்துக்கொண்டு தனியாய் இருப்பிட மேர்ப்படுத்திக்கொண்டு போனுலுங்கூட அவர்களுக்கு சந்ததி யுண்டானவுடனே திரும்பவும் சமஷ்ட்டி குடும்பங்கள் ஏர்ப்படுகின்றன. இந்த ஸமஷ்ட்டி குடும்பத்துடையவும், போதுசொத்தினுடையவும் சுவபாவம் இந்தத்தியாயத்தில் விவரமாகச் சொல்லப்படும்.

எஜமானன் அல்லது மானேஜர்.

129. ஸமஷ்ட்டி குடும்பத்திலுள்ள ஸ்தீரீகள் ஜீவனும்சத்துக்கு மட்டில் பாத்தியஸ்தர்கள். புருஷர்கள்கூட எல்லாரும் பொதுசொத்துக்கு பாகஸ்தர்க ளாகமாட்டார்கள். இந்த விஷயம் பிந்தி விபரமாய் தெரிவிக்கப்படும். சாதாரணமாய் ஸமஷ்ட்டி குடும்பத்துக்கு தகப்பனே யெஜமானுக இருந்து கிரகிருத்தியங்களை நடத்தும்படி அதிகாரத்தை யுடையவர். கிழத்தனம் முதலிய காரணங்களால் தகப்பன் அசக்தனுகப்போனுலும்

அவனில்லாமல்போனாலும் பிள்ளைகளில் மூத்தவன் யாஜமானாகிறான். தமையன் அசக்தனாயிருந்தால் புத்தியுள்ள தம்பி வீட்டு வேலைகளை நடத்தி வருவதுண்டு.

குடும்ப சிலவுகள்.

130. குடும்பத்திலுள்ள ஸ்திரீ புருஷர்களுக்கும் குழந்தைகளுக்கும் வேண்டிய அன்னவஸ்திரத்துக்காகவும் அவர்களுடைய விவாஹம் உபனயனம் வித்தியாப்பியாசம் முதலிய காரியங்களுக்காகவும் பண்டிகை பர்வங்கள் சிரார்த்தம் முதலிய கர்மங்கள் முதலியவைகளுக்காகவும் குடுமபப் பொதுசொத்திலிருந்து சிலவிட யெஜமானுக்கு சம்பூர்ணமான அதிகாரமுண்டு. இவ்வளவுதான் சிலவு செய்யவேணுமென்றாவது இவ்வளவுசிலவு செய்யவேணுமென்றாவது கட்டாயம் கிடையாது. மைத்த பாகஸ்த்தர்கள் சொன்னபடி வீட்டு வேலைகளை நடத்தவாவது சிலவை குறுக்கி பணம் மீர்க்கவாவது அவன் கட்டுப்பட்டவன் அல்ல. குடும்ப சம்ரக்ஷணத்தில் அவன வெகு செட்டாகயிருந்தாலும் உதாரியாக யிருந்தாலும் மைத்த பாகஸ்த்தர்கள் விபாகம் செய்துக்கொள்ளலாமே யொழிய வேறு உபாயம் ஒன்றுமிலலே. (3 ம. ஐ. 177; இ. லா. ரி. 10 பம். 528). குடும்ப சொத்தை எஜமானன் துர்வினியோகம் செய்தால் விபாகம் செய்து கொள்ளும் காலத்தில் அவன் பாகத்தில் குறைக்கலாம். ஆனால் குடும்ப லாபதுக்காக அவன் வியாபாறம் செய்துவந்து அதனால் நஷ்ட்டமுண்டானால் அந்த நஷ்ட்டத்துக்கு அவன் ஜாவாப்தாரி அல்ல.

ஒரு பாகஸ்தனுக்காக அதிக சிலவு.

131. ஜாஸ்தி குழந்தைகள் யிருப்பதால் அவர்களுடைய காலக்ஷேபத்திர்க்கும் கல்லியாணம் முதலிய காரியங்களுக்கும் ஆவது அல்லது மைத்த எந்த காரணத்தாலாவது சமஷ்ட்டி குடும்பத்தில் ஒரு பாகஸ்தன் நிமித்தியமாக அதிகபணம் சிலவிடப்பட்டிருந்தால் விபாககாலத்தில் அவன் பாகத்தில் குறைப்பதர்க்கு ஆதாரமில்லே. (5 க. ஐ. 347, 349). ஆனால் சிலகுடும்பங்களில் அந்தந்த பாகஸ்தர்கள் நிமித்தம் சிலவிடப்படும் அதிக துகையை எழுதிவைத்து பாககாலத்தில் கணக்குபார்த்து கொள்ளுகிற யேர்ப்பாடு முண்டு. (6 மூ. இ. அ. 540).

கடன்கள்.

132. சமஷ்ட்டி குடும்பத்தில் மானேஜராயிருக்கிறவன் குடும்பச் சிலவுக்காககடன்கள் வாங்கினால் அந்த கடன் களை தீர்க்கும் பொருப்பு எல்லா பாகஸ்தர்களையும் சேர்ந்தது ஆனால் காலாவதியால் பா

திக்கப்பட்ட கடன்களுக்காக பொதுக்குடும்பத்தின் மானேஜர் மைத்த பாகஸ்த்தர்களுடைய அனுமதி அன்றியில் பத்திரம் எழுதிக் கொடுத்தால் அதினுல் அவன்மாத்திரம் கட்டுப்படுவான். (இ. லா. ரி. 5 ம. 169. 17 பம். 512).

பொதுக்குடும்பத்தின் பாகஸ்த்தர்கள் சேர்ந்து ஏதேனும் வியாபாரம் செய்யும்பொழுது அவர்களின் மானேஜருவது மைத்த யாருவது அந்த வியாபாரத்துக்காக கடன்கள் வாங்கினுல் அவைகளை தீர்க்க எல்லாரும் கட்டுப்படுவார்கள். (இ. லா. ரி. 6 க 815; இ. லா. ரி. 5 பம். 38). மேலும் அந்த கடன்கள் நிமித்தமாய் ஒருபாகத்தின் பேரில் மட்டில் டிக்கிறீ பெரப்பட்டிருந்தாலும் குடும்பசொத்து முழுவதும் ஜப்த்தி செய்யப்படலாம். (இ. லா. ரி. 20 க. 453).

கணக்குக் கேழ்க்க.

133. சேர்ந்த குடும்பத்தின் மானேஜர் செய்த சிலவுக்கு கணக்கு குடுக்கும்படி கேழக்க மைத்த பாகஸ்த்தர்களுக்கு பாத்தியம் உண்டா யில்லையா என்கிறவிஷயம் வெகுகாலமாய் சந்தேகாஸ்பதமாய் யிருந்தது. பாகத்துக்காக தாவா செய்தபொழுது கணக்கு சொல்லும்படி கேழ்க்க ஒருதடையும் இல்லாமலிருக்குறதே, விபாகம் செய்துகொள்வது அவசியமோ இல்லையோ என்கிற விஷயத்தை நிச்சியித்துக்கொள்ளுவதர்க்காக கணக்கு கேழ்ப்பது நியாயமாகவே யிருக்குமல்லவா ஆகிலும் விபாகதுக்காக தாவாசெய்த போதுமட்டும் மானேஜரை கணக்கு கொடுவென்று கேழ்க்கலாமே ஒழிய மைத்த ஸந்தர்ப்பங்களில் கேழ்கக்கூடாதென்று தீர்ப்புகள் செய்யப்பட்டன. (6 மூ. இ. அ. 540; 9 ஸ. 483, 3 க. ஐ. 1). ஆனுல் இப்பொழுது இந்ததீர்ப்புகளை ரத்துசெய்து பொதுகுடும்பத்தில் யெந்தபாகஸ்த்தராகட்டும் பொது சொத்தின் சிலவுக்கு கணக்கு சொல்லும்படி கேட்டால் சொல்ல மானேஜர் கட்டுப்பட்டிருக்கிருனென்றும் பாகத்துக்காக வியாஜியம் செய்யாமலே அப்படி கணக்கு கேழ்க்கலாமென்றும் கல்க்கட்டா ஐகோர்ட்டுபுல்பெஞ்சார் தீர்மானித்தார்கள். (5 க. ஐ. 354).

தாவாவில் எல்லா பாகஸ்தர்களும் சேரவேண்டியது.

134. சமஷ்ட்டி குடும்பத்தின் சொத்தைபத்தியாவது சமஷ்ட்டி குடும்பத்துக்கு வரவேண்டிய பணதைப் பத்தியாவது தாவாசெய்யப்பட்டால் அந்த குடும்பத்தின் பாகஸ்த்தர்கள் யெல்லாரையும் வாதிகளாகவாவது பிறதிவாதிகளாகவாவது

சேர்ந்து அல்லது சேர்க்கப்பட்டிருக்கவேண்டியது. இல்லாவிட்டால் அந்த தாவா செல்லமாட்டாது. (இ. லா. ரி. 3 ம. 234; இ. லா. ரி. 11 க. 338, 615; இ. லா. ரி. 17 க. 160; இ. லா. ரி. 7 பம். 217; இ. லா. ரி. 1 க. 226; 11 பம். ஐ. 69; இ. லா. ரி. 6 ம. 90; 12 பம். ஐ. 85; இ. லா. ரி. 3 பம். 23; இ. லா. ரி. 7 க; 470). 751; 7 அ. ஐ. 58; இ. லா. ரி. 8 க 353; 12 க. ஐ. 291; இ. லா. ரி. 4 க. 96; இ. ல. ரி. 5 க. 941).

பொதுக் குடும்ப பாகஸ்த்தர்கள் — மிதாட்க்ஷரப்படி 3 தலைமுறை வரையில் பாத்தியம்.


135. பொது குடும்பத்தில் உள்ள புருஷர்களில் எல்லாரும் பொதுசொத்துக்கு பாகஸ்த்தர்கள் ஆகமாட்டார்களென்று மேல் சொல்லியிருக்கிறோம். தகப்பனுடைய வாவது அல்லது வேறு யாருடையவாவது சுவயார்ச்சித சொத்துக்களுக்கு அவன் மட்டில் பாத்தியமுள்ளவன். மிதாக்ஷரத்தின்படி பிதுரார்ஜ்ஜிதத்தில் தகப்பனுக்கும் பிள்ளைகளுக்கும் அண்ணன் தம்பிகளுக்கும் சமமானபாத்தியம் உண்டு. பிள்ளை பிறந்த உடனேயே அவனுக்கு தகப்பனுடைய பிதுரார்ஜ்ஜிதத்தில் பாத்தியம் யேர்ப்படுகிறதென்று மிதாக்ஷர தர்மசாஸ்திரம் சொல்லுகிறது. பிதுரார்ஜ்ஜித சொத்துக்களுக்கு பாகஸ்த்தனாக யேர்ப்பட்ட மூலபுருஷனுக்கு கீழ் மூனுதலைமுறை வரைக்கும் இந்த பாத்தியம் வியாபிக்கிறது. மூனுதலைமுறைக்கு தாண்டினவர்களுக்கு கிடையாது. அதாவது உத்தரக்கிறியை செய்து பிண்டபிரதானம் செய்யக்கூடிய பிள்ளை பேரன் கொள்பேரன் இந்த மூனு தருவில் உள்ளவர்களுக்கே பிதுரார்ஜ்ஜித சொத்தில் பாத்தியம் உண்டாகுமே யன்றி கொள்ப்பேரனுடைய பிள்ளைக்கு உண்டாகமாட்டாது. இப்படி பாத்தியம் உள்ளவர்கள் அந்த சமஷ்ட்டி குடும்பத்தின் பாகஸ்தர்களென்று சொல்லப்படுவார்கள்.

தனிபாத்தியமில்லை.

பொதுக்குடும்பத்திலுள்ள பாகஸ்த்தர்கள் யெல்லா சொத்துக்கும் மொத்தத்தில் பாத்தியதை உள்ளவர்களாயிருந்து அனுபவிக்குமபடியான பாத்தியதை உள்ளவர்கள். இதையல்லாமல் தனித்தனி பாகங்களுக்கு பாத்தியமுள்ளவர்களல்ல. பாகத்துக்கு முந்தி அவாளவாளுக்கு இன்ன பாகமென்றாவது இவ்வளவு பாகமென்றாவது நிச்சயமாய் சொல்ல வழியில்லை. பாகத்துக்குமுந்தி பாகஸ்தர்களில் யாராவது பிள்ளையில்லாமல் யெறந்துபோனால் அவனுடைய பாத்தியம்

அவன் பெண்சாதிக்கு சேராமல் மைத்த பாகஸ்த்தர்களுக்கு சேருமாதலால் இவர்கள் பாகம் ஜாஸ்தியாகும். புதிய பாகஸ்த்தர்கள் பிரந்தால், அந்த பாகம் குறையும்.

136. இந்தவிஷயங்கள் இதின் கீழ் சொல்லப்படும் உதாஹரணத்தால் தெளிவாக தெரியும்.



இந்த குடும்பத்தில், ராமய்யர், சுப்பய்யர், வெங்கய்யர் யென்கிற 3, பேர்கள் மட்டு மிருந்தால் பிதரார்ஜ்ஜிதத்தில் இவர்களுக்கு சமானமான பாத்தியங்கள் உண்டாய் பாகம் செய்துக்கொள்ளும்பொழுது ஒவ்வொருவருக்கு மூணில் ஒருபாகம் கிடைக்கும் பாகத்துக்கு முந்தி நரசய்ய ரென்பவர் பிரந்தால் அவனுக்குகூட பிதரார்ஜிதத்தில் பாத்தியம் உண்டு. ஆகையால் ஒவ்வொருவருக்கு நாலில் 1 பாகம் மட்டும் கிடைக்கும். ராமய்யர் இறந்தபிரகு அவன் பிள்ளைகள்பாகம் செய்துகொண்டால் ஒவ்வொருவருக்கு மூணில், 1 பாகம் கிடைக்கும். சுப்பய்யன்கூட இறந்தபிரகு பாகம் செய்துகொண்டால் வெங்கய்யன் நரஸய்யர்களுக்கு பேற்பாதி பாகம் ஆஸ்தி கிடைக்கும். பாகம் செய்து கொள்ளாமல் குடும்பம் சேர்ந்தே நடந்துவந்தால் மல்லய்யர் ரெங்கய்யர் சேஷய்யர் வென்பவர்கள் பிரந்து பிதரார்ஜ்ஜிதத்தில் பாத்தியம் உள்ளவர்களாவார்கள். ராமய்யர் சுப்பய்யர் வெங்கய்யர் இம்மூன்றுப்பேர்களு மிறந்தபிரகு மல்லய்யர் ரெங்கய்யர் பாகம் கேழ்க்கலாம். அப்பொழுது அவர்களுக்கு தங்கள் தகப்பனுடைய பாகத்தில் பேர்ப்பாதி அதாவது மொத்தசொத்தில் நாலில்ஒருபாகம் கிடைக்கும்.

மேல் உதாகரித்திருக்கிற குடும்பத்தில் எல்லாரும் ஜீவித்திருக்கையில் ராமய்யர் யென்கிற மூலபுருஷருடைய பிதரார்ஜித சொத்தில் உள்ள பாத்தியம் அவருடைய குமாரர்களாகிய சுப்பய்யர் வெங்கப்பர் நரசப்பர் இவர்களுக்கும் பேறன்களாகிய மல்லய்யர் ரெங்கய்யர் சேஷப்பர் இவர்களுக்கும் கொள்ப்பேறன்களாகிய சூரியப்யா சந்திரப்யர் இவர்களுக்கும் கிடைக்கும். ஆனல் மூலபுருஷனுக்குக் கீழ்மூன்று தலைமுறைகள் தாண்டின நாகப்பனுக்குப்பாத்தியம் உண்டாகமாட்டாது. எல்லாருக்கும் முந்தி ராமய்யரென்பவர் இறந்தால சுப்பய்யர் வெங்கய்யர் நரசய்யர் இவர்கள் பிதரார்ஜித சொத்துக்கு மூலபுருஷர்கள் ஆகிறார்கள் அப்பொழுது நரசய்யரென்பவருடைய பாகத்தில் பாத்தியம் நாகப்யரென்பவன் வரைச்கும் வரும்.


ராமய்யரென்பவர் உயிருட னிருக்கையில் பிதரார்ஜித சொத்தில் பாகம் கேழ்க்க சுப்பய்யர் வெங்கய்யர் நரசய்யர் இம்மூன்று பேர்களுச்கு மட்டும் பாத்தியம் உண்டு. வெங்கய்யர் பாகத்தில் மல்லய்யர் ரெங்கப்யர் இரண்டு பேர்களும் பேற்பாதிக்கு பாத்தியஸ்த்தர்கள் ஆகிறார்கள். நரசய்யர் பாகத்தில் அவருடைய சந்ததியார்கள் பாத்தியமுள்ளவர்கள் ஆகிறார்கள். ராமய்யர் யிருக்கையிலேயே வெங்கப்பர் நரஸப்யர் இவர்கள் இரண்டுபேரும் இறந்தால் சுப்பய்யனாவது மல்லப்யர் ரெங்கப்யர் சேஷப்யர் இவர்களில் எவராவது பிதரார்ஜிதத்தில் பாகம் கேழ்க்கலாம், அப்பொழுது சொத்தை 4 பாகமாகச் செய்து ராமய்யர் சுப்பய்யர்களுக்கு, ஒவ்வொருவர்க்கு ஒருபாகமும், மல்லப்யர் ரெங்கப்பர் இவர் இரண்டுபேர்களுக்கும் தகப்பன் பாகமும் சேஷப்யனுக்கு ஒருபாகமும் சேறும்.

ராமய்யர் சுப்பய்யர் சூரய்யர் நாகய்யர் இவர்கள்மட்டும் ஜீவித்திருந்து மைத்தவர்க ளெல்லாரும் இறந்தால் ராமய்யர் சுப்பய்யர் சூரியப்யர் மட்டுமே பிதரார்ஜித சொத்தில் பாகஸ்த்தர்களாவார்கள். ராமய்யரென்கிற மூலபுருஷனுக்கு கீழ் 3 தலைமுறை தாண்டினவனாகையால் நாகய்யன் பாத்தியஸ்தனாகமாட்டான் பிறகு ராமய்யர் இறந்தால்கூட பிதரார்ஜித சொத்தெல்லாம் சுப்பய்யர் சூரியய்யர் இவர்களுக்குச் சேறுமே யல்லாமல் நாகய்யனுக்குச் சேராது.

அது ஆதி புருஷனிடத்திலிருந்து மூன்று தலைமுறை யல்லா.

137. பிதரார்ஜித சொத்தில் பாகஸ்தனாக யேர்ப்பட்ட மூலபுருஷனுக்குக் கீழ் 3 தலைமுறை வரைக்கும் பாத்தியம் பிரக்குமென்று மேல் சொல்லியிருக்கிறோம். இப்படி 3 தலைமுறை கணக்குச் செய்வதில் ஆதிபுருஷனிலிருந்து கணக்கு பண்ணக்கூடாது ஆதிபுருஷனுக்கு யெவ்வளவு தலை

முறைக்குக் கீழிருந்தாலும் மத்தியில் பிதுரார்ஜித சொத்தில் முக்கிய பாகஸ்த்தனுக யேர்ப்படுகிர வரைக்கும் 3, தலைமுரைக்கு தாண்டாமலிருந்தால் பாத்தியம் உண்டாகும். (10 பம். ஐ 449, 463; 6 ம 94, 106). இது எப்படியெனில் கீழே போடப்பட்டிருக்கும் குடும்பத்தில் எல்லாரும் ஜீவித்திருந்தால் கிருஷ்ணய்யர் சிவய்யர் பாபய்யர் பிர்ம்மய்யர் வீறய்யர் இவர்கள் மட்டில் பிதுரார்ஜ்ஜித சொத்தில் பாத்தியம் உள்ளவர்களாவார்களேயன்றி கிருஷ்ணய்யர் உயிருடனிருக்கையில் கனகய்யர் அப்பய்யர் கன்னய்யர் இவர்கள் எப்பொழுதும் பாத்தியஸ்த்தாகளாக மாட்டார்கள் கிருஷ்ணய்யர் இறந்தபிறகு சிவய்யர் மூலபுருஷனுகிறுனுதலால் அவன்கீழ் 3 தலைமுறைகளுக்குள் சேர்ந்த கனகய்யர் அப்பய்யர் இவர்கள்கூட பாத்தியஸ்தர்கள் ஆவார்கள். அப்பொழுதுகூட கன்னய்யர் பாத்தியஸ்த்தர் ஆகமாட்டான் கிருஷ்ணய்யன் உயிருடனிருக்கையில் சிவய்யர் பாபய்யர் இவர்கள் இறந்தால் கிருஷ்ணய்யர் ப்ர்ம்மய்யர் வீரய்யர் இவர்கள் மட்டும் முக்கிய பாகஸ்த்தர்கள் ஆகிறுர்கள் அதின் பிறகு கிருஷ்ணய்யர் இறந்தால் பர்ம்மய்யர் பாகத்தில் கனகய்யர் அப்பய்யர் கன்னய்யர் இவர்கள் பாத்தியஸ்த்தர்கள் ஆவார்கள் கிருஷ்ணய்யர் உயிருடனிருக்கையில் சிவய்யர் ப்ர்ம்மய்யர் பாபய்யர் இவர்களிறந்தால் கனகய்யர் அப்பய்யர் கன்னய்யர் இவர்களுக்கு பாத்தியம் தப்பிப்போய் யெல்லா சொத்துக்கும் கிருஷ்ணய்யர் வீறய்யர் இவர்கள் மட்டுமே பாத்தியஸ்தர்கள் ஆவார்கள். பிறகு கிருஷ்ணய்யர் இறந்தால் யெல்லாசொத்தும்வீறய்யருக்கு சேரும் ஆகையால் மூலபுருஷன் கீழ் எந்த காலத்திலாயினும் 3 தலைமுறைகள் ஸம்பூர்ணமாக வித்தியாசம் ஏற்பட்டால் பிதுரார்ஜிதத்தில உள்ள பாத்தியம் அதன் கீழ்ப்பட்டவர்களுக்குத் தப்பிப்போய்விடுமென்று அறியவேண்டியது.



தாயபாகத்தின்படி.

138. பிதுரார்ஜிதத்தில் உள்ள பாத்திய விஷயமாகமேலே சொல்லப்பட்டதெல்லாம் மிதாக்ஷரப்படி அனுஷ்டானமுள்ளவர்களுக்குச் செல்லுமே யல்லாமல் தாயபாகத்தை அனுஷ்டிக்கிறவர்களு

க்குச் செல்லாது. தாயபாகப்படி தகப்பனுடைய பிதுரார்ஜித சொத்தில் பிள்ளைகளுக்கு ஜீவனாம்ச பாத்தியம்மட்டில் உண்டேயன்றியில் பாகம் பெறக்கும்படியான பாத்தியமாவது அநியாயமாக செலவு செய்யாமல் காப்பாற்றிக்கொள்ளும்படியான பாத்தியமாவது கிடையாது. ஒரு தடவை தகப்பனுடைய சொத்து பிள்ளைகளுக்குச் சேர்ந்தபொழுது இவர்கள் அவிபக்தர்களாயிருந்தாலும் தனித்தனி பாத்தியமுள்ளவர்களென்றே எண்ணப்படுவார்கள். ஆகையால இவர்களில் ஒருவன் பிள்ளையில்லாமல் இறந்துபோனால் மிதாக்ஷரத்திலிருப்பதுபோல அவன் பாகம் பைத்தபாகஸ்தர்களுக்குச் சேருமல் அவனுடைய பெண்சாதிக்காவது அல்லது வேறு வார்சுகளுக்காவது சேரும். (6 மூ. இ. அ. 553).

139. இந்த அத்தியாயத்தில் இதுவரையில் பிதுரார்ஜிதம் சுவயார்ஜிதம் என்கிற பதங்கள் பலதடவைகளில் உபயோகிக்கப்பட்டன. இந்த பதங்களுடைய அர்த்த விஸ்தாரத்தை செவ்வையாய்த் தெரிந்துகொள்ளுவது மிகவும் அவசியம்.

பிதுரார்ஜிதம் சுயார்ஜிதம்.

தகப்பன், பாட்டன் (தகப்பனுடைய தகப்பன்), பாட்டனுடைய தகப்பன், இவர்களிடமிருந்து வார்சு பாத்தியத்தாலாவது உயில் மூலமாகவாவது தானமாயாவது வந்த சொத்து பிதுரார்ஜிதம். அப்படிப்பட்ட சொத்தில் மிதாக்ஷரத்தின்படி மூன்று தலைமுறைவரைக்கும் உள்ள புத்திரசந்ததிகளுக்குப் பாத்தியம் உண்டு. பிதுரார்ஜித சொத்தையாவது குடும்ப சொத்தையாவது உபயோகித்துக்கொள்ளாமல் தன் வல்லமையால ஸம்பாதிக்கப்பட்ட சொத்தும், தாயார் தாயின் தாய், தாயின் தகப்பன், அண்ணன், தம்பி, சிறிய தகப்பன் பெரிய தகப்பன், இவர்களுடைய பிள்ளைகள், இம்முதலியமர்களிடமிருந்து கிடைத்த சொத்தும் சுவார்ஜிதம். இதில் புத்திரசந்ததிக்கு யெவ்விதபாத்தியமும் இல்லை. (இ. லா. ரி. 8 க. 131; இ. லா. ரி. 17 க. 38; இ. லா. ரி. 12 பம். 33; இ. லா. ரி. 9 பம் 445)

தகப்பனுடைய சுயார்ஜிதம் பிள்ளைகளுக்கு பிதுரார்ஜிதம்.

தகப்பனுடைய சுவயார்ஜிதம் பிள்ளைகளுக்கு வந்தவுடனே அது இவர்களுக்கு பிதுரார்ஜித சொத்தாகி இவர்களுடைய புத்திரசந்ததிக்குப் பாத்தியம் உண்டாகிறது. ஆனல் அந்த சொத்துப் பிள்ளைகளுக்குச் சேருவதர்க்கு முந்தி அவர்களில் யாராவது இறந்துபோயிருந்தால் அப்படி இறந்தவருடைய பெண்

சாதிக்காவது பிள்ளைகளுக்காவது ஒரு பாத்தியமும் உண்டாகாது. அலகாபாத்தில் ஒருவனுக்கு அதிக சுவயார்ஜித சொத்திருந்தது. இரண்டு பிள்ளைகளு மிருந்தார்கள். தகப்பன் உயிருடன் யிருக்கையிலேயே ஒருபிள்ளை இறந்துபோன காரணத்தால் அந்த சுவயார்ஜித சொத்து முழுவதும் மைத்தொரு குமாரனுக்குச் சேர்ந்தது அதின் பிறகு இறந்தவனுடைய விதவை, மைத்துனன் பேரில் ஜீவனும்சத்துக்காக பிருது செய்தாள் சுவயார்ஜிதசொத்துப் பிதரூர்ஜிதம் ஆவதர்க்குமுந்தி அவளுடைய புருஷன் இறந்துபோனதால் அதில் விதவைக்கு யெவ்வித பாத்தியமும் இல்லையென்று ஐகோர்ட்டா றவர்கள் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 11 அ 194).

தானமாய்க் கிடைத்த சொத்து.

140. தகப்பனுடைய சொத்து பிள்ளைகளுக்கு வார்சு பாத்தியமாய் வருமல் தானமூலமாய்வந்த காரணத்தாலேமட்டும் அது பிதரூர்ஜிதமாகாமல் போகமாட்டாது. ஒரு குடும்பத்தில் தகப்பன் தன்னுடைய சுவயார்ஜித சொத்தை இஷ்டப்படி பிள்ளைகளுக்குத் தானமாகக் கொடுத்தான். அப்படிப் பிறித்துக் கொடுக்கப்பட்டாலும் பிள்ளைகளுக்குக் கிடைத்த பாகங்கள் அவர்களுடைய பிதரூர்ஜிதமாகவே யெண்ணப்படுமென்றும் அந்த பாகங்களில் அவர்களுடைய பிள்ளைகளுக்குப் பாத்தியம் உண்டென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (6 ஸ. 71. 73).

உயில்மூலமாய் கிடைத்த சொத்து.

அப்படிப்போலவே தகப்பன் முதலியவர்களிட மிருந்து உயில் மூலமாய்க் கிடைத்த சொத்து பிதரூர்ஜிதமென்றே யெண்ணப்படும். (3 ம. ஐ. 50, 55; இ. ல. ரி. 12 பம். 133). ஆனல் பிள்ளைகளுக்குச்சகல சுதந்தர முண்டாகி அவர்களுக்கு சுவயார்ஜிதமாகச் சேர வேண்டுமென்ற யெண்ணத்தோடு தகப்பன் தன் சுவயார்ஜித சொத்தை உயில மூலமாகக் கொடுத்து விட்டுப்போனல் அது அந்தப் பிள்ளைகளுடைய சுவயார்ஜித சொத்தாகவே யெண்ணப்படும். (இ. லா. ரி. 10 பம். 528).

அடமானத்திலிருந்து நீக்கப்பட்ட பிதரூர்ஜிதம்.

141. ஒருவனுக்கு விபாகத்தால் கொஞ்சம் பிதரூர்ஜித சொத்துக் கிடைத்தது. ஆனல் அது ஏறக்குறைய அதின் பொருமானம் வரையில் அடமானத்திற்குட்பட்டிருந்தது. பிறகு அவன் தன்னுடைய சுவயார்ஜித பணத்தைக்கொண்டு

அந்த அடமானத்தைத் தீர்த்தான் அப்படி அடமானத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பிதுரார்ஜித சொத்தில் அவனுடைய பிள்ளைகளுக்கு பாத்தியம் உண்டென்று மதருஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (5 ம. ஐ. 150).

142. பிதுரார்ஜிதத்தால் உண்டான விருத்தி, அதாவது வட்டி முதலிய ஆதாயம், அந்த ஆதாயத்தை சேர்த்து வைத்து சம்பாதிக்கப்பட்ட சொத்து, பிதுரார்ஜ்ஜிதத்தைக்கொண்டு வியாபாரம் செய்து சம்பாதிக்கப்பட்ட லாபம், இவைகள் பிதுரார்ஜ்ஜித சொத்தாகவே யெண்ணப்படும். (8 ம. ஐ. 25; இ. லா. ரி. 8 க. 131; இ. லா. ரி. 11 ம. 246; இ. லா. ரி. 7 அ. 402; இ. லா. ரி. 3 க 508).

பிதுரார்ஜிதத்தின் விருத்தி பாகம்.

143. ஒரு பிறிக்கக்கூடாத ஜமீன் மிதாக்ஷர தர்மசாஸ்த்திரப்படி பொதுசொத்தா யிருக்கலாம் அதாவது குடும்பத்தில் மூத்தவன் மட்டும் ராஜ்ஜியாதிகார பாத்திய முள்ளவனுகவும் மைத்தவர்கள் ஜீவனும்சத்துக்கு மட்டில் பாத்தியமுள்ளவர்களாயிருந்தாலும் மூத்தவன் புத்திரசந்ததி அன்னியில் இறந்துபோனுல் அந்த ஜமீன் சொத்து அவனுடைய பாரியைக்குச்சேருமல் தம்பிகளில் மூத்தவனுக்கு சேரும்). 9 மூ. இ. அ. 539, 589, 610; 13 மூ. இ. அ. 333, 336). ஆனுல் ராஜ்ஜியம் செய்துவருகிற ஜமீன்தார் அவன் காலத்தில் ஜமீன் சொத்திலிருந்து சேர்த்த ஆதாயம் அவனுடைய சுவயார்ஜ்ஜித மென்றும் அதை அவன் இஷ்டப்படி சிலவு செய்யலாமென்றும் அவன் பிள்ளையில்லாமல் இறந்துபோனுல் அந்த ஆதாயமும் அதைக்கொண்டு ஸம்பாதிக்கப்பட்ட சொத்தும் அவனுடைய பெண்சாதி முதலிய வார்சுகளுக்குச் சேருமே யல்லாமல் சகோதரர்களுக்குச் சேரமாட்டா தென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (5 ம. ஐ. 31, 41; 12 மூ. இ. அ. 540). ஒருகேஸில் ஒரு பாளயம்தார் அவனுடைய பாளயத்தைப் பொருத்த சில சொந்த கடன்களையும் பாளயத்தின் மிகுதி வரும்படியைக் கொண்டு ஸம்பாதிக்கப்பட்ட சில சொத்துக்களையும் வைத்துவிட்டு இறந்துபோனுன். இந்த ஆஸ்தி அவனுடைய சுவயார்ஜ்ஜித மானதால் அவனுடைய கடன்களைத் தீர்க்கும்படியான பாரத்தை வகிக்கவில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது. (இ. லா. ரி. 3 ம 145). ஒரு ஜமீன்தார் அவனுடைய காலத்தில் செய்த ஆதாயத்தை செலவிடாமலிருந்து அது பிந்திய ஜமீன்தாருக்குச் சேர்ந்தால் அது பொதுசொத்தாகவே யெண்ணப்படும்.

பிறிக்கக்கூடாத ஜமீன் சொத்தினுதாயம்

144. சேர்ந்த குடும்பத்திலிருக்கிற பாகஸ்தன் தானாக ஸம்பாதித்த சுவயார்ஜித சொத்தில் தன்பாத்தியத்தை தெளிவாய்த் தள்ளிவிட்டு அதைக் குடும்பசொத்தோடு சேர்த்துவிட்டால் அது பிதுரார்ஜிதமாகவே யெண்ணப்படும். (இ. லா. ரி. 16 க. 397; 10 மூ. இ. அ. 506; இ. லா. ரி. 7 ம. 458, இ. லா. ரி. 10 க. 392, 398, 401; இ. லா. ரி. 15 பம். 509; இ. லா. ரி. 18 க. 341).

குடும்பத்தில் சேர்க்கப்பட்ட சுவார்ஜிதம்.

145. தகப்பன் சொத்து அல்லது குடும்ப சொத்து இதுகளை உபயோகித்துக்கொள்ளாமல் தன்னுடைய வல்லமையால் ஸம்பாதித்த சொத்தும், தாயார் தாயின் தாயார், தாயின் தகப்பன், அண்ணன், தம்பிகள், சிறியதகப்பன், பெரியதகப்பன், இவர்கள் பிள்ளைகள் இவர் முதலியவர்களிடமிருந்து வந்தசொத்தும் சுவயார்ஜ்ஜிதமாக யெண்ணப்படுமென்று மேலே சொன்னோம். இவ்விஷயமாய் யாக்கியவல்க்கிய ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருப்ப தென்னவென்றால்:—“பிதுர்திரவியத்துக்கு நஷ்டமன்றியில் ஒரு பாகஸ்த்தன் தானாக ஸம்பாதித்த சொத்துகள் அதாவது சினேகிதர்களால் கொடுக்கப்பட்ட வெகுமானங்கள் விவாககாலத்தில் மாமனார், மாமியார், முதலியவர்களால் கொடுக்கப்பட்ட சொத்து இவைகளில் மைத்த பாகஸ்த்தர்களுக்குப் பாத்தியமில்லை. போன பிதுரார்ஜித சொத்தை ஒருபாகஸ்த்தன் திரும்பி ஸம்பாதித்தால் அதில் மைத்தபாகஸ்தர்களுக்குக் கொடுக்கவேண்டியது அவசியமில்லை. வித்தையால் ஸம்பாதித்த பணங்கூட கொடுக்கவேண்டியதில்லை.” மேல் சொல்லப்பட்ட சுவயார்ஜ்ஜித பாத்தியங்கள் ரொம்பக் குறையும்படியாக மேல்கண்ட வாக்கியங்களுக்கு விக்ஞானேசுவரர் மிதாக்ஷர தர்ம சாஸ்திரத்தில் அர்த்தம் சொல்லியிருக்கிறார். எப்படிப்பட்ட சுவயார்ஜிதத்துக்கும் தகப்பன் சொத்து ஸம்பந்தம் கொஞ்சம்கூட யிருக்கக்கூடாதென்றும், பிதுர்த்ரவ்யத்தை செலவுசெய்து சம்பாதிக்கப்பட்ட பஹுமானங்களும், பெண்ணுக்காக பணம்கொடுத்து ஆஸுர விவாஹத்தில் மாப்பிள்ளைக்குக் கொடுக்கப்பட்ட வெகுமானங்கள், தகப்பன் சொத்தின் உத்தாசையைக்கொண்டு திரும்பி ஸம்பாதிக்கப்பட்ட போன பிதுரார்ஜிதசொத்து, தகப்பன் சொத்தைச் சிலவுசெய்து கற்கப்பட்ட வித்தையால் சம்பாதிக்கப்பட்ட சொத்துகள், இவைகளைப் பொது சொத்துகளாகவே பாவிக்கவேணுமென்று மிதாக்ஷரம்

சுவயார்ஜிதத்தைப்பத்தி யாக்கியவல்கிய ஸ்மிருதி.

மிதாக்ஷரம்.

சொல்லுகிறது. இதுவுமல்லாமல் பிதுர்திரவியம் யென்கிற பதத்தால் தாயின் சொத்துக்கூட காண்பிக்கப்படுகிறதென்று மிதாக்ஷரம் சொல்லுகிறது. இந்த அர்த்தத்தை அனுசரித்து ஒரு கேஸில் மதறாஸ் ஐகோர்ட்டார் மாதாமகன் (தாயின் தகப்பன்) இடத்திலிருந்து கிடைத்த சொத்து சுவயார்ஜ்ஜிதம் அல்லவென்று தீர்மானித்தார்கள். பிறிவிகவுன்ஸிலார்கூட அந்தத் தீர்ப்பை ஒப்புக்கொண்டார்கள். (இ. லா. ரி. 3 ம. 370). கூடினவரையில் சுவயார்ஜித பாத்தியம் குறையும்படியாகவே முன்காலத்தில் மதறாஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் பிறகு அவர்கள்வழி கொஞ்சம்மாறி சுவாயார்ஜ்ஜித பாத்தியத்துக்கு அனுகூலமாகவே யேர்ப்பட்டிருக்கிறது. வித்தையால் சம்பாதிக்கப்பட்ட சொத்துசுவயார்ஜிதமா யில்லையா யென்கிற விஷயத்தில் இந்த அம்சம் நிர்ணயிக்கப்படும்.

146. தகப்பன் சொத்தின் உத்தாசை கொஞ்சமேனும் அன்றியில குடும்பத்தைவிட்டு நீங்கி மைத்தவர்கள் வீட்டிலிருந்து மைத்தவர்களுடைய சகாயத்தைக்கொண்டே வித்தையை சம்பாதித்திருந்தால் அப்படிப்பட்ட வித்தையால் சம்பாதிக்கப்பட்ட சொத்து சுவயார்ஜ்ஜிதமாகுமென்றும் யெவ்வளவேனும் தகப்பன் சொத்தின் உத்தாசையைப் பெற்றுவது குடும்பத்தில் அவர் உபாத்தியாயரா யிருந்ததைக்கொண்டாவது கற்கப்பட்ட வித்தையைக்கொண்டு சம்பாதிக்கப்பட்ட பொருள் சுவயார்ஜ்ஜித மல்லவென்றும் இதில் எல்லா பாகஸ்தர்களுக்கும் பாத்தியம் உண்டென்றும் நாரதர், காத்தியாயனர், பிரஹஸ்பதி, வியாஸர், முதலிய மகரிஷிகளால் செய்யப்பட்ட ஸ்மிருதிகள் சொல்லுகின்றன. இவர்களில் சில ஸ்மிருதிகர்த்தர்கள் மட்டும் அப்படி பிதுரார்ஜித சொத்தின் உத்தாசையைக்கொண்டு வித்தையைக் கற்றுப் பொருளை சம்பாதித்தவனுக்கு இரட்டிப்பு பாகம் உண்டென்று சொல்லுகிறார்கள். யாக்கியவல்க்கிய ஸ்மிருதியின் வாக்கியத்தைக்கொண்டு சேர்ந்த குடும்பத்தில் சாப்பாடு முதலானதுகள் மாத்திரம் அனுபவித்துக் கொண்டிருந்தாலும் வித்தையால் சம்பாதிக்கப்பட்ட சொத்து சுவயார்ஜிதந்தானென்று சொல்லலாம். ஆனால் அந்த வாக்கியத்துக்கு மிதாக்ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தத்தைப்பார்த்தால் சேர்ந்த குடும்பத்தில் யாராவது உபாத்தியாயரா யிருந்ததைக்கொண்டு வித்தை கற்கப்

கலவியால் தேடப்பட்ட பொருள்.

மிதாக்ஷரம்.

பட்டிருந்தால் அந்தவித்தையால் சம்பாதிக்கப்பட்ட பொருள் சுவயார்ஜித மாகமாட்டாதென்று யேர்ப்படுகிறது. இந்த விஷயத்தில் வீரமித்திரோதயம் ஸ்மிருதிசந்திரிகை விவாதசிந்தாமணி விவஹார மயூகம் இந்த தர்மசாஸ்திரங்கள்கூட மிதாக்ஷரத்தை அனுசரித்திருக்கின்றன.

தாயபாகம்.

ஜீமூதவாகனர் செய்திருக்கிற தாயபாக கிரந்தம் மட்டும்வேறு அபிப்பிராயப்பட்டிருக்கிறது வித்தை கற்கும் காலத்தில் ஆகாரம் வஸ்திரம் முதலியவைக்காக பொதுசொத்தில் சிலவுசெய்து வந்தால் மட்டும் அந்த வித்தையால் சம்பாதிக்கப்பட்ட சொத்து பொதுசொத்தாகமாட்டாதென்றும், சாப்பாடு வஸ்திரம் முதலியவைகளுக்காக அவன் குடும்பசொத்தை உபயோகப்படுத்திக்கொண்டது தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதர்க்கு மட்டு மாகையால் தாயின்பாலைக் குடிப்பதற்கு ஒப்பாக நினைக்கவேண்டியதென்றும் ஜீமூதவாகனர் சொல்லுகிறார். இவருடைய அபிப்பிராயப்படி தகப்பன் சொத்தைச் சிலவுசெய்து வித்தை கற்கப்பட்டிருந்தாலும் அது ஸாமான்னிய வித்தையாயிருந்தால் அதனால் சம்பாதிக்கப்பட்ட சொத்து சுவயார்ஜிதமாகும். அது விசேஷ வித்தையாயிருந்தால் அதனால் குடும்பத்துக்கு லாபம் உண்டாகவேண்டும் யென்கிற உத்தேசத்துடன் தகப்பன் சொத்து சிலவிடப்பட்டதென்று ஊகிக்கக்கூடு மாதலால் அப்படிப்பட்ட விசேஷ வித்தையால் ஸம்பாதிக்கப்பட்ட சொத்து பொது சொத்தாகும். ஆலோசித்துப்பார்க்கையில் இது மிகவும் நியாயமாயிருக்கிறது. பிதரார்ஜிதத்தைக்கொண்டு நாலுபேர் ஒப்பந்தம் ஸாமான்னிய வித்தையை மட்டில் அப்பியாசித்து பிறகு ஏதாவது விசேஷவித்தையை சுயமாகக் கற்றுக்கொண்டாவது உத்தியோகபலத்தாலாவது ஸம்பாதிக்கப்பட்ட சொத்து சுவயார்ஜ்ஜிதமாவது நியாயமே. பொதுஸொத்தை ஆயிறக்கணக்காய் விரயம் செய்து ஒருவனை இங்கிலாண்டுதேசத்திற்கு அனுப்பி கலெக்ட்டர் பரிக்ஷைக்காக வாவது பாரிஸ்ட்டர் பரிக்ஷைக்காகவாவது தயார் செய்தால் அதனால் ஸம்பாதிக்கப்பட்ட பொருள் குடும்பத்துக்கு பொதுசொத்தாக சேரவேண்டுமென்பது நியாயமாகவே யிருக்கிறது.

கல்வியால் தேடப்பட்ட பொருள்–தீர்ப்புகள்.

147. ஆட்டம் முதலிய வித்தையால் ஒரு தாசி சம்பாதித்த சொத்து அந்த தாசிக்கு பணம் சிலவுசெய்து அந்த வித்தையை கற்றுவைத்த தாய்க்கும் பொதுவாக பாவிக்கப்படுமென்று ஒரு கேஸில்

1864-ம் ஹூ த்தில் மதருஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (2 ம. ஐ. 56). பிரகு வேறு ஒருகேஸில, ஒரு வக்கீல் சம்பாதித்த பொருள் பொதுசொத்தென்று 1874-ம் ஹூத்தில் மதருஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். குடும்பசொத்திலிருந்து சிலவுசெய்து அந்த வக்கீலுக்கு விசேஷவித்தை ஒன்றும் கற்பிக்கப்பட்டதாக தெரியப்படாவிடிலும் சாமானிய வித்தையைக் கர்ப்பதர்க்காக குடும்ப சொத்து சிலவுசெய்யப்பட்டிருந்த காரணத்தைக்கொண்டு அப்படித் தீர்மானிக்கப்பட்டது. (7 ம. ஐ. 47). 1968-ம் ஹூத்தில் கலகத்தா ஐகோர்ட்டார் முன்பாக ஒருகேஸில் குடும்ப திரவியத்தைக்கொண்டு சாமான்னிய வித்தைமட்டில் கற்று பிறகு பெரிய உத்தியோகங்கள் செய்து ஒருவன் சம்பாதித்த பொருள் பொது சொத்தாகுமென்று கக்ஷி பேசப்பட்டது. ஆனல் அந்த கக்ஷியை கோர்ட்டார் ஒப்புக்கொள்ளாமல் அந்த பொருள் சுவயார்ஜிதமென்று தீர்மானித்தார்கள். (11 க. ஐ. 201). 1877-ம் ஹூத்தில் ஒரு சீமை அப்பீலில் சேர்ந்த குடும்பத்திலிருக்கும் ஒரு பாகஸ்தன் தன் சக்தியைக்கொண்டு தேடப்பட்ட பொருள் பொதுசொத்தாவதர்க்கு குடும்ப ஐவேஜிபின் ஒத்தாசையைக் கொண்டு அவன் யேதோ கொஞ்சம் சாமானியமான வித்தையைக் கற்றுக்கொண்டிருந்து போதாதென்றும் குடும்ப ஐவேஜியை சிலவுசெய்து யேதாவது விசேஷவித்தையைக் கற்று அதைக்கொண்டு அவன் பொருள் சம்பாதித்ததாக யேர்ப்பட வேணுமென்றும் 1864-ம் ஹூத்து மதருஸ் ஐகோர்ட்டார் தாஸி கேஸில் செய்ததிர்ப்பு அந்த தாஸிக்கு விசேஷவித்தை கர்ப்பிக்கப்பட்ட காரணத்தை அனுசரித்தே செய்யப்பட்டதென்றும் கல்வியால் தேடப்பட்ட பொருள்விஷயபாக மதருஸ் ஐகோர்ட்டார் கொண்டிருக்கிற அபிப்பிராயத்தைக் காட்டிலும் கல்கத்தா ஐகோர்ட்டாருடைய அபிப்பிராயமே தங்களுக்கு அதிக ஸம்மதமா யிருக்கிறதென்றும் பிரிவீகவுன்ஸிலார் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 1 ம. 152). பிந்தி 1881-ம் ஹூத்தில் மதருஸ் ஐகோர்ட்டார் முன்பாக யீறங்கி செய்யப்பட்ட ஒரு அப்பீலில் தன் தாயாருல் சாமான்னிய வித்தை மட்டும் கற்பிக்கப்பட்ட ஒருதாஸி தாஸித்தொழிலால் ஸம்பாதித்த பொருள் பொதுசொத்தாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. (இ. லா. ரி. 4 ம. 330). 1882-ம் ஹூத்தில் பம்பாய் ஐகோர்ட்டார் கல்வியால் தேடப்பட்ட பொருள் விஷயமாயுள்ள ஸ்மிருதிகளை எல்லாம் செவ்வையாய் சோதித்து ஒருவன் குடும்ப ஐவேஜியின் ஒத்தாசையைக்கொண்டு சாமான்னிய வித்தையைமட்டும் கற்று பிரகு

தன் வல்லமையால் பரிக்ஷைகள்கொடுத்து ஸப்ஜெட்ஜி உத்தியோகம் செய்து ஸம்பாதித்தபொருள் பொது சொத்தாகமாட்டா தென்றும் குடும்ப ஐவேஜியை சிலவுசெய்து ஏதாவது ஒரு விசேஷ வித்தை யேர்ப்பட்டு அந்த விசேஷ வித்தையை முக்கியமாகக் கொண்டு ஸம்பாதிக்கப்பட்ட சொத்துமாத்திரம் பொது சொத்தாகுமென்று தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 6 பம். 225). 1891-ம் வருஷத்தில் வேறு ஒருகேஸில் இந்ததீர்ப்பு அனுசரிக்கப்பட்டது. (இ. லா. ரி. 15 பம். 32).

இந்த தீர்ப்புகளைக்கொண்டு கல்வியால் தேடப்பட்ட பொருள் சாமான்னியமாய் சுவயார்ஜிதமென்றும் குடும்ப ஐவேஜியை சிலவு செய்து பொதுலாபத்தை உத்தேசித்து ஒருவனுக்கு ஏதாவது பெரிய விசேஷ வித்தை கற்பிக்கப்பட்டு அந்த வித்தையை முக்கிய ஆதாரமாக வைத்துக்கொண்டு சம்பாதிக்கப்பட்ட பொருள்மட்டும் பொது சொத்தாகுமென்றும் யேர்ப்படுகிறது.

குடும்ப சொத்தின் உத்தாசையைக் கொண்டு தேடப்பட்ட சொத்து.

148. குடும்ப ஐவேஜியில் கொஞ்சம் உபயோகப்படுத்திக் கொண்டு சேர்ந்த குடும்பத்திலுள்ள ஒருபாகஸ்தன் தன்னுடைய வல்லமையால் தனியாக சொத்து சம்பாதித்தால் அந்த சொத்தில் அவனுக்கு இரண்டுபாகம் உண்டென்று சில ஸ்மிருதிகர்த்தர்கள் சொல்லுகிறார்கள். மிதாக்ஷரத்தைக்கொண்டு பார்த்தால் இந்த இரட்டைப்பங்கு கிடைக்கமாட்டாது. ஆனால் பங்காளா தேசத்தில் உண்டென்று சிலகேசுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1 பங். ஸ. தீ. 6, 336; 3 பங். ஸ. தீ. 98; 5 பங். ஸ. தீ. 335).

போன பிதரார்ஜித சொத்து.

149. பெரியவர்களால் போக்கடிக்கப்பட்டதும் சேர்ந்த குடும்பத்தார் திருப்பக் கூடாமல் அனேகமாய் பாத்தியம் இழந்துபோனதுமான பிதரார்ஜித சொத்தையாவது அதில் ஒருபாகத்தையாவது சேர்ந்த குடும்பத்திலுள்ள ஒரு பாகஸ்தன் பிதுர்திரவியத்தின் ஒத்தாசையாவது இதரபாகஸ்தர்கள் ஒத்தாசையாவது கொஞ்சமேனும் அடையாமல் தன்னுடைய சிரமத்தினால் மைத்தவர்களுடைய அனுபவத்திலிருந்து திருப்பி தன் வசப்படுத்திக்கொண்டால் அந்த சொத்து அந்த பாகஸ்தனுடைய சுவயார்ஜித சொத்தா யெண்ணப்படுமென்று மிதாக்ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (5 ம. ஐ. 150) ஆனால் அப்படி திருப்பப்பட்ட சொத்து அசையாப்பொருளாக யிருந்தால் திருப்பின

வனுக்கு தலைமையில் அதில் நாலில் ஒருபாகம் கொடுத்துவிட்டு மிருந்ததில் யெல்லாபாகஸ்தர்களும் ஸமபாகமாய் பிரித்துக்கொள்ள வேண்டியதென்று மிதாக்ஷரத்திலேயே வேறொருவிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. திருப்பினவன் தகப்பனுயிருந்தால்மட்டும் மேல் சொல்லப்பட்ட முதல்மார்க்கம் செல்லுமென்றும் அண்ணன் தம்பி முதலியவர்களில் யாராயினும் திருப்பினுல் இரண்டாவது நியாயப் படி அனுஷ்டிக்க வேண்டியதென்றும் மேயர்துரை மேல்சொல்லிய இரண்டு வாக்கியங்களையும் சமாதானம் செய்து அர்த்தம் எழுதி யிருக்கிருர். பங்காளா ஸம்பிரதாயத்தை அனுஷ்டிப்பவர்கள் தகப் பன் யென்றும் மைத்த பாகஸ்தர்களென்றும் வித்தியாசம் பாருட் டாமல் அசையாப்பொருள் விஷயத்தில் இரண்டாவது சொன்ன மார் க்கத்தையே அனுசரித்துக் கொண்டு வருகிருர்கள்.

150. ஸர்காரால் வெகுமதியாக கொடுக்கப்பட்ட யெஸ்டேட் டுகளும் குடும்பத்தில் ஒருவனுக்கு அபராதம் போட்டு ஸர்காருல் தண்டனையாக சேர்த்து க்கொள்ளப்பட்டு பிரகு வேறொருவனுக்குகொ டுக்கப்பட்ட யெஸ்டேட்டுகளும் சுவயார்ஜிதங்களாக யெண்ணப்ப டும். (9 மூ. இ. அ. 606; இ. லா. ரி. 8 க. 769; இ. லா. ரி. 3 பம். 186). ஆனுல் அபருதமூலமாய் தண்டனையால் ஸர்காரால் பிடிங்கிக் கொண்டது அனியாயமென்று பிரகு தீர்மானிக்கப்பட்டு அந்த சொ த்து யெவருக்கும் கொடுக்கப்படாமல் யிருக்கையில் அது பின் பாத் த்தியங்களின்படி பொது சொத்தாகவே யெண்ணப்படும். (இ. லா. ரி. 12 க. 1). அப்படியே கிஸ்திக்காக மொத்தமாய் துகைபெத்துக் கொண்டு ஒருவனுக்கு யெஸ்டேட்டு விஷயமாக சர்க்காருர் புதிதாக பட்டா கொடுத்தால் அப்படிப்பட்ட பட்டாவால் அந்த யெஸ்டேட்டு சுவயார்ஜிதமாகமாட்டாது. (இ. லா. ரி. 10 ம. 1).

ஸர்க்கார் வெகுமானங்கள்.

151. சாதாரணமாய் இந்து குடும்பங்கள் சேர்ந்த குடும்பங்க ளாக பாவிக்கப்படும். மேலும் சேர்ந்த குடும்ப ங்கள் ஒருபாகஸ்தனுடைய அதிகாரத்திலேயே யிருந்தாலும் சொத்து பொது சொத்தாகவே பாவிக்கப்படும். ஆகை யால் பாகம் பிரித்தாய்விட்டது யென்று கக்ஷி சொல்லுகிறவர்களே அந்த அம்சத்தை தகுந்த ருஜுவால் ஸ்தாபித்துக் கொள்ளவேண்டி யது. அதைப்போலவே யேதாவது சொத்து தன்னுடைய சுவயார் ஜிதமென்று சேர்ந்த குடும்பத்தில் ஒருபாகஸ்தன் கக்ஷிசொன்னுல்

ருஜு பாரம்.

அந்த அம்சத்தை அவனே ருஜுபடுத்தவேண்டியது. (இ. லா. ரி. 6 பம். 225; இ. லா. ரி. 8 பம். 154; இ. லா. ரி. 8 க. 517; இ. லா. ரி. 2 ம. 19). ஸர்க்கார்கணக்கு முதலியவைகளில் சொத்து ஒருபாகத்தை தன்னுடைய பேரிலேயே யிருப்பதைக்கொண்டு அது அவனுடைய சுவயார்ஜிதமென்று நினைக்கக் கூடாது. (11 மூ. இ. அ. 639). ஆனால அந்தந்த கேஸின் நிலைமைக்கு தக்கபடி ருஜுபாரம மாறக் கூடும். இது யெப்படி யெனில்—

(1) பொது சொத்து எவ்வளவுமில்லை. அன்னியில் பிரதிவாதியின் வசத்தில் குடும்பசொத்து ஒருநாளு மிருந்ததில்லை. பிரதிவாதியுடையசொத்து பொதுசொத்தின் உதவியைக்கொண்டு சம்பாதிக்கப்பட்டதென்று வாதிகக்ஷிபேசினால் அவனே அந்த அம்சத்தை ருஜுபடுத்தவேண்டியது.

(2.) சேர்ந்த குடும்பத்தில் ஒருபாகஸ்தனுடைய பெண்சாதிபேரால் சில சொத்தாவது பத்திரமாவது இருக்கிறது. அது பொதுசொத்தென்று சொல்லுகிறவனே ருஜுபாரத்தை வகிப்பான். (இ. லா. ரி. 2 ம. 214).

6-வது அத்தியாயம்.

கடன்கள்.

தகப்பன் பாட்டன் கடன்கள்—தரும சாஸ்திரங்கள்.

152. கடனாளியாக இறந்தவன் வேறொரு ஜன்மத்தில் கடன்காரன் வீட்டில் ஊழியனாகவாவது வேலைக்காரனாகவாவது நாலுகால் பிராணியாகவாவது பிறப்பானென்றும், சந்நியாசியா யிருப்பவன் கடனாளியாக இறந்தால் அவன் செய்த புண்ணியமெல்லாம் கடன்காரர்களுக்கு சேருமென்றும், அதினால் தகப்பனாவது பாட்டனாவது கடனாளியாக இறந்தால் அவர்களிட மிருந்துயேதாவது சொத்து கிடைத்திருந்தாலும்சரி கிடைத்திராவிட்டாலும்சரி கடன்களைத் தீர்த்து அவர்களை பாவத்திலிருந்து விடுவிப்பது பிள்ளையுடையவும் பேரனுடையவும் கடமையென்றும் இந்து தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. தகப்பனுடைய கடன்களை வட்டியுடன்கொடுத்து தீர்கக பிள்ளை கட்டுப்பட்டவனென்றும் பாட்டனுடைய கடனை வட்டி அன்றியில் குடுத்து தீர்க்க பேரன் கட்டுப்பட்டவனென்றும் பிரஹஸ்பதி சொல்லியிருக்கிறார்.

153. தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கிறபடியே அதாவது தகப்பன் பாட்டனிடத்திலிருந்து யெவ்வளவேனும் சொத்து அடையாம லிருந்தாலும் அவர்களுடைய கடன்களை தங்களுடைய சுவபார்ஜித சொத்தைக் கொண்டாவது தீர்க்க பிள்ளையும் பேரனும் கட்டுபட்டவர்களென்று முன்காலத்தில் சில தீர்ப்புகள் செய்யப்பட்டன. (2 பம். ஐ. 64). ஆனால் தகப்பன் பாட்டனிடத்திலிருந்து யெவ்வளவு பிதரார்ஜித சொத்து கிடைத்திருக்கிறதோ அதின் பொருமானம் வரைக்கும் அவர்களுடைய கடன்களைத் தீர்க்க பிள்ளைகளும் பேரனும் கட்டுப்பட்டவர்களென்று இப்பொழுது தீர்ப்புகள் ஸ்திரப்பட்டிருக்கின்றன. (2 ம. ஐ. 336; 4 ம. ஐ. 1; இ. லா. ரி. 4 ம. 45; 1866-ம் ஷுத்து 7-வது கெ. பம்பாய் கவர்னமெண்டார் சட்டத்தைக்கூடப் பார்க்க வேண்டியது.) தகப்பனுடைய அல்லது பாட்டனுடைய சொத்து பிள்ளைக்கு அல்லது பேரனுக்கு கிடைத்தபிரகு அது நஷ்டமாய்ப் போனாலும் அவைகளை அவன் விரயஞ்செய்துவிட்டாலும் அந்த தகப்பனுடைய அல்லது பாட்டனுடைய கடன்களை கொடுக்கும்படியான கடமை விட்டுப்போகமாட்டாது. (இ. லா. ரி. 6 பம். 309).

தீர்ப்புகள்.

154. சூது குடி துர்மார்க்கம் முதலிய அயோக்கியமான காரியங்களுக்காக தகப்பன் கடன்கள் வாங்கியிருந்தால் அவைகளை தீர்க்க பிள்ளை கட்டுபட்டவன் அல்லவென்றும் பிரதிப் பிரயோஜன மன்றியில் வாக்தானத்தாலாவது கன்னியா சுல்கத்துக்காகவாவது தகப்பன் பாக்கி கொடுக்க வேண்டியதாகயிருந்தால் அந்த பாக்கிகளை கொடுக்க பிள்ளை கட்டுப்பட்டவன் அல்லவென்றும் தர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (2 பாரே. 194). தகப்பன் ஆருக்காவது ஜாமீனாக யிருந்ததால் ஏர்பட்ட பாக்கிகளை பிள்ளை தீர்ப்பது அவசியமில்லையென்று சில ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட பாக்கிகளை தீர்க்க பிள்ளை கட்டுப்பட்டவனேயென்று தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன.;(இ. லா. ரி. 11 ம. 83). தகப்பனுக்கு ரோடப்பட்ட அபராதமாவது அபகறிக்கப்பட்ட பொருள் நிமித்தியமாக தகப்பன்பேரில் பெறப்பட்ட தீர்ப்பாவது பிள்ளைகளை பாதிக்கமாட்டாதென்று தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (இ. லா. ரி. 6 அ. 234). தகப்பனிடத்திலிருந்து பிள்ளைகளுக்கு யெவ்வளவு பிதரார்ஜித சொத்துக் கிடைத்திருந்தாலும் மேல் சொல்லப்பட்ட அயோக்கியமான

அயோக்கிய கடன்கள்.

கடன்களை தீர்க்க அவர்கள் கட்டுப்பட்டவர்களல்ல தகப்பனுடைய சுவயார்ஜித சொத்துமட்டில் அப்படிப்பட்ட அயோக்கியமான கடன்களுக்கு வகைசொல்லத்தக்கது

ருஜூ பாரம்.

தகப்பனுடைய கடன்களை அயோக்கியமான காரியங்களுக்காக வாங்கப்பட்டதென்கிற காரணத்தால் தங்களுக்கு கிடைத்திருக்கும் பிதரார்ஜிதசொத்தை அவைகள் கட்டுப்படுத்தமாட்டாதென்று பிள்ளைகள் வாதிக்கும்பொழுது அந்தக் கடன்களைப் பொருத்தே அந்த அம்சங்களை தெளிவான ருஜூவால் அவர்கள் ஸ்தாபிக்கவேண்டியது. தங்கள் தகப்பன் போக்கிரியாயாவது சூதாடியாகயாவது உதாரிச்சிலவுகாரனுகவாவது யிருந்தானென்று மாத்திரம் ருஜூப்போருது. (இ. லா. ரி. 10 க. 717; இ. லா. ரி. 14 பம். 320).

அனுவசியமான கடன்கள் — உதார கடன்கள்.

155. மேல்ப் பாருவில் சொல்லப்பட்டபடி தகப்பன் கடன்கள் அயோக்கியமான கடன்களாக யிருந்தால் மட்டும் அவைகளைத் தீர்க்கும் கடமை பிள்ளைகளுக்கு நீங்குமேயொழிய வேறு யெக்காரணத்தாலும் நீங்காது. அயோக்கியமான கடன்களாக யில்லாவிட்டால் அவைகள் குடும்பத்துக்கு அவசியமில்லாமலாவது உபயோகமற்ற சிலவுகளுக்காக வாங்கப்பட்டதாகவாவ திருந்தாலும் அவைகளைத் தீர்க்கும்படியான கடமை பிள்ளைகளுக்கு நீங்காது. (6 மூ. இ. அ. 421). அதாவது, அப்படிப்பட்ட கடன்களை தீர்க்கவேண்டிய விஷயத்தில் தகப்பனிடத்திலிருந்து பிள்ளைகளுக்கு கிடைத்த சொத்தெல்லாம் வகைசொல்லத்தக்கது. (இ. லா. ரி. 3 ம. 370; 14 க. ஐ. 187; இ. லா. ரி. 5 க. 148; இ. லா. ரி. 9 க. 389; இ. லா. ரி. 4 ம. 1). தகப்பனுடைய பிதரார்ஜித சொத்தில் அவன் யிருக்கையிலேயே பிள்ளைகளுக்கு சமானபாத்தியம் உண்டாவதால் இவர்களுடைய பாகம் அப்படி யாகமாட்டாதென்று சொல்ல நியாயமில்லை. பிதரார்ஜித சொத்தில் தங்களுடைய பாகங்களையெல்லாம் விட்டாவது தகப்பனை கடனிலிருந்து நீங்கினவனுக செய்வது பிள்ளைகளுடைய கடமையென்று தர்மசாஸ்திரங்கள் சொல்லியிருக்கின்றன.

தகப்பன் உயிருடனிருக்கையில் பிள்ளைகள் பேரில் தாவா.

156. தகப்பன் இறந்து அவன் சொத்து தங்கள் சுவாதீனத்திலிருக்கும் போதும் சன்னியாசி யாசிரமம் புகுந்ததைக் கொண்டாவது இருபது வருஷகாலமாய் தேசாந்திரம்போன காரணத்தைக்கொண்டாவது தீருத வியாதியால் பீடிக்கப்பட்டிரு

ப்படைதக் கொண்டாவது இறந்தவன்போலாகி அவனுடைய சொத்து தங்கள் சுவாதீனத்தில் வந்திருக்கும் பொழுதும் — இந்த சந்தர்ப்பங்களில்மட்டும் தகப்பன் கடன்கள் விஷயமாய் பிள்ளைகள் ஜவாப்தாரிகள் ஆவார்களேயன்றி சொத்து சேருவதற்குமுந்தி ஜவாப்தாரிகள் ஆக மாட்டார்கள்.' இந்த நிலமைகளில் தவிர வேறு யெக்காலத்திலும் தகப்பன் ஜீவித்திருக்கையில் அவன் கடன்களைப்பத்தி பிள்ளைகள் பேரில் பிறுது செல்லமாட்டாது. (1851-ம் ௵ ம. தீ. 33).

157. குடும்பத்தின் யாவத்து சொத்தையும் தகப்பன் தன் கடன்களுக்காக ஒத்திபந்தகம் முதலிய பாத்தியங்களுக்கு உட்படுத்தவும், விர்க்கவும் கூடும். அந்த கடன்கள் குடும்பத்துக்கு அனுவசிகமாகயிருந்தாலும் பாதகமில்லை. ஆனால் அயோக்கியமான கடன்களுக்காக தன்னுடைய தகப்பன் தன்னுடைய சுவயார்ஜித சொத்தையும் பிதரார்ஜித சொத்தில் தன் பாகத்தைமட்டும் விர்கலாம், அல்லது பாத்தியப்படுத்தலாம். பிள்ளைகளுடைய பாகத்தின் பேரில் அவனுக்கு யாதொரு அதிகாரமுமில்லை. (14 க. ஐ. 187; 15 க. ஐ. 264; இ. லா. ரி. 3 க. 1; இ. லா. ரி. 4 ம. 1, 73; இ. லா. ரி. 1 பம். 262; இ. லா. ரி. 2 பம். 498; இ. லா. ரி. 5 பம். 622; இ. லா. ரி. 3 அ. 625, 125; இ. லா. ரி. 6 பம். 520; இ. லா. ரி. 8 க. 517; இ. லா. ரி. 5 ம. 61; இ. லா. ரி. 7 பம். 438; இ. லா. ரி. 8 பம். 481; இ. லா. ரி. 9 ம. 343; இ. லா. ரி. 11 க. 396).

குடும்ப சொத்தை தகப்பன் தன் கடன்களுக்காக பாத்தியப்படுத்தலாம் — விர்க்கலாம்.

மேல் சொல்லப்பட்டபடி தகப்பன் தன்னுடைய கடன்களுக்காகக் குடும்பசொத்தை பாத்தியப்படுத்தினாலாவது விற்றாலாவது, பிள்ளைகள் மைனர்களாயிருந்தால் அந்த பாத்தியமாவது கிரயமாவது செல்லுமே ஒழிய, பிள்ளைகள் தக்கவயது வந்தவர்களாயிருக்கையில் அவர்கள் அனுமதி அன்றியில் அவைகள் செல்லமாட்டாதென்று கல்கத்தா ஐகோர்ட்டார் சில கேசுகளில் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 6 க. 749, 253; இதர்க்கு விரோதம் இ. லா. ரி. 4 அ. 309). இப்படி கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்தாலும், அந்த பாத்தியமாவது கிறயமாவது செல்லாமலிருக்கையில் அவைகள் நிமித்தமாக கொடுக்கப்பட்டபணம் ஒரு கடனாக யேற்படுமாகையால் அந்த கடனை தீர்க்கும்படியான பாரம் யெல்லாசொத்தையும் பொருக்குமென்று - அவர்களே தீர்மானித்தார்கள். ஆகையால் பிள்ளைகள் தக்க வயது அடைவதை பொருத்த நியாயத்தால் விசேஷ நன்மை தென்படவில்லை. (இ. லா. ரி. 6 க. 135, 138; இ. லா. ரி. 9 க. 495).

அதுவரையில் யேர்ப்பட்டிருந்த கடன்களுக்காக மேற்சொல்லப்பட்ட குடும்பசொத்தைத் தகப்பன் பாத்தியப்படுத்தவாவது விர்க்கவாவது கூடும். (இ. லா. ரி. 6 க. 138; இ. லா. ரி. 10 க. 538; இ. லா. ரி. 8 அ. 279; இ. லா. 7 ம. 39). அதுவரையில் கடனில்லாமலிருக்கையில் குடும்பசொத்தைத் தகப்பன் பாத்தியப்படுத்தினுலாவது வித்தாலாவது அந்த பாத்தியத்தாலாவது விர்ப்பனைசெய்தாவது தகப்பனுல் அடையப்பட்ட பணம் ஒரு கடனுகுமாகையால் அந்த கடனுக்காக பிருதுசெய்து அப்படி பாத்தியப்படுத்தப்பட்ட அல்லது கிறயம் செய்யப்பட்ட சொத்தின் ஐவாப்தாரியைக்கொண்டு தீர்த்துக்கொள்ளும்படி தீர்ப்புபெரலாமென்று கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். (இ. லா. ரி. 5 க. 855; இ. லா. ரி. 8 க. 131; விரோதமாக இ. லா. ரி. 9 அ. 493).

தகப்பன்பேரில் மட்டும் பிருது, அல்லது டிக்ரி அமல்.

158. தகப்பனுடைய அயோக்கியமில்லாத கடன்களுக்காக குடும்ப சொத்து பாத்தியப்படுத்தப் பட்டிருந்தால் அந்த பாத்தியமுள்ளவன் தகப்பன்பேரில் மட்டில் பிருது செய்து தீர்ப்பு பெற்றிருந்தாலும் தீர்ப்பை நிறைவேற்றுகிற நடவடிக்கையில் பிள்ளைகள் பாகமுள்பட பிதரார்ஜித சொத்து முழுவதையும் ஐப்திசெய்து ஏலம்போடச் செய்யக்கூடும். (இ. லா. ரி. 3 க. 148; இ. லா. ரி. 4 ம. 1; இ. லா. ரி. 9 ம. 343; இ. லா. ரி. 5 ம. 251; இ. லா. ரி. 8 க. 517; இ. லா. ரி. 8 ம. 388; இ. லா. ரி. 6 பம். 520; இ. லா. ரி. 10 க. 626; இ. லா. ரி. 8 அ. 205; இ. லா. ரி. 4 ம. 111). ஆனுல், அந்த நிலமையில் அந்த பாத்தியத்தை தீர்ப்பதர்க்காக பிள்ளைகளுக்குயிடம் கொடுக்காமல் சொத்தை ஏலம்போடச் செய்யக்கூடாது. (இ. லா. ரி. 4 ம. 1, 69; இ. லா. ரி. 8 க. 525; இ. லா. ரி. 8 பம். 481).

அப்படியே பாத்தியத்தின்பேரிலாவது ரொக்க பாக்கிக்காகவாவது தகப்பன்பேரில் தீர்ப்பு பெற்றபொழுது டிக்ரி நிறைவேறும் நடவடிக்கையில் பிள்ளைகளைக் கக்ஷிக்காரர்களாக சேர்க்காமலே குடும்ப சொத்து ஏலம் போடப்பட்டால் அந்த ஏலத்தால் பிள்ளைகள் கட்டுப்படமாட்டார்களென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (14 க. ஐ. 187; இ. லா. ரி. 5 க. 148; இ. லா. ரி. 15 க. 717; இ. லா. ரி. 12 ம. 142).

கோர்ட்டார்போடும் ஏலத்தில் "கடன்காரனுடைய யாவத்து சொத்தும் பாத்தியங்களும் ஏலம் போடப்படு" மென்று இஸ்தியார் பிரப்பிக்கப்படுகிறது. இதைக்கொண்டு தகப்பனுடைய பாத்தியம்

மாத்திரம் ஏலம் போடப்படுமென்று நினைக்கக்கூடாது. தன் கடன்களுக்காக குடும்பசொத்தை வினியோகம் செய்ய எவ்வளவு பாத்தியமிருக்கிறதோ அவ்வளவு பாத்தியமும் ஏலம்போடப்படுகிறதாக எண்ணவேண்டியது. (இ. லா. ரி. 13 க. 21). ஆனால், பிருதார்ஜியாலாவது நிறைவேற்றின நடவடிக்கையாலாவது ஏல சரட்டிபிகேட்டாலாவது ஏலத்தில்கிடைத்த மொத்தத் துகையைக் கொண்டாவது கடன்காரனுடைய பாத்தியமட்டில் அதாவது தகப்பனுடைய பாத்தியம்மட்டில் ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டதாக தெளிவாய் தென்பட்டால் அன்னிலைமையில் பிள்ளைகள் பாத்தியத்துக்கு கெடுதி உண்டாகாது. (இ. லா. ரி. 14 க. 572; இ. லா. ரி. 11 பம். 42; இ. லா. ரி. 10 ம. 241; இ. லா. ரி. 3 க. 198; இ. லா. ரி. 10 க. 698). எல்லாருடைய பாத்தியங்களும் ஏலத்துக்கு வந்ததாக சித்தாந்தத்தால் ஏர்பபட்டால் தீர்ப்பு நிறைவேறும் நடவடிக்கைகளில் ஏதேனும் கொஞ்சம் குறைவுகாணப்படுகிற காரணத்தைக்கொண்டு மட்டில் கோர்ட்டார் ஏலத்தை ரத்துசெய்யமாட்டார்கள். (14. மூ. இ. அ. 605; இ. லா. ரி. 10 க. 985; இ. லா. ரி. 11 பம். 361; இ. லா. ரி. 14 க. 401; இ. லா. ரி. 16 க. 40).

பிள்ளைகளால் தகரார் மனு.

159. தகப்பன்பேரில்மட்டில் தீர்ப்புபெற்று குடும்ப யாவதாஸ்தியும் ஏலம் போடப்பட்டபொழுது அந்த டிக்ரியில் கண்ட கடன்கள் 154-வது பாருவில் சொல்லப்பட்டபடி அயோக்கிய காரியங்களுக்காக வாங்கப்பட்டவைகளா யிருந்தால் அந்த அம்சத்தை பிள்ளைகள் தெளிவாய் ருஜுப்படுத்தி பிதரார்ஜித சொத்தில் தங்கள் பாகத்தைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடும். அந்த ஏலத்தில் சொத்தை கடன்காரனே எடுத்திருந்தால் அவன்பேரில் நடவடிக்கை நடத்தி பிள்ளைகள் தங்கள் பாகத்தை பெற்றுக் கொள்ளலாம். (இ. லா. ரி. 5 க. 855; இ. லா. ரி. 8 க. 522). ஆனால் கடன்காரன் அன்னியில் வேறுயாராயினும் ஏலத்தின் சொத்தை எடுத்திருந்தால் தீர்ப்பால் சம்பந்தப்பட்ட கடன்கள் அயோக்கியமானவைகளென்று ருஜு செய்வதோடு கூட அந்தசங்கதியை ஏலத்திர்க்கு முந்தியே ஏலதாரன் அறிந்திருந்தானென்று பிள்ளைகள் தெளிவாய் ருஜுப்படுத்த வேண்டும். அப்படி ருஜுசெய்யாத பக்ஷத்தில் பிள்ளைகள் பாகங்கள அவர்களுக்கு கிடைக்கமாட்டா - இப்படி சில கேசுகளில் பிரிவீகவுன்சிலார் தீர்மானித்தார்கள். (14 க. ஐ. 187; 22 ஸ. 56; இ. லா. ரி. 5 க. 148; இ. லா. ரி. 12 பம். 625; இ. லா. ரி. 8 பம். 481). தீர்மான கடன் தகப்ப

ஞல் அயோக்கியமான காரியங்களுக்காக வாங்கப்பட்ட தென்று பிருதர்ஜிமேலயே காணப்பட்டால் அந்த தீர்ப்பின்பேரில் நடத்தப்பட்ட ஏலத்தின் சொத்தைக் கொண்டவன் அந்த அயோக்கிய மென்கிற சங்கதியை தெரிந்துகொண்டே வாங்கினுனென்று எண்ணப்படுவான். ஆகையால் அன்னிலைமையில் எந்த ருஜுவாவது காரணமாவது அன்றியிலே பிள்ளைகள் தங்கள் பாகத்தை பெற்றுக் கொள்ளலாம். (இ. லா. ரி. 6 அ. 234). வேறுசில கேசுகளில் டிக்ரியின்பேரில் நடந்த ஏலத்தில் எடுத்த ஏலதாரன் டிக்ரிகடன் அயோக்கியமென்று கொஞ்சமேனும் அறியாமல் சொத்து வாங்கியிருந்தாலும் அவன்பேரில் பிருதுசெய்து பிள்ளைகள் தங்கள் பாகங்களை பெற்றுக்கொள்ளலாமென்று பிறிவீகவுன்சிலார் அவர்கள் அபிப்பிராயப்பட்டிருப்பதாக காணப்படுகிறது. (இ. லா. ரி. 13 க. 21; இ. லா. ரி. 15 க. 717; இ. லா. ரி. 12 ம. 142; இ. லா. ரி. 17 க. 584). இந்த விஷயம் மொத்தத்தில் சந்தேகமாகவே யிருக்கிறது. ஆகையால் தகப்பன்பேரில் பெற்ற டிக்ரியில் சம்பந்தப்பட்ட கடன்கள் அயோக்கியமானவைகளாயிருந்து பிதரார்ஜித சொத்தில் தங்களுடைய பாகத்தை காபாற்றிக் கொள்ள வேணுமென்று பிள்ளைகள் யெண்ணங்கொண்டால் அந்த தீர்ப்பு நிறைவேறும் நடவடிக்கையில் ஜப்தி நோட்டீஸாவது ஏல இஸ்தியாருவது பிறந்த உடனேயே அதாவது ஏலத்துக்கு முந்தியே தங்களுடைய பாத்தியங்களைக்கண்டு சிவில் புரொசீஜர் கோடு 278-வது பிறிவின்படி கோர்ட்டில் பாத்தியமனுக் கொடுப்பது மிகவும் அவசியம். இதுவும் அன்னியில் ஏலத்தில் சொத்தைவாங்க ஏர்ப்படும் எல்லாருக்கும் பிள்ளைகள் தங்கள் பாத்தியத்தைக்கண்டு நோட்டீஸ் கொடுக்கவேண்டியது.

டிக்ரி நிறைவேறுவதர்க்கு முந்தி தகப்பனிறத்தல்

160. கடன்களுக்காக தகப்பன்பேரில்மட்டில் தீர்ப்புபெற்று நிறைவேறும் நடவடிக்கைகள் நடத்தி சொத்தை ஜப்தி செய்வதர்க்கு முந்தி தகப்பன் இறந்தால் பிள்ளைகள் வசத்தில்போன பிதரார்ஜித சொத்தின்பேரில் அந்த டிக்ரியை நிறைவேற்ற நடவடிக்கை நடத்த அதிகாரமில்லை. தகப்பனுடைய சுவயார்ஜித சொத்தின்பேரில் மட்டில் நடவடிக்கை நடத்தலாம். பிதரார்ஜித சொத்தை கட்டுப்படுத்த வேண்டுமென்கிற யெண்ணமிருந்தால் தகப்பன் இறந்த ஆறுவருஷத்துக்குள் திரும்ப பிள்ளைகள்பேரில் பிருது செய்யவேண்டியது. (இ. லா. ரி. 13 ம. 265; இ. லா. ரி. 3 ம. 42; இ. லா. ரி. 5 ம. 232). அந்த டிக்ரிக்கு சம்பந்தப்பட்ட கடன்கள்

அயோக்கியமானவைகளா யிருந்தால் பிள்ளைகளுக்குச் சேர்ந்த பிதரார்ஜித சொத்தில் தகப்பனுடைய பாகங்கூட கடன்காரனுக்கு கட்டுப்படமாட்டாது. தகப்பன் ஜீவித்திருக்கையிலேயே தீர்ப்பை நிறைவேற்றி அவன் பாகத்தை ஜப்திசெய்திருந்தால் தக்கும். (இ. லா. ரி. 5 க. 148).

தகப்பன் சொத்துகளையும், கடன்களையும் பிள்ளைகள் பாகம் செய்து கொள்ளல்,

161. தகப்பன் இறந்தபிரகு சொத்தை பாகம்செய்துகொண்டால் தகப்பன் வாங்கின கடன்களைத் தீர்க்கத் தக்க ஏற்பாடுசெய்து மிகுந்தசொத்தை மட்டில் அவர்கள் பிறித்துக்கொள்ள வேண்டியது. (3 ம. ஐ. 177, 181). அப்படி ஏர்ப்பாடு செய்யாமல் சொத்தையும் கடன்களையும் சேர்த்து பிள்ளைகளெல்லாம் பிறித்துக்கொண்டால் அந்த பாகத்துக்கு கடன்காரன் சம்மதித்திருந்தாலொழிய அவர்களுடைய பாகங்களெல்லாம் கடன்களுக்கு ஜவாப்தாரியாக யிருக்கும்.

தகப்பனும் பிள்ளைகளும் பாகத்துக்குபிரகு தகப்பன் வாங்கின கடன்கள்.

162. தகப்பனும் பிள்ளைகளும் சொத்துகளைப் பிறித்துக்கொண்டு வெவ்வேறாக போனபிரகு தகப்பன் கடன்களை வாங்கினால் அவைகள் அவனுடைய சுவாதீனத்திலிருக்கும் சொத்தைக்கொண்டே தீர்க்க வேண்டியவைகளே ஒழிய பிள்ளைகளுடைய அனுபவத்திலிருக்கும் சொத்தை பாதிக்கமாட்டாது. பாகத்துக்குபிரகு தகப்பனுக்கு வேறொருபிள்ளை பிரந்தால் அவனுக்கு சேரும்படியான சொத்துமட்டில் மேல் சொல்லப்பட்ட கடன்களுக்கு கட்டுப்பட்டிருக்கும் இவைகளைத் தீர்க்க அந்தசொத்து போராவிட்டால் பாகம் பிறித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகள் தங்கள் அனுபவத்திலிருக்கிற சொத்தைக்கொண்டு தீர்க்கவேண்டியதென்று ஜீமூதவாகனர் சொல்லுகிறார். ஆனால், இக்காலத்தில் கோர்ட்டார் இந்த அபிப்பிராயத்தை அனேகமாய் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

தகப்பனுடைய கடன்களுக்காக பிள்ளைகள் தங்களுடைய சுவயார்ஜிதத்தை கொடுக்க கடமைப்பட்டவர்களல்ல.

பிள்ளை, பேரன், கொள்பேரன்கள்.

163 தகப்பன் வாங்கின கடன்களை பிள்ளைகள் தீர்க்கிற விஷயமாக மேல் சொல்லப்பட்ட விதிகளெல்லாம் கடன்கள் விஷயத்தில் பேரனுக்கும், மூப்பாட்டன் கடன்கள் விஷயத்தில் கொள்ப்பேரனுக்

கும் சொல்லத்தக்கவைகள். பிள்ளைகள், பேரன்கள் கொழூப்பேரன்கள் இந்த மூன்று பேரைத்தவிர சேர்ந்த குடும்பத்தில் எந்த பாகஸ்தனும் மைத்த எந்த பாகஸ்தனுலும் வாங்கப்பட்ட கடன்களைத் தீர்க்க கட்டுப்பட்டவனல்ல.

மைத்த பாகஸ்தர்கள்.

164. சேர்ந்த குடும்பத்தில் தகப்பனைத்தவிர வேறு எந்த பாகஸ்தனுகிலும் அதாவது பிள்ளைகள், அண்ணன், தம்பிகள் முதலியவர்கள் கடன்கள் வாங்கினுல் அப்படிப்பட்ட கடன்களுக்காக அவர்கள் பொதுசொத்தில் தங்களுடைய பாத்தியங்களை பாத்தியப்படுத்தவாவது கிறயம்செய்யவாவது கூடும். இதுவுமன்னியில் சேர்ந்த குடும்பத்திலுள்ள பாகஸ்தன் தன்னுடைய பாத்தியங்களை பாத்தியப்படுத்தியாவது கிரயம் செய்தாவது பணம் பெற்றுக் கொள்ளலாம். ஆனுல் அப்படி பணம் கொடுத்தவன் அந்த பாகஸ்தன் உயிரோடிருக்கையிலேயே பாகத்துக்காக பிறுதுகொடுத்து அந்தபாகத்தை ஜப்தி செய்துகொள்ள வேண்டியது. (இ. லா. ரி. 3 க. 198). இல்லாவிட்டால் அந்த பாத்தியமாவது கிரயமாவது செல்ல மாட்டாது. சேர்ந்த குடும்பத்தில் ஒருபாகஸ்தன் இறந்தால் அவனுடைய பாத்தியமெல்லாம் மைத்த பாகஸ்தர்களுடைய பாத்தியங்களில் கலந்து போய்விடுகிறது. ஆகையால், இறந்துபோன பாகஸ்தன் பேரில் அவன் கடன்காரன் தீர்ப்பு பெற்றிருந்தாலும் பிரயோசனமில்லை. அவன் உயிருட னிருக்கையிலேயே அவனுடைய பாகத்தை ஜப்தி செய்திருந்தால்தான் உபயோகப்படும். (11 பம். ஐ. 76; இ. லா. 2 பம். 479; இ. லா. ரி. 8 அ. 495; இ. லா. ரி. 11 அ. 302; 3 க. ஐ. 34–37; இ. லா. ரி. 7 க. 52, 54; 1 மதிறுஸ் லா ரிபோர்ட்டு 63; 4 அ. ஐ. 137; இ. லா. ரி. 3 க. 198; இ. லா. ரி. 5 க 148; இ. லா. ரி. 7 அ. 731; இ. லா. ரி. 4 ம. 302). இறந்துபோனவனுடைய சுவயார்ஜித சொத்தின்பேரில் தடையன்னியில தீர்ப்பை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

சேர்ந்த குடும்பத்தில் தகப்பனுடைய அல்லது மைத்த பாகஸ்தர்களுடைய கடன்கள்.

165. ஒரு ஆஸ்திதாரனுடைய கடன்களைத் தீர்க்கிற விஷயமாய் மேல் சொல்லப்பட்டபடி அவனுடைய பிள்ளை, பேரன், கொள்ப்பேரன்-இவர்கள் மட்டும் கட்டுப்பட்டவர்களே ஒழிய அவனுடைய பெண்சாதி, தாயார், தகப்பன், அண்ணன்,

சொத்தை யடைந்த வார்சுதாரர்கள் ஜவாப்தாரி.

தம்பி, சிறியதகப்பன், பெரியதகப்பன் முதலியவர்கள் கட்டுப்பட்டவர்களல்ல. (இ. லா. ரி. 354; இ. லா. ரி. 10 ம. 316; 1855-ம் ஸு ம. தீ. 183). ஆனால், இவர்களில் யெவறாயினும் அந்த ஆஸ்திதாரனுடைய வார்சுகளாக அவனுடைய சொத்தை அடைந்திருந்தால் அந்த சொத்து விலைவரையில் அவனுடைய கடன்களை தீர்க்க கடமைப்பட்டவராவார். (இ. லா. ரி. 3 ம. 359; 7 ம. 586). வார்சுகளாகயிருந்தும் இறந்துபோனவனுடைய சொத்தை கொஞ்சமேனும் அவனுடைய கடன்கள் விஷயமாய் கொஞ்சமேனும் அடையாமலிருந்தால் அவனுடைய கடன்கள் விஷயமாய் கொஞ்சமேனும் ஜவாப்தாரியல்ல. மேலும், இறந்துபோனவன் சொத்து மைத்தவர்கள் சுவாதீனத்துக்கு போய் அவர்கள் கொடுக்காவிட்டால் தக்க பிரயாசை எடுத்துக்கொண்டு அதை தங்கள் வசப்படுத்திக்கொண்டு கடன் குடுத்தவர்களுக்கு நஷ்டம் உண்டாகாமலிருக்கும்படி செய்ய வார்சுதாரர்கள் கட்டுப்பட்டவர்களலல. ஒரு கேசில் ஒரு விதவையின் அசட்டையால் அவள் புருஷனுடைய சொத்தை அவள் சகோதரனும் தகப்பனும் பிடிங்கிக்கொண்டார்கள். அவள் புருஷன் கடன்காரனுக்கு இவர்களே வகைசெய்ய வேண்டியவர்களே ஒழிய விதவை யல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. (2 டப்ளியூ மேக்னாடன் 286).

வார்சாக யில்லாதவர்கள் இறந்துபோனவனுடைய சொத்தை அக்கிரமமாக சுவாதீனப் படுத்திக்கொண்டிருந்தால் அந்த மொத்த ஆஸ்திவரைக்கும் அவர்கள் கடன்காரனுக்கு ஜவாப்தாரியா யிருப்பார்கள். அவர்கள் பேரில் இறந்துபோனவனுடைய கடன்காரன் பிறாது செய்தபொழுது தங்களுக்கு கொஞ்சங்கூட சொத்து சேரவில்லையென்றாவது, சேர்ந்த ஆஸ்திமுழுவதும் அவசியமான சிலவுகளுக்காகவாவது, அல்லது இறந்துபோனவனுடைய சிறார்த்தம் முதலிய கருமங்களுக்காகவாவது அவனுடைய இதர கடன்களுக்காகவாவது விரயம் செய்யப்பட்டு போய்விட்டதென்றாவது ருஜுசெய்தால் அவர்களுடைய ஜவாப்தாரி நீங்கிப்போகும். ஆனால், அந்த சொத்தை தங்களுடைய சொந்த சிலவுகளுக்காக வினியோகம் செய்துகொண்டிருந்தால் ஜவாப்தாரி நீங்கமாட்டாது.

பறாதீனங்கள்.

166. கடன்காரனுக்கு சேறாமலிருக்கும்படி செய்யவேணுமென்ற கெட்ட எண்ணத்தோடு யாறாவது தம்முடைய சொத்தை மோசமாய் ஒன்றுசேர்ந்து மிகவும் குறைந்த பிரதி பிரயோசனத்துக்காகவாவது பிரதி பிர

யோசனம் அன்றியிலாவது வினியோகம் செய்தால் அப்படிப்பட்ட வினியோகம் செல்லமாட்டாது. அந்த ஆஸ்தியின் பேரில் கடன்காரன் தன் தீர்வை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனால், மோசம் செய்யும் எண்ணம் கொஞ்சம்கூட அன்னியில் தக்க பிரதி பிரயோசனத்தை அடைந்தாவது பிரதி பிரயோசனம் அடையாமல் போனாலும் நியாயமான நிலமையில் தானமூலமாகவாவது உயில் மூலமாகவாவது செய்யப்பட்ட பருதீனம் செல்லாமல் போகமாட்டாது. (4 ம. ஐ. 84; இ. லா. ரி. 6 அ. 560; 21 ல. 155).

ஒரு ஆஸ்திதாரனுடைய வார்சுதாரன் மோசமில்லாமல் தகுந்த பிரதி பிரயோசனத்தை அடைந்து அவனுடைய சொத்தை விக்கிரயம்செய்தால் அல்லது மைத்தப்படி நியாயமான வழிகளில் பருதீனம் செய்தாலாவது இறந்துபோனவனுடைய கடன்காரனுக்கு அந்த சொத்தின்பேரில் ஒருபாத்தியமும் யிருக்கமாட்டாது. (2 ல. 296; 9 பம். ஐ. 116; 12 பம். ஐ. 78). அந்த பருதீனம் செய்த வார்சுதாரன் அந்த சொத்தின் விலைவரையில்தான் ஜவாப்தாரியாக யிருக்கிறான்.

167. இதுவரையில் இந்த அத்தியாயத்தில் கடனாளியின் சொத்தை அடைந்தவர்களுக்கு அவன் கடன்களைத் தீர்க்கும் விஷயத்தில் உண்டாகும் கடமையை தெரிவித்தோம். சில சந்தர்பங்களில் சொத்தை அடைந்த காரணமில்லாமலே ஒருவன் வாங்கின கடன்களை மைத்தொருவன் கொடுக்கக் கடமைப்பட்டவனா யிருப்பான். அது எப்படியெனில் —

பெண்ஜாதி, வேலைக்காரன், சிஷியன் முதலியவர்கள் வாங்கின கடன்கள்.

(1.) சேர்ந்த குடும்பத்தில் குடும்பசிலவுக்காக குடும்ப தகப்பன் வாங்கின கடன்களுக்கு குடும்பசொத்து முழுவதும் ஜவாப்தாரியா யிருக்கிறது. மேலும் பாகஸ்தர்களெல்லாரும் ஜவாப்தாரிகளா யிருக்கிறார்கள்.

(2.) அவசியமான வீட்டுவேலைகளுக்காக பெண்சாதி வாங்கிய கடனை புருஷன் தீர்க்கவேண்டியது. (1 டப்ளியூ மெக்னடன் 286).

(3.) சிஷன் வேலைக்காரன் முதலியவர்கள் வீட்டுச்சிலவுக்காக கடன்வாங்கினால் தீர்ப்பதர்க்கு எஜமானன் கட்டுப்பட்டவன்.

(4.) அதிகாரத்தை மீறாமல் ஏஜண்டு செய்த நியாயமான கடன்களைத் தீர்க்க எஜமானன் கட்டுப்பட்டவன்.

(5.) சேர்ந்த குடும்பத்தார்கள் கூட்டாக வியாபாரம் செய்தால் அந்த வியாபாரத்துக்காக அவர்களில் ஒருவர்மட்டும் கடன்கள் வாங்கினல் தீர்ப்பதர்க்கு எல்லாரும் கட்டுப்பட்டவர்கள். (இ. லா. ரி. 1 க. 475). சேர்ந்த குடும்பத்தின் தலேவனு யிருப்பவன் பொதுக் குடும்ப கூட்டு வியாபாரத்துக்காக குடும்பசொத்தை பாத்தியப்படுத்தி அந்த பாத்தியத்தைக்கொண்டு அவன்பேரில்மட்டில் பிறுது செய்யப்பட்டு சொத்து ஏலத்தில் போடப்பட்டுபோனல் மைத்த பாகஸ்தர்கள் பிரதிவாதிகளாக சேர்க்கப்படவில்லே என்கிற காரணத்தைக்கொண்டு ஏலம் ரத்துசெய்யப்படமாட்டாது. (இ.லா. ரி. 15 க 70). பாத்தியத்தின்பேரில் இல்லாமல் ரொக்க பாக்கிக்காக சேர்ந்த குடும்பத்தின் தக்கவன் பேரில்மட்டில் பிறுதுசெய்து டிக்ரிபெற்றல் அந்த பாக்கி குடும்பார்த்தமாக ஏர்ப்பட்டிருந்தாலும் குடும்ப சொத்தில் தலேவனுடையபாகத்தைமட்டில் அந்த டிக்ரி பாதிக்குமே ஒழிய மைத்த பாகங்களே பாதிக்கமாட்டாது. இப்படி பம்பாய் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறர்கள். (இ. லா. ரி. 6 பம். 564; இ. லா. ரி. 11 பம். 700).

7 — வது அத்தியாயம்.

சொத்துவினியோகங்கள், தானங்கள்.

168. இந்த அத்தியாயத்தில் கொதுவை கிரயம் தானம் முதலிய மார்க்கங்களில் சொத்தை பராதீனம் செய்வதர்க்கு சேர்ந்த குடும்பத்தில் தகப்பனுக்கும் மைத்த பாகஸ்தங்களுக்கும் உள்ள அதிகாரம் மிதாக்ஷர தாயபாக தர்ம சாஸ்திரங்களின்படி வித்தியாசப்படுவதால் முதலில் மிதாக்ஷரப்படிக்குள்ள நியாயங்களே விவரமாகசொல்லி பிரகு தாயபாகத்திலுள்ள வித்தியாசங்கள் தெரிவிக்கப்படும்.

பராதீனங்கள்.

169. புத்திர சந்ததி அதாவது பிள்ளே, பேரன், கொள்ப்பேரன்கள்-இல்லாத ஆஸ்திதாரன் அண்ணன் தம்பி வகைறக்களுக்கு பொதுவாய்யில்லாத தன் யாவத்து சொத்தையும் அது அசையும் பொருளாயிருந்தாலும்சரி அசையாப் பொருளா யிருந்தாலும்சரி சுவயார்ஜிதமாயிருந்தாலும்சரி பிதரார்ஜிதமா யிருந்தாலும்சரி அவனுக்கு இஷ்டம்வந்தபடி அட்டியன்னியில் பராதீனம் செய்யலாம். (2 மூ. இ. அ. 54; 6 மூ. இ. அ. 309; 3 பம். ஐ. 6; 4 அ. ஐ. 31; 1 ம. ஐ. 51).

புத்திர சந்ததியற்ற ஆஸ்திதாரன்.

170. புத்திரசந்ததி உள்ள ஆஸ்திதாரன் தன்னுடைய சுவயார்ஜித சொத்தைமட்டில் பராதீனம் செய்யலாம். சுவயார்ஜித மானாலும்கூட அசையாப் பொருளை பராதீனம் செய்ய தகப்பனுக்கு சம்பூர்ண பாத்தியமில்லை என்று முன்காலங்களில் சில கேசுகளில் தீர்ப்பு செய்யப்பட்டது. (1866-ம் ஸூ ம. தீ. 227; 1862-ம் ஸூ ம. தீ. 41; 1853-ம் ஸூ ம. தீ. 61; 3 ம. ஐ. 55; 1 அ. ஐ. 153; 12 மூ. இ. அ. 38). ஆனால், இப்பொழுது ஜங்கமமாயிருந்தாலும்சரி ஸ்தாவரமா யிருந்தாலும்சரி சுவயார்ஜித சொத்தை பிள்ளைகளுடைய இஷ்டம் அன்னியிலேயே தன் இஷ்டப்படி பராதீனம் செய்ய தகப்பனுக்கு முழு அதிகாரம் உண்டென்று எல்லா ஐகோர்ட்டார்களும் பிறிவீகவுன்சிலார்களும் கூட தீர்மானித்திருக்கிறார்கள். (12 க. ஐ. 430; 10 ஸ. 287; 9 மூ. இ. அ. 96, 121; 3 பம். ஐ. 318; இ. லா. ரி. 1 அ. 394; இ. லா. ரி. 10 ம. 251; இ. லா. ரி. 10 பம். 528; 6 மூ. இ. அ. 77; 4 மூ. இ. அ. 103; 6 ஸ. 71, 77; 7 ஸ. 57; 8 ஸ. 15; 11 ஸ. 436).

தகப்பனுடைய சுவயார்ஜித சொத்தின்பேரில் அவனுக்குள்ள பாத்தியம்.

171. தகப்பனும் பிள்ளைகளும் பாகம் செய்துகொண்டு பிரத்தியேகமா யிருக்கையில் தகப்பனுடைய சொத்தையும் பாகத்துக்கு பிரகு அவன் சம்பாதித்த சொத்தையும் அவன் இஷ்டப்படி பராதீனம் செய்யலாம். 1862-ம் ஸூ ம. தீ. 1).

பாகத்துக்கு பிரகு தகப்பன் சொத்தின்பேரிலவனுக்குள்ள பாத்தியம்.

172. சேர்ந்த குடும்பத்தில் பிதரார்ஜித சொத்தை தனக்கு இஷ்டம் வந்தபடி பராதீனம் செய்ய தகப்பனுக்கு பாத்தியமில்லை. ஜங்கமமான பிதரார்ஜித சொத்தின்பேரில் தகப்பனுக்கு சர்வ அதிகாரமும் உண்டென்றும் அதன் விஷயமாக தகப்பன்செய்த பராதீனங்களை ஆக்ஷேபிக்க பிள்ளைகளுக்கு பாத்தியமில்லை, என்றும் சிலர் சொன்னார்கள். முந்தியகாலத்தில சில தீர்ப்புகளில்கூட இந்த அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது (3 ம. ஐ. 455; இ. லா. ரி 4 ம. 47; 4 ம. ஐ. 60; 4 அ. ஐ. 63; 12 மூ. இ. அ. 38; இ. லா. ரி. 1 ம. 252). குடும்ப சிலவுகள் சாஸ்திரப்படிக்குள்ள பிராதியால் கொடுக்கப்பட்ட தானங்கள் வேறு சில விதிக்கப்பட்டிருக்கிற காரியங்கள் இவைகளுக்காக மட்டில் ஜங்கமமான பிதரார்ஜித சொத்தின்பேரில தகப்பனுக்கு அதிகாரம் உண்டெ

பிதரார்ஜிதத்தின் பேரில் தகப்பனுக்குள்ள பாத்தியம்.

விதிக்கப்பட்ட காரியங்களுக்காக ஜங்கம சொத்தின் பேரிலுள்ள பாத்தியம்.

ன்று மிதாக்ஷர கிரந்தத்தால் காணப்படுகிறது. பிந்திய தீர்ப்புகள் இந்த அபிப்பிராயத்தை அனுசரித்திருக்கின்றன. அதாவது மேல் சொல்லப்பட்ட காரியங்களைத் தவிர வேறு விஷயங்களுக்காக ஜங்கமமான பிதரார்ஜித சொத்தின்பேரில் கூட தகப்பனுக்கு அதிகாரமில்லை. ஆகையால் அவைகளைத் தன் இஷ்டப்படி பராதீனம் செய்யவாவது பிள்ளைகள் முதலியவர்களுக்கு தனக்கு இஷ்டமுண்டானபடி பிறித்துவைக்கவாவது அவன் பாத்தியஸ்தன் அல்ல. (இ. லா. ரி. 1 பம் 561; இ. லா. ரி. 10 பம். 545; இ. லா. ரி. 7 ம 357).

மைத்த விஷயங்களில் பிள்ளைகளுக்கும் தகப்பனுக்கும் பிதரார்ஜிதத்தில் சமமான பாத்தியம்.

173. மேல் சொல்லப்பட்ட சாஸ்திரத்தில் கட்டளையிடப்பட்ட காரியங்கள் நிமித்தியமாக ஜங்கமமான பிதரார்ஜித சொத்தின்பேரிலும் தானாவது தன் தகப்பனாவது, பாட்டனாவது, முப்பாட்டனாவது வாங்கியிருந்த கடன்கள் நிமித்தியம் யெல்லா பிதரார்ஜித சொத்தின்பேரிலும் இதுகளைத் தவிர மைத்த விஷயங்களில் பிதரார்ஜித சொத்தின்பேரில் பிள்ளைகளைக் காட்டிலும் தகப்பனுக்கு அதிகபாத்தியமில்லை. சேர்ந்த குடும்பத்தில் தகப்பனும் பிள்ளைகளும் சமான பாகஸ்தர்களாவதால் தகப்பன் மானேஜருக மட்டில் எண்ணப்படுவான். (2 ம. ஐ. 417; 4 ம. ஐ. 61; 6 ஸ. 256; 7 அ. ஐ. 279; 1 அ. 77). ஆகையால் அவசியமான விதிக்கப்பட்டிருக்கிற காரியங்கள் அன்னியில் சாதாரணமாய் அவன் பிதரார்ஜித சொத்தை பிள்ளைகளுடைய அனுமதி அன்னியில் அவன் பராதீனம் செய்யக்கூடாது. தகப்பன் செய்த பிதரார்ஜித சொத்து பராதீனங்களை பிள்ளைகள் ஆக்ஷேபித்தால் ருஜூ பாரத்தை சாமான்னியமாக அவர்கள் எதிர்கக்ஷிக்காரரைப் பொருக்கும் அதாவது அந்த பராதீனங்கள் அவசியமான காரியங்களுக்காக செய்யப்பட்டதென்று இவர்கள் ஸ்தாபிக்கவேண்டியது. (இ. லா. ரி. 5 ம. 337; இ. லா. ரி 8 ம. 75; இ. லா. ரி. 13 ம. 51; 2 பம். ஸ. தீ. 75; 6 பம். ஸ. தீ. 71; 8 ஸ. 15; இ. லா. ரி. 2 அ. 635; 3 க. ஐ. 21; 11 ஸ. 343; 1860 – ம் ஞ ம. தீ. 227).

தகப்பன் செய்த பராதீனங்களுக்குப் பிள்ளைகள் சம்மதி – ஆக்ஷேபிக்கும் பாத்தியம்.

174. தகப்பனால் அனியாயமாகச் செய்யப்பட்ட பிதரார்ஜித சொத்து பராதீனங்களைப் பிள்ளைகள் ஆக்ஷேபித்து ரத்துசெய்துகொள்ளக்கூடிய பாத்தியம் அப்படி பராதீனங்கள் செய்யப்பட்ட பொழுது பிறந்திருந்த அல்லது கர்ப்பத்திலிருந்த பிள்ளை

களுக்கு மட்டுமே உண்டு. ஆகையால் பராதீனங்கள் செய்யப்பட்ட காலத்தில் பிள்ளை யில்லாமலிருந்தாலும் இருந்த பிள்ளைகள் பராதீனங்களுக்கு சம்மதித்திருந்தாலும் அதர்க்கு பிரகு கர்ப்பத்திலிருந்து பிரந்தபிள்ளை அந்த பராதீனங்களை ஆக்ஷேபிக்க பாத்தியஸ்தனுகமாட்டான். (5 அ. ஐ. 113; 8 ஸ. 16, 21; 15 க. ஐ. 187; 22 ஸ. 56). பராதீனங்கள் செய்யப்பட்ட காலத்தில் பிள்ளையின் சம்மதியில்லாமலிருந்தாலும் பிரகு அவன் ஸம்மதித்தால்போதும். ஆனல், இதர்க்குள் வேருெரு பிள்ளை பிரந்தால் அவனுடைய அனுமதியில் இவன் கட்டுப்பட்டவ னுகமாட்டான். அதாவது, முதல் முதலில் பிள்ளையின் சம்மதி அன்னியில் தகப்பனுல் செய்யப்பட்ட அனியாயமான பிதரார்ஜித சொத்து பராதீனங்களை அந்த பிள்ளை சம்மதிக்கிரதர்க்கு முந்தி பிரந்த புதுப்பிள்ளை ஆக்ஷேபித்து ரத்துசெய்யக்கூடும். (11 ஸ. 480).

பிரந்தவும் பிரக்கபோகிறவும் பிள்ளைகளுடைய சம்ரக்ஷணத்திர்க்காக தேவையாயிருக்கும் ஆதலால் பிதரார்ஜித சொத்தை ஒருவருக்கும் தகப்பன் தானம்செய்யக் கூடாதென்றும் விர்க்கக் கூடாதென்றும் மிதாக்ஷரத்தில் ஒரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்து பிள்ளை பிரக்கக் கூடியதாயிருக்கும் வரையில் பிதரார்ஜித சொத்தை தகப்பன் பராதீனம் செய்யப்படாதென்றும் அப்படி பராதீனம் செய்தால் தன்னுடைய ஸம்ரணத்துக்கு கெடுதி உண்டான காலத்தில் பிரகு கெர்ப்பத்திலிருந்து பிரந்த பிள்ளைகள் கூட அந்த பராதீனங்களை ஆக்ஷேபித்து ரத்து செய்துகொள்ளக் கூடுமென்றும் மதருஸ் சதர்கோர்ட்டாருக்கு கோர்ட்டு பண்டிதர்கள் அபிப்பிராயம் கொடுத்தார்கள். (1851 - ம் ஷு ம. தீ. 3). ஆனல் மேல் சொல்லப்பட்ட மிதாக்ஷர வாக்கியமானது நியாயத்தைக் காண்பிக்க மட்டில் ஏர்ப்பட்டதென்று எண்ணி தகப்பன்செய்த பிதரார்ஜித சொத்து பராதீனங்களை ஆக்ஷேபித்து ரத்து செய்து கொள்ளும்படியான பாத்தியம் பிள்ளைகளுக்கு உண்டாவதர்க்கு அந்த பராதீனங்கள் செய்யப்பட்டகாலத்தில் இவர்கள் பிரந்தாவது கர்ப்பத்தி லிருந்தாவது இருக்க வேண்டியதென்றும் பிந்தி கர்ப்பத்திலுண்டாகிற பிரந்த பிள்ளைக்கு ஆக்ஷேபிக்கும் பாத்தியம் இல்லை என்றும் மதருஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 4 ம. ஐ. 307; மேலும் இ. லா. ரி. 8 ம. 89).

தகப்பனுல் செய்யப்பட்ட பிதரார்ஜிதசொத்து பராதீன விஷயங்களாக பிள்ளைகளுக்கு எவ்வளவு பாத்திய மிருக்கிறதோ அவ்வள

வே பாத்தியம் பிள்ளைகள் இல்லாமற்போனால் பேரன்களுக்கும் பேரன்கள் இல்லாமற்போனால் கொள்ப்பேரன்களுக்கும் உண்டு.

175. தகப்பன்செய்த பிதரார்ஜித சொத்து பராதீனங்களை ஆக்ஷேபித்து ரத்து செய்துகொள்ளும் விஷயத்தில் ஔரச புத்திரனுக்கு (அதாவது பெற்ற பிள்ளைக்கு) எந்த பாத்திய மிருக்கிறதோ அதே பாத்தியம் சுவீகார பிள்ளைக்கும் உண்டு. சுவீகாரம் செய்துகொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்ட பெண்சாதி கொர்ப்பிணிக்கு ஒப்பாவாளென்றும், பெண்சாதிக்கு சுவீகார அதிகாரம் கொடுத்திருந்து சுவீகாரம் நடப்பதற்கு முந்தி தகப்பன் செய்த பராதீனங்களை சுவீகார பிள்ளை ஆக்ஷேபிக்கக் கூடுமென்று முந்தி சில கேசுகளில் அபிப்பிராயம் தெரிகிறது. (3 பம். ஸ. தீ. 367; 6 மூ. இ. அ. 320; 1852-ம் ஷை ம. தீ. 117). ஆனால், இப்பொழுது அந்த அபிப்பிராயத்துக்கு விரோதமாக, அதாவது, சுவீகாரத்துக்கு பிரகு பிதரார்ஜித சொத்து பராதீன விஷயங்களில்மட்டும் சுவிகாரப் பிள்ளைக்கி ஆக்ஷேபிக்கும் பாத்தியம் உண்டென்றும் சுவீகாரத்துக்கு முந்தி செய்யப்பட்ட பராதீனங்களை ஆக்ஷேபிக்க அவனுக்கு பாத்தியமில்லை என்றும் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. (11 ஸ. 436; இ. லா. ரி. 5 பம். 630).

சுவீகார பிள்ளைக்குள்ள ஆக்ஷேபனை பாத்தியம்.

176. பிதரார்ஜித சொத்தை பராதீனம் செய்கிற விஷயத்தில் தகப்பனுக்கு பூர்ண அதிகார மில்லாமலிருந்தாலும் அந்த காலத்திலாவது பிரகாவது பிள்ளைகள் ஒப்புக்கொண்டால் தகப்பன் செய்த பராதீனங்கள் செல்லும். (1860-ம் ஷை ம. தீ. 258; 1861-ம் ஷை ம. தீ. 37, 146; இ. லா. ரி. 12 க. 389). குடும்பசொத்தை வியாபாரத்தில் உபயோகப் படுத்திக்கொண்டு வருகையில் மானேஜரா யிருப்பவனுக்கு அந்த சொத்தை பராதீனம் செய்யும் விஷயத்தில் அதிகாரமில்லை. ஆனால், அவன் செய்த பராதீனங்களுக்கு மைத்த பாகஸ்தர்களுடைய அனுமதியிருந்ததுபோலவே பாவிக்கப்பட வேண்டியது. (இ. லா. ரி. 5 க. 792; இ. லா. ரி. 5 பம். 38; இ. லா. ரி. 14 பம். 194). எப்படிப்பட்ட பராதீனங்களா யிருந்தாலும் பிரகு ஒப்புக்கொள்ளப்பட்டால் செல்லாமற்போகாது. பிதரார்ஜித சொத்தை விற்று கிரயத்துகையைக் கொண்டு அவன் வேறுசொத்தை கிரயம்பெற்று அந்த சொத்தை பிள்ளைகள் சுவாதீனப் படுத்திக்கொண்டால் தகப்பன்செய்த பராதீனத்தை அவர்கள் ஒப்புக்கொண்டதாகவே எண்ணப்படும். (2 பம். ஐ. 318; 9 ஸ. 511). பராதீனத்துக்கு அனுமதிகொடுத்தால் சொத்தில் பாத்திய

ஒப்புக்கொள்ளுதல்.

முள்ள பாகஸ்தர்களெல்லாரும் சேரவேண்டும். சிலர்மட்டில் அனுமதி கொடுத்தால் அவர்கள்பாகம் வரையிலேயே அனுமதிசெல்லும். பிள்ளைகளுடைய அனுமதியுடன் பிதரார்ஜித சொத்தை தகப்பன் பராதீனம் செய்தால் அந்த பராதீனத்துக்கு பிரகு பிரந்த பேரன் அதனால் கட்டுப்பட்டவன். ஆனால் பராதீன காலத்திலேயே யிருந்து பாத்திபஸ்தனாக யேர்ப்பட்ட பேரன் கட்டுப்படமாட்டான். (9. ஸ. 337).

177. சேர்ந்த குடும்பத்துக்கு மானேஜராக யிருக்கும் தகப்பன் விதிக்கப்பட்ட அவசியமான காரியங்களுக்காக பிதரார்ஜித சொத்தை பராதீனம் செய்ய அதிகாரம் உள்ளவனென்று மேலே சொன்னோம். பிள்ளைகளெல்லாரும் மைனர்களா யிருந்து அனுமதி கொடுக்கத்தக்க நிலைமையிலில்லாம லிருக்கையிலே மட்டும் இந்த மேர்சொல்லிய அதிகாரம் உண்டென்று மிதாக்ஷர கிரந்தம் அபிப்பிராயப்படுகிறது. பிள்ளைகள் தக்கவயது வந்தவர்களா யிருந்தால் அவர்கள் அனுமதியை பெறுவது அவசியமென்று ஒருகேஸில் கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (13 ஸ. 30). ஆனால், பிந்திய சிலகேசுகள் இதர்க்கு வித்தியாசமான அபிப்பிராயத்தை ஸ்தாபித்திருக்கின்றன. (14 ஸ. 80; 1 ஸ. 96; இ. லா. ரி. 4 ம. 18). குடும்பத்துக்கு மானேஜராக இருப்பவன் தக்க வயதுவந்த பாகஸ்தர்களுடைய அனுமதியைப்பெற்றுக்கொண்டே சாதாரணமாய் பிதரார்ஜித சொத்தை பராதீனம் செய்கிறது வழக்கமாக யிருக்கிறது. இப்படி யிருந்தும் அவன் தானாகவே அவசியமான காரியங்களுக்காக பராதீனங்கள் செய்தால் அவைகள் தடையன்றியில் செல்லும். குடும்பத்தில் தக்க வயதுவந்த பாகஸ்தர்கள் தங்கள் அனுமதி கொடுக்கவில்லை என்ற காரணத்தைக்கொண்டு மட்டில் மானேஜருடைய அதிகாரம் செல்லாமல் போகமாட்டாது. (6 மூ. இ. அ. 393; 1859-ம் ஹை பம். ஸ. தீ. 1643; 1 ம. ஐ. 398; 21 ஸ. 196; இ. லா. ரி. 11 பம். 605).

அவசியமான காரியங்கள்.

178. ஜாக்கிறதையுள்ள ஆஸ்திதாரன் தன் சொந்த ஆஸ்தியை எவ்விதமாய் வினியோகம் செய்ய அதிகாரம் உள்ளவனோ அப்படிப்போலவே பொதுசொத்தை அவசியமான காரியங்களுக்காக பராதீனம் செய்ய மானேஜர் அதிகாரம் உள்ளவன். (6 மூ. இ. அ. 393). மானேஜரால் செய்யப்பட்ட பொதுசொத்து வினியோகமானது அவசியமோ அனவசியமோ லாபகரமோ இல்லையோ இந்த விஷயங்களை அந்தந்த கேஸின் நிலைமைக்குத் தக்கபடி நிச்சயிக்கவேண்டியது.

மானேஜருக்குள்ள அதிகாரம்.

குடும்பசொத்தை பாத்தியப்படுத்தவும் கிரயம் செய்யவும் கூட மானேஜருக்கு பாத்திய மிருந்தாலும கூடுமானவரையில் சொத்தை விர்க்காமல் பாத்தியப்படுத்தியே நிர்ப்பந்தங்களைத் தீர்க்கவேண்டியது. ஆனால், அதிகவட்டி முதலிய விஷயங்களில் பாத்தியப்படுத்துவதைக் காட்டிலும் விர்ப்பதே நலமாயிருக்கும். (3 க. ஐ. 423; 12 ஸ. 397; 13 ஸ. 30; 18 க. 311). ஆகையால், பாத்தியப்படுத்துவ தர்க்காவது விர்பதர்க்காகவாவது அவசியத்தை அந்தந்த நிலைமைகளில் யோசித்துப் பார்க்கவேண்டியது. (1 ஸ. 96; 6 ம. ஐ. 371; இ. லா. ரி. 2 பம். 666; 3 அ. ஐ. 4; 11 ஸ. 466; 14 ஸ. 72). கடன்களைத் தீர்க்கிறதர்க்கும் குடும்பத்திர்க்கு அவசியமான சிலவுகளை நடத்துவதர்க்கும் வேறு வழிகளிருக்கும் பொழுது காரணமன்னியில் அனுவசிகமாக செய்யப்பட்ட பிதரார்ஜித சொத்து பராதீனம் செல்லமாட்டாது. (1858-ம் வூ த்திய பம். ஸ. தீ. 802).

179. பராதீனத்தைக் குறித்து பிரகு தகரார் நேரிட்டகாலத்தில் அந்த பராதீனத்தைச் செய்யத்தகுந்த அவசியமிருந்ததென்று சொத்தைக் கொண்டவன் ருஜூப்படுத்த வேண்டியது. இல்லாவிட்டால், பராதீனம் செல்லமாட்டாது. அந்த அவசியம மானேஜருடைய கெட்ட சிலவுகளால் உண்டாயிருந்தாலும் பரவாயில்லை. ஆனால், கடன் கொடுத்தவன் கெட்ட செய்கையாலாவது தூண்டுதலாலாவது உண்டாயிருக்கக் கூடாது. மானேஜர் வசத்திலிருக்கும் குடும்பசொத்தை விர்க்கும்படியாவது அல்லது குத்தகைக்கு விடும்படியாவது அவ்விதமான பராதீனங்கள் செய்ய என்ன அவசியமிருக்கிறதோவென்று விசாரித்து அந்த பராதீனம் குடும்பத்தின் லாபார்த்தமாக செய்யப்படுகிறதென்று நிச்சயித்துக்கொண்டு பெத்துக் கொள்ளவேண்டியது. (6 ஸ. 193; 1859-ம் வூ பம். ஸ. தீ. 1643). அப்படி அவசியம் என்னகாரணத்தினால் உண்டானதென்று விசாரிக்கவேண்டுவதில்லை. (16 ஸ. 221; 8 க. ஐ. 38; 14 ஸ. 72). மானேஜர் பேரில் டிக்ரி பெறப்பட்டால் அந்த டிக்ரி நிமித்தம் பணம் கொடுத்து சொத்தை சுவாதீனப் படுத்திக்கொண்டவன் அந்தத் தீர்ப்பு எவ்வித மான கடன்களுக்காக ஏர்ப்பட்டதோ அவைகள் நியாயமான கடன்களா இல்லையா என்கிற விஷயங்களை விசாரிக்காம லிருந்தாலும் ரக்ஷிக்கப்படுவான். ஆனால் அந்த தீர்ப்பாலாவது அல்லது அதர்க்கு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளிலாவது அந்த கடன்கள் அயோக்கியமானவைகளென்றுவது எல்லா பாகஸ்தர்களும் சம்பந்தப்படாததாகவாவது காணப்பட்டால் மேற்சொல்லியபடி ரக்ஷிக்கப்படமாட்டான்.

கடன் கொடுக்கிறவன் விசாரித்துக்கொள்ள வேண்டிய சங்கதிகள்.

(14 க. ஐ. 187; இ. லா. ரி. 15 க. 317; 5 அ. ஐ. 89; 23 ஷ. 260; 24 ஷ. 231, 281, 364; 25 ஷ. 148, 185, 311; இ. லா. ரி. 2 க 213; இ. லா. ரி. 4 ம. 96).

தகுந்த ஜாக்கிரதையுடன் விசாரித்து அவசியமானதென்று நம்பி எவ்விதமான கெட்ட எண்ணமுமில்லாமல் பணம்கொடுத்து சொத்தை சுவாதீனப்படுத்திக் கொண்டவன் அந்தப்பணம் சரியாக செலவிடப்படும்படி ஜாக்கிரதைசெய்ய கட்டுப்பட்டவனல்ல (21 ஷ. 196; இ. லா. ரி. 2 ம. 339; 1861-ம் ௵ ம. தீ. 1).

180. பிதரார்ஜித சொத்துப் பராதீனங்களை ரத்து செய்யவேணுமென்று எத்தனப்பட்டால் அந்த பராதீனம் ஞாயமென்றாவது அனியாயமென்றாவது ருசு செய்யும்படியான பளு அந்தந்த கேஸின் நிலைமையைக் கொண்டுசொத்தை வாங்கிக்கொண்டவன் பேரிலாவது ரத்து செய்யப்பட வேணுமென்று கேழ்க்கிறவன்பேரிலாவது பொறுக்கும். (7 மூ. இ. அ. 418-420; 1 ம. ஐ. 398; இ. லா. ரி. 2 ம. ஐ. 371; 10 மூ இ. அ. 454; 3 அ. ஐ. 8; 18 ஷ. 77; இ. லா. ரி. 5 க. 363; இ. லா. ரி. 6 அ. 417; இ. லா. ரி. 8 அ. 279; இ. லா. ரி. 5 ம. 337; இ. லா. ரி. 8 ம. 75). 1882-ம் ௵ 4-வது நெ. டிறான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்டு 38-வது செக்ஷனை பார்க்கவேண்டியது.

ருஜூ பளு.

பிதரார்ஜித கடன்களுக்காகத் தான் அதுவரைக்கும் வாங்கியிருந்த அயோக்கியமில்லாத கடன்களுக்காகவாவது ரொக்கம் வாங்கிக்கொண்டாவது பிதரார்ஜித சொத்தை தகப்பன் பராதீனம்செய்தால் அந்த பராதீனத்துக்குத் தகுந்த அவசியம் இருந்ததென்றும் அந்தத்துகை குடும்பத்தின உபயோகத்துக்காக அவசியமா யிருந்ததென்றும் சொத்தை வாங்கிக்கொண்டவன் விவகாரம் உண்டான காலத்தில் ருஜூப்படுத்த வேண்டியது. (இ. லா. ரி. 16 ம. 76). தகப்பனன்றியில் வேறு பாகஸ்தன் தான் வாங்கின கடன்களுக்காக குடும்ப சொத்தின் தன் பாகத்தைமட்டும் அன்னியில மைத்த பாகங்களையும் சேர்த்து வித்தால் அல்லது அதின்பேரில் பெரப்பட்ட டிக்ரியைக்கொண்டு குடும்ப சொத்தெல்லாம் ஏலம் போடப்பட்டால் சொத்தை வாங்கினவன் அந்த கடன்கள் குடும்பத்துக்கு அயசியமான சிலவுகளுக்காக வாங்கப்பட்டனவென்று ருஜூப்படுத்தவேண்டியது. (6 ம. ஐ. 371; 8 ம. ஐ. 157; 2 அ. ஐ. 50; இ. லா. ரி. 1 ம. 354, 358; இ. லா. ரி. 5 க. 144; இ. லா. ரி. 4 ம. 73).

181. தகப்பன் அன்னியில் மைத்த பாகஸ்தன் வாங்கின கடன்களுக்காக அவைகள் குடும்பத்துக்காக வாங்கப்பட்டதென்கிற காரணத்தைக் கொண்டு குடும்ப சொத்து முழுவதும் பாத்தியப்படவேணுமென்று கேழ்க்கும்பொழுது எல்லா பாகஸ்தர்களையும் பிரதிவாதிகளாக சேர்த்துப் பிராது செய்யவேண்டியது. அப்படி செய்யாமல் ஒருவன் பேரிலேயே பிராது செய்தால் மைத்த பாகத்தின்பேரில் டிக்ரியை நிறைவேற்ற முடியாது. (இ. லா. ரி. 3 க. 198; இ. லா. ரி. 5 ம. 12, 125; இ. லா. ரி. 7 ம. 136; இ. லா. ரி. 8 ம. 208; இ. லா. ரி. 10 ம. 316; இ. லா. ரி. 11 க 293; இ. லா. ரி. 6 பம். 564; இ. லா. ரி. 7 பம். 91). சேர்ந்த குடும்பத்தின் மானேஜர்பேரால் மட்டுமிருந்து அவன் ஒருவன்பேரில்மட்டில் டிக்ரி பெத்து சொத்து ஏலத்தில் போடப்பட்டால் அந்த சொத்தில் எல்லா பாகஸ்தர்களுடைய பாத்தியங்களும் ஏலம் போடப்பட்டதாக எண்ணப்படும். (இ. லா. ரி. 10 க. 996, 1001; இ. லா. ரி. 5 ம 201, 205).

எல்லா பாகஸ்தர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்க்கவேணும்.

182. பிதரார்ஜித சொத்தைத் தகப்பன் பாழ் செய்யாமலிருக்கும்படி மேல் சொல்லப்பட்ட விதமாய் தர்ம சாஸ்திரங்களில் கட்டுப்பாடுகளேர்ப்பட்டிருந்தாலும் இந்த தர்மசாஸ்திரங்களிலேயே சொல்லப்பட்டிருக்கிற வேறு நியாயத்தாலும் அதுக்கு இக்காலத்தில் கோர்ட்டார் கொடுக்கும் அர்த்தத்தை கொண்டும் அந்த நிர்பந்தங்களெல்லாம் சற்றேறக்குறைய உபயோகமற்றவைகளாய் போயின. அது எப்படியெனில் பிதரார்ஜித சொத்தில் தகப்பனுக்கு அதிக பாத்தியமில்லை. அவைகளை அவன் அனுவசியமாய் விர்க்கக்கூடாது பாத்தியப்படுத்தக் கூடாது. ஆனால், தகப்பன் வாங்கின கடன்களை எல்லா பிதரார்ஜித சொத்துகளைக் கொண்டும் தீர்க்க பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களாக இருப்பதால் தகப்பன் இஷ்டப்படிக் கெல்லாம் அனுவசிகமாக கடன் செய்துவிட்டு இறந்துபோனால் பிள்ளைகளுக்கு சேரும் பிதரார்ஜித சொத்து முழுவதும் அந்த கடன்களுக்கு பாத்தியப்படும். ஒரு சந்தர்பத்தில்மட்டும் அதாவது தகப்பன் கடன்கள் அயோக்கியமான காரியநிமித்தமாக வாங்கப்பட்டிருந்தால் மட்டும் பிள்ளைகளுக்கு பிதரார்ஜித சொத்து தக்கும். தகப்பன் கடன்கள் அயோக்கியமான காரியங்களுக்காக வாங்கப்பட்டாவிட்டால் அவைகள் அனுவசியமான உதாரிச்சிலவுக்காக வாங்கப்பட் டிருந்தாலும் அவைகளின் நிமித்தம் பிதரார்ஜித சொத்து போகாமல் நிர்க்காது.

மைத்த நிர்பந்தங்கள் உபயோகமில்லை.

(பாரா 155) இதுவுமன்றியில் உதாரிச்சிலவு நிமித்தம் தகப்பன் முந்தி இஷ்டம் வந்தபடி கடன்கள் வாங்கி அதின் பிரகு அந்த கடன்களுக்காக எல்லா பிதரார்ஜித சொத்தையும் அவனே பராதீனம் செய்யலாம். (பாரா 157).

183. சேர்ந்த குடும்பத்தில் தகப்பனைத் தவிர வேறு பாகஸ்தன் பொதுசொத்தில் தன் பாத்தியத்தை பராதீனம் செய்யலாமா கூடாதா என்கிற விஷயம் வெகுகாலமாய் சந்தேகமாக யிருந்து இப்பொழுது கொஞ்சம் வரையில் சித்தாந்தப்படுத்தப் பட்டிருக்கிறது. மிதாக்ஷர தர்மசாஸ்திரப்படி நியாயமாகப் பார்த்தால் இப்படிப் பராதீனம்செய்ய பாத்தியமில்லை என்றே காணப்படுகிறது. இப்படி யிருந்தாலும் சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தன் வாங்கியிருந்த சொந்த கடன்களுக்காக பொது சொத்தில் அவனுடைய பாத்தியத்தை கடன்காரன் அவன் உயிரோடிருக்கும் காலத்திலேயே ஜப்திசெய்து விர்க்கச்செய்யலாம் என்று முந்தி நியாயஸ்தலங்களில் தீர்மானிக்கப்பட்டிருப்பதால் அவன் பராதீனம் செய்யும்படியான அதிகாரம் கிரமமாய் வளர்ந்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. (1855-ம் ஹு ம. தீ 234; 1860-ம் ஹு ம. 247; 1 ம. ஐ. 471; 10 பம். ஐ. 139; 11 பம். ஐ 72, 76; 4 அ. ஐ. 137; இ. லா. ரி. 3 க. 198; இ. லா. ரி. 1 ம. 358; இ. லா. ரி. 5 க. 148; இ. லா. ரி. 4. க 723 809; இ. லா. ரி. 1 அ. 429; இ. லா. ரி. 2 அ. 878). மேல் 164-வது பாராவைப் பார்க்கவேண்டியது.

தகப்பனைத்தவிர மைத்த பாகஸ்தர்களுடைய பாத்தியம்.

மதராஸ் பம்பாய் ஐகோர்ட்டார்கள் தீர்ப்புகளால் இப்பொழுது உருதிப்பட்டிருக்கிற பிரகாரம் சேர்ந்த குடும்பத்தில் தகப்பனைத் தவிர வேறு பாகஸ்தன் பொதுசொத்தில் தனக்குள்ள பாத்தியத்தை தடையன்னியில் விர்க்கலாம், பாத்தியப்படுத்தலாம், வேறு எவ்விதமாகவாவது பிரதி பிரயோசனத்துக்காக பராதீனம் செய்யலாம். (1 ம. ஐ. 471; 2 ம. ஐ. 270, 416; 4 ம. ஐ. 60; இ. லா. ரி. 11 ம 406; 5 ம. ஐ. 166; 10 பம். ஐ. 139, 162). ஆனால், தானமாக அல்லது உயில் மூலமாக பராதீனம் செய்யும்படியான அதிகாரமில்லை. (8 ம ஐ. 6; இ. லா. ரி. 7 ம 357; இ. லா. ரி. 9 ம 273; இ. லா. ரி. 11 ம 246; 3 பம். ஐ. 66, 6 பம். ஐ. 249; 11 பம். ஐ. 76; 12 பம். ஐ. 229; இ. லா. ரி. 5 பம். 48).

மதராஸ் தீர்ப்புகள்—பம்பாய் தீர்ப்புகள்.

184. சேர்ந்த குடும்பத்தில் பாகஸ்தனுக்கு எவ்விதமான பாத்தியமுண்டோ அவ்வளவு பாத்தியமும் அவன் பாத்தியத்தைக்கோர்ட்டு ஏலத்தில் எடுத்தவனுக்கும் அவனிடத்திலிருந்தே பாத்தியம் அல்லது கிரயமாக டிருன்ஸ்பர் பெற்றவனுக்கும் உண்டு. (1 ம. ஐ. 471). அதாவது, அந்தக்கிரயதாரன் அல்லது டிருன்ஸ்பர்தாரன் எல்லா சொத்தையும் பிறிக்கும்படி கேழ்க்கலாம். (2 ம. ஐ. 417). ஆனால் அவனுடைய குடும்பத்தில் உள்ள எல்லா பாகஸ்தர்களையும் சேர்த்து பாகத்துக்காக பிராது செய்யவேண்டும். (11 பம் ஐ. 72, 76; 22 ஸ. 116; இ. லா. ரி. 4. க 723; இ. லா. ரி. 6 பம். 564; இ. லா. ரி. 13 ம. 275). பொதுசொத்தில் எந்த பாகஸ்தனுக்காவது தனியாக பாத்தியமில்லாமலிருப்பதால் பாகத்துக்கு முந்தி அந்த ஆஸ்தியில இன்னபாகம் தன்னுடைய அனுபோகத்தில் யிருக்கவேண்டுமென்று கிரயதாரன் அல்லது டிருன்ஸ்பர்தாரன் கேழ்க்க நியாயமில்லை. (22 ஸ. 214; இ. லா. ரி. 2 பம். 476; 14 மூ. இ. அ. 50; 5 ம. ஐ. 166; 10 பம். ஐ. 156). ஆனால், பொது சொத்தில் சிலபாகம் ஒருபாகஸ்தனுடைய தனி அனுபோகத்தில் இருந்து அதை யாராவது டிருன்ஸ்பர்பெற்று அனுபவித்துக்கொண்டிருக்கையில் அந்த டிருன்ஸ்பர்தார னுடைய அனுபவத்தை மைத்த பாகஸ்தர்கள் தடைசெய்ய முடியாது. அவன் அப்படி அனுபவிப்பது இஷ்டமில்லாம லிருந்தால் எலலா சொத்தையும் சேர்த்து பாகம் செய்துகொள்ள இவர்கள் பிராது கொடுக்க வேண்டியது. (12 பம். ஐ. 138; இ. லா. ரி. 1 பம் 95; இ. லா. ரி. 2 பம். 676; இ. லா. ரி. 10 பம். 673) 1882-ம் ஞு 4-வது நெ. டிருன்ஸ்பர் ஆப் பிருபர்ட்டி ஆக்டு 44-வது பிறிவின்படி பொதுவீட்டில் ஒருபாகஸ்தனுடைய பாத்தியதையை டிருன்ஸ்பர் பெற்றவன் அந்த வீட்டை மைத்த பாகஸ்தர்களோடுகூட அனுபவிக்கும்படியான பாத்தியமுள்ளவன் அல்ல.

டிருன்ஸ்பர் தாரனுக்குள்ள பாத்தியம்.

பொது குடும்பத்தில் ஒருபாகஸ்தனுடைய பாத்தியதை டிருன்ஸ்பர் வாங்கினவனுக்கு கிடைக்கவேண்டிய பாகம் அவன் பாகத்துக்காக வியாஜியம் கொடுத்த காலத்திலுள்ள நிலைமையைப் பொருத்துக்கணக்கிட வேண்டியதே ஒழிய டிருன்ஸ்பர் பெற்றகாலத்தின் நிலைமையைப் பொருத்துக் கணக்கிடக்கூடாது. இது எப்படி என்றால்—ஒரு சேர்ந்த குடும்பத்தின் தகப்பனும் இரண்டு பிள்ளைகளு மிருந்தார்கள். ஒருபிள்ளை தன்னுடைய பாத்தியத்தை டிருன்ஸ்பர் செய்தான். டிருன்ஸ்பர்தாரன் பாகத்துக்காக பிருது கொடுக்கிறதர்க்குள் வேறு

மூன்றுபிள்ளைகள் பிறந்து தகப்பன் இறந்தான். இந்நிலைமையில் டிரு ன்ஸ்பர் தாரனுக்கு 5-ல் 1 பாகம்மட்டும்கிடைக்குமே அல்லாமல் டிரு ன்ஸ்பர் காலத்தில் கிடைக்கக்கூடிய மூன்றில் ஒருபாகம் கிடைக்காது. (இ. லா. ரி. 14 ம 408).

அலஹாபாத கல்கத்தா ஐகோர்ட்டு தீர்ப்புகள்.

185. பொதுக் குடும்பத்தில் பாகஸ்தனுடைய பராதீனம் செய்யும் பாத்தியத்தைக் குறித்து அலஹாபாது ஐகோர்ட்டாரும் மிதாக்ஷர தர்மசாஸ்திரத்தை அனுசரிப்பவர்களுக் குண்டான விவாதங்களில் கல்கத்தா ஐகோர்ட்டாரும் மதறாஸ் பம்பாய் தீர்ப்புகளுக்கு விரோதமாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அவர்கள் தீர்ப்பின்படி பொதுக் குடும்பத்தில் ஒரு பாகஸ்தன் அவனுக்கு பொது சொத்தில் உள்ளபாத்தியதையை தன்னுடையஉபயோகத்துக்காக பிரதிப் பிரயோசனம் பெற்று சாஸனம் பந்தகம் ஒத்திவகைரு விதபாகவாவது தானமாகவாவது உயில் மூலமாகவாவது பராதீனம் செய்ய பாத்தியம் அற்றவனென்றும் அப்படிப்பட்ட பராதீனங்களை மைத்தபாகஸ்தர்கள் பிறாது செய்து ரத்து செய்துகொள்ளலாமென்றும் ஸ்திரப்படுத்துகின்றன. (3 பம். ஸ. தீ. 232; 6 பம். ஸ. தீ. 176; 7 பம். ஸ. தீ. 105; 5 பம். ஸ. தீ. 163; 4 பம் ஸ. தீ. 158; 3 ஸ. 210; 7 அ ஐ. 277; இ. லா. ரி. 2 அ. 267; இ. லா. ரி. 5 அ. 384; 3 க. ஐ. 31; 4 க. ஐ 15; 8 க. ஐ. 358; இ. லா. ரி. 1 க. 226; 22 ஸ. 552; இ. லா. ரி. 16 க. 137; இ. லா. ரி 18 க. 157). ஆனால் டிறான்ஸ்பர்தாரன் உயிரோடிருக்கையிலேயே பிறாது செய்தால் இவனுக்குள்ள பாகபாத்தியத்தைக் கோர்ட்டார் உபயோகப்படுத்தி இவனுடைய பாகம் டிறான்ஸ்பர்தாரனுக்குக் கிடைக்கும்படி தீர்மானிப்பார்கள். (12 க. ஐ. 90; இ. லா. ரி. 3 க. 198; இ. லா. ரி. 18 க. 157).

பராதீனம் ரத்துசெய்யும் போது டிறான்ஸ்பர் தாரனுக்கு தொகை கொடுக்க வேண்டியது.

186. பொதுக் குடும்பத்தின் ஒருபாகஸ்தன் செய்த அக்கிரமமான பராதீனத்தை ரத்துசெய்யக் கோருகிறவர்கள் அந்த பராதீனத்தால் கிடைத்த தொகையில் கொஞ்சம் குடும்பத்தின் அவசியமான காரியங்களுக்காக உபயோகப்பட்டிருந்தால் அந்தத் தொகையை டிறான்ஸ்பர்தாரனுக்குக் கொடுக்கத் தயாராயிருக்க வேண்டியது. இன்னும் சிலகாலம் கழித்து தீர்க்கத்தகுந்த குடும்ப கடன்களுக்காக உபயோகப்பட்டிருந்தாலும் அப்படி உபயோகப்பட்ட தொகையைக்கொடுக்க வேண்டியது. அந்தப் பராதீனத் தொகையில் கொஞ்சங்

கூட்ட குடும்பத்துக்காக உபயோகப்படாம லிருந்தால் டிரான்ஸ்பர்தார னுக்குப் பணம் கொடுக்காமலே பராதீனத்தை ரத்துசெய்து கொள்ள லாம். (க. ஐ. சப்ளிமெண்டல் வாலியம் 1018; 8 க. ஐ 358; இ. லா. ரி. 6 அ. 417; 2 பம். ஐ. 318). பராதீன தொகையில் கொஞ்சம் தொகை குடும்பார்த்தமாய் உபயோகப்பட்டிருந்த நிலைமையில் அந்த தொகையை வாதிகள் பிரதிவாதிக்கு கொடுக்கும்படி ஷரத்துடன் பரா தீனத்தை ரத்துசெய்து தீர்ப்பு செய்யப்படும். (4 க. ஐ. 118-125; 15 க. ஐ. 350).

பராதீனத்தால் பெற்றுக்கொண்ட தொகை குடும்பார்த்தமாய் உப யோகப்பட்டதென்று ருஜுப்படுத்துகிற பளு டிரான்ஸ்பர்தாரனைப் பொருந்தது. (க. ஐ. சப்ளிமெண்டல் வாலியம் 1018; 2 பம் ஐ. 318).

பொதுக் குடும்பத்தில ஒரு பாகஸ்தன் பொதுசொத்தை பராதீ னம்செய்து அதனால் கிடைத்த தொகையை தன் சொந்தக் கடன்களைத் தீர்ப்பதற்க்காகவாவது தன் சொந்த சிலவுக்காகவாவது வினியோகம் செய்திருந்தால் அந்த பராதீனத்தை ரத்துசெய்யக் கோரும் இதர பாகஸ்தர்கள் அந்தத் தொகையைக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களா கமாட்டார்கள் (1 க. ஐ 15). ஆனால், இவர்கள் வெகுகாலமாய் அந்த பராதீனத்தை ஆக்ஷேபிக்காமல அசட்டையா யிருந்துவிட்டால் டிரா ன்ஸ்பர்தாரனுக்குத் தொகை கொடுக்காமல் பராதீனத்தை கோர்ட்டார் ரத்து செய்யமாட்டார்கள். (11 க ஐ. அபெண்டிக்ஸ் 29).

டிரான்ஸ்பர் ரத்தாவதற்க்கு முந்தி சொத்தில் டிரான்ஸ்பர்தாரன் மராமத்து அல்லது விருத்தி செய்திருந்தால் அந்த மராமத்து அல்லது விருத்திக்கு உள்ள கிரயம் அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனால் அக்கிரமமென்றும் செல்லாதென்றும் முதலிலே அறிந்து டிரான்ஸ்பரை பெற்றவனுக்கு மராமத்து அல்லது விருத்தியினுடைய கிரயம் கொடுக்கப்படமாட்டாது. (இ. லா. ரி. 5 பம். 450).

டிரான்ஸ்பர் சொத்திலிருந்து செய்யப்பட்ட விருத்தி மராமத்து.

187. மிதாக்ஷர தர்மசாஸ்திரப்படி ஒரு பிரிக்கக்கூடாத ஜமீன் பொது சொத்தாக யிருக்குமென்றும் குடும்பத்தில் மூத்தபிள்ளை மாத்திரம் ராஜ்ஜியாதிகார பாத்தியம் உள்ளவனாயும் மைத்தவர்கள் ஜீவனாம்சத்துக்கு மட்டில் பாத்தியமுள்ளவர்களா யிருப்பார்களென்றும் மூத்தவன் பிள்ளை அன்றியில் இறந்தால் அந்த ஜமீன்சொத்து அவன் பெண்சாதிக்குச் சேராமல் தம்பிகளில் மூத்தவனுக்கு சேருமென்றும்

பிரிக்கத்தகாத ஜமீனாசனுக்குள்ள அதிகாரம்.

143-வது பாருவில் சொல்லியிருக்கிறோம். இப்படிச் சொல்லியிருப்பதைக் கொண்டு சாதாரணமான சேர்ந்த குடும்பங்களில் தகப்பன் அல்லது மானேஜர் விஷயமாய் ஏர்ப்பட்டிருக்கிற பராதீன நிர்பந்தங்கள் பிரிக்கக்கூடாத ஜமீனின் அரசனுக்குங்கூடச் செல்லுமென்று எண்ணக்கூடாது. இப்படிப்பட்ட ஜமீன்சொத்தை குடும்பத்துக்கு அவசியமான சிலவுகளுக்காகமட்டும் ஜமீன்தார் பராதீனம் செய்யலாமென்றும் குடும்பத்துக்கு அனுவசியமான பராதீனங்கள் அந்த ஜமீன்தார் உயிருள்ளவரையில் செல்லுமே ஒழிய அவனுடைய அனந்தர வார்சுகளைக் கட்டுப்படுத்தா தென்றும் சிலகாலத்துமுன் வரையில் மதருஸ் ஐகோர்ட்டார் அலஹாபாத் ஐகோர்ட்டார் இவர்களால் செய்யப்பட்ட பல தீர்ப்புகளால் ஸ்திரப்பட்டிருந்தது. ஆனால், இப்பொழுது இந்தத் தீர்பபுகள் ரத்தாய் சித்தாந்தம் தலைகீழாய்விட்டது.

சாதாரணமாய் சேர்ந்த குடும்பத்தைப் பொருத்த மிதாக்ஷர நியாயமே பிரிக்கக்கூடாத ஜமீன் விஷயத்தில் செல்லுமென்றும் ஜமீன் சொத்தில பிள்ளைகளுக்கெல்லாம தகப்பனோடுகூட பொதுவானபாத்தியம் உண்டாகாமல் மூத்தபிள்ளைக்கு மட்டில் வார்சுபாத்தியம் உண்டாகும்படியான நிலைமையில் மிதாக்ஷர நியாயத்தை அனுசரிக்க அதிகாரமில்லை என்றும் மிதாக்ஷர நியாயப்படி தகப்பனோடுகூட பிள்ளைகளுக்கு உண்டாகிற பொது பாத்தியம், அதைப் பொருத்ததும் பராதீனத்தை ஆக்ஷேபிக்கும்படியான பாத்தியம் இவைகள் பாகம் கேழ்க்கும் பாத்தியத்தோடு சேர்ந்திருக்கின்றன வென்றும் பாகம்கேழ்க்க பாத்தியமில்லாம விருக்கும்பொழுது மிதாக்ஷர நியாயப்படி செல்லுகிற பொதுசொத்து பாத்தியமும உண்டாகமாட்டா தென்றும் ஆகையால், பிரிக்கக்கூடாத ஜமீன் அரசன் குடும்பத்துக்கு அவசியம் அன்றியிலேயே ஜமீன்சொத்தை பராதீனம் செய்ய சர்வ அதிகாரம் உடையவனென்றும் அந்த பராதீனங்களை ரத்துசெய்யவாவது ஆக்ஷேபிக்கவாவது அவனுடைய அனந்தர வார்சுகள் கொஞ்சம்கூட பாத்தியம் உடையவர்கள் அல்ல வென்றும் பிரிக்கக்கூடாத ஜமீனுடைய அரசன்செய்யும் பராதீனங்கள் அவனுயிர் உள்ளவரையில் மட்டும் செல்லுமென்று கக்ஷி ஸ்தாபிப்பதர்க்கு அந்த ஜமீன் சன்னதுடைய ஷரத்துகளினுலாவது அந்த ஜமீன்தார் குடும்பத்தில் வெகுகாலமாய் இருந்து ஸ்திரப்பட்ட ஆசாரத்தாலாவது ஜமீன்தாருக்குப் பராதீனம் செய்யும் பாத்தியம் இல்லையென்று தெளிவாக ருஜுவாகவேண்டுமென்றும் இப்படி கல்கத்தா ஐகோர்ட்டிலும் பிறிவீகவுன்ஸிலிலும் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. (13 க. 445, 458, 460; இ.

லா. ரி. 5 க. 113; 5 மூ. இ. அ. 82; இ. லா. ரி. 7 க. 461; இ. லா. ரி. 10 அ. 272).

அலஹாபாத் ஐகோர்ட்டார் தீர்ப்பின்பேரில் செய்யப்பட்ட ஒரு அப்பீலில் பிறிவீகவுன்சிலார் ஒரு பிரிக்கக்கூடாத ஜமீன் அரசனல் பெண்சாதிபேருல் செய்யப்பட்ட 17 நல்ல ஜமீன் கிராமங்களின் சாசுவத பராதீனத்தை உருதிப்படுத்தி அதை ஆக்ஷேபித்த பிள்ளைக்கு விரோதமாகத் தீர்ப்புச் செய்தார்கள். (இ. லா. ரி. 10 அ. 272, பிறிவீகவுன்சில்). இந்த பிறிவீகவுன்ஸிலார் தீர்ப்பை விதியில்லாமல் அனுசரித்து மதருஸ் ஐகோர்ட்டார் சிவகங்கை ஜமீன் விஷயத்தில் அவசியமன்னியிலும் அனியாயமாகவும் முந்தியிருந்த ஜமீன்தார் 20 வருஷ காலத்துக்கு கொடுத்த "கனிகள் தோண்ட குத்தகையை" காயப்படுத்தினர்கள். (இ. லா. ரி. 13 ம. 197). ஆனல், அம்மைய நாய்க்கனூர் ஜமீன் விஷயமாக மதருஸ் ஐகோர்ட்டார் தீர்ப்பைப் பார்க்க வேண்டியது. (இ. லா. ரி. 18 ம. 288).

இப்பொழுது சித்தாந்தப்பட் டிருக்கிறபடி பிரிக்கக்கூடாத ஜமீன் அரசனுக்கு அந்த ஜமீன்சொத்தை பராதீனம் செய்யும் விஷயத்தில் ஸம்பூர்ண அதிகார மிருக்கிறதென்று எண்ணத்தக்கதா யிருக்கிறது.

பிரிக்கக்கூடிய ஜமீன் விஷயத்தில் சாதாரண சேர்ந்த குடும்பங்களைப் பொருத்த பராதீன நிர்பந்தங்கள் செல்லும்.

188. இதுவரையில் மிதாக்ஷர தர்மசாஸ்திரத்தில் கண்டபடி பிதரார்ஜித சொத்தின் விஷயமாய் தகப்பனுக்கும் மைத்த பாகஸ்தர்களுக்கும் உள்ள பராதீன அதிகாரம் விவரிக்கப்பட்டது. இனிமேல் தாயபாகப்படி என்னபாத்திய மிருக்கிறதோ விசாரிப்போம்.

தாயபாகம் - தகப்பனுக்குள்ள பராதீன பாத்தியம்.

தாயபாகப்படி தகப்பனுடைய பிதரார்ஜித சொத்தில் பிள்ளைகளுக்கு ஜீவனும்ச பாத்தியமட்டில் உண்டே ஒழிய பாகம் கேழ்க்கும் பாத்தியமாவது அந்த சொத்தை அனியாயமாக சிலவிடப் படாமல் காபாற்றிக்கொள்ளும் பாத்தியமாவது கிடையாதென்று 138 - வது பாருவில் சொல்லி யிருக்கிறேம். பங்காளா சம்பிரதாயப்படி சேர்ந்த குடும்பத்தில தகப்பன் தன்னுடைய ஸ்தாவர, ஜங்கம, சுவபார்ஜித, பிதரார்ஜித சொத்துகளை எல்லாம் இஷ்டம்வந்தபடி கிறயமாகவாவது ஒத்திபந்தகமாகவாவது தானமாகவாவது அல்லது உயில் மூலமாகவாவது பராதீனம்செய்ய அதிகாரம்

உள்ளவனென்றும் அந்த பராதீனங்கள் பாவமாக யிருந்தாலும் செல்லாமல் போகாதென்றும் அனேக கேஸுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எல்லா சொத்தையும் பெரிய பிள்ளைக்கு மட்டுமேயாவது சிறிய பிள்ளைக்கு மட்டுமேயாவது கொடுத்து விட்டாலும் செல்லுமென்று தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. (1 பம். ஸ. தீ. 2; 2 ஸ்ட்ரேஞ்சு துரையவர்கள் ஹிந்துலா 447; எப். மெக்நுடன் 356, 340; 2 பம். ஸ. தீ. 42; எப. மெங்நுடன் 227, 265; 4 பம். ஸ. தீ. 322; கல்கத்தா சுப்பிறீம் கோர்ட்டு தீர்ப்புகள் மார்டன் 90; 6 பம். ஸ. தீ. 73; 1859 ஷ பம். ஸ. தீ. 250; இ. லா. ரி. 5 க 113; இ. லா. ரி. 7 க 461; இ. லா. ரி. 17 க. 886; 3 பம். ஸ. தீ. 234, 397). மேல் சொல்லப்பட்டபடி தீர்ந்த பங்காளா சம்பிரதாயப்படி தகப்பனுக்கு பராதீனம் செய்யசம்பூர்ண அதிகார மிருந்தாலும் எல்லா பிள்ளைகளுக்கும் தன் சொத்தை இஷ்டம்வந்தபடி யேறத் தாழ்த்தியான பாகங்களாக பிரித்துக் கொடுக்க அவனுக்கு பாத்தியமில்லை என்றும் சமானமா யிலலாத பிறிவினை செல்லாதென்றும காணப்படுகிறது. (2 பம். ஸ. தீ. 202; எப். மெக்நுடன் 283, 294).

பிள்ளைகளுடைய பராதின பாத்தியம்

189. பங்காளா தேசத்தில் தகப்பன் உயிரோ டிருக்கையில் குடும்பசொத்தில் பிள்ளைகளுக்கு எவ்விதமான பாத்தியமுமில்லை. இவன் செய்யும் பராதீனங்கள் செல்லமாட்டா. இதுவுமன்றியில் தகப்பன் இறந்து ஆஸ்தியில் பிள்ளைகளுக்கு பாத்தியம் உண்டான பிரகு கூட இவன் முந்தி பராதீனம் செய்தசொத்தை டிரான்ஸ்பர்தாரன் வசத்தில விடாமல் பராதீனத்தை ரத்துசெய்து கொள்ளலாம் டிரான்ஸ்பர்தாரனிட த்தில் பெத்துக்கொண்ட பணத்தை மட்டில் கொடுத்துவிட வேண்டியது. (2 மூர்லீ டைஜஸ்ட் 152).

மைத்த பாகஸ்தர்களுக்குள்ள பராதீனம்.

190. பங்காளா சம்பிரதாயப்படி தகப்பன் இறந்து பிள்ளைகள் முதலியவர்கள் சொத்துக்கு பாத்தியஸ்தர்களாக ஏர்ப்பட்டபொழுது இவர்கள் சேர்ந்து ஜீவித்து வந்தாலும் தனிபாத்திய முள்ளவர்களாகவே எண்ணப்படுவார்கள். ஆகையால் இவர்கள் தங்கள் தங்கள் பாகங்களை இஷ்டம்வந்தபடி பராதீனம்செய்ய பாத்திய முள்ளவர்களாவார்கள். தங்கள் பாத்தியத்துக்கு ஜாஸ்தியான பாகங்களை பராதீனம் செய்யக்கூடாது. (1 பம். ஸ. தீ. 44 45, 115; 3 பம். ஸ. தீ. 196; 5 பம். ஸ. தீ. 338; 2 டப்ளியூ மெக்நுடன் 291, 294, 296, 306, 313; 17 ஸ. 420; 21 ஸ. 17).

191. சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தன் பொதுசொத்தில் தன் பாகத்தை வேறுபாகஸ்தனைத்தவிர மைத்தவர்களுக்குக் கிரயம் செய்கிறதில்லை என்று உடன்படிக்கை செய்திருந்தால் அது செல்லுமென்றும் அந்த உடன்படிக்கைப்படி நடக்கும்படி கோர்ட்டு மூலமாக உத்திரவுபெற்றுக் கொள்ளலாமென்றும் அதற்கு விரோதமாய் நடத்தப்பட்ட பராதீனத்தை ரத்துசெய்துகொள்ளலாமெனறும் அலஹாபாத் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 1 அ. 618; இ. லா. ரி. 2 அ. 826). ஆனால் சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்கள் தங்களுக்குள் செய்துகொண்டிருக்கும் உடன்படிக்கை அநுசங்கதியைக் கொஞ்சமேனும் அறியாமல பணம்கொடுத்து பராதீனம் பெற்றவனுக்கு விரோதமாக செல்லத்தக்கதென்று சொல்ல சந்தேகமாயிருக்கிறது. (இ. லா. ரி. 8 ம. 381; இ. லா. ரி. 4 அ. 518).

பராதீனத்தைப்பத்தி பாகஸ்தர்களுக்குள் உடன்படிக்கை.

192. பராதீனங்கள் விஷயமாய் மிதாக்ஷர தாயபாகங்களின்படி தகப்பனுக்கும் மைத்த பாகஸ்தர்களுக்கும் உள்ள பாத்தியம் இதுவரையில விவரிக்கப்பட்டது இனி, தானங்கள் கிரயங்கள் ஒத்திபந்தகங்கள் வகைராவைக் குறித்து எப்பொழுதும் செல்லத்தகுந்த சில அம்சங்களை இந்த அத்தியாயத்தில் சொல்லப்போகிறோம்.

ஒரு சொத்துதாரன் தன் சொத்தை தானம் செய்யும்பொழுது தானம் பெத்துக் கொள்ளுகிறவன் தன்னை சம்ரக்ஷிக்க வேண்டியதென்றாவது தானிரந்த பிரகு தன் அபரகிரியைகளை நிறைவேற்ற வேண்டுமென்றாவது தன்னால் அவனுக்கு கொடுபட வேண்டிய பாக்கிகளை தள்ளவேண்டியதென்றாவது வியாதி தெளிந்து தான் பிழைத்துக் கொண்டால் அந்த சொத்து திரும்ப தனக்கே சேரவேண்டுமென்றாவது ஷரத்துகள் ஏர்ப்படுத்தலாம். (6 ம. ஐ. 270; 3 பம். ஐ. தீ. 377; 1853-ம் ௵ பம். ஐ. தீ. 103; இ. லா. ரி. 14 க. 292; 9 மூ இ. அ. 123, 135; 4 க. ஐ. 19?) அந்த ஷரத்துகளின்படி நடத்தாதவரையில் தானம் செல்லமாட்டாது. தானம் செய்யும் காலத்திலேயே ஷரத்துகள் ஏர்ப்படுத்திக் கொள்ளலாமே ஒழிய தானம் முடிந்தபிரகு ஏர்ப்படுத்திக் கொள்ள முடியாது. (இ. லா. ரி. 6 அ. 313). மேலும் சட்டத்துக்கு விரோதமான ஷரத்துகள் அதாவது தானசொத்தை அனுபவிக்காமல் ரக்ஷித்துவர வேண்டியதென்றாவது ஆதாயத்தை எப்பொழுதும் சிலவு

தானத்தின் ஷரத்துகள்.

செய்யாமல் சேர்த்துவைக்க வேண்டுமென்ருவது அந்த சொத்தை பாத்தியப்படுத்தக் கூடாதென்ருவது கிரயம் செய்யக்கூடாதென்ருவது கடன்களுக்காவது சிலவுக்காவது விர்க்கக்கூடா தென்ருவது பிறித்துக் கொள்ளக் கூடாதென்ருவது இம்மாதிரி ஷரத்துகள் செல்லமாட்டாது. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில மைத்த விஷயங்களில் கிரமமாயிருந்தால் தானம் உருதிபபட்டு ஷரத்துகள் ரத்தாய்ப் போய் விடும். (4 ம. ஐ. 345; 6 ம. ஐ. 356; 13 க. ஜ. 445, 457; இ. லா. ரி. 4 ம. 200; இ. லா. ரி. 14 க. 222; இ. லா. ரி. 4 அ. 518; இ. லா. ரி. 7 ம. 315; இ. லா. ரி. 7 அ. 516; இ. லா. ரி. 13 பம் 463; 4 க. ஐ. 103; 9 க. ஐ. 37; 18 ஸ. 359). அப்படி செல்லக்கூடாத ஷரத்துகளேயே பிரதி பிரயோசனமாக, அதாவது அவைகளுக்கு உட்பட்டே தானஞ் செய்யப்பட்டால் தானம் ரத்தாக பாவிக்கப்படும். (இ. லா. ரி. 6 அ. 313; டிருன்ஸ்பர் ஆப் பிருபர்டி ஆக்டு செக்ஷன் 25, 18)

தானம் பெற்றவன் பிறந்து அல்லது கர்பந்திலாவது இருக்கவேண்டியது.

193. தானம் முடிவதற்கு ஆஸ்திதாரன் வேறுயாருக்காவது தன் சொத்தை நியாயமாகக் கொடுக்கிறதும் இவன் அதை ஒப்புக்கொண்டு பெத்துக் கொள்ளுகிறதும் அவசியமானவைகள். ஆகையால், தானம் பெத்துக் கொள்ளுகிறவன் தானம் செய்யப்படும் காலத்திலாவது உயில் (மரணசாசனம்) மூலமாக தானம் செய்யப்பட்டால் தானம் செய்தவன் இறக்கும் காலத்திலாவது பிறந்து அல்லது கர்ப்பத்தி லிருப்பவனுகவாவது இருக்க வேண்டியது. பிறகு கர்ப்பத்தில் உண்டானவனுக்கு தானம் செல்லமாட்டாது. (9 க. ஐ. 399; இ. லா. ரி. 2 க. 265; இ. லா. ரி. 4 க. 455; இ. லா. ரி. 15 பம். 443). சுவீகாரப்பிள்ளை விஷயத்தில் மட்டில் இந்த நியாயம் செல்லமாட்டாது. அதாவது தானகாலத்துக்குப் பிறகு சுவீகாரம் செய்துகொள்ளப்பட்டாலும் சுவீகாரப் பிள்ளைக்கு செய்யப்பட்டிருந்த தானம் செல்லும். (4 க. ஐ. 103; 9 க. ஐ. 377, 397, 400, 404).

அனேகம் பேர்களுக்குப்பொதுவில் தானம்.

ஏதாவது சொத்து அனேகம் பேர்களுக்குப் பொதுவாய் தானம் செய்யப்பட்டால் அவர்களில் சிலர் தானம் செய்யப்பட்ட காலத்தில் அல்லது ஆஸ்திதாரன் இரக்கும்காலத்தில் பிறந்திருக்கவில்லை என்கிற காரணத்தைக் கொண்டாவது அவர்கள் விஷயமாய் தானம் செல்லாமல் போனபோதிலும் மைத்தவர்கள் விஷயத்தில் அது ரத்தாகமாட்டாது. அன்னிலேமையில் தானசொத்து முழுவதும் இந்த மைத்த

வர்களுக்கே சேரும். (இ. லா. ரி 6 அ. 573 இ. லா. ரி. 12 க 663; இ. லா. ரி. 12 ம. 393; இ. லா. ரி. 15 பம். 562).

தானம் கொடுக்கிறவன் கொடுப்பவனிடத்தி லிருந்து தானத்தை ஒப்புக்கொண்டு பெத்துக்கொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை. அவன் எங்கிருந்தாலும் நிச்சயமாய் ஒப்புக்கொள்ளுவானென்கிற நம்பிக்கையின்பேரில் தானம் செய்யப்பட்டால் அது கட்டாயம் செல்லும். (4 க. ஐ. 291).

194. தானம் முடிந்து செல்லுகிறதற்கு தானம் பெற்றுக்கொள்ளுகிறவன் சுவாதீனத்துக்கு தானகாலத்தில் சொத்து சேரவேண்டும். ஜங்கம சொத்து செலலுவதர்க்கு அதை சுவாதீனப்படுத்த வேண்டும். அசையாப்பொருள் தானம் செய்யப்பட்டால் அதை அந்தந்த சந்தர்ப்பங்களில் கூடியபடி சுவாதீனம் செய்யவேண்டும். மைத்தவர்களால் குத்தகைக்கு வாங்கப்பட்டிருந்த அசையாப்பொருளை தானம் செய்தால் அவைகளுடைய வருமபடி வாடகைகள் தானம் பெற்றுக்கொண்டவனுக்குச் சேரும்படி ஏர்ப்பாடு செய்யப்பட்டால் சொத்தை சுவாதீனப் படுத்தினதுபோலவே எண்ணப்படும். (5 பம். ஐ. 83; 6 ம. ஐ. 194; 4 பா. ஐ. 31; இ. லா. ரி. 12 அ. 40; இ. லா. ரி. 9 ம. 267; இ. லா. ரி. 7 ம. 23; இ. லா. ரி. 12 பம். 523; இ. லா. ரி. 7 பம் 452, 22; 4 ம. ஐ. 460). தானம் செய்யப்பட்ட அசையாப் பொருளை தானம் செய்கிறவன் தன் வசத்திலேயே வைத்துக்கொண்டு அதை தான குத்தகை அல்லது வாடகைக்கு வாங்கிக்கொண்டதாக தானம் பெற்றுக் கொண்டவனுக்குக் குத்தகைச்சீட்டு அல்லது வாடகைச் சீட்டு எழுதிக் கொடுத்தால அந்த சொத்து சுவாதீனப் படுத்தப் பட்டதுபோலவே யெண்ணப்படும் (3 பா. ஸ. தீ. 234). மைனருக்காவது பித்தனுக்காவது தானம் செய்தசொத்தை அவனுக்காக தானம்கொடுத்தவன் தன்வசத்திலேயே வைத்துக் கொள்ளலாம். (2 டப்ளியூ மெக்னடன் 243). தானசொத்தை தானம்பெற்றவனுக்குச் சேரும்படிவிடாமல் மைத்தவர்கள் அக்கிரமமாக வசப்படுத்திக் கொண்டு தகரார்செய்தால் அந்தசொத்து சுவாதீனப் படுத்தப் பட்டதாகவே எண்ணப்பட்டு தானம் செல்லும். ஆகையால் அந்த சொத்து விஷயமாய் பெத்துக்கொண்டவன் பிறுது செய்யலாம். (இ. லா. ரி. 11 க. 721).

முந்தி கிடைக்காத அல்லது சம்பாதிக்கப்படாத சொத்தைத் தானம்செய்தால் அந்ததானம செல்லமாட்டாது. (டிரான்ஸ்பர் ஆப்பிறாபர்ட்டி ஆக்ட்டு செக்ஷன் 122).

195. கிரமமாய்முடிக்கப்பட்ட தானத்தால் தானம் செய்தவனும் அவன் வார்சுகளும் மட்டுமல்ல அவன் கடன்காரர்கள் கூட கட்டுப் பட்டவர்கள். ஆனால், கடன்காரர்களை மோசம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் பேருக்குமட்டும் தானம்செய்து சொத்தை மைத்தொருவர் பேரால் காயப்படுத்திக் கொண்டால் அந்த தானம் செல்லமாட்டாது (1858-ம் வரு ம. தீ. 61; 1 ம. ஐ 393; 4 ம. ஐ. 84; இ. லா. ரி. 2 அ. 891; இ. லா. ரி. 6 அ. 560). தானம் கொடுப்பவனை மோசம்செய்து பெத்துக் கொள்ளப்பட்ட தானங்கள் செல்லமாட்டா. (இ. லா. ரி. 15 பம். 549).

மோசம்போன தானங்கள்.

196. கிரயம் ஒத்திபந்தகம் முதலிய பிரதிபிரயோசனமுள்ள டிரூன்ஸ்பர் செல்லுவதர்க்கு டிரூன்ஸ்பர்தாராணுக்கு சொத்து வசமாயிருப்பது அவசியமா இல்லையா என்கிற விஷயத்தைக் குறித்து மதரூஸ் கல்கத்தா ஐகோர்ட்டார்களும் பம்பாய் ஐகோர்ட்டார்களும் சில அம்சங்களில் வெவ்வேறபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். பிரதி பிரயோசனமுள்ள டிரூன்ஸ்பர்கள் விஷயத்தில் சொத்தை சுவாதீனப்படுத்துவது அவசியமில்லை என்றும் சொத்தை சுவாதீனப்படுத்தாமல் செய்யப்பட்ட ஒரு டிரூன்ஸ்பரை பிந்திவேறொருவனுக்கு சொத்து சுவாதீனத்துடன் செப்பப்பட்ட டிரூன்ஸ்பர்பாதிக்கமாட்டாதென்றும் அப்படிப்பட்ட முதல் டிரூன்ஸ்பர்தாரன் இரண்டாவது டிரூன்ஸ்பர்தாரனை நீக்குவதர்க்காக பிரூது செய்யலாமென்றும் இதுவுமல்லாமல் சொத்தை சுவாதீனத்தில் வைத்துக் கொள்ளாமலிருந்தாலும் அதர்க்கு பாத்தியஸ்தனுகை ஏர்ப்பட்டவன் செய்யும் டிரூன்ஸ்பர் செல்லுமென்றும் இப்படி கல்கத்தா மதரூஸ் ஐகோர்ட்டுகளாலும் பிறிவீகவுன்சில் தீர்ப்புகளாலும் ஸ்திரப்பட்டிருக்கிறது. (1860-ம் வரு ம. தீ. 277; 3 ம. ஐ. 38; இ. லா. ரி. 5 ம 6; இ லா. ரி. 6 ம. 404; இ. லா. ரி. 8 க. 597, 610; 9 மூ. இ. அ. 303; 2 ம. ஐ. 108; 4 ம. ஐ. 434; இ. லா. ரி. 5 க. 265; 3 ம. ஐ. 40, 46; 13 மூ. இ. அ. 113; இ. லா. ரி. 11 க. 121; இ. லா. ரி. 15 க. 684; 1858-ம் வரு பம். ஸ. தீ. 601; 3 க ஐ. 207; 11 ஸ. 134; 22 ஸ. 99; 14 க. ஐ. 307; 23 ஸ 131, 163; இ. லா. ரி. 13 க. 297).

பிரதி பிரயோசனமுள்ள டிரூன்ஸ்பர் விஷயத்தில் சொத்தை சுவாதீனம் செய்வது.

கல்கத்தா மதரூஸ் தீர்ப்புகள்.

197. பம்பாய் ஐகோர்ட்டுத் தீர்ப்புகளால் ஸ்திரப்பட்டிருக்கிற படி எந்த டிரான்ஸ்பர் ஆகட்டும் சொத்து சுவாதீனத்தோடுகூட இல்லாவிட்டால் அது சங்கதியைக் கொஞ்சமேனும் அறியாமல் பிந்தி அந்தசொத்தை கிரயத்துக்காவது ஒத்திபந்தகத்துக்காவது கொண்டவனைப் பாதிக்கமாட்டாது. (7 பம். ஐ. 4; 10 பம். ஐ. 491; இ. லா. ரி. 2 பம். 299; 6 பம். 165; இ. லா. ரி 4 பம். 459, 461; இ. லா. ரி. 6 பம் 490). ஆனால், இரண்டாவது டிரான்ஸ்பர்தாரன் சங்கதியை அறிந்தவனாயிருந்தாலும் பிரதிபிரயோசனமன்றியில் தானமாக சொத்தை அடைந்திருந்தாலும் இரண்டாவது டிரான்ஸ்பர் நடப்பதற்கு முந்தியே முதல் டிரான்ஸ்பர் ரிஜிஸ்தரா யிருந்தாலும் இரண்டாவது டிரான்ஸ்பர் கோர்ட்டு ஏலத்தால் செய்யப்பட்டதாக யிருந்தாலும் இன்னிலைமைகளில் சொத்து சுவாதீனமில்லாம லிருந்தாலும் முதல் டிரான்ஸ்பரே செல்லும். (இ. லா. ரி. 6 பம். 168, 515; இ. லா. ரி. 9 பம். 427; 7 பம். ஐ. 69; 8 பம். ஐ. 50; 11 பம். ஐ. 37). இரண்டாவது டிரான்ஸ்பர் கோர்ட்டு ஏல மூலமாகக் கிடைத்ததா யிருந்தால் பிரதிவாதிக்குள்ளபாத்தியம் மட்டிலுமே அந்த ஏலத்தில் விற்கப்பட்டதாகையால் அதுவரையில அவனால் செய்யப்பட்டிருந்த சொத்து சுவாதீனம் கொடுபடாத டிரான்ஸ்பர் பாதிக்கப்படமாட்டாது. (3 பம். ஐ. 304; இ. லா. ரி. 6 பம். 93). சொத்து சுவாதீனப்படவில்லை என்கிற காரணத்தைக் கொண்டு தான் செய்திருந்த டிரான்ஸ்பர் செல்லமாட்டாதென்று கக்ஷிசொல்ல ஆஸ்திதாரனுக்குப் பாத்தியமில்லை. (7 பம். ஐ. 45; இ. லா. ரி. 6 பம். 163). கோர்ட்டு ஏலத்தில் சொத்தை வாங்கினவன் அந்த சொத்தை சுவாதீனப் படுத்திகொள்ளாமலே விற்றால் அந்தக் கிரயம் செல்லும். (இ. லா. ரி. 6 பம். 168).

பம்பாய் தீர்ப்புகள்.

இரண்டாவது டிரான்ஸ்பர் இல்லாத விஷயத்தில் இப்பொழுது விவரிக்கப்பட்ட நிர்பந்தங்கள் கிடையாது. மைத்தவர்கள் அக்கிரமமாக கட்டிக்கொண்ட காரணத்தால் சொத்தை தன்வசத்தில் வைத்துக்கொள்ளாத ஆஸ்திதாரன் அதை யாருக்காயினும் டிரான்ஸ்பர்செய்தால் அந்த டிரான்ஸ்பர்தாரன் பிறகுசெய்து அப்படி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்களைத் தள்ளிவிட்டு சொத்தை சுவாதீனப்படுத்திக் கொள்ளலாம். (9 பம். ஐ. 275; இ. லா. ரி. 9 பம். 324).

198. 1877-ம் வரு 3-வது நெ. ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டுப் பிரகாரம் சிலசில தஸ்தாவேஜிகள் விஷயங்களில் ரிஜிஸ்தர்செய்து கொள்ளுவது கட்டாயமில்லாம லிருந்தாலும் அதே சொத்து விஷய

ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டு 50-வது செக்ஷன்.

மாக முதலில் சாதாரணமான தஸ்தாவேஜியும் பிறகு ரிஜிஸ்தர் தஸ்தாவேஜியும் பிறந்திருந்தால் ரிஜிஸ்தருள்ள தஸ்தாவேஜியே செல்லுமென்று அந்த ஆக்ட்டு 50-வது பிரிவால் காணப்படுகிறது. முதல் தஸ்தாவேஜி சங்கதியை அறிந்தே பிறகு ரிஜிஸ்தர் தஸ்தாவேஜிபெற்றவனுக்கு முந்திய சாதாரண தஸ்தாவேஜியால் சொத்து சுவாதீனப்படாம லிருக்கையில் பிந்திய ரிஜிஸ்தர் தஸ்தாவேஜி பெற்றவனுக்கு மேல் சொல்லிய 50-வது செக்ஷன்படி லாபம் கிடைக்கமாட்டாதென்று எல்லா கோர்ட்டார்களும் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 8 அ. 540; இ. லா. ரி. 5 க. 336; இ. லா. ரி. 10 க. 250, இ. லா. ரி. 13 க. 70; இ. லா. ரி. 6 பம். 515; இ. லா. ரி. 12 பம். 569; இ. லா. ரி. 9 பம். 427; இ. லா. ரி 10 பம. 105; இ. லா. ரி. 12 பம். 569; இ. லா. ரி. 8 க. 597; இ. லா. ரி. 10 க. 1073; இ. லா. ரி. 16 க. 22; இ. லா. ரி. 16 ம. 149).

டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட்டு.

199. இந்து தர்மசாஸ்திரங்களின்படி தானங்கள் ஒத்திபந்தகங்கள் சாஸனங்கள் முதலிய பராதீனங்கள் தஸ்தாவேஜி மூலமாக நடக்கவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் காணப்படவில்லை. ஆனால், இப்பொழுது 1882-ம் ஸு 4-வது நெ. டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட்டுப்படி சில நிர்ப்பந்தங்கள் ஏர்ப்பட்டிருக்கின்றன இந்தச் சட்டம் பம்பாய் பஞ்சாப் பர்யாதேசங்களில அனுஷ்டானத்தி லில்லை. பாக்கி இடங்களில் அதில் சொல்லப்பட்டிருக்கிறபடியே பராதீனங்கள் நடத்தவேண்டியது.

கிரயம், ஒத்திபந்தகம், குத்தகை.

ஏதாவது ஸ்தாவரசொத்து விர்க்கப்படும் பொழுது அந்த சொத்தின் கிரயமாவது ஏதாவது ஸ்தாவர சொத்து ஒத்திபந்தகம் வைக்கப்படும் பொழுது அந்த ஒத்திபந்தகத்தின் முழுதுகையாவது 100 ரூபாய் அல்லது ஜாஸ்தியாக யிருந்தால் ரிஜிஸ்தர் தஸ்தாவேஜியினாலேயே அந்த கிரயம் அல்லது பாத்தியம் நடத்தப்படவேண்டும். 100 ரூபாயிக்கு கிரயம் அல்லது துகை குறைந்திருந்தால் ரிஜிஸ்தர் தஸ்தாவேஜியில்லாமலாவது சொத்தை சுவாதீனப்படுத்தாமலாவது அந்த கிரயம் அல்லது பாத்தியம் நடத்தப்படலாம். (செக்ஷன், 54, 59). ஒருவருஷ கெடுவுக்கு அல்லது வருஷம் 1-க்கு இவ்வளவு துகை என்று ஏர்ப்படுத்திக் கொண்டு ஸ்தாவர சொத்தை குத்தகைசெய்தால் ரிஜிஸ்தர் தஸ்தாவேஜியினாலேயே நடத்தப்படவேண்டியது. மைத்த விஷயங்க

ளில் சாதாரண தஸ்தாவேஜியிலாவது வாய்மொழியாலாவது குத்தகை ஏர்ப்பாடு நடத்தலாம். (செக்ஷன், 107).

200. ஸ்தாவர சொத்தின் தானம் கொடுக்கிறவனுடைய கையெழுத்தும் இரண்டு சாக்ஷிகளுடைய சாக்ஷியமும் உடைய ரிஜிஸ்தர் தான சாஸனத்தினாலேயே நடத்தப்பட வேண்டியது. ஜங்கமசொத்தின் தானம் அப்படி ரிஜிஸ்தர் தான சாஸனத்தினாலே யாவது சொத்தை சுவாதீனம் செய்வதாலாவது நடத்தலாம். (செக்ஷன், 123). ரிஜிஸ்தர் தஸ்தாவேஜியால் தானம் செய்யப்பட்டால் அசையாப்பொருளா யிருந்தாலும் அசையும்பொருளா யிருந்தாலும் சரி சொத்தை சுவாதீனம் செய்யவேண்டியது அவசியமில்லை. (இ. லா. ரி. 14 க. 446).

தானம்.

8 — வது அத்தியாயம்.

உயில்கள்.

201. உயில் அல்லது மரணசாஸனம். அதாவது ஒரு ஆஸ்திதாரன் தான் உயிருட னிருக்கையிலேயே தன் சொத்தை தானம்செய்து சுவாதீனப் படுத்தாமல் தான் இறந்தபிறகு இன்னின்னார் தனக்கு சொந்தமான இன்னின்ன சொத்துக்களை சுவாதீனப் படுத்திக்கொண்டு அனுபவிக்கும்படி தன்னிஷ்டத்தை விவறிக்கிற தஸ்தாவேஜி சொத்து விஷயமாய் உயில் மூலமாக ஏர்ப்பாடு செய்யும் வழி இந்து தர்மசாஸ்திரங்களில் அனேகமாய் காணப்படவில்லை. எல்லா நிலைமைகளிலும் சொத்துக்கு வார்சுகள் ஏர்ப்படுத்தப்பட் டிருப்பதாலும் சேர்ந்த குடும்பத்தில் உள்ள கட்டுப்பாடுகளாலும் இஷ்டப்படி சொத்தைக் கொடுத்து விடும்படியான பாத்தியம் முன்காலத்தில் ரொம்பவும் குறைவாக யிருந்தாலும் உயில்களுக்கு அவ்வளவு இடமில்லாம லிருந்து இப்பொழுது இந்தபாத்தியம் விருத்தியாகி சொத்து பராதீனங்களும் சாமான்னியமாக இருப்பதால் உயில்கள்கூட அதிகமாக யிருக்கின்றன.

உயிலென்றா லென்ன.

202. சுமார் 100 வருஷத்துக்கு முந்தியே பங்காளா பிரஸிடென்சியில் உள்ள கோர்ட்டார்களால் இந்துக்களுக்குள் உயில் ஒப்புக்கொள்ளப்பட ஆரம்பமாயிற்று. (2 மார்லீடைஜெஸ்ட், 220; 1 பம். ஸ. ரீ. 2; எப். மெக். 357; 2 பம். ஸ. ரீ. 23). தென்

இப்பொழுது எல்லா பிரஸிடென்ஸிகளிலும் உயில் ஒப்புக்கொள்ளப் படுகிறது.

இந்தியாவிலும் பம்பாய் பிரசிடென்சியிலும் வெகுகாலம் வரையில் உயில்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. (2 ம. தீ. 79; 1850-ம் ௵ ம. தீ. 50; 2 பாரோ, 471, 124; 1829-ம் ௵ 5-வது ரெ. மதராஸ் ரிகுலேஷனில்கூட இந்துக்களுக்குள் உயில்கள் செல்லமாட்டாதென்றே பிரசுரம் செய்யப்பட்டது. ஆனால் பிந்தி ஸதர்கோர்ட்டு ஐகோர்ட்டு அவர்கள் தீர்ப்புகளாலும் பிறிவீகவுன்சிலார் தீர்ப்புகளாலும் கூடஇந்துக்களுக்குள் உயில்கள் செல்லுமென்று ஸ்தாபிக்கப்பட்டது. (1851-ம் ௵ ம. தீ. 226; 6 மூ. இ. அ. 309, 344; 10 மூ. இ. அ. 308; 1 ம. ஐ. 326, 339; இ. லா. ரி. 5 க. 438; 3 பம். ஐ. 8). இப்பொழுது எல்லா பிரசிடென்சிகளிலும் இந்து ஜனங்களுக்குள் உயில்கள் தடையின்றியில் செல்லுகின்றன.

உயில் செய்யும்படி பாத்தியம்.—மிதாக்ஷரம்.

203. மிதாக்ஷரத்தின்படி ஆஸ்திதாரன் தான் உயிருடனிருக்கையில் தானமாக கொடுக்க எந்தெந்த சொத்துக்களின்பேரில் பாத்திய முள்ளவனோ அந்த சொத்துகளை உயில் மூலமாக கொடுக்கவும் கூட அவனுக்கு பாத்தியம் உண்டு. (1 ம. ஐ. 326, 339). ஆகையால் சுவயார்ஜித சொத்தையாவது சேர்ந்த குடும்பத்துக்குச் சேராத தனிசொத்தையாவது அந்த சொத்தையாவது தன் இஷ்டப்படி உயில் மூலமாகக் கொடுக்கலாம். மேலும் புத்திர சந்ததி அதாவது பிள்ளை பேரன் கொள்பேரன் ஆவது அண்ணன் தம்பி முதலிய சேர்ந்த பாத்தியஸ்தர்களாவது இல்லாத ஆஸ்திதாரன் தான் வகிக்கவேண்டிய ஜீவனாம்சத்துக்குத் தக்க ஏர்ப்பாடு செய்துவிட்டு பிதரார்ஜித சொத்தைக்கூட இஷ்டம் வந்தபடி உயில்மூலமாகக் கொடுத்து விடலாம். (6 மூ. இ. அ. 309, 344; 10 மூ. இ. அ. 308; 12 மூ. இ. அ. 38; 3 பம். ஐ. 6; இ. லா. ரி. 12 ம. 126). ஆனால், சேர்ந்த குடும்பத்தில் உள்ள பாகஸ்தன் பிதரார்ஜித சொத்தில் தன்னுடைய பாகத்தை உயில் மூலமாகக் கொடுத்துவிட பாத்தியம் உள்ளவன் அல்ல. உயிருடனிருக்கையில் தானமாக தன் பாகத்தை விநியோகம் செய்யும் பாத்தியம் சேர்ந்த குடும்பத்திலுள்ள பாகஸ்தனுக்கு உண்டாயிருந்தாலும் அவனுடைய மரணகாலத்தில் மைத்தபாகஸ்தர்களுடைய பொதுபாத்தியம் மேலாகி விடுவதால் தான் இறந்தபிறகு தன்னுடைய பாகம் இன்னானுக்குச் சேரவேண்டியதென்று உயில் செய்யும்படியான பாத்தியம் அவனுக்குத் தப்பிப்போய் விடுகிறது. (8 ம. ஐ. 6, 13; 3 பம். ஐ. 6, 66; 11 பம். ஐ. 66; இ. லா. ரி. 5 பம். 48; இ. லா. ரி. 12 பம். 105). ஆகையால், சேர்ந்த குடும்பத்தில் உள்

ளபாகஸ்தனுல் அவன் பாகத்தை உயில் மூலமாகப் பெற்றுக்கொண்டவன் அதினுல் எவ்விதமான பிரயோசனத்தையும் அடையமாட்டான்.

204. தாயபாக சம்பிரதாயப்படி சேர்ந்த குடும்பத்திலுள்ள தகப்பன் தன்னுடைய ஸ்தாவர ஜங்கம பிதரார்ஜித சொத்துக்களை எல்லாம் இஷ்டம் வந்தபடி உயில் செய்துவிடலாமென்று 188-வது பாராவில் தெரிவித்திருக்கிறோம். மேலும் சம்பிரதாயப்படி சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்கள் எல்லா சொத்துக்கும் பொதுவில் பாத்தியமுள்ளவர்களாக இல்லாமல் தனித்தனி பாத்தியம் உடையவர்களா யிருப்பதால் அவர்கள் தங்கள் பாகங்களை உயில் செய்யும்படியான பாத்தியத்தை உடையவர்களாகிறார்கள். (6 மூ. இ. அ. 344; 4 க. ஐ. 159; 9 க. ஐ. 396). பின்னுல் 190-வது பாராவைப் பார்க்கவேண்டியது.

தாயபாகம்.

205. தங்களுக்கு முழுபாத்தியமுள்ள ஸ்திரீதனம் வகையறு சொத்துக்களை ஸ்திரீகள் உயில் மூலமாகக்கொடுத்துவிடலாம். (இ. லா. ரி. 2 ம. 333). ஆனுல் புருஷர்களிடமிருந்து ஸ்திரீகளுக்கு வார்சு பாத்தியத்தால் கிடைத்த சொத்தை அவர்கள் உயில் செய்யக்கூடாது. (இ. லா. ரி. 10 பம். 372; 3 ஸ. 49; 1 பாறு. 55, 67). இரண்டு மூன்று விதவைகளுக்குச் சேர்ந்து கிடைத்திருக்கும் சொத்தை அவர்களில் யாருகட்டும் உயில் மூலமாக கொடுக்க பாத்தியஸ்தராகமாட்டார்கள். மைனர்களா யிருப்பவர்கள் தங்கள் சொத்தை உயில் மூலமாக விநியோகம் செய்ய பாத்தியமுள்ளவர்களல்ல.

ஸ்திரீகள்—மைனர்கள்.

206. உயில் மூலமாக சொத்து கொடுபட்டால் அது உயில் செய்தவன் இறந்தபிறகு அவரவர்க்கு வசப்படுத்தப்பட வேண்டியதே ஒழிய அவன் உயிருடனிருக்கையிலேயே வசப்படுத்தவேண்டிய அவசியமில்லை.

சொத்தை வசப்படுத்துகிறது.

மைனர்கள், பித்தர்கள், குஷ்டரோகிகள் இப்படிப்பட்டவர்களுக்கு உயில் மூலமாக சொத்து கொடுக்கப்பட்டாலும் செல்லும்.

மைனர் வகையறுக்களுக்கு உயில்செய்தல்.

207. ஒரு ஆஸ்திதாரன் தான் தீர்க்கவேண்டிய கடன்களைப் பற்றியாவது தான் கொடுக்கவேண்டிய ஜீவனும்சங்கள் விஷயத்தைப்பற்றியாவது ஏற்பாடு செய்யாமல் தன்னுடைய எல்லா சொத்துக்களையும் உயில் மூலமாய் மைத்தவர்களுக்குக்

கடன்கள் ஜீவனும்சங்கள் — இவைகளைப் பற்றிய ஏற்பாடு.

கொடுத்துவிட்டால் இவர்களுக்கு அந்த சொத்தில் முழுபாத்தியமும் கிடைக்காமல் அந்தக் கடன்கள் அல்லது ஜீவனாம்சங்கள் விஷயத்தில் கிரமமாக கொடுக்க வேண்டியதுபோக மிகுந்த சொத்தில் மட்டில பாத்தியம் உண்டாகும். (3 ம மதறாஸ் லா ஜர்னல், 174).

ஆஸ்திதாரன் தன் கடனுக்காகவாவது தான் கொடுக்கவேண்டிய ஜீவனாம்சங்களுக்காகவாவது எவ்வித ஏர்ப்பாடும் செய்யாமல் சொத்து முழுவதையும் உயில் செய்து அதில் அந்த கடன்காரர்களுக்காவது ஜீவனாம்சம் பெற்றுக்கொள்ளத் தக்கவர்களுக்காவது சில சொத்து கொடுத்துவிட்டுப் போயிருந்தால் இவர்கள் உயிலின்படி சொத்தைப் பெற்றுக்கொண்டு திருப்தி அடையவேண்டியது. இல்லாவிட்டால் தங்களுடைய கடன்களேயும் ஜீவனாம்சங்களேயும் வரப்பெற்றுக்கொண்டு உயிலில் கொடுக்கப்பட்ட தானங்கள் வேண்டாமென்று தள்ளிவிட வேண்டியது. (இ. லா. ரி 14 பம். 438).

உயில் சொத்து விஷயமான ஏர்ப்பாடுகள், ஷரத்துகள்.

208. உயில் மூலமாக சொத்தை தானம் செய்தால் அந்த சொத்தை முதல் முதலில் ஒருவன் தான் உயிருள்ள வரையில் அனுபவிக்க வேண்டியதென்றும் பிந்தி அந்த சொத்து முழுமையுமாவது சிலதையாவது வேறொருவன் அனுபவிக்கவேண்டியதென்றும் இவ்விதமான ஏர்ப்பாடு செய்யலாம். அப்படி ஏர்ப்பாடு செய்யப்பட்டால் முதல் பாத்தியம் உள்ளவன் அந்த சொத்துக்களே கிரமமான வழியாய் அனுபவித்துக்கொள்ள வேண்டுமே ஒழிய கிரயம் தானம் முதலிய விதங்களால் பராதீனம் செய்யக்கூடாது. செய்தால் அந்த கிரயதானம் முதலியவைகள் றத்தாக எண்ணப்படும்.

உயிலால் கொடுக்கப்பட்ட சொத்தில் ஒருவருக்குப் பின் ஒருவருக்கு பாத்தியம் ஏர்ப்படுத்தப்பட்டிருந்தால் இப்படி பாத்தியம் கொடுக்கப்பட்டவர்கள் உயில் செய்தவன் இறந்துபோகும் காலத்தில் பிறந்து அல்லது கர்ப்பத்தி லுண்டானவர்களுக்கு உயிலால் ஏதேனும் சொத்துங் கொடுக்கப்பட்டிருந்தால் அது செல்லமாட்டாது. (8 மூ. இ அ. 85; இ. லா. ரி. 4 க. 23; இ. லா. ரி. 10 க. 952; இ. லா. ரி. 16 க. 71, 383; இ. லா. ரி. 6 பம். 38; 4 க. ஜ. 188; 9 க. ஜ. 397—"டாகோறு உயில்கேஸ்").

சுவீகாரப்பிள்ளே விஷயத்தில் மட்டும் மேல்பாராவில் சொல்லப்பட்ட நியாயம் செல்லமாட்டாது. அதாவது சுவீகாரம் செய்துகொள்ள அதிகாரம்பெற்ற ஸ்திரீ கர்ப்பிணியாக எண்ணப்படுவதால் அந்த

அதிகாரத்தை வைத்துக்கொண்டு உயில் செய்தவன் இறந்தபிறகு சுவிகாரம் செய்து கொள்ளப்பட்ட பிள்ளைக்கு உயிலால் கொடுக்கப்பட்டிருந்த தானம் செல்லும். (4 க. ஐ. 103, 166; 9 க. ஐ. 377, 397, 405)

உதாஹரணங்கள்.

209. இதன் கீழுள்ள உதாஹரணங்களைக் கவனித்து அவைகளிலுள்ள விஷயங்களைச் செவ்வையாய்த் தெரிந்து கொள்ளவேண்டியது.

(1.) "ஏ" என்பவன் எழுதிவைத்த உயிலில் - தன் சொத்து முழுவதையும் "பீ" என்பவன் அவனுயிருள்ள வரையில் அனுபவித்துக் கொள்ளவேண்டிய தென்றும் பிந்தி அந்தச் சொத்து "ஸீ" என்பவனுக்குச் சேரவேண்டியதென்றும் ஏர்ப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. "ஏ" யினுடைய மரணகாலத்தில், "பீ" "ஸீ" இவர்கள் பிரந்து அல்லது கர்ப்பத்திலாவது இருந்தால் இந்தஏர்ப்பாட்டுக்குத் தடையில்லை. [உயில் செய்தவனுடைய மரணகாலத்தில் பிரந்தாவது கர்ப்பத்திலிருந்தாவது இருக்க வேண்டியது முக்கியமே ஒழிய உயில் எழுதப்பட்ட காலத்தில் பிறந்தாவது கர்ப்பத்திலிருந்தாவ திருக்கவேண்டியது அவசியமில்லை].

(2.) ஒரு ஆஸ்திதாரன் தன்னுடைய பெண்சாதிக்கு சுவீகாரம் செய்துகொள்ள அதிகாரம் கொடுத்து தன் சொத்து முழுவதையும் தன்னுடைய விபக்த சகோதிரன் அனுபவிக்க வேண்டிய தென்றும் தன் பெண்சாதி சுவீகாரம் செய்துகொண்டால் சுவீகாரப்பிள்ளைக்கு அந்த ஆஸ்தி சேரவேண்டிய தென்றும் ஏர்ப்பாடு செய்தான். இந்த ஏர்ப்பாடு செல்லும்.

(3.) ஒரு ஆஸ்திதாரன் எழுதிவைத்த உயிலில் தன்னுடையசொத்து முழுவதையும் "பீ" என்பவன் அவன் உயிருள்ளவரையில் அனுபவிக்கவேண்டிய தென்றும் "ஸீ" என்கிற தன் பெண்ணுக்குப் பிள்ளை உண்டானால் அந்தப்பிள்ளைக்கி "பீ" என்பவனுக்குப் பிரகு அந்தசொத்துச் சேரவேண்டிய தென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆஸ்திகாரன் இறந்துபோகும் காலத்தில் "ஸீ" என்பவளுக்குப் பிள்ளை உண்டாயிருக்கவுமில்லை கர்ப்பத்தி லிருக்கவுமில்லை. அதற்குப் பிரகு "ஸீ" என்பவளுக்குப் பிள்ளை பிரந்தாலும் அவனுக்கு அந்த உயிலால் பாத்திரியம் உண்டாகமாட்டாது. (இ. லா. ரி. 8 க. 837).

(4.) ஒரு ஆஸ்திதாரன் தன் சொத்து முழுவதையும் உயில் மூலமாய் "ஏ," "பீ," "ஸீ," "டீ," "ஈ," என்கிற ஐந்துபேர்களுக்குப் பிறித்துக்கொடுத்து அவர்களில் யாறேனும் பிள்ளையில்லாமல் இறந்தால் அவனுடைய பாகம் மைத்த நால்வர்களுக்கும் சேரவேண்டியதென்று

ஷரத்துகள் ஏர்ப்படுத்தினன். "ஏ," "பீ," "ஸீ," "டீ," "ஈ," இந்த ஐவர்களும் ஆஸ்திதாரன் இறந்துபோகும் காலத்தில் பிரந்திருந்தார்கள். பிறகு "ஏ" என்பவன் பிள்ளையன்றியில் இறந்துபோனன். அப்பொழுது அவனுடைய பாகம் மைத்த நால்வர்களுக்கும் சேருமே அல்லாமல் அவனுடைய பெண்சாதி பெண் முதலியவர்களுக்குச் சேர மாட்டாதென்று பிறிவீகவுன்ஸிலார் தீர்மானித்தார்கள். (6. மு. இ. அ. 526; 9. மு. இ. அ. 123).

(5.) முதலில் "ஏ" என்பவனுக்கு, பிந்தி "பீ" என்பவனுக்கு, பிறகு "ஸீ" என்பவனுக்கு, பிறகு "ஸீ" என்பவனுடைய மூத்த பிள்ளைக்கு, அதற்குப் பிறகு அவன் மூத்த பிள்ளைக்கு, இவ்விதமாக சொத்துச் சேரவேண்டியதென்று உயிலில் ஏர்ப்பாடு செய்யப்பட்டிருந்தால் அதுசெல்லாமல் இவர்களில் எவரெவர்உயில்செய்தவன் இறந்துபோகும் காலத்தில் பிறந்தாவது கர்ப்பத்திலாவதிருந்தார்களோ அவர்களுக்குமட்டும் சொத்தில் பாத்தியம் உண்டாகும்.

(6.) ஒரு ஆஸ்திதாரன் தன்சொத்தை "ஏ," "பீ," "ஸீ," "டீ," இவர்களுக்கு உயில் மூலமாய்ப் பிறித்துக்கொடுத்து அவர்களில் யாராகிலும் பிள்ளையன்றியில் இறந்தால் அவனுடைய பாகம் மைத்தவர்களுக்குச் சேரவேண்டியதென்றும் வேறுஎவர்களுடைய பிள்ளைகளாவது பேரன்களாவது கொள் பேரன்களாவது பிள்ளையன்றியி லிறந்தால் அவனுடைய பாகசொத்து அவன் பெண்சாதிக்காவது பெண்ணுக்காவது சேராமல் மைத்த பாகஸ்தர்களுக்குச் சேரவேண்டியதென்றும் இம்மாதிரி ஷரத்துகள் எற்பாடு செய்துபோனல் அந்த ஆஸ்திதாரன் இறக்குங்காலத்தில் பிறந்திருந்த "ஏ," "பீ," "ஸீ," "டீ" விஷயமான ஷரத்துகள் மாத்திரம் செல்லுகின்றன. தர்மசாஸ்திரங்களில் நிச்சயிக்கப்பட்டிருக்கிற வார்சு பரம்பரையை எக்காலத்திலும் மாற்றும்படியான ஷரத்துகள் செல்லமாட்டாது. (4 க. ஐ. 171, 212; 9 க. ஐ. 396 — "டாகூற் உயில்கேஸ்;" இ. லா. ரி. 6 க. 421; இ. லா. ரி. 10 க. 952; இ. லா. ரி. 7 க. 269; இ. லா. ரி. 11 க. 684; இ. லா. ரி. 16 க. 383).

(7.) மேல் சொல்லிய உதாஹரணங்களில் தெரியப்படுத்தப்பட்டவைகளை யொழிய வேறு ஏதாவது சட்டத்துக்கு விரோதமான ஷரத்துகள் உயிலில் முக்கியமானவைகளாக ஏற்படுத்தப்பட்டால் அந்த உயில் செல்லமாட்டாது. எப்படியேனில்—உயிலால் கொடுக்கப்பட்ட சொத்து ஸ்திரீகளுக்காவது சுவீகார பிள்ளைகளுக்காவது சேரக்கூடாதென்றும் அந்தசொத்தை பாத்தியப்படுத்தக் கூடாதென்

றும் விற்க கூடாதென்றும் கடன்களுக்காவது ஜீவனாம்சத்துக்காவது போக்கடிக்கக் கூடாதென்றும் அந்த சொத்தை ஆதாயத்தோடு எப்பொழுதும் விருத்திசெய்துகொண்டு வரவேண்டியதே யொழிய செலவு செய்யக்கூடாதென்றும் அந்த சொத்தை அனுபவிக்காமல் பாதுகாத்து வரவேண்டியதென்றும் இப்படிப்பட்ட ஷரத்துகள் ஏற்ப்படுத்தினால் உயில் செல்லமாட்டாது. (இ. லா. ரி. 10 க. 952; இ. லா. ரி. 9 ம. 499; 2 க. ஐ. 11, 25; 4 க. ஐ. 231, 265; இ. லா. ரி. 7 க. 269; இ. லா. ரி. 11 க. 684; இ. லா. ரி. 14 க. 222; 8 க ஐ. 400; இ. லா. ரி. 8 க 378; 14 க 175; இ. லா. ரி. 5 க. 438; இ. லா. ரி. 1 க. 104; இ. லா. ரி. 6 க. 106; 8 மூ. இ. அ. 66, 76). 1882-ம்௵ 4-வது செ. டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 10, 11 செக்ஷன்களைப் பார்க்கவேண்டியது.

(8.) மைனர்களுக்கு உயில் மூலமாய் சொத்தைக் கொடுத்து அந்தச் சொத்தை அவர்கள் இன்னின்ன விதமாய் அனுபவித்துக்கொள்ளவேண்டிய தென்றாவது இவ்வளவுமட்டில்தான் சிலவுசெய்யலாமென்றாவது ஏற்பாடு செய்தால் அந்த ஏற்பாடு அவர்கள் மைனாரிடி நீங்கும் வரையில்மட்டும் செல்லுமே யொழிய தக்கவயதுவந்த பிறகு செல்லாது. (இ. லா. ரி. 1 க. 104; 8 க. ஐ. 400; இ. லா. ரி. 8 க. 378).

உயில் ரத்தாய் விட்டால் சொத்து வார்சுகளுக்குச் சேரும்.

210. உயிலால் சொத்துக் கொடுக்கப்பட்டவன் உயில்செய்தவனிறந்த காலத்தில் பிறந்தாவது கர்ப்பத்திலிருந்தாவது இல்லாததைக் கொண்டாவது உயிலில் அக்கிரமமான ஷரத்துகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததைக்கொண்டாவது உயிலுடைய ஷரத்துகள் முற்றிலும் அர்த்தமாகாமல் மேல் நடத்த வழியில்லாமலிருப்பதாலாவது உயில் முழுவதும் அல்லது சிலபாகம் றத்தாகிவிட்டால் அந்த உயிலில்கண்ட அல்லது றத்தான பாகத்துக்குச் சம்பந்தப்பட்ட சொத்து உயில் செய்தவன் வார்சுகளுக்குச் சேரும். (2 க. ஐ. 38; 4 க 198; 9 க. ஐ. 407; இ. லா. ரி. 3 க. 553). அந்தச் சொத்து உயில்செய்தவனுடைய வார்சுகளுக்குச் சேரக்கூடாதென்று உயிலில் எழுதப்பட்டிருந்தாலும் மேல் சொல்லப்பட்ட நிலைமையில் வார்சுகளுக்குச் சேராமல் போகமாட்டாது. (4 க. ஐ. 187; 9 க. ஐ. 402; 14 க. ஐ. 175; இ. லா. ரி. 2 பம். 488).

உயிலால் சொத்து கொடுக்கப்பட்டவன் உயில் செய்தவனுக்கு முந்தியே இறந்தால் அந்த சொத்து உயில் செய்தவனுக்கே சேறும்.

உயில் எழுத்து மூலமா யிருப்பது அவசிய மில்லை.

211. உயில் வாய்மொழியா யிருந்தாலும் எழுத்துமூலமாயிருந்தாலு மிருக்கலாம். எழுத்து மூலமா யிருந்தால் விவஹார முண்டாகும்போது ருசுப்படுத்த சுளுவாயிருக்கும். (12 மூ. இ. அ. 2; இ. லா. ரி. 11 பம். 89). எழுத்து மூலமா யிருக்கையில் இப்படி எழுதப்படவேண்டு மென்றாவது ஸ்டாம்பு காயிதத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்றாவது ரிஜிஸ்டர் செய்திருக்க வேண்டுமென்றாவது கட்டாயமில்லை. சாக்ஷி கையெழுத்துகள் ரிஜிஸ்டர்செய்தல் முதலியவைகள் ருசு விஷயத்தில் உபயோகமாகுமேயன்றி உயில் செல்வதர்க்கு அவசியமில்லை. ஒருவன் தன் சொத்தைப் பற்றி இந்த விதமாய் நடத்தப்பட வேண்டியதென்று அவனிறக்குங் காலத்தில் வாய்மொழியாக மட்டும் சொல்லிவிட்டு இறந்தாலும் அந்த வாய்மொழியே உயிலாக எண்ணப்படும். நடக்கவேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் சொல்லி எழுதிவைத்து அப்படி எழுதப்பட்ட காயிதத்தில் கையெழுத்துப் போடுவதர்க்கு முந்தியே ஆஸ்திதாரன் இறந்து போனால் அந்த காயிதமே உயிலாக எண்ணப்படும். (3 ஸ. 138; இ. லா. ரி. 3 பம். 7). அந்த உயிலைக் கோர்ட்டார் நம்புவார்களா மாட்டார்களா வென்கிற விஷயம் ருசுவைப் பொருத்திருக்கிறது. தானிறந்த பிறகு தன் சொத்து விஷயமாக நடத்தவேண்டிய மார்க்கங்களை சர்க்காருக்கு மனுமூலமாய்த்தெரியப்படுத்திவிட்டு இறந்துபோன ஒரு ஆஸ்திதாரன் சொத்து விஷயத்தில் அந்த மனுவே அவனுடைய உயிலாக எண்ணப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது. (14 க. ஐ. 226; 26 ஸ. 55; இ. லா. ரி. 7 அ. 163; இ. லா. ரி. 18 க. 1).

ஹிந்து உயில்சட்டம்.

212. மதருஸ் பம்பாய் இரண்டு பட்டணங்களிலும் பங்காளா தேசத்திலுமுள்ள ஹிந்துக்களுக்குள் நடத்தப்பட்ட உயில்களும் மேலும் அந்த பிறதேசங்களிலுள்ள ஸ்தாவரசொத்தைப் பற்றிய உயில்களும் எழுத்து மூலமாயிருந்து சாக்ஷி கையெழுத்துகளுடன் சேர்ந்திருக்கவேண்டு மென்று 1871-ம் ௵ 21-வது நெ. ஹிந்து உயில் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (1881-ம் ௵ 5-வது நெ. சட்டத்தையும், 1860-ம் ௵ 27-வது நெ. சட்டத்தையும் பார்க்கவேண்டியது).

ரிஜிஸ்திரேஷன் ஆக்டு செக்ஷன்கள் 42, 44.

213. உயில் செய்தவன் தானிறக்கும் வரையில் தன்னுயிலிலுள்ள சங்கதிகள் மைத்தவர்களுக்குத் தெரியக்கூடாதென்றும் அந்த உயிலை எவரும்மாற்றாமல் காப்பாற்ற வேண்டுமென்றும் எண்ணினால் 1877-ம் ஞு 3-வது செ. ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டு 42-வது பிரிவின்படி உயிலை ஒரு கவருக்குள் வைத்து லகோடாசெய்து ரிஜிஸ்தராபீஸில் அனுமத்தாக வைத்து வைக்கலாம். அவரதை இரும்புப் பெட்டியில் ஜாக்கிறதையாகக் காப்பாற்றி உயில் செய்தவன் இறந்த பிறகு தம் புஸ்தகத்தில் எழுதச்செய்து மனுக் கொடுப்பவர்களுக்கு நகல் கொடுப்பார். மேல் சொல்லபட்ட அனுமத்தாக வைக்கப்பட்ட உயிலை உயில் செய்தவன் தன்னிஷ்டம் வந்தபோது வாபஸ் பெற்றுக்கொள்ளலாம். (செ. 44).

உயிலைமாற்ற — ரத்து செய்ய.

214. ஒரே ஆஸ்திதாரனால் இரண்டு மூன்று உயில்கள் எழுதபபட்டிருந்து அவைகளுக்குள் ஒன்றுக்கொன்று வித்தியாச முண்டாகும் பக்ஷத்தில் கடைசியில் எழுதப்பட்ட உயில் அனுஷ்டானத்துக்குக்கொண்டுவரப்படும். உயில் எழுதின பிறகு அதை உயில் செய்தவன் இஷ்டம் வந்தபோது மாற்றலாம் றத்து செய்யலாம். (இ. லா. ரி. 3 க. 426). எழுத்து மூலமாய் றத்துசெய்ய வேண்டுமென்றாவது இவ்விதமாய் றத்துசெய்ய வேண்டுமென்றாவது கட்டாயமில்லை. கிறமமாய் எழுதி ரிஜிஸ்தர் செய்யப்பட்ட உயிலைக்கூட வாய்மொழியால் ரத்து செய்யலாம். ஆனால் அந்த நிலைமையில் வாய்மொழி ருசுவைக் கோர்ட்டார் எளிதில் நம்பமாட்டார்கள்.

தெளிவாய் றத்து செய்யப்படாமல் போனாலும் அந்தந்த நிலைமைகளைக்கொண்டு றத்து செய்யப்பட்டதாக ஊகிக்கக்கூடும். (3 மதிறாஸ் லா ஜர்னல் 174). எப்படியெனில ஒருவன் தன் சொத்தெல்லாம் மைத்தொருவனுக்குச் சேரும்படி உயில் எழுதி கொஞ்சகாலத்துக்குப் பிறகு சுவீகாரம் செய்துகொண்டான் அல்லது அந்த சொத்தை விற்றான். இந்நிலைமையில் உயில் றத்து செய்யப்பட்டதாக ஊகிக்கவேண்டியது.

உயிலை திருத்துகிறது.

215. உயிலைத் தங்கள் வசத்தி லுடையவர் அதில் ஏதாவது சங்கதியைத் திருத்தினாலும் அல்லது புது சாக்ஷிகளைச் சேர்த்தாலும் அந்த உயில் முழுவதும் றத்தாகமாட்டாது இப்படித் திருத்தினவன்மட்டில் அதினாலுண்டாகும் பயனை யடையமாட்டான். (8 இண்டியன் ஜூரிஸ்ட் 190).

9-வது அத்தியாயம்.

தர்மகாரியங்கள்.

தர்மகாரியங்கள், விக்கிர கங்கள் வகைரு.

216. தர்மகாரியங்கள் மத சம்பந்தமான காரியங்கள் தெய்வ விக்கிரகங்கள் இவைகளுக்காகக் கொடுக்கப்படும் தானங்கள் தப்பாமல் செல்லுமென்றும், அந்த தானங்களுக்காக பிதுரார்ஜித சொத்தைக்கொடுத்தாலும் தடையில்லை என்றும் அவைகள் விஷயத்தில் தான காலத்திலேயே சொத்தை வசப்படுத்த வேண்டுமென்கிற கட்டாயமில்லாததால் அவைகளை நிறைவேற்றுவதர்க்கு வார்சுகள் கட்டுபபட்டவர்களென்றும் ஹிந்து தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கிறது. தீர்ப்புகள்கூட அப்படியே ஏற்ப்பட் டிருக்கின்றன. (5 பம். ஸ. தீ. 24; இ. லா. ரி. 8 அ. 76; 3 பாரொ. 314; 1 பாரொ. 394, 505). ஹிந்துக்களில் உயில்கள் பிறபலமான பிறகு தர்மகாரியங்கள் வகைருவுக்காக உயில் மூலமாய் சொத்தைக் கொடுத்துவிட்டுப் போவது சாதாரணமாய் கோர்ட்டுகளில அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. (எப். மெக்னுடன் 335; 2 மூ. இ. அ. 390; 8 மூ. இ. அ. 66; 14 மூ. இ. அ. 289).

எப்பொழுதும் செல்லத் தக்க ஏற்பாடுகள்.

217. மேல் சொல்லப்பட்ட தர்மகாரியங்கள் விக்கிரஹங்கள் வகைருக்களுக்கு சம்பந்தப்பட்ட உயில்களில் சொத்துவிஷயமாய் எப்பொழுதும் செல்லத் தக்க ஏற்ப்பாடுகள் செய்யப்பட் டிருந்தாலும் செல்லும். (4 க. ஐ. 103, 231; 9 க. ஐ. 377; 15 க. ஐ. 176). ஆனல் தர்மகாரியங்கள் வகைருவை வியாஜியமாக வைத்துக்கொண்டு சொத்தை எப்பொழுதும் தலைமுறைதத்துவமாய் வார்சுதாரர்கள் அனுபவத்தில் வைத்துக்கொள்ளும்படி ஏற்ப்பாடு செய்யப்பட்டால் அது செல்லாமல் அந்த சொத்து வார்சுதாரர்களுக்கு சம்பூர்ண சுவதந்திரத்துடன் சேரும். (இ. லா. ரி. 4 ம. 200).

தர்மகர்த்தாக்களை ஏற்ப் படுத்த.

218. விக்கிரஹங்கள் முன்னின்று தாங்களாக தானங்களைப் பெற்றுக்கொள்ள முடியாததால் தர்மகர்த்தாக்களை ஏற்ப்படுத்தலாம். அல்லது தானங்கொடுப்பவன் தானேமுன்னின்று அந்தக்காரியங்களை நடத்தலாம். இரண்டாவது கேஸில் சிலகாலம் தர்மகாரியங்களை நடத்தி பிறகு நிறுத்திவிட்டால் கட்டாயப்படுத்தி நடத்தும்படி செய்ய வழியில்லை (1853-ம் ஹு ம. தீ. 104; 1854-ம் ஹு ம. தீ. 100;

1864-ம் ௵ ம. தீ. 90; 15 க. ஐ. 176, 167; இ. லா. ரி. 3௪. 324; இ. லா. ரி. 11 அ. 22-37). ஆனல், ஏதாவது தர்மகாரியங்கள் வகைரு நடத்தும்படியுள்ள பளுவை ஆஸ்திதாரன் தனக்குச் சொந்தமான சில சொத்தின்மேல் தெளிவாய் பாத்தியப்படுத்தி ஏற்பாடு செய்திருந்தால் தர்மகர்த்தாக்களை ஏற்படுத்தாமல் தானே நடத்திக்கொண்டிருந்தாலும் அவனாவது அவன் வார்சுகளாவது அந்த தர்மகாரியங்களை நடத்தாமல் தள்ளிவிட வழியில்லை. (இ. லா. ரி. 4 க. 56; இ. லா. ரி. 12 ம 391; 5 பம். ஸ. தீ. 268; 15 க. ஐ. 178; 10 ஸ. 299; 13 ஸ. 200; 8 மூ. இ. அ. 66; இ. லா. ரி. 17 க. 498).

தர்மகர்த்தாக்களின் அதிகாரம்.

219. தர்மகாரியங்கள் தேவஸ்தானங்கள் முதலிய விஷயங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட தர்மகர்த்தாக் (டிறஸ்டி) களுக்கு தர்ம சொத்தின் பேரில் பூர்ணமான அதிகாரமுண்டு. அந்தந்த தர்மங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது சம்பந்தப்பட்ட காரியங்களுக்காகவே தர்ம சொத்தை டிறஸ்டிகள் உபயோகப் படுத்தலாமே யொழிய மைத்த காரியங்களுக்காக உபயோகிக்கக்கூடாது. மைனர்கள் சொத்து விஷயத்தில் கார்டியன்களுக்கு எவ்வளவு அதிகாரமுண்டோ தர்மகர்த்தாக்களுக்கு தர்ம சொத்தின் பேரில் அவ்வளவே அதிகாரமுண்டு (14 க. ஐ. 450; இ. லா. ரி. 2 க. 341; 15 ஸ. 55, 339; 12 பம். ஐ. 214; இ. லா. ரி. 9 பம். ஐ. 422; இ. லா. ரி. 15 க. 339; இ. லா. ரி. 5 பம். 593; இ. லா. ரி. 6 பம். 546; இ. லா. ரி. 15 பம். 625; 13 மூ. இ. அ. 270; 12 ஸ. 299; 15 ஸ. 228; 18 ஸ. 439; 20 ஸ. 471; 21 ஸ. 41; இ. லா. ரி. 13 ம. 277, 402).

புது தர்மகர்த்தாக்கள் ஏற்பாடு.

220. தேவஸ்தானம் முதலியவைகளுடைய தர்மகர்த்தா இறந்தால் (டிரஸ்டீட்) தானசாஸனத்தில் சொல்லப்பட்டபடி தான சாஸன மில்லாவிட்டால் அந்தந்த தேவஸ்தானங்களில் பரம்பரையாய் நடந்து வருகிற வழக்கத்தின்படியாவது புது தர்மகர்த்தாக்களை ஏற்படுத்தவேண்டியது. (11 மூ. இ. அ. 428; இ. லா. ரி. 9 க. 766; இ. லா. ரி. 9 அ. 1; இ. லா. ரி. 7 ம. 499; இ. லா. ரி. 13 ம. 524). சிலசில நிலைமைகளில் தர்மகாரியத்தை நிறைவேற்றும்படி ஷரத்துகள் சொத்தைப்பொருத்திருந்தால் வார்சுகளே தலைமுறை தலைமுறையாய் தர்மகர்த்தாக்களா யிருப்பார்கள். (1 பங். ஸ. தீ. 180; 1853-ம் ௵ ம. தீ. 104; 18 ஸ. 359; இ. லா. ரி. 12 பம். 33; 2 ம. ஐ. 19; 4 ம. ஐ. 23; 14 க. ஐ. 166; இ. லா. ரி. 6 பம் 298; இ. லா. ரி. 3 ம. 93; இ. லா.

ரி. 1 ம. 235; இ. லா. ரி. 6 ம. 270). மடாதிபதிகள் தங்களுக்குப் பிறகு பீட ஸ்தலங்களுக்கு வரவேண்டியவர்களை தாமே நியமித்துக் கொள்ளுகிறது வழக்கமா யிருக்கிறது. (1848 ஷு பங். ஸ. தீ. 25,3 1858-ம் ஷு ம. தீ. 33; 11 மூ. இ. அ. 405; இ. ல. ரி. 11 பம். 514). மடத்துக்கு சம்பந்தப்பட்ட எல்லாரும் சேர்ந்து நியமிக்கிறதுமுண்டு; (1850-ம் ஷு பங். ஸ தீ. 250; 2 பம். ஸ. தீ. 151; 19 ஸ. 215; இ, லா. ரி. 1 அ. 539).

தர்மகர்த்தர்களின்மீது தாவா.

221. தேவஸ்தானங்கள் தர்ம காரியங்கள் முதலியவைகளுக்காக யேர்ப்படுத்தப்பட்ட சொத்தை தர்ம கர்த்தாக்கள் துர்வினியோகம் செய்து கொண்டிருந்தாலும் அல்லது அந்த தர்ம காரியங்களுக்காக உபயோகப்படுத்தாம லிருந்தாலும் அந்த தர்மங்களுக்கு அல்லது தேவஸ்தானங்களுக்கு யெவ்விதமாயினும் ஸம்பந்தமுள்ளவர்கள் பிறாதுகொடுத்து தர்மசொத்தை சறிவர வினியோகப் படுத்தும்படி தீர்ப்பு பெறலாம். (11 ஸ. 443; 12 ஸ. 132; 23 ஸ. 76; 26 ஸ. 1; 4 மூ. இ. அ. 190; இ. லா. ரி. 3 க. 563; இ. லா. ரி. 5 க. 700; இ. லா. ரி. 8 க. 788; இ. லா. ரி. 3 பம். 27; இ. லா. ரி. 6 பம். 122; ஸிவில் பிரோஸிஜர் கோட் சக்ஷன் 539).

கெட்ட நடவடிக்கை முதலிய காறணங்களால் தர்மகர்த்தாக்களை நீக்குவதர்க்காகவே பிறாது செய்யலாம். (இ. லா. ரி. 6 க. 11). 1863 ஷு 23 கெ. தேவஸ்தானம் ஆக்ட்டை பார்க்கவும்.

10-வது அத்தியாயம்.

ஜீவனும்சம்.

ஜீவனும்ச பாத்தியம்.

222. சேர்ந்த குடும்பத்தில் சில புருஷர்கள் பொது சொத்துக்கு பாகஸ்த்தர்கள் ஆவார்களென்றும், சிலர் ஜீவனும்சத்துக்கு மட்டும் பாத்தியம் உள்ளவர்களென்றும் ஸ்திரிகள்கூட மிதாக்ஷர தர்மசாஸ்திரப்படிக்கி ஜீவனும்சத்துக்கு மட்டில் பாத்தியஸ்தர்க ளென்றும் மேலே சொல்லி யிருக்கிறோம். இவ்வத்தியாயத்தில் ஜீவனும்ச பாத்தியத்தின் தன்மையும் அந்த பாத்தியம் எந்த யெந்த நிலைமையில் யார் யாருக்கு உண்டாகு மென்பதும், அல்லது தப்பிப்போகுமென்பதும் இந்த விஷயங்களும் ஜீவனும்சத்தின் துகை வகைறாவும் விவரிக்கப்படும்.

223. குடும்பம் சேர்ந்திருக்கும் வரையில் சொத்தில் பாகஸ்த்தர்களா யிருப்பவர்களுக்கும் அவர்கள் பெண்சாதிகளுக்கும் குழந்தை களுக்கும் ஜீவனும்சம் - அதாவது ஆகாரம் வஸ்திரம் கல்லியாண காரியம் முதலியவைகளுக்காக வேண்டிய சிலவு குடும்ப சொத்திலிருந்து யெஜமான் நடத்தவேண்டியது. குஷ்டரோகம், பிரவி முதலுள்ள பைத்தியம் குருடு ஊமை செவிடு இப்படிப்பட்ட காறணங்களால் குடும்ப சொத்தில் பாகஸ்த்தர்கள் ஆகமாட்டாத புருஷர்களுக்கும் அவர்கள் பெண்சாதிகளுக்கும் குழந்தைகளுக்கும் ஜீவனும்சங்கள் கூட குடும்பசொத்தைப் பொருக்கும்.

சேர்ந்த குடும்பத்தில் பாகஸ்தர்கள் — பாக மில்லாதவர்கள்.

224. சேர்ந்த குடும்பத்தில் உள்ள பாகஸ்தன் இறந்தால் குடும்ப சொத்திலிருந்து ஜீவனும்சத்துக்கும் குடும்ப விட்டிலிருந்து வரவும் அவன் பெண்சாதி பாத்தியம் உடையவள். குடும்பசொத்து யார் சுவாதீனத்திலிருக்குமோ அவன் அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்கக் கட்டுப்பட்டவனுவான் பெண்சாதி பெரியமனுஷி ஆவதர்க்கு முந்தி புருஷன் இறந்தாலும்கூட அவளுக்கு ஜீவனும்சம் கொடாமலிருக்க முடியாது.

விதவை.

ஜீவனும்சத்தை பெற்றுக்கொள்ளுவதற்குப் புருஷனுடைய குடும்ப வீட்டிலேயே அவன் விதவை வாசமா யிருக்கவேண்டு மென்பது அவசிய மில்லே (12 க. ஐ. 238; 5 ம. ஐ. 150; இ. லா. ரி. 3 பம். 372; இ. லா. ரி. 6 ம. 85; இ. லா. ரி. 14 பம் 490). ஆனல் பொதுசொத்து மிகவும் கொஞ்சமாகவாவது அல்லது லாபத்தைக் கொடுக்காததாகவாவது இருக்கும் காரணத்தைக்கொண்டு தனியாக ஜீவனும்சம் கொடுக்கக்கூடாமலிருக்கையில் புருஷனுடைய வீட்டை விட்டுப்போன விதவைக்குக் கோர்ட்டார் தனியாக ஜீவனும்சம் கொடுக்கமாட்டார்கள். (இ. லா. ரி. 3 பம். 44; இ. லா. ரி. 4 பம். 261; 1869 ஹை ம. தீ. 59). புருஷனுடைய வீட்டிலேயே விதவை குடியிருந்து வரும்படியான ஷரத்துடன் ஜீவனும்சம் யேர்ப்படுத்தி அவன் உயில் சொத்து விட்டுப்போயிருந்தால் அவள் அந்த வீட்டை விட்டுப்போய் ஜீவனும்சம் கேழ்க்க முடியாது. (1859 ஹை பம். ஸ. தீ. 457; எப். மெக். 62; 12 க. ஐ. 247; இ. லா. ரி. 13 பம். 218; இ. லா. ரி. 15 பம். 236). புருஷனுடைய வீட்டிலேயே விதவை குடியிருக்கும்போது அவளுக்கு யேர்ப்படுத்தப்பட்ட யிடத்திலேயே வாஸம் செய்

புருஷனுடைய வீட்டில் குடி யிருத்தல்

யவேண்டுமே அல்லது இன்னபாகமாவது இன்ன வீடாவது தனக்குக் கொடுக்க வேண்டுமென்று அவள் கேழ்க்ககூடாது. (4 அ. ஐ. 153).

விபசாறி. விபசாறியாக இருந்துவருகிற விதவைக்கு ஜீவனும்ச பாத்தியம் கிடையாது. (1 ம. ஐ. 373; 2 ம. ஐ. 337; 5 ம. ஐ. 160; 4 ம. ஐ. 185; 13 க. ஐ. 72; 88; 9 பம். 108). ஜீவனும்சத்துக்காக விதவை கோர்ட்டு மூலமாகத் தீர்ப்பு பெற்ற பிறகு அவள் விபசாறியாகப் போனுல் அந்தத் தீர்மானத்தை றத்துசெய்து கொள்ளலாம், அதுவும் அந்தத் தீர்ப்பை நிறைவேற்ற வொட்டாமல் ஆக்ஷேபிணை செய்யலாம். (இ. லா. ரி. 9 பம். 108). ஆனுல் மிகவும் கொஞ்சமாகக் குடிக்கக் கஞ்சிக்குமட்டும் அவளுக்கு ஜீவனும்சம் யேர்ப்படுத்தப் பட்டிருந்தால் அதை கோர்ட்டார் ரத்து செய்ய மாட்டார்கள். (இ. லா. ரி. 1 பம். 559; இ. லா. ரி. 17 க. 674).

பிதுரார்ஜித சொத்து சுவயார்ஜித சொத்து அல்லது அவனுடைய விதவை

யெவ்வள வேணும் பிதுரார்ஜித சொத்தாவது சுவயார்ஜ்ஜித சொத்தாவது அன்னியில் இறந்து போனவனுடைய விதவைக்கும் பிறித்துக்கொண்டு இறந்து போனவனுடைய விதவைக்கும் அவளுடைய மாமனுர் மைத்துனன் முதலியவர்கள் ஜீவனும்சம் கொடுக்கக் கட்டுப்பட்டவர்களல்ல (1858 ஷு ம. தீ. 225 1859 ஷு ம. தீ. 5, 265, 272; இ. லா. ரி. 11 ம. 191; 2 டபிளியூ; மேக். 119; 9 பம். ஐ. 283; 24 ஊ. 274; 7 அ. ஐ. 26; 2 க. ஐ. 15. இ. லா. ரி. 6 க. 36; இ. லா. ரி. 2 பம் 573, 632; இ. லா. ரி. 7 பம். 127; இ. லா. ரி. 8 பம் 15; இ. லா. ரி. 11 பம். 199). ஒரு கேஸில் அல்காபாத் ஐகோர்ட்டார் மாமனுருடைய சுவயார்ஜ்ஜித சொத்திலிருந்து ஜீவனும்சம் கேழ்க்க மாட்டுப் பெண்ணுக்கு பாத்தியமில்லாமலிருந்தாலும் அவளுக்கு அன்ன வஸ்திரத்துக்கு கொடுத்து ரக்ஷிப்பது மாமனுருக்குத் தர்மமாதலால் அவனுடைய சொத்து மைத்தப்பிள்ளைகளுக்குக் கிடைத்த பொழுது அதிலிருந்து அவளுக்குஜீவனும்சம்கொக்க அவர்கள் கட்டுப்பட்டவருவாறென்று தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 11 அ. 294; இ. லா. ரி. 17 க 373; ஆனுல், இ. லா. ரி. 11 ம. 91 பார்க்க வேண்டியது).

தாய் தகப்பன், குமாரன் குமார்த்தி.

225. பிதுரார்ஜ்ஜித சொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும். தன்சக்த்திக்குத் தக்கபடி வயது சென்ற தாய் தகப்பன்களையும் பெண்சாதியையும் தக்கவயது வருத பிள்ளைகளையும் விவாகம் ஆகாத பெண்

களேயும் இவர்களே ரக்ஷிக்க ஒவ்வொருவனும் கடமைப்பட்டிருக்கிறு ன். (2 ச. ஐ. 15; 1855 ஷூ ம. தீ. 238; இ. லா. ரி. ம. 91; இ. லா. ரி. 2 பம் 597). தக்க வயதுவந்த பிள்ளேகளே ரக்ஷிக்க தகப்பன் கட்டுப் பட்டவன் அல்ல. ஆனுல், பிதுரார்ஜ்ஜித சொத்தில் அவர்கள் பாகஸ் தர்களாக யிருப்பதால் அவர்கள் ஜீவனத்திற்கு வேண்டிய அவசிய மான சிலவுகளே குடும்ப சொத்திலிருந்து நடத்த வேண்டியது. மே லும் பிரிக்கக்கூடாத ஜமீன் வகைரு விஷயங்களில் சொத்து முழுவ தும் ஒருவனுடைய வசத்திலேயே யிருக்கவும் மைத்தவர்கள் ஜீவனும் சத்துக்கு பாத்தியம் உடையவருவார்கள். (12 பம். ஐ. 94; இ. லா. ரி. 2 பம். 346; 12 மூ. இ. அ. 203, 495). பெண்களுக்கு விவாகம் ஆனபிறகு அவர்களே ரக்ஷிக்கும் கடமை புருஷனைச் சேர்ந்ததாகை யாலும் பெரியமனுஷி ஆகும்வறைக்கும் பெண் பிறந்த வீட்டிலேயே யிருப்பது வழக்கமாய் யேர்ப்பட்டிருப்பதாலும் அதுவறையில் சீவனு ம்சம் கொடுக்கவேண்டுமென்று தாய் தகப்பன்கள் கேட்டுக்கொண் டால் புருஷன் கொடுக்கவேண்டியதாகும். (1858 ஷூ ம. தீ. 154).

சகோதர்கள்.

226. கூடப்பிரந்த பெண்களுக்கு விவாகம் செய்யவும் அது வறையில் அவர்களுக்கு அன்னவஸ்திறம் கொ டுத்து றக்ஷிக்கவும் சகோதிரன் கடமையென் று தர்ம்மசாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கிறது. (2 டபிளியூ மெக். 118; வெ. பூ. 245, 447). ஆனுல் பிதுரார்ஜ்ஜித சொத்து கொ ஞ்சமேனும் மில்லாத பக்ஷத்தில் கூடப்பிரந்த பெண்களுக்கு ஜீவனும் சம் கொடுக்கும்படி சகோதிரர்களேக் கோர்ட்டார் கட்டாயம் செய்ய மாட்டாரென்று தோன்றுகிறது. விவாகம்ஆனபிரகுகூட கூடப்பிரந்த பெண்களுக்கு புருஷன்வீட்டில் கதியில்லாவிட்டால் பிரந்த வீட்டி லேயே ஸம்றக்ஷிக்க வேண்டியதென்று தர்ம்ம சாஸ்திரங்களில் சொ ல்லப்பட்டிருக்கிறது.

சபத்தினிதாய் சபத்தி ணி கூடப் பிறந்தவள்

227. ஜீவனும்ச விஷயத்தில் சபத்தினிய மாதாவையும் அவ ள் குழந்தைகளேயும பெற்ற தாய்க்கும் கூடப்பி றந்தவர்களுக்கும் ஸமமாக பாவிக்க வேணுமெ ன்று தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட் டிரு க்கிறது. (2 டப்பிளியூ. மெக். 113, 118; வெ. பு. 234, 245, 437). ஆனுல், பிதுரார்ஜித சொத்தில்லாம லிருக்கையில் சபத்தினி மாதா வை ரக்ஷிக்கப் பிள்ளே கட்டுப்பட்டவன் அல்லவென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 9 பம். 279).

மாமியார் அதாவது பெண்சாதியின் தாயாருக்கு வேறுவழியில்லாவிட்டால் மாப்பிள்ளையே அன்னவஸ்திரம் கொடுத்து ரக்ஷிக்கவேண்டுமென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கோர்ட்டார் இந்தக்கட்டளையைக்கொண்டு மாப்பிள்ளையைக் கட்டுப்படுத்த மாட்டார்கள்.

மாமியார்.

228. விபசார சம்பந்தம் உண்டாயிருக்கும் காரணத்தைக் கொண்டு மட்டில் எந்த ஸ்திரீக்காவது ஜீவனும்சம் கொடுக்கவேண்டுமென்கிற விதி ஏற்படாது. ஆனால், ஸ்திரமாக வைத்துக்கொண்ட வைப்பாட்டிக்கி ஜீவனும்சம் கொடுக்கவேண்டியது. (11 பம். ஐ. 381; 12 பம். ஐ. 229; 8 ம. ஐ. 144). மேலும், அந்த வைப்பாட்டிக்கி பிறந்த குழந்தைகளைக்கூட ரக்ஷிப்பது கடமை. (2 ம. ஐ. 293; 12 மூ. இ. அ. 203; 2 க. ஐ. 15; 7 மூ. இ. அ. 18; இ. லா. ரி. 1 பம். 97; இ. லா. ரி. 1 ம. 206; இ. லா. ரி. 8 ம. 325; இ. லா. ரி. 6 அ. 329.)

வைப்பாட்டியை வைத்துக்கொண்டிருந்தவன் இறந்தால் அவன் சொத்து யார்வசத்திலிருக்கிறதோ அவன் அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்கக் கடமைப் பட்டவனுவான். ஆனால், அவள் விபசாரித்தொழிலில் யிருந்து வந்தால் சீவனும்சத்துக்கு பாத்தியதை யாகமாட்டாது. (இ. லா. ரி. 12 பம். 26).

229. விவாகம்ஆனதுமுதல் பெண்சாதியினுடைய போஷணை புருஷனைச் சேர்ந்தது. ஆகையால், அவள் பெரியமனுஷி ஆவதற்கு முன் பிறந்த வீட்டிலிருக்கையில் அவள் ஜீவனத்துக்காக பணம் கொடுக்கும்படி அவள் தாய் தகப்பன்கள் ஏழ்மைதனத்தாலாவது வேறு எந்தக் காரணத்தாலாவது புருஷனைக் கேட்டால் கொடுக்க புருஷன் கட்டுப்பட்டவனுவான. (1858-ம் வூ ம. தீ. 154). பெரியமனுஷி ஆனபிறகு புருஷன் வீட்டிலிருந்து அவனுடன் சேர்ந்து ஸம்சாரம் செய்வது பெண்சாதியின் கடமை ஆகையால் தக்ககாரணமன்றி புருஷனை விட்டுவிட்டு பிறந்த வீட்டிலாவது வேறு யெவ்விடத்திலாவது தனியாக வாஸம் செய்திருந்தால் ஜீவனும்ச பாத்தியம் உண்டாக மாட்டாது. (இ. லா. ரி. 2 பம். 634; மேல் 41 வது பாருவை பார்க்க). புருஷன் வைதானென்றுவது அடித்தான் யென்றுவது கோபித்துக் கொண்டான் யென்றுவது இரண்டாவது விவாகம் செய்துகொண்டா னென்றுவது தாஸியை வைத்துக்கொண் டிருக்கிறுனென்றுவது இக்காறணங்களால் அவனை விட்டுவிட்டுத் தனியாயிருந்தால் பெண்சாதிக்கு ஜீவனும்சம்

பெண்சாதி.

கொடுபடமாட்டாது. (இ. லா. ரி. 4 அ. 374; 1 ம. ஐ. 375; மேல் 39-வது பாரு பார்க்கவும்). மேலும் விபசாறியாகச் சஞ்சறித்துக்கொண்டிருக்கும் பெண்சாதிக்கு ஜீவனும்ச பாத்தியமில்லே. (1 ம. ஐ. 372). ஆனுல் பிந்தி விபசாரித் தொழிலே விட்டு விட்டால் அவள்பேரில் புருஷன் தயவுசெய்து குடிக்ககஞ்சிக்கி வழிகாட்ட வேண்டியதென்று தர்ம்மசாஸ்த்திறங்களிற் சொல்லப்பட் டிருக்கிறது. அன்னிலேமையில் பெண்சாதியை முற்றிலும் நிர்க்கதியாகத் தள்ளி விடக்கூடாதென்று சில தீர்ப்புகளால்கூட காணப்படுகிறது. (7 பம். ஸ. தீ. 144; 2 ம. ஐ. 337; 1 பம். ஐ. 560; இ. லா. ரி. 7 பம். 84; இ. லா. ரி. 17. க. 679).

மேஜஸ்ட்ரேட்டுஅவர்கள் முன்பாக பெண்சாதி ஜீவனும்சம் கொடுதல்.

230. யாறேனும் தன் பெண்சாதியையும் வயதுவருத குழந்தைகளேயும் போஷிக்காமல் தள்ளிவிட்டால் அவன் பெண்சாதி ஜீவனும்சத்துக்காக ஸிவில கோட்டுகளில் வழக்கிடுவதற்குப் பதிலாக முதலாவது வகுப்பு மாஜிஸ்டிறேட்டார் அவர்களிடத்தில் மனுவுக்கொடுத்தால் அவர்கள் விசாறணே செய்து புருஷனுடைய நிலேமைக்குத் தக்கபடி மீ 1 க்கு ரூ. 50 க்கு மேல்படாமல் ஜீவனும்சம் கொடுக்கும்படி உத்திரவு செய்வார்கள். அந்த உத்திரவுப் படி புருஷன் ஜீவனும்சம் கொடுக்காத பக்ஷத்தில் அவனே தண்டனேக்குள்படுத்தி துகை குடுக்கும்படி செய்வார்கள் கோர்ட்டு சிலவுக்கு கையில் ஐவேஜி யில்லாமல் கஷ்டப்படுகிற பெண்சாதிகளே எளிதில ஜீவனும்சத்தை பெத்துக்கொள்ள இதே நல்லமார்க்கமா யிருக்கிறது விபசாறித் தொழிலால் யிருந்துவருகிற பெண்சாதிக்கும் முகாந்திரமன்னியில் புருஷனே விட்டுவிட்டிருக்கிர பெண்சாதிக்கும் புருஷனிடமிருக்க காரணமன்னியில் ஆக்ஷேபிக்கும் பெண்சாதிக்கும் மாஜிஸ்டிறேட்டார் ஜீவனும்சம் கொடுக்க மாட்டார்கள். மேலும் ஜீவனும்சத்திற்காக மாஜிஸ்டிறேட்டார் உத்திரவு செய்தபிரகு பெண்சாதி விபசாறியாய் யிருந்து வருகிறதாக ருசுவு செய்யப்பட்டால் அந்த உத்திரவை ரத்துசெய்யப்படும். (கிரிமினல் பிரேஸீஜர் கோடுசெக்ஷன் 488 499).

மாஜிஸ்டிறேட்டார் யெப்படி உத்திரவு செய்தாலும் ஸிவில் கோர்ட்டுகளில் கிரமமாய் பிறுது செய்து ஜீவனும்சத்தைப் பத்திரப்படுத்திக் கொள்ளவாவது அல்லது றத்துசெய்து கொள்ளவாவது யெவ்விதமான தடையுமில்லே.

வைத்துக்கொள்ளப்பட்ட தாஸிகூட மேல்சொல்லியபடி மாஜிஸ்டிறேட்டாரிடம் மனுவுக் கொடுத்து ஜீவனும்சத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

231. பெண்சாதிக்கு ஜீவிக்கவழி அன்னியில் யெல்லா சொத்தையும் புருஷன் தனக்கு இஷ்டம் வந்தவர்களுக்கு தானமாகவாவது உயில் மூலமாகவாவது கொடுத்து விட்டால் அவளுடைய ஜீவனும்ச பாத்தியத்துக்கு உள்பட்டே அந்த சொத்து அவர்களுக்குச் சேறும். (8 க. ஐ. 225; 8 மூ. இ. அ. 66; இ. லா. ரி. 5 பம். 99, இ. லா. ரி. 2 அ. 315; 1860 ஸூ பம். ஸ. தி. 489; இ. லா. ரி. 8 பம். 98; இ. லா. ரி. 12 ம. 267; இ. லா. ரி. 10 க. 638; எப். மேக். 92).

பெண்சாதிக்கு ஜீவிக்க வழி அன்னியில் யெல்லா சொத்தையும் தானம் செய்தல் அல்லது உயில் செய்தல்.

232. சீவனும்ச பாத்திபம் குடும்ப சொத்தைப் பொருத்ததாயிருந்தாலும் தீர்ப்பினலாவது உடம்படிக்கையாலாவது அந்த பாத்தியம் குடும்ப சொத்தின் பேறில் ஏர்படுத்தப் படாவிட்டால் அந்த சொத்தை கிரயம், ஒத்தி முதலிய விதமாக பறுதீனம் செய்ய ஆக்ஷேபணை யிருக்கமாட்டாது. ஆகையால் அப்படிப்பட்ட நிலைமையில் பறுதீனம் பெற்றவர்கள் சுவாதீனத்தில் இருக்கும் சொத்து சீவனும்ச பாத்தியத்திர்க்கு உள்படமாட்டாது. (8 க. ஐ. 225; இ. லா. ரி. 1 க. 365; 12 பம். ஐ. 69; இ. லா. ரி. 2 பம். 494, 524; இ. லா. ரி. 12 ம. 285; இ. லா. ரி. 11 க. 102; இ. லா. ரி. 4 அ. 296. தீர்ப்பு முதலியவைகளால் சீவனும்ச பாத்தியம் குடும்ப சொத்தின்பேறில் பொருக்கப்பட் டிருந்தால் அந்தசொத்தை கிறயம் வாங்குகிறவர் ஜீவனும்ச பாத்தியத்திற்கு உள்பட்டே அடைவார்கள். (6 ஸ. 253; இ. லா. ரி. 2 அ. 162; 4 பம். ஐ. 73).

குடும்பசொத்தை விக்கிரயம் ஜீவனும்ச பாத்தியம் யெப்பொழுது பாகிக்கும்.

ஜீவனும்சம் கொடுப்பதற்கு முந்திக் கடன்களைத் தீர்ப்பது அவசியமானதால் அவைகளுக்காக எல்லா சொத்தையும் கிறயம் செய்துவிட்டாலும் அது ஜீவனும்சத்துக்குக் கட்டுப்படமாட்டாது. (இ. லா. ரி. 4 அ. 296; இ. லா. ரி. 5 அ. 367).

233. ஜீவனும்சத்தைக் கொடுக்காமல் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் குடும்பசொத்தை கிறயம் செய்தால் அந்த உத்தேசத்தை அறிந்து எவருயினும் அதைவாங்கினுல் அந்த ஜீவனும்ச பாத்தியத்திற்க்கு உள்பட்டே அது அவருக்குச்சேரும். மேல் சொல்லப்பட்ட எண்ணத்தை அறியாமல் கிறயம் பெற்றவர் ஜீவனும்சத்துக்கு உள்படாமல் அந்த சொத்தையடைவர். (இ. லா. ரி. 2 பம். 494; 524; இ. லா. ரி. 3 ம. 184; இ. லா. ரி. 6 ம. 83). மேல்சொல்லப்பட்ட உத்தேசத்தை யறிந்தாவது அறியாம லிருந்தாவது குடும்பசொத்தை தானமாக அடைந்தவர்கள் அறிந்த சொத்தைக்கொண்டு கொடுக்கவேண்டிய ஜீவனும்ச பாத்தியங்களுக்குள்பட்டே அதையடைவார்கள். 8 க. ஐ. 298; 1882 ஸு 4 செ. சட்டம் டிரான்ஸ்பர் ஆப் பிருபர்ட்டி ஆக்ட்டு 39 வது சக்ஷனை பார்க்கவேண்டியது.

ஜீவனும்சத்தை பங்கபடுத்த விக்கிரயம் வகைரா.

234. இறந்த பாகஸ்தனுடைய விதவைக்கு ஜீவனும்சம் கொடுப்பதைப்போல் அவளுக்கு வசிக்க இடம்குடுப்பது அவசியமானதால் அவளுக்குத்தக்க இடம் ஏற்பாடு செய்யாமல் குடும்ப வீடு விற்கப்பட்டால் அவளை அந்தவீட்டிலிருந்து வெளிப்படுத்தி அந்த வீட்டை சுவாதீனம் பண்ணிக்கொள்ளும் படியான பாத்தியம் கிறயம் பெற்றவனுக்கு உண்டாக மாட்டாது. (4 க. ஐ. 72; இ. லா. ரி. 12 பம். 101; இ. லா. ரி. 1 அ. 268; இ. லா. ரி. 3 அ. 353; இ. லா. ரி. 2 அ. 141; இ. லா. ரி. 6 ம. 130; இ. லா. ரி. 7 பம். 282). பொதுக்கடன்களுக்காகக் குடும்ப வீடு விற்கப்பட்டால் அந்த வீட்டிலிருந்து விதவையை அப்புறப்படுத்த அட்டியில்லை. இ. லா. ரி. 12 ம. 260).

குடும்ப வீட்டில் விதவைக்கி குடியிருக்கும் பாத்தியம்.

235. ஜீவனும்சம் கொடுக்கவேண்டிய வர்கள் கொடுக்காமல் ஆக்ஷேபித்தால் அவர்கள் பேறில் பிருது செய்து தீர்ப்புப் பெறலாம். காலாவதியால் பாதிக்கப்படாத சீவனும்ச பாக்கியைக்கூடச் சேர்த்துப்பிருது செய்யலாம். (1 பம். ஐ. 194; 2 ம. ஐ. 36; 2 ம். ஐ. 170; 12 க. ஐ. 238; இ. லா. ரி. 5 பம். 99; ஆனுல், இ. லா. ரி. 3 பம். 44 பார்க்கவேண்டியது). மேலும், அந்த பிருதில் பிரதிவாதி சுவாதீனத்திலுள்ள எந்த அசையாப் பொருளையாவது அந்த சீவனும்ச பாத்தியத்திற்கு உள்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். அப்

ஜீவனும்ச ணிமித்தம் தாவா.

படி ஜீவனும்ச பாத்தியத்திற்கு உள்படுத்தித் தீர்ப்புப் பெற்றபிறகு அந்த சொத்தை பிறதிவாதி விற்றால் ஜீவனும்ச பாத்தியத்திற்கு உள்பட்டுத்தான் கிறயம் செல்லும். (இ. லா. ரி. 2 பம். 524; இ. லா. ரி. 1 க. 365; இ. லா. ரி. 12 ம. 285; இ. லா. ரி. 10 ம. 283).

ஜீவனும்சத்திற்காக மாதத்திற்கு அல்லது வருஷத்திற்கு இவ்வளவு துகை கொடுக்க வேண்டியதென்று மட்டில் பிரியாது செய்து தீர்ப்புப் பெற்றபிரகு அந்த ஜீவனும்சத்திற்கு ஏதாவது அசையாப் பொருளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று மறுபடி பிறாது செய்யக் கூடாது. (இ. லா. ரி. 10 ம. 347).

குடும்ப சொத்தை சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள்பேரில் ஜீவனும்சத்திற்காக பிறாது செய்யும்பொழுது பெண்கள் ஜீவனும்சத்திற்காகவும் கலியாணம் முதலியவைகளுக்காகவும் வேண்டிய துகையைச் சேர்த்துப் பிறாது செய்யலாம். (இ. லா. ரி. 6 அ. 243).

ஜீவனும்சத்திற்காகத் தீர்ப்புப்பெற்றபிறகு அதின் கீழ் அப்போதைக்கப்போது ஏற்படும் பாக்கிக்காக கோர்ட்டு மூலமாக நடவடிக்கைகள் நடத்தி வசூல் செய்து கொள்ளலாம்.

ஜீவனும்சத்தின் பாரத்தை வகிக்கவேண்டிய சொத்து.

236. சாதாரணமாய் சேர்ந்த குடும்பத்தின் எல்லா சொத்திலிருந்தும் ஜீவனும்சம் கிடைக்கவேண்டு மென்றுகேட்கலாம். ஆனால் சில நிலைமைகளில் மட்டில் அப்படிக் கேட்க நியாயமில்லை. இது எப்படியெனில்—

இறந்துபோன ஒரு ஆஸ்திகாரனுக்கு இரண்டு பெண்சாதிகளும் அவர்களில் ஒவ்வொருத்திக்கும் ஒவ்வொரு பிள்ளையும் இருந்தார்கள். தகப்பன் இறந்த பிரகு இவ்விருவரும் சொத்தை பாகம் செய்து கொண்டார்கள். அப்பொழுது அவர்கள் தாய்களின் ஜீவனும்ச பாத்தியம் அவர்கள் பிள்ளைகளுக்குச் சேர்ந்த தனி பாகத்தைப் பொருக்குமேயல்லாமல் எல்லா சொத்தையும் பொருக்கமாட்டாது. (இ. லா. ரி. 16 க. 758).

சுவயார்ஜிதத்தை வைத்து புருஷன் இறந்த பிறகு, விதவைக்கு ஜீவனும்சம்

237. மிதாக்ஷர தர்மசாஸ்திரப்படி அனுஷ்டானமுள்ள சேர்ந்த குடும்பத்தின் ஒருபாகஸ்தன் கொஞ்சம் சுவயார்ஜித சொத்தை வைத்துவிட்டு இறந்தால் அதைக்கொண்டே அவனுடைய விதவையின் ஜீவனும்சத்தை நடத்த வேண்டு மென்றும்

அந்த சுவயார்ஜித சொத்து ஜீவனும்சத்திற்குப் போதுமானதா யிருந்தால் குடும்பத்துக்குச் சொந்தமான பிதரார்ஜித சொத்திலிருந்து ஜீவனும்சம் கேட்க அவளுக்குப் பாத்தியமில்லை யென்றும் அலஹாபாத் ஐகோர்ட்டார் ஒரு கேசில் தீர்மானித்தார்கள். (4 அ. ஐ. 63).

238. ஜீவனும்சத் தொகையை நிஷ்கரிஷிப்பதில் அவரவர் யோக்கியதையையும் நிலைமையையும், சொத்தையும், சொத்தால் வரக்கூடும் வரும்படியையும் மரியாதையாக ஜீவிப்பதற்கு வேண்டிய சிலவுகளையும் இது முதலிய மைத்தவைகளையும் யோசிக்கப்படும். (இ. லா. ரி. 12 அ. 558; 9 க. ஐ. 413; 6 ஸ. 286).

ஜீவனும்சத்தின் மொத்தத்தை ஏர்ப்படுத்தல்.

எவ்வளவேனும் பிசகன்னியில முகாந்தரமன்னியில் தள்ளப்பட்ட பெண்சாதிக்கு புருஷன் சொத்தில் மூன்றில் ஒருபாகம் கொடுக்கவேண்டியதென்றும் அந்த பாகம் ஜீவனும்சத்திற்கு போதாத பட்சத்தில் அதிகம் கொடுக்கவேண்டுமென்றும் விவகார மாயூகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பம்பாய் ஐகோர்ட்டார் சில கேசுகளில் இப்படியே தீர்மானித்திருக்கிறார்கள். (1 பாரோ. 63; 9 பம். ஐ. 283). விதவைக்குக் குடுக்கப்படும் ஜீவனும்சம அவள் புருஷன் உயிரோ டிருக்கையில் குடும்ப சொத்தின் ஆதாயத்தில் அவனுக்கு என்னபாகம் கிடைக்குமோ அதர்க்கு ஜாஸ்தியாக இருக்கக்கூடாது. (இ. லா. ரி. 2 பம். 639; இ. லா. ரி. 11 பம். 199).

விதவைக்கு ஜீவனும்சம் கொடுப்பது அவளுடைய ஆடையாபரணமுதலிய ஆதாயமில்லாத ஸ்திரீதனசொத்தைக் கவனிக்கக்கூடாது. ஆனால், ஆதாயமுள்ள நிலம் முதலிய ஸ்திரீதன சொத்து இருந்தால் அந்த ஆதாயத்தைக் கணக்குப்பார்த்து ஜீவனும்சத் துகையில் குறைத்துக்கொள்ளலாம். (4 அ. ஐ. 63; 2 பம். ஐ. 341; இ. லா. ரி. 2 பம். 584; இ. லா. ரி. 14 பம். 490). விதவையின் ஜீவனத்துக்கு வேண்டிய பென்ஷன் சர்க்காரால் அவளுக்குக் கிடைத்தால் வேறு ஜீவனும்சம் கொடுக்கப்படமாட்டாது. (1857 ஹை ம. தீ. 69). ஜீவனும்சத்தொகை யேர்ப்படுத்தப்பட்ட பிறகு குடும்பசொத்தாவது அதின்வரும்படியாவது குறைந்தால் கோர்ட்டில் மனுக்கொடுத்து அதற்குத் தக்கபடி ஜீவனும்சத்துகையைக் குறைத்துக் கொள்ளலாம். (இ. லா. ரி. 1 அ. 594). ஆனால், அந்தக் குடும்பசொத்து அல்லது வரும்படியானது ஜீவனும்சம் கொடுக்கக் கடமைப்பட்டவனுடைய தப்பிதத்தால் குறைந்துபோனால் ஜீவனும்சத் துகை குறைக்கப்படமாட்டாது. (இ. லா. ரி. 8 ம. 94). அப்படிப் போலவே சொத்தாவது வரு

ம்படியாவது ஜாஸ்தியானல் கோர்ட்டாரிடம் மனுக்கொடுத்து ஜீவ னும்சத் துகையை ஜாஸ்திப்படுத்திக் கொள்ளலாம்.

239. வருஷந்தோறும் ஜீவனும்சம் கொடுப்பதற்குப் பதிலாக ஒரே தடவையாய்மொத்தமாகக்கொஞ்சம்சொத்தைக் கொடுத்து ஜீவனும்ச பாத்திய முள்ளவளோடு உடம்படிக்கை செய்து கொள்ளலாம். அந்த உடம்படிக்கைப்படி கொடுப்பட்ட சொத்து முழுவதையும் விரயம் செய்துவிட்டால் மறுபடி ஜீவனும்சம் கேட்க பாத்தியமில்லை. (இ. லா. ரி. 2 பம். 573).

ஜீவனும்ச நிமித்தம் மொத்தமாய் கொஞ்சம் சொத்து கொடுத்தல்.

ஜீவனும்சத்திற்காக வரும்படியை மட்டில் யெடுத்துக்கொள்ளுகிற தென்கிற ஷரத்துடன் விதவைக்கு ஏதேனும் சொத்துக் கொடுக்கப்பட்டால் அவள் அதை விற்கக்கூடாது, அவள் இறந்தபிறகு அந்த சொத்து கொடுத்தவனுக்கே சேரும். (22 ஸ. 225; இ. லா. ரி. 4 ம. 193; இ. லா. ரி. 5 க. 113; இ. லா. ரி. 10 அ. 462; 1850 ஹூ ம. ஸ. தீ. 160; 10 மூ. இ. அ. 490). ஆனல் ஜீவனும்ச பாத்தியத்திற்குப் பதிலாக சகல சுவதந்திரத்துடன் ஏதேனும் சொத்து விதவைக்குக் குடுப்பட்டால் அதை அவள் இஷ்டம் வந்தபடி யனுபவிக்கலாம், கிறயமும் செய்யலாம். (9 மூ. இ. அ. 55; இ. லா. ரி. 4 ம. 371).

240. ஜீவனும்ச பாத்தியத்தை ஸ்தாபிக்க பிறுது அந்த பாத்தியமில்லை யென்று ஜீவனும்சம் கொடுக்கக்கடமைப் பட்டவன் சொன்னகாலம் முதல் பன்னிரண்டு வருஷத்துக்குள் கொண்டுவர வேண்டியது. (1877 ஹூ 15 நெ. லிமிடேஷனுக்ட்டுமுதல் ஷெடியூல் 129 வது ஆர்டிகள்).

ஜீவனும்ச பிறுது லிமிடேஷன் ஸ்டாம்பு.

ஜீவனும்சத்தைக்கூடச் சேர்த்துப் பிறுது கொண்டுவரப்பட்டால் 12 வருஷத்துக்குட்பட்ட காலத்தில் கிடைக்கவேண்டிய ஜீவனும்சத் துகையைமட்டில் சேர்க்கலாம். (ஷெ ஆக்ட் 128 வது ஆர்டிகள்) ஜீவனும்சத்தைப் பற்றிய பிறுதுக்கு 10 வருஷ ஜீவனும்சத் துகையின்பேறில் ஸ்டாம்பு கட்டவேண்டியது. (கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 7. வது செக்ஷன்).

241. ஜீவனும்ச பாத்தியமானது தேகத்தைக் காப்பாற்றுவதற்காக ஏற்ப்பட்டபடியால் அதை விற்கவாவது ஒத்தி முதலிய மார்கமாகப் பறுதீனம் செய்யவாவது அதிகாறமில்லை. மேலும் ஜீவனும்ச பாத்தியத்தை தீர்ப்பு நிறைவேறும் நடவடிக்கை

ஜீவனும்ச பாத்தியதை யுடைய பறுதீனம், ஜப்தி.

யில் ஜப்தி செய்யக்கூடாது. (5 ஸ. 111; 8 ஸ. 41). ஜீவனும்ச டிக்கிறியின்படி ஜீவனும்சத்திற்காகக் கிடைக்கத்தக்க துகையைக் கடன்காரன் ஜப்தி செய்யக்கூடாது. (சிவில் பிரேஸீஜர் கோடு, 266 வது செக்ஷன்). ஆனால் கெத ஜீவனும்சத்திற்காக பாக்கியிருக்கும் துகையை ஜப்தி செய்யலாம். (3 வைபஸ் ரிபோர்ட்டுகள் 207).

11 – வது அத்தியாயம்.

பாகம்.

விபாகம்.

242. சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்கள் குடும்ப சொத்தில் தங்கள் தங்கள் பாகங்களைப் பிறித்துக்கொண்டு வேருகப் போகலாமென்று மேல் சொல்லி யிருக்கிறோம். அப்படித் தனியே இருப்பது விபாகமென்று சொல்லப்படும். இந்த அத்தியாயத்தில் எந்த எந்த சொத்துக்கள் பிறிக்கத்தக்கவைகள் எவை பிறிக்கத்தக்க வைகளல்ல யார் யாருக்கு எவ்வளவு வறையில் பாக பாத்தியமுண்டு எவ்விதமாக பிறிவினைசெய்து கொள்ளவேண்டும் எந்த எந்த அம்சங்கள் பிறிவினையை ஸ்தாபித்துக்கொள்ளப் போதுமானவைகள் இவைமுதலியவிஷயங்கள் விவறிக்கப்படும்.

எந்தசொத்து பாகத்திற்கு யோக்கியமானது.

243. பிதுரார்ஜித சொத்து அதாவது தகபபன் பாட்டன் கொள்பாட்டன் இவர்களிடமிருந்து வார்ஸ பாத்தியத்தாலாவது அல்லது உயில் மூலமாயாவது அல்லது தானமாகவாவது கிடைத்த சொத்து; மேலும் எல்லா பாகஸ்தர்களுக்கும் பொதுவில் பாத்தியப்பட்டமைத்த சொத்துக்கள் இவைகள்மட்டும் பிறிக்கத்தக்கவைகள். மிதாக்ஷர தர்மசாஸ்திரப்படி பிதுரார்ஜிதத்தில் மூன்று தலைமுறைக்குட்பட்ட ஆண் சந்ததிகளுக்கு பாத்தியம் பரவுமென்று முந்தியே சொல்லியிருக்கிறோம். (139 பாரு).

எந்த சொத்து பாகிக்கத் தக்கதல்ல? – சுவயார்ஜிதம்.

244. சுவயார்ஜித சொத்து அதாவது ஒருவன் தன்னுடைய வல்லமையால் சம்பாதித்த அல்லது தகப்பன் பாட்டன் கொள்பாட்டன் இவர்கள் வழியாய் அல்லாமல் தாய், தாயின் தாய், தாயின் தகப்பன், அண்ணந்தம்பிகள், சிற்றப்பன், பெரியப்பன், இவர்கள் பிள்ளைகள், இவர்கள் முதலியவர்களிடத்திலிருந்து அடைந்த சொத்துகள் பிறிக்கத் தக்கவைகளல்ல. அவைகளில் ஆண்சந்ததிக்கு எவ்விதமான பாத்தியமும் உண்டாகமாட்டாது. (139 பாரு பார்க்க) ருஜ்யமாக எண்ணப்பட்டு மூத்தபிள்ளை மட்டில் ஆண்டுவரும் வழக்கமுள்ள பு

ழைய ஜமீன்சொத்து பிறிக்கத்தக்கதல்ல. மேலும் அப்படிப் பிறிக்கத் தகாத ஜமீன் சொத்திலிருந்து ஜமீன்தார் செய்யும் ஆதாயமும் அந்த ஆதாயத்தைக் கொண்டு அவன் சம்பாதித்த சொத்தும் அவன் வசத்திலுள்ளவறையில் பிறிக்கத்தகாதாகவே யெண்ணப்படும். ஆனால் அவனுக்குப்பின் பட்டத்துக்கு வருகிறவன் வசத்தில் அந்த ஆதாய முதலியவை பிதுரார்ஜிதமாக யெண்ணப்பட்டு பிறிக்கத்தக்கதாகும். (5 ம. ஐ. 31; 7 மூ. இ. அ. 476).

சர்க்காரால் கொடுக்கப்பட்ட சொத்து.

கிறுமத்தைச் சேர்ந்த கர்ணங்கள், முதயிய சர்க்கார் வேலைக்காறர்களுக்கு அவர்களுடைய உத்தியோக விஷயமாக ஏற்படுத்தப்பட்ட இனும் நிலமுதலியவை பிறிக்கத் தக்கதல்லவென்று மதிராஸ், கலகத்தா ஹைகோர்ட்டுகளில் தீர்ப்பு செய்யப்பட் டிருக்கிறது (6 பம். ஸ. தீ. 169; 6 மு. இ. அ. 125; 2 ம. தீ. 85; இ. லா. ரி. 7 ம. 236). ஆனால் பம்பாய் பிரெசிடென்சியில் பாடில், தசமுக், தேசபாண்டிய, முதலிய கிறுமாதிகாறிகளுக்கு சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட இனும் பூமிவகையரு பிறிக்கத்தக்க தென்று சில கேசில் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. (10 பம். ஐ. 228; இ. லா. ரி. 4 பம். 494; இ. லா. ரி. 10 பம். 327, 598).

பிறிதுக்காக கொடுக்கப்பட்ட சொத்து.

பிறிது முதலிய ருஜசம்மானங்களின் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்க்காகவே சர்க்காராலாவது சர்க்கார் மூலமாக வாவது ஏற்பாடுத்தப்பட்ட சொத்து பிறிக்கத்தக்கதல்ல. (6 மூ. இ. அ. 426; இ. லா. ரி. 7 ம. 191).

பிள்ளை, பேரன், கொள் பேரன் – இவர்களுக்குள்ள பாத்தியம் – மிதாக்ஷரப்படி.

245. மிதாக்ஷர தர்மசாஸ்திரப்படி தகப்பனுடைய ஸ்தாவர ஜங்கம பிதுரார்ஜித சொத்தில் பிள்ளைகளுக்குப் பாத்தியம் ஏற்ப்பட்டிருப்பதால் அந்த சொத்தைப் பிறிக்கவேண்டுமென்று கேட்க அவர்களுக்கு பாத்திய முண்டு. கூடாதென்று ஆக்ஷேபிக்க தகப்பனுக்குப் பாத்தியமில்லை. பிள்ளையில்லாவிட்டால் பேறனும் பேறனு மில்லாவிட்டால் கொள் பேறனும் பிதுரார்ஜித சொத்தைப் பற்றிப் பாகம் கேட்கலாம். (1 ம. ஐ. 77; 12 க. ஐ. 373; இ. லா. ரி. 1 அ. 159; இ. லா. ரி. 5 அ. 430; வே. பூ. 365, 370, 373; 10 பம். ஐ. 463; இ. லா. ரி. 10 பம். 529, 578; இ. லா. ரி. 12 பம். ஐ. 280, 294). தகப்பனுடைய சுவயார்ஜித சொத்தில் பாகம் கேட்க பிள்ளை முதலியவர்களுக்கு பாத்திய மில்லை.

பிள்ளைகளுக்கு இஷ்ட மிருந்தாலும் இல்லா விட்டாலும் பித ரார்ஜித சொத்தைப் பிறிக்கும் விஷயத்தில் அவர்களைத் தகப்பன் கட்டாயம் செய்யலாம். அவர்கள் சம்மத மில்லாவிட்டாலும் அவன் பாகம் செய்து வைக்கலாம். (இ. லா. ரி. 2 ம. 317, 321).

பாக பாத்தியம் பிள்ளை பேறன் கொள்பேறன் இவர்கள் வறையில் மட்டும் எட்டும். மூன்று தலைமுரைதாண்டின கொள்பேறன் மகனுக்கு அந்தப் பாத்திய மில்லை (மேல் 135, 136, 137 பாராக்களைப் பார்க்கவும்). மேலும் பிள்ளை ஜீவித்திருக்கையில் பேறனாவது பேறன் ஜீவித்திருக்கையில் கொள் பேறனாவது அவன் தகப்ப னிஷ்டத்திற்கு விரோதமாக பாகம் கேட்க அல்லது தகப்பனைப் பாகவிஷயமாய்ப் பலவந்தப் படுத்த பாத்தியமில்லை. (இ. லா. ரி. 6 அ. 574; இ. லா. ரி. 16 பம். 29; ஆனால் இ. லா. ரி. 5 அ. 430 பார்க்க வேண்டியது).

தாயபாகம்.

பெங்காளா தேசத்தில் தகப்பன் உயிரோடிருக்கையில் அவனுடைய ஸ்வயார்ஜித பிதரார்ஜித சொத்துக்களில் பிள்ளைகளுக்கு எவ்விதமான பாத்தியமும கிடையாது. ஆகையால் அவன் உயிருடனிருக்கையில் பாகம்கேட்கப்பிள்ளைகளுக்குப் பாத்தியம் கிடையாது. ஆனால் தகப்பன் இறந்தபிறகு பிள்ளைகள் சிற்றப்பன் பெறியப்பன்களை பாகத்திற்காகக் கட்டாயப்படுத்தலாம். (138 வது பாராவை பார்க்கவும்).

தாஸிமகனுடைய பாத்தியம்.

246. பிராமண, க்ஷத்திரிய, வைசிய ஜாதிகளில் தாசி புத்திரர்கள் அதாவது வைப்பாட்டி மகன்களுக்கு பாகம் கேழ்க்கும்படியான பாத்தியமாவது பாக காலத்தில பாகம் பெற்றுக்கொள்ளும் படியான பாத்தியமாவது கிடையாது. (7 மூ இ. அ. 18; 2 டி. ஐ. 369; 13 மூ. இ. அ. 47). சூத்திரர்களில்கூட வைப்பாட்டி மகன்களுக்கு தகப்பனையாவது தகப்ப னிறந்தபிரகு சிரியதகப்பன் பெரிய தகப்பன் இவர்களையாவது அவர்கள் பிள்ளைகளையாவது பாகத்திற்காகக் கட்டாயப் படுத்த பாச்தியம் கிடையாது. ஆனால் ஔரஸ சகோதரர்களைப் பாகத்திற்காக அவர்கள் கட்டாயப் படுத்தலாம். (இ. லா. ரி. 4 பம். 44, 45; இ. லா. ரி. 11 க. 714; இ. லா. ரி. 12 ம. 401; இ. லா. ரி. 7 ம. 407; இ. லா. ரி. 8 ம. 557).

தகப்பன் சம்மதித்துப் பாகம்செய்து கொள்ளும்பொழுது வைப்பாட்டி மகன்களுக்கு ஔரஸ புத்திரர்களோடு சறியாயிருக்கும் வறையில் தனக்கு இஷ்டம்வந்த பாகம் கொடுக்கலாம் என்றும் தகப்ப

ன் இறந்தபிறகு நடக்கும் பாகத்தில் ஔரஸ புத்திரனுக்குக் கிடைக்கத் தகுந்த பாகத்தில் சரிபாதிபாகம் வைப்பாட்டி பிள்ளைக்குக் குடுக்க வேண்டுமென்றும் மிதாக்ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஔரஸ புத்திரர்களில்லாமல் மைத்தவர்களுடன் பிறித்துக்கொள்ளும் காலத்தில் வைப்பாட்டி மகன் மைத்த பாகஸ்தர்களுடன் சரியான பாகம் பெறுவான் என்று தாயபாகம், தாயக்கிறம சங்கிறகம், இந்த கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயமெல்லாம் முந்திய அத்தியாயத்தில் விஸ்தாரமாக விவறிக்கப் பட்டிருக்கிறது.

ஜாதி பிரஷ்டனுடைய பாத்தியம்.

247. ஜாதி பிரஷ்டனானவன் இறந்து போனவனாகவே யெண்ணப்படுவதால் அவனுக்குப் பாக பாத்தியம் தப்பிப்போய் விடுமென்று இந்து தர்மசாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. ஆனால் ஜாதியை யிழந்ததால் சொத்து பாத்தியங்கள் போகமாட்டா வென்று 1850௵ 21 நெ. சட்டம் ஏற்பட்டிருக்கிற படியால் ஜாதியை யிழந்தவன் பாகம் கேட்கக்கூடும்.

பாகத்துக்குப் பிரகு பிரந்த பிள்ளையின் பாத்தியம்.

248. தகப்பனும் பிள்ளைகளும் பாகம் செய்து கொள்ளும்காலத்தில் தாய் கர்பமா யிருந்தால் அவள்பிரசவிக்கிற வறையில் பாகம்செய்து கொள்ளாமல் நிறுத்திவைக்க வேண்டுமென்றும் அவள் கர்பமாயிருக்கிற சங்கதி அறியாமல் பாகம் செய்துகொண்ட பிறகு ஆண்பிள்ளை பிறந்தால் முன்பாகத்தை ரத்துசெய்து திரும்ப பாகம் செய்துகொள்ள வேண்டுமென்றும் மிதாக்ஷரம், தாயபாகம் வீரமித்திரோதயம் முதலிய கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. தீர்ப்புகள் அவ்விதமாகவே யிருக்கின்றன (4 ம. ஐ. 307; 2 க. ஐ. 118-121).

தகப்பனுக்கும் பிள்ளைகளுக்கும் பாகமானபிறகு கர்ப்பத்திலுண்டான பிள்ளை தகப்பனுடைய பாகத்தில் மட்டும் பாத்தியமுள்ளவனாகிறான். (இ. லா. ரி. 4 அ. 427). தகப்பனுக்குப் பாகம் கொஞ்சங்கூட வைக்கப்படாமல் எல்லா சொத்தும் பிள்ளைகளுக்குப் பிறித்துக் கொடுத்திருந்தால் இவர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் பாகத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சம் விட்டுக்கொடுத்து புதிதாய்ப் பிறந்தவனுக்கு பாகம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (1 டபிளியூ மேக். 47).

மைனர்கள் பாத்தியம்.

249. மைனராலாவது மைனருக்காவது பாகத்துக்காக பிறுது கொடுக்கப்படக் கூடாது. ஆனால் பொதுசொத்தில் அவனுக்குள்ள பாகத்துக்குக் கெ

டுதி நேரிடும்படியாக யிருந்தால் அந்த மைனரின் நன்மையைக் கோருகின்றவர்கள் கார்ட்டியனுக ஏற்பட்டுப் பிறுது செய்து அவன் பாகத்தை ரக்ஷிக்கக்கூடும். (1 ம. ஐ. 105; 3 ம. ஐ. 69, 94; 5 ம. ஐ. 193; இ. லா. ரி. 8 க. 537; இ. லா. ரி. 12 ம. 401).

சேர்ந்த குடும்பத்தில் ஒரு பாகஸ்தன் மைனராக இருக்குங் காரணத்தைக் கொண்டு மைத்தவர்கள் பாகம் செய்துகொள்ளும்படி கேழ்க்கவாவது பாகம் செய்துகொள்ளவாவது அட்டியில்லை. (2 ம. ஐ. 182). ஆனால் அந்த பாகத்தில் அந்த மைனருடைய பாகத்தை நியாயமாகவும் கிறமமாகவும் ஏற்படுத்தி அதை அவனுக்குத் தக்க வயது வரும் வறையில் ஜாக்கிரதையாய்க் காப்பாற்ற வேண்டும. (8 க. ஐ. 363). அந்த பாகத்தை யேற்படுத்துவதில் அனியாயமாவது மோசமாவது நடந்ததாகக் காணப்பட்டால் அது நியாயமாக யேற்ப்பட்டதா இல்லையா என்கிற விஷயத்தைத் தெரியப்படுத்த வேண்டிய கணக்கு வகையறுக்கள் இல்லாமல் பாகம் நடத்தப்பட்டிருந்தாலும் அந்த மைனர் தக்கவயது வந்தபிறகு பிறுது கொடுத்து அந்த பாகத்தை ரத்துசெய்து கொள்ளக்கூடும் (2 ம. ஐ. 182; 4 பம். ஐ. 159; 8 க. ஐ. 363; 23 ஸ. 68).

தேசாந்திரம்போன பாகஸ்தனுடைய பாத்தியம்.

250. சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்களில் ஒருவன் தேசாந்திறத்திற்குப் போயிருந்தால் அவனுடைய பாகத்தை நியாயமாக யேற்படுத்தி பத்ரம் செய்து மைத்தவர்கள் பாகம்செய்து கொள்ளலாம். (1 ஸ்ட்ரே. 206; 2 ஸ்ட்ரே. 341). தேசாந்திரத்திற்குப் போன பாகஸ்தனுடைய பாத்தியம்அவனுடைய சந்ததிகளில் ஏழு தலைமுறை வறையில் செல்லு மென்று தர்ம சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது 1877 ஹு 15 செ. லிமிடேஷன் ஆக்டுப் பிறகாறம் 12 வருஷத்துக்குள் பிறுது கொண்டுவர வேண்டியது. (2 வது ஷெடியூல் 123; 127, 144). அப்படிப்போலவே ஒரு பாகஸ்தனுக்குப் பாகம் கொடாமலே ஆஸ்தி முழுவதையும் மைத்த பாகஸ்தர்களே பிரித்துக்கொண்டால் அப்படி நீக்கிவைக்கப்பட்ட பாகஸ்தன் அந்த பாகம் நடந்தது அவனுக்குத் தெரிந்தது முதல் 12 வருஷத்திற்குள் தன் பாகத்திற்காகப் பிறுது செய்யவேண்டியது. (ஆர்டிகள் 127; இ. லா. ரி. 3 க. 228).


வியாதி கிரஸ்தனுடைய பாத்தியம்.

251. குஷ்டரோக முள்ளவர்கள் நபும்ஸகர்கள் பித்தர்கள் பிறவிமுதல் நீக்கக்கூடாத குருடு அல்லது ஊமை அல்லது செவிடு முதலிய குறையுள்ளவர்கள் கைகாலில்லாத அங்க ஈனர்கள் சந்யாஸா

சிரமத்தைக் கைக்கொண்டுலோக வியவகாரங்களை விட்டவர்கள் இப்படிப்பட்டவர்கள் உயிருட னிருந்தாலும் இறந்தவர்களைப்போல எண்ணப்படும் காரணத்தால் இவர்களுக்குப் பாக பாத்தியம் கிடையாது. மைத்தவர்கள் பிரித்துக்கொண்ட பொழுது இவர்களுக்கு பாகம் கொடுக்கவேண்டியதில்லை. இவர்கள் ஜீவனம்சத்திற்கு மட்டில் ஏற்பாடு செய்யவேண்டியது. (இ. லா. ரி. 8 க. 149).

அவர்கள் பிள்ளைகளுடைய பாத்தியம்.

மேல் சொல்லப்பட்ட வியாதி உள்ளவர்களுக்குப் பாக பாத்தியமில்லாவிட்டாலும் அவர்களுக்குப் பிள்ளைகளாவது பேறன்களாவது கொள் பேறன்களாவது வியாதி யில்லாதவர்களாக இருந்தால் இவர்களுக்குப் பாக பாத்தியமுண்டு. ஆனால் மூன்று தலைமுறை தாண்டினவர்களாயிருக்கக்கூடாது. இது எப்படி என்றால்:—இந்தப்பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிற வம்ச விருக்ஷத்தில் "ஈ" என்பவன் வியாதி கிறஸ்தனாக இருந்தால் அவன் இறந்துபோனவனாகப் பாவிக்கப்படுவான். ஆகையால் "எப்" என்பவன் "ஸீ" எனபவனிடத்தில் பாகம் கேட்கலாம் - ஆனால் "ஈ" என்பவன்கூட இறந்துபோய் "எப்" என்பவன வியாதி கிரஸ்தனாக இருந்தால் "ஜீ" என்பவன் மூன்று தலைமுறை தாண்டினவனாகையால் அவன் பாக பாத்தியமுள்ளவனாக மாட்டான். (13 மூ. இ. அ. 519; 2. க. ஐ. 115).



வியாதிகிறஸ்தனுடைய தத்துபுத்திறனுக்கு மேல்கண்ட தீர்ப்புப்படிக்குள்ள பாத்தியமில்லை. (1857 ம் ஷ ம. தீ. 270; இதில் முந்தி 54 வது பாராவைப் பார்க்க).

பாகஸ்தர்களில் யாராவது றத்துக்குப்பிறகு வியாதிகிறஸ்தனானால் அவன் பாகத்துக்குக் கெடுதி யுண்டாக மாட்டாது. (1857 ஷ ம. தீ. 210).

பாகத்துக்குப்பிறகு வியாதி நிவர்த்தியானால் அல்லது பிள்ளை பிறந்தால்.

252. வியாதியுள்ளவர்களை நீக்கிவைத்து பாகம் நடத்திக்கொள்ளப்பட்ட பிறகு அவர்கள் வியாதி நீங்கினால் அவர்கள் பாகத்திற்குப்பிறகு பிறந்த பிள்ளைகளைப் போலவே பாகத்துக்கு பாத்திய முள்ளவர்களென்று தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கிறது. இந்த

கியாயத்தின் அவகாசம் கீழ்ச்சொல்லிய உதாஹரணத்தால் அறியத் தக்கது.

(1.) தகப்பனும் பிள்ளைகளும் பாகம் செய்து கொண்ட பொழுது பிள்ளைகளில் ஒருவன் வியாதியுள்ளவனாக யிருந்தபடியால் அவனுக்குப் பாகம் கொடுக்கப்படவில்லை. பிறகு அவ்னுக்கு வியாதி நீங்கினால் தகப்பனடைந்த பாகத்திற்குமட்டுந்தான் அவன் பாத்திய முள்ளவனாவான்.

(2). அண்ணன் தம்பிகள் பாகம் செய்துகொள்ளும் பொழுது அவர்களில் ஒருவன் வியாதி யுள்ளவனாக யிருந்தபடியால் அவனுக்குப்பாகம் கொடுக்கப்படவில்லை. பிறகு அவனுக்கு வியாதி நீங்கினால் தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி தகப்பனிறந்து போகுங்காலத்தில் அவன் கர்ப்பத்தி லிருந்தவனாக எண்ணப்பட வேண்டியது. ஆகையால, முன்செய்த பாகத்தை ரத்துசெய்து திரும்ப பாகம் நடத்திக் கொள்ளவேண்டும். ஆனால், இப்படிச் செய்தால் அனேகம் சங்கடங்கள் நேரிடுமாதலால் கோர்ட்டார் ஒப்புக்கொள்ளுவார்களென்று சொல்ல நியாயமில்லை.

(3.) தகப்பனும் பிள்ளைகளும் பாகம் செய்து கொண்ட பொழுது பிள்ளைகளி லொருவன் வியாதி யுள்ளவனாக யிருந்தபடியால் அவனுக்குப் பாகம் கொடுக்கப்படவில்லை. பிறகு அவனுக்கு வியாதி நீங்காமலே பிள்ளை பிறந்தான். இவன் பாகம் செய்துகொண்ட காலத்திலே கர்ப்பத்தி லிருந்தால் பாகபாத்திய முள்ளவனாவான். பாகத்திற்குப் பிறகு கர்ப்பத்தி லுண்டானவனானால் பாட்டனுக்குக் கிடைத்த பாகத்தில் மட்டும் பாத்திய முள்ளவனாவான்.

(4.) அண்ணன் தம்பிகள் பாகம் செய்து கொள்ளும் காலத்தில் அவர்களில் ஒருவன் வியாதி யுள்ளவனா யிருந்ததால் அவனுக்குப் பாகம் கொடுக்கப்படவில்லை. பிறகு அவனுக்கு வியாதி நீங்காமலே பிள்ளை பிறந்தான். இந்தப் பிள்ளைக்கு பாகம் கிடைக்காது. (2 க. ஐ. 118 - 121; இ. லா. ரி. 9 ம. 64).

குடும்பத்தில் சேராதவர்களுக்குண்டாகும் பாக பாத்தியம்.

253. பாகம் கேழ்க்கும் பாத்தியம் முதலில் சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்களுக்கே உறியதா யிருந்தாலும் அந்த பாகஸ்தர்களில் ஒருவனுக்குள்ள பாத்தியதையை சாசனம், அடமானம் முதலிய வழிகளாலாவது கோர்ட்டு ஏலத்திலாவது டிருன்ஸ்பர் பெற்றவன் பாகத்திற்காகப் பிருது செய்யலாம். அதாவது,

குடும்பசொத்து முழுவதையும் பிறித்துத் தனக்கு வரத்தகுந்த பாகத்தைக் கொடுக்கும்படி பிருது செய்யலாம். தனக்கு வரக்கூடிய பாகத்தைமட்டில் தனிமையில் பிறித்துக் கொடுக்க வேண்டுமென்று பிருது செய்யக்கூடாது. (6 மூ. இ. அ. 539; இ. லா. ரி. 3 க 198; 3 க ஐ. 14; 18 ஸ. 23; 21 ஸ. 190; 22 ஸ. 116, 294; இ. லா. ரி. 7 ம. 588; இ. லா. ரி. 9 க. 580, இ. லா. ரி. 10 க. 244; இ. லா. ரி. 12 க. 209). 184 - வது பாராவைப் பார்க்கவேண்டியது.

சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தனுடைய பாத்தியதையை உயில் மூலமாகவாவது அல்லது இனமாகவாவது பெற்றுக்கொண்டவன் பாகத்திற்காகப் பிருது கொண்டுவரும் பாத்தியமுடையவன் அல்ல. (183, 184 - பாருக்களைப் பார்க்கவும்).

ஸ்திரீகளுக்கு உண்டாகும் பாத்திபம்.

254. முன்காலங்களில் புருஷர்கள் பாகம்செய்து கொள்ளும் பொழுது தாய், பாட்டி, பெண், பெண்சாதி முதலிய ஸ்திரீகளுக்குக் கூட கொஞ்சம் பாகம் கொடுக்கும் வழக்கமுண்டென்று தர்மசாஸ்திரங்களால் தெரியவருகிறது. ஆனல், இக்காலத்தில் அவ்வழக்கம் கிடையாது. ஆஸ்திதாரனுக்கு ஆண்சந்ததி யிருக்கும் பொழுது எல்லாமதங்களிலுள்ள ஸ்திரீகளுக்கு ஜீவனும்ச பாத்தியம் மட்டும் உண்டேயன்றி பாகபாத்தியம் கிடையாது. (2 டப்ளியூ. மெக். 65; எப். மெக். 45, 57; 1853 ஹு ம. தி. 61; இ. லா. ரி. 6 ம. 130; இ. லா. ரி. 8 ம. 123; 9 ஸ. 61; 12 க. ஐ. 90, 373; இ. லா. ரி. 5 க. 845; இ. லா. ரி. 8 க. 17; இ. லா. ரி. 12 க. 165. ஆனல், 2 பாரோ. 454; இ. லா. ரி. 2 ப. 494, 504; பார்க்கவேண்டியது).

தாயபாக சம்பிரதாயம்.

ஆஸ்திதாரனுடைய குமாரர்கள் பாகம் செய்து கொள்ளும் பொழுது தாய்க்கு ஜீவனும்சத்திற்காக அவர்கள் ஒருபாகம் கொடுக்க வேண்டுமென்றும் ஆஸ்திதாரனுடைய பேரர்கள் பிரித்துக்கொள்ளும் பொழுது தகப்பனைப்பெற்ற தாயாரின் ஜீவனும்சத்திற்காக தங்களைப்போல ஒரு பாகம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லுகிறுர்கள். (இ. லா. ரி. 3 அ. 88; இ. லா. ரி. 7 க. 191; 12 க. ஐ. 385; எப். மெக். 29, 52, 64; இ. லா. ரி. 3 க. 149; இ. லா. ரி. 4 க. 756; இ. லா. ரி. 13 க. 39; இ. லா. ரி. 10 க. 1017).

தகப்பன் இறந்தபிறகு அண்ணன் தம்பிகள் பாகம் செய்துகொள்ளும் பொழுது கல்யாண மாகாதவர்களுடைய விவாக முதலியவை

களின் பொருட்டு தங்கள் பாகங்களில் நாலிலொன்று கொடுக்கவேண்டுமென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த நான்கிலொருபாகமென்றால் அவர்கள் கலியாணம் முதலியவைகளுக்கு அவசியமான பாகமென்று இப்பொழுது அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. (எப். மெக். 55; 98; 1 டப்ளியூ. மெக். 50).

பங்காளா தேசத்தில் சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தன் பிள்ளையில்லாம லிருந்தால் அவனுடைய பாகத்திற்கு அவன் விதவை பாத்தியஸ்தி ஆகிறாள். ஆகையால், அவள் பாகம் கேழ்க்கலாம். (3 மூ. இ. அ. 229, 241; இ. லா. ரி. 2 க. 262; இ. லா. ரி. 1 அ. 688; இ. லா. ரி. 9 க. 244, 250). மேலும், அவளுடைய பாத்தியதையை டிரான்ஸ்பர் பெற்றவன்கூட பாகம் கேழ்க்கலாம். (இ. லா. ரி. 9 க. 580).

மிதாக்ஷர சம்பிரதாயம்.

மிதாக்ஷர சம்பிரதாயத்தின் பிறகாரம் சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தனுடைய பெண்சாதிக்கு ஜீவனாம்சபாத்தியம் மட்டும் உண்டேயன்றியில யென்னிலைமையிலும் பாகங் கேட்கும பாத்தியம் கிடையாது. புருஷனிறந்த பிறகு பிள்ளைகள் பாகம் செய்துகொள்ள இஷ்டப்படாவிட்டால் பாகம் செய்துகொள்ள வேண்டியதென்று அவர்களைக் கட்டாயப்படுத்த த்தாயாருக்குப் பாத்தியம்கிடையாது. புருஷன் பிள்ளையன்றியில் இருந்தால் அவனுடைய பாகத்தைத் தனக்குக் கொடுக்க வேண்டுமென மிகுமைத்த பாகஸ்தர்களைக் கேழ்க விதவைக்குப் பாத்தியம் கிடையாது.

பாகம் செய்துக்கொள்ளக் கூடாதென்று ஏற்ப்பாடு.

255. பிள்ளைக ளெப்பொழுதும் பாகம் செய்துகொள்ளக் கூடாதென்றாவது, கொஞ்சகாலம் பாகம் செய்துகொள்ளக் கூடாதென்றாவது தகப்பன் உயில் வகையறாவால் ஏற்பாடுசெய்து போனால் இந்து தர்மசாஸ்திரங்களின்படி நியாயமான வழிகளில் சொத்தை யனுபவிக்கும் பாத்தியத்திற்கு விரோதமா யிருப்பதால் அந்த ஏற்பாடு செல்லத்தக்கதல்ல. தகப்பனுடைய உத்திறவுக்கு விரோதமாய்ப் பிள்ளைகள் பாகம் செய்துகொள்ளலாம். (எப். மேக் 323; இ. லா. ரி. 1 க. 104; 23 ஸ. 297; டிரான்ஸ்பர் அப் பிறாபர்ட்டி ஆக்ட்டு 1882 ஷு 4 நெ. சட்டம் 10-11 செக்ஷனையும் பார்க்கவும்).

பாகம் செய்துகொள்ளக் கூடாதென்று சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்கள் தங்களுக்குள் செய்துகொண்டால் அந்த ஏற்ப்பாட்டால் அவர்கள் கட்டுப்பட்டவர்கள். ஆனால் அவர்கள் வார்சுகள் கட்டுப்பட்டவர்களல்ல. (4 ம. ஐ. 345) மேலும் அவர்கள் பாகங்களைக் கி

றயம் முதலியவைகளால் டிருன்ஸ்டர் செய்துகொண்டவர்கூட கட்டுப்பட்டவர்களல்ல. (3 க. ஐ. 14; 8 க. ஐ. 60; இ. லா. ரி. 6 க. 107). மேற் சொல்லப்பட்ட ஏற்பாடு செய்துகொண்ட பாகஸ்தர்கள்கூட அந்த ஏற்பாட்டால் கட்டுப்பட்டவர்களல்ல வென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித் திருக்கிறார்கள். (இ. லா. ரி. 7 பம். 538).

அப்படிப்போலவே பாகம் செய்துகொள்ளும் பாகஸ்தர்கள் தங்களுடைய பாகங்களை உயில் மூலமாகவாவது இனுமாகவாவது யாருக்கும் கொடுக்கிறதில்லை யென்றும் அவர்களில் யாரேனும் சந்ததியன்றியில் இறந்தால் அவர்கள்பாகம் மைத்த பாகஸ்தர்களைச் சேருகிறதென்றும் ஏற்பாடுசெய்து கொண்டால் அந்த ஏற்பாடு சொல்லமாட்டாது. (4 ம. ஐ. 348).

பிதுரார்ஜிதத்தின் விபாகம்-சமான பாகங்கள்.

256. பிதுரார்ஜித சொத்தைப் பிறித்துக்கொள்ளும் பொழுது, தகப்பனும் பிள்ளைகளும் சறியான பாகத்துக்கு பாத்தியதை யுடையவர்கள் (1 பம். ஸ. தீ. 28, 58; 3 பம். ஸ. தீ. 301; இ. லா. ரி. 1 பம். 561). முன்காலங்களில் தகப்பனுக்கும் மூத்த பிள்ளைக்கும் அதிகபாகம் ஏற்படுத்தும் வழக்கமிருந்ததாக தர்மசாஸ்திரங்களில் காணப்படுகிறது. ஆனால இப்பொழுது அப்படி வழக்கம் தென்படவில்லே. எங்கேயாவது அப்படிப்பட்ட குலாசாறம் இருப்பதாகத் தெளிவாய் ருசுவாகிர பக்ஷத்தில தான் ஏற்றத் தாழ்த்தியான பாகம் செல்லும். (2 பம். ஸ. தீ. 266) சில சில சமயங்களில் இரண்டுபாகம் கொடுக்கும்படி தீர்மானங்கள் மேல் 149 வது பாராக்களில் தெறிவித்திருக்கிறோம். அப்படி இறட்டைப்பங்கு பாத்தியம் சொத்தைத் தேடினவனுக்குட்பட்டே யன்றியில அவன் பாகம் செய்துகொள்ளுவதற்கு முந்தி யிறந்தால அவன் சந்ததிகளுக்குக்கூட உண்டாகமாட்டாது.

தாயைப்பொருத்து பாகம்.

தகப்பனுக்கு இறண்டு மூன்று பெண்சாதிகள் இருக்கும்பொழுது பிள்ளைகளெல்லாம் சேர்ந்து சமமான பாகங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமே யல்லாமல் தாயைப் பொருத்துப் பாகம் செய்துகொள்ளக்கூடாது. அதாவது தகப்பன் பெண்சாதிகளின் பிறகாறம் முதலில் சொத்தை பாகம் செய்துகொண்டு பிறகு அந்தந்தப் பெண்சாதியாலுண்டான பிள்ளைகளுக்கு அந்தப் பெண்சாதிக்கு ஏற்ப்பாடும் பாக

த்தைப் பிறித்துவைக்கக் கூடாது. சிலசில குடும்பங்களில் மட்டும் பெண்சாதிகளைப் பொருத்து பாகம் செய்துகொள்ளும் வழக்கம் இருக்கிறதாகத் தெரியவருகின்றது. இதன்படி சுவாந்தாரனுக்கு இரண்டு பெண்சாதிகளிருந்து, ஒரு பெண்சாதியால் இரண்டு குமாரர்களும், மைத்தொரு பெண்சாதியால் மூன்று குமாரர்களும் இருந்தால், சொத்தில் சறிபாதிபாகம் முதல் பெண்சாதியின் குமாறர்கள் இரண்டு பெயர்களுக்கும் பாக்கிப் பாதி இறண்டாம் பெண்சாதியின் குமாரர்கள் மூனறுபேருக்கும் சேரும் (2 பம். ஸ. தீ. 116) இவ்வழக்கம் அயோத்தியா பட்டணத்தில் தென்படுகிறது.

பேறன்கள் கொள் பேறன்கள் அவறவர்கள் தகப்பன் பாகங்களில் பாத்தியமுள்ளவர்கள். (மேல் 136 பாரூக்கள். 1849 ஹூ ம. தீ. 27; 1856 ஹூ ம. தீ. 5; இ. லா. ரி. 5 க. 362).

மிதாக்ஷர ஸம்பிரதாயம் — சுவயார்ஜிதத்தின் விஷம விபாகம்.

257. தகப்பன் இஷ்டப்பட்டு தன்னுடைய ஸ்வயார்ஜித சொத்தைப் பிள்ளைகளுக்குப் பாகம்செய்து வைக்கும் பொழுது அவனுக்கு இஷ்டப்பட்டபடி பாகம் செய்யலாமா கூடாதா என்கிற விஷயத்தில் தர்மசாஸ்திரங்கள், தீர்பபுகள்கூட அவ்வளவு தெளிவாகயில்லை. தகப்பன் இஷ்டப்படி தன்னுடைய ஸ்வயார்ஜித சொத்தை பிள்ளைகளுக்காவது மைத்தவர்களுக்காவது இனமாகக் கொடுக்க ஒரு அட்டியுமில்லை. (170 வது பாரூ) ஆனால் இனம் கொடுக்கும் விஷயத்தில் சொத்தைச் சுவாதீனப் படுத்துவது அவசியம். (194 வது பாரூ) பாகம்செய்தால் இவரிவர்களுக்கு இன்ன இன்ன பாகம் கிடைக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யும்பொழுது அந்தந்த பாகங்கள் அவரவர்களுக்கு சுவாதீனம் செய்யப்படாமல் போனாலும் அந்த ஏற்பாடு செல்லும். ஆனால் இனமாகக் கொடுக்கும் விஷயத்தில் ஸ்வயார்ஜித சொத்தின்பேறில் தகப்பனுக்கு சர்வ ஸ்வதந்திறமிருந்தபோதிலும் அதைத்தனக்கு இஷ்டம் வந்தபடி பாகம்செய்து ஏற்பாடுசெய்ய அவனுக் கதிகாரமில்லை யென்றும் மூத்தபிள்ளை யென்றும் புத்திசாலி யென்றும் பெறிய குடும்பமுடையவனென்றும் அல்லது குழந்தையென்றும் இப்படி சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட காரணங்களில்லாதிருக்கும் பொழுது தன் ஸ்வயார்ஜிதசொத்தை ஏற்றத்தாழ்த்தியான பாகங்களாகப் பிள்ளைகள் பிறித்துக்கொள்ளும்படி தகப்பன் ஏற்பாடு செய்யக்கூடாதென்றும் தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கின்றது. ஒரு மதிராஸ்கேசில் ஒரு ஸ்வான்தாரன் தன்

சொத்தில் ஒன்பதுபாகம் தன் பெண்சாதிக்கும் பெண்ணுக்கும் சேரும்படியாகவும் ஒருபாகம் தன் பிள்ளைக்குச் சேரும்படியாகவும் பாக ஏற்பாடுசெய்தான். அப்படிப்பட்ட பாகம் ஜங்கமசொத்து விஷயத்தில் சென்றாலும் ஸ்தாவரசொத்து விஷயத்தில் சொல்லமாட்டாது என்று ஸதர்கோர்ட்டு பண்டிதர்கள் அபிப்பிராயம் தெறிவித்தார்கள். (1853 ஹு ம. தீ. 61).

பங்காள சம்பிரதாயம் — ஏற்றத் தாழ்த்தி பாகம்.

258. பங்காளா சம்பிரதாயப்படி இஷ்டம்வந்தபடி ஸ்வயார்ஜித பிதரார்ஜித சொத்துக்களைப் பராதீனம்செய்யும் பாத்தியம் தகப்பனுக்கிருந்தாலும் பாகம் செய்யும் விஷயத்தில் ஏற்றத் தாழ்த்தியாகப் பாகம் ஏற்பாடுசெய்ய அவனுக் கதிகாறமில்லை யென்று ஸ்மிருதிகர்த்தர்கள் சொல்லுகிறார்கள். மூத்தபிள்ளை யென்றும், கல்வியறிவில் தேறியவனென்றும், நற்குண முடையவனென்றும், பெரிய குடும்ப முடையவனென்றும், குழந்தை யென்றும் இப்படிப்பட்ட சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட காறணங்க ளிருந்தால்மட்டில் பிள்ளைகளில் எவனுக்காவது அதிக பாகம் கொடுக்கலாமேயன்றி, இல்லாவிட்டால் கொடுக்கக் கூடாதென்று, தாயபாகத்தில் தெறியவருகிறது. (எப். மெக். 260, 265). ஸ்தாவர பிதரார்ஜித சொத்தைப் பிறிவினை செய்வதில் மூத்தபிள்ளை யென்பதைத் தவிற வேறுஎந்தக் காறணத்தினுலாவது அதிக பாகம்கொடுக்க அதிகாற மில்லையென்றும் ஜங்கம பிதரார்ஜிதசொத்து ஸ்வயார்ஜித சொத்து இவைகளைப் பாகம்செய்யும் விஷயத்தில் மேற்சொல்லப்பட்ட காறணங்களில் எதிருந்தாலும் அதிக பாகம் கொடுக்கலாம் என்றும் தாயக்கிறம சங்கிறக கிரந்தம் அபிப்பிராயப் படுகிறது. (2 பம். ஸ. தீ. 202; 2 டபிளியூ. மெக். 2, 16).

பாகம் செய்துகொள்ளும் விதம்.

259. பாகம் செய்துகொள்ளத்தக்க சொத்துக்கள் இன்னது இன்னதென்று பாகம் செய்துகொள்ள வேண்டியவர்கள் எவரெவரென்றும் முதலில் நிஷ்கர்ஷித்துக் கொண்டு அந்த சொத்தின் மதிப்பிலிருந்து பொதுக்குடும்பத்தின் கடன்களுக்காகவும் ஜீவனும்சங்களுக்காகவும் கூடப் பிறந்தவர்கள் முதலியவர்களுடைய விவாகம் முதலிய காரியங்களுக்காகவும் அவசியமான துகையைக் கழித்துக்கொள்ள வேண்டியது. பாகஸ்தர்களில் யாரிடத்திலாவது குடும்பசொத்து நிறுத்தப்பட் டிருந்தால் அதைக் கணக்கில் கொண்டுவற வேண்டியது. (இ. லா. ரி. 10 பம் 529; இ. லா. ரி. 7 பம். 272;) மேலும் ஒரு பாகஸ்தன் தன் சொந்தச் சில

வுக்காகக் குடும்பப் பொருளில் சிலவழித்து அல்லது பரு தீனப்படுத்தியிருந்தால் அதை அவன் பாகத்தில் கழித்துக் கொள்ளவேண்டியது. (இ. லா. ரி. 1 பம். 561; இ. லா. ரி. 5 பம். 589; இ. லா. ரி. 11 ம. 248). சேர்ந்த குடும்பத்தின் நிமித்தமாக ஒருவனுடைய ஸ்வயார்ஜிதப்பொருள் சில விடப்பட்டிருந்தால் அதைப் பொது சொத்திலிருந்து அவனுக்குத் திரும்பக் கொடுக்கவேண்டியது. (1 ம. ஐ. 309). ஒருபாகஸ்தனுடைய குழந்தை முதலியவர்கள் நிமித்தமாகக் குடும்பப் பொருளில் அதிகமாக சிலவிடப்பட்டிருக்கிற தென்கிற காரணத்தைக் கொண்டு அவனுக்கு வரத்தகுந்த பாகத்தில் குறைக்க நியாயமில்லை. (131 - வது பாரு). குடும்பப் பொருளைத் தக்கபடி விருத்தி செய்யவில்லை என்கிற காரணத்தைக் கொண்டாவது உதாரிச் சிலவுசெய்த காரணத்தைக் கொண்டாவது இதைப்போன்ற காரணங்களாலாவது மானேஜரின் பாகத்தைக் குறைக்கக்கூடாது. ஆனால், அவன் குடும்பப்பொருளை அநியாயமாய்க் கைப்பற்றிருக் கொண்டிருந்தால் அந்தத்தொகையை யவன் பாகத்தில் கழிக்கலாம். (130 - வது பாரு).

260. கிணறு, விக்கிரகம், இப்பேர்க்கொற்ற பிதுரார்ஜித சொத்தை பாகம் செய்துகொள்ள வேண்டியதாகயிருந்தால் அவைகளை வரிசையாக யெல்லோரும் அனுபவித்துக் கொள்ளும்படி ஏற்பாடுசெய்யலாம். அல்லது, பாகஸ்தர்களில் ஒருவர்மட்டில் அந்த சொத்தை எடுத்துக்கொண்டு மைத்தவர்களுக்கு ரொக்கங் கொடுத்து ஏற்பாடு செய்யலாம். அப்படியே குடும்பவீட்டை எல்லா பாகஸ்தர்களும் பிரித்துக்கொள்ளும் பொழுது ஒருவனுக்குக்கூட உபயோகப்படாமல் போய்விடும்படி யிருந்தால் யாராவது ஒருபாகஸ்தன் வீடு முழுவதையும் எடுத்துக்கொண்டு அந்த வீட்டின் கிரயத்தில் அவர்கள் பாகத்தைக்கொடுத்து விடலாம். (இ. லா. ரி. 10 க. 675; இ. லா. ரி. 3 க. 514).

பாகத்துக்கு அநுகூலமல்லாத சொத்து.

261. சேர்ந்த குடும்பத்தில் சில பாகஸ்தர்கள் மட்டில் பாகம் செய்துகொண்டு மற்றவர்கள் சேர்ந்தே யிருக்கலாம். அல்லது சில சொத்துக்களை மட்டில் எல்லா பாகஸ்தர்களும் பாகம் செய்துகொண்டு மைத்த சொத்துக்களைப் பொதுவாக அனுபவித்துக் கொள்ளலாம். (இ. லா. ரி. 2 ம. 324; 4 மூ. இ. அ. 168; இ. லா. ரி. 5 க. 474; 5 பம். ஸ. தீ. 349; எப். மெக். 46; 1 டப்பிளியூ. மெக். 53). அப்படிப்போலவே ஒரு பாகஸ்தன் தன் பாகத்தைப் பெற்றுக்கொண்டு பொதுக் குடும்பத்தி லிரு

பூர்ணமாகாத பாகம்.

ந்து விலகிப்போகலாம். (இ. லா. ரி. 9 க. 817). பாகம் நடக்கும் பொழுது சாதாரணமாய் எல்லா சொத்துக்களையும் பிறித்துக் கொண்டதாகவே கோர்ட்டார் ஊகிப்பார்களானதால் சில சொத்துக்கள் மட்டில் பிறிக்கப்பட்டதென்றும் சில சொத்துக்கள் பொதுவாகத்தானே அனுபவிக்கப்பட்டு வந்ததென்றும் யார் வாதிப்பார்களோ அவர்கள் அந்த அம்சத்தை ருசுப்படுத்த வேண்டியது. (7 பம். ஐ. 153).

ஒரு பாகஸ்தன் தன் பாகத்தை விட்டு விடுகிறது கொடுத்து விடுகிறது.

262. சேர்ந்த குடும்பத்தின் எந்த பாகஸ்தனுவது பொது சொத்தில் தன் பாகத்தை விட்டு விடலாம். அப்படி விட்டு விட்டால் அவன் வார்சுகளும் அதற்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவார்கள். (இ. லா. ரி. 3 பம். 54; இ. லா. ரி. 1 ம. 312). ஆனுல் சேர்ந்த குடும்பத்தில் ஒரு பாகஸ்தன் தன்னுடைய பாகத்தை விட்டுவிடுவதாக மைத்த பாகஸ்தர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டால் அந்த உடன்படிக்கைக்கு பிறதி பிரயோசன மில்லாத தால் அதினுல் அவன் கட்டுப்பட்டவ னல்லவென்று மதிராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானித் திருக்கிறுர்கள். (இ. லா. ரி. 6 ம. 71) சேர்ந்த குடும்பத்தில் ஒரு பாகஸ்தன் தன்னுடைய பாகத்தை மைத்தொரு பாகஸ்தனுக்குக் கொடுத்துவிடாமல் அப்பொழுது அவனுடைய பாகம் பிறித்துக் கொள்ளும் காலத்தில் அந்த இனும்பெற்ற பாகஸ்தனுக்கே சேருமன்றியில் மைத்தவர்களுக்குச் சேறமாட்டாது. (இ. லா. ரி. 11 ம. 406).

பாகத்தை ரத்து செய்கிறது.

263. ஒருதடவை பாகம் செய்துக் கொள்ளப்பட்ட பிறகு அதை ரத்துசெய்து திரும்பி பாகம் செய்துகொள்ளுவதற்க்கு சாதாறணமாய் நியாயமில்லே. பாககாலத்தில் சில பொதுசொத்து பிறிபடாமல் விட்டுப்போயிருந்தாலும் மோசமாக மறைக்கப்பட்டு பிறகு தெரியவந்தாலும் அப்படிப்பட்ட சொத்தைமட்டில் பிறகு பாகம் செய்துகொள்ளலாம். (இ. லா. ரி. 1 அ. 543).

சில பாகஸ்தர்களுடைய மோசத்தால் பாகம் மிகவும் அநியாயமா யிருந்தாலும் சூதடியாய் ஏற்பட்டிருந்தாலும் மேலும் அந்த பாகத்தால் மைனர்கள் விஷயத்தில் அக்கிறமமாவது அல்லது மோசமாவது நடந்திருந்தாலும் நஷ்டப்பட்டவர்கள் கோறிக் கொண்டால் கோர்ட்டார் அந்தபாகத்தை ரத்துசெய்து திரும்ப பாகம் செய்து கொள்ளும்படி தீர்மானிப்பார்கள். (1859 ஸு ம. தீ. 84; 10 பம். ஐ. 444).

264. பாகம் செய்து கொள்ளத்தக்க பொது சொத்து யில்லா விட்டாலும் அவர்கள் ஸ்வயார்ஜித சொத்து விஷயமாய் பிறகு தகரார்கள் நேரிடாம லிருப்பதற்காகப் பேருக்கு பாகம் செய்து கொள்ளலாம். (13 மூ.இ.அ.113).

பேருக்கு பாகம்.

265. பாகத்துக்கு பாகபத்திரம் வேறு எவ்விதமான தஸ்தாவேஜிபாவது அவசியமில்லை (4 மூ. இ. அ. 168). சேர்ந்திருக்கும் நிலைமைபோய் தனக்குத் தனி பாத்தியம் வேண்டு மென்கிற எண்ணத்துடன் பொது சொத்து விஷயமாய் எவ்விதமாகவாவது தனித்தனி அனுபோகத்திற்காக பாகஸ்தர்கள் ஏற்பாடு செய்துகொண்டால் அந்த ஏற்பாடே பாகமாகச்செல்லும். (14 ஸ. 31; 8 க. ஐ. 396). மேற்சொல்லப்பட்ட உத்தேசத்துடன் ஏற்பாடு செய்து கொள்ளப் பட்டால் சொத்தை வெவ்வேறு பாகமாய் அளந்து கட்டி அடையாளம் செய்யாவிட்டாலும் பாதகமில்லை. இஷ்டம் வந்தபோது அப்படிப் பிறித்துக்கொள்ளலாம். (11 மூ. இ. அ. 75; 13 மூ. இ. அ. 113; 3 ம. ஐ. 40, 287; இ. லா. ரி. 4 பம். 157; இ. லா. ரி. பம் 111; இ. லா. ரி. 12 க. 96; இ. லா. ரி 5 அ. 532; இ. லா. ரி. 13 பம். 25). அப்படித் தனித்தனியாகப் பிறித்துக் கொள்வதற்கு முந்தி பொதுக் குடும்பத்திலொரு பாகஸ்தன் பிள்ளையன்றியி லிறந்தால் அவனுடைய பாகம் அவன் விதவைக்குச் சேருமேயல்லாமல் மைத்த பாகஸ்தர்களுக்குச் சேறமாட்டாது. (13 மூ. இ. அ. 497; 14 ஸ. 33).

பாக விஷயமான ருசுவு—உத்தேசம் முக்கியம்.

மேற்சொல்லப்பட்ட எண்ணமில்லாம லிருக்கையில் சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்கள் தூரதேசங்களில் உத்தியோகமா யிருப்பதாலாவது வெவ்வேறு வீடுகளிற் குடியிருந்துகொண்டு வருவதாலாவது தனித்தனியாகச் சாப்பாடு அல்லது நன்மை தீமைகளை நடத்திக்கொண்டு வருவதாலாவது தனித்தனியாய் சில சொத்துக்களை யனுபவித்து வருவதாலாவது சில வரும்படிகளைத் தனித்தனியாக அடைந்து சிலவு செய்துகொண்டு வருவதாலாவது ஒருவரோ டொருவர் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொண் டிருப்பதாலாவது இப்பேற்கொற்ற சங்கதிகளால் மட்டும் சேர்ந்த நிலைமை நீங்கி பிறிந்தவர்களாகமாட்டார்கள். பிறிந்தவர்களாக வேண்டுமென்ற எண்ண மேற்பட்டால் தான் மேற்சொல்லிய விஷயங்கள் பிறிவினையை ஸ்தாபிக்கப் போதுமானவைகள். (4 மூ. இ. அ. 158; 12 மூ. இ. அ. 540; 14 மூ. இ. அ. 412; 3 பம். ஐ. 87; 1857 ஸ ம. தீ. 230; 1861 ஸ ம. தீ. 101; 8 ம. ஐ. 25; 8 மூ. இ. அ. 66; இ. லா. ரி. 1 அ. 437; 23 ஸ. 412).

சாதாரணமாய் இந்து குடும்பங்கள் சேர்ந்தவைகளென்றே எண்ணப்படும். தலால் பிறிந்ததென்று கக்ஷிசொல்லுகிறவர்களே அவ்விஷயத்தை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டியவர்கள். (9 மூ. இ. அ. 66; 12 மூ. இ. அ. 523). சேர்ந்த குடும்பத்திலொருபாகஸ்தன் மட்டும் பாகம் செய்துகொண்டு விட்டதாகக் காணப்படுகிறதைக் கொண்டு மட்டில் மைத்த எல்லோரும் பிறிந்தவர்களென்று நினைக்கமுடியாது. (இ. லா. ரி. 9 க. 817). சர்க்கார் கணக்கு முதலியவைகளில் சேர்ந்த குடும்பத்தில் ஒருபாகஸ்தன்பேறில் மட்டும் சில சொத்து தாக்கல் செய்யப்பட்டிருப்பதைக் கொண்டுமட்டில் அதை அவனுடைய ஸ்வயார்ஜித மென்ருவது பிறிவினையாய்விட்ட தென்ருவது நினைக்கக்கூடாது. (இ. லா. ரி. 1 அ. 347).

266. பாகத்துக்கு பாகபத்திரம் அவசிய மில்லாமற் போனாலும் பாகபத்திரம் எழுதப்பட்டால் மறுபடியும் தகராருக்கு இடமிருக்கக் கூடாது. பாகத்திற்காக யேற்படும் பாகபத்திரம் ஆஸ்தியுடைய மொத்த கிரயத்துக்கு ஏற்படும் ஸ்டாம்பு பத்திரத்தின் பேறி லெழுதப்பட வேண்டியது. (ஸ்டாம்பு ஆக்டு 1-வது பட்டீ, 47. 37). ரூபாய். 100-வது ஜாஸ்தியாவது விலைபெறத்தக்க ஸ்தாவர சொத்துவிஷயமாக யேற்படும் பாக பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்வது அவசியம்-(ரிஜிஸ்ட்ரேஷன் சட்டம் செ. 17). ரிஜிஸ்தர் செய்யவேண்டிய பாகபத்திரத்தை ரிஜிஸ்தர் செய்யாவிட்டால் அது எவிடன்ஸ் ஆக்டின்படி ருசுவாக அங்கீகரிக்கப் படமாட்டாது. ஆனல், பாகம் நடந்ததாக மைத்த சங்கதிகளைக் கொண்டு ருசுவிடலாம். (இ. லா. ரி. 5 பம். 232).

பாக பத்திரம்.

பஞ்சாயத்துக்களால் பாகம் செய்விக்கப்பட்டால் அந்தப் பஞ்சாயத்துத் தீர்ப்பை எல்லா பாகஸ்தர்களும் ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து வைத்தால் அதே பாக பாத்திரமாக எண்ணப்படும். (இ. லா. ரி. 9 பம். 50).

267. சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்கள் தாங்கள் தானே சம்மதப்பட்டு பாகம் செய்துக்கொள்ளக் கூடாமலிருந்தால் பாகத்துக்காகப் பிறாது செய்ய வேண்டியது. பாகவியாச்சியம் ஒருபாகஸ்தனல் மட்டும் கொடுக்கப்பட்டாலும் செல்லும். ஆனல், மைத்த பாகஸ்தர்களெல்லோரையும் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட வேண்டியது. (இ. லா. ரி. 2 க 149).

பாகத்தின் நிமித்தம் தாவா.

பாகத்திற்காகக் கொண்டுவரப்படும் வியாச்சியத்தில் எல்லா பொது சொத்துக்களும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டியது. (1861-ம் ஸு ம. தீ. 86; 22 ஸ. 333; 7 பம். ஐ. 46; 11 பம். ஐ. 71; இ. லா. ரி. 12 க. 566; இ. லா. ரி. 14 க. 122). சொத்துக்கள் வேறு வேறு கோர்ட்டுகளின் அதிகாற எல்லைக்குட்பட்டிருந்தால் வெவ்வேறு பிருதுகள் செய்யவேண்டும். (3 ம. ஐ. 376; இ. லா. ரி. 4 பம். 482; இ. லா. ரி. 5 க. 474; இ. லா. ரி. 14 க. 835). பொது சொத்தில் யேதேனும் கொஞ்சம்சொத்து ஒரு பாகஸ்தனால் பருதீனம் செய்யப்பட்டிருந்தால் அதில் தங்களுடைய பாகத்துக்காக மட்டில் மைத்த பாகஸ்தர்கள் பிருது செய்யலாமென்று மதருஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 5 ம. 196). ஆனால், அன்னிலைமையிற்கூட எல்லா பொது சொத்துக்களையும் சேர்த்துப் பிருது செய்யவேண்டுமென்று கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 11 க. 396).

பாத்தியத்திற்குட்பட்டு அல்லது குத்தகைக் குட்பட்டு மைத்தவர்க ளனுபோகத்தி லிருக்கிற காரணத்தால் சில சொத்துக்கள் விஷயமாய் பிறிவினை அசாத்தியமா யிருந்தால் அதைப் பிருதில் சேர்க்க வேண்டியதில்லை. (5 ம. ஐ. 419; 12 பம். ஐ. 148). ஒரு பாகஸ்தன் தன் பாகத்திற்காகப் பிருது கொடுக்கும் பொழுது தன் சுவாதீனத்திலிருக்கும் எல்லாப் பொது சொத்துக்களையும் பிருதில் சேர்க்க வேண்டியது. அது, வேறு கோர்ட்டு அதிகார எல்லைக்குட்பட்டிருந்தாலும் பிருதில் சேர்ப்பது அவசியம். (15 ஸ. 111; 25 ஸ. 353 இ. லா. ரி. 7 பம். 272).

பாகத்திற்காகக் கொடுபடும் வியாச்சியத்திற்குச் சாதாரணமாய்க் காலாவதி தோஷம் கிடையாது. ஆனால் சேர்ந்தபாகஸ்தர்களில் யாருவது பொதுசொத்தில் அவனுக்குப் பாத்திய மில்லையென்று அவனை அனுபோகத்தி லிருந்து மைத்தவர்கள் நீக்கிவிட்டால் அப்படி நீக்கின காலம்முதல் 12 வருஷத்திற்குள்ளாக அவன் பிருது செய்யவேண்டியது. (லிமிடேஷ னாக்ட்டு ஆர்ட்டிகள் 127).

முந்திய வரும்படி.

268. பாகத்திற்கு முந்திக் கிடைத்த வரும்படியில் பாகம் கேழ்க்கச் சாதாரணமாய் அதிகாறமில்லை. ஏனென்றால் அந்த முந்திய வரும்படி பொது குடும்பத்திற்காக சில விடப்பட்டதாகவாவது அல்லது பொதுப் பொருளுடன் சேர்க்கப்பட்ட தாகவாவது எண்ணப்படும். ஆனால் சேர்ந்த குடும்ப

த்தின் பாகஸ்தன் பொது சொத்தின் அனுபோகத்திலிருந்து முன்னிலும் நீக்கப்பட்டிருந்தாலும் பிறிக்கத் தக்கதில்லை யென்று வியாஜத்தால் பொது சொத்தை ஒருவனே அனுபவித்துக்கொண்டு வந்திருந்தாலும் சொத்தைப் பிறிப்பதுடன் முந்திய வரும்படியில் பாகங்கூடத் தீர்மானிக்கப் படும். (இ. லா. ரி. 5 பம். 595; இ. லா. ரி. 2 ம. 128; இ. லா. ரி. 5 ம. 236; இ. லா. ரி. 765 64; இ. லா. ரி. 16 க. 397).

269. பாகத்திற்காகப் பிருது கொடுபட்ட பொழுது டிக்கிறியாவதற்கு முந்தி பாகஸ்தர்களில் யெவனாயினும் இறந்தால் அவன் பிறியாத நிலைமையில் இறந்ததுபோலவே யெண்ணப்படும். பாகத்திற்காகக் கோற்ட்டார் தீர்ப்புச் செய்தநிமிஷம் முதற்கொணடு சேர்ந்த பாகஸ்தர்கள் எல்லோரும் பிறிந்தவர்களாகவே எண்ணப்படுவார்கள் என்று மதிராஸ், கலகத்தா ஹைகோற்ட்டாரவர்கள் தீர்மானித் திருக்கிறார்கள். (இ. லா. ரி. 4 க. 434; இ. லா. ரி. 2 ம. 83). ஆனால பாகத்திற்காக ஏற்பட்ட தீர்ப்பு அப்பீலிலிருக்கிற வரையில் சேர்ந்த குடும்பத்தின் நிலைமை நீங்கமாட்டாதென்றும் பாகஸ்தர்களில் எவனாயினும் இம்மத்தியிலிறந்தால் மைத்தவர்கள் பாகம் அதிகமாகு மென்றும் பம்பாய் ஐகோர்ட்டார் தீர்மானித் திருக்கிறார்கள். (இ. லா. ரி. 6 பம். 113).

பாக டிக்ரி.

பாகத்திற்காகப் பெறும்டிக்கிறி சாதாரணமாய்ப் பணத்துக்காகப் பெறும் டிக்கிறிபோலல்ல. எபபடியெனில் பாகத் தீர்ப்பின்படி வாதிகளாவது பிறதிவாதிகளாவது நிறைவேற்ற நடவடிக்கை நடத்தித் தங்கள் தங்கள் பாகங்களைப் பிறித்துக் கொள்ளக்கூடும். (இ. லா. ரி. 3 க. 551; இ. லா. ரி. 9 க. 568).

270. சேர்ந்த பாகஸ்தர்கள் ஒருதடவை பாகம் செய்துகொண்ட பிறகு அவர்களில் எல்லாருமாவது சிலராவது சேர்ந்திருப்பது சம்சிருஷ்டி என்று சொல்லப்படுகிறது. சம்சிருஷ்டி விஷயத்தில் பிருகஸ்பதி வாக்கியம் மூலாதாரமாக யிருக்கிறது. அது என்ன வெனறால்:—“ஒரு தடவை பிறிதுக்கொண்டு திரும்பவும் பிறியத்தால் தகப்பன், சகோதரர்கள், சிரிய தகப்பன், பெரிய தகப்பன் இவர்களோடு சேர்ந்து யார் வசிக்கிறானோ அவன் சம்சிருஷ்டன் என்று சொல்லப்படுவான்.” இந்த வாக்கியத்திற்கு வெவ்வேறு அர்த்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

சம்சிருஷ்டி.

மிதாக்ஷர தாயபாகங்களின்படி மேற் சொல்லப்பட்ட பிருகஸ்பதி வாக்கியத்தில் கண்ட பந்துக்குள்ளாக மட்டும் சம்சிருஷ்டி கூடு

மேயல்லாமல் மைத்தவர்களுக்குள் சம்சிருஷ்டி கூடாது. அதாவது தகப்பன் பிள்ளைகள், அண்ணன் தம்பிகள், இவர்களுக்குள்ளாகவும் - சிரியதகப்பன் பெரியதகப்பன் அண்ணன் தம்பிகள் பிள்ளைகள் இவர்களுக்குள்ளாகவும் சம்சிருஷ்டி நடக்கலாம். ஆனுல், மைத்த பந்துக்களுக்குள் சம்சிருஷ்டி கூடாது. தென்னிந்தியாவிலும் பங்காளா தேசத்திலும் இந்த அபிப்பிராயம் அனுசரிக்கப்படுகிறது. (5 ஸ. 249).

மயூககிரந்தம் செய்தவருடைய அபிப்பிராயம் என்னவென்ருல்—பிரகஸ்பதி வாக்கியத்தில் சொல்லப்பட் டிருக்கும் பந்துக்கள் உதாரணத்துக்காகக் காண்பிக்கப்பட் டிருப்பதால் தகப்பன், அண்ணன், தம்பிகள், சிரியதகப்பன், பெரியதகப்பன் இவர்ளோடு மட்டுமென்னியில், பாட்டன், பேரன், பெரியதகப்பன், சிரியதகப்பன், பிள்ளைகள் இப்படிப்பட்டவர்களோடுங்கூட சம்சிருஷ்டி நடக்கலாம். ஆனுல், முதல்பாகத்தில் பாகஸ்தர்களாக யில்லாத புதியவர்களுடன் சம்சிருஷ்டிகூடாது. முதலில் பாகம் செய்து கொள்பவருடைய பிள்ளைகளோடுகூட சம்சிருஷ்டி கூடாது. இந்த அபிப்பிராயம் பம்பாய் பிரெசிடென்சியில் அனுசரிக்கப் படுகிறது. (3 பம். ஐ. 69; 4 பம். 166).

மிதில தேசத்தில் அனுஷ்டானத்தி லிருக்கிற விவாத சிந்தாமணி முதலிய கிரந்தங்கள் முதலில் பாகம் செய்து கொண்டவர்களோடு மட்டுமல்ல, மைத்தவர்களோடும் கூட சம்சிருஷ்டி நடத்தலாமென்று அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

சம்சிருஷ்டியைப் பத்தி ருசவு.

271. ஒருதடவை பாகம் நடந்தபிறகு சம்சிருஷ்டி நடந்ததென்று யார் கக்ஷி சொல்லுகிருர்களோ அவர்களே அதை ருசுப்படுத்தும் பளுவைப் பொருப்பார்கள். பாகம் செய்துகொண்ட பாகஸ்தர்கள் பாகத்துக்குப்பிறகு ஒரு வீட்டிலேயே சேர்ந்திருந்தது அல்லது சேர்ந்து வியாபாரம் செய்தது அல்லது அவர்களில் ஒருவர் மைனராயிருந்ததால் அவன் மைத்தொரு பாகஸ்தனுடைய போஷணேயி லிருப்பது இந்த விஷயங்கள் மட்டும் சம்சிருஷ்டி நடந்ததென்பதைஸ்தாபிக்கப் போதுமானதல்ல. (2 ம. ஐ. 235) மேற்சொல்லப்பட்டபடி சேர்ந்தவர்கள் முன்போலவே தங்களுக்கு பொதுக்குடும்பமா யிருக்கவேண்டுமென்று உத்தேசத்துடன் சேர்ந்திருந்ததாகத் தெளிவாக ருசு ஆகவேண்டியது. (11 மூ. இ. அ. 403; 7 ஸ. 35; 7 க. ஐ. 326).

சம்சிருஷ்டியினுடைய பலம்.

272. சட்டப்படி சரியான சம்சிருஷ்டி நடந்தால் அதன்படி சேர்ந்தவர்களுக்கும் அவாள் சந்ததிகளுக்கும் பிறிவினேயாவதற்கு முந்தி யிருந்ததுபோலவே சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்களின் நிலே

மையுண்டானதாக எண்ணப்படும். ஆனால் முதல் முதற்கொண்டு சேர்ந்த குடும்பத்தி லுள்ளவர்களுக்கும் ஒருதரம் பிறித்துக்கோண்டு பிறகு சேர்ந்தவர்களுக்கும் உண்டாகிய சொத்து பாத்தியவிஷயத்தில் சில வித்தியாச மிருப்பதாகத் தெரியவருகிறது. இது பிந்திய அத்தியாயத்தில் தெரியப் படுத்தப்படும்.

12-வது அத்தியாயம்.

வார்சு பாத்தியம்.

ஐந்து அம்சங்கள்.

273. சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்களுக்குள்ள பொது பாத்தியத்தின் தன்மையையும் அளவையும் அதைப் பொருத்த பாகபாத்தியத்தையும் இதுவறையில் 5, 11 இந்த அத்தியாயங்களில் விவரித்தோம். இந்த அத்தியாயத்தில் (1.) வார்சு பாத்தியத்தின் தன்மையும் (2.) வார்சுதாரருடைய சம்பந்தமும் (3.) வார்சுதாருடைய வரிசையும் (4.) வார்சு பாத்தியதையைக்கொடுக்கும் சங்கதிகளும் (5.) பெண் வார்சுகளுக்குச் சம்மந்தப்பட்ட விசேஷ விதிகளும் இந்த விஷயங்கள் விவறிக்கப்படும்.

(1.) வார்சு பாத்தியத்தின் தன்மை.

வார்சுபாத்தியம் யென்றால் யென்ன.

274. வார்சுபாத்திய மென்றாலென்ன?— சேர்ந்த குடும்பத்திலிருந்து பிறித்துக்கொண்டு பிறகு ஒருவரோடும் சேர்ந்திராமல் அல்லது சேர்ந்த குடும்பத்தில் மைத்த பாகஸ்தர்களெல்லாரும் இறந்து போனதால் எல்லா சொத்துக்கும் ஒருவனே பாத்தியஸ்தனாக ஏற்பட்டு அல்லது மைத்தவர்தளுக்குப் பொதுபாத்தியமன்றியில் ஸ்வயார்ஜித சொத்தைப் பெற்றுத் தன்சொத்து விஷயமாக உயில் அதாவது மரணசாசனம் ஏற்பாடு செய்யாமல் ஒரு சுவாந்தாரன் இறந்தால் அவனுடைய சொத்து தர்மசாஸ்திரப்படி யார்யாருக்குச் சேருமோ அவர்களுக்குள்ள பாத்தியம் வார்சு பாத்தியமென்று சொல்லப்படுகிறது. சேர்ந்த குடும்ப பாகஸ்தர்களில் ஒருவனிறந்தால் அவன் பாகவிஷயமாய் 5 வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டபடி பொது பாத்தியம் செல்லுமே யல்லாமல் இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்படும் பாத்தியம் செல்லமாட்டாது.

275. சுவாந்தாரனுடைய மறணகாலத்தில் எவன் அவனுக்கு சமீப வார்சாக யிருக்கிறானோ அவனுக்கு அந்த சுவான்தாரன் சொத்து அந்த நிமிஷத்திலேயே தப்பாமல் சேரும். பிறகு இவனைப் பார்க்க சமீபவார்சு உண்டாகலாம் என்கிற காறணத்தைக்கொண்டு அந்தச்சொத்து அவனைச்சேராமல் அனுமத்தாய் நிற்கமாட்டாது. அப்படி சர்வசுதந்தரமுள்ள ஆண்வார்சுக்குச் சொத்துச் சேர்ந்தபிரகு அவனைப்பார்க்க சமீபவார்சுகள் பிறந்தாலும் இவர்களுக்கு எவ்விதமான பாத்தியமும் உண்டாகாது. (6 பம். ஹ. தீ. 224; 1 ஷ. 353; 2 க. ஐ. 103; ஆனால் இ. லா. ரி. 9 ம. 64). கர்ப்பத்திலிருக்கும் குழந்தை விஷயத்திலும் சுவீகாரப்பிள்ளை விஷயத்திலும்மட்டும் இந்தவிதி செல்லமாட்டாது. எப்படியெனில—

சொத்து அனுமத்தாக இருக்க முடியாது.

(1.) ஒரு சுவான்தாரன் இறந்து போகும்காலத்தில் அவனுக்கு ஒரு பிறவிக் குருடனான பிள்ளையும் பிரிந்த சகோதரனுடைய பிள்ளையும் தவிற பேறன் கொள்பேறன் பெண்சாதி பெண் தௌஹித்திரன் முதலிய சமீப வார்சுகள் ஒருவராயினு மில்லாமல் இருக்கும் பொழுது அந்த பிறவிக் குருடனான பிள்ளைக்கு வார்சு பாத்திய மில்லாததால் சொத்து முழுவதும் பிறிந்த சகோதரன் பிள்ளைக்குச் சேர்ந்தது. அந்த பிறவிக் குருடனான பிள்ளைக்கு வியாதி யில்லாதமவன் பிறப்பானோ யில்லையோவென்று காத்துக்கொண்டு சொத்து அனுமத்தாக நிற்கமாட்டாது. பிரிந்த சகோதரன் பிள்ளைக்குச் சொத்துச் சேர்ந்தபிறகு அந்த பொட்டயன் பெண்சாதி கர்ப்பமாகி மகன் பிறந்தாலும் அப்படிப் பிறந்தவனுக்கு அவனுடைய சுவாதீனத்தி லிருந்து தன் பாட்டனுடைய சொத்தைப் பெற்றுக்கொள்ளும் படியான பாத்தியம் கிடையாது.

(2.) மேற்சொல்லிய உதாரணத்தில் ஆஸ்திதாரன் இறந்துபோகுங்காலத்தில் அவனுடைய குருட்டுப்பிள்ளையின் பெண்சாதி கர்ப்பமாயிருந்து பிறகு மகன் பிறந்திருந்தால் சொத்துக்கு இந்த மகனே பாத்தியஸ்தனாவான். (9 க. ஐ. 397; 5 பம். ஹ. தீ. 315).

(3.) ஆஸ்திதாரன் இறந்தபிறகு சுவீகாரம் செய்து கொள்ளப்பட்ட சுவீகாரப் பிள்ளைக்கு சொத்துச் சேறுகிற விஷயத்தைப்பற்றி மேல் 103-வது பாராவைப் பார்க்கவேண்டியது.

276. வார்சு பாத்தியத்தால் ஆண் வார்சுக்குச் சொத்துக் கிடைக்கும் பொழுது அதில்அவனுக்குப் சர்வசுதந்திர முண்டாகிறது. ஆகையால், அவனுக்குப் பிறகு அந்தசொத்துக்கு அவன் வார்சுகள் பா

ஸ்திரீவார்சு சுதந்திரம் அசம்பூர்ணம்.

த்தியஸ்தர்களாகிறார்களேயன்றி முதல் ஆஸ்திதாரனுடைய வார்சுகள் பாத்தியஸ்தர்களாக மாட்டார்கள்.

வார்சு பாத்தியத்தால் புருஷர்களுடைய சொத்து பெண்பிள்ளைகளுக்குக் கிடைத்தால் அதில் அவளுக்கு முழுபாத்தியமு முண்டாகாமல் தன் ஆயுசுவரையில் அனுபவித்துக் கொள்ளும்படியான பாத்தியம்மட்டில் உண்டாகிறது. ஆகையால், அவளுக்குப் பிறகு அந்த சொத்து அவளுடைய வார்சுகளுக்குச் சேராமல் முந்திய ஆஸ்திதாரனுடைய வார்சுகளுக்கே சேரும். இந்த விஷயம் இந்த அத்தியாயம் கடைசி பாகத்தில் விஸ்தாரமாகத் தெரிவிக்கப்படும்.

(2.) வார்சுதாரர்களின் சம்பந்தம்.

மூன்றுவகையான வார்சுகள்.

277. ஒவ்வொரு புருஷனுக்கும் சபிண்டர்கள், சமானோதர்கள், பந்துக்களென்று மூன்றுவகையான வார்சுக ளிருக்கிறார்கள். மிதாக்ஷர தர்மசாஸ்திரப்படி நெருங்கிய ரக்த சம்பந்தத்தைப் பொருத்தும் தாயபாகத்தின்படி பிண்டப்பிரதானம் முதலிய கர்மங்களைப் பொருத்தும், இவ்வார்சுகள் ஏற்படுகிறார்கள். (இ. லா. ரி. 2 ப்ம். 425; இ. லா. ரி. 5 பம். 110; 8 பம். ஐ. 862; இ. லா. ரி. 7 க 119; இ. லா. ரி. 9 க. 318; 2 க. ஐ. 33).

சமீப சபிண்டர்கள் — தூர சபிண்டர்கள் (ஸகுல்யர்கள்)—சமானோதகர்கள்.

278. ஒவ்வொரு மனிதனும், (1.) தகப்பன், (2.) பாட்டன், (3.) கொள்பாட்டன் - இவர்களுக்குப் பிண்டபிரதானம் செய்யவும் - (4.) கொள் பாட்டன் தகப்பன், (5.) கொள்பாட்டன் பாட்டன், (6.) கெள்பாட்டன் கொள்பாட்டன் - இவர்களுக்கு லேபப்பிரதானம் செய்யவும், கொள்பாட்டன் கொள்பாட்டனுக்கு மேல் 7 தலைமுறை வறையிலுள்ளவர்களுக்கு உதகதானம் செய்யவும் கட்டுப்பட்டவனென்று தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இதைக்கொண்டு ஒவ்வொருமனிதனும் (1.) பிள்ளை, (2.) பேரன், (3.) கொள்பேரன் இவர்களால் பிண்டபிரதானம் பெற்றுக் கொள்ளவும் - (4.) கொள்பேரன் மகன், (5.) கொள்பேரன் பேரன், (6.) கொள்பேரன் கொள்பேரன் இவர்களால் லேபப்பிரதானம் பெற்றுக்கொள்ளவும் கொள்பேரன் கொள்பேரனுக்குக் கீழ் 7 தலைமுறைவறையிலுள்ளவர்களால் உதகதானம்மட்டும் பெற்றுக்கொள்ளவும் அதிகார முள்ளவனென்று ஏற்படுகிறது. மேற்சொல்லப்பட்ட தானபரிகிரகங்களே சபிண்டசமானோதக சம்பந்தங்களுக்குக் காரணங்களாயிருக்கின்றன. எப்படியெனில்:—

பிண்டப்பிரதானம் கொடுக்கிறவர்கள் பெற்றுக்கொள்ளுகிற ஒவ்வொருவருக்கும் நெருங்கிய சபிண்டர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். லேபப்பிரதானம் கொடுக்கிறவர்கள் பெற்றுக்கொள்ளுகிற ஒவ்வொருவருக்கும் விலகிய சபிண்டர்களென்று சொல்லப்படுகிறார்கள். இவர்கள் தாயபாக தர்மசாஸ்திரத்தில் சகுல்யர்களென்று சொல்லப்படுகிறார்கள். உதகதானம் மட்டும் கொடுப்பவர்கள் பெற்றுக்கொள்ளுகிற ஒவ்வொருவருக்கும் சமானோதகர்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

இப்படிப்பட்ட பிண்டப்பிரதானம் கொடுக்கிறது பெற்றுக்கொள்ளுகிறது இதனால் மட்டுமில்லாமல் ஒருவன் பிண்டப்பிரதானம் செய்யவேண்டிய பெரியவர்களில் எல்லாருமாவது சிலராவது வேறொருவன் பிண்டப்பிரதானம் செய்யவேண்டிய பெரியவராக ஏற்பட்டால் இவ்விருவர்களுக்கும் சபிண்ட சம்பந்த முண்டாகிறது. இந்த விஷயம் இதின்கீழ்வரும் பாராவில் தெளிவாக விளங்கும். (5 க. ஐ. 39; 2 க. ஐ. 34).

சபிண்டர்களின் வம்சாவளி.

279. இதின்கீழ் காணப்படும் வம்சாவளியிலுள்ள எல்லோரும் ஆஸ்திதாரனுக்கு நெருங்கிய சபிண்டர்களாகிறார்கள். அது எப்படி யெனில்:—


பிள்ளை, பேரன், கொள்பேரன், இம்மூன்று பெயர்களும் ஆஸ்திதாரனுக்கு பிண்டப்பிரதானம் செய்வதாலும் தகப்பன், பாட்டன், கொள்பாட்டன் இம்மூன்று பெயர்களும் ஆஸ்திதாரனால் பிண்டப்பிரதானம் பெற்றுக் கொள்வதாலும் இவ்வாறு பெயர்களும் ஆஸ்திதாரனுக்கு நெருங்கிய சபிண்டர்கள் ஆகிறார்கள்.

ஆஸ்திதாரன் பிண்டப்பிரதானம் செய்ய வேண்டிய தகப்பன், பாட்டன், கொள்பாட்டன், இவர்களில் மூன்று பெயர்களுக்காவது இருவர்களுக்காவது ஒருவருக்காவது, அண்ணன், தம்பி, சிரியதகப்பன், பெரியதகப்பன், சிரியபாட்டன், பெரியபாட்டன் - இவர்களின் பிள்ளை, பேரன் - இவர்கள்கூட பிண்டப்பிரதானம் செய்வதால் இவர்களெல்லோரும் ஆஸ்திதாரனுக்கு சமீப சபிண்டர்களாகிறார்கள்.

கொள்பேரனுக்குக் கீழ் மூன்று தலைமுறை வரையிலுள்ளவர்களும், கொள்பாட்டனுக்கு மேல் 3 தலைமுறை வரையிலுள்ளவர்களும் அண்ணன் தம்பிகள் பேரனுக்குக் கீழ் 3 தலைமுறை வரையிலுள்ளவர்களும் சிரிய தகப்பன் பெரிய தகப்பனுக்குக் கீழ் 3 தலைமுறை வரையிலுள்ளவர்களும், சிரியபாட்டன், பெரியபாட்டன் பேரனுக்குக்கீ

ழ் 3தலைமுறை வரையிலுள்ளவர்களும் இவர்களுக்கும் ஆஸ்திதாரனுக்கும் லேபம் மட்டும் கொடுக்கவும் வாங்கவும் சம்பந்த மிருப்பதால் இவர்களெல்லோரும் ஆஸ்திதாரனுக்கு விலகின சபிண்டர்கள் அதாவது சகுல்யர்கள் ஆகிறார்கள்.

சபிண்டர்கள்.



ஸ்திரீ ஸபிண்டர்கள்.

280. தகப்பன், பாட்டன், கொள்பாட்டன் இவர்களுக்குக் கொடுக்கப்படும் பிண்டங்களை இவர்கள் பெண்சாதிகள்கூட அடைவதால் ஒவ்வொரு புருஷனுக்கும் தாய், பாட்டனுடைய பெண்சாதி, கொள் பாட்டனுடைய பெண்சாதி இவர்கள்கூட சபிண்டர்களாகிறார்கள். (இ. லா. ரி. 2பம். 420, 440, 445). மேலும் புருஷன் தேகத்தில் பாதி பாகமாக யெண்ணப்படும் காரணத்தைக் கொண்டும் பிள்ளையன்றியி லிறந்து போன புருஷனுக்குக் கர்மத்தை நடத்தும் காரணத்தைக் கொண்டும் பெண்சாதி புருஷனுக்கு சபிண்டையாகிறாள்.

கொள் பாட்டன் தகப்பன், கொள்பாட்டன் பாட்டன், கொள் பாட்டன் கொள்பாட்டன் இவர்களுடைய பெண்சாதிகள் மிதாக்ஷரத்தின்படி விலகின சபிண்டர்களாகிறார்கள்.

பம்பாய் பிரெசிடென்சியில் ஆதாரமாய் அனுஷ்டிக்கப் படுகிற மயூககிரந்தப்படி பெண், தமக்கை, தங்கை, அண்ணன் தம்பிகள் பெண்சாதிகள் இவர்கள்கூட சகோதர சபிண்டர்களாக எண்ணப்படுகிறார்கள்.

மிதாக்ஷர தாயபாக சித்தாந்தங்கள்.


281. சபிண்டர்கள், சமானோதகர்கள், பந்துக்கள் இம்மூன்று வகுப்பிலுள்ள வார்சுகள் தாயபாகத்தின்படி பிண்டப் பிரதானம் முதலிய கர்மங்களைப் பொருத்தும் மிதாக்ஷரத்தின்படி ரக்தசம்பந்தத்தைப் பொருத்தும் இப்படி வெவ்வேறு மார்க்கமாக யேற்படுகிறார்கள். சபிண்டர்கள், சமானோதகர்கள் இந்த இரண்டு வகுப்புகளின் விவறங்களில் இறண்டு சித்தாந்தங்களுக்கும் வித்தியாசமில்லை. பெயர்களில்மட்டும் கொஞ்சம் பேதம் காணப்படுகிறது. மிதாக்ஷரத்தில் 6 தலைமுறைவறைக்குமுள்ள வார்சுகள் சபிண்டர்களென்று சொல்லப்பட்டாலும் அதில் முதல் 3 தலைமுறைக் குள்பட்டவர்கள் சமீப சபிண்டரென்றும் 4, 5, 6 தலைமுறையுள்ளவர்கள் விலகிய சபிண்டர்களென்றும் சொல்லப்படுகிறார்கள். தாயபாகத்தில் முதல் 3 தலைமுறைவறையில் உள்ளவர்களுக்கு மட்டில் சபிண்டர்களென்று பெயர் 4, 5, 6 தலைமுறைவறையி லுள்ளவர்கள் சகுல்யரென்று சொல்லப்படுகிறார்கள். அதற்கு மேல் 7 தலைமுறை வறையிலுள்ளவர்கள் சமானோதகரென்று மிதாக்ஷரத்திலும் தாயபாகத்திலும் சொல்லப்படுகிறார்கள்.

பந்துக்களின் விவரத்தில் மட்டும் 2 சித்தாந்தங்களுக்கும் வித்தியாசம் காணப்படுகிறது. ஆகையால் தாயபாக சித்தாந்தப்படி ஏற்படும் பந்து வரிசையை முதலில் விவரித்து பிறகு மிதாக்ஷரத்தின்படிக்குள்ள பந்துக்களை விவரிக்கிறோம்.

தாயபாகப்பிரகாரம் பந்துக்களின் விவரம்

282. மேற் சொல்லப்பட்ட சபிண்டர்களும், சமானோதகர்களும் சுவாந்தாரனுக்கு சகோத்ரர்களாக இருக்கிறார்கள். ஆனால் வேறு கோத்திரத்திலுள்ளோர்கள்கூட சபிண்டர்களாக இருக்கலாம். இவர்களுடைய சபிண்ட சம்பந்தம் பார்வண சிராத்தத்தால் உண்டாகிறது. அது எப்படியெனில், பார்வண சிராத்தம் செய்யும் பொழுது

தகப்பன்வழி பந்துக்கள்.



தகப்பன், பாட்டன், கொள்பாட்டன் இவர்களுக்கு மட்டுமல்ல தாயின் தகப்பன், தாயின் பாட்டன், தாயின் கொள்பாட்டன் இவர்களுக்குக் கூட பிண்டப்பிரதானம் செய்யப்படுகிறது. ஆகையால் இவர்கள் வேறுகோத்திரத்தாரா யிருந்தாலும் சபிண்டர்களாகிருர்கள். மேலும், அப்படி பிண்டப்பிரதானம் ஒருவனுல் பெற்றுக்கொள்ளத் தகுந்த பெரியவர்களில் எல்லாருமாவது சிலராவது வேறு கோத்திரத்திலுள்ள ஒருவனுல் பிண்டப்பிரதானம் பெற்றுக்கொள்ளும்படியான பெரியவர்களாக யிருந்தால் அவ்விருவர்களும் வெவ்வேறு கோத்திரத்தாராயினும் சபிண்டர்களாகிருர்கள்.


வேறு கோத்திரத்திலுள்ள சபிண்டர்களுக்கு பந்துக்கள் என்று பெயர். இவர்கள் தாயபாகப்படி தகப்பன்வழி பந்துக்களென்றும் தாய்வழி பந்துக்களென்றும் இரண்டு வகுப்பாவார்கள். தகப்பன்வழி பந்துக்களின் வம்சாவளி 180-வது பக்கத்தில் வரையப்பட் டிருக்கிறது. அதில் * நட்சத்திர அடையாளம் போடப்பட் டிருக்கிறவர்க ளெல்லோரும் ஆஸ்திதாரனுக்கு வேறுகோத்திர சபிண்டர்களாய் தகப்பன்வழி பந்துக்களாகிருர்கள். ஏனென்ருல் ஆஸ்திதாரனுவது ஆஸ்திதாரன் பித்ருவர்க்கத்தில் சேர்ந்த தகப்பன், பாட்டன், கொள்பாட்டன்களில் மூவர்களுமாவது, இருவர்களாவது ஒருவராவது நட்சத்திர அடையாளம் போடப்பட்டவர்களுடைய தாய்வழியில் சேர்ந்த பெரியவர்களாய் அவர்கள் கொடுக்கும் பிண்டத்தைப் பெற்றுக் கொள்ளுகிருர்கள்.

தகப்பன்வழி பந்துக்கள்

தாய்வழி பந்துக்களின் வம்சாவளி 182 - வது பக்கத்தில் வரையப்பட்டிருக்கிறது. அதில் * ஒரு நட்சத்திர அடையாள முள்ளவர்களும் * * இரண்டு நட்சத்திர அடையாள முள்ளவர்களும் இவர்கள் எல்லோரும் ஆஸ்திதாரனுக்கு வேறுகோத்திர சபிண்டர்களாகி தாய்வழி பந்துக்களாகிருர்கள். அது எப்படி யெனில்—* * இரண்டு நட்சத்திர அடையாள முள்ளவர்கள் ஆஸ்திதாரனுடைய தாய்வழியிற்சேர்ந்த பெரியவர்களாதலால் அவனிடத்திலேயே பிண்டம் பெற்றுக் கொள்ளுகிருர்கள். மேலும் ஆஸ்திதாரனுல் பிண்டம் பெற்றுக்கொள்ளத் தக்க அந்த * * இரண்டு நட்சத்திர அடையாளமுள்ள அவன் தாய்வழிப் பெரியோர்களில் மூவர்களுமாவது, இருவர்களாவது ஒருவராவது, * ஒரு நட்சத்திர அடையாளமுள்ளவருடைய தகப்பன் வழியிலாவது அல்லது தாய்வழியிலாவது சேர்ந்த பெரியவர்களாகி இவர்களால் கொடுக்கப்படும் பிண்டத்தைப் பெற்றுக்கொள்ளுகிருர்கள்.

தாய்வழி பந்துக்கள்.

தாய்வழி பந்துக்கள்.



☞ தகப்பன்வழி பந்துக்களுடையவும் தாய்வழி பந்துக்களுடையவும் வம்சாவளிகளில் கண்டிருக்கப்பட்ட பந்துக்களெல்லோரும் தாயபாக, தாயக்கிரம சங்கிரக, கிரந்தங்களில் சொல்லப்படாமல் சிலர் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அப்படி யிருந்தாலும் சொல்லப்பட்டவர்கள் உதாஹரணத்திற்காகச் சொல்லப்பட் டிருக்கிறார்களென்றும் மைத்தவர்களும் வேறுகோத்திர சபிண்டர்களா யிருக்கும்பொழுது பந்து வர்க்கத்தில் சேருவார்களென்றும் தீர்ப்புகள் செய்யப்பட் டிருக்கின்றன. (12 மூ. இ. அ. 448; 2 க ஐ. 28; 5 க. ஐ. 15).

283. மிதாக்ஷரத்தில் மூன்று வகுப்பு பந்துக்கள் சொல்லப்படுகிருர்கள், (1.) ஆத்ம பந்துக்கள், (2.) தாய்வழி பந்துக்கள், (3.) தகப்பன்வழி பந்துக்கள்.

மிதாக்ஷர பிரகாரம் பந்துக்களின் விவரம்.

தன்னுடைய அத்தை பிள்ளைகள், தன்னுடைய சிரியதாயார் பெரியதாயார் பிள்ளைகள், தன் மாமன் பிள்ளைகள் இவர்கள் ஆத்மபந்துக்கள். தகப்பனுடைய அத்தை பிள்ளைகள், தகப்பனுடைய சிரியதாயார் பெரியதாயார் பிள்ளைகள், தகப்பனுடைய மாமன் பிள்ளைகள், இவர்கள் தகப்பன்வழி பந்துக்கள். தாயின் அத்தை பிள்ளைகள், தாயின் சிரியதாயார் பெரியதாயார் பிள்ளைகள், தாயின் மாமன் பிள்ளைகள், இவர்கள் தாய்வழி பந்துக்கள்.

மேற்சொல்லப்பட்ட மூன்று வகுப்பு பந்துக்களில் ஆத்ம பந்துக்களும், தகப்பனுடைய அத்தை பிள்ளைகளும், தாயினுடைய அத்தை பிள்ளைகளும் இவர்கள் மட்டும் தாயபாக சித்தாந்தப்படிக்குக் கூட பந்துக்க ளாகிருர்கள். மைத்தவர்கள் அதாவது தகப்பனுடையவும் தாயுடையவும் சிரியதாயார் பெரியதாயார் பிள்ளைகளும் மாமன் பிள்ளைகளும், தாயபாகப்படி பந்துக்களல்ல. ஏனெனில்—இவர்கள் ஆஸ்திதாரனுக்காவது அல்லது அவன் தகப்பன் தாய்வழிப் பெரியோர்களுக்காவது பிண்டப்பிரதானம் செய்யும் பாத்தியம் கொஞ்சங்கூட உடையவர்களல்ல.

மிதாக்ஷரத்தில் மேற்சொல்லப்பட்ட மூன்று வகுப்பு பந்துக்களும் உதாஹரணத்துக்காக சொல்லப்பட் டிருக்கிறதென்றும் அதில் சொல்லப்படாவிட்டாலும் தங்கை தமக்கை பிள்ளை முதலியவர்கள் கூட சிலர் மிதாக்ஷர சித்தாந்தப்படிக்கு பந்துக்கள் ஆவார்களென்று பிரிவிகவுன்சிலர்களாலும் ஐகோர்ட்டார்களாலும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (12 மூ. இ. அ. 448; 2 க. ஐ. 28; 5 க. ஐ. 15; 6 ம. ஐ. 278).

பம்பாய் பிரசிடென்சியில் ஆதாரமாக அனுஷ்டானத்தி லிருந்து வருகிற மயூககிரந்தத்தின்படி தமக்கை தங்கைகள், தமக்கை தங்கைகள்பெண்கள், அண்ணன் தம்பிகள் பெண்கள், பெண்ணுடைய பெண்கள், இவர்கள் முதலிய ஸ்திரீவர்க்கம் எல்லாம் பந்துக்களாக ஒப்புக்கொள்ளப்படுகிருர்கள்.

(3). வார்சுகளின் வரிசை.

மிதாக்ஷர தாயபாக சித்தாந்தங்களுக்கு வித்தியாசம்.

284. வார்சுகளை நிஷ்கர்ஷிப்பதில் மிதாக்ஷர தாயபாக சித்தாந்தங்கள் வெவ்வேறு மார்க்கங்களை யனுசரிப்பதாகச் சொல்லி யிருக்கிறோம். மிதாக்ஷரத்தில் ரக்தசம்பந்தத்தையே முக்கியமாக நினைத்து அதுவிஷயத்தில் ஏற்றத்தாழ்த்திகளின்படி வார்சுகளின் கிரமம் ஏற்படுத்தப்படுகிறது. தாயபாகத்தில் இறந்தவனுக்குப் பிண்டப்பிரதானம் செய்யும்படியான யோக்கியதையையே முக்கியமா யெண்ணி அதின் விஷயத்திலுள்ள உயர்வைப் பாராட்டி வார்சுகளின் வரிசை யேர்ப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதினாலேயே வார்சு வரிசைகளில் மிதாக்ஷர தாயபாக சித்தாந்தங்களுக்கு வித்தியாசம் காணப்படுகிறது.

தாயபாகப்படி பிண்டப்பிரதானம் பெற்றுக் கொள்ளுகிறவனைக் காட்டிலும் கொடுக்கிறவன் சமீபவார்சாக எண்ணப்படுகிறான். மேலும் உதகதானத்தைக் காட்டிலும் லேபதானமும், லேபதானத்தைக் காட்டிலும் பிண்டதானத்தை உயர்ந்ததாக எண்ணப்படுவதால் சமானோதகர்களைக் காட்டிலும் சகுல்யர்களும் சகுல்யர்களைக் காட்டிலும் சபிண்டர்களும் நெருங்கின வார்சுகளாக எண்ணப்படுகிறார்கள். மேலும் தகப்பன்வழியி லொருவனுக்காவது அதிகமாயாவது பிண்டப்பிரதானம் செய்கிறவர்களைக் காட்டிலும் தாய்தகப்ப னிருவர் வழிகளுமுள்ளவர்க்கு பிண்டப்பிரதானம் செய்கிறவன் அவர்கள் ஒருவழியிலுள்ளவர்களுக்கு மட்டில் பிண்டப்பிரதானம் செய்கிறவனைக் காட்டிலும் உயர்ந்தவனாக பாவிக்கப்படுகிறான். இந்த நியாயங்களை யனுசரித்து தாயபாகத்தில் வார்சுகளின் வரிசை யேற்படுத்தப்பட்டிருப்பதால் வேறு கோத்திரக் காரர்களாயினும் பிண்டம் கொடுக்க யோக்கியதை யுடையவர்களாதலால் பந்து வரிசையிலுள்ள எல்லாரும் லேபபிரதானம் செய்கிற சகுல்யரைக் காட்டிலும் உதகதானம் செய்கிற சமானோதகரைக் காட்டிலும் முந்தியே வார்சுகளாகிறார்கள். மிதாக்ஷரத்தில் பிண்டப் பிரதானம் செய்வதைப் பொருத் திராததால் பந்துவரிசையிலுள்ளோர்கள் வேறு கோத்திரத்தார்க ளென்கிற காரணத்தால் ஒரு கோத்திரத்தாராகிய சமானோதகர்கள், சகுல்யர்கள் இவர்களுக்குப் பிற்பாடு வார்சுகளாகிறார்கள்.

எல்லா மதங்களின்படிக்கும் முதலில் ஆண்சந்ததிகள் பிறகு விதவை, பெண், தௌஹித்திரன் (பெண்ணினுடைய பிள்ளை), தாய்

தகப்பன்கள், அண்ணன் தம்பிகள், அண்ணன் தம்பிகள் பிள்ளைகள், இப்படிக் கொஞ்சம் வரையில் வார்சுகளின் வரிசை ஒன்றாகவேயிருந்து பிறகு வித்தியாசப்படுகிறது. ஆகையால், பொதுவாக ஒருவரிசையிலிருக்கும் வார்சுகளைப்பற்றிய விஷயங்களை முதலில் விளக்கி பிறகு வித்தியாசப்படுகிற அம்சங்களைத் தெரிவிக்கிறோம். அதன் பிறகு அந்தந்த சம்பிரதாயப்படி ஏற்படுகிற வார்சுகளின் வரிசைகளை எளிதில் காட்டும்படியான பட்டிகள் எழுதுகிறோம்.

285. பிள்ளை, பேறன், கொள்பேறன்-இறந்துபோனவன் சொத்துக்கு எல்லாருக்கும் முந்தி பிள்ளை, பேறன், கொள்பேறன்கள் வார்சுகளாயிருக்கிறார்கள். தாயபாக சம்பிரதாயப்படி சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்கள் தனித்தனி பாகங்களுக்கு பாத்திய முடையவர்களாகவே எண்ணப்படுவதால் அவர்களுக்கு வார்சுபாத்திய முண்டேயன்றி மிதாக்ஷரத்தில்போல பொதுபாத்தியம் கிடையாது. மிதாக்ஷரப்படி சேர்ந்த குடும்பத்தில் பொதுபாத்தியம் செல்லுமே யன்றியில் வார்சு பாத்தியம் செல்லமாட்டாது. அதாவது ஒரு பாகஸ்தன் இறந்தால் மைத்தவர்கள் பாகம் அதிகமாகும்.

பிள்ளை, பேறன், கொள் பேறன்.

தகப்பனும் பிள்ளைகளும் பிரித்துக்கொண்ட பிறகு வேறு சில பிள்ளைகள் பிறந்தால் இவர்கள் மிதாக்ஷரத்தின்படி தகப்பனோடுகூட சேர்ந்த பாகஸ்தர்களாகிறார்கள். ஆகையால் அவனுடைய முழு சொத்தும் இவர்களுக்கே சேறும். அப்படி சேர்ந்திருக்கும் பிள்ளை, பேறன், கொள்பேறன ஒருவரும் இல்லாவிட்டால் மிதாக்ஷர சம்பிரதாயப்படி தகப்பனுடைய சொத்துக்கு பிறிந்தபிள்ளை, பேறன், கொள்பேறன்கள், வார்சு ஆவார்கள். பிறிந்தவர்களானாலும் சறி, பிரியாதவர்களானாலும் சறி, பிள்ளை, பேறன், கொள்பேறன் இருக்கிற வரையில் சுவாந்தாரன் பெண்சாதிக்கு ஜீவனும்ச பாத்தியம் மட்டும் உண்டாகுமே யொழிய பாக்கி பாத்திய முண்டாக மாட்டாது. உதாரணம்—

ஒருவன் தன் பிள்ளைகளோடு பாகம் செய்துகொண்டு விதவையை மாத்திரம் வைத்துவிட்டு இறந்துபோனான். அவனுடைய சொத்து அந்தப்பிறிந்த குமாறர்களுக்குச் சேருமேயொழிய விதவைக்குச் சேரமாட்டாது. (இ. லா. ரி. 2 ம. 182; இ. லா. ரி. 3 பம். 54).

286. வார்சு பாத்திய விஷயத்தில் பிள்ளை, பேறன், கொள்பேறன்கள் இம்மூன்று வறிசையி லிருப்பவர்கள் ஒரே விதமான பாத்தியமுடையவ ராதலால ஒரேவரிசையி லிருப்பவர்களாக எண்ணப்ப

ஒரேவிதமான வார்சு பாத்தியம்.

டுகிறார்கள். கொள்பேறனுடைய மகனுக்கு வார்சு பாத்தியம் கிடையாது. மேலும் மேற்சொல்லப்பட்ட பிள்ளை, பேறன், கொள்பேறன் இவர்களில் தகப்பனுயிருட னிருந்தால பிள்ளைகளுக்கு வார்சுபாத்தியம் கிடையாது. ஒரு பிள்ளை யிறந்தால் அவன் பெற்ற பேறனும் பேறனுமிறந்தால் அவன் பெற்ற கொள்பேறனும் சுவாந்தாரனுடைய ஜீவித்திருக்கும் பிள்ளைகளோடு சறியான பாத்தியமுள்ளவனுகிறான். உதாரணங்கள்—

(1.) ஒரு சுவாந்தாரன் இறந்துபோகையில் "ஏ" "பி" என்கிற பிள்ளைகளும், "ஏ" என்பவனால் "ஸீ, டி" என்கிற பேறன்களும் 'பி' என்கிறவனால் "ஈ" என்கிற பேறனும் இருந்தார்கள். சொத்துக்கு "ஏ, பீ" என்கிற பிள்ளைகள் மட்டும் வார்சு ஆகிறார்கள். "ஸீ, டீ, ஈ" என்பவர்கள் அவர்கள் தகப்பனுடைய பாகத்தில் பாக முடையவர்கள்.

(2.) ஒரு சுவாந்தாரன் இறந்துபோகையில் "ஏ" என்ற பிள்ளையும் அதற்கு முந்தி யிறந்துபோன வேறொரு பிள்ளையால் "பீ, ஸீ" என்கிற பேறன்களும் மேலும் அதற்கு முந்தி வேறொரு பிள்ளையின் பேறன் இறந்துபோய் அவன் சந்ததிகளில் பாக்கி யிருந்த "டீ" என்கிற கொள்பேறனும் இருந்தார்கள். சொத்துக்கு "ஏ" என்கிற பிள்ளையும், "பி,ஸீ" என்கிற பேறன்களும் "ஈ" என்கிற கொள்பேறனும் சமானமான வார்சுகளாகிறார்கள். ஆகையால் முழுசொத்திலொருபாகம் "ஏ" என்னும் பிள்ளைக்கும் ஒரு பாகம் "பீ, ஸீ" என்கிற பேறன்களுக்கும் ஒரு பாகம் "ஈ" என்கிற கொள்பேறனுக்கும் சேரும் (136, 137 பாறாக்களை பார்க்க).

(3.) இறந்து போனவனுடைய சொத்து அவனுடைய பிள்ளைகளெல்லோருக்கும் சமபாகமாகச் சேருமே யல்லாமல் அவனுடைய பெண்சாதிகளைப் பொருத்த பாகப்படி சேராது. (256 பாறா).

287. பிறிக்கத்தகாத ஜமீன் அல்லது ஜாகீர் விஷயத்தில் இறந்த ஜமீன்தார் அல்லது ஜாகீர்தாருடைய மூத்தமகன் மட்டும் வார்சுதாரனுகி மற்றவர்கள் ஜீவனும்சத்திற்கு மட்டும் பாத்தியஸ்தர்களாவார்கள். (இ. லா. ரி. 4 ம. 250). ஜமீன்தாருக்கு அனேகம் பெண்சாதிகளால் பிள்ளைகள் உண்டா யிருந்தால் எந்தப் பெண்சாதி யாலானாலும் சரி முதலில் பிறந்தவனே மூத்தபிள்ளையாக யெண்ணப்படுவானே யொழிய முதலில் விவாகம் செய்துகொ

பிறிக்கத்தகாத ஜமீனில் வார்சு பாத்தியம்.

ள்ளப்பட்ட பெண்சாதிக்குப் பிறந்த பிள்ளைகளில் மூத்தவன் மூத்த பிள்ளை யாகமாட்டான். (7 பம். ஸ. தீ. 126; 5 பம். ஐ 161; 14 மூ. இ. அ. 570; இ. லா. ரி. 2 ம. 286) மேலும் ஜேஷ்ட புத்திரனுடைய சந்ததியுள்ளவரையில் மைத்த பிள்ளைகளுக்கு வார்சு பாத்திய முண்டாகாது. (6 ம. ஐ. 93; இ. லா. ரி. 4 ம. 250). அதாவது ஜேஷ்ட புத்திரனுக்குப் பிறகு அவனுடைய மூத்தபிள்ளையும் இவனுக்குப் பிறகு இவனுடைய பிள்ளைகளில் மூத்தவனும் ராஜ்யபாலகர்க ளாவார்கள். ஒரு ஜமீன்தாருக்கு 3, 4 பிள்ளைகளிருந்து அவர்களில் மூத்தவனிறந்துபோனால் இந்த இறந்துபோன மூத்தவனுடைய பிள்ளையே வார்சு ஆவானேயொழிய ஜமீன்தாரருடைய மைத்த குமாரர்களில் பெரியவன் பாத்தியஸ்த னாகமாட்டான். குடும்பத்தில் புருஷர்களிருக்கையில் ஸ்திரீகளுக்கு வார்சு பாத்தியமுண்டாகாது. மேலும் பிறிக்கத்தகாத ஜமீனின் அரசன் இறந்தால் அவனுக்கு எவர் நெருங்கின வார்சாக யிருக்கிறார்களோ அவர்களில் அதிக வயதானவன் ராஜ்யத்திற்கு பாத்தியஸ்த னாவான். (12 மூ. இ. அ. 523; 540; 3 க. ஐ. 13).

288. பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய ஜாதிகளில் தாஸீபுத்திரர்களுக்கு (வைப்பாட்டி மகன்களுக்கு) வார்சு பாத்தியம் கிடையாது. (7 மூ. இ. அ. 18; 2 ம. ஐ. 369; 13 மூ. இ. அ. 479). ஆனால், சூத்திர ஜாதியார்களில் வைப்பாட்டி மகன்களுக்கு கொஞ்சம் வரையில் வார்சுபாத்திய முண்டென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கின்றது. தீர்ப்புகளும் அப்படியே யிருக்கின்றன. (13 மூ. இ. அ. 159).

தாஸீ புத்திரன்.

தர்ம சாஸ்திரங்களில் காணப்படுகிற தாசி புத்திரன் என்கிற சொல்லுக்கு வெவ்வேறு அர்த்தங்கள் செய்யப்பட் டிருக்கின்றன. விலைக்கு வாங்கப்பட்டு விலைக்கு ஊழியமாக வைத்துக் கொள்ளப்பட்ட ஸ்திரீயுடனாவது அவள் சந்ததியுடனாவது சேர்ந்து அதினால் பிறந்த பிள்ளையே தாசி புத்திரன் ஆவானொழிய சாதாரணமான தேவடியாளிடத்திற் பிறந்த பிள்ளை தாசிபுத்திர னாகமாட்டானென்று கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 1 க. 1; இ. லா. ரி. 19 க. 91). இந்த அர்த்தத்தின்படி இக்காலத்தில் தாசிபுத்திரர்களே யிருக்கமுடியாது. ஏனென்றால்—1843 ஸ் 5-வது நெ. சட்டப்படி ஊழியர்களை விற்பதும் வாங்குவதும் சர்க்காரால் நிஷேதிக்கப்பட்டுக் குற்றமாக ஏற்படுத்தப்பட் டிருக்கிறது.

பம்பாய், மதிராஸ், அலஹாபாத் ஐகோர்ட்டார்கள், "தாசீ புத்திரன்" என்கிற சொல்லுக்கு "வைப்பாட்டி மகனென்று" அர்த்தம் செய்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 1 பம். 110; இ. லா. ரி. 4 பம். 37, 44; இ. லா. ரி. 7 ம. 407; இ. லா. ரி. 12 ம. 86; இ. லா. ரி. 2 அ. 134; இ. லா. ரி. 6 அ. 329). மேலும் மதிராஸ் பிரெசிடென்சியில் தாசீ என்கிற சொல் தேவடியாளெல்லோருக்கும் வழங்கிவருகிறதென்று அனேக கேசுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1849 ஸூ ம. தீ. 50; 1 ம. ஐ. 478; 13 மூ. இ. அ. 41; 2 ம. ஐ. 293; 12 மூ. இ. அ. 303; 4 ம. ஐ. 204). ஆகையால், பம்பாய், மதராஸ், அலஹாபாத் பிரசிடென்சிகளில் சூத்திரஜாதிகளில் எவராயினும் தேவடியாள் முதலியவர்களை வைத்துக்கொண்டால் அவளுக்குப் பிறந்த பிள்ளைகள் வார்சு பாத்திய முள்ளவர்களென்று அறியவேண்டியது.

வைப்பாட்டியாக வைத்துக்கொள்ளாமல் அப்போதைக்கப்போது விபசாரம் செய்த காரணத்தால் மட்டும் அப்படி விபசாரத்தினாலுண்டான பிள்ளைகள் தாசீபுத்திரர்களாக எண்ணப்பட மாட்டார்கள். மேலும் உறவினால் புணரத்தகாத ஸ்திரீகளை வைப்பாக வைத்துக் கொண்டால் அந்த ஸ்திரீகளாலுண்டாகும் பிள்ளைகள் தாசீபுத்திரர்களாக யெண்ணப்பட மாட்டார்கள். ஆகையால், அப்படிப்பட்ட பிள்ளைகளுக்குக் கொஞ்சமேனும் வார்சுபாத்தியம் கிடையாது. (4 ம. ஐ. 204, 315; 8 ம. ஐ. 134; இ. லா. ரி. 1 பம். 97, 113; இ. லா. ரி. 8 ம. 325; இ. லா. ரி. 8 அ. 387).

சூத்திரர்களில் தாசீபுத்திர வார்சு பாத்தியம்.

289. வைப்பாட்டி பிள்ளைக்கு சூத்திர சாதியார்களில் மட்டும் வார்சுபாத்திய முண்டு. அவர்களில்கூட தகப்பனுடைய சொத்து விஷயத்தைப் பற்றி மாத்திரம் அவனுக்கு வார்சுபாத்திய முண்டே ஒழிய அவனுடைய சிரியதகப்பன் பெரியதகப்பன் விஷயமாய் வார்சு பாத்தியமில்லை. (இ. லா. ரி. 8 ம. 557; இ. லா. ரி. 7 ம. 407; இ. லா. ரி. 12 ம. 402).

சூத்திரர்களில் வைப்பாட்டி பிள்ளைக்குள்ள வார்சுபாத்திய விஷயமாய் தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறதென்னவென்றால்:—"ஔரச புத்திரர்களுடைய பாகத்தில் பாதி பாகத்திற்கு வைப்பாட்டி பிள்ளை பாத்தியஸ்தனாவான். ஆஸ்திதாரனுக்கு பிள்ளையாவது பெண்ணாவது பெண்ணுடைய பிள்ளையாவது இல்லாவிட்டால் முழுசொத்திற்கும் வைப்பாட்டிபிள்ளை பாத்தியஸ்தனாவான்."

இந்த தர்ம சாஸ்திர வாக்கியத்தை வைத்துக்கொண்டு இப்பொழுது தீர்மானங்களால் ஸ்திரப்பட்டிருப்பது என்னவென்றால்:—ஆஸ்திதாரனுக்கு ஒரு ஔரச புத்திரனும் ஒரு வைப்பாட்டி பிள்ளையுமிருந்தால் இந்த வைப்பாட்டி பிள்ளையே ஔரச பிள்ளையாயிருந்தால் பாதிபாகத்திற்கு பாத்தியஸ்தனுவானதலால் அதில் பாதிபாகம் அதாவது முழுசொத்தில் நான்கிலொருபாகம் அவனுக்குச் சேரும். பாக்கி மூன்று பாகங்களும் ஔரச புத்திரனுக்குச் சேரும். ஔரச புத்திரனுவது பேரனுவது கொள்பேரனுவது இல்லாமல் ஆஸ்திதாரனுடைய பெண்சாதி, பெண் அல்லது பெண்ணுடைய பிள்ளை யிருந்தால் ஔரசபுத்திரன் பேரன் கொள்பேரன் இருக்கும் பொழுது இவர்களில் ஒருவரும் பாத்தியஸ்தர்களாக மாட்டார்களாயினும் வைப்பாட்டி மகன்மட்டு மிருந்தால் பாத்தியஸ்தர்களாவார்கள். இது யெப்படி யெனில்—வைப்பாட்டி புத்திரனே ஔரச புத்திரனுயிருந்தால் எல்லா சொத்திற்கும் அவனே பாத்தியஸ்தனுதலால் அதில் பாதிமட்டும் அவனுக்குச் சேர்ந்து பாக்கிப்பாதி ஆஸ்திதாரனுடைய பெண்சாதிக்கு அல்லது பெண்ணுக்கு அல்லது பெண்ணினுடைய பிள்ளைக்குச் சேரும். (இ. லா. ரி. 8 ம. 561; இ. லா. ரி. 14 பம். 282).

வைப்பாட்டி மகனுடைய பாத்திய விஷயமாக மேற்சொல்லப்பட்ட தர்மசாஸ்திர வசனத்தில் ஆஸ்திதாரனுடைய பிள்ளை, பெண், பெண்ணினுடைய பிள்ளை இவர்கள் மட்டும் சொல்லப்பட்டு ஆஸ்திதாரனுடைய பெண்சாதியின் பேச்சு தெளிவாக சொல்லப்பட்டிருக்கவில்லை. இக்காரணத்தால் வைப்பாட்டி மகனிருக்கும் பொழுது ஆஸ்திதாரன் பெண்சாதிக்கு ஜீவனும்ச பாத்தியம் மட்டுந்தானுண்டென்று அர்த்தம் செய்து அந்தப்படி இரண்டுகேசில் பம்பாய் ஐகோர்ட்டார் தீர்மானம் செய்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 1 பம். 97, 104; இ. லா. ரி. 4 பம். 37, 52). ஆனல் இதுபோல மறுபடி ஒருகேசில் ஆஸ்திதாரனுடைய தௌஹித்திரன் வரையில் ஒரு வார்சுகளுமில்லாவிட்டாலும் ஔரச புத்திரனுக்குச் சேரத்தக்க பாகத்தில் பாதிமட்டும் வைப்பாட்டி பிள்ளைக்குச் சேர்ந்து பாக்கிப்பாதி அந்த மைத்த வார்சுகளுக்குச் சேருமென்றே அர்த்தம்செய்து பம்பாய் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 14 பம். 282).

பிரிக்கத்தகாத ஜமீன் விஷயத்தில் ஜமீன்தாருடைய வைப்பாட்டி மகனுக்கு முந்தியே அவன்விதவை வார்சாவாள் என்று மதிராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 10 ம. 334).

290. வைப்பாட்டி மகனுக்கு ஔரச புத்திரனோடுகூட சமஷ்டிபாத்திய முண்டான பிறகு ஔரச புத்திரன் ஆண்சந்ததியன்றியி லிறந்தால் எல்லா சொத்தும் வைப்பாட்டி மகனுக்குச் சேருமேயன்றி முதல் ஆஸ்திதாரனுடைய பெண்சாதி, பெண் முதலியவர்களுக்குக் கொஞ்சமேனும் சேராது.

சூத்திரர்களில் வைப்பாட்டி மகனின் சமஷ்டி பாத்தியம்.

பம்பாய் தேசத்தில் ஒரு சூத்திரன் இறந்துபோகையில் அவனுக்கு ஔரச புத்திரன் வைப்பாட்டி மகன், இரண்டு பெண்சாதிகள், பெண் இவ்வைந்து பெயர்களிருந்தார்கள். முழுசொத்துக்கும் ஔரச புத்திரனும் வைப்பாட்டி மகனும் ஜாயிண்டாய் பாத்தியஸ்தர்களாய் பொது குடும்பம் ஏற்பட்டதால் பெண்சாதிகளுக்கு ஜீவனும்சம் கொடுக்கும் பளுவும் பெண்ணுக்குக் கலியாண முதலியவை செய்யும் பளுவும் சொத்தைப் பொருத்திருந்தது. பிறகு ஔரச புத்திரன் ஆண் சந்ததியன்றியி லிறந்தான். அப்பொழுது எல்லா சொத்தும் வைப்பாட்டிமகனுக்குச் சேர்ந்து முன்போலவே பெண்சாதிகளுடையவும் பெண்ணுடையவும் ஜீவனும்சம் முதலிய பளுவை வகிக்குமென்று பம்பாய் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 4 பம். 37, 42; இ. லா. ரி. 11 க. 702). தகப்பன் உயிருட னிருக்கையிலேயே ஔரச புத்திரன் சந்ததியன்றியில் இறந்தால் வைப்பாட்டி பிள்ளைக்கு முழுசொத்தில் பாதிபாகம் மட்டும் சேர்ந்து பாக்கிப்பாதி ஆஸ்திதாரனுடைய பெண்சாதிக்குச் சேறும்.

291. <u>பெண்சாதி</u>—பிள்ளை, பேறன், கொள் பேறன் ஒருவருமில்லாமலிருந்தால் இறந்தவனுடைய பெண்சாதி வார்சு ஆகிறாள். (இ. லா. ரி. 2 ம. 182; இ. லா. ரி. 3 பம். 54; 2 ஸ. 49). பெண்சாதி யிடத்தில் பிள்ளையாக புருஷன் பிறக்கிறானென்கிற பலத்தால் புருஷன் இறந்தாலும் அவன் பெண்சாதி யிருக்கையில் புருஷனுடைய தேகம் பாதி யிருக்கிறதென்றே தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இக்காறணத்தாலும் பிள்ளை யன்றியிலிறந்த புருஷனுக்கு கர்மம் நடத்துகிற காறணத்தாலும் புருஷனுடைய சபிண்டையாக யெண்ணப்பட்டு பெண்சாதி ஆண் சந்ததிக்குப் பிறகு வார்சு ஆக ஏற்படுகிறாள். (9 மூ. இ. அ. 610; இ. லா. ரி. 1 ம. 28).

பெண்சாதி.

மிதாக்ஷரத்தின்படி சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தன் ஆண்சந்ததி யன்றியிலிறந்தால் அவன் பெண்சாதிக்கு ஜீவனும்ச பாத்தியம்

மட்டு முண்டாகுமேயன்றி அவளுக்கு வார்சு பாத்திய முண்டாகாது. புருஷனுடைய ஸ்வயார்ஜித சொத்திற்கு மட்டும் அவள் வார்சாவாள். (9 மு. இ. அ. 539; இ. லா. ரி. 1 ம. 312; இ. லா. ரி. 4 க. 190; 1 மூ. இ. அ. 490). தாயபாகப்படி சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்களுக்குத் தனி பாத்தியங்களுண்டாயிருப்பதாக யெண்ணப்படுவதால் அவர்களில் ஒருவன் ஆண்சந்ததி யன்றியிலிறந்து போனால் அவன் பாகத்திற்கு அவன் பெண்சாதி வார்சு ஆகிறாள்.

அனேக பெண்சாதிகள்.

292. சுவாந்தாரனுக்கு, 2, 3 பாரியைகளிருக்கும் பொழுது எல்லாசொத்து மவர்களுக்கு சேர்ந்தாற்போல் சேரும். பிறிக்கக்கூடாத ஜமீன் விஷயத்தில் மூத்த பெண்சாதி ராணியாக ஏற்பட்டு மைத்தப் பெண்சாதிகள் ஜீவனம்சத்திற்கு மட்டும் பாத்திய முள்ளவர்க ளாவார்கள். (1 ம. தீ. 453; 2 ம. தீ. 40). பிறிக்கத்தக்க சொத்து விஷயத்தில் எல்லா பெண்சாதிகளும் சறியான பாத்திய முள்ளவர்களா யிருப்பதால், அவர்கள் சேர்ந்திருப்பின், மூத்த பெண்சாதி எல்லா சொத்துக்கும் மானேஜராவாள். அவர்களில் ஒருவர்க் கொருவர் சறிப்படாமல் போனால் கரூர் மூலமாகவாவது தீர்ப்பு மூலமாகவாவது சொத்துக்களைப் பிறித்துக்கொண்டு அவர்கள் தங்கள் தங்கள் பாகங்களைத் தனிமையில் அனுபவிக்கலாம். (3 ம. ஐ. 51) ஆனால் அப்படி பிறித்துக்கொண்ட பிறகு அவர்களி லொருத்தி இறந்தால் அவளுடைய பாகம் மைத்த பெண்சாதிகளுக்கே சேருமன்றி அனந்தர் வார்சுகளுக்குச் சேரமாட்டாது. சுவான்தாரன் பெண்சாதிகள் எல்லோரு மிறந்தபிறகுதான் அந்த சொத்து அனந்தர் வார்சுகளுக்குச் சேருமேயன்றி ஒரு பெண்சாதியாவது உயிருட னிருக்குமளவில் சேரமாட்டாது. (1 பம். ஐ. 66; 3 ம. ஐ. 268, 424; 11 மூ. இ. அ. 487; இ. லா. ரி. 1 ம. 290; இ. லா. ரி. 6 பம். 85; இ. லா. ரி. 7 அ. 114).

அசம்பூர்ணமான பாத்தியம்.

293. பெண்சாதி முதலிய பெண் வார்சுகளுக்கு வார்சு பாத்தியத்தால் ஆண்களுடைய சொத்து கிடைக்கும் பொழுது, அதிலவர்களுக்கு சகல சுதந்திரமு முண்டாகாமல் உயிருட னிருக்கையி லனுபவிக்கவும் அவசியமான காரியங்களுக்காக சிலவு செய்யவும் மட்டும் பாத்திய முண்டாகிறது. ஆகையால் மேற் சொல்லியபடி பெண்சாதிகள் எல்லாரும் சொத்தைப் பிறித்துக்கொண்டு அனுபவித்தாலும் அவர்களி லெவராவது தன்னுடைய பாகத்தைப் பரூதீனம் செ

ய்ய அதிகாற முள்ளவர்களல்ல. ஒருசமயம் பறுதீனம் செய்தாலும் அந்தப்பறுதீனம் அவளுடைய உயிரிருக்கும் வறையில் சொல்லுமே யன்றி அவளிறந்தபிறகு அவளுடைய பாக முழுவதும் சக்களத்திகளுக்குச் சேரும். சொத்தைப் பிறித்துக்கொள்ளா விட்டாலும் சுவாந்தாரன் பெண்சாதிகளி லெவளுவது தன்பாகத்தை உயிருள்ளவறையில் பறுதீனம் செய்யலாம். மேலும் இப்படி பறுதீனம் பெற்றவன் மைத்த பெண்சாதிகள் பேறில் பாகத்திற்காகப் பிறுது செய்யலாம். அந்தப் பறுதீனம் எந்தப் பெண்சாதியால் செய்யப்படுகிறதோ அவளாயிசுக்குப் பிறகு செல்லமாட்டாது. (இ. லா. ரி. 9 க. 580; இ. லா. ரி. 11 ம. 304).

294. புருஷன் ஜீவித்திருக்கையில் விபசாரியாக வசித்துவந்த பெண்சாதிக்கு வார்சு பாத்தியத்தால் புருஷன் சொத்து கிடைக்கமாட்டாது. (13 க. ஐ. 1).

விபசார தோஷம்.

விபசாரியா யிருப்பதால் புருஷனால் தள்ளிவைக்கப்பட்ட பெண்சாதியின் விஷயத்தில் மட்டும் இந்த விதி உபயோகப்படுமே ஒழிய புருஷன் சம்மதித்து வைத்துவந்த பாரியைக்கு இது செல்லமாட்டாதென்று சொல்லத் தக்கதா யிருக்கிறது.

புருஷ னிறந்தபிறகு பெண்சாதி விபசாரியா யிருந்தால் அவனுடைய ஆத்மாவின் நன்மைக்கு வேண்டிய வைதீககர்மங்களை செய்ய அவள் யோக்கியதை அற்றவளா யிருப்பதால் வார்சு பாத்தியத்தால் அவளுக்குக் கிடைத்திருந்த புருஷனுடைய சொத்து அவளை விட்டுப் போய்விடுமென்று முன்காலத்தில் சிலர் அபிப்பிராயப் பட்டார்கள். ஆனால் அதின் பிரகு இவ்விஷயம் செவ்வையாக வாதிக்கப்பட்டு புருஷனிறந்த பிரகு அவன் பெண்சாதி விபசாரியா யிருந்தாலும் அவளுக்குக் கிடைத்திருந்த புருஷன்சொத்துப் போகமாட்டாதென்று ஐகோர்ட்டாரும் பிரிவீகௌன்சிலாரும் கூட தீர்மானித் திருக்கிறார்கள். (13 க. ஐ. 1; இ. லா. ரி. 5 க. 776; 4 பம். ஐ. 25; இ. லா. ரி. 2 அ. 150, 171; 1858 ஹு பம். ஸ. தீ. 1891).

295. ஆஸ்திதாரனிறந்த பிரகு அவனுடைய சொத்துக்கு வார்சாக யேற்பட்ட பெண்சாதி பிரகு விவாகம் செய்து கொண்டால் அவள் இறந்துபோனதாக எண்ணப்படுவாள். ஆகையால் புருஷன்சொத்தில் அவளுக்கிருந்த எல்லாபாத்தியமும்போய் அவளுக்குப் பிரகு வரும் வார்சுகளுக்கு அந்த சொத்து சேர்ந்துவிடும். மறுபடி விவாகம் செய்துகொள்ளும்படி புரு

புனர்விவாஹம்.

ஷன் அனுமதி கொடுத்து இறந்தால் அந்த சொத்தில் அவள் பாத்தியம் நிற்கும். (1856 ஸ் 15-வது நெ. இந்து விதவா விவாஹசட்டம் செக்ஷன் 2; இ. லா. ரி. 19 க. 289, 292; 13 க. ஐ. 75; 1 பாஞ்ரே. 431; இ. லா. ரி. 1 ம. 236; இ. லா. ரி. 7 ம. 321. ஆனால் இ. லா. ரி. 11 அ. 330யும் பார்க்க.)

296. பெண்.—இறந்த ஆஸ்திதாரனுக்குப் பிள்ளை, பேரன், கொள்பேறனாவது, பெண்சாதியாவது இல்லாவிட்டால் பெண் வார்சாவாள். மேலும் ஆஸ்திதாரனுடைய பெண்சாதி வார்சாக ஏற்பட்டாலும் அவளுக்குத் தன் ஆயிசுவரையிலும் சொத்தை யனுபவிக்கும் பாத்தியம் மட்டுமிருப்பதால் அவளிறந்துபோனால் திரும்ப மேற்சொல்லிய ஆஸ்திதாரனுக்கு யார் சமீப வார்சோ அவருக்கே சொத்துச் சேருகிறது. ஆகையால் பெண்சாதிக்குப் பிறகு பெண் வார்சாகிறாள். சபிண்டர்கள் வரிசையில் சேராவிட்டாலும் இப்படி பெண்சாதிக்குப் பிறகு அனேக சபிண்டர்களுக்கு முன்பாக பெண் வார்சாக ஏற்படுத்தப்பட் டிருக்கிறதற்கு இரண்டு காரணங்கள் ஊகிக்கத்தக்கதா யிருக்கின்றன. (1.) தகப்பனுடன்நெருங்கிய ரக்த சம்பந்தம். (2.) பிண்டப்பிரதானம் செய்வதற்கு யோக்கியதையான பிள்ளையைப் (தௌஹித்ரனை) பெறும்படியான தன்மை.

பெண்.

297. வார்சுபாத்திய விஷயத்தில் பெண்சாதிக்குப் போலவே பெண்ணுக்குங்கூட விபசார தோஷத்தால் பாதகமுண்டென்று கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். அதாவது விபசாரியா யிருந்த பெண்ணுக்கு வார்சுபாத்தியத்தால் சொத்துக் கிடைக்கமாட்டாதே யொழிய சொத்துக்குப் பாத்திய முண்டான பிறகு அந்தப் பெண் விபசாரியா யிருந்தால் அந்த சொத்து பாத்தியம் போகமாட்டாது. (13 க. ஐ. 48; இ. லா. ரி. 4 க. 550).

விபசார தோஷம்

பம்பாய் ஐகோர்ட்டார் விபசார தோஷத்தைப்பற்றிச் சொல்லியஸ்மிருதி வாக்கியங்களை செவ்வையாய்ப் பரிசோதித்து வார்சுபாத்தியத்திற்கு விபசார தோஷத்தா லுண்டாகும் கெடுதி பெண்சாதியைத்தவிர மைத்த பெண்வார்சுகள் விஷயத்தி லில்லையென்றும் விபசாரியாயிருந்த பெண் வார்சாவதற்கு ஆக்ஷேபனை யில்லையென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 4 பம். 104). மதராஸ்,

அலஹாபாத், ஐகோர்ட்டார்கள் கூட இந்த அபிப்பிராயத்தையே கொண்டிருக்கிறார்கள். (இ. லா. ரி. 5 ம. 149; 2 அ. ஐ. 363; இ. லா. ரி. 1 அ. 46).

1856-ம் வருஷத்திய 15-வது நெம்பர் சட்டப்படி விதவையாக இருந்து விவாகம் செய்துகொண்ட பெண் தகப்பனுடைய சொத்துக்கு வார்சாவதற்கு அட்டியில்லை.

298. அனேக குமாரத்திகள். இறந்த ஆஸ்திதாரனுக்கு ஒரு பெண்சாதியாலாவது பல பெண்சாதிகளாலாவது பல பெண்களிருந்தால் அவர்களில் விவாகமாகாத பெண்களே எல்லா மதங்களின்படிக்கும் முந்திய வார்சுகளாக ஆகிறார்கள். விவாகமாகாத பெண்க ளில்லாவிட்டாலும் அவர்க ளெல்லோரும் இறந்து போய்விட்டாலும் எந்தப் பெண்கள் வார்சுகளாவார்கள் என்கிற விஷயத்தைப்பற்றி அந்தந்த மதங்களில் கொஞ்சம் வித்தியாசங்க ளிருக்கின்றன.

தாயபாக சம்பிரதாயப்படி (1.) விவாகமாகாத பெண்கள் முதலில் வார்சுகளாகிறார்கள். (2.) இவர்கள் இல்லாவிட்டாலும் இவர்கள் எல்லோரும் இறந்த பிறகும் ஆண்சந்ததி யிருந்தால் விதவையான பெண்கள்கூட வார்சுகளாகிறார்கள். (இ. லா. ரி. 18 க. 327). ஆண் சந்ததிகளில்லாத விதவைப் பெண்களும் மலடான பெண்களும் பெண்சந்ததி மட்டுமுள்ள பெண்களும் இவர்கள் எந்நிலைமையிலும் வார்சுகளாக மாட்டார்களென்று தீர்ப்புகள் செய்யப்பட் டிருக்கின்றன. (2 டப்ளியூ. மெக். 39, 44, 46, 49, 58; 3 பம். ஸ. தீ. 362; 2 ஸ. 176). சொத்துக் கிடைத்தபிறகு மலட்டுத்தனம் ஏற்பட்டால் அந்த சொத்திலுள்ள பாத்தியம் போகமாட்டாது. (15 க. ஐ. 10). மேலும் இப்பொழுது 1856-ம் வருஷத்திய 15-வது நெம்பர் சட்டப்படி விதவைகள் விவாகம் செய்துகொண்டு ஆண்சந்ததி பெறலாமாதலால் விதவையா யிருக்கும் காரணத்தைக் கொண்டு மட்டில் பங்காளா தேசானுஷ்டானப்படி பெண்ணுக்கு வார்சுபாத்தியமில்லை என்று சொல்ல நியாயமில்லை. (19 ஸ. 189).

மிதாக்ஷரக் கட்டுப்பாட்டின்படி -(1.) விவாகமாகாத பெண்கள் முதலில் வார்சு ஆகிறார்கள். (2.) இவர்கள் இல்லாவிட்டாலும் இவர்கள் எல்லோரு மிறந்துபோன பிறகும் விவாகமான பெண்களில் ஏழையா யிருப்பவர்கள் எல்லாரும் வார்சுக ளாகிறார்கள். இவர்கள் விதவைகளா யிருந்தாலும் சரி, சுமங்கலிகளா யிருந்தாலும் சரி, சரியான பாத்

தியமுடையவர்கள். (3.) இவர்களில்லா விட்டாலும் இவர்களுக்குப் பிறகும் விவாகமான பெண்களில் பணமுள்ளவர்கள் வார்சுகளாகிருர்கள். இவர்களிற்கூட விதவை சுமங்கிலி என்கிற பேதமில்லை. இந்தக் கட்டுப்பாட்டின்படி பெண்களுடைய வார்சுபாத்தியம் அவர்களுக்கு ஆண்சந்ததி யிருப்பதைப் பொருத்ததல்ல. காசீ ருஜ்ஜியத்திலும் பம்பாய், மதராஸ் பிரெஸிடென்சிகளிலும் இந்த மிதாக்ஷர சித்தாந்தம் அனுஷ்டானத்தி லிருந்து வருகிறது. (இ. லா. ரி. 14 பம். 4, 12; 2 பம். ஐ. 5; 6 பம். ஐ. 183; இ. லா. ரி. 3 ம. 265; இ. லா. ரி. 4 அ. 243; இ. லா. ரி. 2 அ. 561; இ. லா. ரி. 5 க. 587; 2 ஸ. 176).

மிதில தேசத்திய வழக்கத்தின்படி (1.) விவாகமாகாத பெண்கள் முதலில் வார்சாகிருர்கள். (2.) இவர்க ளில்லாவிட்டாலும் இவர்களுக்குப் பிறகும் விவாகமான பெண்கள் வார்சாகிருர்கள். இவர்களுக்குள் விதவை சுமங்கிலி என்ற பேதம் கிடையாது. ஆண்சந்ததியைப் பொருத்தாவது ஏழைத் தனத்தைப் பொருத்தாவது பேதம் கிடையாது.

சமானமான பாத்தியம்.

299. மேல் பாராவில் சொல்லப்பட்ட வரிசைகளில் எந்த வரிசைப் பெண்களுக்காவது வார்சுபாத்தியத்தால் தகப்பனுடைய சொத்துக் கிடைத்தால் அவர்களெல்லோரும் அந்த சொத்துக்காக ஜாயிண்டாக சரிபாத்தியமுள்ளவர்களாக ஆகிருர்கள். இதற்கு முந்தி பல பெண்சாதிகள் விஷயமாக 292-வது பாராவில் சொல்லப்பட்ட அம்சங்கள் எல்லாம் ஜாயிண்டாகபாத்தியமுள்ள பெண்கள் விஷயத்திற் கூட செல்லும். ஒருவர்க்கொருவர் சறிப்படாவிட்டால் அவர்கள் சொத்தைப் பிறித்துக்கொண்டு அனுபவிக்கலாமே யொழிய பராதீனம் செய்யக்கூடாது. அவர்களிலொருத்தி யிறந்தால் அவளுடைய பாகம் அந்த வகுப்பிலுள்ள பெண்களில் மைத்தவர்களுக்குச் சேருமேயன்றி அவளுடைய பிள்ளைகளுக்குச் சேரமாட்டாது. அவ் வகுப்பிலுள்ள பெண்க ளெல்லா மிறந்து போனல் பிந்தி வறத்தக்க பெண்கள் வார்சுக ளாவார்கள். இவர்களெல்லாரு மிறந்தால் மைத்தவர்கள் வார்சாவார்கள். பிறிக்கத்தகாத ஜமீன் விஷயத்தில் எவ்வகுப்புப் பெண்கள் வார்சுக ளாகிருர்களோ அவர்களில் மூத்தவள் அரசிற்கு பாத்தியஸ்தி யாகிருள். (3 ம. ஐ. 317; 14 க. ஐ. 246; 6 ம. ஐ. 310).

பம்பாய் பிரெசிடென்சியில் மட்டும் பெண்களுக்கு வார்சுபாத்தியத்தால் சொத்துக்கிடைத்தால் அதில் அவர்கள் புருஷர்களைப்போ

லவே சகல சுதந்தர முடையவர்க ளாவார்கள். ஆகையால் அவர்களு க்கு ஆண்சந்ததி யில்லாம லிருந்தால் அவர்கள் அதைப் பராதீனம் செய்ய அட்டியில்லை. (இ. லா. ரி. 6 பம். 85).

300. தௌகித்திரன்-(என்றால் பெண்ணின் பிள்ளை). இறந்த ஆஸ்திதாரனுக்கு, பிள்ளை, பேறன், கொள்பே றனாவது, பெண்சாதியாவது, பெண்ணாவது இ ல்லாவிட்டாலும் பெண்களுக்குச் சொத்துக் கிடைத்து அவர்க ளெ ல்லோரு மிறந்த பிறகும் தௌகித்திரன் வார்சாகிறான். தௌகித்தி ரன் வேறு கோத்திர முள்ளவனாதலால் பந்து வரிசையில் சேர்ந்தவ னாயினும் தாயைப்பெற்ற பாட்டனுக்கு அவன் பிண்டப்பிரதானம் செய்யத்தகுந்தவ னாதலாலும் பிள்ளை யில்லாதவன் தன் பெண்ணு டைய பிள்ளையைத் தன் பிள்ளையாக நியமித்துக்கொள்ளும் வழக்கம் முன் காலத்திலிருந்ததாலும் ஒரே கோத்திரமான அனேக சபிண்டர் களுக்கு முந்தியே தௌகித்திரன் வார்சாகும்படி ஏற்பட்டதென்று சொல்லத்தக்கதா யிருக்கிறது. பெண்களுக்குப் பிறகு தௌகித்திரன் வார்சாகிற விஷயத்தில் மிதிலதேச வழக்கப்படி முன்காலத்தில் சந் தேக மிருந்ததே யொழிய இப்பொழுது தீர்மானிக்கப்பட் டிருக்கி றது. (6 பம். ஸ. தீ. 140).

தௌகித்திரன்.

பெண்ணுடைய சுவீகாறப் பிள்ளைகூட ஔரச புத்திரன் போல வே வார்சுபாத்திய முடையவனாகிறான். (2 மெக். 74).

301. இறந்த சுவாந்தாரனுக்குப் பெண்சாதியாவது எவ்வகுப் பைச் சேர்ந்த ஒரு பெண்ணாவது உயிருட னி ருக்கையில் தௌகித்திரனுக்கு வார்சு பாத்திய முண்டாகமாட்டாது. சுவாந்தாரனுடைய பெ ண்சாதியும் எல்லா வகுப்பிலுள்ள பெண்களு மிறந்தபிறகே தௌகி த்திரன் வார்சாவான். (15 க. ஐ. 10; 1861 ஸ்ட ம. தீ. 137; 1 டபி ளியூ மெக். 24; 2 டபிளியூ மேக். 44, 57; 1 அ. ஐ. 200; இ. லா. ரி. 1 அ. 608; 5 பம். ஐ. 139; இ. லா. ரி. 8 அ. 365). மேலும் தௌகி த்திரர்களுடைய வார்சு பாத்தியம் தங்களுடைய தாயுடைய சம்பந்த த்தா லுண்டாகாமல் தாயைப் பெற்ற பாட்டனோடுள்ள சம்பந்தத்தா லுண்டாவதால் பல பெண்களால் பல தௌகித்திரர்க ளிருக்கும் பொழுது இவர்களுக் கெல்லோர்க்கும் சொத்து சறிபாகமாகச் சே ருமேயன்றியில் தாய்களுடைய லக்கத்தைப் பொருத்ததல்ல. அதா வது, ஒரு பெண்ணால் இறண்டு தௌகித்திரர்களும் வேறொரு பெ

பேறன்களுக்கு சமான பாகம்.

ண்ணுல் மூன்று தௌகித்திரர்களும், மைத்தொரு பெண்ணுல் நான்கு தௌகித்திரர்களு மிருந்தால், சொத்து ஒன்பது பங்காகப் பிரிக்கப்பட்டு அந்த தௌகித்திரர்களுக்கு ஒரு ஒரு பாகம் சேரும். (3 பம். ஸ. தீ. 100).

பிறிக்கத்தகாத ஜமீனுக்கு தௌகித்திரர்கள் வார்சுகளாக யேற்பட்டால் அவர்களில் மூத்தவன் அரசிற்கு பாத்தியஸ்த ளுவானே யொழிய அந்த ஜமீன்சொத்தை கடைசியாயனுபவித்த பெண்ணுடைய பிள்ளை பாத்தியஸ்த ளுகமாட்டான். (6 ம. ஐ. 310; இ. லா. ரி. 3 ம. 290).

தௌகித்திரனுக்கு ஸம்பூர்ணமான வார்சு பாத்தியம்.

302. தௌகித்திரனைக் காட்டிலும் நெருங்கிய வார்சுகளாகிய பெண்சாதி பெண் இவர்கள் இறந்த காலத்தில் முதல் சுவாந்தாரனே யிறந்ததுபோல நினைக்கப்பட்டு அவன் சொத்து தௌகித்திரர்களுக்குச் சறிபாகமாகச் சேருகிறது. ஆகையால், தௌகித்திரர்களுக்கு வார்சு பாத்திய முண்டாவதற்கு முந்தியே அவர்களிலொருவ னிறந்தால் சொத்து முழுவதும் மைத்த தௌகித்திரர்களுக்குச் சேருமேயன்றி இறந்த தௌகித்திரனுடைய பிள்ளைகளுக்குளவ்வளவும் சேரமாட்டாது. தௌகித்திரர்களுக்கு வார்சுபாத்திய முண்டானபிறகு அவர்களிலொருவ னிறந்தால் சொத்திலவனுடைய பாகம் அவனுடைய பிள்ளைகள் முதலிய வார்சுகளுக்குச் சேருமேயன்றி மைத்த தௌகித்திரர்களுக்குச் சேரமாட்டாது. (இ. லா. ரி. 17 க. 33; இ. லா. ரி. 7 ம. 458). பெண்சாதியைப் போலும் பெண்ணைப்போலு மில்லாமல் தௌகித்திரன் சர்வசுதந்தர முள்ள வார்சாயிருப்பதால் அவனுக்குப் பிறகு அவன் வார்சுகளுக்கே சொத்துச் சேருமே யல்லாமல் பெண்சாதிக்குப் பிறகும் பெண்ணுக்குப் பிறகும்போல ஆதிசுவாந்தாரன் வார்சுகளுக்குச் சேரமாட்டாது. (இ. லா. ரி. 3 அ. 134).

தாய் தகப்பன்கள்.

303. தாய் தகப்பன்கள்.— தௌகித்திரனில்லாவிட்டால் ஆஸ்திதாரனுடைய தாய் தகப்பன்கள் வார்சு ஆவார்களேயன்றி தௌகித்திரனுடைய பிள்ளை வார்சாகமாட்டான். மிதாக்ஷர சம்பிரதாயப்படி முதலில் தாயும் பிறகு தகப்பனும் வார்சாகிறுர்கள். மதிராஸ், பம்பாய் பிரெசிடென்சி களிலும் மிதிலை, காசி ருஜ்யங்களிலும் இவ்வழக்கம் செல்லுகிறது. (2 டபிளியூ. மெக். 55, வெ. பூ. 110; 448; இ. லா. ரி. 14 பம். 405). குஜ

ரத் தேசத்தில் மயூககிரந்தத்தி னபிப்பிராயத்தை யனுசரித்து முதலில் தகப்பனும் பிறகு தாயும் வார்சாகிறார்கள். (இ. லா. ரி. 6 பம். 541). பெங்காளா சம்பிரதாயப்படிக்கூட முதலில் தகப்பனும் பிறகு தாயும் வார்சாகிறார்கள் (2 டபிளியூ. மெச். 54; 7 பம். ஐ. தீ. 108).

304. வார்சுபாத்தியத்தில் பிள்ளையின் சொத்துத் தாய்க்கு வந்தபொழுது அதில் அவளுக்கு சர்வ சுதந்திரமு முண்டாகாமல் பெண்சாதி, பெண் முதலிய பெண்வார்சுகளைப் போலவே உயிருள்ள வரையில் அனுபவிக்கமட்டும் பாத்திய முண்டாகிறது. (2 ம. ஐ. 402; 8 ம. ஐ. 91; 8 சூ. இ. அ. 500).

அஸம்பூர்ண ஸ்வாதந்திறம்.

பெண்சாதி விஷயத்திற்போலவே தாய் விஷயத்திலும்கூட வார்சு பாத்தியத்தை விபசாரதோஷம் கெடுக்குமென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். அதாவது விபசாரியாயிருந்த தாய்க்கு பிள்ளையின் சொத்தில் வார்சுபாத்தியம் கிடையாது. ஆனால் சொத்துக்கு பாத்திய முண்டானபிறகு விபசாரியாகப் போனால் பாதக மில்லை. (இ. லா. ரி. 4 க. 550). பம்பாய், மதராஸ், அலகாபாத், ஹைகோர்ட்டாரவர்களின் அபிப்பிராயப்படி விபசாரதோஷமானது பெண்சாதியின் வார்சு பாத்தியத்தை மட்டில் கெடுக்குமேயன்றி பெண், தாய் முதலிய பெண்வார்சுகளின் பாத்தியத்தைக் கெடுக்க மாட்டாது. (இ. லா. ரி. 4 பம். 104; 2 அ. ஐ. 363; இ. லா. ரி. 1 அ. 46; இ. லா. ரி. 5 ம. 149).

விபசார தோஷம்.

1856-ம் வருஷத்திய 15-ம் நெம்பர் சட்டப்படி தாய் திரும்பக் கலியாணம் செய்து கொண்டாலும் அவளுக்கு தன் பிள்ளையின் சொத்திலுள்ள வார்சுபாத்தியம் போகமாட்டாது. (செ. 5; 2 க. ஐ. 199). உதாரணம்—

புனர் விவாஹம்.

"ஏ" என்கிற விதவை கலியாணம் செய்துகொண்ட பிறகு அவளுடைய முந்திய புருஷனால் பிறந்த "பீ" என்னும் பிள்ளை ஆண் சந்ததியாவது பெண்ணாவது தௌகித்திரனாவ தில்லாம லிறந்தான். "பீ" என்பவன் சொத்துக்கு "ஏ" என்பவள் வார்சாவதற்கு அட்டியில்லை.

305. தாய பாகத்தின்படிக்கும் மிதாக்ஷரத்தின் படிக்குங்கூட சபத்தினி மாதாவுக்கு வார்சுபாத்தியம் கிடையாது. (5 பம். ஐ. தீ. 315; 6 பம். ஐ. தீ. 53;

சபத்தினி தாய்.

1852 ஆு பம். ஸ. தீ. 563; இ. லா. ரி. 4 பம். 208; க. ஐ. சப்ளிமெண்டல் வாலியம் 67; இ. லா. ரி. 5 ம. 29, 32; இ. லா. ரி. 8 ம. 107).

பம்பாய் பிரெசிடென்சியில் மட்டும் சபத்தினி மாதாவுக்கு வார்சுபாத்திய முண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இன்னாருக்குப் பிறகு அவள் வார்சாகிறாள், என்பது நிச்சயம் செய்யப்படவில்லை. அப்பொழுது கூட தாயென்கிற காரணத்தால் வார்சாகாமல் ஒரு கோத்திரமான சபிண்டனுடைய பெண்சாதி என்கிற காரணத்தால் வார்சாகிறாள். (இ. லா. ரி. 4 பம். 188; ஆனால், இ. லா. ரி. 11 பம். 47 யும் பார்க்க.)

அண்ணன் தம்பிகள் — ஒரு தாய்வயிற்றில் பிறந்தவர்கள்—வேறு தாய் வயிற்றில்பிறந்தவர்கள்.

306. அண்ணன் தம்பிகள்.—தாய் தகப்பனுக்குப் பிறகு அண்ணன் தம்பிகள் வார்சுகளாக இருக்கிறார்கள். ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்களும் வேறு தாய் வயிற்றில் பிறந்தவர்களும் கூட இருந்தால் ஒரு தாயிடத்துப் பிறந்தவர்கள் மட்டும் வார்சாகிறார்கள். வேறு தாய்வயிற்றிற் பிறக்கிறவர்களுக்கு சொத்தில் யாதொரு பாகமுங் கிடைக்காது ஒரே வயிற்றிற் பிறந்த அண்ணன் தம்பிகள் ஒருவரும் இல்லாவிட்டால் சொத்துக்கு வேறு தாய் வயிற்றிற் பிறந்த அண்ணன் தம்பிகள் வார்சாவார்கள். குஜரத் தேசத்திலும் பம்பாய் பட்டணத்தில் மட்டும் அங்கே முக்கியா தாரமாக அனுஷ்டானத்தி லிருந்துவருகிற மயூககிரந்தத்தின்படி ஒரே தாய்வயிற்றிற் பிறந்த அண்ணன் தம்பிகள் ஒருவரும் இல்லாவிடினும் அவர்கள் பிள்ளைகளிருந்தால் முழுசொத்தும் இவர்களுக்கே சேருமேயன்றி வேறு தாய் வயிற்றிற் பிறந்த அண்ணன் தம்பிகளுக்குச் சேரமாட்டாது. (12 மூ. இ. அ. 523; 3 க. ஐ. 13; 12 பம். ஐ. 65).

அண்ணன் தம்பிகளில் சிலர் பிறிந்தவர்களாகவும் சிலர் சேர்ந்து மிருக்கையில் சேர்ந்தவர்களி லொருவனிறந்தால் அவனுடைய சொத்து முழுவதும் சேர்ந்திருந்த சகோதரர்களுக்குச் சேருமேயன்றி பிறிந்த சகோதரருக்குச் சேரமாட்டாது. (3 க. ஐ. 7).

இறந்த சுவாந்தாரனும் அவனுடைய வேறு தாய் வயிற்று அண்ணன் தம்பிகளும் பிறிந்திருந்தால் தாயபாகத்தின்படி இவ்விரண்டு பெயர்களும் சொத்துக்கு சமபாகஸ்தர்களாகிறார்கள். (இ. லா. ரி. 1 க. 27). இந்நிலைமையில் மிதாக்ஷரத்தின்படி முழு சொத்துக்கும் வேறு தாய்வயிற்று அண்ணன் தம்பிகளே பாத்தியஸ்தர்களாகிறார்கள்.

ஒரு தாய்வயிற்றிற் பிறந்தவர்கள் வேறு தாய்வயிற்றிற் பிறந்தவர்களென்கிற பேதம் அண்ணன் தம்பிகள் அவர்கள் பிள்ளைகள் விஷயத்தில் மட்டும் உபயோகப் படுமே தவிர சிறியதகப்பன் பெறியதகப்பன் முதலிய மேல் வகுப்பு வார்சுகள் விஷயத்தில் உபயோகப் பட மாட்டாது. (இ. லா. ரி. 6 பம் 394).

307. அண்ணன் தம்பிகள் பிள்ளைகள்.—ஒரே வயிற்று அண்ணன் தம்பிகளாவது வேறு வயிற்று அண்ணன் தம்பிகளாவ தில்லாமற்போனால் அண்ணன் தம்பிகள் பிள்ளைகள் வார்சாவார்கள். ஆஸ்திதாரன் இறந்துபோகும் பொழுது அவனுக்குச் சொந்த அல்லது வேறு வயிற்று அண்ணன் தம்பிகளில் ஒருவனேனு முயிருட னிருந்தால் சொத்து முழுவது மவனுக்கே சேருமல்லாமல் அதற்கு முன்னிறந்த அண்ணன் தம்பிகள் பிள்ளைகளுக்குச் சேரமாட்டாது. (3 பம். ஸ. தீ. 106. 289; 23 ஸ. 272). குஜரத் தேசத்திலும் பம்பாய் பட்டணத்திலும் மட்டும் அங்கு ஆதாரமாக ஒப்புக் கொள்ளப்பட்ட மயூக கிரந்தத்தின்படி சொந்த அண்ணன் தம்பிகள் பிள்ளைக ளிருந்தால் இவர்களே வார்சாவார்களேயன்றி வேறு வயிற்று அண்ணன் தம்பிகள் வார்சாகமாட்டார்கள். (12 மூ. இ. அ. 523; 3 க. ஐ. 13; 12 பம். ஐ. 65). மேலும் அந்த மயூககிரந்தத்தின்படி சுவாந்தாரன் இறந்துபோகும் காலத்தில் அண்ணன் தம்பிகள் சிலரும் அதற்குமுன் இறந்துபோன அண்ணன் தம்பிகள் பிள்ளைகள் சிலருமிருந்தால் இவர்கள் அண்ணன் தம்பிகளோடுகூட சமபாகத்திற்கு பாத்தியஸ்தர்களாகிறார்கள்.

அண்ணன் தம்பிகள். குமாரர்கள்.

ஆஸ்திதாரன் இறந்த காலத்தில் சொத்துக்கு வார்சுகளாயிருந்த அண்ணன் தம்பிகளி லொருவன் சொத்தைப் பிறித்துக் கொள்வதற்கு முந்தியே யிறந்துபோனால் அவனுடைய பாகம் அவனுடைய பிள்ளைகளுக்குச் சேருமேயல்லாமல மைத்த அண்ணன் தம்பிகளுக்குச் சேரமாட்டாது. (2 ஸ. 123).

இறந்துபோன ஆஸ்திதாரனுடைய சொந்த அண்ணன் தம்பிகளுடைய பிள்ளைகளும் வேறு தாய்வயிற்று அண்ணன் தம்பிகளும் இருந்தால் சொந்த அண்ணன் தம்பிகள் பிள்ளைகளே வார்சாவார்கள். மேலும் அண்ணன் தம்பிகள் பிள்ளைகளிற் சிலர் இறந்த ஆஸ்திதாரனோடு கூட இருந்து சிலர் பிறிந்திருந்தால் சொத்து முழுவதும் சேர்ந்திருந்தவர்களுக்கே சேரும். சொந்த அண்ணன் தம்பிகள் பிள்ளைகள் பிறிந்

திருந்தும் வேறு வயிற்றண்ணன் தம்பிகள் பிள்ளைகள் ஆஸ்திதார ஞேடு சேர்ந்து மிருந்தால் தாயபாகப்படி இவ்விருவர்களும் சமான பாகஸ்தர்களாவார்கள். (3 ஸ. 43; 6 ஸ. 93; 3 க. ஐ. 7; இ. லா. ரி. 1 க. 27.)

சமமான பாகங்கள்.

அண்ணன் தம்பிகள் குமாரர்கள் தௌகித்திரர்களைப் போலவே சமபாகஸ்தராவார்களே யொழிய தகப்பன்களுடைய லக்கத்தைக்குறித்து பாகத்தை யடைய மாட்டார்கள். இது எப்படி எனில்—ஒரு ஆஸ்திதார னிறந்து போகும் காலத்தில் "ஏ" என்னும் தமையனுடைய இரண்டு குமாரர்களும் "பி" என்கிற தமையனுடைய மூன்று குமாரர்களும்வார்சுகளாக ஏற்பட்டார்கள். இந்த ஐந்து பேர்களும் அவர்களுடைய சிரியதகப்பன் ஆஸ்தியில் சமபாகங்களை யடைவார்கள். (15 ஸ. 70; 6 ஸ. 93; 9 ஸ. 463).

அண்ணன் தம்பிகளுடைய சுவீகாரப் பிள்ளைகளும் ஔரச புத்திரர்களைப்போலவே வார்சுபாத்திய முடையவர்கள். (2 மெக். 74).

அண்ணன் தம்பிகளின் பேரன்கள்.

308. அண்ணன் தம்பிகள் பேறன்கள்.—தாயபாகத்தின்படி அண்ணன் தம்பிகள் பிள்ளைகளுக்குப் பிறகு அண்ணன் தம்பிகள் பேறன்கள் வார்சு ஆகிறுர்கள். இவர்களில் ஒரேவயிற்று அண்ணன் தம்பிகளுடைய பேறன்களிருக்கையில் வேறு வயிற்று அண்ணன்தம்பிகள் வார்சாகமாட்டார்கள். (இ. லா. ரி. 9 க. 563). மிதாக்ஷரப்படிக்குக்கூட அண்ணன் தம்பிகளுக்குப் பிறகு அண்ணன் தம்பிகள் பேறன்கள் வார்சாகிறுர்களென்று மிதில தேசத்தி லிருந்துவந்த ஒரு கேசில் பங்காளா சதர்கோர்ட்டார் தீர்மானித்தார்கள். (1855 ஸூ பம். ஸ. தீ. 382). ஆனுல் மதராஸ் ஐகோர்ட்டார் இந்த விஷயத்தைச் செவ்வையாக வாதித்து மிதாக்ஷரப்படி அண்ணன் தம்பிகள் பிள்ளைகளுக்குப் பிற்பாடு அண்ணன் தம்பிகள் பேறன்கள் வார்சாக மாட்டார்களென்று தீர்மானித்தார்கள். (இ. லா. ரி. 9 ம. 291).

மிதாக்ஷர தாயபாகங்கள் வித்தியாசப்படுகிறது.

309. வார்சுவரிசையில் அண்ணன் தம்பிகள் பிள்ளைகளுக்குப் பிறகு மிதாக்ஷர தாயபாகங்களின்படி விசேஷ வித்தியாச மேற்படுகிறது. தாயபாகத்தில் பிண்டப்பிரதானம் செய்ய பாத்தியதையைக் கொண்டு வார்சுபாத்தியம் நிஷ்கரிஷிக்கப் படுவதால் ஒரே கோத்திர சபிண்டர்களோடு கூடக்கலந்து வேறு கோத்திர சபிண்டர்கள் அதாவது பந்துக்கள் வார்சுகளாக ஏற்பட்டு பிறகு சகுல்யர்களும் சமாஞேதக

ர்களும் வார்சாகிறார்கள். மிதாக்ஷரத்தில் நெருங்கிய ரக்த சம்பந்தத்தைப் பொருத்து வார்சுபாத்தியம் நிஷ்கரிஷிக்கப்படுவதால் ஒரு கோத்திர தாயாதிகள் எல்லாரும் அதாவது சபிண்டர்கள், சகுல்யர்கள், சமானோதகர்க ளெல்லாரும் தாண்டினலொழிய வேறு கோத்திர தாயாதிகள் அதாவது பந்துக்கள் வார்சுகளாக யேற்பட மாட்டார்கள். மிதாக்ஷர தாயபாக சித்தாந்தங்களின்படி வார்சுவரிசைகளைக் காட்டக்கூடிய பட்டிகள் 311, 313 - இந்த பாராக்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

பந்து வர்க்கத்தார்கள்.

310. தாயபாகத்திலும் மிதாக்ஷரத்திலும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிற பந்துக்களைத் தவிற இன்னும் அனேகம் பெயர்கள் பந்துவர்க்கத்தில் சேருவார்களென்று மேல் சொல்லியிருக்கிறோம். (282 - வது பாரு வம்சாவளியின் கீழ் ரிமார்க்கு, 283 - வது பாரு). இவர்களில் தமக்கை, தங்கை, இவர்கள் குமாரர்கள் பாத்தியம் அனேகம் கேசுகளில் விவாதப்பட்டு இதன் கீழ் விவரிக்கப்பட்டபடி வார்சுகளாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தமக்கை, தங்கைகள்.

பங்காளா சம்பிரதாயப்படி தமக்கை தங்கைகளுக்கு வார்சுபாத்தியம் கிடையாது. தாயபாகத்தில் அவர்கள் பந்துக்களாக சொல்லப்பட்டிருப்பதுடன் அவர்களுக்கு பிண்டப்பிரதானம் செய்யும்படியான யோக்கியதை கொஞ்சமேனும் கிடையாது. (7 பம். ஸ. தீ. 192; 2 ஸ. 180; 5 ஸ. 215; 5 க. ஐ. அப்பெண்டிக்ஸ், 87; 1860 ஷு பம். ஸ. தீ. ii 340). காசி சம்பிரதாயப்படிக்குக்கூட அக்கா, தங்கைகள் வார்சுகளல்ல. (இ. லா. ரி. 5 அ. 311). அக்கா தங்கைகள் வேறு கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயினும் அண்ணன் தம்பிகளோடு தேக சம்பந்த முள்ளவர்களாயிருப்பதால் மிதாக்ஷர சித்தாந்தப்படி பந்துக்களாவார்களென்று நிச்சயம் செய்து அவர்களுக்கு வார்சுபாத்திய முண்டென்று மதராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித் திருக்கிறார்கள். (8 ம. 88; இ. லா. ரி. 5 ம. 241). மதராஸ் பிரெசிடென்சியில் வேறு தாய்வயிற்றிற் பிறந்த அக்கா தங்கைகளுக்கு பாத்தியமில்லை. (இ. லா. ரி. 5 ம. 29). பம்பாய் பிரெசிடென்சியில் அக்கா தங்கைகளுடைய வார்சுபாத்தியம் முற்றிலும் உருதிப்பட்டிருக்கின்றது. அண்ணன் தம்பிகளோடு சேர்ந்துகூட ஒரே குடும்பத்தி லுண்டானவர்களானதால் அவர்கள் சகோத்திர சபிண்டர்களாவார்களென்றும் வேறு கோத்திரத்தில் கலியாணம் செய்துகொள்ளும் காறணத்தால் ஒரே கோத்திரத்தில் பிறந்த தன்மை கெ

ட்டுப்போகா தென்றும் மயூக கிரந்தம் சொல்லுகின்றது. இந்த கிரந்தத்தின்படி தகப்பன் தாயார்களுக்குப் பிறகு தமக்கை தங்கைகள் வார்சாகிறார்கள். (வெ. பூ. 131, 463; இ. லா. ரி. 2 பம். 445). மேலும், சொந்த அக்கா தங்கைகளில்லாவிட்டால் வேறு தாய்வயிற்றிற் பிறந்த அக்கா தங்கைகள் வார்சுக ளாவார்கள். (வெ. பூ. 469-70; 1 பம். ஐ. 118; 9 மூ. இ. அ. 516; இ. லா. ரி. 3 பம். 353, 369; இ. லா. ரி 4 பம். 188, 198.

அக்கா தங்கைகள் குமாரர்கள்.

தாயபாகத்தில் தங்கை தமக்கை பிள்ளைகள் பந்துவரிசையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதால் பங்காளாதேசத்தில் அவர்களுடைய பாத்தியம் ஆதிமுதல் ஸ்திரப்பட்டிருக்கிறது. (6 பங். ஸ. தீ. 234; 1 பங். ஸ. தீ. 43; 5 பங். ஸ. தீ. 46, 55, 315; 9 ஸ. 463; 15 ஸ. 433; 22 ஸ. 264). மேலும், பங்காளா சம்பிரதாயப்படி சொந்த அக்காதங்கைகளுக்கும் வேறு தாய்வயிற்றிற் பிறந்த அக்கா தங்கைகளுக்கும் வார்சுபாத்தியத்தில் பேதமில்லாததால் இவர்களுடைய வார்சுகள் சேர்ந்து வார்சுகளாகிறார்கள். (2 டப்ளியூ. மெக். 86; இ. லா. ரி. 11 க. 69). மிதாக்ஷரத்தில் தங்கை தமக்கைகள் பிள்ளைகள் பந்துவரிசையில் தெளிவாய் சொல்லப்படவில்லை. முன் காலத்தில் அவர்களுக்கு வார்சு பாத்தியமில்லை யென்றே தீர்மானிக்கப்பட்டு வந்தது. (11 மூ. இ. அ. 386). ஆனால், அவனுடைய வார்சுபாத்தியம் இப்பொழுது உறுதிப்பட்டிருக்கிறது. (6 ம. ஐ. 278.) மேலும், தங்கை தமக்கைகளைக் காட்டிலும் முந்தியே அவர்கள் பிள்ளை வார்சாகிறான் என்பதுகூட உறுதிப்பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 5 ம. 241). பம்பாய் தேசத்தில் தங்கை தமக்கைகளுடைய பிள்ளைகளுடைய வார்சுபாத்தியம் ஆதிமுதல் உறுதிப்பட்டிருக்கிறது. சொந்தத் தங்கை தமக்கை பிள்ளைகள் இல்லாவிட்டால் வேறு தாய்வயிற்றுத் தங்கை தமக்கை பிள்ளைகள் வார்சாகிறார்கள். (வெ. பூ. 493, 495).

மிதாக்ஷரத்தின்படி வார்சுகளுடைய வரிசை.

311. மிதாக்ஷரத்தின்படி வார்சுகளுடைய வரிசை இதின் கீழ் எழுதப்பட்டிருக்கிறது. சமானோதகர்கள் வரையிலுள்ள வார்சுகளுடைய வரிசை அடுத்த பக்கத்தி லெழுதப்பட்டிருக்கிற வம்சாவளியால் தெளிவாய்த் தெறியவரும். அண்ணன் தம்பிகள் பிள்ளைகளுக்குப் பிறகு அண்ணன் தம்பிகள் பேறன்கள் வார்சாகமாட்டார்க ளென்று மதராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்திருப்பதால் அண்ணன் தம்பிகளுக்குப் பிறகு கொள்பாட்டன் பெண்சாதி முதலியவர்கள் வார்சுகளாயேற்பட்டிருக்கிறார்கள். முதல் மூன்று தலைமுறை சபிண்டார்க


ளுடைய வார்சு வரிசையை யனுசரித்து பிறகு வருகிறவர்கள் வரிசை யேற்படுத்தப்பட் டிருக்கிறது. பந்து வரிசையிலுள்ள வார்சுகளுடைய கிரமம் மெயின்துரை செய்த இந்துலா கிரந்தத்தின் 535-வது பாராவில் சொல்லப்பட் டிருக்கிற வழியை யனுசரித்திருக்கிறது.

சபிண்டர்கள்.

பிதாக்ஷரப்படி வார்சுக் கிரமம்.

1. பிள்ளை. ...... 285--299 பாராக்களைப் பார்க்க.
2. பேறன். ,, ,,
3. கொள் பேறன். ,, ,,
4. பெண்சாதி.......291--295 ,,
5. பெண். .... 296--299 ,,
6. தௌஹித்திரன். 300--302 ,,
7. தாய். .... 303--305 ,,
8. தகப்பன். ,, ,,
9. அண்ணன் தம்பிகள். 306-வது பாரா.
10. அண்ணன் தம்பிகள் பிள்ளைகள். 307-வது பாரா.
11. தகப்பனுடைய தாயார்.
12. தகப்பனுடைய தகப்பன்-அதாவது பிதாமஹன்.
13. தகப்பன் அண்ணன் தம்பிகள் அதாவது சிற்றப்பன் [பெறிய தகப்பன்.
14. சிற்றப்பன் பெறியப்பன் பிள்ளைகள்.
15. பிதாமஹன் தாயார்.
16. பிதாமஹன் தகப்பன் அதாவது பிரபிதாமஹன்.
17. சிறியபாட்டன் பெறிய பாட்டன்கள்.
18. சிறியபாட்டன் பெறியபாட்டன் பிள்ளைகள்.
19. கொள்பேறன் பிள்ளை,
20. ,, பேறன்.
21. ,, கொள் பேறன்.
22. அண்ணன் தம்பிகள் பேறன்கள்.
23. ,, கொள்பேறன்கள்.
24. ,, கொள்பேறன் பிள்ளைகள்.
25. ,, கொள்பேறன்கள் பேறன்கள்.
26. சிறியதகப்பன் பெறியதகப்பன் பேறன்கள்.
27. ,, கொள் பேறன்கள்.
28. ,, கொள் பேறன்சள் பிள்ளைகள்.
29. ,, கொள் பேறன் பேறன்கள்.

மிதாக்ஷரத்தின்படி ஸபிண்டர்களுடைய வார்சு கிரமம் தெரியும் வம்சாவளி. [இதில், □ சதுஷ்கோணத்தில் தெரியப்பட்டவர்கள் ஸ்திரீகள்.



பிதாக்ஷூப்படி வர்க்க இறமம்.

30. சிறியபாட்டன் பெறிய பாட்டன் பேறன்கள்.
31. ,, ,, கொள் பேறன்கள்.
32. ,, ,, கொள் பேறன் பிள்ளைகள்.
33. ,, ,, கொள் பேறன் பேறன்கள்.
34. பிரபிதா மஹனுடைய தாயார்.
35. ,, தகப்பன்.
36. ,, அண்ணன் தம்பிகள்.
37. ,, அண்ணன் தம்பிகள் பிள்ளைகள்.
38. ,, தகப்பனுடைய தாயார்.
39. ,, தகப்பனுடைய தகப்பன் அதாவ [து பிரபிதா மஹனுடைய பிதாமஹன்.
40. ,, சிறிய தகப்பன் பெறியதகப்பன்.
41. ,, சிறியதகப்பன் பெறியதகப்பன் பிள்ளைகள்.
42. ,, பாட்டனுடைய தாயார் அதாவது பிரபிதாமஹி
43. ,, பிரபிதாமஹன்.
44. ,, பிதாமஹனுடைய அண்ணன் தம்பிகள்.
45. ,, பிதாமஹனுடைய அண்ணன் தம்பிகளுடைய பிள்ளைகள்.
46. பிரபிதாமஹனுடைய அண்ணன் தம்பிகளுடைய பேறன்.
47. ,, ,, கொள் பேறன்கள்.
48. ,, ,, கொள் பேறன் பிள்ளைகள்.
49. ,, ,, கொள் பேறனுடைய பேறன்கள்.
50. பிரபிதா மஹனுடைய சிறிய தகப்பன் பெறிய தகப்பன்களுடைய பேறன்கள்.
51. ,, ,, கொள் பேறன்கள்.
52. ,, ,, கொள் பேறன் பிள்ளைகள்.
53. ,, ,, கொள் பேறன் பேறன்கள்.
54. பிரபிதா மஹனுடைய சிறிய பாட்டன் பெறிய பாட்டன்களுடைய பேறன்கள்.
55. ,, ,, கொள் பேறன்கள்.
56. ,, ,, கொள் பேறன் பிள்ளைகள்.
57. ,, ,, கொள் பேறன் பேறன்கள்.

ஸமானோதகர்கள்.

58. 21 நெ. முதல் கீழ் ஏழு தலைமுறை வறைக்கும்.
59. 25 நெ. ,,

60. 29 செ. முதல் கீழ் ஏழு தலைமுறை வறைக்கும்.
61. 33 செ. ,,
62. 49 செ. ,,
63. 53 செ. ,,
64. 57 செ. ,,
65. 43 செ. ருடைய தாயார்.
66. 43 செ. ருடைய தகப்பன்.
67. 43 செ. ருடைய சிறிய தகப்பன் பெறிய தகப்பன்கள், [அவர்களுடைய புத்திர சந்ததி 13 தலைமுறை வறைக்கும்.
68. 66 செ. ருடைய தாயார்.
69. 66 செ. ருடைய தகப்பன்.
70. 66 செ. ருடைய சிறிய தகப்பன் பெறிய தகப்பன்கள் அவர்களுடைய ஆண் சந்ததி பதிமூன்று தலைமுறை வறைக்கும்.
71. அப்படியே பதிமூன்று தலைமுறை வறையில் சமானோதகர்கள் வார்சு ஆவார்கள். பிந்தி பந்துக்கள்.

பந்துக்கள்.

1. பிள்ளையின் தௌஹித்திரன்.
2. பேறனின் தௌஹித்திரன்.
3. தகப்பனின் தௌஹித்திரன், அதாவது, அக்கா தங்கைகள் பிள்ளை.
4. அண்ணன் தம்பிகள் தௌஹித்திரன்.
5. அண்ணன் தம்பிகளின் பிள்ளையின் தௌஹித்திரன்.
6. பாட்டனுடைய தௌஹித்திரன், அதாவது, அத்தையின் பிள்ளை.
7. சிறிய தகப்பன் பெறிய தகப்பன்களுடைய தௌஹித்திரன்.
8. மாமன்.
9. மாமன் பிள்ளை.
10. சிறியதாயார் பெறியதாயார் பிள்ளை.
11. கொள்பாட்டனுடைய பேறன், அதாவது, தகப்பனுடைய அத்தை பிள்ளை.
12. சிறியபாட்டன், பெறியபாட்டன் தௌஹித்திரன்.
13. தகப்பன் மாமன்.
14. தகப்பன் மாமன் பிள்ளை.
15. தகப்பன் சிறியதாயார் பெறியதாயார்கள் பிள்ளை.
16. தாயின் தகப்பன்.
17. தாயின் சிறியதகப்பன் பெறியதகப்பன்கள்.

பிதாக்ஷதாப்படி வார்சுக் கிறமம்.

பிதாக்கூ்ராப்படி வார்சு பாத்தியம்.

18. தாயின் சிறியதகப்பன் பெறியதகப்பன்கள் பிள்ளை.
19. தாயின் அத்தை குமாரன்.
20. தாயின் மாமன்.
21. தாயின் மாமன் பிள்ளை.
22. தாயின் சிறியதாயார் பெறியதாயார் பிள்ளை
23. தாயின் பாட்டன்.
24. தாயின் சிறியபாட்டன் பெறியபாட்டன்கள்.
25. தாயின் சிறியபாட்டன் பெறியபாட்டன்கள் பிள்ளை.
27. தாயின் கொள்பாட்டன்.
28. பிள்ளையின் பெண். (இ. லா. ரி. 14 ம. 149).
29. அக்கா தங்கைகள். (8 ம. ஐ. 88; இ. லா. ரி. 5 ம. 241).
30. அத்தை. (இ. லா. ரி. 13 ம. 10).

---

312. பம்பாய் தேசத்தில் விசேஷ விதிகள்.

பம்பாய் பிரெசிடென்சியில் முக்கியமாக குஜரத் தேசத்திலும் பம்பாய் பட்டணத்திலும் ஆதாரமாக அனுஷ்டானத்தி லிருந்து வருகிற மயூககிரந்தத்தின்படி ஒரே கோத்திரமுள்ள சபிண்டர்களுடைய பெண்சாதிகள் கூட சபிண்டர்களாக எண்ணப்பட்டு புருஷர்களிறந்து போயிருந்தால் அவர்கள் ஸ்தானத்தில் வார்சுகளாக ஏற்படுகிறார்கள். (வெ. பூ. 131; 481; 6 பம். ஐ. 152; இ. லா. ரி. 2 பம். 388 இ. லா. ரி. 5 பம். 110; இ. லா. ரி. 4 பம். 219; இ. லா. ரி. 9 பம். 31). இப்படி ஆஸ்திதாரனுடைய பிள்ளையின் பெண்சாதி, பேறனின் பெண்சாதி, கொள்பேறனின் பெண்சாதி, தௌஹித்திரன் பெண்சாதி அண்ணன் தம்பிகள் பெண்சாதி, அண்ணன் தம்பிகள் பிள்ளைகளின் பெண்சாதி, சிறியதகப்பன் பெறியதகப்பன் பெண்சாதி, இவர்கள் முதலிய விதவைகள் தங்கள் புருஷனுக்குப் பிறகு மயூககிரந்தப்படி வார்சு ஆகிறார்கள்.

மேலும், ஒரு குடும்பத்திற் பிறந்த காரணத்தால் அதிலுள்ள பெண்களும் புருஷர்களும் ஒரு கோத்திரத்தாராய் பாவிக்கப்பட்டு பெண்களுக்கு வேறு கோத்திரத்தில் கலியாண மானாலும் ஒரே கோத்திரத்தில் பிறந்த நிலைமை தப்பிப்போகாதென்று மயூககிரந்தம் சொல்லுகிறது. இந்த அபிப்பிராயத்தின்படி தங்கை தமக்கைகள் அவர்கள் பெண், அண்ணன் தம்பிகள் பெண், பிள்ளையின் பெண், பெண்ணுடைய பெண், இவர்கள் முதலிய பெண்வரிசை வார்சுகள் ஏற்பட்டிருக்கிறார்கள். (வெ. பூ. 137, 496-8). அத்தை ஒருகோத்திரத்தில்

பிறந்த சபிண்டையாக பாவிக்கப்பட்டு தாயுடன் பிறந்த மாமனுக்கு முந்தி வார்சாகிறாள். (8 பம். ஐ. 244).

தாயபாகத்தின்படி வார்சுக் கிரமம்.

313. தாயபாகத்தின்படி வார்சுகளின் வரிசை இதன்கீழ் எழுதப்பட்டிருக்கிறது. தாயபாகத்தின்படி முதல் மூன்று தலைமுறை சகோத்திர சபிண்டர்களுடன் கலந்து வேறு கோத்திர சபிண்டர்களான பந்துக்களெல்லாரும் அதாவது பித்ரு பந்துக்களும் மாத்ரு பந்துக்களும் வார்சுகளாகிறார்கள். அதின் பிறகு சகுல்யர்கள் அதாவது 4, 5, 6 தலைமுறையுள்ள சகோத்திர சபிண்டர்களும் அவர்களுக்குப் பிறகு சமானோதகர்களும் வார்சுகளாகிறார்கள். இதன்கீழ் காட்டப்பட்டிருக்கிற வார்சு வரிசை தீர்ப்புகளுக் கொத்தபடி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. (15 க. ஐ. 35; இ. லா. ரி. 4 க. 411; இ. லா. ரி. 9 க. 563, 566. இ. லா. ரி. 15 க. 780). பங்காளா சம்பிரதாயப்படி சாதாரணமாய் ஸ்திரீகளுக்கு வார்சுபாத்தியம் கிடையாது. ஆனால் பெண்சாதி, பெண், தாயார், தகப்பனைப் பெற்றதாயார், பாட்டனைப் பெற்ற தாயார் இந்த ஐந்து பேர்கள் மட்டும் அவர்களைப்பற்றி ஸ்மிருதி வாக்கியங்களிருப்பதால் வார்சுகளாக யிருக்கிறார்கள்.

ஸபிண்டர்கள் பந்துக்கள்.

தாயபாகத்தின்படி வார்சுகளின் கிரமம்.

1.	பிள்ளை. ...	285 - 290	பாராக்களைப் பார்க்க.
2.	பேரன். ...	”	”
3.	கொள்பேரன்.	”	”
4.	பெண்சாதி. ...	291 - 295	”
5.	பெண். ...	296 - 299	”
6.	தௌஹித்திரன்.	300 - 302	”
7.	தகப்பன். ...	303 - 305	”
8.	தாய். ...	”	”
9.	அண்ணன் தம்பிகள்.	306 -	வது பாரா.
10.	” பிள்ளைகள்.	307	”
11.	” பேரன்கள்.	308	”
12.	தங்கை தமக்கைகள் பிள்ளைகள்.		
13.	தகப்பன் தகப்பன், அதாவது பாட்டன்.		
14.	தகப்பன் தாயார்.		
15.	சிறியதகப்பன், பெரியதகப்பன்.		

தாயபாகத்தின்படி வாரிசுகளின் கிரமம்.

16. சிறியதகப்பன், பெறியதகப்பன் பிள்ளைகள்.
17. ,, ,, பேறன்கள்.
18. பாட்டனுடைய தௌஹித்திரன்.
19. ,, தகப்பன், அதாவது கொள்பாட்டன்.
20. ,, தாயார்.
21. சிறியபாட்டன் பெறியபாட்டன்கள்.
22. ,, ,, பிள்ளைகள்.
23. ,, ,, பேறன்கள்.
24. கொள்பாட்டனுடைய தௌஹித்திரன்.
25. பிள்ளையின் தௌஹித்திரன்.
26. பேறனுடைய தௌஹித்திரன்.
27. அண்ணன் தம்பிகள் தௌஹித்திரன்.
28. ,, பிள்ளையின் தௌஹித்திரன்.
29. சிறியதகப்பன் பெறியதகப்பன்கள் தௌஹித்திரன்.
30. ,, ,, பிள்ளையின் தௌஹித்திரன்.
31. சிறியபாட்டன் பெறியபாட்டன் தௌஹித்திரன்.
32. ,, ,, பிள்ளையின் தௌஹித்திரன்.
33. தாயின் தகப்பன்.
34. மாமன்.
35. ,, பிள்ளை.
36. ,, பேறன்.
37. சிறியதாயார், பெறியதாயார் பிள்ளை.
38. தாயின் பாட்டன்.
39. தாயின் சிறியதகப்பன், பெறியதகப்பன்கள்.
40. ,, ,, பிள்ளை.
41. ,, ,, பேறன்.
42. தாயின் பாட்டனுடைய தௌஹித்திரன்.
43. தாயின் கொள்பாட்டன்.
44. தாயின் சிறியபாட்டன், பெறியபாட்டன்கள்.
45. ,, ,, பிள்ளை.
46. ,, ,, பேறன்.
47. தாயின் கொள்பாட்டனுடைய தௌஹித்திரன்.
48. மாமன் தௌஹித்திரன்.
49. ,, பிள்ளையின் தௌஹித்திரன்.
50. தாயின் சிறிய தகப்பன் பெறிய தகப்பன்களுடைய தௌஹித்திரன்.

51. தாயின் சிறிய தகப்பன் பெறியதகப்பன்களுடைய பிள்ளையின் தௌஹித்திரன்.

52. தாயின் சிறிய பாட்டன் பெறிய பாட்டனுடைய தௌஹித்திரன்.

53. ,, ,, பிள்ளையின் தௌஹித்திரன்.

ஸகுல்யர்கள்.

54. கொள்பேறனுடைய பிள்ளை.

55 ,, பேறன்.

56. ,, கொள்பேறன்.

57. அண்ணன் தம்பிகளின் கொள்பேறன்.

58. ,, கொள்பேறன் மகன்.

59. ,, கொள்பேறன் பேறன்.

60. சிறியதகப்பன் பெறியதகப்பன்கள் கொள்பேறன்.

61. ,, ,, ,, பிள்ளை.

62. ,, ,, ,, பேறன்.

63. சிறியபாட்டன் பெறியபாட்டன்கள் கொள்பேறன்.

64. ,, ,, ,, பிள்ளை.

65. ,, ,, ,, பேறன்.

66. கொள்பாட்டன் தகப்பன்.

67. ,, அண்ணன் தம்பிகள்.

68. ,, ,, பிள்ளை.

69. ,, ,, பேறன்.

70. ,, அக்கா தங்கைகள் பிள்ளை.

71. ,, தகப்பன் தகப்பன், அதாவது கொள்பாட்டன் பாட்டன்.

72. ,, சிறியதகப்பன் பெறியதகப்பன்கள்.

73. ,, ,, பிள்ளை.

74. ,, ,, பேறன்.

75. ,, பாட்டனுடைய தௌஹித்திரன்.

76. ,, கொள்பாட்டன்.

77. ,, பாட்டனுடைய அண்ணன் தம்பிகள்.

தாயபாகத்தின்படி வாரிசுகளின் கிரமம்.

78. ,, பாட்டனுடைய அண்ணன் தம்பிகளின் பிள்ளை.

79. ,, பாட்டனுடைய அண்ணன் தம்பிகளின் பேறன்.

80. ,, கொள்பாட்டனுடைய தௌஹித்திரன்.

81. ,, அண்ணன் தம்பிகளின் தௌஹித்திரன்.

82. ,, ,, பிள்ளையின் தௌஹித்திரன்.

83. ,, சிறிய தகப்பன் பெறிய தகப்பனுடைய தௌஹித்திரன்.

84. ,, சிறியதகப்பன் பெறியதகப்பன் பிள்ளையின் தௌஹித்திரன்.

85. ,, சிறியபாட்டன் பெறியபாட்டனுடைய தௌஹித்திரன்.

86. ,, சிறியபாட்டன் பெறியபாட்டன் பிள்ளையின் தௌஹித்திரன்.

87. ,, அண்ணன்தம்பிகள் கொள்பேறன்.

88. ,, ,, ,, பிள்ளை.

89. ,, ,, ,, பேறன்.

90. ,, சிறிய தகப்பன் பெறிய தகப்பனுடைய கொள்பேறன்.

91. ,, ,, ,, கொள்பேறன் பிள்ளை.

92. ,, ,, ,, கொள்பேறன் பேறன்.

93. ,, பாட்டனுடைய அண்ணன் தம்பிகள் கொள்பேறன்,

94. ,, ,, ,, கொள்பேறன் பிள்ளை.

95. ,, ,, ,, கொள்பேறன் பேறன்.

ஸமானோதகர்கள்.

96. 56 ரெ. க்குக் கீழ் எழுதலைமுறை வறைக்கும்.

97. 59 ரெ. ,, ,, ,,

தாயபாகத்தின்படி வார்சுகளின் பாத்தியம்.

98. 62 நெ. க்குக் கீழ் ஏழு தலைமுறை வரைக்கும்.
99. 65 நெ. " " "
100. 89 நெ. " " "
101. 92 நெ. " " "
102. 95 நெ. " " "
103. 76 நெம்பருடைய தகப்பன்.
104. 76 நெ. பெறியதகப்பன் சிறியதகப்பன் அவர்கள் ஆண் சந்ததி பதிமூன்று தலைமுறை வரைக்கும்.
105. 103 நெ. தகப்பன்.
106. 106 நெ. சிறியதகப்பன் பெறியதகப்பன்கள் அவர்கள் ஆண் சந்ததி பதிமூன்று தலைமுறை வரைக்கும்.
107. அப்படியே பதிமூன்று தலைமுறைக்கும் சமானோதகர்கள் வார்சு ஆகிறார்கள்.

வார்சுகள் இல்லாவிட்டால், ஆஸ்தி சர்க்கார் வசம் சேரும்.

314. மேற்சொல்லப்பட்ட சபிண்டர்கள், சமானோதகர்கள், பந்துக்கள் - இவ்வார்சுகளில் ஒருவரு மில்லாவிட்டால், பிராமணனுடைய சொத்து அவனுடைய குருவுக்கு, குருவில்லாவிட்டால் சிஷ்யனுக்கு, சிஷ்யனில்லா விட்டால் கூடப்படித்தவனுக்கு, அவனுமில்லாவிட்டால் படித்து அறிந்த வித்வானுக்கு, இவனுமில்லா விட்டால் எந்த பிராமணனுக்காவது சேருமென்றும் பிராமணனைத் தவிற மைத்த ஜாதியாருடைய ஆஸ்தி விஷயத்தில் பாத்தியஸ்தர்களில்லாவிட்டால் அது சர்க்காருக்குச் சேருமென்றும் தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் குருசிஷ்யன் முதலியவர்கள் யாராவது பிராமணனுடைய சொத்துக்கு பாத்தியஸ்தர்களாக யேற்பட்ட கேசுகள் இதுவரையில் காணப்படவில்லை. மேலும், பிராமணனுடைய சொத்தா யிருந்தாலும்சரி பாத்தியஸ்தர்களில்லா விட்டால் சர்க்காருக்குச் சேருமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (8 மூ. இ. அ. 500). பாத்தியஸ்தர்கள் ஒருவரு மில்லையென்று தெளிவாக ருசுவில்லா விட்டால்தான் சொத்து சர்க்காருக்குச் சேருமேயொழிய இல்லாவிட்டால் சேரமாட்டாது. (12 மூ. இ. அ. 448). சர்க்காருக்கு சொத்து சேர்ந்தால் முதல் பாத்தியஸ்தனால் ஒத்திபந்தகம் முதலிய பராதீனங்களுக்கு அது உள்படுத்தப்பட்டிருந்தால் அந்த பராதீனங்களாலும் அவனுடைய கடன்களாலும் அவர்கள் கட்டுப்படுவார்கள். (11 மூ. இ. அ. 619). மேலும், கடைசி வார்சு வித

வை முதலிய சொல்ப பாத்திய முடையவளாக யிருந்தால் அவளுடைய அதிகாரத்தை மீறி அவசியமன்றியில் செய்திருந்த பராதீனங்களை சர்க்கார் ஆக்ஷேபித்து ரத்து செய்துகொள்ளலாம். (8 மூ இ. அ. 529).

சேர்ந்திருந்தவர்களுக்குண்டாகும் வார்சு பாத்தியம்.

315. ஒருதரம் பிறித்துக்கொண்டு பிறகு சேர்ந்திருந்தவர்கள் மிதாக்ஷர குடும்பத்திற் போல பொதுபாத்திய முள்ளவர்களாக ஆகாமல் கொஞ்சம் ஏற்றத் தாழ்த்தியாக தாயபாக குடும்பத்தின் பிறகாறம் தனிபாத்திய முள்ளவர்களாக ஆகிறார்களென்று கர்ணப்படுகிறது. சேர்ந்த பாகஸ்தர்களில் ஒருவ னிறந்தால் யாஞ்யவல்கியர் முதலிய ஸ்மிருதிகளின்படி அவனுடைய சொத்துக்கு முதலில் (1.) ஆண்சந்ததிகள் வார்சாகிறார்கள். இவர்களில்லாவிட்டால் (2.) சேர்ந்த அண்ணன் தம்பிகளில் ஒரு தாய்வயிற்றில் பிறந்தவர்கள் வார்சாகிறார்கள். இவர்களில்லா விட்டால், (3.) சேர்ந்த வேறு தாய் வயிற்று அண்ணன் தம்பிகள் பிறிந்த ஒரே தாய்வயிற்று அண்ணன் தம்பிகளுடன் சேர்ந்து பொதுவில் வார்சாகிறார்கள். பிறகு (4.) பிறிந்த ஒரேதாய்வயிற்று அண்ணன் தம்பிகளும், பிறகு, (5.) சேர்ந்த தகப்பன், இல்லாவிட்டால் சிறிய தகப்பன் பெறியதகப்பன், (6.) பிறிந்த வேறு தாய்வயிற்று அண்ணன் தம்பிகள், தகப்பன் - (7.) தாய் - (8.) பெண்சாதி - (9.) அக்காதங்கைகள் - (10.) இவர்க ளொருவருமில்லாவிட்டால ஆஸ்திதாரனுடைய மைத்த சபிண்டர்களும் சமானோதகர்களும் வார்சாகிறார்கள். (இ. லா. ரி. 1 க. 27; 5 ஐ. 249; 7 ஐ. 35; 20 ஐ. 197).

(4.) வார்சு பாத்தியத்தைக் கெடுக்கும் தோஷங்கள்.

வார்சுபாத்தியத்தைக் கெடுக்கும்தோஷங்கள்.

316. ஜாதிக்குக் தக்கபடி சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கர்மங்களைச் செய்ய சொத்து ஏற்பட்டிருக்கின்றதென்றும் சொத்துக்கு வார்சாகிறவர்கள் ஆஸ்திதாரனுடைய ஆத்மா நற்கதியையடைய வேண்டுவதற்கு வேண்டிய கர்மங்களை நடத்த யோக்கியதை யுள்ளவனாயிருக்க வேண்டுமென்றும் அந்த யோக்கியதை யில்லாதவர்கள் வார்சாக மாட்டார்களென்றும் தர்ம சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. வார்சு பாத்தியத்தைக் கெடுக்கும் தோஷங்கள் அனேகம் சொல்லப் பட்டிருந்தாலும் அவைகளில் சிலதுக்கு அதாவது பொய் சொல்லு

வது, மோசம் செய்வது, லோபித்தனம், துர்நடத்தை, தகப்பனுக்குக் கீழ்ப்படியாமை, சூதாடுதல், குடி முதலியவைகளுக்குப்பிராயச்சித்தம் ஏற்பட்டிருப்பதால் அவைகள் இந்தக்காலத்தில் கோர்ட்டுகளில் எடுத்துச் சொல்லத்தக்கினவைகளல்ல. (1 ஸ்ட்ரே. 159; 3 அ. ஐ. 267; 1848 ஆு பம். ஸ. தீ. 320; 1858 ஆு ம. தீ. 118; ஆனல், 6 பம். ஸ. தீ. 62; 11 ஸ. 530 பார்க்கவும்). ஆகையால் பிராயச்சித்தத்தால்நிவர்த்திசெய்யக்கூடாத தோஷங்கள் மட்டுந்தான் முக்கியமானவைகள். அவைகளைவையென்றால் ஜாதியை யிழந்துவிடுகிறது, நபும்ஸகனு யிருப்பது, பிறவிமுதல் நீங்காத குருட்டுத்தனம் செவிடு அல்லது ஊமை, பைத்தியம், அவயவமில்லாதிருப்பது, நிவர்த்திசெய்ய முடியாத வியாதி மேற்சொல்லப்பட்ட தோஷமுள்ளவர்கள் வார்சுபாத்தியத்தால் சொத்தை யடையமாட்டார்களென்று மனுஸ்மிருதி யாஞ்யவல்கிய ஸ்மிருதி முதலிய தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜாதியை யிழந்துவிடுகிறது.

317. மதம் மாறுதலாலாவது பகிஷ்காரம் முதலிய வேறு எந்தக் காறணத்தாலாவது ஜாதியை விட்டு விலகினவனுக்கு சொத்து பாத்தியங்களாவது வார்சுபாத்தியங்களாவது போகமாட்டாவென்று சர்க்காரால் 1850 ஆு 21-வது ஙெ. சட்டத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆகையால் இந்து புருஷர்களாவது இந்து ஸ்திரீகளாவது கிறிஸ்து முதலிய வேறுமதங்களில் சேருவதால் மட்டும் அவர்களுக்குமைத்தவர்கள் சொத்திலுள்ள வார்சு பாத்தியம் போகமாட்டாது. (2 அ. ஐ. 446; இ. லா. ரி. 1 பம். 559). வேறு காறணங்களால் அந்தப் பாத்தியம் போயிருந்தால் மேற்சொல்லப்பட்ட சட்டம் ரக்ஷிக்கமாட்டாது. உதாஹரணங்கள்:—

(1.) ஒரு ஆஸ்திதாரன் இறந்துபோகும் பொழுது அவனுடைய விதவையும் அதற்குமுந்தி ஜாதியைவிட்டு விலகின பிள்ளையும் இருந்தார்கள். சொத்து முழுவதும் பிள்ளைக்குச் சேரும்.

(2.) ஒரு ஆஸ்திதாரன் இறந்து போகும்பொழுது அவனுக்கு ஆண்சந்ததியி லொருவருமில்லை. விதவா விவாகத்தில் சேர்ந்தவர்களுடன் போஜனம் செய்ததால் ஜாதியைவிட்டு நீக்கப்பட்ட அவனுடைய பெண்சாதியும் சாதியிலிருந்து விலகின தாயாதிகளில் சிலரும் இருந்தார்கள். பெண்சாதியே வார்சாவாள்.

(3.) ஒரு ஆஸ்திதாரன் இறந்துபோகும் பொழுது அவனுக்கு ஆண்சந்ததி யொருவருமில்லை. விலக்கப்பட்டு விபசாரியா யிருந்து

வந்த விதவையும் விலகின ஞாதிகள்மட்டு மிருந்தார்கள். விதவை வார்சாகமாட்டாள். ஏனென்றால் 1850 ஞூ 20-வது ஙெ. சட்டத்தால் விலக்கப்பட்டிருந்த தோஷம் பாத்தியத்தைக் கெடுக்கா விட்டாலும் விபசாரியா யிருந்த காரணத்தால் வார்சுபாத்தியம் நீங்கிவிடும். (5 க. ஐ. 466; 13 க. ஐ. 1, 25, 75; இ. லா. ரி. 5 க. 776).

(4.) அலகபாத் தேசத்தில் "ஏ" என்ற தகப்பனும் "பீ" என்ற மகனும் இந்துமதத்தைவிட்டு மகம்மதீய மதத்தைச் சேர்ந்தார்கள். பிறகு "ஏ" இறந்தான். "பீ" என்பவன் இந்துமதத்தி லிருந்த அவன் சிறியதகப்பனுடைய சொத்துக்கு வார்சாவானென்று தீர்மானிக்கப் பட்டது. (இ. லா. ரி. 11 அ. 100).

(5.) மைசூர் முதலிய சில சுதந்தர ராஜ்யங்களில் மேற்சொல்லிய 1850 ஞூ த்திய 20-வது ஙெ. சட்டம் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வறப்படவில்லை. ஆகையாலந்த பிறதேசங்களில் ஜாதியை விட்டு விலகினதால் வார்சுபாத்தியம் போய்விடுமென்றே சொல்லத் தக்கதா யிருக்கிறது.

318. நபும்சகர்களுக்கு வார்சுபாத்தியம் கிடையாது. குருடு, ஊமை, செவிடு இந்த தோஷங்கள் பிறவு முதலிருந்து நிவர்த்தி செய்யத்தகாததாக யிருந்தாற்றான் வார்சு பாத்தியம் போகுமேதவிற மத்தியகாலத்தி லுண்டாயிருந்தாலும் சரி, நிவர்த்தி செய்யத்தக்கதாக யிருந்தாலும் சரி வார்சுபாத்தியம் போகமாட்டாது. (14 க. ஐ. 273; இ. லா. ரி. 1 பம். 177; 1 க. ஐ. 117; 1870 ஞூ பம். ஸ. தீ. 661; இ. லா. ரி. 6 அ. 322; 4 பம். ஐ. 135; இ. லா. ரி. 1 பம். 557; இ. லா. ரி. 18 க. 387, 111).

நபும்சகத்தனம், குருடு, ஊமை, செவிடு.

319. பைத்தியம் பிடித்தவர்கள் வார்சாகத் தக்கவர்களல்ல. பைத்திய மென்றால் முழுவதும் புத்தி கெட்டுப்போய் கெட்ட காரியங்களைச் செய்து பிறர்களுக்குக் கெடுதி யுண்டாக்கும்படியான நிலைமை யென்று எண்ணக்கூடாது. தான் செய்யும் காரியம் சரியானது இல்லையென்று அறிந்து கொள்ளப் போதுமான அறிவு இல்லாமை பைத்திய மென்று எண்ணப்படும். (1 ம. ஐ. 214; இ. லா. ரி. 12 அ. 530). பைத்தியத்தால் வார்சு பாத்தியம் போவதற்கு அது பிறவி முதலிருக்க வேண்டுவதா பிறகு உண்டாயிருந்தால் போதுமானதா என்கிற விஷயத்தில் ஐகோர்ட்டார்கள் வெவ்வேறு அபிப்பிராய முள்ளவர்களா யிருக்

பைத்தியம்.

கிறார்கள். பம்பாய் ஐகோர்ட்டு தீர்மானப்படி பிறவி முதல் பைத்தியமாயிருந்தால் மட்டும் வார்சுபாத்தியம் போகுமேயன்றி மத்தியகாலத்தில் உண்டான பைத்தியத்தால் பாதகமில்லை. (இ. லா. ரி. 1 பம். 177, 182, 554; 13 மூ. இ. அ. 519; 14 மூ. இ. அ. 176). கல்கத்தா அலகாபாத் ஐகோர்ட்டார்கள் தீர்மானப்படி பிறவி முதல் பைத்தியமில்லாவிட்டாலும் வார்சுபாத்தியம் ஏற்படுகிற காலத்தி லிருந்தால் அதினால் வார்சு பாத்தியம் போய்விடு மென்றும் அந்தப் பைத்தியம் எப்பொழுதும் நிவர்த்தி செய்யத்தகாததா யிருப்பது அவசியமில்லை என்றும் ஏற்படுகிறது. (9 க. ஐ. 204, 198; இ. லா. ரி. 10 க. 63 இ. லா. ரி. 5 அ. 509; இ. லா. ரி. 8 க. 149).

அங்க ஹீனர்கள்.

320. கால் கைகள் இல்லாமல் வேலை செய்யத்தகாத அங்க ஹீனர்கள் வார்சுபாத்திய முள்ளவர்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. பிறவிமுதல் அங்கஈனர்களாக இல்லாமல் மத்தியகாலத்தில் வியாதியாலாவது வேறு எந்தக்காறணத்தாலாவது கால்கைகள் போய் அசையமாட்டாம லிருக்கும் நொண்டிகளும் முடங்களுங்கூட வார்சுபாத்திய மற்றவர்களென்று சொல்லத்தக்கதா யிருக்கின்றது. (இ. லா. ரி. 1 பம். 185; வெ. பூ. 578; பம். ஸி. ரி. 151).

நீங்கத்தகாத வியாதி.

321. நீங்கத்தகாத குஷ்டரோகம் முதலிய வியாதிகளால் பாதிக்கப் பட்டவர்கள் வார்சுபாத்திய மற்றவர்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த வியாதிகள் பிறந்ததுமுத லிருக்கவேண்டிய தனவசியகம். மத்தியகாலத்தி லுண்டா யிருந்தாலும் அவைகள் மிகவும் கெட்டவைகளாகவும் நீங்கத்தகாதவைகளாகவு மிருந்தால் வார்சுபாத்தியம் போய்விடும். தேகமெல்லாம் புண்ணும் புண்களை யாற்றி நிவர்த்தி செய்ய முடியாம லிருந்தாற்றான் குஷ்டரோகத்தால் வார்சுபாத்தியம் போகும். (1860 ஸூ ம. தீ. 239; இ. லா. ரி. 5 பம். 145; இ. லா. ரி. 1 பம். 554). க்ஷயரோகம் ராசபிளவு இவைகள்கூட கொஞ்சங்கூட நிவர்த்திசெய்ய முடியாத ஸ்திதியிலிருந்தால் வார்சுபாத்தியம் போய்விடுமென்று சொல்லலாம். (2 ஸ. 125).

வியபிசாரம்.

322. இறந்த ஆஸ்திதாரனுக்கு ஆண்சந்ததி யொருவருமில்லாமல் அவனுடைய பெண்சாதி வார்சாக யேற்படும் காலத்தில் அதற்கு முந்தியே அவளுக்கு விபசார தோஷ முண்டாயிருந்தால் வார்சுபாத்திய முண்டாகமாட்

டாது. பெண், தாயார், தகப்பனைப்பெற்ற தாயார், பாட்டனுடையதாயார், இவர்கள் முதலிய பெண் வார்சுகளுடைய வார்சு பாத்தியத்திற்கு பங்காளா தேசத்தில்மட்டும் விபசார தோஷத்தால் கெடுதலுண்டே யொழிய மைத்த இடங்களில் பாதகமில்லை என்று இதற்கு முந்தியே தெரிவித்திருக்கிறோம். (294, 297, 304 - வது பாராக்கள்).

புனர் விவாகம். புருஷனிறந்த பிறகு பெண்சாதி திரும்ப விவாகம் செய்துகொண்டால் புருஷன் சொத்தி லவளுக்குள்ள பாத்தியமெல்லாம் போய் அனந்தர வார்சுகள் பாத்யஸ்தர்களாவார்கள். (1856 ௵ 15-வது ௲. சட்டம் செ. 2). அந்த சொத்து அவளுக்குப் புருஷனால் தானமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும் திரும்ப விவாகம் செய்து கொள்ளும்படி புருஷன் அனுமதிகொடுத்துப் போயிருந்தாலும் பெண்சாதியின் பாத்தியம் போக மாட்டாது. (295 - வது பாரா.) பெண், தாயார், தகப்பனுடைய தாயார் முதலிய பெண் வார்சுகள் திரும்பவிவாகம் செய்து கொண்டாலும் அவர்களுடைய வார்சு பாத்தியத்திற்குக் கெடுதி யுண்டாக மாட்டாது. (ஷை சட்டம் செ. 5; 297, 304 - பாராக்கள்).

323. ஆசிரமம். சந்நியாஸம், வானப்பிரஸ்தம், நித்திய பிரம்மசரியம், இந்த ஆசிரமங்களில் எதிலாவது புகுந்து முற்றிலும் வைராக்கியமடைந்து இவ்வுலக நடவடிக்கைகளை முற்றிலும் விட்டுவிட்டவர்களுக்கு வார்சுபாத்தியம் நிற்க மாட்டாது. அப்படிப்பட்டவர்கள் இறந்தவர்களாகவே யெண்ணப்பட்டு அவர்களுக்குப் பிந்தியவார்சுகள் பாத்தியஸ்தர்க ளாவார்கள். ஒன்றையும் மேற்போட்டுக் கொள்ளாமல் விரக்தியாக யிருந்ததால் மட்டும் வார்சுபாத்தியம் தப்பிப்போய் விடுமென்று நினைக்கக்கூடாது. (1 ஸ. 209).

324. ஔரச தத்வம். எந்த வார்சுகளாயினும் அவர்களுடைய தாய்தகப்பனுக்குக் கிரமமாகப் பிறந்த பிள்ளைகளல்லது பெண்களல்லவென்று தெளிவாக ருசுக் காணப்பட்டால் அவர்களுக்கு வார்சுபாத்திய முண்டாகமாட்டாது. 1872-ம் ௵ 1-வது ௲. எவிடன்ஸ் ஆக்ட்டு 112-வது பிறிவின்படி ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்திருக்கும் பொழுதாவது அவர்கள் பிறிந்திருந்த விஷயத்தில் பிறிந்த தேதிமுதல் 280 தினங்களுக்குள்ளேயாவது பிறந்த குழந்தை அவர்களுக்குப் பிறந்ததாகவே எண்ணப்படும். ஆனால், கர்ப்ப முண்டாகக் கூடிய எக்காலத்திலாவது அந்த ஸ்திரீ புருஷர்கள்

சேர்ந்திருக்கவில்லை என்று தெளிவாக ருசுக்காணப்பட்டால் அவர்களுக்குப் பிறந்ததாக ஊகிக்கமுடியாது. உதாஹரணங்கள்—

(1.) ஸ்திரீ புருஷர்களிரண்டுபேரும் சேர்ந்திருக்கையில் பிள்ளைபிறந்தது. ஆனால் பிறந்ததுமுதல் புருஷன் நபும்சகனென்றும் அவன் நபும்சகம் நிவர்த்தியாகத் தக்கதில்லை யென்றும் நிவர்த்தியாகவில்லை என்றும் அவன் ஸ்திரீகளுடன் புணர அசக்தனென்றும் அவனால் கர்போத்பத்தி உண்டாவது முடியாதென்றும் அவனைப் பலவாறு செவ்வையாய் பரீக்ஷித்துப் பார்த்த டாக்டர் முதலியவர்களுடைய ருசு யேற்பட்டது. அந்தப்பிள்ளை அவனுக்குப் பிறந்ததாக எண்ணப்பட மாட்டாது.

(2.) புருஷனைவிட்டு பெண்சாதி பிறந்த வீட்டிற்குப்போய் விட்டாள். பிறகு ஒரு வருஷத்தில் அவளுக்கு ஒரு பிள்ளை அல்லது பெண்பிறந்தது. பெண்சாதி புருஷனைவிட்டுப் போனதன் பிறகு அந்த ஸ்திரீ புருஷர்கள் சேரவில்லை என்று ருசுயேற்பட்டால் அந்தப் பிள்ளையாவது பெண்ணாவது அவர்களுக்குப் பிறந்ததாக எண்ணப்படமாட்டாது.

(3.) புருஷன் வேறு தேசத்திற்குப் போய் சில வருஷங்கள் அங்குமிங்கும் திரிந்துவிட்டுப் பிறகு பெண்சாதியிடம் சேர்ந்தான். அப்படிச் சேர்ந்த நான்குமாதங்களுக்குள் அவர்களுக்குச் சந்ததி யுண்டாயிற்று. அது அவர்களுக்குப் பிறந்த சந்ததியாகமாட்டாது.

(4.) புருஷன் இறந்துபோகும் காலத்தில் பெண்சாதி கர்ப்பமாகவிருந்து பிறகு சந்ததி யுண்டானால் அந்த சந்ததி அவர்களுக்குப் பிறந்ததாகவே எண்ணப்படும். மேலும் வார்சுபாத்தியம் ஏற்படும் காலத்திற்கு முந்தியே பிறந்திருந்த பெண்கள் அல்லது பிள்ளைகளுக்கும் எவ்விதமான பாத்தியங்களுண்டோ அந்தக்காலத்தில் கர்ப்பத்திலிருந்து பிறகு பிறந்தவர்களுக்கும் அதே பாத்தியங்களுண்டு. (9. க. ஐ. 397; 5 பம். ஸ. ஹ. 315).

(5.) புருஷ னிறந்த காலத்தில் பெண்சாதி கர்ப்பமா யிருந்தாளென்று சொல்லப்பட்டது. ஆனால் புருஷனிறந்த ஒருவருஷத்திற்குப்பிறகு அவளுக்கு சந்ததியுண்டாயிற்று. இந்த சந்ததி ஔரச சந்ததியாக நினைக்கப்பட மாட்டாது. சில ஸ்திரீகள் இரண்டு மூன்று நான்கு வருஷங்கள் கூட தங்கள் கர்ப்பங்களை தரித்துக்கொண் டிருப்பார்களென்று நம்முடைய தேசத்தில் சொல்லிக் கொள்ளுகிறார்களே

யொழிய இந்த விஷயம் கோர்ட்டிலனேகமாய் அங்கீகரிக்கப்படமாட்டாது.

325. மேல் பாருக்களில் சொல்லப்பட்ட தோஷங்கள் வார்சுபாத்திய முண்டாவதற்கு முந்தி உண்டாயிருந்தால் கெடுதியே யொழிய வார்சுபாத்திய முண்டாவதற்குப் பிந்தி எந்த தோஷங்களுண்டானாலும் பாதகமில்லை. (1854 ஷு பம். ஸ. தீ. 244; இ. லா. ரி. 5 அ. 509; இ. லா. ரி 5 க. 776; இ. லா. ரி. 14 ம. 294). மேலும் மேல் சொல்லப்பட்ட தோஷங்கள் புருஷர்களுடையவும் ஸ்திரீகளுடையவும் வார்சுபாத்தியங்களைக் கெடுக்கும்.

மேல் தோஷங்கள் எப்பொழுது எவ்வளவு வரைக்கும் பாதிக்கும்.

மேல் சொல்லப்பட்ட தோஷங்க ளுள்ளவர்கள் வார்சுபாத்தியத்தால் சொத்தை யடையத் தகாதவர்களா யிருந்தாலும் அவர்களுக்கு தானமாகவாவது உயில் மூலமாயாவது சொத்துக் குடுபட்டால் அதை யடையத்தக்கவர்கள். (இ. லா. ரி. 2 அ. 809; இ. லா. ரி. 18 க. 341).

எந்தத் தோஷத்தாலாவது புருஷர்களுக்கு வார்சுபாத்தியம் கெட்டுப்போய்விட்டால் அவர்களுக்கும் அவர்கள் பெண்சாதிகளுக்கும் அவர்கள் சுவீகார புத்திரர்களுக்கும் ஜீவனும்சத்திற்கு மட்டில் பாத்தியமுண்டாகும். அப்படி வார்சுபாத்திய மிழந்தவர்களுக்கு யேதேனும் சுவயார்ஜித சொத்திருந்தால் அது அவர்களுடைய சுவீகாரப் பிள்ளைக்காவது அல்லது விதவைக்காவது சேரும். (1857 ஷு ம. தீ. 210). ஆனால், அப்படி பாத்தியத்தை யிழந்தவர்களுக்கு தோஷமற்ற பேறன்களாவது பிள்ளைகளாவ திருந்தால் இவர்களுக்கு வார்சுபாத்திய முண்டாகும்.

326. மேல் பாருக்களில் சொல்லப்பட்ட தோஷங்களால் பாத்தியத்தை யிழந்தவர்கள் வார்சுகளாக யேற்படும்பொழுது அவர்க ளில்லாததுபோலவே அதாவது இறந்தது போலவே யெண்ணப்பட்டு அவர்களுக்குப் பிந்திய வார்சுகளுக்குச் சொத்துச் சேரும். உதாஹரணங்கள்—

அனந்தரவார்சுகள் பாத்தியஸ்தர்க ளாகுதல்.

(1.) இறந்த ஒரு ஆஸ்திதாரனுக்கு பைத்தியத்தால் வார்சுபாத்தியத்தை யிழந்த ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணு மிருந்தார்கள். பெண் வார்சாவாள். (2 டப்ளியூ. மெக். 42).

(2.) இறந்த ஒரு ஆஸ்திதாரனுக்கு பைத்தியத்தால் வார்சுபாத்தியமிழந்த பெண்ணும் அவளுக்குப் பிறந்த இறண்டு தௌஹித்திரர்களுமிருந்தார்கள். இந்த தௌஹித்திரர்கள் வார்சாகிறார்கள். (13 மூ. இ. அ. 519).

(3.) ஒரு ஆஸ்திதார னிறந்தகாலத்தில் அவனுக்கு பிறவிக் குருடனான ஒரு பிள்ளையும் இறண்டு பெண்களுமிருந்தார்கள். ஆஸ்திதாரனிறந்து போகும்பொழுது அந்த பிறவிக் குருடனான பிள்ளையினுடைய பெண்சாதி கர்ப்பமாயிருந்து பிறகு ஒருதோஷமுமில்லாத பிள்ளையைப் பெற்றாள். பெண்களுக்கு முந்தியே பிள்ளைவயிற்று பேறன் வார்சாவதால் மேற்சொன்னபடி பிறந்த பையன் வார்சாவான்.

(4.) ஒரு ஆஸ்திதார னிறந்தபொழுது அவனுக்கு "ஏ" என்கிற ஒரு பிறிந்த சகோதரனும் பிறவி ஊமையான "பீ" எனகிற வேறொருபிறிந்த சகோதரனும் இவன் பிள்ளை "ஸீ" என்பவனு மிருந்தார்கள். இன்னிலைமையில் சொத்து முழுவதும் "ஏ" என்பவனுக்குச் சேருமே யல்லாமல் "ஸீ" என்பவனுக்குக் கொஞ்சங்கூடச் சேராது. ஏனெனில் அண்ணன் தம்பிகளிருக்கும் பொழுது, அண்ணன் தம்பிகள் பிள்ளைகள் பாத்தியஸ்தர்களல்ல.

(5.) அப்படிப் போலவே ஒரு ஆஸ்திதாரனுக்கு வார்சுபாத்தியமிழந்த தங்கை பிள்ளை யொருவனும் தங்கை பேற னொருவனு மிருந்தால் தங்கை பேறன் வார்சாகமாட்டான். ஏனென்றால் தங்கைபேறனுக்கு எப்பொழுதும் வார்சுபாத்தியம் கிடையாது. (2 க. ஐ. 115 9 க. ஐ. 198, 203).

(6.) மூன்றாவது உதாஹரணத்தில் ஆஸ்திதார னிறந்த பிறகு அவன் குருட்டுப்பிள்ளையின் பெண்சாதி கர்ப்பமாகிப் பிள்ளை பிறந்தால் பெண்களிடத்திலிருந்து இந்தப் பிள்ளைக்கு சொத்து வறமாட்டாது. ஆனால் பெண்கள் முழுபாத்திய மில்லாத வார்சுகளானதால் அதாவது அவர் ளிறக்குங்காலத்தில் முந்திய ஆஸ்திதாரனுடைய வார்சுகளே பாத்தியஸ்தர்க ளானதால் பெண்களிறந்த பிறகு அந்தக் குருடனுடைய மகனுக்கு சொத்துச் சேரும்.

(7.) ஆஸ்திதாரனுடைய மகன் வார்சுபாத்திய மிழந்து எந்தப் புருஷனுக்காவது சொத்துச் சேர்ந்த பிறகு அந்த பாத்தியமிழந்த பிள்ளையின் பெண்சாதி கர்ப்பந்தரித்து பிள்ளை பிறந்தால் அவனுக்கு வார்சுபாத்திய முண்டாகமாட்டா தென்று பங்காளா ஐகோர்ட்டார்

ரும் பம்பாய் ஐகோர்ட்டாரும் தீர்மானித் திருக்கிறார்கள். (1 க. ஐ. 117; இ. லா. ரி. 5 அ. 509; 2 க. ஐ. 103; இ. லா. ரி. 6 பம். 616).

(8.) ஆனால் ஒரு கேசில் இதற்கு விரோதமாக மதராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். "ஏ" என்கிற ஆஸ்திதாரனிறந்து போகையில் அவனுக்கு "பீ" "ஸீ" என்கிற இரண்டு பிள்ளைக ளிருந்தார்கள். அவர்களில் "பீ" என்பவன் பிறவி ஊமையா யிருந்ததால் சொத்து முழுவதும் "ஸீ" க்குச் சேர்ந்தது. அதற்குப் பிறகு "பீ" என்பவனுடைய பெண்சாதி கர்ப்பந்தரித்து தோஷமற்ற பிள்ளையைப்பெற்றாள். இந்தப்பிள்ளை "ஸீ" என்பவனோடு சேர்ந்த பாகஸ்தனாய் சொத்தில் பாதிபாகத்திற்கு பாத்தியஸ்த னாவானென்று மதராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித் திருக்கிறார்கள். (இ. லா. ரி. 9 ம. 64).

327. வார்சுபாத்தியத்தைக் கெடுத்த தோஷங்கள் பிறகு நிவர்த்தியானால் பாகத்திற்குப் பிந்தி பிறந்த பிள்ளைகளின் விஷயத்தைப் போல வார்சுபாத்தியம் திரும்ப உண்டாகு மென்று தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கின்றது. ஆனால் தோஷம் நிவர்த்தியாவதற்கு முந்தியே சொத்து வேறொருவனுக்குச் சேர்ந்தபக்ஷத்தில் அது திரும்ப வரமாட்டாது. (252-வது பாராவைப்பார்க்க வேண்டியது.)

தோஷங்கள் நிவர்த்தியானால் பலன்.

உதாஹரணங்கள்:—

(1.) ஒரு ஆஸ்திதாரன் இறந்துபோகுங் காலத்தில் அவனுடைய பெண்சாதியும் பிறவிக் குருடனான ஒரு பிள்ளையும் உயிருடனிருந்தால் பெண்சாதி வார்சாவாள். பிறகு அந்தப்பிள்ளைக்குக் கண்ரோகம் நிவர்த்தியானாலும் விதவையின் சுவாதீனத்திலிருந்து அவனுக்கு சொத்து வறமாட்டாது. ஆனால் அவளுக்குப் பிறகு பிள்ளையே நெருங்கின வார்சானதால் அவனுக்குச் சொத்துச் சேரும்.

(2.) ஒரு ஆஸ்திதார னிறந்து போகும்பொழுது அவனுக்கு ஒரு பிறவிக் குருடனான பிள்ளையும் ஒரு பிறிந்த சகோதரனு மிருந்ததால் சொத்துக்கு இந்த சகோதரன் வார்சானான். பிறகு அந்தப் பிறவிக் குருடனுக்கு கண்ரோகந் தீர்ந்தாலும் அவனுக்கு சொத்துக் கிடைக்கமாட்டாது. ஏனெனில் அந்தப் பிறிந்த சகோதரன் முழுவார்சுபாத்திய முடையவனானதலால் அவனுக்குப் பிறகு அவனுடைய பிள்ளைகளே வார்சாவார்கள். (10 மூ. இ. அ. 279; 2 க. ஐ. 103). அந்த பிறிந்த சகோதரனுக்குப் பிள்ளை முதலிய வார்சுகளெவரு மில்லாவிட்டால் அண்ணன்மகனே நெருங்கிய வார்சாவதால் அவனுக்கு சொத்துச்சேரும்.

(5.) பெண்வார்சுகள் விஷயமான விசேஷ விதிகள்.

பெண் வார்சுகளுக்கு ஆஸ்தியில் சம்பூர்ண சுவாதந்திரம் இல்லை.

328. ஒருவ னிறந்தபிறகு அவனுடைய சொத்து அவனுடைய வம்சத்தார்களுடைய அனுபவத்திலேயே யிருக்கவேண்டுமே யொழிய மைத்த வம்சத்தார்களுக்குச்சேர்ந்துபோகக்கூடாதென்கிற கருத்து இந்துக்களில் வெகுகாலமாய் ஸ்திரப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தால் ஆண் வார்சுகளுக்கும் பெண்வார்சுகளுக்கும் சில வித்தியாச மேற்பட்டிருக்கிறது. புருஷ வார்சுக்கு சொத்துக்கிடைத்தால் அதில் அவனுக்கு சகல சுவாதந்திரமு முண்டாகிறது. ஆகையால் அந்தசொத்தை அவன் இஷ்டம்வந்தபடி சிலவுசெய்யலாம். பராதீனம் செய்யலாம். மேலும் அவனிறந்த பிறகு அது அவனுடையவார்சுகளுக்கே அதாவது அவனுடைய பிள்ளை முதலியவர்களுக்கே சேருமேயொழிய முதல் ஆஸ்திதாரனுடைய வார்சுகளுக்குச்சேரமாட்டாது. பெண் வார்சுகளுக்கு அதாவது பெண்சாதி முதலியவர்களுக்கு வார்சு பாத்தியத்தால் புருஷர்களுடைய சொத்துக் கிடைத்தால் அதில் அவர்களுக்கு முழுபாத்திய முண்டாகாமல் ஆயிசுவறையிலனுபவிக்கவும் அவசியமான காரியங்களுக்குச் சிலவு செய்யவு மட்டும் பாத்திய முண்டாகிறது. இதுவுமல்லாமல் அவர்களிறந்த பிறகு இறந்துபோன ஆஸ்திதாரனுடைய எவர் நெருங்கிய வார்சா யிருப்பார்களோ அவருக்கே அந்தசொத்து சேருமே யொழிய அந்த ஸ்திரீகளுடைய வார்சுகளுக்குச் சேரமாட்டாது. (293, 296-வது பாராக்கள்.) பம்பாய் பிரசிடென்சியைத்தவிற மைத்த சம்பிரதாயங்களின்படி எல்லாப் பெண்வார்சுகளுக்கும் அதாவது பெண்சாதி, பெண், தாயார், தகப்பனுடையதாயார், பாட்டனுடைய தாயார், தமக்கை, தங்கை முதலியயெல்லாப் பெண்வார்சுகளுக்கும் மேல் சொல்லப்பட்ட குறைவான பாத்தியந்தான் ஏற்பட்டிருக்கிறது. (11 மூ. இ. அ. 139, 173, 487, 589; 8 மூ. இ. அ. 529, 550; 13 க. ஐ. 5, 53, 76; 2 மூ. இ. அ. 331; 1 பம். ஐ. 130, 117; 2 பம். ஐ. 10; 4 பம். ஐ. 163; 6 பம். ஐ. 1, 215; இ. லா. ரி. 3 பம். 353, 369; இ. லா. ரி. 4 பம். 187; இ. லா. ரி. 5 பம். 670; இ. லா. ரி. 16 பம். 229; 3 பம். ஸ. தீ. 128; 6 பம். ஸ. தீ. 77; 4 பம். ஸ. தீ. 330; 14 க. ஐ. 245; இ. லா. ரி. 4 க 744; 3 ம. ஐ. 312; 6 ம. ஐ. 310; இ. லா. ரி. 3 ம. 290; 1 பம் ஸ. தீ. 162; 4 பம். ஸ. தீ. 310; 6 பம். ஸ. தீ. 53; 7 பம். ஸ. தீ. 108; 3 ஸ. 140; 2 ம. ஐ. 402; 8 ம. ஐ. 88; இ. லா. ரி. 1 ம. 174; இ. லா. ரி. 1 அ.

661). அந்த சொத்து ஸ்தாவரமானுலும் சரி, ஜங்கமமானுலும் சரி, ஸ்வயார்ஜிதமானுலும் சரி, பித்ரார்ஜிதமானுலும் சரி, அதில் பெண் வார்சுகளுக்குக் குறைவான பாத்தியங்கள்தா னுண்டென்று தீர்மானிக்கப்பட் டிருக்கின்றது. (11 மூ. இ. அ. 139, 487; இ. லா. ரி. 8 ம. 290, 305). சமண மதஸ்தர்களில் மட்டும் ஆஸ்திதாரனுடைய ஸ்வயார்ஜித சொத்தின்பேறில் பெண்வார்சுகளுக்கு சகலபாத்திய முண்டென்றும் பித்ரார்ஜித சொத்தில்கூட ரொம்ப பாத்திய முண்டென்றும் காணப்படுகின்றது. (6 அ. ஐ. 382; இ. லா. ரி. 1 அ. 688). மிதிலதேசத்திலும் பம்பாய் தேசத்திலும் பெண் வார் சுகளுக்கு ஸ்தாவர சங்கம சொத்துக்களிலும் ரொம்பபாத்திய மிருப்பதாகத் தெறிய வருகிறது. (இ. லா. ரி. 10 க. 392; 1 பம். ஐ. 56, 130; 2 பம். ஐ. 10; 4 பம். ஐ. 150, 162; 6 பம். ஐ. 1, 13; இ. லா. ரி. 5 பம். 670; இ. லா. ரி. 7 பம். 163; இ. லா. ரி. 16 பம். 229, 233).

பாகம் பிறித்துக் கொள்ளுங்காலத்தில் பொதுசொத்தில் சிலபாகம் ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்பட்டால் அதில்கூட அவர்களுக்கு குறைவான பாத்தியந்தா னுண்டாகும். (2 மூர்வி. 198; எப். மெக். 67, 73; 5 க. ஐ. 508; 11 மூ. இ. அ, 514; இ. லா. ரி. 15 க. 292; இ. லா. ரி. 16 க. 758). ஆனுல் பாகஷரத்தைக் கொண்டு முழுபாத்தியமும் கொடுபடலாம். (11 க. ஐ. 459; 1 அ. ஐ. 10).

பம்பாய் பிரசிடென்சியில் சில ஸ்திரீவார்சுகளுக்கு மாத்திரம் சம்பூர்ணசுவாதந்திரம்.

329. பம்பாய் பிரசிடென்சியில் பெண், தங்கை தமக்கைகள், முதலிய சில பெண் வார்சுகளுக்கு மட்டில் சம்பூர்ண பாத்திய முறுதிப்பட் டிருக்கிறது. அங்கே ஆதாரமாகச் செல்லுகிற மயூககிரந்தத்தின்படியும் இதற்கு சம்பந்தப்பட்ட மிதாக்ஷர வசனத்திற்கு அங்கே செய்யப்பட்ட அர்த்தத்தைக் கொண்டும் பெண்வார்சுகள் இறண்டு வகுப்புகளாகச் செய்யப்பட் டிருக்கிறுர்கள். (1.) வேறுகோத்திரத்தில் பிறந்து விவாகத்தால் ஆஸ்திதாரனுடைய கோத்திரத்தில் சேர்ந்தவர்கள். அதாவது பெண்சாதி, தாயார், தகப்பனுடைய தாயார், பாட்டனுடைய தாயார், பிள்ளையின் பெண்சாதி இவர்கள் முதலியவர்கள். (2.) ஆஸ்திதாரனுடைய கோத்திரத்தில் பிறந்து விவாகத்தால் வேறு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். அதாவது பெண், தமக்கை, தங்கை, பேத்தி, தமையன் பெண், அத்தை முதலியவர்கள். (இ. லா. ரி. 5 பம். 110, 662, 670). மூதல் வகுப்பு ஸ்திரீகள் புருஷர்களுடைய சொத்துக்கு வார்சாகும்பொழுது அதில் அவர்களுக்கு முழுபாத்தியமும் உண்டாகாமல் அவர்க ளிறந்தபிறகு

அதுமுதல் ஆஸ்திதாரனுடைய வார்சுகளுக்கே சேரும். (1 பம். ஐ. 130; 2 பம். ஐ. 10, இ. லா. ரி. 4 பம். 163; 6 பம். ஐ. 1; இ. லா. ரி. 3 பம். 353, 369; இ. லா. ரி. 16 பம். 229). இரண்டாவது வகுப்பு ஸ்திரீகள் புருஷர்களுடைய சொத்துக்கு வார்சாகும் பொழுது அதில் அவர்களுக்கு புருஷர்களைப்போலவே முழுபாத்தியமு முண்டாக மாட்டாது. (இ. லா. ரி. 5 பம். 612; இ. லா. ரி. 11 பம். 312; 1 பம். ஐ. 130, 209; 8 பம். ஐ. 244; இ. லா. ரி. 2 பம். 171; இ. லா. ரி. 4 பம். 187; இ. லா. ரி. 5 பம். 670; இ. லா. ரி. 6 பம். 85; இ. லா. ரி. 11 பம். 285; இ. லா. ரி. 14 பம். 612; 1 பம். ஐ. 117, 124; 6 பம். ஐ. 1; 9 மூ. இ. அ. 516, 538; இ. லா. ரி. 5 பம். 671; இ. லா. ரி. 15 பம். 206). மேலும் அவர்களிறந்த பிறகு அந்த சொத்து முதல் ஆஸ்திதாரன் வார்சுகளுக்குச் சேராமல் அந்த ஸ்திரீகளே புருஷர்களாயிருந்தால் அவர்களுக்கு யார் வார்சாவார்களோ அப்படிப்பட்டவர்களுக்கே சேரும். அதாவது, பிள்ளை, பெண், பெண்ணுடைய பிள்ளை, தாய்தகப்பன்கள் வகையறு வார்சுகளுக்குச் சேரும். (8 பம். ஐ. 244; இ. லா. ரி. 12 பம். 505; இ. லா. ரி. 9 பம். 501).

சம்பூர்ண ஸ்வாதந்திரமில்லாத ஸ்திரீ வார்சுகளின் அனுபவ பாத்தியம் — பராதீன பாத்தியம்.

330. பம்பாய் தேசத்தில் பெண்சாதி முதலிய ஸ்திரீவார்சுகளுக்கும் மைத்த தேசங்களில் எல்லா ஸ்திரீ வார்சுகளுக்கும் புருஷர்களிடமிருந்து கிடைத்த சொத்தில் அவர்களுக்கு முழுபாத்தியமில்லாவிட்டாலும் அவர்கள் அதை தங்கள் ஆயிசுவரையில் இஷ்டப்பட்டபடி அனுபவிக்கலாம். அந்த சொத்தின் வரும்படி எவ்வளவா யிருந்தாலும் அதை கொஞ்சம்கூட மீர்க்காமல் சிலவுசெய்து கொள்ளலாம். அதை சேர்த்துவைக்கவாவது அதைப்பற்றி வேறு யார்க்காவது கணக்குச் சொல்லவாவது கடமை கிடையாது. அசல் ஐவேஜியை வட்டி முதலானவைக்கு விட்டு விருத்திசெய்ய வேண்டிய நிர்ப்பந்தமு மில்லை. அதைவிரயம் செய்யாமல் தங்கள் சுவாதீனத்திற்கு எந்த நிலைமையில் வந்ததோ அந்த நிலைமையில் தங்களுடைய அனந்தர் வார்சுகளுக்குச் சேரும்படி காப்பாற்றினல் போதுமானது. மேலும் வரும்படியை எவ்விதமாகிலும் சிலவு செய்யாமலே யொழிய சிற்சில அவசியமான சந்தர்ப்பங்களைத் தவிற மைத்த எந்நிலைமையிலும் அசல் சொத்தைச் சிலவிடக் கூடாது. அதை விற்றுவது ஒத்தி, பந்தகம் முதலிய பராதீனங்களுக் குட்படுத்தியாவது பணம் வாங்கி விரயம் செய்யக் கூடாது. (இ. லா. ரி. 4 பம். 462; இ. லா. ரி. 4 ம. 152; இ. லா. ரி. 9 க. 244; இ.

லா. ரி. 8 பம். 190; 3 ம. ஐ. 116; 1850 ஸ ம. தீ. 61; 6 மூ. இ. அ. 433; 6 க. ஐ. 747; 9 ஸ. 584; 4 க. ஐ. 41).

சொத்தின் வரும்படியை தனக்கிஷ்டம் வந்தபடி சிலவு செய்யவும் தானிஷ்டப்பட்டவர்களுக்கு இனாமாகக் கொடுக்கவும் பெண்வார்சுகள் பாத்தியஸ்தர்களா யிருந்தபோதிலும் அவர்கள் இறந்துபோன காலத்தில் சிலவிடாமல் மிருந்த ஆதாயம் அசல் சொத்தோடு சேரும். ஆகையால் அதை அந்தப் பெண்வார்சுகள் உயில் மூலமாய்க் கொடுக்க பாத்தியஸ்தர்களல்ல. மேலும் அசல் சொத்தில் ஆதாயத்தைச் சேர்த்து கொஞ்சந்துகை ஏற்பாடு செய்யப்பட்டால் அல்லது அதைக்கொண்டு கொஞ்சம் சொத்து சம்பாதிக்கப்பட்டால் அது அசல் சொத்துடன் சேர்ந்ததென்று சாதாரணமாய் எண்ணப்பட்டு அதின் விஷயத்தில் பெண்வார்சுகளுக்கு முழுபாத்தியம் தப்பிப்போய் விடும். (7 க. ஐ. 93; இ. லா. ரி. 9 க. 758; இ. லா. ரி. 5 க. 512; இ. லா. ரி. 10 க. 334; 5 அ. ஐ. 197, 201). ஆனால் அப்படி ஆதாயம் சேர்த்து சம்பாதிக்கப்பட்ட சொத்தும் அந்தப் பெண் வார்சுகள் முதன்முதற்கொண்டு தனக்காகவே உபயோகப்படுத்திக் கொள்ளுகிற எண்ணத்துடன் சம்பாதிக்கப்பட்டு அசல் சொத்துடன் சேராமல் தனியாக வைத்துக் கொண்டிருந்தால் அதை அவள் உயிருட னிருக்கையில் மறுபடி விரயம் செய்யலாம். (14 க. ஐ. 159; 25 ஸ. 335; இ. லா. ரி. 14 க. 387, 861; இ. லா. ரி. 16 க. 574; இ. லா. ரி. 10 பம். 478).

331. வரும்படி போராத பக்ஷத்தில் சிற்சில அவசியமான காறியங்களுக்காக அசல்சொத்தைக் கூட பெண்வார்சுகள் விரயம் செய்யலாம். இந்த அவசியமான காறியங்கள் எவை யென்றால்—

அவசியமான காறியங்கள் —சிராத்தம் முதலிய கர்மங்கள், தீர்த்த யாத்திரைகள், வகைரு

(1.) அந்த சொத்து புருஷனிடத்தி லிருந்து கிடைத்திருக்கும் பொழுது அவனுடைய உத்தர கிறியைகள், சிரார்த்தம், முதலிய கர்மங்கள், இவைகளை அசல்சொத்தை விரயம் செய்தாவது நடத்தி அவனுடைய ஆத்மாவுக்கு நற்கதி யுண்டாகும்படி செய்ய வேண்டியது. மேலும் அவனால் சிரார்த்தம் முதலிய கர்மங்கள் நடத்தப்படத் தக்கவர்களுடைய கர்மங்களைக்கூட நடத்த வேண்டியது. (11 க. ஐ. 418; இ. லா. ரி. 8 க. 36). புருஷனுக்கு நற்கதி கிடைக்க வேண்டுமென்கிற எண்ணத்துடன் தீர்த்த யாத்திரைகளையும் பிறாமணர்களுக்கு தானங்களையும் கோவில் குளம் முதலிய பிர

திஷ்டைகளையுஞ் செய்பலாம். ஆனால் இவைகளுக்காக ஐவேஜிக்குத் தக்கபடி சிலவு செய்யலாமே யொழிய அதிகமாய் சிலவிடக்கூடாது. சொத்து ஸ்வல்பமா யிருந்தால் இவைகளுக்காகக் கொஞ்சமேனும் சில விடக்கூடாது. (1 ஸ. 252; 11 க. ஐ. 118, 416; இ. லா. ரி. 11 ம. 288; 2 மார்லி. 119; 21 ஸ. 49; 1 பாரொ. 394, 405; 2 பாரொ. 510; 1850 ஞ ம. தீ. 74). விதவை தன் நற்கதிக்காக செய்யும் தீர்த்தயாத்திரை முதலியவைகளுக்காக அசல்சொத்தைச் சிலவிடக்கூடாது. (இ. லா. ரி. 4 அ. 482). சொத்தின் வரும்படியில் சிலவு செய்ய அட்டியில்லை.

கடன்கள்.

(2.) ஆஸ்திதாரன் வாங்கியிருந்த கடன்களைத் தீர்ப்பது அவசியமாக யிருந்தால் அசல் ஆஸ்தியை விற்கலாம். அக்கிரமமான கடன்களைத் தீர்ப்பது அவசியமானதல்ல. (8 மூ. இ. அ. 319; 9 ஸ. 316; 1860 ஞ ம. தீ. 15; இ. லா. ரி. 2 பம். 499). காலாவதியால் பாதிக்கப்பட்ட கடன்களைத் தீர்ப்பதற்காக அசல்சொத்தைப் பராதீனம் செய்யக் கூடாதென்று சில கேசுகளில் தீர்மானிக்கப்பட் டிருந்தது. (6 பம். ஐ. 270; 14 ஸ. 147). ஆனால் பிந்திய தீர்மானங்களால் காலாவதியால் பாதிக்கப்பட் டிருக்கிற கடன்களைத் தீர்ப்பதற்காகக் கூட அசல் சொத்தைப் பராதீனம் செய்யலாமென்று ஸ்திரப்படுத்தப்பட் டிருக்கிறது. (இ. லா. ரி. 11 பம். 320, 325; இ. லா. ரி. 18 ம. 189). அப்படி காலாவதியான கடன்களைத் தீர்ப்பது மோசக்கருத்துடன் செய்யக்கூடாது. (இ. லா. ரி. 11 பம். 666; 1882 ஞ 4-வது நெ. சட்டம், 53-வது செ).

ஜீவனும்சங்கள், கலியாணம் வகைரு.

(3.) பெண்வார்சுகளுக்குக் கிடைத்த சொத்தைக் கொண்டு கொடுக்க வேண்டிய ஜீவனும்சங்களுக்காகவும் செய்யவேண்டிய விவாகம் முதலியவைகளுக்காகவும் அவசியமானல் சொத்தைப் பராதீனம்செய்யலாம். (16 ஸ. 52; இ. லா. ரி. 5 பம். 450). ஆனால் எப்பொழுது அவசிய முண்டாகப் போகிறதென்று முந்தியே சொத்தைப் பராதீனம் செய்து பணத்தை வாங்கிவைத்துக் கொள்ளக் கூடாது.

நீக்கக்கூடாத நிர்ப்பந்தங்கள்.

(4.) மேல் சொல்லப்பட்டவைகளைத் தவிற வேறு ஏதேனும் நீக்கக்கூடாத நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டால் அவைகளுக்காகவும் பெண் வார்சுகள் அசல் சொத்தைப் பராதீனம் செய்யலாம். சர்க்கார் கிஸ்தி

பாக்கி, ஏதேனும் டிக்கிரிப்படி செலுத்த வேண்டிய துகை, சொத்து விஷயமாகக் கொடுக்கப்பட்ட பிருதில் பிறதிவாதியாகச் சேர்க்கப்பட்டு அதைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்பட்ட நியாயமான சிலவுகள், அழிந்துபோகும் சொத்தைக் காப்பாற்றுவதற்காக செய்யப்பட்ட மருமத்து சிலவுகள், இவைகள் அவசியமான சிலவுகளாக எண்ணப்படும். (1859 ஷ பம். ஸ. தீ. 421; 19 ஸ. 80; 2 அ. ஐ. 78; இ. லா. ரி. 11 பம். 609; இ. லா. ரி. 12 க. 52; இ. லா. ரி. 4 அ. 532; இ. லா. ரி. 10 க. 823). நீக்கக்கூடாத நிர்ப்பந்தம் உண்டா இல்லையாயென்பது அந்தந்த சந்தர்ப்பங்களைப் பார்த்து அறிந்துகொள்ள வேண்டியது. சர்க்கார் கிஸ்திபாக்கி முதலிய நிர்ப்பந்தங்கள் பெண்வார்சுகளுடைய அநியாயச் சிலவா லுண்டாயிருந்தாலும் பாதகமில்லை. சொத்தைப் பெற்றவன் கெட்ட நடத்தையாலாவது தூண்டுதலின் பேறிலாவது அந்த நிர்ப்பந்தம் உண்டாயிருக்கக் கூடாது. (6 மூ. இ. அ. 423; இ. லா. ரி. 6 க. 843).

பெண் வார்சுகளால் விக்கிரயம்.

332. மேல்பாராவில் சொல்லப்பட்ட அவசியமான காறியங்கள் நேறிட்டபொழுது அசல் சொத்தைச் சிலவுசெய்யாமல் கடன்வாங்கி அந்தக்கடனை சொத்தின் வரும்படியைக் கொண்டு நாளளவில் தீர்க்கவாவது சொத்தின் ஒரு பாகத்தைக்கூடக் கிறயம்செய்யாமல் ஒத்திவைத்துத் துகைவாங்கி அதனால் தனக்கு வரும் வரும்படியைக் குறைத்துக் கொள்ளவாவது பெண் வார்சுகள் கட்டுப்பட்டவர்களல்ல. சொத்தில் சில பாகத்தை தடையன்றியில் விற்று அந்த அவசியமான காரியங்களை நடத்தலாம். பெண்வார்சுகளுக்கு நியாகமாகத் தோன்றுகிறபடி சொத்தை ஒத்திவைத்தாலும் சறி, விற்றாலும் சறி, அந்த பெண்வார்சும் அவளிடத்தில் சொத்தைப் பெற்றுக் கொள்ளுகிறவனும் கெட்ட எண்ண மில்லாமல் ஏற்பாடு செய்திருந்தால் விற்பதைக்காட்டிலும் ஒத்திவைப்பது லாபகறமென்கிற காறணத்தைக் கொண்டு அனந்தர் வார்சுகள் ஆக்ஷேபிக்கவாவது பணத்தைக் கொடுத்துவிட்டுக் கிறயத்தை ரத்துசெய்து கொள்ளவாவது பாத்தியமில்லை. (9 ஸ. 284; 3 க. ஐ. 375). ஆனால் மிகவும் குறைவான விலைக்கு மிகுந்த சொத்து அநியாயமாக விற்கப்பட்டிருந்தால், பெண்வார்சு இறந்தபிறகு அநந்தர்வார்சுதாரன் ஆக்ஷேபிக்கக்கூடும். அப்பொழுது வட்டியுடன் கிறயத்துகையை அந்த அநந்தர் வார்சுதாரனைக் கொண்டு கொடுக்கும்படி செய்வித்து, கோர்ட்டார் கிறயத்தை றத்துசெய்யக்கூடும். (9 ஸ. 108; 11 க. ஐ. 416). எவ்வளவு ஸ்பஷ்டமாக அநியா

யம் நடந்ததாகக் காணப்பட்டாலும் விலக்கு வாங்கினவன் அந்த அநியாயத்தை யறிந்திருந்தானென்று தெளிவாக நினைக்க வழியில்லாத நிலைமையில் இவ்விதமாக கோர்ட்டார் நடத்தமாட்டார்கள். (5 க. ஐ. 508; 13 ஸ. 457). பெண் வார்சுகளுக்குக் கிடைத்த சொத்து ஒத்திக் குள்பட்டிருந்து அந்த ஒத்தி மீட்டுக்கொள்ளப் போதுமான துகை அவ்ள் வசத்திலிருந்தும் அசல் சொத்தில் சில பாகத்தை அவள் விற்று ஒத்தியை மீட்டால் அவளிறந்த பிறகு அனந்தர் வார்சுதாரன் பிருதுசெய்து அந்தக் கிறயத்தை ரத்துசெய்து கொள்ளலாம். ஆனால் கிறயத்துகையை வட்டியுடன் செலுத்திவைக்க அவன் கட்டுப்பட்டவன். (14 க. ஐ. 226; இ. லா. ரி. 5 பம். 450).

கடன் கொடுக்கப்பட்டவனுக்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள்.

333. சேர்ந்த குடும்பத்தின் மானேஜருக்கு பொது சொத்தில எவ்விதமான பாத்தியமுண்டோ அவ்விதமான பாத்தியந்தான் பெண்வார்சுகளுக் குண்டென்று சொல்லலாம். மேலும் மானேஜருக்குக் கடன்கொடுத்து சொத்தைக் கட்டிக் கொள்ளுகிறவனுக்கு என்ன விதி நிஷேதங்கள் உண்டோ அவைகள் பெண் வார்சுகளுக்குக் கடன் கொடுக்கிறவர்களுக்கு முண்டு. (2 பம். ஐ. 201; 6 மூ. இ. அ. 393; 11 மூ. இ. அ. 619; மேல் 178, 179, 180-வது பாராக்களைப் பார்க்கவும்). சொத்தை வாங்கிக் கொள்ளுகிறவன் பராதீனம் செய்யத்தகுந்த நிர்பந்த மிருந்ததென்று ருசுச் செய்யக்கடமைப் பட்டவனு யிருக்கிறான். அவசிய மிருந்ததென்று ருசுச்செய்து விட்டால் பராதீனம் செய்து பெற்றுக்கொண்ட துகையை பெண்வார்சு நியாயமாக சில விட்டாளென்று ருசுச்செய்வது கட்டாயமல்ல. (6 மூ. இ. அ. 393; 8 மூ. இ. அ. 529; 5 க. ஐ. 508). மேலும் தகுந்த சாக்கிறதையுடன் விசாரித்து அவசிய மிருந்ததாக உறுதியாக நம்பி எவ்விதமான கெட்ட எண்ணமன்றியில் பணங்கொடுத்து சொத்தை சுவாதீனம் செய்து கொண்டவனுக்கு அந்த அவசிய விஷயமாக சொல்லப்பட்ட சங்கதிகள் கடைசியில் பொய்யென்று ஏற்பட்டாலும் கெடுதியில்லை. (6 மூ. இ. அ. 393; இ. லா. ரி. 6 க. 843; இ. லா. ரி. 21 க. 1882 ஞு 4-வது நெ. ஆக்ட்டு, செ. 83). ஏதோ ஒரு அவசியமிருந்ததாக தஸ்தவேஜியில் எழுதப்பட் டிருப்பதைக் கொண்டுமட்டில் அந்த அவசியம் வாஸ்தவத்தில் இருந்ததென்றாவது அதைப்பற்றி தகுந்தபடி விசாறிக்கப்பட்ட தென்றாவது எண்ணப்பட மாட்டாது. (9 ஸ. 285).

அவசியமான காறியங்களுக்காக ஒரு பெண்வார்சு கடன்வாங்கி

அந்தக் கடனுக்காகச் சொத்தைப் பாத்தியப்படுத்தாமல் அவள் பத்திறம்மட்டும் எழுதிக் கொடுத்திருந்தால் அதினுல் அனந்தர் வார்சுகள் கட்டுப்பட மாட்டார்கள். இப்படி பம்பாய், மதிராஸ் ஐகோர்ட்டார்கள் தீர்மானித்திருக்கிருர்கள். (இ. லா. ரி. 3 பம். 237; இ. லா. ரி. 4 ம. 375). அவசியமான காறியங்களுக்காக கடன் வாங்கப்பட்டதாக ருசுக்காணப்பட்டால் சொத்து பாத்தியப்படுத்தப் படாமலிருந்தாலும் அந்தக் கடன்களைத் தீர்க்க அனந்தர் வார்சுகள் கடமைப் பட்டவர்களென்று கலகத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். (இ. லா. ரி. 6 க. 36).

கடன் கொடுத்தவர்கள் பெண்வார்சுகளின் பேறில் செய்யும் பிருதில் பெறப்படும் டிக்கிறியால் அனந்தர் வார்சுகள்கூடக் கட்டுப் படவேண்டுமென்று இஷ்டப்பட்டால் அந்தத் துகை அவசியமான காறியங்களுக்காக வாங்கப்பட்டதென்று பிருதில் சொல்ல வேண்டியது. அனந்தர் வார்சுகளைக்கூட பிறதிவாதிகளாகச் சேர்க்கவேண்டுமென்பது கோர்ட்டாருடைய அபிப்பிராயமாகக் காணப்படுகிறது. (11 மூ. இ. அ. 267; 15 க. ஐ. 160). மேல் சொல்லப்பட்டபடி பிருதில் சொல்லாமல் ஒரு பெண்வார்சின் பேறில் டிக்ரி பெறப்பட்டால் அவளுடைய ஆயிசுவறையில் அனுபவிக்கும் பாத்தியம் மட்டும் அந்த டிக்கிறிக்குக் கட்டுப்படும். (11 மூ. இ. அ. 241; இ. லா. ரி. 1 க. 133; 15 க. ஐ. 142; 6 ஸ. 304; இ. லா. ரி. 1 ம. 358; இ. லா. ரி. 4 ம. 401; இ. லா. ரி. 16 க. 511).

பெண்வார்சுகள் செய்யும் அகத்தியமான பராதீனங்கள்.

334. தக்க அவசியமில்லாமல் பெண்வார்சுகள் செய்யும் பராதீனங்கள் அனந்தர் வார்சுகளைக் கட்டுப்படுத்தாது. ஆனுல் அவைகள் அவள் ஆயிசுவறையில் செல்லுகிறதற்கு ஒரு ஆக்ஷேபனையு மில்லை. 1856 ஹு பம். ஸ. தீ. 596; 19 ஸ. 80; க. ஐ. சப்ளிமெண்டல் வாலியம் 48; 1 ம. ஐ. 206; 2 ம. ஐ. 393; 3 ம. ஐ. 116; 6 பம். ஐ. 270; இ. லா. ரி. 1 பம். 557; இ. லா. ரி. 1 அ. 503; இ. லா. ரி. 8 க. 204). அனந்தர் வார்சுகள் ஒருவரு மில்லாவிட்டாலும் சொத்தை யவசியமன்றியில் பராதீனம் செய்யும் பாத்தியம் பெண்வார்சுக்கு உண்டாகமாட்டாது. அங்கிலைமையில் சர்க்கார் பாத்தியஸ்தர்க ளானதால் அந்தப் பராதீனங்களை அவர்கள் ஆக்ஷேபிக்கலாம், (8 மூ. இ. அ. 529).

335. வார்சான பெண் பிள்ளைக்குக் கிடைத்த சொத்து விஷயமாயுள்ள எல்லா பாத்தியத்தையும் அவள் இஷ்டப்படும் பொழுது விட்டு விட்டு அக்காலத்தில் அனந்தர வார்சா யுள்ளவருக்குச் சொத்தைக் கொடுத்துவிடலாம். இப்படிச் செய்வதால் சிலருக்கு நஷ்டமுண்டானாலும் பாதகமில்லை. (8 ஸ. 500; எதிராக 6 அ. 116. 288). உதாஹரணம்:—

பெண்வார்சு தன் பாத்தியங்களை விட்டுவிட.

புருஷனுக்கு வார்சாக அவனுடைய ஆஸ்தியை யனுபவித்து வரும் விதவை அக்காலத்தில் அடுத்த வார்சாயிருந்த தௌஹித்திரனுக் கெல்லா சொத்தையுங் கொடுத்து விட்டாள். அதற்குப் பிறகு அந்த விதவை ஜீவித்திருக்குங் காலத்திலேயே தௌஹித்திரன் இறந்தான். விதவை யிறந்துபோகுங் காலத்தில் அவள் மைத்துனன் சமீபவார்சா யிருந்தான். இந்நிலைமையில் விதவை தன்னுடைய பாத்தியத்தை விட்டுவிடாமலே யிருந்தால் மைத்துனனுக்குச் சொத்து வருமென்பது நிச்சயந்தான். ஆனால் அவள் எப்பொழுது தன்னுடைய பாத்தியத்தை விட்டாளோ அப்பொழுதே தௌஹித்திரன் சர்வபாத்தியமுள்ள வார்சாக ஏற்பட்டதால் அவனுக்குப் பிறகு அந்த சொத்து அவனுடைய பிள்ளைகள் வகையறாவுக்கே சேர்ந்தது.

தற்காலத்தில் அனந்தர வார்சாயுள்ளவன் கிழவனாகவாவது வியாதி பிடித்துச் சீக்கிரத்தி லிறந்துபோகக் கூடியவனாகவாவது இருந்தால் மேற் சொல்லியபடி வார்சான ஸ்திரீ தன் பாத்தியத்தை விட்டுவிட்டு அவனுக்காவது அவன் வார்சுகளுக்காவது சொத்துச் சேரும்படி செய்யலாம்.

336. பெண்வார்சால் செய்யப்பட்ட சொத்து பராதீனங்கள் அனந்தர வார்சின் சம்மதியுடன் செய்யப்பட்டிருந்தால் அவை அவசியமா யிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, செல்லும். (9 ஸ. 350; இ. லா. ரி. 5 க. 49). அனந்தர வார்சுகள் தஸ்தவேஜியில் கையெழுத்துப் போட்டிருந்தால் அவர்கள் சம்மதித்தார்களென்று ருசுச்செய்ய அனுகூலமாயிருக்கும். (1856 ஸூ பம். ஸ. தீ. 596; 24 ஸ. 127). அனந்தர வார்சு முழுபாத்திய மில்லாத ஸ்திரியாயிருந்தால் அவளுடைய சம்மதியினால் அவளுக்குப் பின்வரும் வார்சுகள் கட்டுப்பட மாட்டார்கள். (14 மு. இ. அ. 176; இ. லா. ரி. 11 அ. 253).

அனந்தர வார்ஸ் ஸம்மதியுடன் செய்த பராதீனம்.

யார் சம்மதிக்க வேண்டியது.

337. அனந்தர வார்சுகள் சம்மதி யென்கிறபொழுது தற்காலத்தில் நெருங்கிய அனந்தர வார்சுனுடைய ச ம்மதி போதுமா, அல்லது பெண்வார்சு இறந்து போகுங் காலத்தில் ஜீவித்திருப்பவர்களில் எவர் சமீபவார்சாவார்களோ வென்று தெறியாததால் எல்லா அனந்தர வார்சுகளும் சம்மதிக்க வேண்டுமோ?—இந்த விஷயம் கொஞ்சங் கஷ்டமா யிருக்கிறது. அனந்தர வார்சுகளில் நெருங்கினவன் பராதீனத்திற்கு சம்மதித்திருந்து அவன் அந்த ஸ்திரீ உயிருட னிருக்கும் பொழுதே இறந்துபோனுல் அவனுடைய சம்மதியால் மைத்த அனந்தர வார்சுகள் கட்டுப்படாவிட்டாலும் அவனுடைய பிள்ளை முதலான வார்சுகள் கட்டுப்படுவார்கள். (1856 ஹு பம். ஸ. தீ. 604; இ. லா. ரி.5 க. 44).

பெண்வார்சு இறந்துபோகுங் காலத்தில் யார் யார் வார்சுகளா யிருக்கத் தகுந்தவர்களோ அவர்க ளெல்லோரும் சம்மதிக்கவேண்டியதவசியமென்றும் அனந்தர வார்சுகளில் தற்காலத்தில் நெருங்கினவன் ஒருவன் மட்டில் சம்மதித்தால் போதாதென்றும் பம்பாய் ஐகோர்ட்டாருடையவும் அலஹாபாத் ஐகோர்ட்டாருடையவும் அபிப்பிராயமா யிருக்கிறது. ஒரு பம்பாய் கேசில் புருஷனுயை சொத்து விதவையி னனுபவத்தி லிருந்தது. அவளுடைய பெண்ணும் அவள் புருஷனுடைய ஒரு தூர ஞாதியும் அனந்தர வார்சுகளா யிருந்தார்கள். பம்பாய் தேச வழக்கப்படி முழுபாத்திய முள்ள வார்சாகிய அந்தப் பெண்ணுடைய சம்மதியுடன் விதவை சொத்தைப் பராதீனஞ் செய்தாள். அதற்குப் பிறகு முதலில் பெண்ணும் பிறகு விதவையு மிறந்தார்கள். அந்தப் பறுதீனம் தூர ஞாதியைக் கட்டுப்படுத்த மாட்டாதென்று தீர்மானித்து சொத்தை அவனுக்குக் கொடுக்கும்படி தீர்மானம் செய்தார்கள். (இ. லா. ரி. 5 பம். 563; 13 மூ. இ. அ. 228; இ. லா. ரி. 3 அ. 362; இ. லா. ரி. 6 அ. 116, 288; இ. லா. ரி. 10 அ. 407).

சிலகாலம் வறையில் கல்கத்தா ஐகோர்ட்டார் கூட பம்பாய் ஐகோர்ட்டாரைப் போலவே அபிப்பிராயப் பட்டிருந்தார்கள். (இ. லா. ரி. 9 க. 463; இ. லா. ரி. 10 க. 225). ஆனுல் பின்பட்டுப் பராதீன காலத்தில் நெருங்கின வார்சான அனந்தர வார்சு ஒருவன் சம்மதி போதுமென்றும் அவன் பெண்வார்சு உயிருட னிருக்கும்பொழுதே இறந்துபோனுலும் பராதீனம் றத்தாக மாட்டாதென்றும் புல் பெஞ்சு தீர்மானம் செய்யப்பட் டிருக்கிறது. (இ. லா. ரி. 10 க. 1102). பறு

தீனகாலத்தில் ஒரேவரிசையி லிருக்கிற அனேக அனந்தரவார்சுகள் இருந்தால் அதாவது தௌஹித்திரர்கள், அண்ணன் தம்பிகள் முதலிய இரண்டு மூன்று பேர்களிருந்தால் அவர்களெல்லாருடைய சம்மதியும் அவசியமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 17 க. 896).

338. தக்க அவசிய மில்லாத சமயத்தில் பெண் வார்சானவள் தானம் விற்பனை முதலிய மூலமாய்ச் சொத்தைப் பராதீனம் செய்தால் அந்தப் பராதீனம் நடந்து பன்னிரண்டு வருஷத்திற்குள் அனந்தர வார்சு பிருது கொடுத்து அது அந்தப் பெண்வார்சு ஜீவித்திருக்கும் வரையில்தான் செல்லுமென்றும் அனந்தர வார்சுகளைக் கட்டுப்படுத்த மாட்டாதென்றும் தீர்ப்புப் பெறலாம். (1877 ஹு 15 நெ. லிமிடேஷன் ஆக்ட்டு 2 ஷெடியூல் 125, 141 ஆர்டிகல்கள்; இ. லா. ரி. 8 க 442; இ. லா. ரி. 9 க. 934; 1877 ஹு ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்டு 42 வது செக்ஷன் இ, எப்; இ. லா. ரி. 8 அ. 70; இ. லா. ரி. 5 க. 949; இ. லா. ரி. 10 ம. 90). மேற் சொல்லியபடி பிருது செய்யாமல் பொருத்திருந்து விட்டால் அந்தப் பெண் வார்சு இறந்து அனந்தர வார்சுக்குப் பாத்திய முண்டான தற்குப் பிறகு பன்னிரண்டு வருஷத்திற்குள் அவன்வியாச்சியம் செய்து பராதீனஞ் செய்யப்பட்ட சொத்தை வசப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் காலதாமதத்தால் ருசு முதலானது அகப்படாமல் போய்விடு மாதலால் பெண்வார்சு உயிருட னிருக்கும்பொழுதே பிருது செய்து தீர்ப்புப் பெற்றுக்கொள்வது பல சந்தர்ப்பங்களில் நலமாயிருக்கும். (க. ஹை. ஸப்ளி. வ. 48; 3 ஸ. 183; 4 க. ஹை. 1; 14 க. ஹை. 226; இ. லா. ரி. 7 அ. 163; இ. லா. ரி. 8 அ. 365, 646).

அனந்தர வார்சுகளால் பிருதுகள்.

பெண் வார்சு உயிருட னிருக்கும் பொழுது அனந்தர வார்சு பிருது செய்து அவளுக்குப் பிறகு அந்த ஆஸ்தி தன்னைச் சேரவேண்டிய தென்று தீர்ப்புப் பெற அதிகாரமில்லை. ஏனென்றால் அவள் இறந்துபோகும் காலத்தில் இவன் ஜீவித்திருந்தால் மட்டும் அனந்தர வார்சாகிறான். (15 க. ஹை. 83; இ. லா. ரி. 8 க. 12).

அனந்தர வார்சுக்கு அதிக நஷ்ட முண்டாகும்படி பெண் வார்சு தன்னுடைய சொத்தையனுபவித்துவந்தால் அக்காலத்தில் அனந்தர வார்சாயிருப்பவன் பிருதுசெய்து அப்படி நடத்தாம லிருக்கும்படி கோர்ட்டு மூலமாய் அவளுக்கு இஞ்சங்கிஷன் கொடுக்கும்படி

செய்யலாம். (6 மூ. இ. அ. 4 33; 1 ஸ. 125; 4 க. ஹை. 1.). ஆஸ்தி முழுவதும் நஷ்டமாகும்படி செய்யுங் காலத்தில் அதை யவள் வசமிருந்து நீக்கி ரிஸீவர் ஏற்படுத்தும்படி கேட்கலாம். (1854 ஹு பம். ஸ. தீ. 351; 1858 ஹு பம். ஸ. தீ. 1103; 14 மூ. இ. அ. 198; 10 க. ஹை. 1; 2 அ. ஹை. 424). ரிஸீவர் ஏற்படுத்தப்பட்டால் ஆஸ்தியின் வரும்படி யெல்லாம் பெண் வார்சுக்கே அவள் ஆயுசு வறையில் கொடுக்கப்படும் (1854 ஹு. பம். ஸ. தி. 351; 1859 ஹு. பம். ஸ. தி. 210, 436, 944; 1 க. ஹை 27; 24 ஸ. 26; விரோதமாக 3 க. ஹை 362; 21 ஸ. 444). சொத்தைச் செவ்வையாய் மானேஜ்மெடு செய்ய அனந்தர வார்சே தகுந்தவனாகக் காணப்பட்டால் அவனே ரிஸீவராக நியமிக்கப்படலாம் (1859 ஹு பம். ஸ. தி. 210).

பெண்வார்சு மூலமாய் சொத்தை யடைந்து யாராவது அக்கிறமவான வழியாய் அனுபவித்து அதை நாசஞ்செய்தால் அவன் பேறில்கூட அனந்தர வார்சு பிருது கொடுக்கலாம். (க. ஹை. ஸப்ளி. வ. 48; 3 ம. ஹை. 119).

யார் பிருது செய்யலாம்.

339. தற்காலத்தில் அனந்தர வார்சா யிருப்பவன் மாத்திரம் மேல் பாராவில் சொல்லப்பட்ட பிருதுகள் செய்யலாமே யொழிய தூரவார்சாவது அனந்தர வார்சின் சம்மதி பெற்றுக்கொண்டு வேறுயாராவது செய்யக் கூடாது. (9 ஸ. 463; 2 அ. ஹை. 31; 1859 ஹு பம். ஸ. தி. 620; 9 ஸ. 463; 10 ஸ. 301; இ. லா. ரி. 4 அ. 16; இ. லா. ரி 6 அ 428; 13 மூ. இ. அ. 209, 224; 14 மூ. இ. அ. 176; இ. லா. ரி. 1 க. 289; இ. லா. ரி. 5 அ. 532).

அனந்தர வார்சு முழுபாத்திய மில்லாத ஸ்திரியாக யிருந்தால் அவளுக்குப் பிந்திய வார்சுதாரன் மேல்சொல்லிய பிருதுகள் செய்யலாம் (14 மு. இ. அ. 176; இ. லா. ரி. 13 ம. 195). மேலும் அனந்தர வார்சு பெண்வார்சுடன் மோசடியாய்ச் சேர்ந்து சொத்து பராதீனஞ் செய்யப்பட்டாலும் அப்படி மோசடியாகச் சேர்ந்து பிருது செய்யாமலிருந்தாலும் அவனுக்குப் பிந்தி அனந்தர வார்சானவன் வியாச்சியஞ் செய்யலாம். (1859 ஹு பம். ஸ. தி. 891; 24 ஸ. 86, 399; 14 மூ. இ. அ. 176; இ. லா. ரி. 6 அ 431; இ. லா. ரி. 2 அ. 41; இ. லா. ரி. 9 அ. 441; இ. லா. ரி. 11 ம. 106).

13. வது அத்தியாயம்.

ஸ்திரீ தனம்.

340. புருஷனிடத்தி லிருந்து வார்சு பாத்தியமாகக் கிடைத்த சொத்தில் ஸ்திரீகளுக்கு முழுபாத்திய மில்லையென்றும் அவனிறந்தபிறகு அந்த சொத்து முந்திய ஆஸ்திதாரனுடைய வார்சுகளுக்கே சேருமென்றும் இதுவரையில் சொல்லியிருக்கிறோம். ஸ்திரீகளுக்கு வார்சுபாத்திய மூலமாய்க் கிடைக்கத்தக்க சொத்து அவர்களுக்கு உயில் மூலமாயாவது அல்லது தானமாகவாவது கொடுக்கப் பட்டாலும் அதில் அவர்களுக்கு முழுபாத்தியம் ஏற்பட மாட்டாது (14 க. ஹை 226; இ. லா. ரி. 11 பம். 69, 573; இ. லா. ரி. 11 அ. 296; இ. லா. ரி. 14 ம. 274). ஆனல் வேறு சில விதமாக ஸ்திரீகளுக்குக் கிடைத்த சொத்தில் அவர்களுக்கு அதிக பாத்தியம் ஏற்பட்டு அது அவர்களுடைய ஸ்திரீதனமென்று சொல்லப்படுகிறது. இந்த அத்தியாயத்தில் ஸ்திரீதனத்திலுள்ள பேதங்களும் அது விஷயமாக ஸ்திரீகளுக்குள்ள பராதீனஞ் செய்யும் பாத்தியமும் அந்தந்தவகை ஸ்திரீதனத்துக்கு ஏற்பட்டிருக்கிற வார்சுக் கிறமமும் விவரிக்கப் படும்.

ஸ்திரி தனம்.

341. தர்மசாஸ்திரங்களில் சுல்கம், அத்தியக்கினிகம், அத்தியாவாகனிகம், அன்வாதேயகம், பிரீதிதத்தம், அதிவேதனிகம் என்று ஆறுவித ஸ்திரீதனங்கள் சொல்லப்பட் டிருக்கின்றன. சுல்கமென்பது ஆசுர விவாகத்திலுண்டானது. கன்னிகையைக் கொடுப்பதற்கே அவளுடைய தாய் தகப்பன்கள் வரனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் சொத்துக்கு முக்கியமாய் சுல்கமென்று பெயர். இப்பேர்க்கொற்ற ஆசுர விவாகங்கள் ஜனங்களால் நிந்திக்கப்பட்டு பிராம்ஹ விவாகங்கள் விசேஷமாகத் தொடங்கி கன்னிகையின் தாய் தகப்பன்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்காக சுல்கம் பெற்றுக் கொள்வதை மாத்திக் கன்னிகைக்கு வேண்டிய நகைகள், உடைகள், வீட்டுக்கு வேண்டிய பாத்திரம் வகைரூவுக்காக மொத்தமாய் முதலில் சிலதுகை நிஷ்கரிஷித்து விவாக நிச்சயம் பண்ணுங்காலத்தில் இனமாக பணம் அல்லது சாமான்கள் வாங்கிக் கொள்ளும் வாடிக்கை யேற்பட்டது. அப்படி வாங்கப்படும் பணம் நகைகள் வகைரூ சொத்து சுல்கமென்று சொல்லு

ஆறுவிதங்கள்—சுல்கம், அத்தியக்கினிகம்: அத்தியாவாஹநிகம்; அன்வாதேயகம், பிரீதிதத்தம், அதிவேதனிகம்.

ப்படுகிறது. வரனுலாவது வரனுடைய அல்லது கன்னிகையினுடைய பந்துக்களாலாவது சினேகிதர்களாலாவது மைத்தவர்ளாலாவது விவாகதினத்தில் அக்கினி ஸந்நிதானத்தில் கன்னிகைக்குக் கொடுக்கப் படும் நகை வகைறு சொத்து அத்தியக்கினிக ஸ்திரீதனமென்று சொல்லப் படுகிறது. (16 ஸ. 115). பிறந்தகத்தை விட்டு புக்காத்துக்குப் போகும் பொழுது கொடுக்கப் படும் பணம் வகைறு அத்தியாவாகனிக ஸ்திரீதனம். கல்யிர்ணத்துக்குப் பிறகு பிறந்தாத்து வழி பந்துக்களாலாவது புக்காத்துவழி பந்துக்களா லாவது கொடுபடும் சொத்து அன்வாதேயக ஸ்திரீதனம். கல்லியாணத்திற்குப் பிறகு புருஷனுல் பிரீதியினுல் கொடுபடும் சொத்துப் பிரீதிதத்தம். வேறொரு பெண்சாதியைக் கல்லியாணம் செய்யும் பொழுது முந்திய பாரியைக்கு திருப்தி யுண்டாகும்படி புருஷன் கொடுக்கும் சொத்து அதிவேதன ஸ்திரீதனம்.

யௌதகம், அயௌதகம்.

எல்லா ஸ்திரீதனமும் யௌதகம் அயௌதக மென்று இரண்டு வகைப்படும். ஒரு ஸ்திரீக்கு அவளுடைய புருஷனுலாவது, பிரந்தகம் அல்லது புக்காம்வழி பந்துக்களாலாவது சினேகிதர்களாலாவதுமைத்தவர்களாலாவது விவாககாலத்தில் கொடுபடும் சொத்து யௌதகஸ்திரீதனமாகும். விவாகத்தால் பெண்ணும் பிள்ளையும் சேருவதால் யௌதகமென்று பெயர்வந்தது. யௌதகமில்லாத ஸ்திரீதனம் அயௌதகமாகும்.

சௌதாயகம்.

விவாகத்திற்கு முந்தியாவது விவாககாலத்திலாவது விவாகத்திற்குப் பிந்தியாவது ஒரு ஸ்திரீக்கு அவள் புருஷன், தாய், தகப்பன், சகொதரர்கள், பிறந்தகம் அல்லது புக்காம்வழி பந்துக்கள் இவர்களால் கொடுபடும் உடையாபரணங்கள் நிலம் வகைறு ஸ்திரீதனம் சௌதாயகம் என்று சொல்லப்படுகிறது. (6 பம். ஸ. தீ. 77; 5 ம. ஐ. 111; 1 அ. ஐ. 66; 16 ஸ. 139; 6 அ. ஐ. 279; இ. லா. ரி. 1 க. 275; 3 ம. ஐ. 272). மேல்சொல்லப்பட்ட சொத்துக்கள் உயில்மூலமாய்க் கொடுபட்டாலும் ஸ்திரீதனமென்றே பாவிக்கப்படும். (2 மார்லி. 65; 11 க ஐ. 295). ஒரு ஸ்திரீக்கு சுவாதீனமாய்க் கொடுக்காமல் பண்டிகை விசேஷகாலங்களில் மட்டில் போட்டுக் கொள்ளும்படியாய் புருஷன் வகைறுவால் கொடுபட்டுத் திரும்ப வாங்கிவைக்கப்படும் நகை வகைறு சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீதனமாக மாட்டாது.

ஜீவனும்சம் வகைறுவுக்காக ஏற்பாட்டு மூலமாய் ஒரு ஸ்திரீக்குத் தனியே யெல்லாபாத்தியத்துடன் கொடுபடும் சொத்து அவளுடைய ஸ்திரீதனமாக எண்ணப்படும். (24 ஸ. 168; 3 க. ஐ. 121; இ. லா. ரி. 1 ம. 166). ஒரு ஸ்திரீக்கு ஜீவனும்சத்திற்காகக் கிடைக்க வேண்டிய பாக்கிப்பணங்கூட ஸ்திரீதனமாகவே எண்ணப்படும். (16 ஸ. 76).

ஜீவனும்ச சொத்து.

ஸ்திரீதனத்தி லுண்டாகும் ஆதாயமும் அதைக் கொண்டு சம்பாதிக்கப்பட்ட சொத்தும் ஸ்திரீதனமாகவே யெண்ணப்படும் (19 ஸ. 292; இ. லா. ரி. 1 ம. 281; இ. லா. ரி. 1 அ. 762). மேலும் அசல் ஸ்திரீதன விஷயமாக யேற்பட் டிருக்கும் பராதீனம் செய்யும் பாத்தியமும் வார்சு கிறமும் ஆதாய விஷயத்தில்கூட செல்லும்.

ஸ்திரீதனத்தின் வரும்படி.

விவாக காலத்தைத்தவிற மைத்த காலங்களில் பந்துக்களாலாவது மைத்தவர்களாலாவது கொடுபடும் சொத்துக்களும் ஏதேனும் வேலைசெய்து ஸ்திரீ ஸம்பாதிக்கும் சொத்துக்களும் புருஷ னிடத்திலிருந்தாவது ஸ்திரீ யிடத்தி லிருந்தாவது வார்சு பாத்தியத்தால் ஒரு ஸ்திரீக்கு வந்த சொத்துக்களும ஸ்திரீதனமாக எண்ணப்படா.

342. எல்லா ஸ்திரீதனங்களிலும் ஸ்திரீக்கு ஒரே விதமான பாத்தியம் ஏற்பட்டிருக்கவில்லை. சில ஸ்திரீதன சொத்தில் சகலபாத்தியமும் சிலதில் புருஷனுடைய அதிகாரத்துக்கு மாத்திர முட்பட்டு சகலபாத்தியமும் சிலதில் ஆயுசுவறையில் அனுபவிக்கும்படியான பாத்தியமும் ஏற்பட் டிருக்கிறது.

ஸ்திரீதனத்தில் ஸ்திரீக்குள்ள பாத்தியம்.

புருஷனால் கொடுபட்ட ஜங்கமமான ஸ்திரீதனத்திலும் புருஷனைத்தவிற மைத்த பந்துக்களால் கொடுப்பட்ட ஸ்தாவர ஜங்கமமான சொத்துக்களிலும் மேலும் மேல் சொல்லப்பட்ட ஸ்திரீதனங்களைக் கொண்டு தான் சம்பாதித்திருக்கும் ஸ்தாவரமான ஸ்திரீதனத்திலும் ஸ்திரீக்குச் சகலபாத்தியமு முண்டு. அவைகளைத் தன்னிஷ்டப்படி அவள் சிலவு செய்யலாம், விற்கலாம் தானமாகவாவது உயில் மூலமாகவாவது கொடுத்துவிடலாம். (19 ஸ. 292; 1 ம. ஐ. 85; இ. லா. ரி. 7 பம். 155; இ. லா. ரி. 5 அ. 310; இ. லா. ரி. 2 ம. 333). இந்த விஷயமாகப் பெண்சாதியைக் கட்டுப்பாடுசெய்ய புருஷனுக்குக் கொஞ்சமேனும் பாத்தியமில்லை. அவளுடைய சம்மதியைப் பெற்றுக் கொள்ளாமல் அந்த சொத்துகளைப் புருஷனுபயோகப்படுத்திக் கொள்ளக்கூடாது. உப

சௌதாயகத்தில்.

யோகப்படுத்திக் கொண்டால் வட்டிசேர்த்துக் கொடுக்கக் கட்டுப்பட்டிருக்கிறான். அளவிடக்கூடாத கஷ்டகால மேற்பட்டால் அதாவது க்ஷாமம், வியாதி, கடன்காரர்களால் ஜெயிலுக்கு அனுப்பப் படுவது, விட்டுவிடக்கூடாத வைதிககாரியங்கள் இவைகள் ஏற்பட்டுவேறுமார்க்கம் கொஞ்சங்கூட இல்லாவிட்டால் பெண்சாதியுடைய சௌதாயக ஸ்திரீதனத்தைப் புருஷன் சிலவுசெய்து கொள்ளலாம். அப்படி சிலவு செய்து கொண்டால் பிந்தி நல்லகாலம் வந்தபொழுது அந்தச் சொத்தைத் திரும்பிக்கொடுப்பது தர்மமென்று ஸ்மிருதிகர்த்தர்கள் சொல்லுகிறார்கள். பெண்சாதியுடைய ஸ்திரீதனத்தை யுபயோகப்படுத்திக் கொள்ளத் தகுந்த நிலைமையில் அவைகளை யுபயோகிக்கப்படுத்திக் கொள்ள புருஷன் இஷ்டப்படாவிட்டால் அவைகளை ஐப்திசெய்ய கடன்காரர்களுக்கு எவ்வளவேனும் பாத்தியமில்லை. (8பம். ஐ. 129; 6 அ. ஐ. 279).

புருஷனால் கொடுபட்ட ஸ்தாவரசொத்தில்.

புருஷனால் கொடுபட்ட ஸ்தாவர ஸ்திரீதனத்தின்பேறில் அவன் உயிருட னிருக்கும் பொழுதாவது அவனிறந்த பிறகாவது அதை யிஷ்டம்போல் சிலவுசெய்ய அல்லது பராதீனம் செய்யும்படியான பாத்தியமில்லை. அந்தசொத்து ஸ்திரீதனமானதற்குப் பிரயோசன மென்னவென்றால் அவளிறந்த பிறகு அது அவள் வார்சுக்குச் சேருமேயொழிய புருஷனிடத்தி லிருந்து ஸ்திரீக்கு வார்சுபாத்தியத்தால் கிடைத்த சொத்தின் விஷயமாய் எந்த நிர்பந்தங்களுண்டோ அந்த நிர்ப்பந்தங்க ளெல்லாம் இந்தஸ்திரீதன விஷயமாய் உண்டு. அதாவதுரொம்ப அவசியமான காரியங்களுக்காக அல்லாமல் வேறு காரணங்களுக்காக அதைப்பராதீனஞ் செய்யக்கூடாது. (5 ம. ஐ. 111; 11 பம். ஐ. 403; இ. லா. ரி. 1 அ. 734; இ. லா. ரி. 7 ம. 387). புருஷனால் சர்வபாத்தியமுங் கொடுபட் டிருந்தால்மட்டும் அந்த ஸ்தாவர ஸ்திரீதனத்தை ஸ்திரீ இஷ்டப்படி சிலவுசெய்யலாம், பராதீனஞ் செய்யலாம். (1 அ. ஐ. 66; இ. லா. ரி. 5 க. 684; 10 க. ஐ. 267; இ. லா. ரி. 10 அ. 495; இ. லா. ரி. 7 பம். 491; இ. லா. ரி. 7 ம. 399).

தன்சம்பாத்தியத்தில்.

தன் தேகசிரமத்தாலாவது தன் சாமர்த்தியத்தாலாவது பெண்சாதியால் சம்பாதிக்கப்பட்ட சொத்தும் பந்துக்களாலல்லது மைத்தவர்களால் அவளுக்குக் கொடுக்கப்பட்ட சொத்தும் இவைகள் புருஷனுடைய சம்மதியுடன் பெறக்கூடிய சொத்துகளானதால் முதலில் அவைகள் புருஷனுக்கே சேரும். அந்த சொத்துக்களை ஒருகாரணமு மன்னியிலேயே புருஷ

ன் சிலவு செய்துகொள்ளலாம். (2 மார்வி 65). புருஷன் உயிருடனிருக்கும்பொழுது அவனுடைய சம்மதியன்னியில் பெண்சாதி சிலவு செய்துகொள்ளக் கூடாது. புருஷனுக்கு முந்தி பெண்சாதியிறந்தால் அந்த சொத்து புருஷனுக்குச் சேர்ந்து அவனுக்குப் பிறகு அவள் வார்சுகளுக்குச்சேரும். புருஷனே முந்தியிறந்தால் அந்தசொத்தில் பெண்சாதிக்கு சர்வ பாத்தியமுண்டாய் அவளுக்குப் பிறகு அது அவளுடைய வார்சுகளுக்கே சேரும் (இ. லா. ரி. 1 ம. 307). மேல் சொல்லப்பட்ட சொத்துள்ள ஸ்திரீ இறந்தால் அவள் புருஷனுகவே யெண்ணப்பட்டு அந்தச் சொத்துக்கு அவளுடைய பிள்ளைகள், பேறன்கள் வகைரு வார்சாவார்கள் என்று மயூக கிரந்தத்தைக் கொண்டு தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. (இ. லா. ரி. 12 பம். 505).

வார்சு பாத்தியத்தால் கிடைத்த சொத்தின் பேறில்.

புருஷனிடத்திலிருந்து வார்சு பாத்தியத்தால் ஸ்திரீகளுக்குக் கிடைத்த ஆஸ்தி விஷயமாய் என்ன நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருக் கின்றனவோ அந்த நிர்ப்பந்தங்களே ஒரு ஸ்திரீயினிடத்தி லிருந்து மற்றொரு ஸ்திரீக்கு வார்சு பாத்தியத்தால் கிடைத்த சொத்தின் விஷயமாய்க்கூட ஏற்பட்டிருக்கின்றன. மேலும் இந்த இரண்டாவது ஸ்திரீ இறந்த பிறகு அந்த சொத்து இவள் வார்சுக்குச் சேராமல் முந்திய ஸ்திரியின் வார்சுக்கே சேருகிறது (இ. லா. ரி. 17 க. 917, 911; இ. லா. ரி. 5 க. 222. 348 வது பாராவைப் பார்க்க).

ஸ்திரீதனத்துக்கு வார்சுகள் நிச்சயிக்க.

343. ஒரு ஸ்திரீ இறந்து அவளுடைய ஸ்திரீதனத்துக்கு வார்சுகளை நிச்சயிக்கவேண்டிய தாயிருக்கும்பொழுது அந்தச் சொத்து மிதாக்ஷரம் வகைரு சம்பிரதாயப்படி யாருக்குச் சேருமோ அவளுடைய ஸ்திரீதனம் எந்த வகையில் சேர்ந்ததோ மேலும் அந்த ஸ்திரீயின் விவாகம் கன்னிகாதானமாக நடந்ததோ கன்னிகா விக்கிரயமான ஆசுரரூபமாக நடந்ததோ இந்த விஷயங்களை யெல்லாம் முந்தி நிச்சயிப்பது அவசியம் ஏனென்றால் இம்மூன்று விஷயங்களைக் கொண்டு வார்சு கிறமம் வித்தியாசப் படுகிறது.

கன்னியா தனத்துக்கு வார்சுகள்.

344. விவாகத்திற்கு முந்தி ஒரு கன்னிகை யிறந்தால் அவளுடைய ஸ்திரீதனம் அதாவது தாய்தகப்பன்களாலாவது பந்துக்களாலாவது அவளுக்குக் கொடுபட்ட ஆடையாபரணம் முதலிய சொத்துக்

கள் எல்லா சம்பிரதாயப்படிக்குக் கீழ் சொல்லப்பட்ட வர்களுக்கு வரிசையாய்ச் சேரும்—(1.) கன்னிகையின் அண்ணன் தம்பிகள். (2.) தாய். (3.) தகப்பன். (4.) சமீப பந்துக்கள்.

தாய் முதலிய ஸ்திரீகளிடத்தி லிருந்து வார்சு பாத்தியத்தால் கன்னிகைக்கு வந்தஸ்திரீதனம் இருந்தால் அது 348 வதுபாராவில் சொல்லப்படும் கிரமமாக வார்சுகளுக்குக் கிடைக்கும்.

சுல்கத்துக்கு வார்சுகள்.

345. நிச்சிதார்த்தமாகி விவாகத்திற்கு முந்தி கன்னிகை யிறந்தால் விவாகத்திற்காக அவனுக்கு வரன் வீட்டுக்காரர்களால் கொடுபட்டிருந்த சுல்கத்தில் சிலவைக் கழித்துக்கொண்டு மிகுந்த சொத்தைத் திரும்பி அவர்களுக்கே கொடுக்கவேண்டிய தென்று மிதாக்ஷரத்திலும், மயூகத்திலும், தாயபாகத்திலுங்கூட சொல்லப்பட் டிருக்கிறது. விவாகமான ஸ்திரீ யிறந்தால் அவளுக்கு விவாகத்திற்காகக் கொடுக்கப்பட்ட சுல்கம் மைத்த ஸ்திரீகளைப்போல அவளுடைய பெண் முதலான வர்களுக்குச் சேராமல் முதலில் அவள் அண்ணன் தம்பிகளுக்கும் பிறகு அவள் தாய்க்கும் சேருமென்று மிதாக்ஷரம், மயூகம், ஸ்முருதி சந்திரிகை, வீரமித்திரோதயம் முதலான காசி தேசத்தில் வழங்கி வருகிற கிரந்தங்கள் இவைகளில் சொல்லப்பட் டிருக்கிறது. தாயபாகத்தின்படி விவாகமான ஸ்திரீயின் சுல்கத்திற்கு மைத்த அயௌதக ஸ்திரீதனத்துக்குப் போலவே வார்சுக்கிரமம் ஏற்பட்டிருக்கிறதே யொழிய வேறு வார்சுக் கிரமமில்லை. (348 வது பாராவைப் பார்க்க).

மைத்த ஸ்திரீதனங்களுக்கு வார்சுக் கிரமம் மிதாக்ஷரப்படி.

346. மேல் சொல்லப்பட்ட கன்னியாதனம், சுல்கம் தவிர மைத்த எல்லா யௌதக அயௌதக ஸ்திரீதனங்களுக்கு மிதாக்ஷரப்படி ஒரு வார்சுக்கிரமம் ஏற்பட்டிருக்கிறது. அது யென்னவென்றால்—

இறந்துபோன ஸ்திரீயினுடைய—

1. பெண்கள்—இவர்களில் முதலில் கல்லியாண மாகாதபெண்கள். அவர்க ளில்லாவிட்டால் அவர்களுக்குப் பிறகு விவாகமானபெண்களில் ஏழையா யிருப்பவர்கள். இவர்கள்கூட இல்லாவிட்டால் இவர்களுக்குப் பிறகு விவாகமான பெண்களில் பணமுள்ளவர்கள்.

2. பெண்களின் பெண்கள்—இவர்கள் அனேகம்பேர்கள் இருந்தால் எல்லோரும் சமபாகங்களை யடையாமல் தாய்களின் கணக்கின்படி முதலில் சொத்தை விபாகஞ்செய்து அந்தந்தத் தாயார் பாகத்தை அவளவள் பெண்கள் பிறித்துக்கொள்ள வேண்டியது. மேல் சொல்லப்பட்ட எவ்வகைப் பெண்ணுவது உயிருட னிருக்கையில் பெண்ணுடைய பெண்ணுக்குப் பாத்தியமில்லை.
3. பெண்களின் பிள்ளைகள் — இவர்களுக்குக் கூட தாய்களின் மூலமாய்ப் பாகமே யொழிய எல்லாருக்கும் சமபாகங் கிடையாது.
4. பிள்ளைகள்.
5. பிள்ளைகளின் பிள்ளைகள்—இவர்களுக்குத் தகப்பன் வழியே பாகமே யொழிய எல்லோருக்கும் சமபாகங் கிடையாது. மேலும் பிள்ளை உயிருடனிருந்தால் பிள்ளையின் பிள்ளைக்குப் பாத்தியமில்லை. எப்படியெனில் இறந்துபோன ஸ்திரீக்கு ஒரு பிள்ளையும் அவளுக்கு முந்தியிறந்த மைத்தொரு பிள்ளையால் ஒரு பேறனும் இருந்தால் அவளுடைய ஸ்திரீ தனமெல்லாம் பிள்ளைக்குச் சேரும். (2 டப்பிளியூ. மெக். 121).

மேல் சொல்லிய ஐந்து வரிசை வார்சுகளில் ஒருவரேனும் இல்லாவிட்டால் ஸ்திரீதனத்துக்கு யார் வார்சு என்கிற விஷயம் இறந்துபோன ஸ்திரீயின் விவாகம் கன்னிகாதான ரூபமா அல்லது கன்னியாவிக்கிரய ரூபமா வென்கிற அம்சத்தைப் பொருத்திருக்கிறது. (மேல் 15, 16 - வது பாராக்களைப் பார்க்க). கன்னிகாதான ரூபமாயிருந்தால் பிள்ளையின் பிள்ளைக்குப் பிறகு இறந்துபோன ஸ்திரீயினுடைய புருஷனும் அவனுக்குப் பிறகு அவனுடைய சபிண்டர்களும் வார்சாவார்கள். கன்னியா விக்கிரய ரூபமாயிருந்தால் பிள்ளையின் பிள்ளைக்குப் பிறகு இறந்துபோன ஸ்திரீயின் தாயும் பிறகு தகப்பனும் பிறகு தகப்பனுடைய சபிண்டர்களும் வார்சாவார்கள். இப்படி மிதாக்ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் புருஷனுடைய சபிண்டர்களென்றுல் யாரோ தகப்பனுடைய சபிண்டர்க ளென்றுல் யாரோ தெறியப்படவில்லை. ஸ்மிருதி சந்திரிகையிலும் வீரமித்திரோதயத்திலும் ஸ்திரீதனத்திற்குச் சொல்லப்பட் டிருக்கிற வார்சுக்கிரமம் மார்கமே பேதப்பட்டிருப்பதால் அந்தக் கிரந்தங்களைக் கொண்டு இந்த சந்தேகம் தீரமாட்டாது. ஆனல் கமலாகரரால் செய்யப்பட்ட நிர்ணய ஸிந்து கிரந்தப்

படி புருஷனுக்குப் பிறகும் தகப்பனுக்குப் பிறகும் இதின்கீழ் சொல்லப்பட்டிருக்கிறவர்கள் வார்சுகளாகிறார்கள். அது யாரென்றால்—

கன்னிகாதான விவாகமா யிருந்தால்

6. புருஷன்.
7. ஸபத்தினீ பிள்ளைகள். (இ. லா. ரி. 13 ம. 348).
8. ஸபத்தினீ பிள்ளையின் பிள்ளை.
9. ஸபத்தினீ.
10. ஸபத்தினீ பெண்.
11. ஸபத்தினீ பெண்ணின் பிள்ளை.
12. புருஷன் தாயார்.
13. புருஷன் தகப்பன்.
14. புருஷன் அண்ணன் தம்பிகள்.
15. புருஷன் அண்ணன் தம்பிகள் பிள்ளைகள்.
16. புருஷன் தகப்பனின் தாய்.
17. புருஷன் தகப்பனின் தகப்பன்
18. புருஷன் சிறியதகப்பன் பெரிய தகப்பன்கள்.
19. புருஷன் சிறியதகப்பன் பெரியதகப்பன்கள் பிள்ளை.

இந்தப்படி.

கன்னியா விக்கிரய விவாகமா யிருந்தால்

6. தாய்.
7. தகப்பன்.
8. அண்ணன் தம்பிகள்.
9. அண்ணன் தம்பிகள் பிள்ளை.
10. தங்கை தமக்கைகள்.
11. தங்கை தமக்கைகள் பிள்ளை.
12. தகப்பன் தாய்.
13. தகப்பன் தகப்பன்.
14. சிறியதகப்பன் பெரிய தகப்பன்கள்.
15. சிறியதகப்பன் பெரிய தகப்பன்கள் பிள்ளை.

இந்தப்படி.

தகப்பன் வழியில் ஒருவருமில்லாவிட்டால் புருஷனும் அவனுடைய சபிண்டர்களும் வார்சாவார்கள்.

மயூக கிரந்தத்தின் படி.

347. மயூக கிரந்தப்படி அன்வாதேயகம் பிரீதிதத்தம் இவ்விரண்டுவகை ஸ்திரீதனத்துக்கு அதாவது விவாகத்திற்குப் பிறகு புக்காம் அல்லது பிறந்தகம் வழியில் பந்துக்களால் அல்லது புருஷனால் கொடுக்கப்பட்ட சொத்துக்கு வார்சு யாரென்றால்—

(1.) முதலில் அந்த ஸ்திரீயின் பிள்ளைகளும் விவாகமாகாத பெண்களும் சேர்ந்து வார்சாகிறார்கள். அதாவது இவ்விரண்டு பேரும் சேர்ந்து சொத்தை சரிபாகமா யடைகிறார்கள். பிள்ளை யில்லாவிட்டால் விவாகமாகாத பெண்ணுக்கே எல்லாசொத்துஞ் சேரும். விவாகமான பெண்களுக்கும் பெண்களுடைய பெண்களுக்கும் மரியாதைக்காக பேருக்குக் கொஞ்சம் சொத்து கொடுக்கவேண்டும். விதவைக

ளா யிருக்கும் பெண்களுக்குக் கொஞ்சமேனும் சொத்துக் கிடைக்கமாட்டாது.

(2.) விவாகமாகாத பெண்க ளில்லாவிட்டால் அந்த ஸ்திரீயின் பிள்ளைகளுடன் விவாகமாகி சுமங்கிலிகளாயுள்ள பெண்கள் சேர்ந்து சமபாகமா யடைவார்கள். (இ. லா. ரி. 9 பம். 115) பிள்ளைக ளில்லாவிட்டால் பெண்களுக்கும் பெண்க ளில்லாவிடில் பிள்ளைகளுக்கும் எல்லா சொத்தும்சேரும்.

(3.) பிள்ளைகளாவது விவாகமாகாத அல்லது விவாகமாய் சுமங்கலிகளா யிருக்கிற பெண்களாவது இல்லாவிட்டால் பெண்கள் பெண்களும், பெண்கள் பிள்ளைகளும் வார்சாகிறார்கள். இவர்களுக்குத் தாயின்படி பாகமே யொழிய எல்லாருக்கும் சமபாகமல்ல.

(4.) பிறகு பேறன்கள் அதாவது பிள்ளையின் பிள்ளைகள் வார்சாகிறார்கள். இவர்களுக்குத் தகப்பனின் கீழ் பாகமே யொழிய எல்லாருக்கும் சமபாகமில்லை.

(5.) பிறகு இறந்துபோன ஸ்திரீயினுடைய விவாகம் கன்னியாதான ரூபமா யிருந்தால் புருஷனும் அவன் வார்சும். கன்னியா விக்கிரயமானால் தாயும் தகப்பனும் அவனுடைய வார்சும் வார்சாகிறார்கள்.

மேல் சொல்லப்பட்ட அன்வாதேயகம் பிரீதிதத்தம் இவ்விரு வகை ஸ்திரீ தனங்கள் மேலும் 344, 345 பாராக்களில் சொல்லப்பட்டிருக்கிற கன்னியாதனம், சுல்கம் இவைகளைத் தவிர மைத்த அத்யக்கினிக அத்தியாவாகனிக முதலிய ஸ்திரீ தனங்களுக்கு மயூகப்படி வார்சு யாரென்றால்—

(1.) முதலில் விவாகமாகாத பெண்கள்.

(2.) விவாகமான பெண்களில் ஏழைகள்.

(3.) விவாகமான பெண்களில் சொத்துள்ளவர்கள்.

(4.) பெண்ணுடைய பெண்கள், பெண்ணின் பிள்ளைகள்,

(5.) பிள்ளைகள்.

(6.) பேறன்கள் அதாவது பிள்ளையின் பிள்ளைகள்.

(7.) பிறகு கன்னியாதான ரூபமான விவாகமா யிருந்தால் புருஷன் வகையறா; கன்னியா விக்கிரயமா யிருந்தால் தாய் தகப்பன் வகையறா.

புருஷனுக்குப் பிறகும் தகப்பனுக்குப் பிறகும் இன்னார் வார்சுகளென்று மயூக கிரந்தத்தில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கவில்

லே. ஆனால் அதிலெழுதப்பட் டிருக்கிற பிருஹஸ்பதிவாக்கியத்தைக் கொண்டு இறந்துபோன ஸ்திரீ எவர்களுக்குத் தாய்க்குச் சமானமா யிருக்கிறாளோ அவர்கள் வார்சாவார்களென்று ஏற்படுகிறது. இவர்கள் யாரென்றால் ஸ்திரீயின் அக்கா தங்கைகளின் பிள்ளைகள், புருஷனுடைய அக்கா தங்கை பிள்ளை, புருஷனுடைய அண்ணன் தம்பிகள் பிள்ளை, ஸ்திரீயின் அண்ணன் தம்பி பிள்ளை, மாப்பிள்ளை, புருஷனுடைய தம்பி. சொல்லப்பட்ட வர்களில் புருஷன் வழியானவர்கள் புருஷனுக்குப் பிறகும் தகப்பன் வழியானவர்கள் தகப்பனுக்குப் பிறகும் முதலில் வார்சாகிறார்களென்று ஊகிக்கத் தக்கதா யிருக்கிறது.

தாயபாகத்தின் படி.

348. தாயபாகப்படி யௌதக அயௌதக ஸ்திரீதனங்களுக்கு வெவ்வேறு வார்சுக்கிரமங்களேற்பட் டிருக்கின்றன. மேலும் யௌதகமானாலும் சரி, அயௌதகமானாலும் சரி, தகப்பனால் கொடுபட்ட ஸ்திரீதன சொத்துக்குத் தனிவார்சுக் கிரமம் ஏற்பட் டிருக்கிறது. இந்த வார்சுக்கிரமங்களெல்லாம் இதின் கீழ்விவரிக்கப்பட் டிருக்கின்றன.

யௌதகம்.

யௌதக ஸ்திரீதனத்துக்கு தாயபாகம், தாயக்கிரம சங்கிரகம் இவைகளின்படி யேற்பட் டிருக்கும் வார்சுக்கிரமமென்னவென்றால் :—(1.) நிச்சிதார்த்தமாகாத பெண்கள். (2.) நிச்சிதார்த்தமாய் விவாகமாகாத பெண்கள். (3.) விவாகமான பெண்களில் புத்திர சந்ததியுள்ள அல்லது பெறத்தக்க பெண்கள். (4.) மலடியாயிருக்கிற பெண்கள் அல்லது விதவையான பெண்கள். (5.) பிள்ளைகள். (6.) பெண்ணுடைய பிள்ளைகள். (7.) பிள்ளையுடைய பிள்ளைகள். (8.) மேற்படியார் பிள்ளைகள். (9.) சக்களத்தி பிள்ளைகள். (10.) சக்களத்தி பேறன்கள். (11.) சக்களத்திகொள்பேறன்கள். பிறகு இறந்துபோன ஸ்திரீயுடைய விவாகத்தைப் பொருத்து வார்சுகள் ஏற்படுகிறார்கள்.

கன்னிகாதான விவாகமா யிருந்தால்.	கன்னிபா விக்கிரய விவாகமா யிருந்தால்
(12.) புருஷன்.	(12.) தாய்.
(13.) அண்ணன் தம்பிகள்.	(13.) தகப்பன்.
(14.) தாய்.	(14.) அண்ணன் தம்பிகள்.
(15.) தகப்பன்.	(15.) புருஷன்.
பிறகு தூரவார்சுகள்.	பிறகு தூர வார்சுகள்.

தூரவார்சுகள் யாரென்றால்—(16.) புருஷனுடைய தம்பிகள். (17.) புருஷனுடைய அண்ணன் தம்பிகள் பிள்ளைகள். (18.) ஸ்திரீ

யின் அக்கா தங்கைகள் பிள்ளைகள். (19.) புருஷனுடைய அக்கா தங்கைகள் பிள்ளைகள். (20.) ஸ்திரீயினுடைய அண்ணன் தம்பிகள் பிள்ளைகள். (21.) மாப்பிள்ளை. (22.) புருஷனுடைய தகப்பன். (23.) புருஷனுடைய தமயன். (24.) சகுல்யர்கள். (25.) சமானோதகர்கள்.

அயௌதகம்.

அயௌதக ஸ்திரீதனத்துக்கு தாயபாகப்படி வார்சுக்கிரமம் என்னவென்றால்:—(1.) பிள்ளைகளும் நிச்சிதார்த்தமாகாத பெண்களும் சேர்ந்து வார்சாகிறார்கள். (2 க. ஐ. 144). பிள்ளைகளில்லா விட்டால் மேல் சொல்லப்பட்ட பெண்களுக்கே எல்லாசொத்தும் சேரும். மேல் சொல்லப்பட்ட பெண்க ளில்லாவிட்டால் பிள்ளைகளுக்குச் சேரும். பிறகு (2.) நிச்சிதார்த்தமாய் விவாகமாகாத பெண்கள். (3.) விவாகமான பெண்களில் புத்திர சந்ததியுள்ள அல்லது பெறத்தக்கவர்கள். (4.) பேறன்கள் அதாவது பிள்ளைகளுடைய பிள்ளைகள். (5.) பெண்களுடைய பிள்ளைகள். (6.) கொள்பேரன்கள். (7.) சக்களத்தி பிள்ளைகள். (8.) சக்களத்தி பேறன்கள். (9.) சக்களத்தி கொள்பேறன்கள். (10.) மலடியான அல்லது விதவையான பெண்கள்.

பின்பட்ட வார்சுகள் கன்னிகாதானம் அல்லது கன்னிகா விக்கிரயம் என்கிற பேதத்தைப் பொருத்து ஏற்படுவார்களென்று தாயக்கிரம சங்கிரகம் சொல்லுகிறது. ஆனால் தாயபாகம் அயௌதக விஷயத்தில் விவாகபேதத்தைப் பொருக்காமல் இதின்கீழ் சொல்லப்படும் வழியாய் வார்சுகளை ஏற்படுத்தி யிருக்கிறது. தாயபாகப்படியே தீர்ப்புகள் செய்யப்பட் டிருக்கின்றன. (11 க. ஐ. 286; இ. லா. ரி. 1 க. 275). தாயபாகப்படி பிந்திய வார்சுகள்—(11.) ஸ்திரீயின் அண்ணன் தம்பிகள். (12.) தாயார். (13.) தகப்பன். (14.) புருஷன். (15.) மேல் சொல்லிய வரிசையில் புருஷனுடைய தம்பிவகைறு தூரவார்சுகள்.

பித்ரு தத்தம்.

தகப்பனால் எப்பொழுதாவது ஸ்திரீக்குக் கொடுக்கப்பட்ட சொத்தாகிய பித்ரு தத்தம் என்கிற ஸ்திரீ தனத்திற்கு தாயபாகப் பிரகாரம் வார்சுக்கிரம மென்னவென்றால்—(11 க. ஐ. 286, 300)—

(1.) நிச்சிதார்த்தமாகாத பெண்கள்.
* * * *
(11.) சக்களத்தியின் கொள்பேரன்.
} 1 முதல் 11 வரைக்கும் மேல் சொல்லப்பட்ட யௌதக ஸ்திரீதனத்துக்குப் போலவே வார்சுக்கிரமம். பிறகுஅயௌதக ஸ்திரீதனம்போல—

(12.) ஸ்திரீயின் அண்ணன் தம்பிகள். (13.) தாய். (14.) தகப்பன்.

(15.) புருஷன். (16.) மேல் சொல்லப்பட்ட வரிசையில் புருஷனுடைய தம்பிகள் வகைரு தூரவார்சுகள்.

349. ஒரு ஸ்திரீக்கு முழுபாத்தியமுள்ள ஸ்திரீதனத்தை அவள் வேறொரு ஸ்திரீக்கு தானமாகவாவது உயில் மூலமாகவாவது கொடுத்தால் அது இரண்டாவது ஸ்திரீ வசத்தில்கூட ஸ்திரீதனமாகவே யெண்ணப்பட்டு அவளுடைய ஸ்திரீதனம் போலவே வார்சுகளுக்குச் சேரும். (2 மார்லி. 65; 11 க. ஹை. 295). ஆனால் தானமாகவாவது உயில் மூலமாகவாவது கொடுபடாமல் ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன சொத்து அவளிறந்தபொழுது வார்சு பாத்தியத்தால் வேறொரு ஸ்திரீக்குக்கிடைத்தால் அது இரண்டாவது ஸ்திரீ வசத்தில் ஸ்திரீதனமா யெண்ணப்பட மாட்டாது. (2 க. ஹை. 144; 3 ம. ஹை. 314; 6 பம். ஹை. 18; 14 க. ஹை. 237; இ. லா. ரி. 5 க. 225). புருஷனிடத்தி லிருந்து வார்சு பாத்தியமாய் ஸ்திரீக்கு வந்த சொத்து விஷயமா யெந்த நிர்ப்பந்தங்கள் ஏற்படுமோ அதே நிர்பந்தங்கள் வார்சு பாத்தியமாய் ஸ்திரீக்கு வந்த ஸ்திரீதன சொத்தைப் பற்றிக்கூட ஏற்படும். ஆகையால் இந்த சொத்தில் அவளுக்கு முழுபாத்திய முண்டாக மாட்டாது. மேலும் இந்த இரண்டாவது ஸ்திரீ இறந்தபிறகு அந்த சொத்து அவளுடைய வார்சுக்குச் சேராமல் முந்திய ஸ்திரீயின் வார்சுகளுக்கே சேரும். (இ. லா. ரி. 5 க. 222; இ. லா. ரி. 17 க. 911, 917). ஸ்திரீதனம் ஒருதடவை ஆண் வார்சுகளுக்குச் சேர்ந்த பிறகு அது திரும்பி முந்திய ஸ்திரீயின் வார்சுகளுக்குச் சேரமாட்டாது. (3 ம. ஹை. 312; இ. லா. ரி. 5 க. 225). உதாஹரணங்கள்—

ஒருதடவை வார்சுக்கிரமத்தால் வந்த ஸ்திரீதனத்துக்கு திரும்பி வார்சுக்கிரமம்.

(1.) "ஏ" என்ற ஒரு ஸ்திரீ இருக்கும் பொழுது "பீ" என்று விவாகமாகாத பெண்ணும் "ஸீ" என்று விவாகமான பெண்ணுமிருந்து "ஏ" யுடைய ஸ்திரீதனம் "பீ"க்குச் சேர்ந்தது. பிறகு "பீ" என்கிற பெண் கன்னியாதானமாக விவாகஞ் செய்யப்பட்டு சந்ததி யன்றியில் "டி" என்ற பர்த்தாவை விட்டு விட்டு இறந்துபோனாள். அந்த ஸ்திரீதன சொத்து "பீ" யுடைய வசத்தில்கூட ஸ்திரீதனமாக யிருந்தால் அது புருஷனுக்குச் சேரும். ஆனால் அது வார்சு பாத்தியத்தால் வந்த சொத்தாகையால் "ஸீ"க்குச் சேரும். அதாவது திரும்பி "ஏ" யினுடைய வார்சுக்குச் சேரும்.

(2.) பங்காளா தேசத்தில் "ஏ" என்கிற தாயிடமிருந்து சில ஸ்திரீதனசொத்தை வார்சுபாத்தியத்தா லடைந்து "பீ" என்கிற ஸ்திரீ

இறந்தாள். அவளிறக்கும் பொழுது அவளுக்கு "ஸீ" என்கிற ஒருபெண்ணும் "டீ" என்கிற மாமனு மிருந்தார்கள். அந்த சொத்து மாமனுக்குச் சேருமென்று தீர்மானிக்கப்பட்டது. ஏனென்றால் மேல்சொல்லப்பட்ட "ஏ" என்கிற தாய்க்கு தாயபாகப்படி "டீ" என்கிற சகோதரன் சமீபவார்சே யொழிய "ஸீ" என்கிற பெண்ணின் பெண் சமீபவார்சல்ல. (1 பம். ஸ. தீ. 3; இ. லா. ரி. 17 க. 911).

வியபிசாரம்—புனர் விவாஹம்—ஜாதி பிரஷ்டதை.

350. ஸ்திரீதனத்திற்கு வார்சாக ஏற்பட்ட ஸ்திரீ வியபிசாரிணியா யிருந்தாலும் அவளுடைய பாத்தியத்திற்குப் பாதக முண்டாகமாட்டாது. (இ. லா. ரி. 1 அ. 46). 1856 ஹு 15 நெ. சட்டப்படி ஒரு ஸ்திரீ புனர்விவாகம் செய்து கொண்டாலும் அவளுக்கு வேறொரு ஸ்திரீயினுடைய ஸ்திரீதன சொத்தில் உள்ள வார்சுபாத்தியம் போகமாட்டாது. மேலும் 1850 ஹு 21 நெ. சட்டப்படி ஸ்திரீதன விஷயமான வார்சுபாத்தியம் ஜாதி பிரம்சத்தால் போகமாட்டாது. (317-வது பாராவைப் பார்க்க.)

முதல் பெண்சாதியின் நகைகள் இரண்டாவது பெண்சாதிக்குக் கொடுக்கிறது—பிருது—காலாவதி.

அனேகர்கள் தங்களுடைய மூத்தபெண்சாதி யிறந்துபோனபொழுது அவளுடைய ஆபரண முதலியவைகளைப் பெண்கள் முதலான வார்சுகளுக்குக் கொடாமல் தங்களுடைய இரண்டாவது பெண்சாதிக்குக் கொடுக்கிறார்கள். இது சட்டப்படி அக்கிரமமானது. அந்த நிலைமையில் அந்த ஸ்திரீதனத்திற்கு வார்சாயுள்ள பெண்கள் முதலியவர்கள் பிருதுசெய்து அந்த நகைகளையாவது அவைகளின்கிரயத்தையாவது பெற்றுக்கொள்ளலாம். அந்த நகைகள் மாற்றப்படாமல் இரண்டாவது பார்யையின் வசத்திலிருக்கும்பொழுது அவளைக்கூடப் பிரதிவாதியாகச் சேர்த்து பிருதுசெய்யவேண்டும். இந்தப் பிருதுக்குக்காலாவதி முதல்பெண்சாதி இறந்துபோனதற்குப் பிறகு 3 வருஷம் வரையிலுண்டு. அந்த ஸ்திரீதனத்திற்கு வார்சுகளாகிய பெண் வகைரு மைனர்களா யிருந்தால் காலாவதிமைனாரிடி நீங்கினமுதல் 3 வருஷம் வரையிலுண்டு.

முற்றிற்று.

விஷயசூசிகை.

3 - வது அத்தியாயம்.
புத்திர சுவீகாரம்.

பிக்கலாம்? புத்திர சுவீகாரத்தால் உண்டாகும் பயன்? கிருத்திரிம சுவீகாரம் வகையறு.

49. புத்திர சுவீகாரம் செய்து கொள்ளுகிறவனுக்குப் புத்திரன், பௌத்திரன் பிரபௌத்திரன்கள் இருக்கக்கூடாது

50. புத்திரன் ஜாதிபிரஷ்டனுல் சுவீகாரம் செய்துகொள்ளலாமா?

51. ஒரேதடவையில் இரண்டுமூன்று சுவீகாரங்கள்.

52. பிரமசாரிகள், பெண்சாதியை இழந்தவர்கள் சுவீகாரம் செய்து கொள்ளலாமா?

53. பெண்சாதி கர்ப்பமா யிருக்கையில் சுவீகாரம் செய்து கொள்ளலாமா?

54. குஷ்டரோகி, குருடு, ஊமை, செவிடு, அங்கயீனர்கள் இப்படிப்பட்டவர்கள் சுவீகாரம் செய்து கொள்ளலாமா?

55. மைனர்கள் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

56. பெண்ஜாதி தானுகவே ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

57. விதவை ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?- நாலு அபிப்பிராயங்கள்.

58. சுவீகார அதிகாரம். ஸ்டாம்பு ரிஜிஸ்டர் வகையறு.

59. சுவீகாரம் சட்டப்படி கிரமமானதாகஇருக்கவேண்டும்.

60. சுவிகாரப்படி ஏற்றத்தாழ்த்தியன்றியில் நடத்த வேண்டும். உதாஹரணம். அய்யாபிள்ளை கேஸ்.

61. பெண்சாதிக்கு மட்டில் புருஷன் சுவீகாராதிகாரம் கொடுக்கலாம்.

62. புருஷன் அதிகாரம் கொடுத்தாலும் சுவீகாரம் செய்து கொள்ள பெண்சாதி கட்டுப்பட்டவளல்ல.

63. சுவீகாரம் எவ்வளவு காலம் செல்லும்? உதாஹரணம். தீர்ப்புகள்.

64. மைனர் விதவை சுவீகாரம் செய்து கொள்ளலாமா?

65. வியபிசாரியான விதவை சுவீகாரம் செய்து கொள்ளலாமா?

66. தலைமயிர் வைத்துக்கொண்ட விதவை சுவீகாரம் செய்துகொள்ளலாமா?

67. ஒரு புருஷனுக்கு 2 விதவைகளிருந்தால் யார் சுவீகாரம்செய்துகொள்ளலாம்?

68. புருஷனுடைய அனுமதி யில்லாமல் போனுலும் அவனுடைய தாயாதிகள் அனுமதியைக்கொண்டு தென்னிந்தியாவில் விதவை சுவீகாரம் செய்து கொள்ளலாம்.

69. ருமநாதபுரம் கேஸ். சாராம்சங்கள்.

70. திருவாங்கூர் கேஸ்.

6-வது அத்தியாயம்.—கடன்கள்.

8–வது அத்தியாயம்—உயில்கள்.

9 - வது அத்தியாயம்.
தர்ம காரியங்கள்.

218. தர்மகர்த்தாக்களை ஏற்படுத்த.

219. தர்மகர்த்தாக்களின் அதிகாரம்.

220. புது தர்மகர்த்தாக்கள் ஏற்பாடு.

221. தர்மகர்த்தாக்களின் மீது தாவா.

---

10 - வது அத்தியாயம்.

222. ஜீவனும்ச பாத்தியம்.

223. சேர்ந்த குடும்பத்தில் பாகஸ்தர்கள்-பாகமில்லாதவர்கள்.

224. விதவை.

புருஷனுடைய வீட்டில் குடியிருத்தல்.

விபசாரம்.

பிதரார்ஜிதசொத்து அல்லது சுவயார்ஜித சொத்து இல்லாதவனுடைய விதவை.

225. தாய் தகப்பன், குமாரன் குமாரத்தி.

226. சகோதரர்கள்.

227. சபத்தினிதாய் சபத்தினி கூடப் பிறந்தவள்.

228. விபசார சம்பந்தமான ஜீவனும்ச அக்கு.

229. பெண்சாதி.

230. மேஜிஸ்ட்ரேட்டு அவர்கள் முன்பாக பெண்சாதி ஜீவனும்சம் பெற்றுக்கொள்ள.

231. பெண்சாதிக்கு ஜீவிக்க வழி அன்னியில் யெல்லா சொத்தையும் தானம் செய்தல் அல்லது உயில் செய்தல்.

232. குடும்பசொத்தின் விக்கிரயத்தை ஜீவனும்ச பாத்தியம் யெப்பொழுது பாதிக்கும்.

233. ஜீவனும்ச பாத்தியத்தைக் கெடுக்க விக்கிரயம்வகைரா.

234. குடும்ப வீட்டில் விதவைக்குக்குடியிருக்கும்பாத்தியம்.

235. ஜீவனும்ச னிமித்தம் தாவா.

236. ஜீவனும்சத்தின் பாரத்தை வகிக்கவேண்டிய சொத்து.

237. சுவயார்ஜிதத்தை வைத்து புருஷன் இறந்த பிறகு விதவைக்கு ஜீவனும்சம்.

238. ஜீவனும்சத்தின் மொத்தத்தை ஏர்ப்படுத்தல்.

239. ஜீவனும்ச நிமித்தம் மொத்தமாய் கொஞ்சம் சொத்து கொடுத்தல்.

240. ஜீவனும்சப் பிருது, லிமிடேஷன், ஸ்டாம்பு.

241. ஜீவனும்ச பாத்தியதை யுடைய பராதீனம், ஜப்தி.

11-வது அத்தியாயம்.—பாகம்.

242. சேர்ந்தகுடும்பத்தின்பாகஸ்தர்கள் பாகம் செய்து கொள்ளல்.

243. எந்தசொத்து பாகத்துக்கு யோக்கியமானது. பிதரார்ஜிதம், ஜாயிண்ட் சொத்து.

244. எந்த சொத்து பாகிக்கத்தக்கதல்ல? சுவயார்ஜிதம் பழய ஜமீன்தாரி, சர்க்காருல் கொடுக்கப்பட்ட சொத்து. பிறிதுக்காக கொடுக்கப்பட்ட சொத்து.
245. பிள்ளை, பேரன், கொள்பேரன்-இவர்களுக்குள்ள பாத்தியம்-மிதாக்ஷரப்படி தாய பாகம்.
246. தாஸிமகனுடையபாத்தியம்.
247. ஜாதி பிரஷ்டனுடைய பாத்தியம்.
248. பாகத்துக்குப் பிறகுபிறந்த பிள்ளையின் பாத்தியம்.
249. மைனர்கள் பாத்தியம்.
250. தேசாந்திரம்போனபாகஸ்தனுடைய பாத்தியம்.
251. குஷ்டரோகம், நபும்ஸகர்கள், பித்தர்கள், குருடு, செவிடு, கைகாலில்லாதவர்கள் சன்யாஸாசிரமத்தைக் கைக்கொண்டவர்கள் - இவர்கள் பாக பாத்தியம். அவர்கள் பிள்ளைகளுடைய பாத்தியம். அவர்கள் சுவீகாரப் பிள்ளைகள்?
252. பாகத்துக்குப்பிறகு வியாதி நிவர்த்தியானல் அல்லது பிள்ளை பிறந்தால்.
253. குடும்பத்தில் சேராதவர்களுக் குண்டாகும் பாகபாத்தியம்.
254. ஸ்திரீகளுக்கு உண்டாகும் பாத்தியம். தாயபாக சம்பிரதாயம். மிதாக்ஷர சம்பிரதாயம்.
255. பாகம் செய்து கொள்ளக்கூடாதென்று ஏற்பாடு செல்லுமா?
256. பிதருர்ஜிதத்தின் விபாகம்-சமான பாகங்கள். தாயைப் பொருத்து பாகம்.
257. மிதாக்ஷர ஸம்பிரதாயம்-சுவயார்ஜிதத்தின் விஷம விபாகம்.
258. பங்காள சம்பிரதாயம்-ஏற்றத்தாழ்த்தி பாகம் செல்லுமா?
259 பாகம் செய்து கொள்ளும் விதம்.
260. பாகத்துக்கு அனுகூலமல்லாத சொத்து, கிணறு, விக்கிரகம் முதலானதுகள்.
261. பூர்ணமாகாத பாகம்.
262. ஒரு பாகஸ்தன் தன் பாகத்தை விட்டு விடுகிறது, கொடுத்து விடுகிறது.
263. பாகத்தை ரத்துசெய்கிறது.
264. பேருக்கு பாகம்.
265. பாகவிஷயமான ருசுவு-உத்தேசம் முக்கியம்.
266. பாக பத்திரம். ஸ்டாம்பு, ரிஜிஸ்ட்ரேஷன். பஞ்சாயத்துத்தீர்ப்புகள்.
267. பாகத்தின் நிமித்தம் தாவா. எல்லா சொத்தையும் சேர்த்து தாவா கொண்டுவரவே

12-வது அத்தியாயம்.
வார்சுபாத்தியம்.

330. சம்பூர்ண ஸ்வாதந்திரமில்லாத ஸ்திரீ வார்சுகளின் அனுபவ பாத்தியம் - பராதீன பாத்தியம்.

331. சில அவசியமான காரியங்கள் நிமித்தம் பராதீனம்செய்யலாம். சிரார்த்தம் முதலியகர்மங்கள், தீர்த்த யாத்திரைகள், தர்மங்கள், கடன்கள், ஜீவனும்சங்கள், விவாஹங்கள், சர்க்கார்பாக்கி, வகைரா நீக்கக்கூடாத நிர்பந்தங்கள்.

332. பெண் வார்சுகளால் விக்கிரயம்.

333. கடன் கொடுக்கப்பட்டவனுக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்கள்.

334. பெண்வார்சுகள் செய்யும்அகத்தியமான பராதீனங்கள்.

335. பெண்வார்சு தன்பாகங்களை விட்டுவிட்டு ஆஸ்தியை அனந்தரவார்சுதாரனுக்குக் கொடுத்து விடலாம்.

336. அனந்தர வார்சு சம்மதியுடன் செய்த பராதீனம்.

337. யார் சம்மதிக்கவேண்டியது.

338. அனந்தர வார்சுகளால் பிறுதுகள் லிமிடேஷன். ஆஸ்தி ஸ்வாதீனத்திலிருந்து ஸ்திரீ வார்சை நீக்கி ரிஸீவர் ஏற்படுத்தலாம்.

339. யார் பிறுது செய்யலாம்.

13-வது அத்தியாயம்.

ஸ்திரீ தனம்.

340. ஸ்திரீ தனம்.

341. ஆறுவிதங்கள்-சுல்கம், அத்தியக்கினிகம், அத்தியாவாஹநிகம், அன்வா தேயகம், பிரீதிதத்தம், அதிவேதனிகம்.—யௌதகம், அயௌதகம். சௌதாயகம். ஜீவனும்ச சொத்து. ஸ்திரீதனத்தின் வரும்படி.

342. ஸ்திரீதனத்தில் ஸ்திரீக்குள்ளபாத்தியம். சௌதாயகத்தில். புருஷனால் கொடுபட்ட ஸ்தாவர சொத்தில். தன் சம்பாத்தியத்தில். வார்சுபாத்தியத்தால் கிடைத்த சொத்தின் பேறில்.

343. ஸ்திரீதனத்துக்குவார்சுகளை நிச்சயிக்கிறதில் விசாரிக்கவேண்டிய மூன்று விஷயங்கள்.

344. கன்னியாதனத்துக்கு வார்சுகள்.

345. சுல்கத்துக்கு வார்சுகள்.

346. மைத்த ஸ்திரீதனங்களுக்கு வார்சுக் கிரமம் மிதாக்ஷரப்படி.

347. மயூக கிரந்தத்தின் படி.

348. தாயபாகத்தின் படி.

யௌதகம்.

அயௌதகம்.

பித்ரு தத்தம்.

349. ஒருதடவை வார்சுக் கிரமத்தால் வந்த ஸ்திரீதனத்துக்கு திரும்பி வார்சுக் கிரமம்.

350. வியபிசாரம்-புனர் விவாஹம்-ஜாதி பிரஷ்டதை.
முதல் பெண்சாதியின் நகைகளை இரண்டாவது பெண்சாதிக்குக் கொடுக்கிறது-பிருது-காலாவதி.

முற்றிற்று.